324
32185 L

# அரசியற் கொள்கையின் வளர்ச்சி

சாள்ஸ் வெரேக்கர்

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தால் வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியற் கொள்கையின் வளர்ச்சி

2—CP 2592—1,004 (1/68)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியற் கொள்கையின் வளர்ச்சி

**சாள்ஸ் வெரேக்கர்**

*சிரேட்ட ஆராய்ச்சியாளர், சமூகவிஞ்ஞானத் துறை,*
*லிவர்ப்பூல் பல்கலைக்கழகம்*

**கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தால் வெளியிடப்பட்டது**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் பதிப்பு
1973

**THE DEVELOPMENT OF POLITICAL THEORY**

*by*

CHARLES VEREKER
Senior Research Worker, Dept. of Social Science
University of Liverpool

*Copyright*
HUTCHINSON UNIVERSITY LIBRARY
178–202 Great Portland, London, W.I

TRANSLATED AND PUBLISHED IN CEYLON
*by arrangement with*
HUTCHINSON UNIVERSITY LIBRARY
LONDON

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

இந்நூல் சாள்ஸ் வெரேக்கர் என்பவரால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட "The Development of Political Theory" (அரசியற் கொள்கையின் வளர்ச்சி) எனும் நூலின் தமிழ் மொழிபெயர்ப்பாகும்.

அரசியற் கொள்கைபற்றிச் சுருக்கமாகவும் தெளிவாகவும் கருத்துக்களை உள்ளடக்கி, தமிழில் இதுவரை வெளியிடப்பட்ட நூல்கள் மிகச் சிலவே. இந்நூல் சமுதாயம், அரசியல் என்பவை சார்ந்த சிந்தனையைக் கிளறி, இவை பற்றி மேன்மேலும் ஆர்வமுடன் ஆராய்வதற்கு வாசகர்களுக்குத் தூண்டுதல் அளிக்கும். மேலும், இது பாடசாலைகளிலும் பல்கலைக் கழகங்களிலும் அரசியற் பாடத்தைத் தமிழ் மொழி மூலம் பயிலும் மாணவர்க்கும் உதவியாயிருக்கும்.

2. இந்நூல் திரு. த. சபாரத்தினம் அவர்களால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது.

டபிள்யூ. டி. சி. மகதந்தில
ஆணையாளர்,
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

கொழும்பு-7,
13.7.72



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# පෙරවදන

මේ පොත Charles Vereker ගේ The Developement of Political Theory නමැති පොතේ දෙමළ පරිවර්තනයයි. දේශපාලන න්‍යාය පිළිබඳ ව පැහැදිලි ලෙසත්, නිශ්චිත ලෙසත් කරුණු ඉදිරිපත් කොට ඇති ග්‍රන්ථ මේ වන තෙක් දෙමළෙන් පළ ව ඇත්තේ කිහිපයකි. මෙහි අරමුණ වනුයේ සමාජ හා දේශපාලන චින්තනය අධ්‍යයනය කෙරෙහි පාඨකයින් තුළ වඩා පුළුල් වූත්, නියුණු වූත් උද්‍යෝගයක් ඇති කිරීම හා ඔවුන් ඒ විෂය පිළිබඳ වැඩිදුර අධ්‍යයනයකට පෙළඹවීමයි. තව ද මේ පොත විද්‍යාල වලත්, විශ්ව විද්‍යාලවලත්, දේශපාලන විද්‍යාව දෙමළ මාධ්‍යයෙන් හදුරන සිසුන්ට ප්‍රයෝජනවත් වනු ඇත.

මේ පොත දෙමළට පරිවර්තනය කරන ලද්දේ ත. සබාරත්නම් මහතා විසිනි.

ඩබ්ලියු. ඩී. ඩී. මහනත්තිල,
අධ්‍යාපන ප්‍රකාශන කොමසාරිස්.

1972 ජූලි මස 13 වැනි දින,
කොළඹ-7.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

சிக்கலானதொரு வரலாற்றுப் பொருள் பற்றிய இந்தச் சிறிய ஆராய்ச்சிக் கட்டுரை, வாசகரின் ஆவலைத் திருப்திப்படுத்துவதற்காகவன்றி தணிப்பதற்காகவே எழுதப்பட்டுள்ளது. இப்பொருள்பற்றி பெருந் தொகுதிகளாக நூல் எழுதுவதே வழக்கமும் பொருத்தமுமாகும். இதனைப் படிப்போர், சமுதாயம், அரசியல் சார்ந்த துறைகளை மிகப் பரவலாகவும் அதிக முனைப்பாகவும் ஆராய்வதற்குத் தூண்டப்படுவர் என நம்புகிறேன். மேலும் படித்துச் சிந்திப்பதற்கானதொரு பதில் நூலாக இதனைக் கருதவோ பயன்படுத்தவோ வேண்டுமென்பது என் நோக்கமன்று ; ஆனால், சமுதாய அரசியற் சிந்தனை பற்றிய நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கு இஃது அழைப்பு விடுக்கின்றது. நூலில் போதிய இடமின்மையால், கவனத்துக்கு எடுத்துக் கொள்ள வேண்டியிருந்த பிரச்சினைகளையும் நூலாசிரியர்களையும் அதிக வரையறைக்குட்பட்டே தெரிவு செய்வது அவசியமாயிற்று. இப்படித் தெரிவு செய்வதினும் மிகச் சிறப்பாக அல்லது வேறு விதமாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுமானால், இதிலடங்கிய விடயங்களை ஒழுங்குபடுத்தியதற்கான முழுப்பொறுப்பும் என்னையே சார்ந்ததாகும். மிக நீண்டதொரு வரலாற்றுக் காலம் பற்றி ஆராய்கிறபொழுது, குறிப்பிட்ட காலங்கள் சம்பந்தமாய் என்னினும் மிகக் கூடிய அறிவுபடைத்த அறிஞர் பலருக்கு நான் ஆழ்ந்த கடமைப்பட்டிருப்பது தவிர்க்க முடியாததாகும். அதிகப் பயனுள்ளவையென நான் கருதும் விமரிசன நூல்களையும் விளக்கவுரை நூல்களையும், மேலும் படிப்பதற்கேற்ற நூல்களின் வரிசையிற் சேர்த்துள்ளேன்.

இத்தொடரில் ஏலவே பிரசுரிக்கப்பட்ட சில தொகுதிகளான நூல்கள், அரசியற் சிந்தனையுடனும் அதனெல்லைக்கு அப்பாலும் விசேட விதமாகச் சம்பந்தப்பட்டுள்ளன. இக்கட்டுரையிலுள்ள சுருங்கிய விளக்கத்தைப் பயிலும் மாணவர், திரு. மாபொட் எழுதிய "The State and the Citizen", பேராசிரியர் என்றீவ்ஸ் எழுதிய "National Law", திரு. மெக்கன்ஸி எழுதிய "Socialism" ஆகிய நூல்களில் அதிக நுட்பமாக ஆராயப்பட்டுள்ள விடயங்களையும் படித்து பூரண விளக்கம் பெறத் தவறிவிடக் கூடாது. இக்காரணத்திற்காகவே அத்தொகுதி நூல்களிற் கூறப்பட்டுள்ள விடயங்கள் சம்பந்தமாய் நான் கூற நினைத்ததற்கும் குறைவாக இதிற் குறிப்பிட்டுள்ளேன்.

இந்நூல் எழுத என்னை ஊக்குவித்ததற்கும், இதிலுள்ள இன்னல்களை நடுநிலை நோக்கிற் புரிந்து கொண்டதற்கும் பேராசிரியர் ஜி. டி. எச். கோல் என்பவருக்கு நான் விசேடமாகக் கடமைப் பட்டிருக்கிறேன். லிவர்ப்பூலில் உடனிருந்து பணியாற்றக் கிடைத்த பெருந்தகையாம் பதிப்பாசிரியரான பேராசிரியர் றி. எஸ். சிமி என்பார், மற்றைக் கல்விக்கழக வேலைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பளுவினால் எந்நேரம் கைவிடப்படுமோ என்றிருந்த இவ்வேலையைத் தொடர்ந்து செய்வதற்குப் பெருந்தன்மையுடன் உதவி செய்தார். திரு. எம். பி. போஸ்டர் முதலாம் அத்தியாத்தை வாசித்து உதவினார்; அவருடைய நுண்ணிய குறிப்புக்கள் எனக்கு மிகப் பெரும் பயனளித்தன.

எனினும், நான் செய்யத் தொடங்கிய வேலையை முற்றுவிப்பதற்கான தைரியம் ஊட்டியவர் என் மனைவியே. எனது வாக்கியங்களைச் சுருக்கி யமைக்கும் திறமை அவரிடம் மாத்திரமே இருந்தது. ஒரு பெண்மணிக்குத் தகுந்த காணிக்கையாக ஆரம்பப் பாடநூலொன்றைச் சமர்ப்பிக்க வேண்டியிருக்குமானால், அரசியற் சிந்தனை பற்றிய இவ்வாராய்ச்சிக் கட்டுரையை நான் அவருக்கே கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டியவனாயிருப்பேன் என எண்ணுகிறேன்.

சா. எச். வெ.

லிவர்ப்பூல்.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | முகவுரை .. .. .. | vii |
| 1. | அறம் .. .. .. .. | 1 |
| 2. | அமைதியும் ஒழுங்கும் .. .. .. | 47 |
| 3. | உரிமைகள் .. .. .. | 94 |
| 4. | மிகு மகிழ்ச்சி .. .. .. | 136 |
| 5. | முன்னேற்றம் .. .. .. | 180 |
| 6. | விடுதலை .. .. .. | 22 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் அத்தியாயம்

## அறம்

அரசியற் கொள்கை என்பது ஆங்கில மொழியிலே 'பொலிற்றிக்கல் தியறி' (Political Theory) என வழங்கப்படுகிறது. பொலிற்றிக்கல், தியறி என்ற இரு சொற்களும் கிரேக்க மொழிச் சொற்களினடியாகப் பிறந்தவை. அன்றியும், அவ்விரு சொற்களினதும் உருவம் அவற்றின் மூலச் சொற்களைப் பெரிதளவில் ஒத்திருக்கிறது. இதன் விளைவாக , கடந்த ஈராயிரம் ஆண்டுக் காலத்தில் ஏற்பட்ட வளர்ச்சியின் போது, இவ்விரு சொற்களினதும் பொருள் மாற்றமடைந்துள்ள விதத்தை விளங்கிக் கொள்வது மிகவும் கடினமானதாகும். இவ்விரு பதங்களினதும் பொருளில் ஏற்பட்ட மாற்றத்தைத் தெரிந்து கொள்ள முயலாவிடின் கிரேக்க அறிஞர்கள் தெரிவித்த கருத்துக்கள் தற்கால அரசியல் தர்க்கத்துக்குப் பொருத்தமானவையோ பயனுள்ளவையோ அல்ல என்ற முடிவிற்கு அரசியல் மாணவன் வருதல் கூடும்; அல்லது அவர்கள் கூறியவை அனைத்தையும் தற்காலத்தில் வழங்கும் சொற்களின் பொருளினதும் முக்கியத்தினதும் அடிப்படையிற் புரிந்து கொள்ளவும் அவற்றிற்கு விளக்கங் கூறவும், அவன் முயலுதல் கூடும். இந்த இரு போக்குக்களும் விரும்பத்தக்கவையல்ல. அரசியல் சார்ந்த அமைப்புக்களைப் பற்றிச் சிந்திக்கும் மரபைக் கிரேக்கர்கள் ஆரம்பித்து வைத்தனர். 'அரசியற் கொள்கை சம்பந்தமாய் கிரேக்கர் செய்த முதலாவது பெரும்பணி அவ்வரசியற் கொள்கையைக் கண்டு பிடித்தமையாகும்.'[1] அரசியல் தத்துவத்தைக் கிரேக்கர்கள் கண்டுபிடித்த பின்பு அரசியற் பின்னணியில் மாற்றங்கள் அடிக்கடி நேர்ந்துள்ளன. வெவ்வேறு காலத்தில் வெவ்வேறு கருத்துக்கள் முக்கியத்துவம் பெற, அவர்கள் பயன்படுத்திய சொற்களின் பொருளும் மாற்றமடைந்து காணப்பட்டது. கிரேக்கர்கள் வழங்கிய பொருளுக்கு நேர் எதிரான பொருளைச் சில சொற்கள் இப்பொழுது கொடுக்கும் அளவுக்கு அவர்கள் பயன்படுத்திய சொற்களின் பொருள் மாற்றமடைந்தது. ஆனால், கிரேக்கர்கள் கூறியதைப் போன்று அரசியற் பிராணிகள் என நாமும் அழைக்கும் மாந்தர்கட்கிடையேயுள்ள உறவுகளைப் பிரித்தறிந்து வரைவு படுத்துவதன் முக்கியத்துவத்தையும் அவ்வுறவுகளை ஒழுங்காக ஆராய்வதன் அவசியத்தையும் ஐரோப்பிய சமுதாயம் என்றுமே உணர்ந்து வந்திருக்கிறது.

இயற்கைத் தோற்றப்பாடுகளுடன் தொடர்புடைய இயல் நூல்களில் இருப்பன போன்றல்லாது சரிநுட்பமாக வரைவிலக்கணம் கூறக்கூடிய நிலையான சொற்கள் சமூகவியலில் மிகச் சிலவே உள. கிரேக்க நகரை (கிரேக்க மொழியில்

[1] A. E. Zimmern : 'Political Thought' in the Legacy of Greece (Oxford, Clarendon Press, 1921), p.331.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பொலிஸ்' (Polis) எனப்படுவது) நகர அரசு என அழைப்பது வழக்கம். கடந்த நானூறு ஆண்டுகளாக அரசு என நாம் அழைத்து வரும் அரசியலமைப்புக்களிலிருந்து அது பலவகையில் வேறுபட்டதாக இருக்கிறது. சொற்களின் பொருள் பற்றி நாம் கவலைப்படத் தேவையில்லை. சொற்களின் பொருள் இந்த விதத்தில் மாற்றமடைவதுபற்றியும் சரிநுட்பமாக இல்லாதது பற்றியும் நாம் கவலைப்படத் தேவையில்லை. ஏனெனில், சிந்தனைச் சிற்பிகளின் சரித்திரப் பின்னணிகள், கருத்துக்கள், தப்பெண்ணங்கள் என்பனவும், எல்லாவற்றிற்கும் மேலாக முந்திய காலத்துச் சிந்தனைகள் பாரம்பரியங்கள் ஆகியனவும், அரசியற் சொற்களின் பொருளை எவ்வாறு உருவாக்கவும் அவை அமைய வேண்டிய முறையை எவ்விதம் நிர்ணயிக்கவும் செய்கின்றன என்பதை அறிந்து கொள்ள அது உதவுகிறது என்க.

கிரேக்க நகரை நகர அரசு என்ற விரிவான அர்த்தத்திற் பயன்படுத்துவது இருவித ஆபத்துக்களுக்கு இடமளிக்கும். தற்கால அரசுகள் பற்றிய கொள்கைச் சார்பான கருதுகோள்களை கிரேக்க காலத்து அரசு பற்றிய கொள்கையினடிப்படையில் நோக்குவதற்கும் அதன் விளைவாகக் கிரேக்கர்கள் தம்மைப் பற்றிச் சொன்னவை பொருந்தாதவை எனக் கொள்வதற்கும் இடமளிப்பதும், கிரேக்க காலப் பிரச்சினைகளைத் தற்காலப் பிரச்சினைகளினடிப்படையிலும் சமூகவியல் பற்றி பழங்காலத்துக்குப் பின்னருள்ள காலத்தில் எழுந்த கொள்கையினடிப்படையிலும் தவருக விளங்கிக் கொள்வதும் அவ்விரண்டு ஆபத்துக்களாகும்.

மசிடோனியும் உரோமாபுரியையும் பலமொழி பேசும் ஏகாதிபத்திய உரிமையுடைய சமூகங்கள் ஆட்சி புரிவதற்கு முன்பு, மொழியாலும் பரம்பரை இன உணர்ச்சியாலும் பொதுவாக ஒன்றுபட்டிருந்த கிரேக்க உலகம், மத்தியதரைக் கடற்கரையில் பல்வேறு குடியேற்றங்களாகப் பிரிந்திருந்தது. காலத்திற்குக் காலம் நெகிழ்ச்சியுடைய சிற்சிறு கூட்டிணைப்பரசுகளாக நிலவி வந்த இந்த நகரங்கள் பெரும்பாலான காலத்தில் சுய ஆட்சி நடத்துபவையாகவே இருந்தன. பத்தாயிரம் தொடக்கம் நூருயிரம் வரையுள்ள சனத்தொகையைக் கொண்டிருந்த இந்நகரங்கள், பிற்காலத்துப் பொருளாதாரத் தரத்தோடு ஒப்பிடும்போது, மிகக் குறைவான தரமுடையவாயிருந்ததோடு தமக்குள்ளே போரிட்டுக்கொண்டுமிருந்தன. இதன் விளைவாக, அதிக பலமுடைய அல்லது சிறந்த பயிற்சியுடைய அண்டை நாடுகளின் தாக்குதல்களை எதிர்த்து மக்களுக்கு உறுதியையும் பாதுகாப்பையும் அளிக்கக்கூடிய வலிமையை அவை பெற்றிருக்கவில்லை. அப்படியிருந்தும், சிந்தனை, கலை, பண்பட்ட வாழ்க்கை ஆகிய துறைகளிலே பரக்க அமைந்திருந்த கிரேக்க உலகம் பெற்ற சாதனைகளும், அவ்வுலகு தப்பிப் பிழைத்ததும் சரித்திரத்தில் நிகழ்ந்த விந்தைகளிலொன்ருகும். இது மாதிரியான விந்தை திரும்பவும் சரித்திரத்தில் இதுவரை நடைபெற்றதில்லை. அதனுல், இதற்கும் இதனையடுத்து வந்த சிக்கலான அரசியல் முறைக்குமிடையே தொடர்பில்லை எனக் கருத இடமுண்டு. சாதாரண கிரேக்க நகரிலே சனத்தொகையும் பொருளாதார வளர்ச்சியும் மிகவும் குன்றியிருந்ததை நோக்குமிடத்து, பிற்காலச் சமூக சிந்தனையாளர்கள் அதன் பிரச்சினைகளைப் பற்றி ஏன் அக்கறையோ ஆர்வமோ கொள்ள வேண்டுமென்பதைத் தெரிந்து கொள்வது எடுத்த எடுப்பில் சிரமமாக இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரேக்கர் வாழ்ந்த காலத்திற்கு முன்பும் மக்கள் கூட்டமாக இணைந்து வாழ்ந்திருக்கிறார்கள். கிரேக்கரின் காலத்திலும் பாரசிகம், எகிப்து ஆகிய நாடுகளில் கிரேக்கரினும் பெருந்தொகையாகவும், பலம் வாய்ந்த உறுதியான சமூகங்களாகவும் மக்கள் வாழ்ந்திருக்கின்றனர். பழமையும் பெருமையும் மிக்க இச் சமுதாயத்தினரைப் பற்றி நாம் படிக்கும்போது அவர்களின் சாதனை இக்கால அரசியற் சாதனைகளின் அளவையும் தரத்தையும் ஒத்திருந்ததாகப் பார்வைக்குத் தெரியுமெனினும், அரசியலைப் பற்றி அவர்கள் என்ன கருத்தைக் கொண்டிருந்தார்கள் என்பதை நாம் ஆராய்வதில்லை. புராணம், சமயசித்தாந்தம், பாரம்பரிய வழக்கங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இச்சமூகத்தினர் பரிபாலிக்கப்பட்டு வந்தனரெனினும், இவ்வடிப்படையை அரசியற் கோட்பாட்டினின்றும் அவர்கள் பிரிக்கவில்லை. சனத்தொகை, பொருளாதாரம், நிர்வாகம், நிலப்பரப்பு ஆகியவை சம்பந்தமாய் இவ்விரு சமூகத்தினரும் பலமும் வளமும் கொண்டிருந்த அளவுக்கு அரசியற் சிந்தனைத்துறையில் முன்னேற்றம் பெறவில்லை.

இதற்கு மாறாக, புராதன கிரேக்க காலப் பகுதியின் இறுதியில் எழுதப்பட்ட பிளேட்டோ, அரிஸ்தோத்தில் ஆகியோரின் அரசியற் சிந்தனைகள் அழியா எழுத்தோவியங்களாக இன்னும் வாழ்வதோடு, பல நூற்றாண்டு காலமாகச் சிந்தனையாளர்கள் மனத்தைக் கவர்ந்தும், அவர்களுக்குப் பலன் கொடுத்தும் வந்திருக்கின்றன. கிரேக்க நகர வாழ்க்கைமுறை உருக்குலைந்ததனால் ஏற்பட்ட குழப்பம் காரணமாக எழுதுவதற்குத் தூண்டப்பட்ட அவ்விருவரினதும் அரசியற் சிந்தனைகள், அவர்கள் வாழ்ந்த காலத்துக் கிரேக்க அரசியல் நிலைமையின் குறிப்புரையாக மட்டும் அமையாதிருப்பதே அவர்களின் எழுத்தோவியங்கள் அழியா நிலை எய்தியமைக்குக் காரணமாகும்.

அதென்சிற்கும் ஸ்பாட்டாவிற்குமிடையே நடந்த போர்கள், குழு ஆட்சி வாதிகளுக்கும் சனநாயக ஆட்சி வாதிகளுக்குமிடையே நடந்த உட்பகை சார்ந்த போராட்டங்கள் ஆகிய குறிப்பான சில பிரச்சினைகளையும் தொல்லைகளையும் சமாளிக்க வேண்டிய நிலையிலே புராதன கிரேக்க நகரங்களில் வாழ்ந்த பிரசைகள் இருந்தனர். அத்தகைய பிரச்சினைகள் இன்றைய உலகிற் காணப்படுவதில்லை. ஆனால் பிளேட்டோ, கிரேக்க உலகத்தை எதிர் நோக்கிய பிரச்சினைகளை நேரடியாக உணர்ந்து கொண்டதனாலும், "அந்தக் காலத்தில் வாழ்ந்தவர்களுக்குள் மிக நேர்மையான மனிதர் எனத் தயங்காது கூறுவேன்" என்று தாமே பாராட்டிய தம் நண்பரும் குருவுமான சோக்கிரட்டீஸ் அதென்ஸ் நகரத்தாரால் நஞ்சூட்டிக் கொலை செய்யப்பட்டது கண்டு அதிர்ச்சியடைந்ததனாலும், மனித சமுதாய நடவடிக்கைகளின் நோக்கங்களைப் பற்றிச் சிந்தித்து அதிக நன்மையுடையவற்றிலிருந்து குறைந்த நன்மையுடையவற்றைப் பிரித்துணர முயன்றார். இதைச் செய்யும்போது, தம்மைச் சுற்றி நடைபெறும் விரைந்தழிந்து போகும் சம்பவங்களை ஊடுருவிப் பார்த்து, மாறுபட்ட நோக்கங்களைக்கொண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் கூடிவாழும்போது, அவர்களை எதிர்நோக்கும் தவிர்க்க முடியாத பிரச்சினைகளைச் சமாளிப்பதற்கென முக்கியத்துவம் வாய்ந்த கோட்பாடுகளையும் முறைகளையும் பிளேட்டோ கண்டுபிடித்தார்.

பிளேட்டோ விடுத்த வினாக்களுக்கு அவரே கூறிய குறிப்பான பதில்களைப் பிற்கால அரசியல் மாணவர் அத்துணை முக்கியமாகக் கருதவில்லை. ஆனால் ஒற்றுமையாகவும் சமாதானமாகவும், ஒன்றுகூடி இன்பமுடன் வாழும் இயல்பை மனிதன் கொண்டிருக்கின்றான் என்று பிளேட்டோ வற்புறுத்திக் கூறியிருப்பது அவரின் சிந்தனைச் சிதறல்களில் முக்கியமானது எனப் பிற்கால அரசியல் மாணவர்கள் கருதுகின்றனர். ஒற்றுமையாகவும் சமாதானமாகவும் வாழும் முறையை அறிந்து கொள்ளத் தவறுவதனாலேயே மனிதன் தனது இலட்சிய வாழ்க்கையை அடைய முடியாமல் தவிக்கின்றான் என்றும், ஒழுங்காகச் சிந்திப்பதன் மூலம் வாழ்க்கை முறை எது என்பதை அவன் கண்டுகொள்ள முடியும் என்றும் பிளேட்டோ கருதினார். சரியான வாழ்க்கை முறையைத் தெரிந்து கொண்ட பின்பும் அவ்வாழ்க்கைமுறைப்படி வாழுமாறு எல்லோரையும் நிர்ப்பந்திப்பது கடினம் என்பதையும் அவர் ஏற்றுக்கொண்டார். சமூகப் பிரச்சினைகளை நடுநிலையாய்வு முறையிலும் ஆழ்ந்து சிந்திக்கும் முறையிலும் நோக்கும் இந்தப் போக்குத்தான், பிளேட்டோவிற்குப் பின்னால் ஏற்பட்ட அரசியல் சிந்தனைப் போக்கிலிருந்து இதனை வேறுபடுத்திக் காட்டுகிறது. இக் கருத்தின்படி, பிற்காலச் சிந்தனையாளர்களான அகுஸ்தீன், ஹொப்ஸ், ரூசோ, மாக்ஸ் ஆகியோர் பிளேட்டோவின் மரபைப் பின்பற்றினர் எனக் கூறலாம். இணக்கமற்ற நிலைமை இருப்பதற்கான காரணங்களைக் கூறுவதில் அவர்கள் வேறுபடுகின்றனர். திருப்திகரமான முறையிற் சமூக உறவுகளைத் திருத்தியமைப்பதற்காக வெவ்வேறு ஆலோசனைகளை அவர்கள் தெரிவிக்கின்றனர். யாவரும் விரும்பும் இலட்சியத்தை அடைவதற்கு எத்தகைய நிறுவன அமைப்பு வேண்டற்பாலது என்பதைப் பற்றிக் குறிப்பான பல பிரேரணைகளை அவர்கள் சமர்ப்பிக்கின்றனர். பிளேட்டோவின் சிந்தனை பற்றிய குறைநிறைகளினும் மற்றவர்களின் சிந்தனைகள் பற்றிய குறைநிறைகளாலே பெரிதும் தூண்டப்பட்ட அவர்கள், மனிதனின் தாழ்நிலை பற்றி நடுநிலையிலிருந்து ஆழ்ந்து சிந்திப்பதிலும் அவனைக் கைதூக்கி விடுவதற்கு மிகச் சிறந்த திட்டம் ஒன்றைத் தயாரிப்பதிலும் பிளேட்டோவின் முன்மாதிரியையே பின்பற்றினர்.

நாம் இன்று கிறித்துவ சகாப்தத்தைப் பின்தொடர்ந்து வந்துள்ள விஞ்ஞான சகாப்தத்தில் வாழுகின்றோம். இவ்விரு சகாப்தங்கட்குமே பொதுவாகவிருந்த பிரச்சினைகட்குப் பிளேட்டோ விடைகண்டு கொண்ட முறையைச் சரியாக விளங்கிக் கொள்வதில் இரு பெருந் தடைகள் தென்படுகின்றன. மனிதனுடைய சொந்த வாழ்க்கையின் வழிமுறைகள், இலட்சியங்கள் என்பன பற்றிய உண்மைகளிற் பெரும்பாலானவற்றைக் கடவுளே நேரிற் புலப்படுத்தினார் என்றோ கடவுளின் புலப்படுத்தல்களிலிருந்து உய்த்துணர முடியும் என்றோ நம்புவது தான் கிறித்துவ சகாப்தத்தின் பொது வழக்கமாக விருந்தது. இப்புலப்படுத்தல்கள் எவ்வழியில் எவ்வளவில் வந்துள்ளன என்பது பற்றிய சர்ச்சையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைவாக அவற்றின் முக்கியத்துவம் எந்த அளவிலும் குறைந்துவிடவில்லை. இரண்டாவதாக, இயற்கையிற் காணப்படும் அண்டகோளத்தைப்பற்றிய உண்மைகளைப் புலப்படுத்தல் மூலம் தெரிந்து கொள்வதிலும் பார்க்க அனுபவத்தின் அடிப்படையில் அவதானித்தல், பரிசீலனை செய்தல் என்பவற்றின் மூலமே அறிந்துகொள்ளுதல் வேண்டும் என்பது கடந்த மூன்று அல்லது நான்கு நூற்றாண்டுளாகத் தெளிவாகிக் கொண்டே வருகின்றது. அன்றியும், சமூக உறவுகள், மனித வாழ்க்கையுரிமைத் துறையான அரசியல் ஆகியவை பற்றிய உண்மைகளையும் இந்த விஞ்ஞான நோக்கு கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது.

நாம் சமூகத்தில் ஒற்றுமையாக இணைந்து வாழ்வதற்குத் தேவையான உண்மை அறிவு எனப் பிளேட்டோ குறிப்பிடும் அறிவைத் தெய்வத்தன்மை வாய்ந்த புலப்படுத்துதல் என விவாதிக்க முடியும். சமூகஞ் சார்ந்ததும் ஒழுக்கஞ் சார்ந்ததுமான வாழ்க்கையைப் போன்று பிளேட்டோ குறிப்பிடும் உண்மை அறிவு குறைபாடற்றதாகத் தோன்றினும், நாம் அனுபவத்திற் காண்பதுபோல் அது அப்படியானதன்று. பிளேட்டோவின் உண்மை அறிவு பற்றிய கனவு கடவுளின் புலப்படுத்தலன்று என்பதை இலகுவிற் காட்டமுடியும். கடவுள் காட்டும் உண்மையான வழிக்கும் அதை அறிந்து கொண்ட ஞானிக்குமிடையே நேரடித் தொடர்புகள் இருந்ததாகப் பிளேட்டோவின் கனவு குறிப்பிடவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக, கிரேக்க தத்துவ ஞானிகள் என அழைக்கப்பட்டவரும், அறிவும் தார்மீக ஆற்றலுமுள்ளவருமான மிகச் சிலருக்கே அக்கனவு பற்றித் தெரிந்திருந்தது.

இந்த அறிவின் மூலம் தற்காலக் கணிதவியல் கொடுக்கும் மன ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் அறிஞர்களாற் பெறமுடிந்தது. இரண்டும் இரண்டும் நான்கு என்பதைத் தெளிந்த அறிவு நிலையிலுள்ள எவரும் அறிவர். இரண்டும் இரண்டும் பதினேழு என்று சொல்ல அவர்கள் முன்வரார். கணிதத்திற்குரிய இந்த நிச்சயமான நிலை பகுத்தறிவைக் கொண்டு பார்க்கும் தார்மீக, சமூக உண்மைகட்கும் இருக்குமெனப் பிளேட்டோ கூறினார். இதற்கு மாறாக இந்த உலகத்துடன் அல்லது வேறு உலகங்களுடன் சம்பந்தப்பட்ட சம்பவங்கள் பற்றித் தமது ஆராய்ச்சிகள் மூலம் இறுதி முடிவுகளைக் காணமுடியும் எனக் கணிதவியல் வல்லுனர்கள் எதிர்பார்ப்பதில்லை. அதைப்போலவே கடவுள் புலப்படுத்துகின்றவைகளில் தீவிர நம்பிக்கை கொண்டுள்ளவர்களும் தாங்கள் நம்பும் தார்மீக உண்மைகள் கணிதம் போலச் சரியாகவிருக்கும் எனக் கொள்ளத் தேவையில்லை.

அரசியல் தொடர்புகளின் நோக்கம், தன்மை ஆகியவைகளைப் பற்றிப் பிளேட்டோ கூறும் கருத்துக்களைச் சரிவரப் புரிந்து கொள்வதற்கு வேறொரு தடையும் இருக்கின்றது. மக்களின் வகைகளையும் சமூகப் பிரிவுகளையும் விவரிப்பதற்கு மக்களின் தொழினுட்பத் திறன்களைச் சோக்கிரட்டீஸ் உவமையாகக் கொண்டார். தம் ஆசிரியர் பயன்படுத்திய அதே உவமையைப் பிளேட்டோவும் பயன்படுத்தியிருப்பதனால் கிரேக்க உலகைச் சேர்ந்த அவரது காலத்தவர்களுக்கு அது விளங்குமேயன்றி எமக்கு அவ்வுவமையின் உண்மையான அர்த்தத்தை விளங்கிக் கொள்வது கடினமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரதிட்டவசமாக, தார்மீக, அரசியற் கருத்துக்களை விவரிப்பதற்கு மேனாடு களிலுள்ள இக்கால மொழிகளிற் பயன்படுத்தப்படும் சொற்கள் கிரேக்க அல்லது இலத்தீன் சொற்களின் மொழிபெயர்ப்பாக இருப்பதனால் அச்சொற்கள் ஆரம் பத்திற் பெற்றிருந்த அர்த்தங்களை நீண்டகாலப் போக்கிற் பெரிதளவில் இழந்து விட்டன. மொழிபெயர்ப்புக்களிலுள்ள இத்தகைய சிக்கல்களாலே பிளேட்டோ வின் உவமைகளைப் புரிந்து கொள்வது மேலும் கடினமாகிவிட்டது. இலத்தீன் சொல்லான வேர்டஸ் (virtus), கிரேக்கச் சொல்லான அறிரே (arete) ஆகிய வற்றின் அடியாக வேர்ச்சியூ (virtue) என்ற ஆங்கிலச் சொல் பிறந்துள்ள போதிலும் அப்பதங்களின் அர்த்தத்தை அது பெறத் தவறிவிட்டது. குறிப் பிட்ட ஒரு விடயத்திலே திறமை பெற்றிருத்தல் என்ற அர்த்தத்தையே அந்த இலத்தீன் பதம் கொண்டிருந்தது. ஆனால் நற்குணம், தூய்மை என்ற கருத்துக் களை ஆங்கிலச்சொல் பெற்றுவிட்டது. ஆரம்பத்தில் அது நல்லதையோ தீய தையோ குறித்தது. யஸ்ரிஸ் (Justice), நேச்சர் (Nature) என்ற ஆங்கிலச் சொற்களிலும் இதே சிக்கல் ஏற்படுவதைக் கவனிக்க முடியும். இவை சம்பந்த மாய்க் கிரேக்க இலத்தீன் மொழிகளுக்கிடையே கூட அர்த்தம் வேறுபடுகின் றது. எனவே, குறிப்பிட்ட ஒரு தொழிலை நுட்பமாகச் செய்யும் அறிவைப் பெற் றிருந்தவரும், நல்வாழ்க்கை வாழும் வகை பற்றிய அறிவைக் கொண்டிருந்த வருமான நல்ல மாலுமியும் நல்ல தச்சரும் மனிதனுக்கு உவமையானார்கள்.

மனித வாழ்க்கையை நல்ல நோக்கத்துடன் பார்க்கும் தன்மை பிளேட்டோ விற்கும் அரிஸ்தோத்திலுக்கும் பொதுவானது. இந்த மரபையே பிற்காலச் சிந்தனையாளர்களும் பின்பற்றினர். நல்ல மனிதன் எப்படியிருப்பான், அவன் எப்பொழுதுமே நல்லவனாக இருப்பானா என்பதைப் பற்றிய கருத்துக்கள் காலத் துக்குக் காலம் திருத்தப்பட்டும் மாற்றப்பட்டும் வந்துள்ளன. நல்ல மனிதன் எப்படியிருப்பான் என்ற கேள்விக்கு விடையிறுப்பது கிறித்துவர்கட்கு மிகவும் இலகுவானதாகவிருந்தது. கிறித்துவைப் போல் இருப்பவன் தான் நல்ல மனிதன் என அவர்கள் விடைபகர்வார்கள். இங்கே கிறித்துநாதர் நிறைவு உள்ள வராகக் கொள்ளப்படுவதிலும் பார்க்க யாவருக்கும் முன்மாதிரியாகத் திகழும் ஒருவராகவே கருதப்பட்டார். மகிழ்ச்சியுள்ளவனே தனது ஆசைகளை வெற்றி கரமாகப் பூர்த்தி செய்பவனே அல்லது சுதந்திரமானவனேதான் நல்ல மனிதன் என்று பிற்காலச் சிந்தனையாளர் வரைவிலக்கணம் கூற முயன்றபோது, அவர் கள் பிளேட்டோவின் கருத்துக்களிலிருந்து வேறுபட்டனர். நற்குணமுள்ள மனிதனைப்பற்றி, மனிதனாக வாழ்ந்து காட்டுவதிற் சிறப்புற்றிருந்த ஒருவனைப் பற்றி விவரிக்கும்போது, பல சிறப்பியல்புகளையும் திறமைகளையும் கொண் டிருந்த தம் நண்பரும் குருவுமான, சோக்கிரட்டீசையே பிளேட்டோ தமது மனத்தில் கொண்டிருந்தார் எனக் கூறமுடியும். சோக்கிரட்டீஸ் அடைந்த தார் மீக உச்ச நிலையை அடைவதற்குத் தேவையான அறக் கொடையும் அறிவாற்ற லும் சிலவகை மனிதருக்கே இருக்க முடியும் எனப் பிளேட்டோ கருதினார். நல்ல வாழ்வையும் தார்மீகத் துறையில் வெற்றியை நல்கும் வாழ்வையும் பெரும் பாலான மக்கள் பெறுவதற்கான சூழ்நிலை, அவர்கள் வாழும் சமூகத்தின் அல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லது நகரின் தன்மையிலும் அமைப்பிலுமே உருவாகின்றன. தமது காலத்தில் வாழ்ந்தவர்கள் யாவருக்கும் மகிழ்ச்சியற்றதும் நிறைவற்றதும் கெடுதலைச் செய்வதுமான வாழ்க்கைச் சூழ்நிலையையே அக்கால நகர அரசுகள் யாவும் உருவாக்கிக்கொண்டிருந்தன என்பதைப் பிளேட்டோ அறிந்திருந்தார். நல்லவர்களாக வாழ ஒருவர்க்கொருவர் உதவும் வகையிலே, பிரசைகட்கிடையேயுள்ள உறவுகளைச் சரியான ஒழுங்கு முறையில் அமைக்கும் விதம் பற்றி ஆராயும் விஞ்ஞானமே அரசியலாகும் என அவர் கருதினர். "குடியரசு" என்ற தலைப்பையும் "நீதியைப்பற்றி" என்ற உப தலைப்பையும் கொண்டுள்ளதும் உரையாடல் உருவில் எழுதப்பட்டதுமான தமது ஆராய்ச்சியிலே, சமூக உறவுகள் பெற்றுள்ள வடிவத்தைத் திருத்தியமைப்பது பற்றியும் குடியரசை அல்லது அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்தியமைப்பது பற்றியும் பிளேட்டோ கவனம் செலுத்தினர். ஆங்கிலத்தில் 'பொலிற்றி' (Polity) என வழங்கப்படும் அரசியல் பற்றிய விடயமே பிளேட்டோவின் அதி முக்கியமான ஆராய்ச்சித் துறையாகும். அரசுக் கோப்பு என்பதை விவரிப்பதற்கு இரண்டாந்தர அர்த்தங்களை உபயோகிக்காது அரசியல் எனும் சொல்லையே உபயோகிப்பது பயன்தருவதாகும்.

அரசியலுறவுகளின் தன்மைகள் பற்றியும், மனிதர் தங்களை ஒழுங்கு செய்யப்பட்ட குழுக்களாக எவ்வகைகளில் அமைக்கின்றனர் என்பது பற்றியும், அத்தகைய அமைப்பு வகைகளை எவ்விதம் பயனுறுதி கொண்டவையாக்க முடியும் என்பது பற்றியும், முதன் முதலிற் செய்யப்பட்ட இவ்விசாரணைகள் இரண்டு எடுகோள்களை அடிப்படையாகக் கொண்டுள்ளன. இந்த விடயத்தைப் பற்றிப் பிற்காலத்தில் எழுதப்பட்ட ஆராய்ச்சிகளில் அத்தகைய எடுகோள்கள் காணப்படுவதில்லை. மக்கள் கூட்டத்தினர் ஒற்றுமையாகவும் மகிழ்ச்சியுடனும் வாழ்வதற்கு, நல்லவனும் மகிழ்ச்சியுடையவனுமாகிய மனிதனுக்கு இருக்க வேண்டிய தார்மீக இயல்புகள் தேவைப்படுகின்றன எனக் கொள்ளப்பட்டது. மக்கட் கூட்டத்தில் அங்கம் வகிப்பதன் மூலம் பிரசைகள் தங்களை நிறைவுள்ளவர்களாக்கிக் கொள்கின்றனர். பிரசைகள் யாவரும் ஒன்ருகக் கூடி வாழ்வதோடு ஒருவர்க்கொருவர் உதவியும் புரிகின்றனர். இந்த நிலைமை இக்கால அரசியலில் நிலவக் கூடியதல்ல. திருச்சபையிற்ருன் இத்தகைய நிலைமையை நாம் எதிர்பார்க்கலாம். இரண்டாவதாக, விரும்பத்தக்க தார்மீகப் பண்புகளான முதிரறிவு, வீரம், தன்னடக்கம், நீதி ஆகியவைகளில் (இன்று அவைகளை நடத்தை முறைமை என அழைக்கின்ருேம்) தன்னடக்கம், நீதி ஆகிய இரண்டுமே மக்கட் கூட்டத்தினர் யாவராலும் பின்பற்றப்பட வேண்டியவை என்றும் மக்கட் கூட்டத்தினரின் வெவ்வேறு பிரிவுகட்குமிடையே ஒத்துழைப்பும் ஒற்றுமையும் இருப்பதற்கு இவை இரண்டுமே காரணம் என்றும் கொள்ளப்பட்டது. முதிரறிவு, வீரம் ஆகிய இரு பண்புகளும் சில குறிப்பிட்ட பிரிவினரிடம் மட்டுமே இருந்து வந்தன என்றும் கருதப்பட்டது.

எனவே, சரியான தீர்ப்புக்களைக் கொடுக்க வல்லவர்களைக் கொண்டிருப்பதிற்ருன் சமூகத்தில் ஒற்றுமை, சமாதானம் ஆகியவை நிலவுவது தங்கியிருக்கின்றது. நீதி என்ற பொருளைக் கொடுக்கும் கிரேக்க மொழிச் சொல், புத்திசாதுரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான தீர்ப்புக்களைச் செய்வதைத்தான் குறிக்கின்றது; சட்டத்தின்படி தீர்ப் பளிப்பதையல்ல. ஆனால், பிளேட்டோ தமது சமூகத் தத்துவத்தை உயர்குடி மைத் தத்துவம் (அதன் ஆரம்ப அர்த்தத்தில்) என்று கருதவில்லை. மக்கட் கூட்டத்தைச் சேர்ந்த வெவ்வேறு மக்கள் நன்னெறியில் வாழ்பவர்களாக இருக் கின்ற போதிலும், பெரும்பாலோர் வெறும் பிரசைகளாக மட்டுமே வாழ்கின்ற னர் என அவர் கருதினார். இதை வேறு விதமாகச் சொல்வதானால், நன்றாக ஆட்சிபுரியப்படும் அல்லது புத்தி சாதுரியமாக ஆளப்படும் சமூகத்தைச் சேர்ந் திருக்கும் நல்ல சந்தர்ப்பம் கிடைத்தமையினாலேயே பெரும்பாலோர் அரசியற் றுறையில் ஒற்றுமையாகவும் ஒருவர்க்கொருவர் உதவும் வகையிலும் நடக்கின் றனர் எனஅவர் கொண்டார். மிகச் சிலர் நீதிக்காக அலைந்து அதைப் பெறு வார்கள். ஆனால் நீதி பெரும்பாலோருக்குக் கொடுக்கப்படுகிறது. சமூகமாக இணைந்து வாழ்வதற்கு இவ்விரு பகுதியினரும் ஒருவரையொருவர் நாடி நிற் கின்றனர். ஆனால் சமூக ஒற்றுமையை உருவாக்குவதற்குத் தனிப்பிரசைகளின் தார்மீகக் குணவியல்பை வளர்ப்பதோடு, அக்குணவியல்புகளை வெளிப்படுத்த உதவும் நடத்தைகளும் தேவை. எனவேதான், தார்மீக வெற்றிக்கு அரசியல் உறவுகள் இன்றியமையாதவை என்பதைப் பிளேட்டோ உணர்ந்தார்.

சமூக நிறுவனங்கள் இயங்கும் முறைகளை விவரிப்பதாலே திருப்தியுறாமல் அச்சமூகம் அடைய முயலும் இலக்குகளையும் ஆராயவிரும்பும் சிந்தனையாளர் கள், அந்த இலக்குகட்கும் அச்சமூகம் பின்பற்ற வேண்டிய இலக்குகட்கு மிடையேயுள்ள வேறுபாடுகளை, அப்படி ஏதாவது வேறுபாடுகள் இருந்தால், விளக்குவதோடு, அவ்வேறுபாடுகள் தோன்றுவதற்கான இயற்கை அல்லது செயற்கைக் காரணங்களையும் கொடுக்க வேண்டிய நிலைக்கு ஆளாக்கப்படுகின்ற னர். 'குடியரசில்' கொடுக்கப்பட்டுள்ள நீதியான சமூகத்தின் மூலம் தார்மீகச் சிக்கல்களைத் தீர்த்துவைக்க முடியுமெனப் பிளேட்டோ கருதியிருந்தால் இலட் சியத்திற்கும் உண்மை நிலைக்குமிடையே வேறுபாடு தோன்றுவது எவ்விதம்? பிளேட்டோவின் விசாரணைகட்குத் தூண்டுகோலாக அமைந்ததும் அவர் வாழ்ந்த காலத்தில் ஏற்பட்டதுமான சரித்திர நெருக்கடியிலிருந்து இப்பிரச் சினை வேறுபட்டதாகும். கிரேக்க நகர நாகரிகம் வீழ்ச்சியுற்றுப் போருக்கும் குழுமனப்பான்மைக்கும் இடமளிப்பதற்கு அக்காலத்திற் செல்வாக்குப் பெற்றி ருந்த சோபிஸ்டுகளின் ஆழமற்ற போதனைகளும் கருத்துக்களுமே காரணமாக இருந்தனவெனக் கூறுவது, நல்லவாழ்க்கைமுறை, நல்ல சமூகம் போன்ற விட யங்களில் அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் உண்மையின்பாற்பட்டவையல்ல வென்றும் தப்புவழி காட்டுபவையென்றும் கூறுவதற்குச் சமமாகவிருக்கும். நல்வாழ்க்கை முறையையும் இணைந்து வாழவேண்டிய அவசியத்தையும் உணர்ந்து கொள்ளத்தக்க தகைமையையும் ஆற்றலையும் கொண்டுள்ள மக்கள், பிளேட்டோ கூறுவதைப் போல் உண்மை அறிவைப் பின்பற்றாமல் கருத்துக் களினதும் நம்பிக்கைகளினதும் நயவில் வாழ்வதற்கும் தப்பான வழியில் இட் டுச் செல்லப்படுவதற்கும் இணங்குவதேன் என்ற விரிவான கேள்விக்கு விடை யிறுக்க முடியாதிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது தனி இலட்சியங்களை அடைவதில் மட்டுமே அக்கறை கொண்டுள்ளவர்களும் மக்கட் கூட்டத்தைச் சேர்ந்த மற்றவர்களின் ஒருமித்த இலட்சியத்திலே தமக்குள்ள பங்கைப் பற்றி அக்கறை கொள்ளாதவர்களுமான தனிமனிதர்கட்கிடையே செய்யப்பட்ட ஆசாரமான செயற்கை ஒப்பந்தங்களின் விளைவாகவே சமூக வழக்கங்கள், சட்டங்கள், அரசியலமைப்புச் சட்டங்கள் என்பவை தோன்றின என்ற சோபிஸ்டுகளின் கருத்தை மறுப்பதில், நீதியான அரசியல் பற்றித் தாம் நடத்திய விசாரணைகளின் போது பிளேட்டோ அதிக கவனம் செலுத்தினர். சமூக ஒப்பந்தம் பற்றிய சோபிஸ்டுகளின் கருத்தை மறுத்த பிளேட்டோ, சமூகப் பிணைப்புக்கள் இயற்கையானவையும் யாவர்க்கும் பொதுவானவையுமாகுமென்றும், மனிதனின் குணவியல்பும் தேவைகளுமே அப்பிணைப்புக்கள் இயற்கையானவையாகவும் பொதுவானவையாகவும் இருப்பதற்குக் காரணமாகவிருக்கின்றனவென்றும் கூறினர். சுயதேவைகள் யாவற்றையும் பூர்த்தி செய்ய முடியாத நிலையிலேயே மனிதன் இருக்கிறான் என்பதையும் அவர் சுட்டிக் காட்டினர்.

சமூக நீதி பற்றிய இலகுவான வரைவிலக்கணத்தைப் பொருளாதார அடிப்படையிலேயே உருவாக்க முடியும். தேவைகளையும் சேவைகளையும் பரிமாறிக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகின்ற காரணத்தினற்றான் மக்கட் கூட்டத்தைச் சேர்ந்த எல்லோரும் ஒருவர் மற்றவருக்கான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு உதவுகிறார்கள். இதை உணர்ந்து கொண்டதன் விளைவாகவே சமநிலைப் பங்காளிகளாக மக்கட் கூட்டத்தினர் பிணைக்கப்பட்டிருக்கின்றனர் என்ற பொதுவான கொள்கையைப் பிளேட்டோ கண்டு கொண்டார். இந்தத் தொடக்க நிலைப் பொருளாதார மட்டத்தில் மக்களின் தேவைகள் யாவும் பூர்த்தி செய்யப்படுவதனல் அவர்கள் மகிழ்ச்சியோடும் திருப்தியோடும் கூடி வாழ்கின்றனர். ஏடன் பூங்கா தொடக்கம் மாக்சிய சகாப்தம் வரையிலுமுள்ள இலகுவான புராணக் கதைகளில் இருப்பதைப் போல், பாவமோ துக்கமோ சமூக ஒற்றுமையைக் குலைக்கமாட்டாது. ஆதியாகமத்தை எழுதியவர்கள் தொடக்கம் ரூசோ, மாக்ஸ் ஆகியோர் ஈறாகவுள்ள சிந்தனையாளர்களைப் போன்று பிளேட்டோவும் சரித்திரத்திற் காணப்படும் குறைகள் பற்றிய பொதுவான அனுபவத்தை விளக்குவதையே தமது பணியாகக் கொண்டார். மிகக் குறைந்த தேவைகளைப் பூர்த்தி செய்யும் பழங்கால அமைப்புக்கு அப்பாற் சமூகம் வளர்ச்சியடைந்த விதத்தைப் பிளேட்டோ தமது 'குடியரசில்' விவரிக்கின்றார்.

தமது விசாரணை இந்தக் கட்டத்தை அடைந்ததும் பிளேட்டோ புதிய உருவகமொன்றைப் பயன்படுத்துகிறார். பிளேட்டோவின் செல்வாக்கிற்குக் கட்டுப்பட்ட பிற்காலச் சிந்தனையாளர்களும் அந்த உருவகத்தைக் காலத்திற்குக் காலம் பயன்படுத்தி வந்திருக்கின்றனர். எளிமையான பொருளாதாரச் சமுதாயத்தைச் சோக்கிரட்டீஸ் 'உண்மையானதென்றும், நல்ல உடல் நலமுடையதென்றும்' வர்ணித்ததாகக் "குடியரசிற்" கூறப்பட்டுள்ளது. இன்பப் பொருள்களைப் பெறுவதன்மூலம் பொருளாதாரம் சிக்கலாக்கப்படுவதை 'வீக்கம்' என்று அவர் வர்ணித்தார். அரசியற் சமுதாயத்தை உருவாக்குவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோய்க்குப் பின் உடல் நலத்தைத் திரும்பவும் பெறுவதற்கு ஒப்பிடப்பட்டுள்ளது. பொருளாதாரச் சமுதாயத்தைத் திருத்தியமைத்து அதை உடல் நலமிக்க நிலையில் வைத்திருக்கக்கூடிய விசேட அறிவையுடைய வைத்தியர்களின் ஆட்சியென அரசாங்கத்தை அவர் கருதினர். முதலாவதாக, எளிய நிலையிலுள்ள சமூகத்தின் தார்மீக நிலை, அதாவது நீதி, ஒற்றுமை ஆகியவைகளை அச்சமூகம் வெளிப்படுத்தும் முறை, தொழிற் பிரிவினைக் கொள்கையைப் பின்பற்றும் தன்மையிலே தங்கியிருக்கிறது. தன்னைப் பீடித்த காய்ச்சலிலிருந்து விடுபட்டுச் சுகமடைந்த சமூகத்தில் இந்தத் தத்துவம் தொடர்ந்து பின்பற்றப்படும். அந்தக் காய்ச்சல் திரும்பவும் வாராமற் பாதுகாப்பதற்காக இந்தச் சமூகமானது புதிதாக விசேட பயிற்சி பெற்றவரும், 'பாதுகாவலர்' எனப் பிளேட்டோவால் அழைக்கப்பட்டவருமான கூட்டத்தினரை உள்ளடக்கியதாகவிருக்கும். இந்தப் புதிய கூட்டத்தினர் சமூகத்தின் உயிருக்கு வைத்தியம் பார்க்கும் மருந்துவர்களாகவும், நல்லவைகளைத் தீயவைகளிலிருந்து பிரித்தெடுத்த பின்பு சமூகத்தின் உடலைக் பேணிப் பாதுகாப்பவர்களாகவும் திகழ்வார்கள்.

நோய் வருதலும் அந்நோய்-குணப்பட்டு உடல்நலம் தேறுதலும் சம்பந்தமான உண்மை நிலையை வெளிப்படுத்துவதும், ஆனால் ஆபத்தானதுமான உருவகத்தைப் பயன்படுத்தியுள்ள யூதர்களும் கிறித்துவர்களும் கூறுவதைப் போல, யாவும் கடவுளின் விருப்பப்படியே நடைபெறுவதாகப் பிளேட்டோ கூறவில்லை. ஆரம்பகால மக்களின் குற்றமற்ற மனமும் வாழ்க்கை முறைகளும் எவ்விதம் சீரழிக்கப்பட்டன என்பது பற்றி செனக்கா, ரூசோ, மாக்சிய கம்யூனிஸ்டு எழுத்தாளர்கட்கு முந்திய எழுத்தாளர்கள் ஆகியோர் எழுதியுள்ள விவரங்களைப் பிளேட்டோவின் கருத்துக்கள் மேலெழுந்தவாரியாக ஒத்திருப்பதைப் போன்று தோற்றமளிக்கும். ஆனால் 'குடியரசில்' 'பன்றிகளின் சமுதாயம்' எனக் கிளேயுக்கன் விவரிக்கும் மட்டத்திற்கும் மேலாகச் சிக்கல் மிகுந்தும் நாகரிக வளர்ச்சியுடையதுமான சமூகம் வளர்ச்சியடையும் போது, பொருத்தக் கேடுகளும் ஒழுங்கீனங்களும் இடம்பெறும் என்றும், தொழிற் பிரிவினைத் தத்துவத்தைப் புதிய முறையிலும் முன்னரிலும் பார்க்க வேறுபட்ட முறையிலும் பிரயோகிப்பதன் மூலமும், சமுதாயத்தைச் சேர்ந்த மக்கட் கூட்டங்கள் ஒன்றிலொன்று தங்கியிருக்(ம் முறைகளை மாற்றியமைப்பதன் மூலமுமே அப்பொருத்தக் கேடுகளையும் ஒழுங்கீனங்களையும் முடிவிற்குக் கொண்டுவருதல் வேண்டும் என்றும் பிளேட்டோ கூறியிருக்கிறர். அமைதியைக் குலைப்பதாகக் கூறப்படும் இரு காரணங்களும் மனிதனின் குணவியல்பிலுள்ள குறைகளின் விளைவாகத் தோன்றியவென இச்சந்தர்ப்பத்திற் கொள்ள முடியாது. தேவைகளைப் பெருக்கிக் கொள்ளும் மனித இயல்பும் தேவைகளைப் பெருக்கிக் கொள்ள முடியாதவாறு பிளேட்டோ வாழ்ந்த காலத்தில் ஏற்பட்ட கட்டுப்பாடுகளுமே அவ்விரு காரணங்கட்கும் மூலமாக விளங்கின. இப்போதுள்ள நிலைமைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது இயற்கை வளம் குன்றிக் காணப்பட்டதும், இந்தச் சொற்ப வளத்தையும் பறித்துக் கொள்ள வேறு மக்கட் கூட்டங்கள் போட்டி போட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துமே, (இப்போட்டிகள் போரிலும் கொண்டுபோய் விட்டன) பிளேட்டோவின் காலத்தில் ஏற்பட்ட கட்டுப்பாடுகளாகும். இந்த இரு கட்டுப்பாடுகளும் இல்லாத சூழ்நிலைகளைப் பிளேட்டோ ஆராயவில்லை.

உடல்நலமாக இருக்கும்போது அதற்கான காரணங்களைப் பற்றி எவரும் சிந்திப்பதில்லை. நோய் மாறி உடல்நலம் தேறியவர்கள், தமது பொது அறிவைக் குறிப்பிட்ட நோயாளிகட்குப் பிரயோகிக்கும் வைத்தியரின் உத்தரவுகளின்படி நடந்ததினாலேயே தமது உடல்நலத்தைத் திரும்பவும் பெற்றிருப்பதை உணரத் தவறமாட்டார்கள். இந்த இரு பகுதியினருக்குமிடையேயுள்ள வித்தியாசத்தை நோய் பற்றிய உருவகம் தெளிவுபடுத்துவதன் மூலம் அரசியல் பற்றிப் பிளேட்டோ கொண்டிருந்த கொள்கையை அது பெரிதளவு எமக்கு உணர்த்துகின்றது. இந்த உருவகத்தை அளவிற்கு மிஞ்சி விரிக்காமல் பார்க்கும்போது, திட்டமான அரசியல் தொடர்பைத் தொழிற் பிரிவினையின்படி இயங்கும் இயற்கையான பொருளாதார முறைமையிலே சுமத்தப்பட்ட அமைப்பாகப் பிளேட்டோ கருதினார் என்று தெரிய வருகின்றது. அத்துடன் இலகுவான அமைப்புக்கள் யாவும் சமநிலையை இழக்கக்கூடியனவும் திறமையற்றனவுமான சிக்கல் மிக்க அமைப்புக்களாக மாறும் இயல்பைக் கொண்டுள்ளன என்றும், அவ்விதம் மாறும் போது தமக்குத் தேவையான மருந்துகளைக் கொடுக்கும் வல்லமையும், முன்னிருந்த ஒழுங்கு நிலைமையை மறுபடியும் உண்டுபண்ணும் திறனும் அவைகட்கு இருக்கும் என்றும் பிளேட்டோ கருதினார்.

அரசியல் அமைப்பு முறைகள் பற்றிப் பின்பு தெரிவிக்கப்படும் வாதங்கள் சம்பந்தமான இரண்டு முக்கிய அம்சங்களை இங்கே குறிப்பிட வேண்டும். பல்வேறு தொழில்களில் விசேட பயிற்சி பெற்றவர்கள் சமூகத்தை மேற்பார்வை செய்து நல்வழி காட்டும் பணியைப் பொறுப்பேற்றுக் கொள்ள முடியாதவர்களாகின்றார்கள் என்ற கருத்து அவைகளில் முதலாவதாகும். விசேட திறமையை மட்டுமல்லாமல் விசேட தார்மீகக் குணவியல்புகளையும் அடிப்படையாக வைத்தே புதிய அரசியல் வகுப்பினரை மற்றவர்களிடமிருந்து பிரித்துணர வேண்டும் என்ற நம்பிக்கை இரண்டாவதாகும். பிரசைகளின் சுதந்திரமும் ஆளும் கூட்டத்தினரின் கடமைகளும் மதிப்புநிலையும் என்பன பற்றிப் பின்னர் தெரிவிக்கப்படும் கருத்துக்கள் பிளேட்டோவின் கருத்துக்களை ஆதரித்தோ அல்லது எதிர்த்தோ எழுதப்படுவனவே.

நகரின் ஒழுங்குள்ளதும் அமைதியுள்ளதுமான அமைப்பை மறுபடியும் உருவாக்கி அதைப் பாதுகாக்கும் பணியைச் செய்யும் கூட்டங்களின் அல்லது வகுப்புக்களின் தார்மீகச் சிறப்புக் குணவியல்புகள் முதிரறிவும் வீரமும் ஆகும். எனவே, அரசியற் கலையான ஆட்சிமுறையையும், படைத்துறைக் கலையான பாதுகாப்புச் செய்தல், ஒழுங்கை நிலைநாட்டல் ஆகியவைகளையும் ஆளும் வகுப்பினர் கற்றுத் தேறவேண்டியவர்களாகின்றனர். தச்சர், கொல்லர் ஆகியோரின் தொழில்களைப் பற்றிப் பிளேட்டோ சில சமயங்களிற் பேசுகின்றார். இந்த அர்த்தத்திற் பார்த்தால், தமது சமுதாயத்தில் வாழ்ந்த பல பொருளாதாரக் குழுக்களுடன் அவர் இன்னும் இரண்டு குழுக்களைச் சேர்ப்பது போலவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றுகிறது. இந்த இரண்டு விசேட தொழில்களேயும் செய்வதற்குத் தார்மீகத் துறையில் தகுதி பெற்றிருக்க வேண்டுமென்று ஆலோசனை கூறுவதன் மூலம் முந்திய குழுக்கள் யாவற்றிலுமிருந்து இவைகளை வேறுபடுத்திக் காட்டுகின்றார். இதன் விளைவாக, இவ்விரண்டு புதிய குழுக்களுடன் தொடர்புபடுத்திப் பார்க்கும் போது முந்திய குழுக்கள் ஒரு தனி வகுப்பைச் சேர்ந்தவைகளைப் போன்று தோற்றமளிக்கின்றன.

மற்ற இரு நற்குணங்களேயும் போலல்லாமல் தன்னடக்கமும் நீதியும் எந்த ஒரு சமூகக் குழுவிற்கும் சிறப்பியல்பாக அமைந்ததல்ல. உடல் நலத்தைப் போன்று அது மூன்று குழுக்களுக்கும் பொதுவானது. சமூகத்தின் வெவ்வேறு பகுதிகளுக்குமிடையே சமநிலையான தொடர்பை ஏற்படுத்துமொன்று என்ற வரைவிலக்கணத்தை நீதிக்குக் கொடுக்கலாம். உடல்நலத்தைப் பற்றி நாம் முன்பு சிந்தித்ததைப் போன்று, பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களிடையே அவர்களேயும் அறியாமலே முன்பு ஏற்பட்ட ஒத்துழைப்பு வடிவத்தையும், வைத்தியர்களான ஆட்சியாளர்களின் உத்தரவுப்படி ஏற்பட்ட அல்லது சுமத்தப்பட்ட ஒத்துழைப்பு வடிவத்தையும் வேறுபடுத்திக் காட்டலாம். பிளேட்டோவின் சமுதாயத்திலுள்ள பெரும்பாலான பிரசைகள் நீதியாக வாழ்வது, போதிய அளவு அறிவுத்திறனையுடைய ஆட்சியாளர்களேப் பெறுவதிலே தங்கியிருக்கின்றது என்பது இதிலிருந்து தெரிகின்றது. நீண்டகாலத்திற்குச் சமுதாயம் சமாதானமாகவும் ஒற்றுமையாகவும் வாழ்வது இரண்டாவது வகுப்பைச் சேர்ந்த துணிவும் வீரமும் கொண்ட உதவிப் படைகளால் (காவலர் வகுப்பின் இந்த உப பிரிவு இவ்வாறு அழைக்கப்படுகிறது) பாதுகாக்கப்படுவதிற்றான் தங்கியிருக்கியிருக்கிறது என்பதையும் குறிப்பிடுதல் வேண்டும்.

எனவே, அரசிற்குத் தனிமனிதன் பலியிடப்படவேண்டுமென்று பிளேட்டோ போதித்ததாகக் கூறுவது முறையன்று. பிற்கால வாதங்களேயும் வேறுபட்ட மொழியையும் அடிப்படையாகக் கொண்டு பிளேட்டோவின் கருத்துக்களுக்கு அர்த்தம் காண முயன்றதனால் வந்த விளைவே இது. அருங்குணங்களாகக் கருதப்படுவனவும் இன்றியமையாதனவுமாகிய முதிரறிவு, வீரம் ஆகியவைகளேக் கொண்டிருந்தவர்களில் அவ்வியல்புகளேப் பெற்றிராதவர்கள் தங்கியிருந்தனர் எனக் கூறமுடியும். ஆனால், சமூகத்தின் பல்வேறு பிரிவுகள் ஒவ்வொன்றும் மற்றவற்றிலேயே தங்கியிருந்தன. ஒரு குறிப்பிட்ட வகுப்பிற்கு மட்டுமல்லாமல் புதிய சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் யாவருக்கும் ஒற்றுமையையும் சமாதானத்தையும் உருவாக்குவதோடு, பாதுகாப்பையும் மகிழ்ச்சியையும் கொடுக்கக் கூடிய புதிய வகைத் தொழில் வகுப்புக்களாக அவர்களேப் புது முறையிற் பகுப்பதன் மூலம் நீதியை நிலைநாட்ட முடியுமென்று பிளேட்டோ கனவுகண்டார்.

இந்த வாதங்களுக்கு மிகவும் முக்கியமான கண்டனமொன்றைப் பிளேட்டோவின் பிற்காலச் சீடரான ஜீன் ஜக்குவஸ் ரூசோ தெரிவித்தார். சமூகத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் அச்சமூகத்தின் சட்டங்களே இயற்றுவதில் பங்குபற்றக் கூடிய சந்தர்ப்பத்தையும் விருப்பத்தையும் கொண்டிருப்பதோடு அச்சமூகத்திற்காகப் போரிடும் சந்தர்ப்பத்தையும் விருப்பத்தையும் பெற்றிருக்கவும் வேண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென்று ரூசோ கூறினர். தற்காலச் சனநாயகத் தத்துவத்தின் முக்கிய அம்ச மாகக் கொள்ளப்படும் இக்கருத்தின் அடிவேரை கிறித்தவ, ஸ்டொய்க் தத்து வங்களிற் காணலாம். அரசியற் சமநிலை பற்றிய இக்கருத்து பின்னால் ஆராயப் படும்.

அரசியல் ஒழுங்கைச் சிலர் பலருக்குக் கொடையாகக் கொடுக்கின்றனர் என்ற பிளேட்டோவின் கருத்திற்குப் பின்னால் மறைபொருளை ஆழ்ந்தாராயும் பண்பு ஒன்று தென்படுகிறது. இப்பண்பு பிளேட்டோவின் கருத்துக்களை நாம் புரிந்து கொள்ள உதவுகின்ற அதே சமயத்தில், வேறு கருத்துக்களைக் கொண்டுள்ள இன்றைய உலகத்தில் அக்கருத்துக்களின் முக்கியத்துவத்தைப் பெரிதும் குறைத்துவிடுகின்றது. அண்ட கோளத்தின் ஒழுங்கை விளக்குவனவாகக் கரு தப்படும் படைப்புத் தொழில், படிமுறை வளர்ச்சி, உலோகாயதவாதம் என்பன பற்றிய கருத்துக்கள், காலத்தால் ஏற்படும் அனுபவமானது குழம்பிய நிலையி லுள்ள சடப்பொருள்களால் ஆனது என்றும், ஆனால் அச்சடப்பொருள்கள் அண் டம் முழுவதற்கும் பொருத்தமானதும், விளங்கிக் கொள்ளக் கூடியதும், ஆன்மீ கத் தன்மைமிக்கதுமான வடிவாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன என்றும் கூறும் கருத்துக்களை ஏதாவது ஒரு வகையில் மறுக்கின்றன.

பிளேட்டோவின் சிந்தனையைப் பற்றி விசேடமாக ஆராயும் நோக்கத்துடன் புத்தகங்களை எழுதுபவர்கள் இக்கருத்தையும் ஆராய்தல் வேண்டும். தார்மீக நற்குணங்களைப் பற்றிய சிறப்பான அறிவை மிகச் சிலரே பெற்றிருந்தனர் என் றும், எனவே ஒற்றுமையும் சமாதானமும் நிலவும் சமூகத்தில் வாழ்பவர்கள் அந்த ஒற்றுமையையும் சமாதானத்தையும் பாதுகாப்பையும் தொடர்ந்து அனு பவிப்பதற்காக, நிகழ்ச்சிகளைப் பொதுவாக இயக்கும் பொறுப்பை, சிறப்புத் தகுதிகளைப் பெற்ற குழுக்களிடம் ஒப்படைப்பர் எனக் கொள்வது நியாயமானது என்றும் பிளேட்டோ கருதினர் என்பதை மட்டும் நாம் கவனத்திற்கெடுத்துக் கொண்டால் போதுமானது.

மூன்றாவது வகுப்பினரை அல்லது பொருளாதார உற்பத்தியில் ஈடுபடும் வகுப் பினரைத் தொழிலாளர் இனம் என நாம் கருதுதலாகாது. உடைமைகட்குச் சொந்தக்காரரும் அந்த வகுப்பிற் சேர்க்கப்பட்டிருந்தமையே அதற்குக் காரணமாகும். சொத்துக்களை வைத்திருக்கும் உரிமை காவலர்கட்கு மறுக்கப்பட் டிருந்தது என்பதையும் இங்கே குறிப்பிடுதல் வேண்டும். இந்த மூன்றாவது அர சியல் ஒழுங்கு திணிக்கப்பட்டமை, நாம் புரிந்து கொள்ளக்கூடிய ஏதாவது ஓர் உருவமாகச் சடப்பொருளை உருவாக்குவதை ஒத்திருந்தது. இந்த வகுப் பைச் சேர்ந்தவர்கள் தன்னடக்கமாக இருப்பதற்குத் தாமாகவே முடிவுசெய்ய வில்லை. ஆனால் பணிந்து செல்வது என்ற தமது முடிவின் விளைவாகவே தன்ன டக்கம் உடையோராக இவர்கள் திகழ்கின்றனர்.

இரண்டாவது வகுப்பைச் சேர்ந்த உதவிப் படையினர், காவலர்கட்கும் பொரு ளாதார வகுப்பினருக்குமிடைப்பட்ட தரத்தைச் சேர்த்தவர்களாக, காவலர் வகுப்பை உருவாக்கும் மக்கட் கூட்டத்தைச் சேர்ந்திராமல், அவர்களின் மான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்களாக இருக்கின்றனர். மூன்ருவது வகுப்பினரைப் போல் வெறுமனே உத்தர விடப்படுவதற்குப் பதிலாக இவர்கள் விதிகட்குக் கீழ்ப்படிந்து நடப்பதற்குப் பயிற்சியளிக்கப்படுகிருர்கள். போதிய அளவு அறிவையுடைய இவர்கட்குத் தமது உடல்நலத்தைப் பேணுவதற்கான விதிகளுக்கமைந்து நடந்துகொள்ளப் பயிற்சியளிக்க முடியும்.

முதலாவது வகுப்பைச் சேர்ந்த காவலர்களும் (ஆட்சியாளர்கள் எனவும் அவர்களை அழைக்கலாம்) பயிற்சி பெறுதல் வேண்டும். ஆனல் மற்ற இருவகுப் பினரையும் போல்லலாமல் காவலர்கள் தாமாகவே பயிற்சி பெற்றுக் கொள்ளு தல் வேண்டும். பிற்கால எழுத்தாளர்கள் பலரைப்போன்று பிளேட்டோவின் அரசியல் தத்துவத்திலும் கல்விக்கு முக்கிய இடமளிக்கப்பட்டிருப்பதைக் கவ னிக்க வேண்டும். தமக்குத் தாமே வைத்தியம் செய்யும் வைத்தியர்களின் நிலை யில் அவர்கள் இருக்கிருர்கள்; அல்லது குறைந்தபட்சம் தமது உடல்நலம் குன் ருதவாறேனும் தம்மைப் பாதுகாத்துக் கொள்கின்றனர் என்று கூறலாம். அவர்க ளின் மேலதிகக் கருமம் காரணமாக உருவாகிய மூன்று வகுப்புக்களையுமுடைய சமுதாயத்தில் அவர்களும் ஓர் அங்கமாக இருப்பதனுல் உடல்நலத்தைப் பேண வேண்டிய நிலையில் அவர்கள் இருக்கின்றனர். ஆட்சி புரிதல் புதிய சமூகத்தின் அடிப்படை இயல்பாக இருக்கின்றமையினுல், சட்டங்களை இயற்ற வேண்டியது ஆட்சியாளர்களின் கடமையாகும். அத்துடன் தாம் இயற்றும் சட்டங்கட்குக் கீழ்ப்படிந்து அவர்கள் நடக்க வேண்டியவர்களாகின்றனர்.

காவலர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் தனிப்பட்ட சொத்துக்களை வைத்திருப்ப தற்கும் குடும்ப வாழ்க்கையில் ஈடுபடுவதற்கும் எதிர்ப்புச் செய்ய வேண்டு மென்று பிளேட்டோ கூறிய கருத்தை அரிஸ்தோத்தில் தம்முடைய புத்தகமான 'அரசியலில்' முதன்முதலிற் கண்டித்தார். அதற்குப் பின்பு மற்ற எழுத்தாளர்க ளும் அக்கருத்தைக் கண்டித்திருக்கின்றனர். திறமைமிக்க ஆட்சியாளரின் வழி காட்டுதலிலே சமூகத்தின் ஒற்றுமையும் சமாதானமும் தங்கியிருக்கின்றன எனப் பிளேட்டோ கருதியதனுல், வலிமை முற்றிய இனவகைகளைச் சேர்ந்த மிருகங் களை வளர்ப்பதைப் போன்று ஆளும் வகுப்பினரின் சந்ததியினரை வளர்க்க வேண்டுமென்றும், குழந்தைகளைப் பெற்றெடுப்பதைத் தனிமனிதரின் விருப்பு வெறுப்புகட்கு விட்டுவிடுவது சிறந்ததல்ல வென்றும் அவர் கருதியது இயற் கையே. ஆனல் அவர் வேறு இரு நோக்கங்களைத் தம்முடைய மனத்திற் கொண் டிருந்தார். முதலாவதாக, ஆளும் வகுப்பினரிடையே குடும்ப ஒற்றுமையை வளர்க்க அவர் விரும்பினுர். இரண்டாவதாக, தமது சொந்தத் தேவைகளில் மட்டும் அக்கறை கொள்ளும்படி பிரசைகளை நிர்ப்பந்திக்கும் பொருளாதார, குடும்ப நெருக்கடிகளை அகற்றுவதன் மூலம் தமது சொந்த ஆசைகளை அடைய வேண்டுமென்று அவாவுறும் சந்தர்ப்பங்கள் காவலர்கட்கு நேரிடாமல் இருக்க வேண்டுமென்று பிளேட்டோ விரும்பினுர். சமூக ஒற்றுமையின் தத்து வத்தை அறிந்துகொள்வதற்குப் பிற்காலத்தில் அரசியலைப் பற்றி எழுதியவர் களுட் பெரும்பாலோர் முயற்சி செய்திருக்கின்றனர். பிளேட்டோ அடைய விரும் பிய அமைப்பைப் போன்ற அமைப்பை, குறைந்த புரட்சிகரமான முறைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் அடைவதற்குப் பல ஆட்சிக் குழுக்கள் முயற்சிகளை மேற்கொண்டன என்ப தற்குச் சரித்திரத்திற் பல உதாரணங்களைக் கொடுக்கலாம். சமய குருமார்களின் வாழ்க்கை பிளேட்டோவின் இந்தக் கருத்திற்கு உதாரணம்போலத் திகழ்வதைக் காணலாம். பிளேட்டோவின் திட்டத்தை ஏற்றுக்கொள்வதானல் மதகுரு மாரைப் போன்று ஆட்சியாளர்களும் இந்தக் கட்டுப்பாடுகளைத் தம்மீது திணிக்க வேண்டியிருக்கும் என்பதுதான் எமக்கு முக்கியமானதாகும்.

பாதுகாவலர்களின் இந்த விசித்திரமான நிலைமையைப் பிளேட்டோவும் முற் ருகப் புரிந்து கொள்ளவில்லை. சோக்கிரட்டீசின் முதிரறிவிலும், உரையாடலிற் கலந்துகொண்டு தமது கருத்துக்களைக் கொடுத்துதவிய மற்றவர்களின் அறிவி லும் மிகச்சிறந்த அரசியற் சட்ட அமைப்புத் தங்கியிருப்பதாக அவர் சிந்திக்க முயன்றதே அதற்குக் காரணம். மிகச்சிறந்த அரசியலமைப்பை அடைவது மாசு கெடாத சில தத்துவஞானிகள் நகரில் இருப்பதிலும், நல்ல சந்தர்ப்பம் காரணமாக ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்தக்கூடிய நிலையில் அவர்கள் இருப்பதிலுமே தங்கியிருக்கின்றது என்பதைத் தமது 'குடியரசில்' அவர் வெளிப்படையாகக் குறிப்பிட்டுள்ளார். பின்பு எழுதப்பட்ட 'சட்டங்கள்' என்ற புத்தகத்திலே, முதிரறிவையுடைய இந்தத் தத்துவஞானமுடைய அரசர்கள் தாம் இயற்றிய சட்டங்கட்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டியவர்களாவர் என் பதைக் குறிப்பாக ஏற்றுக்கொள்கின்ருர். தாமாகவே சட்டத்திற்குக் கீழ்ப் படிந்து நடக்கும் கருத்தினுடைய விளைவுகள் பிளேட்டோவிற்குத் தெரிந்திருக்க வில்லை; பிற்காலத்திலேயே தெரியவந்தன.

இலட்சிய அரசியற் சமூகத்திற்குப் பதில் இரண்டாவது சிறந்த சமூக அமைப்பைச் சித்தரித்துக் காட்டுவதிலேயே பிளேட்டோ தமது 'சட்டம்' என்ற நூலில் அக்கறை காட்டினர். இந்தச் சமூகத்திலே தன்னடக்கம்தான் மிகச் சிறந்த குணநலனுகக் கருதப்பட்டது என்பதையும் கவனித்தல் வேண்டும். எனி னும், பிளேட்டோவின் பிந்திய புத்தகங்களிலிருந்து, அவரின் முந்திய கனவு அடங்கிய புத்தகமான 'குடியரசில்' காணப்படுவதிலும் பார்க்கக் குறைந்த அள விலேயே அரசியல் தொடர்புகளின் அடிப்படை இயல்புகள் பற்றி எம்மால் தெரிந்து கொள்ள முடிகிறது.

ஒரு குறிப்பிட்ட குழுவைச் சேர்ந்த மக்கள் தங்களிடையே பண்டங்களையும் சேவைகளையும் பல்வேறு முறைகளிற் பரிமாறிக் கொள்வதைக் கட்டுப்படுத்து வதிலும், சரியாக ஒழுங்குபடுத்துவதிலும், பொதுவாக வழிப்படுத்துவதிலும் அரசியல் அக்கறை கொண்டுள்ளது. அத்துடன், இத்தகைய சேவைகளிலொன் ருகவும் (முக்கியமான சேவை என்றும் சொல்லலாம்) அரசியல் விளங்குகின்றது. முழுக்குழுவினதும் ஒற்றுமையும் சமாதானமும் பாதுகாப்பும் விசேட நடவடிக் கைகளாக அமையாது போனலும், அவைகளை நிலைநாட்டும் பொறுப்பு சில விசேட குழுக்களிடமே ஒப்படைக்கப்படல் வேண்டும். பொருளாதார வகுப் பைச் சேர்ந்த குழுக்கள் செய்யும் வெவ்வேறு பணிகளைப் போன்று இந்தக் குழுக் களும் தமது விசேட பணிகளைச் செய்தல் வேண்டும். எனவே, நகரிலுள்ள ஒவ் வொருவரும் மற்ற ஒவ்வொருவருடனும் அரசியல் தொடர்புகளையும் பொருளா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாரத் தொடர்புகளையும் கொண்டிருப்பார்கள். அவர்கள் அனைவரும் சட்டங்களையும் விதிகளையும் இயற்றுவோராகவோ அல்லது அவற்றிற்குக் கீழ்ப்படிந்து நடப்போராகவோ இருப்பதுடன், யாவரும் தங்கள் தங்கள் விசேட திறமைகட்கேற்றபடி நகரின் மொத்த வாழ்விற்குத் தம்மாலியன்றவைகளைச் செய்வோராகவும் இருப்பர். சட்டங்கள் அறிவுடைமையின் பாற்பட்டவையாகவும் படையினர் வீரம் மிக்கவர்களாகவும், யாவரும் கீழ்ப்படிந்து நடப்பவர்களுமாகவிருந்தால் சமூகம் ஒற்றுமையாகவும் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் நீதியாகவும் (கிரேக்க மொழியில் அதற்குள்ள விசேட அர்த்தத்தில்) இருக்கும். இறுதியாக, மிக அரிதாகவுள்ள தத்துவஞானிகள் தவிர்ந்த மற்றைய மக்களிற் பெரும்பாலோர் தமது ஆன்மாக்களில் இந்த ஒரே விதமான நீதியை இந்தச் சமூகத்தில் மட்டுமே காணக்கூடியவராயிருப்பர்.

இந்த முறையிலே பிளேட்டோ அரசியல் வடிவத்தைப் பொருளாதார ஒழுங்கிலிருந்து வேறுபடுத்தியும், வெறும் வழக்கத்தை ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக தார்மீக வாழ்வு வாழவேண்டிய அவசியத்தை வற்புறுத்தியும் எமக்குத் தெளிவான வழியைக் காட்டுகின்றார். அத்துடன், காவலர்களும், தத்துவஞானமுடைய அரசர்களும் தம்மைத் தாமே அர்ப்பணித்துக் கொள்வதன் மூலம் பிற்காலத்தில் முக்கியத்துவம் பெற்றுள்ள தற்காலக் கொள்கையான அரசியற் சுதந்திரத்தை அவர் எமக்குச் சுட்டிக் காட்டுகின்றார்.

பிளேட்டோவிலிருந்து அரிஸ்தோத்திலுக்குச் செல்லும்போது பிளேட்டோவின் கோட்பாடுகளிலிருந்து பின்னையவரின் போதனைகளை வேறுபடுத்திக் காட்டும் அம்சங்கட்கு முக்கியத்துவம் கொடுக்கும் வேட்கை தோன்றுவது இயல்பு. புராதன தத்துவவியலிலே பிரபல்யம் பெற்று விளங்கும் இவ்விருவரின் சிந்தனைகளையும் ஒப்பிட்டு அவற்றிற்கிடையேயுள்ள ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் குறிப்பிடுவது, நீண்ட காலமாகப் பின்பற்றப்படும் சிறந்த பொழுதுபோக்காக இருக்கின்றது. இவ்விருவரினதும் சிந்தனைப் பூங்காவிற் புகுந்து விளையாடியவர்கட்கு இருவரின் கருத்துக்களுக்கிடையேயுள்ள வேறுபாடுகள் நன்றாக விளங்கும். ஆனால் அரசியற் சிந்தனையின் நீண்டகாலச் சரித்திரத்தில் அவர்களின் சிந்தனைகட்கிடையேயுள்ள ஒற்றுமைகள்தாம் அதிகம் கவனிக்கப்பட்டும் முக்கியமானவை எனக் கருதப்பட்டும் வந்திருக்கின்றன. ஒக்ஸ்போட்டுப் பல்கலைக்கழகமும் கேம்பிரிட்சுப் பல்கலைக்கழகமும் பலவிதங்களிலே வேறுபட்டவை என்பதை அவற்றுடன் தொடர்பு கொண்டவர்கள் உணர்ந்திருக்கும் அதே வேளையில், அவ்விரண்டு பல்கலைக்கழகங்களும் ஒரே தன்மையினவாய்த் தூரத்திலிருந்து நோக்குபவர்களுக்குத் தென்படுவதை இதற்கு உதாரணமாகக் கொடுக்கலாம்.

அரிஸ்தோத்தில் பிளேட்டோவிற்கு அடுத்த சந்ததியைச் சேர்ந்தவர். பிளேட்டோவின் மாணவராக இருந்தவர். பிளேட்டோவினது மறைவின் பின்பு அவரின் பெயரில் உருவாக்கப்பட்ட கல்விக் கழகத்திலே பதினேழு ஆண்டுக் காலம் உறுப்பினராகவிருந்தவர். பிளேட்டோவைப் போன்று இவர் அரசியல் வாதியாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து தத்துவஞானியாக மாறியவரல்லர். தமது குருவைப்போல் அதென்ஸ் தேசத்தில் சிறப்புரிமை பெற்ற ஆளும் வகுப்பைச் சேர்ந்தவரல்லர். கி.மு. நான் காம் நூற்றுண்டில் அரசியல் நிகழ்ச்சிகள் ஆபத்தான போக்கிற் சென்றுகொண் டிருப்பதைப் பிளேட்டோவைப் போன்று இவர் உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை. அலெக்சாந்தர் மாமன்னனின் ஆசிரியராக இருந்த காரணத்தி ஞல், அவரின் சமகாலத்தில் வாழ்ந்த மற்ற எல்லாரையும் விட உலகத்தை ஆட்சி புரியும் அதிகாரம் குவிந்திருந்த இடத்திற்கு மிக அருகாமையில் இருந்தவர். எனினும், அலெக்சாந்தரின் வெற்றி வாழ்க்கையின் விளைவாகத் தனது சுதந்தி ரத்தை இழந்த கிரேக்க நகரில் வாழ்ந்த அரசியற் சமூகம் இயங்கும் முறைக ளைப் பற்றியே அவர் படம் பிடித்துக் காட்டினுர்.

அலெக்சாந்தர் பெற்ற பெருவெற்றிகளின் விளைவாக, கிரேக்க நகரங்களில் நில விய சமூக அரசியற் சூழ்நிலைகளிலே செழித்து வளர்ந்து, சுதந்திரமாகவும் விஞ்ஞான முறையாகவும் பல்வேறு விடயங்களைப் பற்றி ஆராய்ந்தறியும் பண்பு அடுத்த இரண்டாயிரம் ஆண்டுக் காலத்திற்குத் தலைதூக்க முடியாதவண்ணம் அழித்தொழிக்கப்பட்டது. எதையும் விசாரித்தறியும் அரிஸ்தோத்திலின் அறி வும் பல்வேறு விடயங்களில் அவர் கொண்டிருந்த ஆர்வமும் அலெக்சாந்தர் அழித்தொழித்த அச்செல்வங்களை எமக்குத் தெளிவாக வெளிப்படுத்துகின்றன. பதினைந்தாம் நூற்றுண்டு வரையிலும், பலருக்கு அதற்குப் பின்னருமே, நாகரிக ஐரோப்பாவினது கல்வி வளர்ச்சியின் பிரதிபிம்பங்களாக பிளேட்டோவும் அரிஸ் தோத்திலும் விளங்கினர்.

புராதன கிரேக்கருக்குத் தெரிந்திருந்த அறிவின் பரப்பு முழுவதையும், கலைக் களஞ்சியங்களில் கொடுப்பதைப் போன்று, மிக்க திறமையுடன், தமக்குக் கிடைத்த இறுதிக் காலத்தில் இரத்தினச் சுருக்கமாக எழுதிக் கொடுத்துவிட் டுச் சென்றமைக்காக அரிஸ்தோத்திலுக்கு நாம் கடமைப்பட்டிருக்கின்றோம். உயிரியல் வல்லுனராக அவர் இருந்த காரணத்தினுல் இயற்கையிற் காணப்படும் உயிர் வாழ்வனவற்றைப் பற்றி ஆராய்வதைத் தமது பணியாகக் கொண்டார். உயிர் வாழ்வன பற்றிய உண்மைகளை அறிந்து கொள்வதில் அவர் காட்டிய ஆர் வத்தின் ஓர் அங்கமாகவே நகர்களில் வாழ்ந்த மனிதர்களின் வாழ்க்கையைப் பற்றிக் கூறினுர். மிகவுயர்ந்த திறமையை அடையும் தகைமையைப் பெற்றுள்ள தனிமனிதரின் மிகச் சிறந்த வாழ்க்கை எவ்விதம் அமையவேண்டும் என்பது பற்றிக் கூறும்போதும், இதுபோன்ற வேறு விடயங்களைப் பற்றிக் குறிப்பிடும் போதும், பிளேட்டோவைப் போன்று அரிஸ்தோத்திலும் வாய்ப்பாராய்கின்றுர். எனினும், தாம் வாழ்ந்த காலத்தில் நிகழ்ந்த எல்லாவற்றையும் கவனமாக அவ தானித்து, அந்நிகழ்ச்சிகளை அனுபவரீதியாக ஆழ்ந்து ஆராயும் முறையை அரிஸ் தோத்தில் பின்பற்றி வந்திருக்கின்றுர். அரசியற்றுறையில் அவர்செய்த ஆராய்ச்சிகளிற் பெரும்பகுதி அழிந்தொழிந்து போய்விட்டிருப்பினும், கிரேக்க நகரின் அரசியல் வாழ்க்கையைப் பற்றி எமக்குக் கிடைத்திருக்கும் விவரங்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மசிடோனிய ஆதிக்கத்திற்கு அடிபணியுமுன்பு கிரேக்க உலகம் ஏற்றுக்கொண்டிருந்த அரசியல் வடிவத்தையும் தார்மீக இலட்சியங்களையும் பெரிதளவில் ஒத்திருந்தன.

அரிஸ்தோத்திலின் ஆராய்ச்சிப் புத்தகமான 'அரசியல்', பிளேட்டோவின் 'குடியரசில்' இருந்து பெரிதளவில் வேறுபட்டது. எமக்குக் கிடைத்துள்ள உருவத்தைக் கொண்டு 'அரசியலை' அரிஸ்தோத்தில்தாம் எழுதினுரா என்பதையே ஆராய்ச்சியாளர்கள் சந்தேகிக்கின்றனர். 'அரசியல்' நூலிலே பொருள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள முறை ஓரளவு ஒழுங்கற்றதாக இருக்கின்றமையினுல் அவரின் மாணவர்களுடைய குறிப்புக்கள் தற்செயலாகத் தொடுக்கப்பட்டிருக்கலாமென அவர்கள் கருதுகின்றனர். எந்த வகையிற் பார்த்தாலும், 'குடியரசில்' நாம் காண்பதைப் போன்ற ஒழுங்குபடுத்தப்பட்ட உரையாடல் முறை 'அரசியலில்' இல்லை என்பது வெளிப்படை. ஆனுல் ஆழ்ந்து படிப்பவர்கட்கு இந்தக் குறை மிகவும் முக்கியமானதாக இருக்காது.

அரிஸ்தோத்திலின் 'அரசியலில்' இரண்டு பொருள்கள் ஆராயப்படுகின்றதைக் கவனிக்க முடியும். அரசியலின் எல்லைகள், நோக்கங்கள், குறிக்கோள்கள் ஆகியவைகளையும், தமக்குத் தெரிந்திருந்தபடி கிரேக்க நகர்களின் அரசியலமைப்புச் சட்டங்களையும் அரிஸ்தோத்தில் ஆராய்ந்தார். இந்தப் பொருள்களை அவர் ஆராய்ந்துள்ள ஒழுங்கு திருப்திகரமாக அமையாத போதிலும் அரசியற் கொள்கை, அரசியல் நிறுவனங்கள் என நாம் இப்பொழுது அழைக்கும் அரசியலின் இரு பிரிவுகளையும் அவர் வேறுபடுத்திக் காட்டியிருக்கிருர்.

இந்தக் கட்டுரையில் அரிஸ்தோத்திலின் கொள்கை பற்றிய வாதங்களையே நாம் ஆராய்கின்ருேம். அவ்வாதங்கள் பிளேட்டோவின் கருத்துக்களைச் சில சமயங்களிலே கண்டிக்கின்ற போதிலும், மிகவும் முக்கியமான இரண்டு பிரச்சினைகளில் அவரின் அரசியற் கருத்துக்களை முற்ருக ஏற்றுக் கொள்கின்றன. அரசியல் இயற்கையானது என்பதையும், மனிதனின் சிறப்புக் குணநலத்துடனும் விதியுடனும் பிணைக்கப்பட்டுள்ள ஒரு நடவடிக்கை என்பதையும் அரிஸ்தோத்தில் ஏற்றுக்கொண்டார். அத்துடன் தார்மீக இலட்சியத்தை அடைவதற்கு அரசியல் வாழ்க்கை ஒரு வழியாக இருக்கின்றது என்பதையும் அவர் ஒப்புக்கொண்டார். இன்றைய நூற்ருண்டில் முதலாவது கருத்தை—இரண்டாவதை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும்—திரும்பவும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலைக்கு நாம் வந்திருக்கின்ருேம். ஆனுல் இற்றைக்கும் அரிஸ்தோத்திலின் காலத்திற்குமிடைப்பட்ட நீண்டகாலப் பகுதியிலே இந்தக் கருத்துக்களில் ஒன்று அல்லது மற்றது அல்லது இரண்டுமே மறுக்கப்பட்டதுண்டு என்பதை நாம் மனத்திற் கொள்ளுதல் வேண்டும்.

இரண்டாவது கருத்தைப் பற்றி ஆராயும்போது அரிஸ்தோத்தில் பல அரிய சொற்களை எமக்கு ஆக்கித் தந்திருக்கின்ருர். ஆனுல் இச்சொற்கள் சில வேளைகளில் எமக்கு இக்கட்டான நிலைமையை உண்டுபண்ணுகின்றன என்பதையும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். கிரேக்க நிறுவனங்களை ஆராய்ந்து பார்ப்பது அந்தக் காலத்தில் மிக முக்கியமான ஆராய்ச்சியாகக் கருதப்பட்டது. ஆனுல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமக்கு அந்த ஆராய்ச்சிகள் சரித்திர முக்கியத்துவம் மிக்கவையாக மட்டுமே தென்படுகின்றன. ஆனால் அரிஸ்தோத்தில் பயன்படுத்திய முடியாட்சி, உயர்குடியாட்சி, குழுவாட்சி, சனநாயகம், கொடுங்கோன்மை போன்ற பதங்கள் இவ்வளவு காலமும் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. அச்சொற்களின் பொருள் காலத்தோடு மாறுபட்டு வந்திருக்கின்ற போதிலும், இன்றும் பயன்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. அதிக பயனையுடையதும், உணர்ச்சியை அதிகந் தூண்டாததுமான 'பொலிற்றி' (Polity) போன்ற அரிஸ்தோத்திலின் சொற்கள் அதிகம் வாழவில்லை. இந்தப் போக்கு அவ்வளவு விரும்பத்தக்கதன்று. தற்கால அரசியல் நிறுவனங்களை ஆராய்வதற்கு இது தடையாக இருப்பதுடன் அரிஸ்தோத்திலின் கருத்துக்களைச் சரிவரப் புரிந்து கொள்வதற்கும் தடையாக இருக்கின்றது.

அரசியலை ஒரு நடவடிக்கையாக அரிஸ்தோத்தில் ஆராய்ந்திருப்பது இலட்சிய சமுதாயம் பற்றி அவர் எழுதியுள்ளவைகளை அதிகம் ஒத்திருக்கவில்லை என்றும், இந்தப் பொருளைப் பற்றிப் பிளேட்டோ தமது 'சட்டங்களில்' எழுதியிருப்பதை ஒத்திருக்கின்றது என்றும் கூறுவது இன்று வழக்கமாகிவிட்டது. அரிஸ்தோத்திலுக்கு இந்தப் பிரச்சினைகள் யாவும் இரண்டாந்தர முக்கியத்துவத்தையுடையவையாகவே தோற்றமளித்தன. அன்று நிலவிய சூழ்நிலைகளில் அடையக்கூடிய மிகச் சிறந்தது எது என்பதையும், உண்மையில் அடையக் கூடியது எது என்பதையும் ஆழ்ந்து சிந்திப்பதே அரிஸ்தோத்திலுக்கு முக்கியமானதாகப் பட்டது. அரசியல் இயற்கையானது என்பதைப் பொறுத்தவரையிற் பிளேட்டோவின் கருத்தை ஏற்றுக்கொண்ட அரிஸ்தோத்தில், மனிதனின் தன்மை பற்றி அவர் கூறிய முழுவதையும் ஏற்றுக் கொள்ளவில்லை. மிகவும் முக்கியமான ஒரு விடயத்தின் அடிப்படையிலே அவர் கருத்துவேறுபாடு கொண்டிருந்தார். இந்த அடிப்படைக் கருத்துவேறுபாடு பிற்கால அரசியற் சிந்தனையைப் பெரிதளவிற் பாதித்தது.

நல்ல வாழ்க்கை முறையை அறிவிற் சிறந்த சிறுபான்மையினராவது அறிந்திருப்பர் எனப் பிளேட்டோ கருதினார். சிறுபான்மையினருக்குத் தெரிந்திருக்கும் அந்த வாழ்க்கை முறையை மற்றவர்களுக்குப் போதிக்க முடியுமென்றும், அல்லது மற்றவர்கள் தாமாகவே அவ்வாழ்க்கை முறையைக் கற்றுக்கொள்வரென்றும், அல்லது அவ்வாழ்க்கை முறையை மற்றவர்மீது திணிக்க முடியுமென்றும் பிளேட்டோ நம்பினார். அவரின் கருத்துப்படி அரசியல் வாழ்க்கையின் சாராம்சம் இதுதான். ஆனால் அரிஸ்தோத்திலின் கருத்துப்படி, விஞ்ஞான அறிவு, அதாவது இன்றியமையாதனவும் முழு அகிலத்துக்குமான உண்மைகளைப் பற்றிய அறிவு, தார்மீக அரசியல் உண்மைகளை உள்ளடக்கியதன்று. அவற்றைப் பகுத்தறிவு என்னும் அறிவாற்றலின் திறனாற் புரிந்து கொள்ள முடியாது. அன்றாட அனுபவத்தினாற் செம்மையாக்கப்பட்ட நடைமுறைக்கேற்ற தீர்ப்பைக் கூறும் திறன் மூலம்தான் இந்த இருவகை உண்மைகளையும் உணர்ந்து கொள்ள முடியும். புலன்களுக்கப்பாற்பட்ட வாழ்க்கை முறைக்கு ஒப்ப உண்மை நிலைகள் அமைய வேண்டும் என்று சொல்லவில்லை. அதற்குப் பதிலாக அனுபவத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திலிருந்து படிப்படியாக வாழ்க்கை முறையைக் கண்டு கொள்ள வேண்டுமென்று அரிஸ்தோத்தில் கருதினர். நடைமுறை வாழ்க்கை முறையைக் கற்பனை வாழ்க்கை முறையிலிருந்து முற்றாகப் பிரித்துப் பார்க்க வேண்டுமென்றும், நடைமுறை வாழ்க்கைமுறைபற்றிய உண்மைகளை நிலையான மெய்ம்மைகளைப் பற்றிச் சிந்திப்பதனால் உணர்ந்து கொள்ள முடியாதென்றும் (நிலையான மெய்ம்மைகளைப் பற்றிச் சிந்திப்பதுதான் மனிதனின் நடவடிக்கைகளில் மிகச் சிறந்தது என அரிஸ்தோத்தில் கூறியுள்ளபோதிலும்), அனுபவித்த நிகழ்ச்சி களில் அதிகக் கவனஞ் செலுத்துவதோடு, தார்மீக மனநிலையின் உதவியுடனும் கண்காணிப்புடனும் ஒவ்வொரு குறிப்பிட்ட நிலையையும் பற்றிய முடிவுகளைச் செய்து கொள்ள வேண்டுமென்றும் அரிஸ்தோத்தில் கருதினர்.

பொதுவாழ்விற்குரிய உண்மைகளை அனுபவமுறையில் அணுகுமுறை, உயிரி யற் கல்வியில் அரிஸ்தோத்தில் கொண்டிருந்த ஆர்வத்துடன் ஒத்துப் போவதாக இருந்தது. வெவ்வேறு வகை உயிரினங்கள், வளர்ச்சி என்னும் ஏணியின் வெவ் வேறு படிகளில் இருப்பதை அவர் அவதானித்தார். எனினும், தற்காலத்தில் பயன்படுத்தப்படும் சொற்களை உபயோகித்து, பரிணும வளர்ச்சித் தத்துவத்தை விரித்துரைக்காமல், உயிருள்ளனவற்றின் நடத்தைகள் ஒவ்வோர் உயிரினத்தின் இயல்பிற்கும் நாட்டத்திற்கும் ஏற்ற வகையில் அவைகட்குக் கொடுக்கப்பட்ட நோக்கங்களைச் சமூக அடிப்படையில் அடைய மேற்கொள்ளப்படும் முயற்சியே என்ற விளக்கத்தை அரிஸ்தோத்தில் கொடுத்தார். உயிரினங்களின் இயற்கைத் தலைவிதி அவைகளின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்து தன்னிறைவு பெற முயல்வதே. இந்த அர்த்தத்திற்றன் ஒழுங்கமைப்பைக் கொண்ட மனித சமுதாயங்கள் இயற்கையானவையாக இருக்கின்றன. இறுதி வளர்ச்சி நிலையில் தன்னிறைவு பெறுவதே உயிரினங்களின் முறையான இயல்பாகவிருக்கின்றது. இந்த அர்த்தத்திற்றன் பகுத்தறிவையுடைய மனிதன் சமுதாயத்தில் மட்டுமே தன்னைத்தானே உணர்ந்து கொள்ளக் கூடியவனுக இருக்கின்றன்; நகர அரசிய லில் மட்டுமே அவனுல் உச்ச வளர்ச்சி அடைய முடிகின்றது. இக்காரணத்தினுல் மனிதனுக்கு அரசியல் விலங்கு என்ற வரைவிலக்கணத்தைக் கொடுப்பது பொருத்தமாக இருக்கின்றது. தனிமனிதனிலும் பார்க்க நகர் அரசிற்கு அரிஸ் தோத்தில் அதிக முக்கியத்துவம் அளிப்பதற்கும் இதைப் போன்ற விளக்கத் தைக் கொடுக்க முடியும். தற்காலத்திலே கூறப்படுவதைப் போல், அரசியலமைப் பின் விளைவாக நகர அரசிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. தார்மீக, இயற்கைக் காரணங்கட்காகவே நகர அரசிற்கு முக்கியத்துவமளித்தார் அவர். ஒரு சமூகத்தைச் சேர்ந்த மக்கள் தார்மீக நிறைவையுடைய வாழ்க்கையை வாழ்வதற்குத் தேவையான நிபந்தனையாக நகர அரசை அவர் கருதினர்.

இந்தத் தார்மீக நிறைவு நிலையை விளக்குவதற்கு மகிழ்ச்சி என்ற அர்த் தத்தையுடைய கிரேக்க பதத்தை அரிஸ்தோத்தில் பயன்படுத்தினர்.[1] நல்ல

[1] சர் எனஸ்ட் பாக்கர் பதிப்பித்த **Politics** இல் (**Oxford Clarendon Press**) அரிஸ் தோத்தில் உபயோகித்த பதங்கள் பற்றிய பகுதியொன்றுண்டு. கிரேக்க கருதுகோளான **eudaimonia** ஐப் பற்றி ஆராய்ந்த பகுதியைப் (பக். **IXXV-IXXVI**) பார்க்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்ப்பை அல்லது முடிவைச் செய்வதிலேயே இந்த மகிழ்ச்சி தங்கியிருந்ததல்லா மல் நல்ல காலத்திலோ நல்ல சந்தர்ப்பத்திலோ தங்கியிருக்கவில்லை. இந்த மகிழ்ச்சியை ஒரு நிலை என்பதிலும் பார்க்க ஒரு நடவடிக்கை என்பதே பொருத்தமாகவுள்ளது. அதைப் பேறு என்பதிலும் பார்க்க ஈட்டியது என்று கூறுவதே பொருத்தமாகவுள்ளது. இந்த மகிழ்ச்சிதான் சமூகத்தில் இணக் கத்தை அல்லது சமன்பாட்டைத் தொடர்பாக வைத்திருக்க உதவுகின்றது. அர சியல் தொடர்புகள் அற்ற நிலையில், நகரில் சட்டங்கட்கு அமைய வாழாமல், விரும்பத்தக்க இந்த நிலையைப் பிரசைகளால் அடைய முடியாது. நகர அரசின் கீழ் வாழாதவர்கள் பூரண மனிதர்களாக, அரிஸ்தோத்திலின் அர்த்தப்படி மகிழ்ச்சியையுடைய மனிதர்களாக வாழ முடியாது.

தன் அங்கத்தவர்களின் தார்மீக வளர்ச்சிக்குத் தேவையான இயற்கையான அமைப்பு என்று அரசியற் சமுதாயத்தை அரிஸ்தோத்தில் வர்ணித்திருந்தார். இந்த அளவிற்கு அரிஸ்தோத்திலுக்கும் பிளேட்டோவிற்குமிடையே குறிப்பிடத் தக்க வேறுபாடுகள் இருக்கவில்லை. ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் அல்லது சந் தர்ப்பத்தில் எதைச் செய்வது சிறந்தது என்பதைப் பற்றியே அரிஸ்தோத்தில் சிந்தனை செய்கிருர். ஆனல் பிளேட்டோ எதை இலட்சியமாகக் கொண்டு, அந்த இலட்சியத்தை அடைய நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் பற்றிச் சிந்திக் கின்ருர். விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சியிலும் பார்க்க நடைமுறைக்கேற்ற முடி வுகளைச் செய்வதிலிருந்தே தார்மீக, அரசியல் இலட்சியங்கள் பற்றிய அறிவைப் பெற முடியுமென்றும் அரிஸ்தோத்தில் நம்பினுர். இக்காரணத்தினுற்ருன் பிளேட்டோவைப் போன்று இழந்தவைகளைத் திரும்பப் பெறுதல் என்ற அடிப் படையிலே தமது அரசியற் கருத்துக்களைக் கூருமல், ஏற்கனவே இயங்கும் ஒழுங்கைத் தொடர்ந்து பாதுகாப்பதற்குத் தேவையான சிபாரிசுகள் என்ற முறையிலேயே அரிஸ்தோத்தில் அவைபற்றிக் கூறினுர்.

மனித சமுதாயங்கள் தவறு இழைப்பது ஏன், அவைகள் இயங்க முடியாது திண்டாடுவதற்குக் காரணம் என்ன என்ற பிரச்சினைகளில் அரிஸ்தோத்தில் கவ னம் செலுத்தவில்லை என்பது இதன் அர்த்தமல்ல. 'புரட்சிக்கும் அரசியலமைப் புச் சட்டத்தில் மாற்றம் ஏற்படுத்துவதற்குமான காரணங்கள்' (5 ஆம் புத்த கம்) பற்றிய அரிஸ்தோத்திலின் பிரபல ஆராய்ச்சி, என்றுமுள்ள இந்த அரசியல் பிரச்சினை பற்றி எழுதப்பட்ட சிறந்த கட்டுரையாக இன்றும் திகழ்கின்றது. மாணவர்கள் கட்டாயமாக வாசிக்க வேண்டிய பகுதி இஃதாகும்.

பிளேட்டோவைப் போன்று அரிஸ்தோத்திலும் மனித சமுதாயம் உருக்குலை வதற்கு அறியாமையையே முக்கிய காரணமாகக் கொள்கின்ருர். பிளேட்டோ கருதுவதைப் போலவே, சில மக்கள் மற்றவர்களிலும் பார்க்க அதிக அளவு அறியாமையையுடையவர்களாக இருப்பார்கள் என அரிஸ்தோத்திலும் கருது கின்ருர். தம்மைத் தாமே ஆட்சிபுரியத் தகுதியற்றவர்களாக இருக்கும் அடிமை கள், அடிமைப்படுத்தப்பட்டு மற்றவர்களிலே தங்கியிருப்பது முறையானதே. ஆனல், பிளேட்டோ விவரிக்கும் அறியாமையிலிருந்து இது வேறுபட்டது. சமு தாயத்தில் நிலவும் சமநிலையற்ற நிலைமையைத் திருத்தும் தகுதியும் தகைமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் வாய்ந்த பிரசைகள் (சமுதாயத்தில் ஒரு பகுதியினர்) நகரின் சிறுபான்மை யினராக இருந்த போதிலும், பிளேட்டோவின் பாதுகாவலர் வகையினரைப் போன்ற சிறுபான்மையினரல்லர். இயற்கையாகக் கிடைத்த அறிவாலும் கடின மான பயிற்சி மூலமும் நல்ல வாழ்க்கையைப் பற்றிய சிறந்த அறிவை விசேட மாகப் பெற்றவர்களல்ல அவர்கள். சிறந்த பகுத்தறிவையும் முன் மாதிரியை யும் கொண்டிருப்பதுடன் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ளவும் மிதமாக நடக் கவும் பயிற்சி பெற்றதோடு, நடுநிலை பிறழாது நல்ல முடிவை எடுக்கத்தக்கவர் களாகவும் அவர்கள் இருந்தனர். எனவே, நல்ல சட்டங்களைச் செயற்படுத்தும் திறனை அவர்கள் பெற்றிருந்தனர். எனினும், அரசியல் வாழ்வைப் பின்பற்றப் பயிற்சி பெற்றிருக்காவிட்டால் அவர்களால் நல்ல சட்டங்களைச் செயற்படுத்த முடியாது. பொருளாதாரப் போராட்டத்திலே தினமும் ஈடுபடாமல் இருப்பவர் களே அரசியல் நடவடிக்கைக்கான ஆற்றலைச் செயற்படுத்தவும், பதவியை ஏற் கவும், அரிஸ்தோத்தில் கூறும் தாராண்மை நோக்கங்களை ஓய்வாக அடையவும் முயற்சி செய்ய முடியும். இத்தகையோர் சிறுபான்மையினராக இருப்பதற்கு இதுதான் காரணம்.

நல்வாழ்க்கை வாழ்வதோடு, அதைப்பற்றி மேலும் அறிந்து கொள்ளும் நிலையிலுள்ள ஆளும் குழுவினருக்குக் கிடைக்கவேண்டிய சிறப்புரிமையான நிலை யாகவே பிரசாவுரிமையை அரிஸ்தோத்தில் கருதினார். ஆளும் குழுவினர் நிறைய ஓய்வையுடையவர்களாக இருப்பதனால் அரசியல் வேலைகளை . அல்லது கடமை களைச் செய்வதற்குத் தங்களின் நேரத்தையும் சக்தியையும் திறமைகளையும் செல விடக்கூடிய நிலையில் இருக்கின்றனர்.

ஆட்சி நடத்தும் குழுவினர் மட்டுமே பிரசைகளாக இருத்தல் வேண்டும் என்ற அரிஸ்தோத்திலின் கருத்து, பிரசாவுரிமை யார் யாருக்குக் கொடுக்கப் படல் வேண்டும் என்ற முடிவைச் செய்து விடுகின்றது. நல்வாழ்க்கையை அடை வதற்காக உருவாக்கப்பட்ட அமைப்பு என நகர அரசைப் பற்றி அவர் கொண்டிருந்த கருத்து, நிர்வாக வேலைகளை ஏற்று நடத்தத் தகுதிவாய்ந்தவர் கள், ஓய்வையுடையவர்கள், பொருளாதாரப் போராட்டத்தில் ஈடுபடாதவர் கள், அரசியல் இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடியவர்கள் ஆகியோரே நகர அரசின் அங்கத்தவர்களாக இருப்பதற்குத் தகுதி வாய்ந்தவர்கள் என வரையறை செய்கின்றது. இந்த வரைவிலக்கணம் பிளேட்டோவின் 'முடியர சில்' தெரிவிக்கப்பட்ட திட்டத்திலிருந்து வேறுபட்டதாகும். இத்தகைய நக ருக்குப் பொருளாதார ஆதரவு தேவையில்லை என்று அரிஸ்தோத்தில் கருத வில்லை. ஆனால், குறுகிய நோக்கங்களுடன் செய்யப்படும் வேலைகளும் குற்றே வல் தொழில்களும் நகரின் வாழ்விற்குத் தேவையானவையாக இருந்தபோதி லும், அவை நல்வாழ்க்கைக்குத் தேவையான சூழ்நிலைமட்டுமேயாகும். அத்த கைய தொழில்களைச் செய்பவர்கள் வெறும் குடிமக்களே. பிரசைகளைப் போன்று சட்ட நிர்வாக வேலைகளில் ஈடுபட அவர்கட்கு அனுமதியோ திற மையோ கிடையாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிளேட்டோவின் கருத்துப்படி, கீழ் வகுப்பினர் நகர அரசு என்ற முழு அமைப்பில் அங்கங்களாகச் செயலாற்றினர். ஆனால் அரிஸ்தோத்தில் கீழ்வகுப் பினருக்கு அந்த அளவு முக்கியத்துவத்தைக் கூட அளிக்கவில்லை. அதே சமயத் தில் பிரசைகளின் அரசியல் கடமைகளையும் அவர் குறைத்துக் கொண்டார். ஆட்சியை நடத்துபவர்களாகவும் ஆளப்படுபவர்களாகவும் நடந்துகொள்ள அவர் கள் தங்களைத் தாமே தயார் செய்து வைத்துக் கொள்ளுதல் வேண்டும். ஆள்ப வர்களாகவும் ஆளப்படுபவர்களாகவும் நடந்துகொள்ளும் இந்த உறவிற்றான் அவர்களின் அரசியல் நிலையே தங்கியிருக்கின்றது. அத்துடன், சொத்துக்களை வைத்திருக்கலாகாது என்று அவர்களுக்குத் தடைவிதிக்கப்படவில்லை. சொத்துக் களை வைத்திருப்பது அவர்களின் பொருளாதாரச் சுதந்திரத்திற்கு உத்தரவாத மளிப்பதுடன் உயர்ந்த அரசியல் முயற்சிகள், நடவடிக்கைகள் ஆகியவைகளோடு சம்பந்தப்பட்ட மகிழ்ச்சி, திருப்தி ஆகியவற்றிற்கும் உத்தரவாதமளிக்கின்றது. எனவே, பிளேட்டோவின் பாதுகாவலர்கள் அடையவிருந்த நோக்கங்களை அடைவதற்கே அரிஸ்தோத்திலின் பிரசைத் தொகுதியினரும் முயன்றனர். ஆனால் வேறுபட்ட சூழ்நிலைகளில் வேறுபட்ட வழிகள் மூலமே அந்த நோக்கங் களை அடைய விரும்பினர்.

எனவே, "ஆராய்ந்து தீர்மானிக்கும் அல்லது நீதிநிர்வாகப் பதவியை வகிக் கும் உரிமையைப் பெற்றவரே" பிரசையாவார் என்று வரைவிலக்கணஞ் செய்ய முடியும். மேலும், முறையாக அமைக்கப்பட்ட நகருக்கு, "சாதாரணமா கக் கூறுவதானால், தன்னிறைவு பெற்ற வாழ்க்கையை நடத்துவதற்குப் போதிய தொகை மக்களைக் கொண்ட கூட்டமாகும்"[1] என்று வரைவிலக்கணம் கூறலாம்.

முற்றாக வளர்ச்சிபெற்ற மக்கட் கூட்டத்தினருக்கு இருக்கவேண்டிய அடிப் படைச் சிறப்பியல்பு, அவர்கள் தன்னிறைவு பெற்றவர்களாக இருப்பதே. குடும் பங்கள் தங்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்பவையாக இருந் தன. அந்தக் குடும்பங்களின் இயற்கை வளர்ச்சியாகவே தன்னிறைவு பெற்ற மக்கட் கூட்டங்கள் இருக்கின்றன. ஒப்பிடும்போது, கிரேக்க உலகின் மிகச் சிறிய அரசியல் அமைப்புக்கள் முற்றாக வளர்ச்சி பெற்ற மக்கட் கூட்டத்திற்குச் சிறந்த உதாரணங்களாகத் திகழ்ந்தனவென அரிஸ்தோத்தில் வாதிப்பது இன்று முறையற்றதாகத் தோற்றமளிக்கின்ற போதிலும், அரசியற் கொள்கை பற்றிய அவரது வாதங்களும் கருத்துக்களும் பிற்காலத்திற்கு ஏற்றவையாக இருப்ப தைச் சற்றும் குறைக்கவில்லை.

தன்னிறைவுடைமை என்ற பதத்தை சுதந்திரம், பூரணத்துவம், கடமையைச் செய்யும் திறன், தன்னிறைவு பெற்றதும் தான் செல்லும் வழிகளைத் தானே நிர் ணயிப்பதுமான முழு அமைப்பின் அங்கங்களிடையே நல்ல தொடர்பிருத்தல் ஆகிய அர்த்தங்களைக் கொண்ட ஒரு சொல்லாக அரிஸ்தோத்தில் பயன்படுத்தி னர். ஆராயப்படும் அமைப்பிற்கு இயற்கையாக இருக்கவேண்டிய தேவைகட் கேற்ப தன்னிறைவு என்ற சொல்லின் அர்த்தமும் வேறுபட்டது. ஒழுங்காக அமைக்கப்பட்ட குழு ஒன்று தன் அங்கத்தவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்

[1] Politics, பக். 95.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வது, அங்கத்தவர்கள் எந்த எந்தத் தேவைகட்கு முக்கியத்துவம் கொடுக்கின்றனர் என்பதிலே தங்கியிருக்கின்றது. குடும்பத்தாற் பூர்த்தி செய்யப்படும் சாதாரண உயிரியல் தேவைகள், கிராமத்தால் அல்லது சிறிய சமுதாயத்தாற் பூர்த்தி செய்யப்படும் சாதாரண சமூக, பொருளாதாரத் தேவைகள் ஆகியவைகளைவிட வேறு தேவைகளும் மனிதனுக்கு உண்டு. நிறைவுடைய நிலையிலே அவனது விசேட தார்மீக இயல்புகள், வேறு எந்த விலங்கினத்திற்கும் கொடுக்கப்படாத மொழி என்னும் கொடையினுதவியால் கிடைக்கப்பெற்றும் சிறந்த நல்வாழ்க்கை என்பன தொழிற்படுவதினாலேயே மனிதன் விலங்கினங்களுள் தலை சிறந்தவனாவான். நகர வாழ்க்கையில் மட்டும்தான் மனிதனின் விசேட தார்மீக இயல்புகள் தொழிற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் கிடைக்கின்றன. அறம் இல்லாதவிடத்து மனிதன் மிருகங்களிலும் பார்க்கக் கேடு கெட்டவனாகிவிடுவான். நகர் கொடுத்துதவும் சட்டத்தின் கீழுள்ள ஒழுங்கு, இணக்கம், வாழ்க்கைச் சந்தர்ப்பங்கள் ஆகியவைகள் இல்லாமல் அறமும் இருக்க முடியாது.

அரிஸ்தோத்தில் தமது புகழ்பெற்ற வரைவிலக்கணத்தில் 'அறம் நகர அரசைச் சார்ந்தது ; எது நீதியானது என்பதை நிர்ணயிக்கும் அறம், அரசியல் கூட்டத்தை அல்லது குழுவை முறைமைப்படுத்துவதாகவே இருக்கின்றது'[1] என்பார். பிளேட்டோவின் சொந்த இலட்சியத்திலிருந்து இது அதிகம் வேறுபட்டதல்ல. தனியேயிருந்து மனிதன் நல்வாழ்வு வாழ முடியாது. மனிதன் தன் அயலவர்களுடன் கூடி வாழ்வது உயிரியல், பொருளியல் துறைகளில் அவன் இயற்கையாக எவன் ஒருவனிலும் தங்கியிருப்பதனால் மட்டுமன்று; தார்மீகத் துறையிலும் இயற்கையாக எவன் ஒருவனிலாவது தங்கியிருப்பதினாலும்தான். அரசியல் மட்டத்திலே குழுக்கள் சுதந்திரமானவையாகவும் தாம் செல்லவேண்டிய திசையை நிர்ணயிக்கத் தகுதி வாய்ந்தவையாகவும் மாறுகின்றன. இதைச் செய்யுமுகமாக குழுக்கள் குழுவாழ்க்கையின் பல்வேறு தேவைகளையும் பூர்த்தி செய்வதற்குத் தமக்குள் இருக்க வேண்டிய விசேட அங்கங்களை, குறிப்பாகச் சரியான அரசியல் வகுப்பை, வேறுபடுத்திக் கொள்ளுதல் வேண்டும். இங்கே இயற்கையானதும் நிறைவு பெற்றதும் உண்மையான மனிதத் தன்மையைக் கொண்டதுமான நல்வாழ்க்கையைக் காணலாம்.

தமது பிரசை வகுப்பிற்கு இருக்கக் கூடிய பல்வேறு அமைப்புக்களை அரிஸ்தோத்தில் ஓரளவு கவனத்துடன் பகுத்தாராய்கின்றார். சமுதாயத்தில் நீதியான சமநிலையை உண்டுபண்ணுவதற்கும் பிரசாவுரிமையாற் கிடைக்கப்பெறும் சிறப்புரிமைகளை அனுபவிப்பதற்கும் இருக்கவேண்டிய தகைமைகள் எவை என்பதைத் துணிவதோடு, வெவ்வேறு பிரசைகட்குக் கொடுக்கப்படும் புகழும் பரிசுகளும் பகுத்தறிவிற்கும் தார்மீகப் பண்பிற்கும் ஏற்ற கொள்கையின் அடிப்படையிற் கொடுக்கப்படுகின்றனவா என்பதையும் கவனித்தல் வேண்டும். பகிர்ந்தளிக்கும் நீதி எனப்படும் இந்தக் கொள்கை, சமத்துவ வாதத்திற்கு அரிஸ்தோத்தில் அளித்த பதிலாகவிருக்கின்றது. சமூகத் தொழிற்பாட்டிற்கும் அதனை ஒத்த மதிப்புநிலை, பரிசு என்பவற்றிற்குமிடையேயுள்ள சமநிலையைச்

[1] Politics, பக். 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமத்துவம் காட்டுவதாக இருக்க வேண்டும். கிரேக்கர்களின் கருத்துப் படி, விகித சமமற்றதும் யாவருக்கும் செல்லுபடியானதுமான சமத்துவத்திற்காக சமுதாயத் தொழிற்பாட்டின் வேறுபாடுகளை ஏற்றுக்கொள்ள மறுப்பது அநீதியானதாகும். ஒவ்வொருவரிடமிருந்தும் அவரவரின் திறனுக்கு ஏற்றவைகளையே சமுதாயம் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும் என்ற கருத்தை அரிஸ்தோத்தில் ஏற்றுக்கொள்ளக் கூடும். ஆனால், 18 ஆம் நூற்றாண்டின் பின்பகுதிக்குரிய சுலோகத்தில் ஒரு திருத்தத்தை, ஒவ்வொருவருக்கும் அவரவரின் திறனுக்கு ஏற்ற வகையிலேயே கொடுபடுதல் வேண்மென்ற திருத்தத்தை அவர் செய்தல் கூடும்.

தற்காலத்தில் ஆட்சியுரிமை எனப்படும் என்றுமுள்ள பிரச்சினையையும் ஓரளவு விரிவாக அரிஸ்தோத்தில் ஆராய்ந்துள்ளார். கிரேக்க நகரைப் பொறுத்தவரையில், இறுதி நிர்வாக முடிவுகளை பிரசைகளில் எந்தக் குழுவினர் செய்தல் வேண்டும் என்பதையே ஆட்சியுரிமை என்ற பதம் குறிப்பிட்டது. பிளேட்டோவைப் பொறுத்தவரையில், பாதுகாவலர் வகுப்பு ஒன்றை உருவாக்கியதுடன் இப்பிரச்சினை முடிவடைந்துவிட்டது. ஆனால் இந்தப் பிரச்சினையை அனுபவ ரீதியாக அணுகிய அரிஸ்தோத்தில் மனித சமுதாயத்தில் வழக்கமாகக் காணப்படும் போட்டிக் குழுவினரின் உரிமைகளை ஆராய்கின்றார். உயர்குடிப் பிறந்தவன், பணக்காரன், திறமை மிக்க தனி மனிதனொருவன், கொடுங்கோலன், பிரசைகள் முழுப்பேரும் ஆகிய போட்டிக்குழுவினரின் உரிமைகள் பற்றியே அவர் ஆராய்ந்தார். நீதி முறையில் ஒழுங்கமைந்த நகர், மக்களின் முடிவுகளில் மிகக் குறைந்த அளவே தங்கியிருக்க வேண்டுமென்றும், 'மனித ஆன்மாவைத் தாக்கும் உணர்ச்சிகட்கு மாந்தர்கள் அடிமையாக இருக்கின்றபடியால் அது (இறைமை) சட்டத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பது சிறந்தது'[1] என்றும் அரிஸ்தோத்தில் கூறினார். 'முறையாக அமைக்கப்பட்ட சட்டங்களிடமே இறுதி இறைமை இருத்தல் வேண்டும்; தனிமனிதனாலோ அல்லது ஒரு குழுவினராலோ நடத்தப்படும் ஆட்சி எல்லாச் சந்தர்ப்பங்களுக்கும் பொதுவான விதிகளைத் தயாரிக்க முடியாமல் இருக்கின்ற காரணத்தினாலும், சூழ்நிலைக்குத் தகுந்தபடி முடிவுகளைச் செய்யவேண்டியும் தீர்ப்புக்களைக் கொடுக்க வேண்டியும் இருப்பதனாலும் அந்த விடயங்களைக் கவனிப்பதற்கு மட்டும் தனிமனிதனோ அல்லது குழுவோ இறைமையைக் கொண்டிருந்தல் வேண்டும்.'[2]

சமூகத்திலுள்ள குழுக்கள் செய்யும் முடிவுகளிலும் பார்க்கச் சட்டத்திற்கு முக்கியத்துவம் அளிக்க அரிஸ்தோத்தில் முடிவு செய்தமைக்கு, எவ்வாறு நோக்கினும், அதீனியர் சட்டம் மாறாத இயல்பைக் கொண்டிருந்தமையே காரணமாகும். அதீனியர் சட்டங்கள் தற்காலச் சட்டங்களைப் போல் அடிக்கடி இயற்

[1] Politics, பக். 122

[2] Politi^s, பக். 127

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றப்பட்டுப் பின்பு மாற்றப்படுபவையல்ல. அநீனியர் சட்டங்கள் நிரந்தர மானவை. புதிய சட்டங்கள் இயற்றப்பட்டால் அவைகள் நிரந்தரச் சட்டங்க ளின் அடிப்படையிலேயே கணிக்கப்படும்.

நிலையான, நன்மதிப்புள்ள, சமநிலையான, நியாயத்தின்பாற்பட்ட ஆட்சியாக இருக்கும்வரையுந்தான் இந்த அமைப்பை அரிஸ்தோத்தில் போற்றிப் புகழ்ந் தார். ஆனல், சட்டத்தொகுதியொன்றை உருவாக்குவதால் மட்டும் அவை நல்ல நீதியான சட்டங்களாகவே இருக்க வேண்டும் என்று கொள்ள முடியாது என் பதையும் அவர் உணர்ந்தார். சட்டங்களே சமுதாயத்திலுள்ள எந்த ஒரு குறிப் பிட்ட பகுதியினருக்கும் பாரபட்சமாக இருக்கக் கூடும் என்பதையும் அவர் உணரத் தவறவில்லை. மாக்சின்படி, சட்டங்கள் ஏதாவது ஒரு பகுதிக்குச் சாதக மாகவே இருக்கும். எனவே, பிற்காலத்தில் மொன்டஸ்கியூ செய்த அதே முடி விற்கே அரிஸ்தோத்திலும் வருகின்ருர். "அரசியலமைப்புச் சட்டங்கட்கு அமையவே சட்டங்கள் தயாரிக்கப்படல் வேண்டும்; இது இவ்வாருக இருந் தால், சரியான அரசியலமைப்புச் சட்டங்கட்கு அமையத் தயாரிக்கப்படும் சட்டங்கள் நீதியானவையாகவும், தவருன அல்லது நெறிக்கு மாருன அரசிய லமைப்புச் சட்டங்களுக்கமையத் தயாரிக்கப்படும் சட்டங்கள் அநீதியானவை யாகவும் இருத்தல் வேண்டும்"[1] என்ற முடிவிற்கு அரிஸ்தோத்தில் வருகின்ருர்.

நாம் இன்று பயன்படுத்துவதைப் போன்று அதிகாரங்களைப் பிரித்தல், பதவி கள் பற்றிய ஒழுங்குகளைச் செய்தல் என்ற அர்த்தங்களில் அரசியலமைப்புச் சட்டம் என்ற சொல்லை அரிஸ்தோத்தில் பயன்படுத்தவில்லை. அரசியல் அமைப் புச் சட்டம் என்ற பதத்தை இந்த அர்த்தங்களிற் பயன்படுத்தினல், அரசியல மைப்பின் இலட்சியம் அல்லது நோக்கம் என்ற முக்கியமான அம்சத்தைக் கவ னத்திற்கு எடுக்காமல் விடுவதாக இருக்கும். மன்னன் ஒருவன் செங்கோலாட்சி நடாத்தலாம்; அல்லது கொடுங்கோலனுக மாறலாம். குழு ஆட்சிகள் சுயநலத் தின்பாற்பட்டவையாக அல்லது உண்மையான உயர்குடி ஆட்சியாக இருக் கலாம். சனநாயக ஆட்சியானது மக்கள் கும்பல் ஆட்சியின் உதாரணமாகவோ அல்லது மக்களிடையே காணப்படும் முதிரறிவு, நன்மதி ஆகியவைகளைப் பிரதி பலிக்கும் ஆட்சிக்கு உதாரணமாகவோ அமையலாம். நல்வாழ்க்கையைப் பெறு வதே சமுதாயத்தின் முறையான இலட்சியமாகக் கொள்ளப்பட்டால், இந்த இலட்சியத்தை அடைவதிற் சிரத்தை காட்டும் அரசாங்கங்கள் மட்டுமே முறை யான அல்லது தார்மீக முறையிலே திருப்திகரமான அரசியலமைப்புச் சட்டங் களைக் கொண்டிருக்கும். இந்தப் பொது இலட்சியத்தை அடைவதற்காகப் பிர யோகிக்கப்படும் அதிகாரங்கள் மட்டுமே நீதியானவையாக இருக்கும். எதிரிடை யாகக் கூறுவதானல், ஒரு பகுதியினரின் அக்கறைக்கு மட்டும் அதிமுக்கியத்து வம் அளிக்கப்பட்டால், குறிப்பாக, ஆட்சிபுரிபவரோ அல்லது ஆட்சி புரியும் குழுவினரோ தம் சுயநலத்திற்கே அதி முக்கியத்துவம் கொடுத்தால், அரசிய

1 அதே நூல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லமைப்புச் சட்டம் முறைதவறியதாகிவிடும் என்றும், சட்டங்கள் அநீதியானவை யாக இருப்பதோடு, இறுதி மேன்முறையீட்டு மன்றத்திற்குரியனவாகாமலும் இருக்கும் என்றும் அரிஸ்தோத்தில் கருதினர்.

எனவே, நிர்வாகத் தேவைகட்கு எந்த வகை அரசியலமைப்புச் சட்டம் சிறந்ததாகவுள்ளது என்ற கேள்வி, அரிஸ்தோத்திலைப் பொறுத்தவரையில் இரண்டாந்தர முக்கியத்துவத்தையுடையதே. வறியவர்களாக இருந்தாலும் செல்வர்களாக இருந்தாலும், சிலராக இருந்தாலும் பலராக இருந்தாலும், அரசியலமைப்புச் சட்டத்தைத் தமது ஆதிக்கத்திற்குள் கொண்டுவருபவர்கள் எல்லோருடையவும் நன்மைக்காக அல்லது தங்கள் பகுதியினரின் நன்மைக்காக நடவடிக்கைகளை எடுக்கலாம். நகர அரசில் வாழும் மக்கள் யாவருக்கும் சாதகமாக இருக்கும் முடிவுகளைப் பிரசைகளிற் பெரும்பாலோர் சேர்ந்து மேற்கொள்வதே மிகவும் சிறந்ததாக இருக்கும் என்ற கருத்தை அரிஸ்தோத்தில் கொண்டிருந்தார். இத்தகைய அரசியலமைப்புச் சட்டங்களைத்தான் அரசு என அவர் அழைக்கின்றார். தற்காலச் சட்டசபைகளுக்கு இருப்பதாகச் சொல்லப்படும் இறுதிச் சனநாயகக் கட்டுப்பாடுகள் பிரசைகளின் கூட்டுப் பேரவைக்கு இருக்கவில்லை என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுதல் வேண்டும். நிர்வாக அதிகாரிகளைத் தெரிவு செய்வதும் அவர்களின் வேலையைப் பரிசீலனை செய்வதுமே அப்பேரவையின் பிரதான பணிகளாக இருந்தன. தவருன வழியிற் செலுத்தப்படும் மக்கள் அரசாங்கத்தைக் குறிப்பிடுவதற்காகவே சனநாயகம் என்ற பதத்தை அரிஸ்தோத்தில் பயன்படுத்தினர். இன்று பயன்படுத்தப்படும் முழு அர்த்தத்தையும் சனநாயகம் என்ற சொல் அன்று பெற்றுவிடவில்லை.

சொந்த வாழ்க்கையிலும் பொது வாழ்க்கையிலும் தீவிரமான கொள்கைகளைக் கடைப்பிடிப்பதை அரிஸ்தோத்தில் வன்மையாக எதிர்த்தார். நடுவழி மூலமே நிறைவைத் தேடுதல் வேண்டும். பொதுப் பண்பை மீறி நடக்கும் பித்தனிலும் பார்க்க முன்மதியுடன் நடப்பவன் மீதே நம்பிக்கை வைத்தல் வேண்டும். ஒழுங்கான கட்டுப்பாடுள்ள பழக்கங்களையுடையவனே விரும்பத்தக்கவன். இதைப் போலவே பெரும் பணக்காரர்களாகவும் பரம ஏழைகளாகவும் இல்லாத நடுத்தர வகுப்பைச் சேர்ந்த பிரசைகளையே அரிஸ்தோத்தில் விரும்பினர். அன்றியும், பிரசைகளின் சொந்த வாழ்க்கையின் பண்பே அரசியலமைப்புச் சட்டத்திற்கு ஆதாரமாக இருப்பதோடு அரசியலமைப்புச் சட்டத்தாலும் பாதுகாக்கப்படுகின்றது.

பிளேட்டோவைப் பொறுத்தவரையில், நீதியான நகரை உருவாக்குவதிலே கல்வியின் பங்கு முக்கியமானதாகத் தோற்றமளித்தது. பிரசைகள் தாங்கள் வாழும் நகரின் வகைக்கு ஏற்ற வாழ்க்கை முறைகளிலும் பழக்க வழக்கங்களிலும் பயிற்றப்படல் வேண்டும். அவ்வாறு பயிற்சி அளிக்கப்படுவதனுற்ருன் அந்நகரின் அரசியலமைப்புச் சட்டத்தைப் பாதுகாக்க முடியும். ஒவ்வொரு நகராலும் ஏற்றுக்கொள்ளப்படும் கல்வி அமைப்புமுறை எல்லாப் பிரசைகட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் பொதுவானதாக இருப்பதுடன் அரசியல் அதிகாரிகளால் ஒழுங்குபடுத்தப் படுதலும் வேண்டும். அரசாங்கக் கல்வி என நாம் அழைப்பது பொருளாதார, நிர்வாக வசதிகளுக்கேற்றதாக மட்டும் அமைதல் கூடாது. கிரேக்க நகர அரசின் அரசியல் அமைப்பிற்குத் தேவையான இறுதித் தார்மீக இலட்சியத்திற்கு அமைவாக அஃது இருத்தல் வேண்டும். இக் காரணத்திற்காகத்தான் ஓர் இலட்சிய நகரிற் கொடுக்கப்படவேண்டிய கல்விப் பயிற்சி, பிரசைகள் ஒவ்வொருவரினதும் குணவியல்புகளை, நல்லபழக்க வழக்கங்களைப் பயிலுவதன்மூலம் நல்வழிப் படுத்தக் கூடியதாகவும், ஒவ்வொரு தனிமனிதனும் தனது மனக்கட்டுப்பாட்டை இழந்து விடாமல் இருக்கத்தக்க வகையிற் பகுத்தறிவுப் பயிற்சியை நல்குவதாகவும் அமைந்திருக்க வேண்டுமென்று அரிஸ்தோத்தில் கருதினுர்.

நகரின் ஒற்றுமைக்கு அரிஸ்தோத்திலும் பிளேட்டோவைப் போன்றே மிகவும் முக்கியத்துவம் அளிக்கின்றுர். பிளேட்டோவைப் போன்று நகரின் ஒற்றுமை என்ற சொற்றொடரை, தனிமுறைச் சார்பற்ற மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்குப் பிரசைகள் யாவரும் கீழ்ப்படிவாக நடந்து கொள்ள வேண்டும் என்ற அர்த்தத்தில் அரிஸ்தோத்தில் பயன்படுத்தினுர் என்று கொள்வது முறையல்ல. பிரசைகளுக்கிடையே இருக்கும் கூட்டுறவை நல்வாழ்விற்காக அவர்கள் தமக்குட் செய்து கொண்ட ஓர் ஒப்பந்தம் எனக் கொள்வதே சிறந்தது. தார்மீக நிறைவை எய்துவதற்கு அரசியல் வாழ்க்கை ஒரு வழி என்றே அரிஸ்தோத்திலும் பிளேட்டோவும் கருதினர். தார்மீக நிறைவை எய்துவதற்கு அரசியல் வாழ்க்கை ஒரு நிபந்தனையாக இருப்பதோடு, தார்மீக குணதிசயங்கட்குப் பயிற்சியளிப்பதற்கேற்ற சிறந்த வழியாகவும் இருக்கின்றது.

நடைமுறை வாழ்க்கைக்கு அப்பால் தூய அறிவாற்றல் முயற்சிகளின் உயர்ந்த எல்லை, அதாவது சரியான கொள்கைமுறையான வாழ்க்கை இருப்பதாக அரிஸ்தோத்தில் கொண்டார். ஓய்வு, திறமை, அறிவு ஆகியவைகளையுடைய மனிதன் அதில், விஞ்ஞான ரீதியான உண்மையை ஆழ்ந்து சிந்திப்பதன் மூலந்தான் பூரணமான மகிழ்ச்சியை எதிர்பார்க்க முடியும். இம்முறையிற் சிந்திப்பதன் மூலமே தன்னைச் சிறந்த முறையிற் பூரணத்துவம் பெறச்செய்ய முடியும். இது தான் மிகச்சிறந்த தன்னிறைவு பெற்ற வாழ்க்கையாகும். இவ்வாழ்க்கையை நடத்துபவர்கள் வெளியாரின் ஆதரவிலே தங்கியிருக்க வேண்டியதில்லை. " நீதியாகவும் அறத்தின்படியும் நடந்து கொள்பவர்களுக்கும் மற்றவர்களுக்கும் இருப்பது போன்று மெய்யறிவு பெற்றவர்களுக்கும் வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்கள் யாவும் தேவைப்படுகின்ற போதிலும், நீதியுடையவனுக்குத் தான் நீதியாக நடந்து கொள்வதற்கு மற்றவர்களின் உதவியோ ஆதரவோ தேவைப்படுகின்றது ; அதைப்போலவே தன்னடக்கமுள்ள மனிதனுக்கும் வீரம் நிறைந்தவனுக்கும் மற்றவர்களின் உதவியோ நல்லாதரவோ தேவைப்படுகின்றது. ஆனுல் இதற்குமாருக, மெய்யறிவு பெற்றவனுக்கு வேறு ஆட்களின் உதவி தேவையில்லை. அவன் தனியாக இருந்து ஆழ்ந்து சிந்திக்க முடியும். அவன் எந்த அளவிற்குச் சிந்தனை செய்கின்றுனே அந்த அளவிற்கு மெய்யறிவைப் பெறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வான். மற்றவர்களுடன் கலந்தாலோசித்தால் மெய்யறிவை மேலும் வளர்க்கலாம் என்பது உண்மையாக இருந்த போதிலும், மெய்யறிவுடையவனே மாந்தர்களுள் அதிகம் தன்னிறைவு பெற்றவனாவான்."[1]

அரிஸ்தோத்திலின் மரணத்திற்கும் உரோமாபுரிப் பேரரசு நிறுவப்படுவதற்குமிடையேயுள்ள மூன்று நூற்றாண்டுக் காலத்திலே பலமொழி பேசிய முதிரா நிலையிலுள்ள கிரேக்க சமுதாயங்களின் அமைப்பு முறை மாற்றமடைந்து கொண்டு செல்ல, கிரேக்க நகர அரசுகளில் நிலவிய வாழ்க்கை முறையின் அடிப்படையிலே தயாரிக்கப்பட்ட அரசியற் கொள்கைகளுட் சிலவற்றை இப்புதிய சூழ்நிலைக்குப் பிரயோகிக்க இயலுமாயிருந்தது. முற்றாக வேறுபட்ட சூழ்நிலையில் வாழ்ந்து வந்த புதிய, பெரிய சமுதாயத்திலும், கிரேக்க இலட்சியமான ஒற்றுமையும், தார்மீகத் துறையிலே மனத்திருப்தியுங் கொண்ட சமுதாயத்தை உருவாக்கும் முயற்சி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வந்தது. ஆனால், தங்கள் நகர அரசுகளிலிருந்தும் கிராமங்களிலிருந்தும் வேரோடு பிடுங்கப்பட்டு மத்திய தரைக் கடற்கரையிலுள்ள நகரங்களுக்கு ஒதுக்கித் தள்ளப்பட்ட பெருந்தொகையான மக்கள், கிரேக்க இலட்சியத்தை அடைவதிலிருந்து தாம் மிகத் தூரத்தில் இருப்பதை உணர்ந்துதான் இருத்தல் வேண்டும். எனவே, குழப்பம் மிகுந்த இக்காலகட்டத்தில் அரசியலைப் பற்றி ஆழ்ந்து சிந்திப்பதற்கு வசதிகள் இல்லாமற்போனதில் ஆச்சரியமில்லை. எனவே, இக்காலச் சிந்தனையாளர்கள், பழக்கமில்லாத, தெரியாத, ஆபத்தான உலகிலே தனிமனிதன் தனது சொந்த வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதோடு சம்பந்தப்பட்ட நடைமுறையான தார்மீகப் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் அளித்ததில் வியப்பொன்றும் இல்லை.

இந்தப் பின்னணியிலே நகர அரசு என்ற புராதனக் கொள்கை, உலக நகர் என்ற பண்பியல்பாக விரிவடைந்தது. இந்த நூற்றாண்டுகளிற் கிரேக்கப் பிரசைகளின் அரசியல் நற்குணங்கள் மிகக் குறைந்த அளவிலேயே தென்பட்டன. இவைகட்குப் பதிலாக, மெய்யறிவுடையவர்கள் தமது கடமையைச் செய்வதற்கு சூழ்நிலைகள் தடைசெய்வதை அனுமதிக்காத அதே நேரத்தில், ஊழ், தேவை ஆகியவற்றின் ஆணைப்படி துன்பத்தை அனுபவித்தல் என்ற இன்ப துன்ப நடுநிலைக் கோட்பாட்டாளரின் கடும் இலட்சியத்திற்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

மனிதன் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளிலே கொள்கைக்கும் நடைமுறைக்குமிடையேயுள்ள தொடர்பு நிலையானதன்று. அரிஸ்தோத்திலின் காலத்தில் மட்டும்தான் கொள்கைக்கும் நடைமுறைக்குமிடையே அதிக வேறுபாடு இருக்கவில்லை. அவரின் காலத்திற்கு முன்பும் பின்பும் கொள்கைக்கும் நடைமுறைக்குமிடையே பெரிய இடைவெளி இருந்து வந்திருக்கின்றது. மத்திய கிழக்குப் பேரரசுகளுக்கு கிரேக்க ஆட்சி விரிவாக்கப்பட்டதனாலும், மத்தியதரைக் கடற்பகுதிகளில் சுய ஆட்சியிலிருந்த நகரங்கள் முதலில் அரசர்களின் கீழும் பின்பு பேரரசர்களின் மத்திய ஆட்சியின் கீழும் கொண்டுவரப்பட்டதனாலும், நகர

[1] Nicomachean Ethics (Loeb), X, vii.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை பற்றிய பாரம்பரிய கிரேக்க கருத்துக்களுக்கும் பெரிய சமுதாயத்தின் புதிய தாபனங்களுக்குமிடையே அதிகாரத்திலிருந்தவர்கள் பெரிய இடைவெளியை உண்டுபண்ணினர். இந்த இடைவெளியைக் குறைக்கும் முயற்சியில் இரு பகுதியினரும் வெற்றி பெறவில்லை. கொள்கைத் துறையில் வளர்க்கப்பட்ட கருத்துக்கள் அன்றைய நிகழ்ச்சிகளுடன் தொடர்பற்றனவும் சரிநுட்பமற்றனவுமான இலட்சியக் கருத்துக்களாகவே இருந்தன. மத்திய அதிகாரத்தோடு தொடர்புடைய புதிய தாபனங்களை நிறுவுதல், வாக்குரிமையை அநேக பிரசைகட்கு வழங்கல், யாவரும் பின்பற்ற வேண்டிய சட்டங்களை இயற்றுதல், பிற்காலத்தில் உரோமாபுரி இராச்சியத்தின் வல்லாட்சியை விரிவாக்குதல் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், அந்நடவடிக்கைகளின் பயனை விளக்கக்கூடிய ஓரேயோர் அரசியற் கொள்கைக்கு ஏற்ப அவை அமைந்திருக்கவில்லை. அந்த அரசியற் கொள்கையின் இடத்தைப் பிடிக்கக் கூடிய புதிய கொள்கை யொன்றும் பல நூற்றுண்டுக் காலம் தயாரிக்கப்படவில்லை.

நகர அரசுகளில் அமுல் செய்யப்பட்ட குடியியல் சட்டத்தைப் போன்று பேரரசு முழுவதும் அமுல் செய்யக் கூடிய சட்டங்களை உரோமாபுரி சட்டவல்லுநர்கள் உருவாக்கியதன் விளைவாக, சட்டவியலிற் புதிய கருத்துக்கள் தோன்றி வளர்ச்சி பெற்றுலும், சரியான அரசியற் கொள்கைக்கு அவை புதிதாக எதையும் தந்துவிடவில்லை. யாவரும் சமத்துவமானவர்கள், இயற்கையோடிணைந்த சட்டங்களிருத்தல் போன்ற புதிய கருத்துக்கள் மிகவும் முக்கியமானவையாகவும் குறிப்பிடத்தக்கவையாகவும் இருந்த போதிலும், புராதன கிரேக்க கருத்துக்களிலிருந்து அவை மாறுபட்டவை என வாதிக்க முடியாது. ஆனுல், சிலர் அவ்வாறு வாதிக்கின்றனர். இக்கருதுகோள்கள் கிரேக்க நகர வாழ்க்கையில் இடம்பிடித்துக்கொண்ட பெரிய அளவிலான நிர்வாக நடவடிக்கைகளோடு சம்பந்தப்படாத வெறும் இலட்சியங்களாகவே இருந்தன. நீதியையும் அறத்தையும் தேடிப் பெறுவதே இந்தக் காலத்திலும் நிலையானதாகக் கொள்ளப்பட்டது. ஆனுல் நீதியையும் அறத்தையும் தேடிப் பெறும் இந்த முயற்சி, பரிச்சயமற்ற புதிய சூழ்நிலைகளில் மேற்கொள்ளப்படவேண்டியிருந்தது. பேரரசுகள் ஆட்சி செய்த காலத்திலுள்ள கிரேக்க, உரோமைச் சிந்தனையாளர்கள் சமூக வாழ்க்கை எவ்வாறு அமைய வேண்டும் என்பது பற்றிக் கூறிய முடிவுகள், அன்றைய பெரிய சமுதாயத்திற் காணப்பட்ட தாபன வடிவமைப்புக்களைப் பிரதிபலித்துக் காட்டுவனவாக அமைந்தன.

கிரேக்க நகரில் இறுக்கமாகப் பிணைக்கப்பட்டிருந்த அரசியல் வாழ்க்கை இரு பிரதான வழிகளிற் பாதிக்கப்பட்டது. தமது சட்டங்களைத் தாமே இயற்றி அவைகளை அமுல் செய்யும் விரிவான அதிகாரங்களையும், மற்ற நகரங்களுடன் எந்தவிதத் தொடர்புகளைக் கொண்டிருப்பது என்பதை நிர்ணயிக்கும் அதிகாரங்களையும் இழந்ததோடு, சுய ஆட்சியை நடத்தும் தனி அங்கமாக இயங்கும் தகைமையையும் நகர்கள் இழந்துவிட்டன. மசிடோனிய ஏகாதிபத்தியம் மறைந்து உரோம ஏகாதிபத்தியம் தலைதூக்கியதன் விளைவாக மத்திய அரசாங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தை நடத்தும் அதிகாரம் கிரேக்கர்களிடமிருந்து பறிக்கப்பட்டதன் பின்பு, இந்த விளைவு தெளிவாகத் தெரிய ஆரம்பித்தது. அதே நேரத்தில், கிரேக்கர்களின் சிந்தனைகளும், கலாசாரமும், மொழியும் பழக்க வழக்கங்களும், மத்திய கிழக்கு மதங்களின் தாக்குதல்கள் ஆரம்பமாகும் வரையிலாகுதல் கிழக்கையும் மேற்கையும் நோக்கிப் பரவ ஆரம்பித்தன. இதன் விளைவாக, ஏதென்சின் பொற்காலத்திலே கிரேக்க கலாசாரம் பெற்றிருந்த பெருவாழ்விலும் பார்க்கச் சிறந்த செல்வாக்கைக் கிரேக்க நாகரிகம் அனுபவித்தது.

விரிந்தும், பரந்தும், தமது சொந்த மண்ணிலிருந்து பெயர்க்கப்பட்டதுமான இந்தப் புதிய உலகத்தில் வசித்தவர்கள், முன்பிலும் குறைந்த அளவிற் குறுகிய மனப்பான்மையுடனும் அதே வேளையில் முன்பிலும் பார்க்கத் தனித்துவம் மிக்கதான நோக்குடனும் வாழ்க்கையைப் பார்க்கும் முறையை விருத்திசெய்தனர். அவர்களின் தந்தையர் வாழ்ந்து வந்த நகரங்களிலிருந்து வேறுபட்டதும் விரிவானதுமான சமுதாயத்தின் அங்கத்தவர்களாக, அவர்கள் (இன்னும் பிரசைகளாகாவிடினும்). இருந்தனர். மத்திய தரைக்கடற் பகுதி உலகம் முன்பிலும் பார்க்க வேகமாக அசைந்து கொண்டிருந்ததனாலும், இனங்கள், மொழிகள். நாகரிகங்கள் ஆகியவைகட்கிடையே ஒரே குழப்ப நிலை நிலவியதனாலும், உண்ணாட்டில் இருந்து முன்னேறும் சந்தர்ப்பங்கள் குறைந்து கொண்டு வந்ததனாலும், தமது சொந்த வாழ்க்கையை நடத்துவதிலும் சொந்த வசதிகளையும் வளங்களையும் பெருக்கிக் கொள்வதிலும் தனிமனிதர் ஒவ்வொருவரும் கவனம் செலுத்த ஆரம்பித்தனர். பிற்காலத்தில் உருவாக்கப்பட்டவைகளைப் போன்று, தனி மனிதனைச் சமூகத்திலிருந்து பிரித்துணர்வதற்கும், சொந்த வாழ்க்கைக்குரிய பகுதிகளைப் பொது வாழ்க்கைக்குரிய பகுதிகளிலிருந்து பகுத்தறிவதற்குமுரிய கொள்கைகள் இதுவரை உருவாக்கப்படவில்லை. அலெக்சாந்தரும் அரிஸ்தோத்திலும் இறந்ததன் பின்பு வாழ்ந்த தலைமுறைகளின் அனுபவங்கள், அத்தகைய கொள்கையொன்று உருவாக்கப்படவேண்டிய தேவையை உணர்த்தின.

அலெக்சாந்தரின் காலத்திற்குப் பின்னால் ஒன்றோடொன்று போரிட்டுக் கொண்டிருந்த அரசுகளை இறுதியில் ஒன்றாக இணைத்த உரோமைப் பேரரசின் அமைப்பு, அரிஸ்தோத்திலின் கொள்கையில் இடம்பிடிக்கத்தக்க வகையைச் சேர்ந்த சேதன சமுதாய வளர்ச்சியன்று. அது சுதந்திரமற்ற, ஆனால் தமக்குள்ளே போரிடாத, வெவ்வேறு நகர்க் கூட்டத்தின்மீது சுமத்தப்பட்ட திறன் வாய்ந்த நிர்வாக முறையைக் கொண்டதாகவிருந்தது. திறமை வாய்ந்த சிவில் சேவை, நன்றாகப் பயிற்சி பெற்ற நிரந்தர இராணுவம், பொதுமக்களின் பரந்த ஆதரவு (இது பிரதிநிதிகள் மூலம் கொடுக்கப்படுவதன்று) ஆகியவைகளில் உரோமைப் பேரரசின் வெற்றி தங்கியிருந்தது. இப் பேரரசின்கீழ் விதிக்கப்படும் கட்டுப்பாடுகள், வரிகள் ஆகியவற்றிலும் பார்க்கக் கிடைக்கப்பெற்ற நன்மைகள் அதிகமானவையாக இருந்த காரணத்தினாலே பொதுமக்களின் ஆதரவு இதற்குப் பெரிதளவிற் கிடைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரரசுச் சகாப்தத்தின் சமூக வாழ்க்கையிற் கிடைத்த புதிய அனுபவங்கள் கொள்கைத் துறையை உடனடியாகப் பாதிக்கவில்லை. பாரம்பரியக் கொள்கைகளினதும் கருத்துக்களினதும் அடிப்படையிலே புதிய சமூகத் தோற்றப்பாடுகளையும் அனுபவங்களையும் விளக்குவதிலுள்ள கடினத்திற்குச் சிறந்த உதாரணமாக கிரேக்க சகாப்தமும் ஆரம்ப பேரரசுக் காலமும் திகழ்கின்றன. இந்த முக்கிய மாற்றங்களின் விளைவாகக் கிரேக்க அரசியற் கொள்கையைப் புரட்சிகரமான முறையில் மாற்றியமைக்க எவரும் துணியவில்லை. அதற்குப் பதிலாக அக்கொள்கைகளைத் திருத்தியும் மாற்றியும் பிரயோகிக்க முயன்றனர். கொண்டோசே அல்லது ஹேகல் அல்லது மாக்ஸ் என்பாரும் அவர்களைப் பின்பற்றுவோரும் கொடுத்துதவியதைப் போன்ற முற்போக்குத் தன்மையுடைய அல்லது மாறும் இயல்பு சார்ந்த சரித்திர மாதிரியமைப்பு முன்பு இருக்கவில்லை. கொள்கையைப் பொறுத்தவரையில், சமுதாயம் நிலையானதாக இருந்தது. சமுதாய அமைப்பு மாற்றத்திற்கு உட்படாதது எனக் கருதப்பட்டது. ஆனால் உண்மையிற் சமுதாயம் பெருங்கேடு விளைக்கக் கூடியவையும் புரட்சிகரமானவையுமான மாற்றங்களுக்கு உள்ளாகின்றது.

இப்புரட்சிகரமான மாற்றங்களுக்கு உதாரணமாக, பரந்த நோக்குடைய உலகத்தின் புதிய அனுபவங்களின் விளைவாக, கிரேக்கருக்கும் நாகரிகமற்றவர்களுக்குமிடையேயுள்ள சிறப்பு வேறுபாடுகள், மதியுள்ளவர்கட்கும் மதியற்றவர்கட்குமிடையேயுள்ள வேறுபாடுகளைக் குறிக்கும் வகையில் உருமாற்றம் பெற்றன. விண்ணுலகம் கிரேக்கர்களுக்கே சலுகைகளைக் கொடுத்தது என்ற முந்திய கருத்தும் நுண்மதியுள்ளவர்களே வானுலகால் வேண்டப்படுவார்கள் என்ற புதிய கருத்தாகப் பரிமளித்தது. நன்னெறி வாழ்க்கை முறை இன்னும் நடைமுறையில் இருக்கத்தான் செய்தது. நுண்மதி படைத்தவர்களாலேயே அந்நன்னெறி வாழ்க்கையை உணர்ந்துகொண்டு மற்றவர்களுக்கும் அறிவுறுத்த முடிந்தது. ஆனால் இந்த நன்னெறி வாழ்க்கையை அறிந்து கொள்ளும் சந்தர்ப்பம் தக்க திறமையைப் பெற்றுள்ள யாவருக்கும் கிடைக்கும். முன்பு போல் இச்சந்தர்ப்பம் ஒரு குறிப்பிட்ட அரசியல் வகுப்பினருக்கு மட்டும் கொடுக்கப்படவில்லை. அரசியல் வகுப்பினரின் இடத்தைத் தார்மீகப் பண்பையுடைய தனி மனிதர் பிடித்துக்கொண்டனர். தார்மீகப் பண்பையுடைய இந்தத் தனிமனிதர்கட்கிடையே நிலவிய ஒற்றுமையுணர்ச்சி யாவரையும் உட்படுத்துவதாகவும் புரியாததாகவும் அறிந்து கொள்ள முடியாததாகவும் இருந்தது. பிரசாவுரிமை என்ற கருத்து, சட்டப்படி செல்லக்கூடியதாகவும் மிகவும் பயன் நல்குவதாகவும் இருந்தது. யாவரும் விரும்பும் இந்த உரிமைகள் கி. பி. மூன்றும் நூற்றண்டின் முற்பகுதியிற் பலருக்குக் கொடுக்கப்பட்டிருந்தபோதிலும், உரோமாபுரியைச் சேர்ந்த பெருந்தொகையான தொழிலாளர் வர்க்கத்தினருக்கு மறுக்கப்பட்டன. உரிமைகளற்ற இந்தப் பெருந்தொகையான மக்கள் அடிமைத்தளையால் பிணிக்கப்பட்டும் போசாக்குக் குறைவால் சீரழிந்தும் வருவதை மறந்து, அவர்களின் ஆன்மாக்களை ஈடேற்றுவதற்கான சந்தேகத்திற்குரிய வழிகளையே தத்துவஞானிகள் வழங்குவதற்கு இயலுமானவராய் இருந்தனர். அரசியலமைப்பிற்கு நிர்வாகத்துறையில் அல்லது நீதித்துறையில் சேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தல் என்ற தார்மீக வாழ்க்கை, பேரரசு உருவாக்கப்படும் வரையிலாவது, உரிமைகளை அனுபவித்த வகுப்புக்களின் இலட்சியமாக இருந்தது என்பது சிசரோவின் வாழ்க்கையிலிருந்தும் எழுத்துக்களிலிருந்தும் தெரிந்து கொள்ள முடிகின்றது. நிர்வாகத் துறையிலும் நீதித்துறையிலும் சேவை செய்யும் சந்தர்ப்பம் கிடையாதவர்கள், தனியான சமூகத் தொடர்புகளை ஏற்படுத்துவதிற் செய்யும் சேவைகள் மற்றவைகளிலிருந்து சிறிதும் குறைந்தவையல்ல எனக் கருதத் தொடங்கினர்.

பழைய கருத்துக்களும் பெறுமதிகளும் பழக்க வழக்கங்களும் தொடர்ந்திருந்த அதே காலத்தில், நகரத்திற்குப் புறம்பானதும் நகரத்திலும் பார்க்க விரிவானதுமான உலகின்மீது புதிய பற்று ஏற்பட்டதோடு புதிய பழக்க வழக்கங்களும் தோன்றி வளர ஆரம்பித்தன. பரந்து விரிந்த புதிய சமுதாயத்தின் புதிய சமூக அமைப்புக்களிலும், பொது மக்களிடையே செல்வாக்குப் பெற்றிருந்த புதிய மதங்களின் வளர்ச்சியிலும், அலக்சாந்திரியா, அந்தியோக், இறுதியாக உரோமாபுரி ஆகிய பல மொழி பேசும் மக்கள் வதிந்த நகரங்களின் வளர்ச்சியிலும் சமுதாய, அரசியல் தொடர்புகள் புதிய கோலத்தைப் பெற்றிருப்பதைக் காண முடிந்தது ; இந்தப் பெரிய சமூகப் பரிசோதனைகளுக்கு விளக்கம் கொடுக்கவும் பயனுரைக்கவும் உதவும் முக்கியமான புதிய கொள்கைகளுக்குரிய குறிப்புக்களையும் கண்டு கொள்ள முடிந்தது. இந்தச் சமுதாய, அரசியல் துறையில் உண்டான புதிய அமைப்பின் கோலத்தை புதிய கொள்கைகளை உருவாக்கியவர்களால் நன்றாகப் புரிந்து கொள்ள முடிந்தது.

கி. பி. மூன்றும் நூற்றாண்டு வரையிலாவது (அதாவது அரிஸ்தோத்தில் மறைந்து ஆறு நூற்றாண்டுக் காலம்வரையில்) மத்தியதரைக் கடற்கரைப் பிரதேசத்தில் ஆட்சிசெய்த பல்வேறு அரசாங்கங்களும் உலகியல் திருவாக விடயங்களிலேயே அதிக அக்கறை செலுத்தின. இந்த உலகியல் திருவாகங்கள் கிரேக்கத்தினதும் உரோமாபுரியினதும் மெய்யறிவுக்கமைய, தார்மீக இலட்சியத்தையும் சட்டத்தின் முன்பு சமத்துவமென்ற இலட்சியத்தையும் கொண்டிருந்தன. சர் ஏனஸ்ட் பாக்கரின் சொற்களில், "கிரேக்கரின் கற்பனைக்கு அமைந்தது உரோமாபுரியின் அபிவிருத்தி. உரோமாபுரிப் பேரரசினது கற்பனையின் தொடக்கம் அதுதான்"[1]. இதே கருத்தை மெயின் வேறுவார்த்தைகளிற் கூறினார் : "இயற்கைச் சட்டம் என்ற கிரேக்கக் கொள்கை, எல்லா நாடுகட்கும் பொதுவான சட்டத்தைக் கொடுத்த நடைமுறைக்கொத்த உரோமை நிர்வாகத்தோடு பொருந்தி வரமுடிந்தது".[2] கொள்கையும் நடைமுறையும் ஒன்றிற்கொன்று நெருக்கமாக வரமுடிந்தமைபோல் இதுவும் அமைந்திருந்தது. ஆனால் இங்கேயும் உண்மை நிலைக்கும் கொள்கைக்குமிடையே நிலவிய வேறுபாடுகள், அவைகட்கிடையே இருந்தனவெனக் கொள்ளப்பட்ட இணக்கம், முழு ஒற்றுமை ஆகியவைகளிலும் பார்க்கத் தெளிவாகத் தென்பட்டன.

[1] **Barker: 'The Conception of Empire', in the Legacy of Rome (Oxford, Clarendon Press, 1923)**, பக். **60.**

[2] **Sir Henry Maine : Ancient Law** (10 ஆம் பதிப்பு, இலண்டன் 1884), பக் **55.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் நடவடிக்கைகளில் நேரடிப்பங்கு கொள்வதிலிருந்து பெருமளவில் விடுவிக்கப்பட்டவர்களான கிரேக்க சகாப்தத்தைச் சேர்ந்த சமூக சிந்தனையாளர்கள், தாம் வாழ்ந்த காலத்தில் நிலையற்ற வாழ்க்கையை நடத்தியவர்களைச் சாதாரணமாக எதிர்நோக்கிய சொந்த நடத்தை பற்றிய பிரச்சினைகளை ஆராய்வதில் அதிக கவனம் செலுத்தினர். புதிய சூழ்நிலைகளிலும் நல்வாழ்க்கையை அடைவதற்கான முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்றன. முன்பு நகரின் அரசியல் வாழ்க்கையின் நெறியையும் கோலத்தையும் விவரிப்பதற்குப் பயன்பட்ட மெய்யறிவு, தன்னிறைவு போன்ற கருத்துக்கள், தனிமனிதனின் தார்மீக குண நலன்களைத் தொடர்ந்து நிர்ணயித்தன. உண்மையில், பழைய நகர அரசுகள் தூய்மையாக்கப்பட்டு, சிறப்புடையனவாகவும் பெரியனவாகவும் உருவாக்கப்பட்டதன் விளைவே நற்குணவாழ்க்கையை நடத்தும் மக்களைக் கொண்ட உலக நகரமானது.

நல்வாழ்க்கையை நாடும் முயற்சி எல்லா முக்கியமான சிந்தனைக் கோட்பாட்டுக் கிளைகட்கும் பொதுவாக இருந்தது. இன்ப துன்ப நடுநிலைக் கோட்பாளர், இன்ப விருப்பினர், எடுத்ததற்கெல்லாம் குறை கூறுபவர்கள் ஆகிய கோட்பாட்டுக் கிளைகளைச் சேர்ந்தோரும், லத்தின் தேசத்து இன்பதுன்பக் கோட்பாட்டிற்குப் பிற்காலத்தில் திருத்தங்களைச் செய்தவர்களுட் பிரபலமானவர்களுமான செனேக்காவும் மாக்கஸ் ஒளரேலியஸ் பேரரசரும் நல்வாழ்க்கையைத் தேடி அடையும் முயற்சியிலேயே அதிக கவனம் செலுத்தினர். ஒரு மனிதன் சமூக நடவடிக்கைகளில் மற்ற மனிதர்களுடன் ஒத்துழைப்பதே தார்மீக வாழ்க்கையின் அடிப்படையாகும் என்ற பிளேட்டோவின் கருத்தும், தன்னிறைவு பெற்ற சுதந்திரம் என்ற அரிஸ்தோத்திலின் இலட்சியமும் அந்தக் காலத்தில் முக்கியத்துவம் பெற்றும் பிரபல்யமடைந்தும் இருந்தமையால இந்த ஒத்துழைப்பின் அல்லது கூட்டுறவின் மையமாகத் தன்னிறைவு பெற்ற நகரம் விளங்கவில்லை; சுதந்திரம் என்பது சமுதாயத்திற்கு இருக்க வேண்டிய இயல்பு என்பதிலும் பார்க்கத் தனி மனிதனுக்கு இருக்க வேண்டிய இயல்பாக மாற்றம் பெற்றது. எனவே, இந்தப் போதனைகளின் விளைவும் தோற்றமும் எதிர்மறையானவையாகவும் உலகியலுக்கு ஒவ்வாதவையாகவும் இருந்தன. எடுததற்கெல்லாம் குறைகூறும் கோட்பாட்டைப் பின்பற்றியவர்களைப் பொறுத்தவரையில் (இவர்களில் டயோஜெனசின் பெயர்தான் நிலைத்திருக்கிறது) இப்போதனைகள் குழப்பம் விளைவிப்பவையாகவும் சமூக விரோதத்தன்மையைக் கொண்டவையாகவும் தோற்றமளித்தன. புராதனக் கதைகளில் வரும் அழகுக் கலையை இரசிப்பதில் தம்மையே மறந்திருக்கும் கலைஞர்களை ஒத்திருந்த இன்பவிருப்பினர், பொது விடயங்களில் எந்த விதப் பொறுப்பையும் ஏற்காது விடுத்து, கவலையையும் கவனத்தையும் துறந்து, இன்பத்தை அடைய முயலுவதிலேயே அக்கறை காட்டினர். இதன் விளைவாகச் சமூகச் சிந்தனை, நடவடிக்கை ஆகியவைகளில் அக்கறை காட்ட அவர்கட்கு நேரம் கிடைக்கவில்லை. எல்லாக் கோட்பாட்டுக் கிளைகளிலும் செல்வாக்கு மிக்கதாக விளங்கியதும் நிலைத்திருந்ததுமான இன்பதுன்ப நடுநிலைக் கோட்பாட்டுக் கிளையைப் பொறுத்தவரையிலும், மாந்தர் ஒவ்வொருவரும் ஊழையும் நற்காலத்

தையும் உள்ளச் சமநிலையுடன் குறைகூறாமல் ஏற்றுக்கொண்டு, உற்சாக மிகுதியால் அல்லற்படாமல், திடசங்கற்பத்துடன் தமது கடமைகளைச் செய்தல் வேண்டுமென்பதே முக்கிய போதனையாக இருந்தது. பொறுத்துக் கொள்ள முடியாத அளவிற்கு நிலைமை மோசமானால், தற்கொலை செய்வதன் மூலம் தம்மை அந்தச் சூழ்நிலையிலிருந்து விடுவித்துக் கொள்ளவேண்டுமென்றும் மக்கள் கேட்கப்பட்டனர். கண்டிப்பாக நடந்து கொள்வதன் மூலம் மாக்கஸ் ஒளரேலியஸ் முதலாவது இலட்சியத்திற்கு எடுத்துக் காட்டாகத் திகழ்ந்தார். நீரோ மன்னருக்குக்கீழ் பணியாற்ற வேண்டிய நிர்ப்பந்தத்திற்காளான செனேக்கா இரண்டாவது வழியைப் பின்பற்ற வேண்டிய பரிதாப நிலைக்குள்ளானர். புதிய ஒழுங்கின் எல்லைகளுக்குள் இலட்சிய நகரம் என்ற ஒன்று இருக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. ஏதென்ஸ் நகரம் கூட இலட்சிய நகரத்திற்குத் திருப்திகரமான உதாரணமாக அமையவில்லை. மூதறிவுடையோரின் மறைபொருள் சார்ந்த சமுதாயம், மனிதரினதும் கடவுளரினதும் சர்வதேச நகரம் அல்லது கனவுலகில் தோன்றும் கடவுளரின் சர்வதேச நகரம் அல்லது கனவுலகில் தோன்றும் மோட்சம் போன்றதொன்றே இலட்சிய நகரத்திற்கு உதாரணமாகக் கொள்ளப்பட்டது. சமூக வாழ்க்கையிற் காணப்படும் சமமின்மையும் அநீதிகளும் இக்கனவுலகுகளிலே தீர்த்து வைக்கப்படுமென்று கருதப்பட்டது. உரோமாபுரி தனது முழு அதிகாரத்தைக் கொண்டும் புகழைக்கொண்டும் அடைய முடியாதனவற்றையெல்லாம் கனவுலகில் அடைந்து விடமுடியும் என அவர்கள் கருதினர்.

சமூகத்தினதும் தனி மனிதர்களினதும் பிரச்சினைகளை விளக்குவதிற் பிற்காலக் கிரேக்கத் தத்துவஞானிகள் பெரும் பங்கை வகித்தனர். இயற்கை என்ற கருதுகோளை உருவாக்கிக் கொடுத்த புகழ் அவர்களையே சார்ந்தது. சமூகவியற் கருத்துக்களில் மிகவும் பயன் நல்கியனவும், அதே வேளையில் எவராலும் சரியாக அறிந்து கொள்ள முடியாதனவும் குழப்பம் விளைவிப்பனவுமான இயற்கை, இயற்கையானது என்ற கருத்துக்கள் அவைகள் உருவாக்கப்பட்ட கிரேக்க காலந்தொடக்கம் இன்றுவரையும் பலராலும் பின்பற்றப்பட்டும் போற்றப்பட்டும் வந்திருக்கின்றன. இயற்கை, இயற்கையானது என்ற பதங்களே இவ்வளவு நீண்ட காலமும் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றனவல்லாமல், அச் சொற்களுக்குக் கொடுக்கப்பட்ட அர்த்தங்களும் விளக்கங்களும் காலத்திற்குக் காலம் வேறுபட்டும் மாறுபட்டும் வந்திருக்கின்றன. இந்தக் கண்ணோட்டத்துடன் பார்க்கும் போது, நீண்டகாலம் பின்பற்றப்பட்ட வேறு அரசியல் கருதுகோள்களைப் போலல்லாமல் இக்கருதுகோளின் பெறுமதியும் முக்கியத்துவமும் பாதிப்பட்டு இருந்ததுடன் உறுதி குறைந்ததாகவும் காணப்படுகின்றது[1].

மனித நடவடிக்கைகளிலே இயற்கைக்கும் வழக்காறுக்கும் உள்ள வேறுபாடு கிரேக்க சிந்தனையைப் பொறுத்த மட்டில் மாபு முறையானதாக இருக்கின்றது. அரசியல் வாழ்க்கை மனிதனுக்கு இயற்கையானது. சமூகத்தில் நியாயம் நிலவு

1 இயற்கையான சட்டக் கொள்கையின் நீண்ட சரித்திரத்துடன் சம்பந்தப்பட்ட இடர்ப்பாடுகளைப் பற்றி அறிய விரும்புவோர் பின்வரும் கட்டுரையை வாசிப்பது நல்லது ; **Professor A. P. d'Entreves: Natural Law.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதற்கு உகந்த தார்மீகப் பயிற்சியாகவும் நல்வாழ்க்கைக்குரிய அரங்காகவும் அரசியல் வாழ்க்கை விளங்குகின்றது என்பதை நிரூபிக்கப் பிளேட்டோவும் அரிஸ்தோத்திலும் முயற்சி செய்தனர். உயிரினியல் கல்வியோடு தொடர்புபடுத்திப் பார்க்கும் போக்கைக் கொண்ட அரிஸ்தோத்தில், வெவ்வேறு சேதன வுறுப்பு வகைகட்கு உதாரணமாக அரசியல் அமைப்புக்கள் இருப்பதாகக் கருதினர். அவர், இயற்கையானது என்ற பதத்தை இரு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தியிருப்பதைக் கவனத்திற்கெடுத்தல் வேண்டும். சூழ்நிலைகட்கு ஏற்ற நடத்தைகளை அது விவரித்தது. அரசியல் நீதியின் அடிப்படையில் இந்த நடத்தைகள் ஓரளவு மாற்றப்படலாம். நல்ல அபிவிருத்தியின் வடிவத்தைப் பெரிதளவில் ஒத்திருந்த அரசியலமைப்புச் சட்டத்தையும் அப்பதம் குறித்தது. இயற்கையானதாக இருப்பது என்பது இசைவிணக்கமானதாகவும் ஒழுங்கானதாகவும் இருப்பதாகும். அத்துடன், அது அனுபவ முறையிற் சூழ்நிலைக்கேற்ப ஒழுங்கு படுத்தப்படுவதோடு இலட்சிய முறையிற் பூரண வளர்ச்சியடைவதுமாகும். அரசியலமைப்புச் சட்டங்கள் எல்லாவிடங்களிலும் ஒரே மாதிரியானவையல்ல. ஆனால் "எல்லா இடங்களிலும் ஒரேயோர் அரசாங்க அமைப்பே இயற்கையானதாக இருக்க முடியும்; அதாவது சிறந்த அமைப்பே இயற்கையானதாக இருக்கும்."[1] இயற்கை என்ற கருது கோள் தனது இலட்சியத்தைச் சிறந்த முறையில் அடைய மட்டுமே உதவுகின்றது என்பது மட்டுமல்லாமல், எந்த ஓர் இனவகைக்கும் நிபந்தனையெதுவுமற்ற மிகச் சிறந்த உய்வு வழியையும் காட்டுகின்றது எனக் கருதப்பட்டது. இயற்கை என்ற பதத்தை அரிஸ்தோத்தில் இந்த அர்த்தத்திற் பயன்படுத்தவில்லை. இயற்கை என்பதன் கருத்து அச்சொல்லிற்கு அரிஸ்தோத்தில் கையாண்ட அர்த்தத்தின் விரிவாக்கமாகவே (மறுப்பாகவல்ல) இருக்கக்கூடியதாக நாம் கவனமெடுத்துப் பார்த்துக்கொள்ள வேண்டும். சிறந்த அமைப்பு மட்டுமே இயற்கையாக இருந்திருக்கும் என்று அரிஸ்தோத்தில் கருதியிருந்தால், குடியியலுக்குரிய அல்லது மற்ற அமைப்புக்களுக்குரிய குறைபாடுடைய உதாரணங்களையும், இசைவிணக்கம் இருக்கக் கூடியவகையில் அமைக்கப்பட்டிருந்த போதிலும் பூரண நிறைவு பெறத் தவறிய காரணத்தால் மரபு வழியமைந்த நகரங்களையும் இயற்கைக்கு முரணானவை எனக் குறிப்பிட்டிருக்க மாட்டார்.

ஆனால் அரித்தோத்திலின் வழித்தோன்றல்களான இன்ப துன்ப நடுநிலைக் கோட்பாட்டாளர், தொடர்புகளினதும் அபிவிருத்தியினதும் இலட்சிய மாதிரி என்ற அர்த்தத்திலேயே இயற்கை என்ற பதத்தைப் பிரயோகித்தனர். அனுபவத்தில் நடைபெறும் சம்பவங்களைக் கணிக்க உதவும் உரைகல்லாக இக்கருதுகோள் விளங்கியதே அதற்குக் காரணம். பௌதிக, உயிரினவியல் மாற்றங்களின் தற்காலிகத் தொகுப்பாக இயற்கை திகழ்கின்றது என்ற கருத்திற்கும் அகிலத்திற்குமுரிய தார்மீக அளவுகோலாக இயற்கை விளங்குகின்றது என்ற நம்பிக்கைக்குமிடையே ஏற்பட்ட குழப்பம் இன்றுவரையில் எம்மிடையே நிலவுகின்றது.

[1]. Nicomachean Ethics (Loeb), V. vii, 5. M. B. Foster's Comment in Masters of Political Thought (London 1942), Vol. I, pp. 193-94.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பினிசிய பரம்பரையைச் சேர்ந்தவராகக் கருதப்படுகின்றவரும் சைப்பிரசைச் சேர்ந்தவரும் இன்ப துன்ப நடுநிலைக் கோட்பாட்டுக் குழுவை ஆரம்பித்தவருமான செனோ, அகிலமனைத்தையும் உட்படுத்தும் சமூக ஒழுங்கை மட்டுமே இயற்கையானதாகக் கொள்ள முடியும் என வாதிக்கின்றார். அரசியல் அமைப்புக்களின் குறுகிய எல்லைக்குள் கட்டப்படுத்தப்பட்டிருப்பவை மரபு வழக்கத்தின் பாற்பட்டவை எனக் கருதப்படல் வேண்டும் எனவும் அவர் வாதிக்கின்றார். தார்மீக வாழ்க்கையிலிருந்து சமூக, அரசியல் தொடர்புகளைப் பிரித்துக் கொள்வது என்பது இதன் அர்த்தமல்ல. தார்மீக வாழ்க்கையை வாழ்ந்து வெற்றி பெறுவதற்கு மிகவும் பரந்து விரிந்த சமுதாயம் தேவைப்படுகின்றது என்பதே இதன் அர்த்தமாகும். இக்கருத்து கிரேக்க நகர வாழ்க்கையின் அளவை எதிர்மறையாகக் கண்டித்ததுடன், கிரேக்க நகர வாழ்க்கையின் மையக் கோட்பாடான அரசியல் இலட்சியங்களும் தார்மீக இலட்சியங்களும் ஒன்றாக இருக்க வேண்டுமென்பது மாற்றமடைந்துள்ள சூழ்நிலைகளுக்கு ஏற்றதா என்பது கேள்விக்குரிய விடயமே என்பதையும் சுட்டிக்காட்டியது. நகரங்களின் அளவு விரிவாக்கப்பட வேண்டும் என்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டதன் பின்பு, மனிதனின் தார்மீக விருப்புக்களைப் பூமியிலுள்ள எந்தச் சமுதாயமும் திருப்தி செய்ய முடியாது என்ற உண்மையுணர்வு ஏற்படலாயிற்று.

இந்த நூற்றாண்டுகளில் இயற்கை பற்றிய கருத்தின் பல்வேறு பிரயோகங்களும் பயன்படுத்தப்பட்டு வந்தமைக்கு ஒரேயொரு காரணம் தேவைக்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவமே. உடலின் தேவைக்கும் தார்மீகத் தேவைக்குமிடையேயுள்ள வேறுபாடுகளைப் பிரித்துணர இன்று நாம் பழகிக் கொண்டுள்ளோம். இதைவிட, மனிதன் பௌதிக ஒழுங்கின் தற்செயலான முறைகளுக்கும்,—விளங்கிக் கொண்டாலும் கொள்ளாவிட்டாலும்—பழக்க வழக்கங்கள் சமூகத்திடையே பெற்றுக்கொண்டுள்ள செல்வாக்கிற்கும் அடிபணிந்து நடக்கும்படி நிர்ப்பந்திக்கப்படுகிறான். ஆனால், தார்மீக கடமைகள் பற்றிய உள்ளுணர்வு ஒரு வகைப் பகுத்தறிவுடன் கூடிய அறிவுணர்வுடன் சம்பந்தப்பட்டதாகும். சம்பவங்களின் போக்கிற்கு அடிபணிந்து செல்வதற்கு மிகவும் முக்கியத்துவமளித்ததும் மூதறிவுடைய ஒவ்வொருவனும் தனது தலைவிதியைக் கீழ்ப்படிவுடன் ஏற்றுக் கொண்டதுமாகிய துன்ப நடுநிலைக்கோட்பாடு போன்ற பெறுமதிகளின் அமைப்பு முறையிலே, ஒருவன் அனுபவிக்கும் அநீதி, இழப்பு, அவன் உடலுக்கு ஏற்படும் ஆபத்து ஆகியவைகட்கிடையேயுள்ள வித்தியாசங்கள் மிக முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் கருதப்படவில்லை. இன்பதுன்ப நடுநிலைக் கோட்பாட்டைப் பின்பற்றுபவர் கட்கு அத்தியாவசிய சம்பவங்களின் முழுத் தொகுதியாகவே இயற்கை தென்படுகின்றது. இந்த முழுமைத் தொகுதியைப் பொறுத்தமட்டில் ஒரு மனிதன் நடந்து கொள்ளும் முறையே அவனுக்குத் தார்மீக மதிப்பு நிலையை ஏற்படுத்துகின்றது. இக்கோட்பாட்டின் உரோமானிய உருத்திரிபு வகையைச் செனேக்காவிடம் நாம் காண்கின்றோம். மிகக் குறைவாக மாற்றமடைபவைகளே மிகவும் உண்மையானவை, மிகவும் சிறந்தவை, தெய்வத் தன்மைக்கு மிகவும் அணித்தாகவுள்ளவை என்ற கிரேக்க நம்பிக்கை இந்த உருத்திரிபில் எதிரொலிப்பதைக் காண முடியும். வாழ்க்கையில் மாற்றமடையாதனவும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்திருப்பனவுமான காரணிகட்கு மிகவும் முக்கியத்துவம் கொடுக்கப்படு வதையும் அவை திரும்பத் திரும்பக் குறிப்பிடப்படுவதையும் அவதானிக்க முடி யும். வாழ்க்கையின் உண்மையான ஒழுங்கு என்ற அர்த்தத்திலேயே சிசரோவும் இயற்கையைக் கண்டார். வாழ்க்கையில் உண்மையான ஒழுங்கை இரண்டு அர்த் தங்களில் அவர் பயன்படுத்தியதைக் காண முடியும். கடவுளினது ஆணை கார ணமாக வாழ்க்கையின் உண்மையான ஒழுங்கு எவ்வாறு அமைந்திருக்க வேண்டும் என்பதையும், எமக்குத் தெரிந்துள்ள மனித நடத்தையுடன் ஒப்பி டும்போது அதன் உண்மை நிலை என்ன என்பதையும் சிசரோ கவனிக்கத் தவறவில்லை.

பேரரசின் அரசியல் சட்ட அமைப்புக்கள் மெய்யியல் அறிஞர்களின் தேவைகளை நிறைவுறச் செய்தபோதிலும் அவர்களின் கொள்கைகளுக்கமைய அவைகள் செய்யப்படவில்லை. பேரரசு அமைப்பின் கீழ் நிலவிய அடக்கு முறையையும் சமத்துவமின்மையையும் இயற்கைக்கு விரோதமானவை என்று மட்டுமே அவர்களாற் குறிப்பிட முடிந்தது. மூதறிவுடையவர்களைக் கொண்டி ருந்தாலும், யாவருக்கும் குடியுரிமையை நல்கிய நகர அரசு எதுவும் உரோமை யர்களின் உலகத்தில் இருக்கவில்லை. கடவுளின் இராச்சியம் வேறு உலகிற்கு உரி யது என்றும் அது திருச்சபையின் நிர்வாக அமைப்பையுடையது என்றும் நம்பு கின்ற கிறித்துவக் கோட்பாடு பிற்காலத்தில் வெற்றிபெறும் மட்டும், கிரேக்க கொள்கையாளரால் நம்பப்பட்டதைப்போல குடியுரிமையானது சிலரின் விசேட உரிமையாகவே இருந்து வந்தது.

கி. மு. மூன்றும் நூற்றுண்டின் பிற்பகுதியில் இன்ப துன்ப நடுநிலைக் கோட் பாட்டுக்கிளை, அதென்சின் மெய்யறிவுக் கிளைகள் யாவற்றிலும் மிகச் சிறந்ததாக வும் அதிகம் செல்வாக்குடையதாகவும் வளர்ச்சி பெற்றது. அடுத்த நான்கு அல்லது ஐந்து நூற்றுண்டுக் காலத்திற்கு கிரேக்க, உரோமை உலகங்களில் வசித்த சிறந்த சிந்தனையாளர்கள் இந்தக் கோட்பாட்டையே பின்பற்றினர். வசதிக்காகவே அரசியல் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டன என இன்ப விருப் புக் கோட்பாட்டைப் பின்பற்றியவர்கள் சொல்லிக் கொண்ட அதே நேரத்தில், முற்காலத்தில் பிரபல்யமடைந்திருந்த போலிவாதத்தைப் பின்பற்றும் முறை யிலும், சில முறைகளிலே தற்காலப் பயனீட்டுக் கொள்கைக்கு முன்னேடியான நிலையிலும் விளங்கிய இன்ப துன்ப நடுநிலைக் கோட்பாட்டாளர் சர்வதேச நீதிக்கு உட்பட்டு எல்லா மனிதர்கட்குமிடையே இயற்கையான, பகுத்தறிவிற் கொத்த, உறுதியான, நேர்நிலையான பிணைப்பு ஒன்று இருப்பதாகக் கண்டனர். அகில உலக சமுதாயத்திலேயே இந்தப் பிணைப்பு அதனுடைய இலட்சிய உருவத் தைப் பெற்றிருக்க முடியும். ஆனுல் ஒவ்வொரு மனிதனும் தனது சமூகக் கடமை களைச் சிறப்புறச் செய்வதன் மூலமும் இத்தகைய பிணைப்பை ஓரளவிற்குப் பெற் றுக்கொள்ள முடியும். சமூகச் சிந்தனையில் அடிக்கடி தெரிவிக்கப்பட்டு வந்துள்ள வேறொரு கருத்திற்கேற்ப, கட்டுப்பாடற்ற நிலையையும் மூதறிவுடையோரின் அர சியற் சார்பற்ற சகோதரத்துவத்தையும், எடுத்ததற்கெல்லாம் குறைகூறும் கோட்பாட்டுக் கிளையினர் போதித்தும் போற்றியும் வந்துள்ள அதே நேரத்தில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்ப துன்ப நடுநிலைக் கோட்பாட்டாளர் பேரரசின் சட்டத்தையும் ஒழுங்கையும் வரவேற்று அவற்றின் கீழ் சேவை செய்து வந்தனர். சர்வதேச இயற்கைச் சட்டம் பற்றிய தங்களின் கருத்துக்களைச் சட்டத்திற்கும் ஒழுங்கிற்கும் மாற்று ஏற்பாடாகவோ வேறோர் உயர்ந்த மேலுரிமையை ஏற்பதற்கோ பயன்படுத்தாமல், உரோமர்களது சட்டத்தின் உறுதியான பெறுபேறுகளை மதிப்பிட உதவும் உரை கல்லாகவே பயன்படுத்தினர்.

இன்ப துன்ப நடுநிலைக் கோட்பாட்டாளர் தமது இலட்சிய நகராகக் கொண்டதும் எல்லாவற்றையும் தன்னகத்தே யடக்கியதும், அகிலத்திற்குமிசைவானதுமாய நகர் பற்றிய பல இடங்களிற் குறிக்கப்படுகின்றது. இதை அரசியற் கருதுகோள் எனக் கண்டிப்பான முறையிற் கூறமுடியாது. இது தார்மீகம், மதம் என்று கூறக்கூடிய தன்மையையே அதிகம் கொண்டிருக்கிறது. எனினும், இந்தக் கிரேக்க கனவில் பழைய அதென்சின் தோற்ற அமைப்பைக் காணமுடிகின்றது. பழைய அதென்சில் வாழ்ந்தவர்கள் யாவரும், தூய்மைப்படுத்தப்பட்ட, எல்லாவற்றையும் உட்படுத்திய சட்டத்தின் முன் சமமாகக் கருதப்பட்டனர். அதென்ஸ் நகரின் குடியுரிமை மூதறிவையுடையோருக்கே கொடுக்கப்பட்டது. அதன் மக்களிடையே நிலவிய பிணைப்பு சகோதரத்துவத்தையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. இந்தச் சகோதரத்துவப் பிணைப்பிலிருந்து ஒரு மனிதனை வெளியேற்றுவதற்கு அவன் இழைக்கும் குற்றமே காரணமாக இருத்தல் வேண்டுமென்று செனோ போதித்தார். இரண்டு நூற்றுண்டுகட்குப் பின்னர், எல்லாவற்றையும் உட்படுத்திய தனி அமைப்பிற்குள் கடவுளரும் உடனுறைந்தனர் என்ற கருத்தை போசி டோனியஸ் வெளியிட்டார். கடவுளின் ஆணையால் உருவாக்கப்பட்டதும் எல்லா மக்களுக்கும் அவர்கட்கிருக்கும் பகுத்தறிவின் விளைவாகக் கட்டாயமாகத் தெரிந்திருக்க வேண்டியதுமான உண்மைச் சட்டம் என்ற கனவை சிசரோ தமது 'டிரிபப்ளிக்கா' என்ற புத்தகத்திலுள்ள புகழ்பெற்ற பந்திகளிற் குறிப்பிட்டுள்ளார். "இயற்கையோடு இணங்கிச் செல்லும் சரியான நியாயமே உண்மைச் சட்டமாகும். அதை எல்லோருக்கும் எல்லா இடத்திற்கும் பிரயோகிக்கலாம். அது மாற்ற மடையாத தன்மையைக் கொண்டிருப்பதோடு காலத்தாலும் அழியாதது. தனது உத்தரவுகளின் மூலம் யாவரையும் தமது கடமைகளைச் செய்யும்படி பணிக்கிறது அது. அது தடைசெய்பவைகளை நாடாமல் இருப்பதன் மூலம் தவறுகளைச் செய்வதைத் தவிர்க்க முடியும். நல்ல மனிதர்களைப் பொறுத்தவரையில் இந்தக் கட்டளைகளும் தடைகளும் வீணுகிவிடுவதில்லை. ஆனல், கொடியவர்களைப் பொறுத்தவரையில் அவை எதுவித விளைவையும் ஏற்படுத்துவதில்லை என்பது உண்மையே. இச்சட்டத்தை மாற்ற முயல்வது பாபமாகும்.[1]

[1] யூதர்கள் அல்லது கிறித்துவர்கள் உபயோகிக்கும் அர்த்தத்திலே பாபம் என்ற பதத்தைச் சிசரோ பயன்படுத்தவில்லை. இலத்தீனில் nec......fos est என்று அவ்வாசகம் இருக்கிறது. "கடவுளின் ஆணைப்படி இது சரியானதல்ல" என்பதே அத்தொடரின் அர்த்தமாகும், கிரேக்க அர்த்தத்தில் இச்சட்டம் நியாயத்தின் அடிப்படையில் அறிந்து கொள்ளப்பட்டதேயல்லாமல், கடவுளின் வெளிப்பாடாக அமைந்திலது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சட்டத்தின் எந்தப் பாகத்தையாவது தள்ளுபடி செய்வதும் அனுமதிக்கத் தக்கதன்று. இச்சட்டத்தை முற்றாகவே அகற்றி விடுவது என்பதும் முடியாத காரியமாகும்.சட்டமன்றத்தினாலோ அல்லது மக்களாலோ எம்மை அதன் கட்டுப்பாடுகளிலிருந்து விடுவிக்க முடியாது. அச்சட்டத்திற்கு விளக்கம் கொடுப்பதற்கோ அல்லது அர்த்தம் கூறுவதற்கோ எமக்கு அப்பால் நாம் எவரையும் நாடிச் செல்லத் தேவையில்லை. அதென்சிலும் உரோமாபுரியிலும் இக்காலத்திலும் வருங்காலத்திலும் வெவ்வேறான சட்டங்கள் இருக்கமுடியாது. இவண், அரசுரிமை கடவுள் ஒருவருக்கு மட்டுமே உண்டு. இச்சட்டத்தை ஆக்கி அளித்து அதை அமுல் செய்யும் நீதவானாக இருக்கக்கூடியவர் அவர் ஒருவர் மட்டுமே. இச்சட்டத்திற்குக் கீழ்ப்படிய மறுப்பவர்கள் தமக்குள்ள மனித இயல்பை மறுத்துத் தங்களிடமிருந்தே தப்பியோட முயலுகின்றனர். பொதுவாகத் தண்டனை என மக்கள் கருதும் தண்டனைகளிலிருந்து தப்பினாலும் கூட இச்சட்டத்திற்குக் கீழ்ப்படிய மறுப்பவர்கள் தங்களிடமிருந்து தப்பியோட முயலும் காரணத்தினாலேயே மிகக்கடுமையான தண்டனைகளை அனுபவிக்கின்றனர்.'[1] இங்கே சிசரோ பயன்படுத்தும் பதங்களான கொன்ஸ்தன்ஸ் (Constans), செம்பிற்றேனா (Sempiterna), இம்மியூற்றபிலிஸ் (Immutabilis) ஆகியன இயற்கைச் சட்டத்தில் இன்றுவரை பயன்படுத்தப்படுகின்றன. இதைப்போலவே சட்டத்தை மீறுபவர்கட்கு அவர்களின் மனச்சாட்சியே மிகப் பெரும் தண்டனையைக் கொடுக்கும் என்ற கருத்தும் கடந்த ஈராயிரம் ஆண்டுகளாக மாற்றமடையாமல் நிலவிவருகின்றது.

எல்லா மக்களும் சமமாகக் கடைப்பிடித்தொழுக வேண்டிய பகுத்தறிவு அமைப்பையுடைய சட்டங்களிலே நேரடியாக வரையறுக்கப்பட்ட, எல்லாருக்கும் பொதுவாகவுள்ள சமத்துவம் என்ற பிரச்சினைவிடயத்திலும் இதைப் போன்ற ஒற்றுமை காணப்படுகிறது. அரிஸ்தோத்திலின் பின்பு தோன்றிய சமூகச் சிந்தனையின்[2] பிரதானமான அம்சமாகக் கருதப்படும் இந்தச் சமத்துவக் கோட்பாட்டை முற்றும் புதிய அபிவிருத்தி எனக் கொள்வதிலும் பார்க்க, அரிஸ்தோத்திலின் சொந்த வாதம் மாற்றமடைந்த சூழ்நிலைக்கேற்பத் திருத்தப்பட்ட ஒன்றாகக் கொள்வதே முறைமையானது. பிரசைகளின் இயங்கும் அமைப்புக்களில் அங்கத்தவர்கள் யாவரும் சம உரிமைகளை அனுபவித்தலே விரும்பற்பாலது என்ற அரிஸ்தோத்திலின் வாதம் இங்கு ஞாபகத்திற்குக் கொண்டுவரக் கூடியதாகும். குடியுரிமையின் நகர அரசுக் கருத்து விரிவடைந்தபோது சமத்துவம் என்ற கருத்தும் விரிவுபெற ஆரம்பித்தது. ஆனால் இந்த இரண்டு இலட்சி

[1] De Re Publica (Loeb), III, xxii, 33

[2] R. W. and A. J. Carlyle ; A History of Mediaeval Politiical Theory in the West, Vol. I. Chap,I.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யங்களும் உரோமையர் உலகில் நடைமுறைக்குக் கொண்டுவரப்படவில்லை.[1] இக் கொள்கைகள் வெறும் இலட்சியங்களாகவே இருந்தன. மூதறிவும் நன்னெறியும் எல்லாருக்கும் கிடைக்கக்கூடியன என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டு, நகர அரசில் அங்கத்துவம் வகிப்பதற்கு இப்பண்புகள் அளவு கருவிகளாகக் கொள்ளப்பட்டதன் பின்பு, நகர அரசின் சமத்துவமும் குடியுரிமையும் யாவருக்கும் கிடைக்கக் கூடியனவாக மாறின. 'வழிநடத்தக்கூடிய நல்ல வழிகாட்டியைப் பெறும் மனிதன் ஒவ்வொருவனும், அவன் எந்த இனத்தைச் சேர்ந்தவனாக இருந்தாலும், நன்னெறியை அடைந்தே தீருவான்' என்று கூறினார் சிசரோ.[2]

நடைமுறையில், போதிய அளவு வழிகாட்டிகள் இல்லாமற் போகின்றனர்; அல்லது பலர், விளக்கம் கூறமுடியாத ஏதோ ஒரு வகை வியாதியாற் பீடிக்கப் பட்டு வழிகாட்டிகளைப் பின்பற்ற முடியாத நிலையில் உள்ளனர். மெய்யியலறிஞரால் வழிநடத்தப்பட்டு, பாதுகாக்கப்படும் நகர் பற்றிய பிளேட்டோவின் கோட்பாட்டை, எல்லாவகை மக்களும் வாழும் பேரரசிற்குப் பிரயோகிக்க முயல்வது கடினமானதாகவும் திருத்தியற்றதாகவும் இருக்கின்றது. பலம் குன்றிய சகோதரர்களைத் தீயவழிக்குத் திருப்பும் கூடாத பழக்க வழக்கங்கள் பற்றியும் தவறான கருத்துக்கள் பற்றியும் தெளிவற்ற முறையில் குறிப்பிடும் சிசரோவும், மெய்யிலறிஞர்களின் வாதங்களின் விளைவாகக் கிடைத்த மிக முக்கியமான முடிவின்படி, "நாம் நீதிக்காகப் பிறந்தோம் என்ற முழு உணர்வைக் கொள்வதுடன் சரியானவை மனிதரின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டிருக்காமல், இயற்கையையே அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன[3]" என்னும் பொதுக் கருத்தைத் தெரிவிக்கும் நிலைக்குத் தள்ளப்படுகின்றார். மக்கள் சுதந்திரத்திற்காகத்தான் பிறந்திருக்கின்றனர் என்ற ரூசோவின் புகழ் பெற்ற கருத்துரையைச் சிசரோவின் நம்பிக்கை ஒத்திருந்தபோதிலும், ரூசோ தமது கவனம் முழுவதையும் செலுத்திய பிரச்சினையான கட்டுப்பாடுகளின் தன்மையை விளக்கக்கூடிய கொள்கையைச் சிசரோ உருவாக்கவில்லை.

எனவே, பொது மனிதாபிமானத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட தார்மீக எதிர்பார்ப்பாக சமத்துவம் என்ற கோட்பாடு மாற்றம் பெற்றது. சிசரோ தமது பொது வாதத்தை "மனிதன் தனது சக மனிதர்களோடு தோழமையுடனும் இணைந்தும் வாழ்கின்றான் என்ற கருத்துடன் நேரடியாகத் தொடர்பு படுத்துகின்றார்; நாம் யாவரும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை; அதைப் போலவே, எந்த ஒரு பொருளும் மற்றதைப் போல் இருப்பதில்லை."[4] நாம் எமக்

[1] W. W. Tarn எழுதிய Hellenistic Civilisation, பக் 272-73ஐப் பார்க்க. இன்பதுன்ப நடுநிலைக் கோட்பாளரின் உலகநிலையை நடைமுறையிற் பெறமுடியாது என்று கூறிய ஆசிரியர் மேலும் கூறுகிறார்; "உலகம் சாதாரண மக்களைக் கொண்டது; அவர்கள் ஆன்பவர்கள் தத்துவஞானிகளுமல்லர், எல்லாவற்றையும் உள்ளடக்கும் சட்டத்தைப்பற்றி அறிந்த கொண்டவர்களுமல்லர்".

[2] De Legibus, Loeb; I, x 30

[3] De Legibus, அதே நூல், 28

[4] Le Legibus, அதே நூல், 28, 29.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குள் வேறுபடுவதனுல் நீதியான சமூகத்தில் வாழவேண்டியது அவசியம். மக்களுக் கிடையே சமூகக் கூட்டுறவும் ஒத்துழைப்பும் தோன்றி வளர்வதற்கு, நியாயமான சமூகமே இயற்கையானதும் முறையானதும் தார்மீக முறையில் மிகச் சிறந்ததுமான நிலையமாகும்.

ஆனுல், கிரேக்க அரசியற் சிந்தனையோடு தொடர்புடைய கருத்துக்களைப் பயன்படுத்தி அரசியற் கூட்டம் ஒன்று இருப்பதற்கு நீதியான அரசியலமைப்புச் சட்டம் தேவைப்படுகின்றது என்ற கருத்தைச் சிசரோ வலியுறுத்துகின்ருர். நீதி இல்லாதிருந்தால் குடியரசானது தொடர்பெதுவுமற்ற மக்கட் கூட்டமாக மாறி விடும். எனினும், பயன்படுத்தப்பட்ட மொழி இலத்தீனுகவும் சட்டத்தன்மை வாய்ந்ததாகவும் மாறிவிட்டது. "பேரரசு என்பது மக்களின் சொந்த விவகாரமாகும். மக்கள் என்பது கண்டபடி சேர்க்கப்பட்ட மனிதர்களின் கூட்டமல்ல. பொதுச் சட்டத்தால் (கொன்சென்சு இயூறிஸ்—Consensu iuris) பிணைக்கப்பட்டு பொது நல்வாழ்வை அனுபவிக்கும் கூட்டத்தினரே மக்களாவர்."[1] அத்தகைய அரசியற் குழுக்களை அமைப்பது, ஏற்கெனவே உள்ள மாதிரிகளைப் பாதுகாக்கும்போது அல்லது புதியவைகளை உருவாக்கும்போது, பெரிதும் அதிகப் பெறுமதியுடைய நடவடிக்கையாகும் எனச் சிசரோ கருதினுர். "வேறு எந்தத் தொழிலிலுமோ நடவடிக்கையிலுமோ மனிதரின் நற்பண்பு கடவுள்களின் மேதக்க செயலை இவ்வளவு தூரம் அணுகுவது கிடையாது."[2]

எனினும், அரசியற் குழுவின் நோக்கமே (பொதுச் சட்டத்திற்குக் கீழ்ப்படிந்து சமுதாயத்தின் நல்வாழ்வை அடையும் முயற்சியே) தார்மீக முறையிலும் அரசியல் முறையிலும் பேரரசிற்கு அதன் உண்மையான மதிப்பு நிலையைக் கொடுத்தது என்று அரிஸ்தோத்திலைப்போன்று சிசரோவும் கருதினுர். இவ்விருவரும் அரசாங்கமும் நிர்வாகமும் எந்த முறையில் நடத்தப்படுகின்றன என்பதைப் பற்றிக் கவலைப்படவில்லை. நீதியற்ற அரசாங்கம் பேரரசின் தன்மையையே அழித்தொழித்துவிடும். இதற்கு எதிர்மறையாக, அரசாங்கத்தின் உருவத்திலும் பார்க்க அதனுடைய தார்மீக இலட்சியமே மிகவும் முக்கியமானது என்ற சிசரோவின் கருத்தை அதற்கு அடுத்த நூற்ருண்டில் வாழ்ந்த செனேக்காவும் ஏற்றுக்கொண்டார்.

பழக்க வழக்கங்களை அடிப்படையாகக் கொண்ட தனது சொந்தச் சமூகச் சட்டத்தையுடைய உரோமாபுரி, மத்தியதரைக் கடற்பகுதி உலகத்தை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பொழுது இப்பெரும் பணியைச் செய்வதற்காக உருவாக்கப்பட்ட மத்திய தலைமைப் பீடத்தின் வலிமை மிக்க அதிகாரம், நடைமுறையிற் பொதுமக்களின் ஆதரவிலே தங்கியிருந்ததைப் போலவே, கொள்கையளவிலும் மக்களின் உடன்பாட்டிலிருந்தே பெறப்பட்டது. இந்தச்

[1] De Re Publica, I, xxv, 39 (சபைன் மொழிபெயர்ப்பு)
[2] De Re Publica, I, vii, 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனநாயகச் சொற்களுக்குத் தற்கால அர்த்தத்தை நாம் கொடுக்கலாகாது. மக்கள்தாம் சட்டங்களை இயற்றினர்கள் என்ற கருத்தை எவருமே தெரிவிக்க வில்லை. சிசரோவைப் பொறுத்தவரையிலே, சட்டப்படி செல்லக்கூடிய அரசியற் குழுவின் சட்டம் கூறிய நீதி, விண்ணுலக ஆணைப்படி பெறப்பட்டதாகும். கொள்கையளவில், சட்டம் நியாயத்தால் உணரப்படுகின்றது. அக்காரணத்தி ஞலேயே யாவரும் அதற்குக் கீழ்ப்படிந்து நடக்கின்றனர். நடைமுறையில், அரசியல் அதிகாரத்திலுள்ளவர்களே சட்டங்களைப் பிறப்பித்து அவைகளை அமுல் செய்கின்றனர்.

உரோமாபுரியின் சமூகத்திற்குரிய சட்டம் விரிவாக்கப்பட்ட அதே வேளையில் நாடுகளுக்கான சட்டமொன்றும் (இயுஸ் யென்றியும்—ius gentium) அபிவிருத்தி செய்யப்பட்டது. இச்சட்டத்தின் கீழ் உரோமாபுரியில் வாழ்ந்து வந்த, ஆனல் குடியுரிமைகளை அனுபவிக்காத அந்நியர்கள் யாவரும் நீதியைப் பெற ஏதுவிருந்தது. உரோமாபுரிச் சட்டத்தின் இந்த இரு கிளைகட்குமிடையே எந்தவிதமான தொடர்புகள் இருந்தன என்பதும் எல்லா இடத்திலும் பிரயோ கிக்கப்பட்ட இயற்கைச் சட்டத் தத்துவங்களின் அடிப்படையில் அவைகட்கு அர்த்தம் கூறுவது எங்ஙனம் என்பதும் பெரிதளவு குழப்பத்தை ஏற்படுத்து வனவாக இருக்கின்றன. உரோமாபுரியைச் சேர்ந்த சட்டவல்லுனர்கள் எழுதி யுள்ள சில பகுதிகள் எம்மை வேறுவிதமாகச் சிந்திக்கத் தூண்டுகின்றபோதிலும் இச்சட்டங்களைச் வளர்த்து நிர்வகிப்பதற்குப் பொறுப்பாகவிருந்த உரோமைச் சட்டவல்லுனர்கள் தம்மை எதிர்நோக்கிய பிரச்சினைகளை அரசியல் மெய்யறி வுக் கொள்கையோடு அணுகும் பழக்கத்தைக் கொண்டிருந்தனர் எனக் கொள் வதற்கு எவ்வித நியாயமுமில்லை. 'இந்த விடயத்திற்கு மேற்கோள்களாக டைஜெஸ்ற் (Digest) என்ற புத்தகத்தில் எடுத்துக்காட்டப்பட்ட வெவ்வேறு கருத்துக்களின் அடிப்படையில் ஓர் ஒழுங்கான கோட்பாட்டை உருவாக்குவது மிகவும் கடினமாக இருக்கின்றது.'[1]

இயற்கைச் சட்டத்திற்குத் தார்மீக முக்கியத்துவத்தை மட்டும் கொடுப்பதை விடுத்து சட்ட முக்கியத்துவமும் கொடுக்க சிசரோ முயற்சிகளை மேற்கொண் டிருந்த போதிலும், நடைமுறையில் அதனுடைய ஆணைகள் உயர் சட்டத்திற் குரிய மதிப்பை என்றுமே பெறவில்லை என்பதை யாவரும் ஏற்றுக்கொள்கின்ற னர். நடைமுறையிலுள்ள சட்டங்களை விமரிசனம் செய்யப் பயன்படுத்தக்கூடிய இலட்சியக் கொள்கைகளாகவே இயற்கைச் சட்டங்கள் கருதப்பட்டன. இயற் கைச் சட்டத்திற்கும் நாடுகளின் சட்டத்திற்குமிடையேயுள்ள முழு ஒற்றுமை, பேரரசு நிர்வாகத்தின்கீழ் கொள்கையும் நடைமுறையும் ஒன்றையொன்று தொடும் பகுதியில் இருப்பதாக இருந்தால், கொள்கையில் மட்டும்தான் அவை ஒன்றையொன்று உண்மையில் நெருங்கியிருந்தன என்பது தெரியவரும்.

1 பேராசிரியர் டி என்டிரிவ்சினது கட்டுரையிலே முதலாவது அத்தியாயத்தில் இக் கடினங் கள் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. அவைகளைப் படிப்பது பயன்தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரோமாபுரியின் வெற்றிகள், அந்நாட்டினது ஆட்சியின் கீழிருந்து பல நன்மைகளையும் பெற முடியாதிருந்த பின்நூற்றுண்டுகளில் இலட்சிய உருவத்தைப் பெற்றிருந்த போதிலும், அந்நாட்டின் பிரசைகள் அவ்வெற்றிகளைப் பாராட்டாமலும் உயர்வாக மதிக்காமலும் விட்டுவிடவில்லை. எனினும், சமூகத்தை நிர்வகித்தவர்கள் எவ்வளவு திறமைசாலிகளாக இருந்தபோதிலும், யாவர்க்குமுரிய சட்டங்களின் அமைப்பு எவ்வளவுதான் பாரபட்சமற்ற முறையில் விளங்கிய போதிலும், காலம் செல்லச் செல்ல உரோமாபுரியின் மத்திய அதிகாரமானது வல்லாட்சிக்குரிய இராணுவ பலத்திலே தங்கியிருக்க ஆரம்பித்தது என்பதை மறுக்கவோ மறைக்கவோ முடியாமற் போய்விட்டது. அரசாங்க அலுவல்களைப் பலர் கண்டிக்க ஆரம்பித்தனர். பழைய குடியரசு மங்கியதையிட்டுச் சிசரோ வருத்தம் கொண்டதைப் போன்று நீரோ மன்னரில் உருவகப்படுத்தப்பட்டிருந்த பேரரசின் சேவைகள் சீரழிவதைக் கண்டு செனேக்காவும் மனக்கசப்படைந்தார். அத்துடன், நகர அரசின் கண்ணுக்குத் தெரியாத பிணைப்பிலே மனித இனத்திற்குச் செய்யக்கூடிய ஒரேயொரு சேவையை மூதறிவுடையோராற்றான் செய்ய முடியுமென்றும் செனேக்கா அறிவித்தார். அதே சமயம் மூதறிவுடையோருக்கும் குடியரசு தகுதியற்றது என்பது நிரூபிக்கப்பட்டுவிட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இன்ப துன்ப நடுநிலைக் கோட்பாட்டினரின் கருத்துப்படி, பேரரசின் குடிமக்களுடைய வாழ்க்கைகளிலே பெறமுடியாத சமத்துவத்தையும் சுதந்திரத்தையும் அவர்கள் தங்கள் ஆன்மாக்களில் பெற்றுக்கொள்ள முடியும்போதும். அரசாங்க சேவையிற் காணக்கிடைக்காத சமநிலையையும் இசைவிணக்கத்தையும், மூதறிவுடையவர்கள் சூழ்நிலைக்கேற்றவாறு தம் விருப்பங்களைக் கட்டுப்படுத்திக் கொள்வதன் மூலம், தங்களின் வாழ்க்கையில் ஓரளவு உருவாக்க முடியும். சரித்திர சம்பவங்களிலிருந்து விலகியிருந்து, இலட்சிய சமுதாய வாழ்க்கையைத் திருப்திகரமான முறையில் அனுபவிக்கக்கூடிய ஆட்சியைக் கண்டு கொள்வது முடியாத காரியம்.

உலகத்தின் ஆரம்ப நாளிலிருந்தே பொற்காலம் இருந்திருக்க வேண்டுமென்று செனேக்கா கற்பனை செய்தார். பகுத்தறிவுச் செயற்பாட்டின் விளைவாகவே நாகரிகங்கள் உருவாகின என்ற பொசிடோனியசின் கருத்தையும் செனேக்கா கண்டித்தார். செனேக்காவின் கற்பனையும் கண்டனமும், கிறித்துவக் கனவானின் மோட்சத்திற்கும் அதன் வீழ்ச்சிக்கும் ஒப்பிடப்படுகின்றன. இயற்கையில் வாழ்க்கை தீங்கோ குற்றமோ அற்றது என்பதற்கும் கலைகளும் கைப்பணிகளும் போகத்திற்கும் அவாவிற்கும் முன்னோடிகளாக அமைந்தன என்ற ரூசோவின் கொள்கையை விளக்குவதற்கும் இத்தகைய கருத்தே பயன்படுத்தப்பட்டது. கிறித்துவக் கோட்பாட்டிலிருந்து பல முக்கிய அம்சங்களில் வேறுபடுகின்ற செனேக்காவின் கருத்துக்கள் (குறிப்பாக, தீயதைப் பின்தொடருவது பகுத்தறிவின் பாற்பட்ட ஒருவிதத் தவறு என்ற கிரேக்க கருத்தைப் பின்பற்றுவது),

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னால் வரும் நூற்றாண்டுகளிலே சமூகச் சிந்தனையில் ஏற்படும் மாற்றத்திற்கான ஒரு குறிப்பிடத்தக்க சைகையைக் கொடுக்கின்றன. 'நீதி அவர்கட்குத் தெரியாது; முன்மதியையும் அறியமாட்டார்; மனக் கட்டுப்பாடும் வீரமும் கூட அவர்கட்குத் தெரியா.'[1] இயற்கைச் சமூகம் என்ற இந்த இலட்சியக் கட்டுக் கதையிலே பிளேட்டோவின் நன்னெறிகள் காணப்படவில்லை. அவைகள் தேவைப்படாமையே அதற்குக் காரணம். அவை உடந்தையாகவிருந்து உதவிய முடிவுகள் சாதாரணமாக நடைமுறையிற் காணப்பட்டவையாகவே இருந்தன. தவறான பாதையிற் சென்ற உலகிற்றான் இத்தகைய சமூக நன்னெறிகள் செழித்து வளரும் என்றும் அவ்வாறு வளருவதற்கு அப்பொழுது நிலவும் பாபச் சூழ்நிலைகளே ஒருவகையிற் காரணம் என்றும் கூறும் புராதனக் கருத்தை நாம் இங்கே காண்கின்றோம்.

உடலுக்கும் உயிருக்கும், அரசியல் உண்மைக்கும் இயற்கைக் கனவிற்குமிடையேயுள்ள இடைவெளி, கிரேக்க தார்மீக, அரசியற் கொள்கைகளுக்குத் திருத்தங்களைக் கொண்டு வருவதன் மூலம் குறைக்க முடியாத அளவு பெரிதாகவிருந்தது. இந்த வெவ்வேறு பகுதிகளும் இணைக்கப்பட முடியாமலே இருந்து விட்டன. எனினும், கிரேக்க—உரோமை உலகிலே சிந்தனைகளையும் மதிப்புக்களையும் புதிய முறையிலே திருத்தியமைப்பதற்கான வேறு அறிகுறிகள் தோன்றத் தொடங்கின. குறிப்பாக, கிரேக்கர் காலந் தொடக்கம் செல்வாக்குப் பெற ஆரம்பித்த இரகசிய மத வழிபாட்டு முறைகளிடையே இத்தகைய அறிகுறிகள் தென்படவாரம்பித்தன. உடலையும் ஆன்மாவையும் வெவ்வேறாக்கிப் பார்க்கும் மெய்யியலறிஞர்களின் போக்கு, ஓபியசிலிருந்துதான் முதன்முதலில் ஆரம்பமாகியது. பெரிய சமுதாயத்திலிருந்து மெல்ல விலகிச்சென்று கொண்டிருந்த தனிமனிதர்களை இந்த மதக்குழுவினர் மறுபடியும் ஒன்றாக இணைத்தது மட்டுமல்லாமல், மக்களிடையே புதிய கீழ்ப்படிவு உணர்ச்சியும் நட்புரிமையும் உருவாகுவதற்கான சூழ்நிலையையும் அமைத்துக் கொடுத்தனர். அத்துடன், சமயதீட்சை பெறும் வைபவங்கள் மூலம் புதிய கடவுள்—மனித ஒற்றுமைப்பாதையிற் செல்வதற்குப் பலரை உருவாக்கினர். தனிமனிதன் தனக்கென உருவாக்க முடியாதனவும் அவனது நகர் அவனுக்குக் கொடுக்கத் தவறியனவுமான வாய்ப்புக்களை இம்மதங்கள் புதிய, கடினமான சூழ்நிலையிற் கொடுத்துதவின. எனவே, வேறு பல போட்டி மதங்களுக்கிடையே மக்களின் ஆதரவைப் பெற்ற ஒரு மதமாகத் தனது வாழ்க்கையை ஆரம்பித்த கிறித்துமதம் தோன்றுவதற்கு கிரேக்க மதங்கள் வழிவகுத்தன எனக் கூறுவதும், அரசியற் குழுவிற்குள் கிறித்தவ திருச்சபை என்ற புதிய சமூக நிறுவனம் தோன்றி அரசியற் குழுவிற்குப் போட்டியாக வளர்வதற்கான முற்குறிகளை உள்ளடக்கியிருந்தது என்பதும் யாவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய உண்மைகளாம்.

[1] *Epistulae Morales* (Loeb), XC, 46

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதத்திற்கும் அரசியலுக்குமிடையே எல்லை வகுத்துக் கொண்ட இந்த நடவடிக்கை, அரசியற் சிந்தனையிலும் நடைமுறை வழக்கிலும் மிக முக்கியமானவையும் தொடர்ந்திருப்பவையுமான பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தியது. கிறித்து மதம் செல்வாக்குப் பெற்றதன் விளைவாக, கிரேக்கரின் அல்லது உரோமரின் கருத்துப்படி, நீதி என்ற இலட்சியம் கைவிடப்படவில்லை. இதற்கு மாறாக அரசியல் தொடர்புகளின் நோக்கம், எல்லை, இயல்பு என்பவை திரும்ப வரையறை செய்யப்பட்டன. தனிமனித சமூக நிறுவனமான நகரத்தை, அது அதென்சாக இருந்தாலென்ன உரோமாபுரியாக இருந்தாலென்ன, மையமாகக் கொண்டிருக்காத வகையில் மாற்றமடைந்துவிட்டனவும், திருச்சபை அமைப்பிற்கும் மதச்சார்பற்ற அமைப்பிற்குமிடையே பகிர்ந்து கொள்ளப்பட வேண்டியனவுமாய இலட்சியங்களின் அடிப்படையிலே இவற்றை மீள வரையறை செய்ய வேண்டிய அவசியமிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் அத்தியாயம்

## அமைதியும் ஒழுங்கும்

'கிரேக்கருக்கும் நாகரிகமற்றவருக்கும் ஞானிகளுக்கும் மூடருக்கும் நான் கடனாளியாயிருக்கிறேன்.'[1] எல்லா மக்களுக்கும் போதிக்க வேண்டுமென்று பரிசுத்த பவுல் கருதிய கிறித்து பெருமானின் போதனைகள், சமூக சிந்தனையிற் புதிய வளர்ச்சியை ஏற்படுத்தின என்பதை வாதிட வேண்டியதில்லை. கிரேக்க உலகிலிருந்த வெவ்வேறு சமூகக் குழுக்களை வகைப்படுத்த வழக்கமாகப் பிரயோகிக்கப்பட்ட பதங்களை வேண்டுமென்றே பயன்படுத்தியிருப்பது, அக்காலத்தில் நிலவிய புறமதத்தைச் சார்ந்த கருத்துக்களுக்கு மிக நெருக்கமாகக் கிறித்துவக் கோட்பாட்டை வயப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளைச் சந்தேகக் கண்ணுடன் நோக்குதல் வேண்டும் என்பதைப் புலப்படுத்துவதாக இருக்கின்றது. இந்த அபிவிருத்தியிலே தென்படும் புதுமைக்குத்தான் முக்கியத்துவம் கொடுத்தல் வேண்டும். பரிசுத்த பவுலின் செய்தி பிற இனத்தார் சார்ந்த உலகில் இருந்த பிரிவுகளையெல்லாம் முற்றாக ஊடுருவிச் சென்றது. அரிஸ்தோத்தில் கொடுக்க முன்வந்த குடியுரிமைகளைப் பெறத் தகுதியுடையவர்களுக்கோ அல்லது இன்பதுன்ப நடுநிலைக் கோட்பாட்டைப் பின்பற்றி ஞானிகளாக வர முயன்றவர்களுக்கோ மட்டுமே இப்போதனைகள் கொடுக்கப்படவில்லை. கிறித்துவ மதத்திற்கும் அதற்குச் சமகாலத்தில் வாழ்ந்த சிந்தனை இயக்கங்கட்குமிடையே எந்த வகை ஒற்றுமைகள் காணப்பட்டாலும் (அத்தகை ஒற்றுமைகள் காணப்பட்டன என்பதை ஏற்கத்தான் வேண்டும்), கொள்கையளவிலும் நடைமுறையிலும் கிறித்துவின் போதனைகள் எல்லா மக்களுக்குமே போதிக்கப்பட்டன. இதுவரை வெறும் அபிலாசையாக மட்டுமே இருந்து வந்த சமத்துவத்திற்கு அவை புதிய மதிப்பைப் பெற்றுக் கொடுத்து அதனை நிலைநாட்டியதுடன் சகோதரத்துவத்திற்கும் உறுதியான அமைப்பை உருவாக்கிக் கொடுத்தன.

புதிய சம உரிமைக்குழுவில் சேர்ந்து கொள்வதை எந்தவித சமூக, அறிவாற்றல் தடைகளும் கட்டுப்படுத்தவில்லை. இக்காரணத்தின் விளைவாகவே, ஆரம்பத்தில் இப்போதனைகள் ஊக்கி வளர்த்த சமுதாயங்கள், அரசியல் இயல்புகள் என அக்காலத்தில் அழைக்கப்பட்ட இயல்புகளைக் கொண்டிருக்கவில்லை. சுதந்திரமான நகர வாழ்க்கை சீரழிந்ததன் விளைவாகத் திருப்தி செய்யப்படாத சமூக, தார்மீகத் தேவைகளை அவை திருப்தி செய்தன என்பது தெளிவு. அதைவிட, ஆரம்ப காலத்திருந்த தேவாலயங்களில் நடைபெற்ற மதச் சடங்குகள், சமத்துவமாக ஒன்றாகக் கூடும் புதிய அனுபவத்தையும் மக்களுக்குக் கொடுத்தன. புற

[1] உரோமையர் i, 14



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதத்தைச் சார்ந்த நகருக்குரியவையான தெய்வங்களின் பெரிதளவு மரபொழுங்கையுடைய சமயவழக்குகள் இத்தகைய அனுபவத்தை மக்களுக்கு அதிகம் கொடுக்கவில்லை. கிறித்துவின் போதனைகளில் நம்பிக்கை வைத்து மதமாற்றம் பெறுவோனுக்குக் கவலைகளிலிருந்தும் தனிமையிலிருந்தும் அளிக்கப்படும் விடுதலை, மர்ம மதங்களில் நடைபெறுவதைப் போன்று, யாவற்றையும் துறந்து தன்னைத் தானே வருத்துவதன் மூலம் ஒருவன் பெறவேண்டிய தொன்றன்று.[1] கிறித்துவ இலட்சியங்களின் சிறப்பியல்பாகவுள்ள சொந்த வாழ்க்கையிலும் சமூக நடத்தைகளிலும் உயர்ந்த தார்மீகத் தரத்தைக் கொண்டிருக்கும் பண்பு பவுலிடமிருந்து மட்டுமே (அல்லது பெரும்பாலும் அவரிடமிருந்தே) கிடைக்கப்பெற்றது என்று நாம் கூறலாகாது. கிறித்துவ திருச்சபை என்ற பரந்து விரிந்த அமைப்பை உருவாக்கி வளர்த்த திறமை பவுலினுடையது என்பதில் ஐயமில்லை. திருச்சபையின் தாபனக் கட்டுக்கோப்பு அவரின் செயல்திறனும் அறிவாற்றலாலுமே உருவாகியது என்பதையும் மறுக்க முடியாது. ஆனால் அவர் போதித்த கோட்பாடுகளும், மதமாற்றம் பெற்றவர்களை அவருக்குப் பெற்றுக் கொடுத்தவையும் கிறித்துவின் போதனைகளே.[2] கிறித்துவின் போதனைகள் சமூகச் சிந்தனைகளைக் கொண்டிருக்கவில்லையென்றோ, பவுலின் கிறித்துவம் என்ற விசேட கோட்பாட்டைப் பரிசுத்த பவுல் போதித்தாரென்றோ எவரும் கூறவில்லை.

எனினும், பிற இனத்தவர்கட்குப் பரிச்சயமான சூழ்நிலையிலேயே புதிய மதத்தின் மரபிற்கு விரோதமான அம்சங்கள் யாவும் போதிக்கப்பட்டன. ஏதோ ஓர் உருவில் விடுபேறைப் பெறும் ஆர்வம் அக்காலத்தில் மிகப் பரந்து இருந்தது என்பதை வற்புறுத்திக் கூறத் தேவையில்லை. முன்பே நிறுவப்பட்ட மற்ற சமயகுழுக்களைப் போன்று, தீய சக்திகளின் இயற்கைமீறிய கட்டுப்பாடுகளிலிருந்து சுதந்திரம் பெற உதவவும், ஊழின் பிணைப்புக்களிலிருந்து விடுதலை பெற உதவவும் கிறித்துவ மதம் முயன்றது. அத்துடன், நற்பேறுகளின் திடீர்ப்போக்கு மன அமைதியைக் குலைக்க விடாதபடி நல்லதையும் கெட்டதையும் ஒரேமாதிரி ஏற்றுக்கொள்ளும் பண்பை வளர்க்கவும் கிறித்துவ மதம் முன்வந்தது. அக்கறையின்மையிலிருந்தும் பிறவற்றிலிருந்தும் நன்லைப் பிரித்தெடுப்பதும், தனித்து நிற்பதிலிருந்து ஆரம்பித்துச் சில தடவைகளில் மனமுறிவில் முடிவடைவதும், தனக்கு மட்டுமே விடுபேறைப் பெற்றுக் கொள்வதுமான முயற்சி போன்ற சம்பவங்களுக்குத் தலைபணிந்து போகும் உற்சாகமற்ற போக்கிற்கு மாறாக, புதிய மதம், மகிழ்ச்சியான நோக்கமொன்று இருக்கின்றது என்ற எண்ணத்தையும், சகோதரத்துவத்துடன் கூடிய இறுக்கமான சமூக ஒற்றுமை பற்றிய உணர்வையும், எல்லாவற்றிற்கும் மேலாக, நகர அரசில் எதிர்பார்க்கப்படுவதிலும் பார்க்க இந்த உலகத்திலும் அதன் பின்னும் பெரிதளவு நன்மை

1 தமது எழுத்துக்களிலும் கொரிந்தில் வாழ்ந்த கிறித்தவர்கட்கு எழுதிய கடிதங்களிலும் பரிசுத்த பவுல் காம வாழ்க்கையைக் கடுமையாகக் கண்டித்திருப்பதிலிருந்து, ஆரம்ப காலக் கிறித்தவக் குழுக்கள் சில போதனைகளிற் காணப்பட்ட சுதந்திரத்தை, தவறான முறையில் நடப்பதற்குத் தமக்குக் கொடுக்கப்பட்ட அனுமதி எனக் கருதி, மர்ம மதங்களின் மரபுகளைப் பின்பற்ற ஆரம்பித்தன என்பது தெளிவாகத் தெரிகின்றது..

2 II கொரிந்தியர் iv, 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைப் பெறக்கூடிய தெய்வ—மனிதப் பேரரசிற்குள் அனுமதிக்கப்படலாம் என்ற நம்பிக்கையையும் ஏற்படுத்தியது. புதிய மதத்தின் மையக் கருத்தாகவுள்ள கிறித்துவின் திருமீட்டெழுச்சியில் வைத்துள்ள நம்பிக்கை, வெவ்வேருகப் பிரிந்திருந்த மனிதப் பேரரசையும் தெய்வப் பேரரசையும் இணைக்க உதவியதோடு, வெவ்வேருகக் கொள்ளப்பட்ட மனத்தையும் உடலையும் ஒன்ருகக் கொண்டு வந்து மரணத்தின் மர்மத்தை மற்ற மதங்களிலும் பார்க்கச் சிறந்த முறையில், ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் விளக்கவும் உதவி புரிந்தது. மனிதனும் சமூகமும் எவ்வாறு ஒழுங்காக்கப்படவேண்டுமென்ற இறுதி முடிவைச் செய்யும் அதிகாரம் பெறும் பொருட்டு, பிற்காலங்களில் மதச் சார்பற்ற அதிகாரத்துடன் போட்டி போடக் கூடிய நிலையிலும், முக்கியத்துவத்திலும் அதிகாரத்திலும் உரோமைப் பேரரசுடன் போட்டி போடக் கூடிய வகையிலும் சிறப்பான ஓர் அமைப்பாகத் தன்னைக் கட்டி எழுப்புவதற்குக் கிறித்துவ திருச்சபைக்கு உதவிய புதிய நம்பிக்கைகள் யாவை என நாம் எம்மையே கேட்டுக்கொள்ளுதல் வேண்டும்.

ஒன்ருேடொன்று தொடர்புடைய கருத்துக்களான பாவம், நற்கதி என்ற மிக முக்கியமான கருத்துக்களைக் கிறித்து மதம் யூத மதத்திடமிருந்து பெற்றுக் கொண்டது. உண்மையை அடைய முடிந்தவர்களை உண்மையை அடைய முடியாதவர்களிடமிருந்து வேறுபடுத்திய மூதறிவு, அறியாமை என்ற கருத்துக்களுக்கிடையேயுள்ள வேற்றுமைகளுடன் ஒப்பிடும்போது, செயல்திறனுக்கும் வெற்றிக்கும் புதிதாக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. ஒன்றைச் செய்யத் தவறுவது, ஓர் இலட்சியத்தை அடைய முடியாதிருப்பது, இலக்கைத் தப்ப விடுவது ஆகியவை பாவம் எனக் கருதப்பட்டமையே அதற்குக் காரணமாகும். பழைய அல்லது புதிய ஏற்பாட்டுக்கிணங்க இந்த அருள் வெளிப்பாட்டின் தன்மை அதைப் பற்றி அறியவோ கேட்கவோ முடிந்த யாவர்க்கும் பொதுவானதாய் இருந்தது. கிரேக்க அர்த்தத்தில் இந்த அருள் வெளிப்பாட்டை அறியும் சந்தர்ப்பத்தைப் பெற்றவர்கள் யாவரும் மெய்யியலறிஞர்களே ; ஆனல் நன்னெறிகள் யாவை என்பதைத் தெரிந்து, அவைகளை இனம் கண்டு கொள்ளும் சோக்கிரட்டீசிற்கு இருந்ததைப் போன்ற திறமை இல்லாமற்போனதே இவர்கட்கும் கிரேக்க மெய்யியலறிஞர்கட்குமிடையே இருந்த முக்கிய வித்தியாசமாகும்.

போதனைகளை ஒரு காதால் கேட்டு மறு காதால் வெளியே விடுபவர்கட்கும் போதனைகளைக் கேட்டு அதன்படி ஒழுகுபவர்கட்குமிடையேயுள்ள வேறுபாடு பழைய ஏற்பாட்டில் அடிக்கடி வற்புறுத்தப்பட்டிருக்கின்றது. 'பரலோகத்திலுள்ள என் பிதாவின் சித்தத்தின்படி செய்கின்றவனே பரலோக இராச்சியத்திற் பிரவேசிப்பானேயல்லாமல், என்னைநோக்கிக் கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்கிறவன் பிரவேசிப்பதில்லை.'[1] போதனையைக் கேட்டு அதன்படி

[1] மத்தேயு vii, 21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடப்பவர்கள் கற்பாறையிலே தமது வீட்டைக் கட்டிய மூதறிவுடையவருக்கு ஒப்பிடப்படுகின்றனர். இதே கருத்தை 'உரோமையர் ii' இலுள்ள ஒரு புகழ் பெற்ற பகுதியில் பவுல் திரும்பக் கூறுகின்ருர். சட்டத்தைக் கேட்பவர்களிலும் கேட்டபடி ஒழுகுபவர்களே கடவுளின் முன் நீதியாக நடந்து கொள்கின்றனர் என அவர் அப்பகுதியில் வற்புறுத்துகின்ருர். இந்தப் பகுதியிலே, கேட்பவர்கள் என்ற கருத்தைக் கொடுப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள கிரேக்க பதத்திற்கு, விரிவுரைகளைக் கேட்கச் செல்லும் மாணவர்கள் என்ற அர்த்தத்தையும் கொடுக்க முடியும்.

இதன் விளைவாக, புதிய இஸ்ரவேல் என அழைக்கத் தகும் புதுமாதிரியான ஐக்கியம் அல்லது சகோதரத்துவம் தோன்றி வளர்ந்தது. உலகம் முழுவதும் பரந்து விரிந்த திருச்சபையாக இது மாற்றமடைய விருந்தது. இந்தத் திருச்சபையின் அங்கத்தவர்கள் தெய்வத்தன்மையையுடைய உண்மைகளைப் பற்றிய அறிவை மட்டும் தமக்குட் பொதுவாக வைத்திருக்கவில்லை. பாவங்களைச் செய்யும் சாதாரணமான அனுபவத்தையும், இப்பாவ நிலையிலிருந்து விடுபட்டு நற்கதியடைய முடியும் என்ற நம்பிக்கையையும் கூட அவர்கள் தமக்குட் பொதுவாகக் கொண்டிருந்தனர். பாவ விடுதலை பெறுவதற்கு மதத்தின் மீது வைத்திருக்கும் நம்பிக்கை மட்டுமே போதுமானது என்று பவுல் கருதுகின்ருர். ஆனல், செயல்மூலம் நற்கதியை அடைய முடியும் என்ற கருத்தையே ஜேம்ஸ் விரும்புகின்ருர். பாவிகட்குள்ளும் நற்கதியைப் பெற்றவர்கட்குள்ளும் ஒருவித ஒற்றுமை இருப்பதை இருவரும் காண்கின்றனர். இந்த இரு பகுதியினருக்குமிடையேயுள்ள முக்கிய வித்தியாசம், கடவுளுக்கும் பாவிக்குமிடையேயுள்ள வித்தியாசமேயல்லாது, தனி மனிதனின் உடலுக்கும் மனத்திற்குமிடையேயுள்ள வித்தியாசமோ, சமுதாயத்தில் கற்றவனுக்கும் கல்லாதவனுக்குமிடையேயுள்ள வித்தியாசமோ அன்று. ஆன்மாவிற்காக வாழ்வது, உடலுக்காக வாழ்வது ஆகிய வற்றிற்கிடையேயுள்ள வேறுபாடு புதிய ஏற்பாட்டிலே கொடுக்கப்பட்டுள்ளது. யாவருக்கும் பழக்கமான இந்த வேறுபாட்டை, புறமத மெய்யியலிற் குறிப்பிடப்படும் மனித இயல்பின் உயர் அம்சங்கள், கீழ்த்தரமான அம்சங்கள் என்ற கருத்துக்களுடன் ஒப்பிட்டுக் குழப்பமடையலாகாது. தனிமனிதனின் வாழ்க்கையிலே, பாவம் செய்யும் இயல்பிற்கும் பரலோக அரசிற்கான வாழ்விற்குமிடையே நடைபெறும் போராட்டம் என்ற கண்ணேட்டத்திற்ருன் அதைப் பார்க்க வேண்டும்.

தோல்வி, கீழ்ப்படியாமை என்ற கருத்துக்களிலுள்ள நம்பிக்கை பாதித்ததைப் போன்றே, செய்த தவறுகட்கு இரங்குதல், மன்னித்தல், வேற்றுமைகளை அகற்றிச் சரிசெய்தல் போன்றவைகளைச் செய்வதற்குள்ள சந்தர்ப்பங்களும் புதிய சமுதாயத்தைச் சேர்ந்த மக்களின் வாழ்க்கையைப் பாதித்தன. மாசுகளைப் போக்குவதற்கு மற்ற மதங்களும் பல வழிகளை வகுத்துக் கொடுத்தன என்பது உண்மையே. தமது மதத்தை ஆரம்பித்த கர்த்தர் தங்களிடையே இருக்கின்ருர் என்ற விசுவாசத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட கிறித்துவ மதத்தைப்போன்று மற்ற எந்த மதமும் தன் திருத்தொண்டர்களை ஒற்றுமையுடைய இறுக்கமான கூட்டமாக அமைக்கவில்லை. பொது நம்பிக்கையின் பேரில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கப்பட்ட இந்த இறுக்கமான அமைப்பு, மதச்சார்பற்ற உலகில் அவர்களைப் பாதிக்கும் சமூக, அரசியல் நிர்ப்பந்தங்கள் யாவற்றிலும் பார்க்கச் செல்வாக்கு மிக்கதாக இருந்தது.

கர்த்தரின் காட்சியாகக் கிடைக்கப்பெற்ற சட்டம், புராதன சமூகச் சிந்தனையாளர்களாலே தயாரித்தளிக்கப்பட்ட இயற்கைச் சட்டத்தின் விதிகளுடன் ஒத்துப் போக முடியாததன்று என்ற கருத்து அடிக்கடி வற்புறுத்தப்பட்டு வருகின்றது. இரு சட்டத் தொகுப்புக்களையும் இயற்கைச் சட்டம் தன்வயப்படுத்திக் கொண்டமை இக்கருத்தை மேலும் வலியுறுத்துகின்றது. இலட்சிய நியம அளவு கருவிகளாக மட்டுமே இயற்கைச் சட்டக் கொள்கையின் தார்மீகக் கூற்றுக்கள் பயன்பட்டு வந்திருக்கின்ற வேளையில், மதநம்பிக்கையுடையவர்களைப் பொறுத்தவரையிலே தெய்விகச் சட்டம் உடனடி விளைவுகளை ஏற்படுத்தி, யாவரையும் ஒன்றுகப் பிணைத்து வைத்திருந்தது. கர்த்தரின் விருப்பத்தைப் பற்றிய நேரடியான அறிவைப் பெறும் பாக்கியம் கிடைக்கப்பெறுத புற இனத்தவர்கள் தமக்குத் தெரியாமலே கர்த்தரின் விருப்பப்படி நடந்து கொள்ளக் கூடும் என்று பவுல் கூறுகின்றுர். அவர்கள் 'இயற்கையாகவே சட்டப்படி நடந்து கொள்ளக் கூடும்'[1] என்கிறுர் அவர். அதே வேளையில், தமது மனச்சாட்சிக்கு மட்டுங் கீழ்ப்படிந்து இவ்வாறு நடந்து கொள்வதன் மூலம் அவர்கள் 'தங்களுக்குத் தாங்களே சட்டமாகி விடுகின்றனர்'[2] என்றும் அவர் குறிப்பிடுகின்றுர்.

இந்த இயக்கத்தின் ஆரம்ப காலத்திலிருந்தே கடவுளின் வெளிப்பாடாகிய சட்டத்திற்கு மனதாரக் கீழ்ப்படிந்து நடப்பது எவ்வளவு பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்துகின்றது என்பதை எம்மால் உணர்ந்து கொள்ள முடிகின்றது. குடி ஆட்சியை நடத்தும் அதிகாரிகள் சம்பந்தப்பட்டமட்டில், மற்ற மதக் குழுக்களுடன் ஒப்பிட்டு நோக்குகையிற் பிற்காலத்தில் கிறித்துவ திருச்சபை வகித்த பங்கைப் பார்க்கும்போது இதன் உண்மை தெளிவாகின்றது .கொரிந்தி லுள்ள கிறித்துவக்குழு கீழ்ப்படிவற்ற முறையில் நடந்துகொண்டதைக் கண்டிக்கும்போது, கிறித்துவர்கட்கிடையே தோன்றும் தகராறுகளைக் குடியியல் நீதி மன்றங்களின் தீர்ப்பிற்கு விடும் பழக்கம் அனுவசியமானது என்பதைப் பவுல் சுட்டிக் காட்டுகின்றுர். ஒரு கிறித்துவர் வேருெரு கிறித்துவருக்கெதிராக வழக்குத் தொடருவது வழக்கில் ஏற்கவே தோற்றுவிட்டதற்குச் சமமாகும். இது ஒரு வெட்கப்படவேண்டிய நடவடிக்கை என்று பவுல் கண்டிக்கின்றுர். வழக்குத் தொடருபவர்கட்கிடையே கருத்து வேறுபாடுகள் தோன்றக் கூடுமென்பதையும் மாறுபட்ட அக்கறைகள் இருக்கக் கூடுமென்பதையும் பவுல் ஏற்றுக்கொள்கின்ற போதிலும், இத்தகைய வேறுபாடுகளைக் கிறித்துவ சகோதரர்கட்குள்ளேயே தீர்த்து வைக்க முடியும் என்று கருதுகின்றுர். மதமாற்றம் பெற்றவர்கள் குடியியற் சட்டங்களுக்கு அமைந்து நடக்கத் தேவையில்லை என்று கர்த்தரின் சட்டம் கூறுவதாக ஆரம்பகாலத்தில் மதமாற்றம் பெற்ற சிலர் கூறமுற்பட்டதை மறுத்துரைப்பதிலே பவுல் அதிக கவனம் செலுத்தினுர். இப்பிரச்சினையை இயேசுக் கிறித்துநாதரே விளக்கிக் கூறினுர். அதிகமாக மேற்கோளாகக் காட்டப்

[1] உரோமையர் ii, 14, 15 [2] I கொரிந்தியர் vi, 1–11

4—CP 2592 (1/68)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படும் ஒரு பாடலில்,[1] கடவுளுக்கும் அரசனுக்கும் செய்ய வேண்டிய பணிகளை அவர் தெளிவாக வேறுபடுத்திக் காண்பித்துள்ளார். யூதர்களின் கடினமான சட்டங்களிலிருந்து தப்பி, கட்டற்ற விடுதலை வாழ்க்கையை நடத்த முடியாது என்பதையும் அவர் வற்புறுத்திக் கூறியுள்ளார். தத்தமது பிரச்சினைகட்குத் தீர்வு காணும் அதிகாரம் கர்த்தருக்கும் அரசனுக்கும் இருப்பதைப் போன்றே, கர்த்தரில் நம்பிக்கை வைக்கும் சமுதாயம் (புதிய இஸ்ரவேல்) தனது அங்கத் தவர்கட்கிடையே தோன்றும் தகராறுகளைத் தீர்த்து வைக்கும் முதல் நீதி மன்றமாகவும் இறுதி அப்பீல் நீதிமன்றமாகவும் இருக்கும் என்ற புதிய கருத்து, ஒரு பெரிய சமுதாயத்தின் சமூகத் தொடர்புகளைப் பாதிக்கும் தன் மையைப் பெற்றதோடு, ஆயிரமாயிரம் ஆண்டுகட்கு ஐரோப்பாவிற் செல்வாக் குடன் விளங்கும் தன்மையையும் பெற்றிருந்தது.

கிறித்துவ இலட்சியங்களுக்கும் இயற்கைச் சட்டத்திற்குமிடையே அதிக தார்மீக வேறுபாடுகள் இருப்பதாகச் சொல்ல முடியாது. புராதன உலகில் வாழ்ந்த ஞானிகளும் மெய்யியலறிஞர்களும் ஏற்றுக்கொண்ட பல நன்னெறிகள் கிறித்துவ வாழ்க்கையிலும் காணப்படுகின்றன. அனைத்துக்கும் மேலான இறுதி அதிகாரபீடம் ஒன்றில் நம்பிக்கை வைத்ததும், ஆரம்பத்திலிருந்தே தனது சொந்த நீதிமன்றங்களைக் கொண்டிருந்ததுமான கூட்டமைப்பு உருவாக்கப் பட்டது. அது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்திய புதிய அமைப்பாக இருந்தது.

கருத்து வேறுபாடுகளையும் கலகங்களையும் தடுப்பது, அவ்வாறு தடுக்க முடி யாத சட்டத்தில் வேற்றுமைகளைப் போக்கி நட்புண்டாகச் செய்வது ஆகியவை களே புதிய சமுதாயத்தின் பிரதான நோக்கங்களாயின. அங்கத்தவர்கட் கிடையே இருக்கவேண்டிய உறவுக்கு முதலிடம் கொடுக்கப்பட்டது. ஆனல், அத னிலும் மேலாக, அங்கத்தவர்கள் யாவரும் தனித்தனியாகவும் கூட்டமாகவும் கடவுளுடன் கொண்டிருக்க வேண்டிய உறவுக்கு முக்கியத்துவம் கொடுக்கப் பட்டது. புதிய சமுதாயத்திற்கும் கிரேக்க நகருக்குமிடையே பலவித ஒற்று மைகள் காணப்படுகின்ற போதிலும், கடவுளுக்கும் அங்கத்தவர்கட்குமிடையே யுள்ள நல்லுறவு பற்றிய கருத்து, புதிய கோட்பாட்டை கிரேக்க நகரின் ஒற்றுமை, நீதி ஆகியவற்றிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றது. தன் னிறைவை அடைவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளில் அதிக கவனம் செலுத்த வேண்டாமென்று பவுல் கொரிந்தியர்களை எச்சரிக்கை செய்கின்றார். இதற்கு மாறாக அத்தகைய முயற்சிகளை அரிஸ்தோத்தில் பெருமகிழ்ச்சியுடன் வரவேற் றிருப்பார். பவுலால் மதமாற்றம் செய்யப்பட்ட புற இனத்தவர்களும் அம் முயற்சிகளை வரவேற்றிருக்கக்கூடும். 'நாம் எமக்குள்ளே தன்னிறைவு பெற முடியாது......எமது தன்னிறைவு கடவுளிடமிருந்து பெறப்படுதல் வேண்டும்'[2] கடவுளில் நம்பிக்கை வைத்து அவரின் உதவியையும் ஆதரவையும் பெறும்

[1] மத்தேயு xxii, 21

[2] II கொரிந்தியர் iii, 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இயல்பு திருச்சபையிடம் இருப்பதைப் போலவே தனிமனிதனிடமும் இருத்தல் வேண்டும். தான் செய்த பாபங்களிலிருந்து விடுபட்டு நற்கதியடைவதற்குத் தனிமனிதன் செய்தது போல, கடவுளுக்கும் மனிதனுக்குமிடையேயும், மனிதனுக்கும் அவனுடன் வாழும் சக மனிதர்கட்குமிடையேயும் சமாதானமான நல்லுறவுகளை நிறுவுவதற்குத் திருச்சபை கடவுளையே நம்பியிருந்தது.

கொரிந்தியர்களுக்குப் பவுல் கூறியதைப் போன்று, குழப்பத்தின் உறைவிடமாகத் திகழாமல் சமாதானத்தின் ஊற்றாகவே கடவுள் விளங்குகின்றார்.[1] கடவுளின் அமைதி திருச்சபையின் உருவிலே தெரிவதற்கான சூழ்நிலைகளை உருவாக்கிக் கொடுப்பதிலேயே உலகை ஆட்சி புரியும் அரசர்கள் அதிக கவனத்தைச் செலுத்துதல் வேண்டும். "அரசர்கட்கும் உயர் நிலையிலுள்ள யாவருக்குமாகப்" பிரார்த்தனை செய்யுமாறு திமோத்தியைப் பவுல் வேண்டிக் கொள்கின்றார் ; தெய்விகமாகவும் அமைதியாகவும் வாழ்க்கையை நடத்த அது உதவும்."[2] அன்று தொடக்கம் இன்றுவரையும் இந்த நோக்கையே கிறித்துவர்கள் கொண்டிருக்கின்றனர். இலட்சியம் என்ற முறையில், நீதியான நகர் என்ற இலட்சியத்தை இது மாற்றீடு செய்வதாகக் கொள்ள முடியாது. அந்த இலட்சியத்துடன் சேர்க்கப்பட்ட புதிய இலட்சியமாகவே இதைக் கொள்ளல் வேண்டும். குடியியல் அலுவல்களில் ஒழுங்கை நிலைநாட்டுவது தார்மீகத்துறையில் விரும்பப்பட்ட இலட்சியமாக இருந்த நிலை மாறி, கடவுளில் நம்பிக்கை வைத்தவர்கள் தமது ஆன்மீகத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு வேண்டிய நிபந்தனையாகிவிட்டது.

இந்தக் கருத்தின் பூரண விளைவுகளை அறிந்து கொள்வதற்குப் பல நூற்றாண்டுக் காலம் சென்றது. இதன் விளைவுகளுட் சில மிகவும் ஆச்சரியமளிப்பவையாக இருந்தன. புதிய மதத்தின் இலட்சியம் ஆரம்பத்திலிருந்தே அரசியல் உருவக மொன்றால் குறிப்பிடப்பட்டது மிகவும் முக்கியமானது. 'பரலோக இராச்சியத்தைக் கட்டி எழுப்புதல்' என்பதே அந்த உருவகமாகும். இந்த உருவகத்தை கிரேக்க உருவகம் எனச் சொல்வதிலும் பார்க்க உரோமை உருவகம் என்று சொல்வதே பொருத்தமானது. (பிற்காலத்தில் அகுஸ்தீன், நகர் என்ற கருத்தை ஏற்றுக்கொண்டதையும், யூதர்களின் தேசிய இலட்சியங்களிலிருந்து நகர் தனது இயல்பை ஓரளவு பெற்றிருத்தல் கூடும் என்பதையும் இங்குக் குறிப்பிடுதல் வேண்டும்.) பிலாத்துவுக்கு முன்னிலையில் 'எனது இராச்சியம் இவ்வுலகிற்கு அடுத்ததல்ல' என்று இயேசுக் கிறித்துநாதர் கூறியிருப்பது காரணமாய் வெவ்வேறு காலத்தில் அதற்கு வெவ்வேறு அர்த்தங்கள் கொடுக்கப்பட்டு வந்துள்ளபோதிலும், பிலாத்துவின் சொந்த அதிகாரத்திலிருந்து முற்றாக வேறுபட்ட தமது புதிய ஆட்சி எல்லையின் உரிமைகளைக் கிறித்து தெளிவாக்கிக் காட்டினார்.

பரலோக இராச்சியம் என்ற கருத்து சமூகக் கொள்கையையும் உறவுகளையும் எவ்வாறு பாதித்தது என்ற ஆராய்ச்சி, சிந்தையைக் கவர்வதாகவும் தனித்து

[1] I கொரிந்தியர் xiv, 33

[2] I திமோத்தி ii, 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வம் மிக்கதாகவும் இருக்கும். ஆனால் அந்த ஆராய்ச்சியை இங்கே செய்ய முடியாது. பிற்காலத்திற் பாரதூரமான விளைவுகளை உண்டுபண்ணிய மதத்தின் அரசியற் பின்னணி பற்றிய சில அம்சங்களை மட்டும் சுட்டிக் காட்டுவதுடன் நாம் திருப்தியடைந்து கொள்ளுதல் வேண்டும். பிந்திய நூற்றாண்டுகளின் சில கட்டங்களில் இகலோக இராச்சியத்திலும் பார்க்கப் பரலோக இராச்சியத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்ட சந்தர்ப்பங்களும் உண்டு. இராச்சியம் என்ற முழுக் கருத்திற்குமே வேறு உலகப் பின்னணியைக் கொடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த முயற்சிதான் சரியான முயற்சியாகவோ, இவர்கள் கொடுக்க முயன்ற அர்த்தந்தான் அதற்குக் கொடுக்கப் படக் கூடிய ஒரே அர்த்தமாகவோ இருந்தால், அரசுக்கும் திருச்சபைக்குமிடையே ஏற்பட்ட கிட்டத்தட்டத் தீர்த்து வைக்கப்படக்கூடிய எத்தனையோ பிரச்சினைகள் தவிர்க்கப்பட்டிருக்கலாம். அதிகாரத்தின் பிறப்பிடம் பரலோகத்தில் இருந்தாலும் கூட (திருப்பிறவியெடுத்த மதத்தைப் பொறுத்தவரையில் இது ஐயப்பாட்டிற்குரிய கூற்றாகவே இருக்கின்றது), அதன் ஆட்சியெல்லையின் பரப்பு இந்த உலக வாழ்க்கைக்குள்ளேயே அமைந்துள்ளது என்பதை மறுக்க முடியாது. இராச்சியம் ஏற்கவே அமைக்கப்பட்டுவிட்டது; ஆனால் அது இன்னும் வந்து சேரவில்லை என்ற இரண்டு அர்த்தங்களில் இராச்சியம் என்ற பதம் பயன்படுத்தப்படுவதை நாம் பார்க்க முடியும். இது எப்பொழுதும் திகைப்பைக் கொடுப்பதாகவே இருந்து வந்திருக்கின்றது. இராச்சியம் எப்பொழுது வந்தடையும் என்ற வினாவிற்குப் பதிலிறுக்குமுகமாக 'பரலோக இராச்சியம் உங்களுக்குள்ளேயே இருக்கின்றது' என்று இயேசுக் கிறித்துநாதர் கூறிப்போந்தார். பரலோக இராச்சியம் கிட்டுவதற்கான அறிகுறிகளை எதிர்நோக்கியிருக்கும் யூதர்களின் வேட்கையைக் கண்டித்த இயேசுக் கிறித்துநாதர், மூடநம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட கருத்து எவ்வித பயனையும் கொடுக்காது என்பதைச் சுட்டிக்காட்டினர்.[1] இதைப்போலவே இராச்சியம் இருக்க வேண்டிய இடம் மாற்றப்படுவது 'அருளப்பர் xiv' இல் குறிப்பாகக் காட்டப்பட்டுள்ளது. தெய்விகம் வாய்ந்த அமைதி இந்த உலகைச் சார்ந்ததல்ல என்று அங்கே கூறப்படுகின்றது. 'உள்ளத்தில் யூதனாக இருப்பவன்தான் உண்மையில் யூதனாவான்; சுன்னத்து என்பது இதயத்தில், ஆன்மாவில் செய்யப்படுவதேயல்லாமல் எழுத்துக்களில் செய்யப்படுவதல்ல'[2] என்று கூறப்பட்டபோது, பவுலினால் மத மாற்றம் செய்யப்பட்ட யூதர்கள் திகைப்படைந்திருப்பர்.

தனிமனிதனின் ஆன்மாவினுடைய உள்நிலைப் பண்பு, மூதறிவு, தூய்மை, நற்கதி ஆகியவைகளைப் பற்றிய கருத்துக்களும் அனுபவங்களும் கிரேக்க, உரோமை உலகங்கட்குப் பொதுவானவையாகவே இருந்தன. இவ்வுலகத்தார் அனுபவித்த இத்தகைய ஒற்றுமையும் தொடர்புகளும் கருத்தியல்பானவையாயும் இலட்சியமானவையாயும் இருந்தன. நகர அரசில் அங்கத்துவம் வகிப்பது எத்தகைய சமூக விளைவுகளையும் கொண்டிருக்கவில்லை. கிறித்துவினால் நற்பேறு பெற்றவர்களைக் கொண்ட சமூகமாகவும், குடியியல் அதிகாரத்திற்குக் கீழ்ப்படிந்து, ஆனால்

[1] லூக்கா xvii, 21 [2] உரோமையர் ii, 29

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே வேளையில் அவ்வதிகாரத்திற்கும் அப்பாற்பட்ட ஒன்றிற்குத் தாம் விசுவாசமுடையவர்கள் என்பதை ஏற்று, மதச் சார்பற்ற அமைப்பின்கீழ் (அதே சமயம் தாங்கள் அவ்வுலகைச் சேர்ந்தவர்களல்லர் என்ற எண்ணத்துடன்) திறம்பட ஒழுங்கு செய்யப்பட்ட சிறு சிறு குழுக்களைக் கொண்ட அமைபபாகவும் விளங்கியதன் விளைவாய், திருச்சபை ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்கி, அதற்குள் ஐக்கிய உணர்ச்சியையும் வளர்த்தது. கிறித்து மதத்தின் இப்பெரும் பணி புரட்சிகரமான விளைவுகளை ஏற்படுத்தியது.

கொள்கை, இனம், வர்க்கம் ஆகிய பாகுபாடுகள் யாவற்றையும் கடந்து ஐக்கியம் என்ற புதிய பிணைப்பு ஒன்று உருவாகியதைப் பவுலினுடைய கடிதங்களிலுள்ள பல பந்திகளிற் பயன்படுத்தப்பட்டுள்ள கிரேக்க மொழிப் பதங்கள் தெளிவாகக் காட்டுகின்றன. பிற இனத்தவர்கள் தங்களை அந்நியர்கள் என்றோ புதியவர்கள் என்றோ கருதலாகாது என்றும், மற்றக் கிறித்துவர்களுடன் பொதுக் குடியுரிமைகளிலே தாம் பங்கு கொண்டிருப்பதாகக் கருதி நடந்து கொள்ள வேண்டும் என்றும் 'எபேசியரில்' கேட்கப்பட்டுள்ளனர்[1]. 'பிலிப்பியரிலும்' இதைப் போன்ற பதமொன்று பிரயோகிக்கப்பட்டுள்ளது. 'எமது குடியியல் அமைப்பு பரலோகத்தில் உருவாகின்றது' என்று பவுல் அதிற் குறிப்பிட்டுள்ளார். விசுவாசமுள்ளவர்களின் அமைப்பாக இயங்குவதோடு கிறித்துவக் கோயிலின் இருப்பிடமாகவும் விளங்குவதன் மூலம், கிறித்துவ திருச்சபை இரட்டைக் குடிவாழ் உரிமையைக் கொண்டிருக்கின்றது என்ற அர்த்தத்தைப் பவுலின் சொற்றொடர் உள்ளடக்கியுள்ளது. விவிலிய நூலினது மொழிபெயர்ப்பின் அழகை இவ்வர்த்தங்களிற் காண முடியவில்லை[2]. 'நாங்கள்........................ மோட்சத்திலிருந்து வந்து குடியேறியவர்கள்'[3] என்று அக்கருத்தை டாக்டர் வான்ட் சுருக்கிக் கொடுத்திருப்பது மகிழ்ச்சி தருவதாக விருக்கின்றது. பவுலின் வார்த்தைகளுக்கூடாகப் பார்ப்பதாக டாக்டர் வான்டின் பொழிப்புரை இருக்கின்ற போதிலும், திருச்சபை இந்த உலகில் இயங்கியபோது வெளிக்காட்டிய பண்புகளாகவிருந்த அமைதியான ஊடுருவல், இறுதி மேலாட்சியுரிமை ஆகியவைகளை வற்புறுத்திக் காட்டுவதாக அது அமைந்துள்ளது.

புதிய கோட்பாடு, இராச்சியத்தின் அல்லது சாம்ராச்சியத்தின் குடியியல் அதிகாரத்தை எதிர்ப்பதற்கு முயலாததோடு, உலகை ஆட்சிபுரிந்த அரசர்களின் உரிமைகளை அதிகரிப்பதற்கான எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டது என்பது தெளிவாகத் தெரிகின்றது. புதிய ஏற்பாட்டிலுள்ள புகழ்பெற்ற பகுதிகளை இந்த உரிமைகட்கு ஆதரவாக அடிக்கடி காட்டுவது வழக்கம். 'நீங்கள் மனிதருடைய கட்டளைகள் யாவற்றிற்கும் கர்த்தர் நிமித்தம் கீழ்ப்படியுங்கள்.'[4] 'துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் கீழ்ப்படிந்து அடங்கியிருக்கவும், சகல விதமான

[1] ii, 19 [2] iii, 20
[3] J. W. C. Wand : *The New Testament Letters* (O. U. P. 1946), பக். 133
[4] *Peter* ii, 13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்கிரியைகளைச் செய்யவும் ஆயத்தமாயிருங்கள்.'[1] 'உரோமையர் xiii' இன் ஆரம்ப வாக்கியங்கள் இவைகளிலும் பார்க்கப் புகழ்பெற்றவையாக இருக்கின்றன: 'எந்த மனிதனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக் கடவான்' என்று கூறுகின்றது அப்பகுதி. 'ஏனென்றால் தேவனின் அதிகாரமின்றி வேறோர் அதிகாரமில்லை; உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலேயே நியமிக்கப்பட்டிருக்கின்றன. ஆதலால் அவ்வதிகாரங்களை எதிர்த்து நிற்பவன் தேவனுடைய பாலனத்தை எதிர்த்து நிற்கின்றான்.'[2]

இரண்டாவது திருத்தோற்றம் மிக விரைவில் நடைபெறும் என்ற நம்பிக்கையிலே தன்னையும் விசுவாசிகளையும் தயார் செய்யும் பணியில் ஆரம்ப திருச்சபை தனது கவனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தமையால், இகலோக அதிகாரத்திற்குக் கீழ்ப்படிந்து நடக்க இசைந்தது எனச் சிலவேளைகளில் வாதிக்கப்படுகிறது. இரண்டாவது திருத்தோற்றத்தின் விளைவாக, மதச் சார்பற்ற அமைப்பு எந்த நேரத்திலும் ஒதுக்கப்படலாம் என்ற நம்பிக்கையின் அடிப்படையிற் பிறந்த அசட்டை செய்யும் மனப்பான்மையே அதற்குக் காரணம் என்று நம்ப இடமுண்டு. மதச்சார்பற்ற அமைப்பிற்குப் பதிலாக, இவ்வுலகில் வழக்கமாகத் தற்காலிகமாய்ப் பொழுதைக் கழிக்கும் விசுவாசிகளின் நடத்தைகளை முறைப்படுத்தவல்ல தொடர்பான கொள்கையைக் கொண்ட அமைப்பு என்ற நம்பிக்கையே திருச்சபையின் போக்குக்களை நிர்ணயித்தது என்றும் சிலவேளை வாதிக்கப்படுகிறது. இக்கருத்திற்கு எதிராக, இவ்வுலகத்தை ஆட்சிபுரியும் அரசர்கள் பரமபிதாவின் பிரதிநிதியாக அபிடேகம் செய்யப்படுகின்றனர் அல்லது கடவுளாகப் போற்றப்படும் மேலுரிமையைப் பெறுகின்றனர் என்ற யூத, உரோம வழக்கங்களைக் கவனத்திற்கெடுத்தல் வேண்டும். அலக்சாந்தரின் காலத்திற்குப் பின்பு உருவாகிய கிரேக்க இராச்சியங்கள், தங்களின் மத்திய-கிழக்கு குடிமக்களுக்குப் பரிச்சயமானதொன்றை, கடவுளிடமிருந்து கிடைத்த அதிகாரம் என்ற போர்வையைப் போர்த்திக் கொள்ளத் தயங்கவில்லை. தாலமியின் எகிப்தில் இதைக் குறிப்பாகக் கவனிக்க முடிகின்றது. உரோமரின் கருத்துக்களும் யூதர்களின் கருத்துக்களும் ஒன்றையொன்று சந்திக்க நேர்ந்த அலக்சாந்திரியா நகரிற்றான், கிறித்துவுக்கு முந்திய முதலாவது நூற்றாண்டின் அறிவு இலக்கியங்கள் இயற்றப்பட்டன.

"முதிரறிவு" (Wisdom) என்ற ஆதாரமில்லாத புத்தகத்திற்றான் அரசர்கள் கடவுளின் இராச்சியத்திற் பணிபுரியும் பணியாளர்கள் என்றும், அவர்கள் கடவுளின் சட்டத்திற்குக் கீழ்ப்படிந்து கடவுளின் ஆலோசனைகளுக்கிணங்க ஆட்சிபுரிய வேண்டும் என்றும் அறிவுறுத்தப்படுகின்றனர். 'உங்களுக்கு இராச்சியத்தைக் கடவுளே கொடுத்தார்; எல்லா அதிகாரத்தையும் பெற்றிருப்பவரிடமிருந்தே உங்கள் அதிகாரம் பெறப்பட்டது.'[3] இவ்வுலக அதிகாரத்திற்கும் தெய்வத்தின் அதிகாரத்திற்குமிடையேயுள்ள தொடர்பைச் சரியான

[1] *Titus* iii, 1
[2] *The New English Bible* (1961), பக். 273–74
[3] *Wisdom of Solomon* vi, 1–5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணோட்டத்திற் பார்ப்பதற்கு இந்த மேற்கோளை மனத்தில் வைத்திருப்பது நல்லது. இதைப் போலவே இதிலும் பார்க்க அதிகம் பழக்கமான 'உரோமைய ரிலுள்ள' மேற்கோளையும் மனத்திற் பதிய வைத்தல் வேண்டும். அரசன் கடவுளுக்குப் பொறுப்பாக இருப்பது மிகவும் முக்கியமானது. குடிமக்கள் அரசனுக்குக் கீழ்ப்படிவாக நடப்பதிலும் பார்க்க, கடவுளால் அதிகாரத்தில் இருத்தப் பட்ட அரசன் கடவுளுக்குக் கீழ்ப்படிவாக நடப்பது பிற்காலத்தில் மிகவும் முக்கியமானதாகக் கருதப்பட்டது.

திருச்சபையினதும் சாம்ராச்சியத்தினதும் இரட்டை அதிகாரத்திற்கிடையேயுள்ள தொடர்புகள், அவை இரண்டிற்கும் கீழ்ப்படிந்து நடப்பது சம்பந்தமான பிரச்சினைகள் ஆகியவை பற்றிய சிக்கல்கள், கிறித்துவ சகாப்தத்தின் நான்காம், ஐந்தாம் நூற்றுண்டுகளிற்றான் சமூகக் கொள்கையிலும் நடைமுறையிலும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தின. ஆரம்பத்தில், மற்ற மதங்களைப் போன்று கிறித்து மதமும் ஒரு புதிய மதம், என்ற எண்ணத்தில் உரோமை நிர்வாகம் அதைச் சகித்து வந்தது. காலக்கிரமத்தில் ஊழைத்தேய சர்வாதிகாரியாகத் தன்னை மாற்றியதோடு கடவுளின் நிலைக்கும் தன்னை உயர்த்திக் கொண்ட பேரரசனை, விளக்கம் எதையும் கூறுது அது அங்கிகரிக்க மறுத்ததால், கிறித்துவர்கள் துன்புறுத்தப்படலாயினர். திருச்சபை அங்கத்தவர்களின் தொகை அதிகரித்ததோடு அதன் அமைப்பு முறையும் சிக்கலாக மாறியதன் பின்பு, கிறித்துவ மதத்தை அயல் நாட்டிற்குரிய மதம் எனவும் துன்புறுத்தல்களுக்கு இலக்காகிய சிறுபான்மையினரின் மதம் எனவும் கூற முயல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. பரலோக இராச்சியத்திலிருந்து இங்கு வந்து குடியேறியவர்கள் நடைமுறையில் எல்லாவற்றிற்கும் மேலான அதிகாரத்தையுடையவர்களாஞர்கள். கிறித்துவின் திருச்சபைக்காக ஆரம்ப காலத்தில் வாதாடியவர்களுள் தலைசிறந்தவரான ஹிப்போ என்னும் ஊரைச் சேர்ந்த அகுஸ்தீன், வேருேர் அரசியல் உருவகத்தைப் பயன்படுத்துவதன் மூலம், கடவுளின் அதிகாரத்தையும் உரோமர்களின் அதிகாரத்தையும் வேறுபடுத்திக் காட்டுவதுடன் அவைகட்கிடையே நிலவிய தொடர்புகளையும் ஒழுங்குபடுத்த முயன்ருர்.

மத்திய சகாப்தம் முழுவதிலும், கிறித்து சமயச் சீர்திருத்தத்தின் பின்பும் அகுஸ்தீனின் எழுத்துக்களும் கருத்துக்களும் பெரிதளவிற் செல்வாக்குப் பெற்றிருந்தன. எனினும், தாம் வாழ்ந்த காலத்திலே தோன்றிய பிரச்சினைகளை ஹிப்போ என்னும் ஊரினது மேற்றிராணியார் சமாளித்த முறையினையும், விசுவாசமுள்ளவர்களின் சமுதாயத்தைப் பரிசுத்த அகுஸ்தினின் கருத்துக்கள் தொடர்பாகப் பாதித்த முறையினையும் கவனமாக வேறுபடுத்திப் பார்த்தல் வேண்டும். புராதனப் பண்பாட்டில் ஊறித் திளைத்தவரான அகுஸ்தீன், கிறித்துவ கருத்துக்களாற் பெரிதளவு பாதிக்கப்பட்டபோதிலும் பிளேட்டோவின் பரம்பரையைச் சேர்ந்தவராகவே தோற்றமளித்தார். நான்காம் நூற்றுண்டில் வாழ்ந்த அவர், தடை செய்யப்பட்ட ஒரு மதத்தைச் சேர்ந்தவராகவே இருக்கவில்லை. அதற்கு மாருகக் கிறித்துவ மதம் உத்தியோக மதமாகப் பிரகடனம் செய்யப்பட்டிருந்தது. ஆனல், தியோகிளேசியனின் ஆட்சியிலே கிறித்துவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்புறுத்தப்பட்டு ஒரு நூற்றுண்டுக்காலம் முடிவடைவதற்கு முன்பே அவர் வாழ்ந்தார். கிறித்துவ சமுதாயத்தினருக்கும் அவர் வாழ்ந்த காலத்தில் நல்வாழ்வும் நன்மதிப்பும் இருந்து வந்தபோதிலும், புறச் சமயத்தைச் சேர்ந்த நாகரிகமற்றவர் வெளியிலிருந்தும், முரண்பட்ட சமயக் கோட்பாடுகளில் நம்பிக்கை வைத்த பலம் வாய்ந்த குழுவினர் உள்ளேயிருந்தும், கிறித்துவ திருச்சபையின் பாதுகாப்பிற்கு நெடுகிலும் ஆபத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தனர். விசிகொத்துக்களின் தாக்குதல்களுக்கு எதிராக உரோமாபுரி தன்னைப் பாதுகாத்துக்கொள்ள முடியாமைக்கும், குறிப்பாக நாகரிகமற்றவர்கள் 410 ஆம் ஆண்டில் உரோமாபுரி நகரை அழித்தமைக்கும், புதிய மதந்தான் காரணம் என்று கூற முனைந்தவர்கட்கு விடையிறுக்க வேண்டிய தேவை ஏற்பட்டதன் விளைவாகவே அகுஸ்தின் தமது கட்டுரையை (தே சிவிற்றற்றே தெயி—De Civitate Dei) எழுத முற்பட்டார். அவர் வாழ்ந்து வந்த ஊருக்கு அருகிலுள்ள வட ஆபிரிக்கக் கோயிற்பற்றுப் பகுதியில் வாழ்ந்த தொனதிஸ்த முரண்பட்ட சமயக் கோட்பாட்டாளர், திருச்சபையில் அங்கத்துவம் வகிப்பவர்கள் யாவருக்கும் குடியியற் கடமைகளிலிருந்து விடுதலை கொடுக்கப்படுகின்றது என்று சொல்ல வந்தனர். இக்கருத்தை அகுஸ்தின் எதிர்த்தார்.

பதின்மூன்று ஆண்டுக் காலத்தை இத்தகைய பிரச்சினைகளைச் சமாளிப்பதில் அகுஸ்தின் செலவிட்டார். இந்தக் காலத்தில் அவர் எழுதிய புத்தகத்தில் இத்தகைய பிரச்சினைகட்கு விடையிறுக்க முயன்றுரேயல்லாமல், தார்மீக, அரசியற் சிந்தனையாளர்கள் கிளப்பிய பிரச்சினைகளை ஆராய முயலவில்லை. அவர் எழுதிய கட்டுரை (The City of God—கடவுளின் நகரம்), திருச்சபைக்கும் அரசிற்குமிடையேயுள்ள தொடர்புகளைப்பற்றி மட்டுமே ஆராய்வதாகக் கொள்வது அக்கட்டுரையின் பரந்த நோக்கைக் குறைப்பதாகவிருக்கும். அதே நேரத்தில் அகுஸ்தின் வாழ்ந்த காலத்தில் தோன்றுதனவும், சரித்திரத்தின் மத்திய காலப் பகுதியிற் காணப்பட்டனவுமான பிரச்சினைகளுக்கு அக்கட்டுரையில் விடையைக் காண முயல்வது முற்றும் தவறுனது. எனினும், 'இக்கட்டுரையைக் கணக்கிலெடுக்காமல், மத்திய காலத்தை எவராலும் சரிவரப் புரிந்து கொள்ளமுடியாது' என்று சொல்வது முற்றும் உண்மையாகும்.[1]

திருச்சபை அங்கீகரிக்கப்பட்டதன் விளைவாகப் பேரரசின் அமைப்பிலே புகுத்தப்பட்ட இரட்டை நிறுவன அமைப்பை மட்டுமல்லாமல், கிறித்துவ போதனையில் உள்ளடங்கியுள்ள நோக்கங்களின் இரட்டைத்தன்மையையும் அகுஸ்தின் அங்கீகரித்தார். இந்த உலகம் முழுவதற்கும் சிறப்பியல்பாக அமைந்துள்ள இரட்டை நோக்கானது கடவுளுக்கும் அவரின் அன்பு மயமான சட்டத்திற்குமா அல்லது சாத்தானின் புரட்சி செய்யும் சுயநலத்திற்கா மனிதர்களும் தேவதூதர்களும் கீழ்ப்படிவாகவுள்ளனர் என்பதைக் கொண்டு அவர்களை வேறுபடுத்திப் பார்ப்பதாக விருக்கின்றது. எனவே, அகுஸ்தின் மக்களை நான்கு பகுதியினராகத் தொகுதிப் படுத்துகின்றுர். ஆனல் மோட்சநகரை,

[1] J. N. Figgis: *The Political Aspects of S. Augustine's 'City of God'* (London 1920), பக். 1

பூமியிலுள்ள அதன் பிரதிநிதியாகத் தீவிர நடவடிக்கைகளில் ஈடுபடும் திருச் சபையுடனும், அத்திருச்சபையுடன் சில சந்தர்ப்பங்களில் மிக நெருக்கமான உணர்வைக்கொண்டுள்ள குடியியல் அதிகாரத்தையுடைய உலகியல் நகருட னும் சரிநிகராகக் கொள்வது மிகவும் கடினமாகவுள்ளது.

தனது ஆட்சிக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் தனி மனிதர்களை ஐக்கியப்படுத்து வதில் பேரரசின் நிர்வாகம் வகித்த பங்கின் விளைவுக்கும் கிறிஸ்துநாதரில் விசுவாசம் வைத்தவர்கட்கிடையே உருவாகிய ஐக்கியத்தின் விளைவுக்குமிடை யேயுள்ள ஒற்றுமையை அகுஸ்தீன் அறிந்து கொண்டார் என்பதில் ஐயமில்லை. பேரரசும் திருச்சபையும் தங்களின் தனிப்பட்ட பணிகளை ஒத்த முறை யிற்றான் செய்தன என்றும் கூறலாம். ஆனால் அமைப்பு முறையிலே தென்படும் ஒற்றுமையிலும் பார்க்க, அவைகளின் இலட்சியங்களிற் காணப்படும் வேற் றுமையே முக்கியமானதாகத் தெரிகின்றது. நீதிமுறைப்படி நடைபெறாத குடியியல் ஆட்சி கொள்ளைக்காரர்களின் ஆட்சியிலும் பார்க்க எந்தவகை யிலும் சிறந்ததல்ல என்று அகுஸ்தீன் கூறுவதைக் கவனிக்கும்போது, கிறித்துவ மதம் புராதன கருத்துக்களை எவ்வளவு தூரம் திருத்தியிருக்கின்றது என் பதைக் காணமுடியும். அகுஸ்தீன் கையாளும் மொழி சிசரோவினதும் பிளேட் டோவினதும் வார்த்தைகளைப் பிரதிபலிக்கின்ற போதிலும், அவரின் நோக்கம் வேறானதாக இருக்கின்றது. குடியியற் சமூகத்திலே கடவுள் தமது பங்கை வகிக்க வேண்டும் என்றும், விசுவாசிகள் சமாதானமான சூழ்நிலையில் கட வுளைத் தொழுதற்கான சுதந்திரத்தைப் பாதுகாக்காத குயிடியற் சமுதாயம் எதுவும் தனது முறையான இலட்சியத்தைப் பூர்த்தி செய்யாது என்றும் வாதிடுவதே அகுஸ்தீனின் நோக்கமாக இருக்கிறது. அகுஸ்தீன் இத்துடன் நின்றுவிடவில்லை. சிசரோவின் கருத்திற்குக் கண்டனம் தெரிவிக்கும் வகை யில், மதத்தால் ஐக்கியப்படுத்தப்பட்ட கூட்டத்தினரையே மக்கள் என்று முறையாக அழைக்க முடியும் என்றும் வற்புறுத்துகின்றார். எனவே, பிளேட் டோவின் அர்த்தத்தில் என்றாலென்ன சிசரோவின் கருத்தின்படி என்றா லென்ன, குடியியல் அதிகாரம், நீதிமன்றத்திற்கு அல்லது கடவுளின் நீதிக்குக் கீழ்ப்படிவானதே. தனது சொந்த வளத்தையும் திறனையும் கொண்டு உரு வாக்கவோ பின்பற்றவோ முடியாத மத நிறுவன அமைப்பையும் வாழ்க்கை முறையையும் பாதுகாப்பதுவே குடியியல் அதிகாரத்தின் கடமையும் அவ் வதிகாரம் பிரயோகிக்கப்படுவதற்கான பிரதான காரணமும் ஆகும். கிரேக்க சிந்தனையின் அடிப்படையிற் பார்க்கும்போது இது புரட்சிகரமான ஒரு மாற்ற மாகும். கிறித்துவ மதத்தைச் சேராதவராக இருந்தபோதிலும் பேரரசர் அம் மதத்தைப் பாதுகாப்பவராக விளங்க வேண்டுமென்று கூறுவதோடு, நகர அரசு இயற் பொருளாக இருப்பதற்குக் கடவுளின் நகராகத் திகழ வேண்டு மென்றும் வாதிப்பது (இன்ப துன்ப நடுநிலைக் கோட்பாட்டாளராக இலங்கிய மாக்கஸ் ஒளரேலியஸ் இந்த நிலைமையை ஓரளவு புரிந்து கொண்டதாகத் தெரிகின்றது), சோக்கிரட்டீசின் குடியரசிலும் இன்பதுன்ப நடுநிலைக் கோட் பாட்டாளரது சர்வதேச சமுதாயத்திலும் காணப்பட்டதிலும் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுவிதமான தொடர்புகள் மனிதருக்கும் மனிதருக்குமிடையேயும், மனிதருக்கும் கடவுளுக்குமிடையேயும் இருப்பதை எதிர்நோக்குவதாகும். இக லோகத்திலும் பரலோகத்திலுமுள்ள வாழ்க்கையைப் பற்றிய பூரண இலட்சியமொன்றை உள்ளடக்கியதும், இரண்டு நிறுவனங்களைக் கொண்ட சமூக அமைப்பை உடையதுமான புதிய மனவியல் நோக்கை இது தெரிவித்தது.

தமது பரந்த சமுதாயங்களான உலகியல் சமுதாயத்தையும் மோட்சவுலகச் சமுதாயத்தையும் குறிப்பிடுவதற்கு நகர் என்ற பதத்தை அகுஸ்தீன் பயன்படுத்துகிறார். இந்தப் பதம் அவரின் சிந்தனைக்கும் பிளேட்டோவின் இலட்சிய நகருக்கும் ஒருவித தொடர்பை ஏற்படுத்துகின்றது. நகர் பற்றிய ஆரம்பக் கருத்தை, கடவுளையும் தேவதூதர்களையும் சேர்த்துக்கொள்ளக்கூடிய வகையில் அகுஸ்தீன் விரிவுபடுத்துகின்றார். இரண்டு நகர்களும் சரித்திரத்தில் ஏற்படுத்திய இணையான ஆனால் ஒரேமாதிரியாத அமையாத பிரதிபலிப்புக்களைக் குறிப்பிடுவதற்கு, புதிய பதங்களை நாம் கண்டுபிடித்தல் வேண்டும். குடியியல் அதிகாரத்தைக் குறிப்பிடுவதற்கு 'ரெஸ்பப்ளிக்கா' என்ற பதத்தை நாம் பயன்படுத்தினால், புராதன நகரிலிருந்தும் அகுஸ்தீனின் நகரிலிருந்தும் அதை வேறுபடுத்தி உணர்ந்துகொள்ள முடியும். அரிஸ்தோத்தில் கூறியதைப்போன்று, குடியியல் அதிகாரம் தன்னிறைவு கொண்டதாக இல்லாமையும், குடிமக்களின் பற்றுறுதிக்கும் பணிவிற்கும் பாத்திரமான ஒரேயொரு சாதனமாக இல்லாமையுமே அதற்குக் காரணமாகும். அதைப்போலவே, பூவுலகிலுள்ள திருச்சபைக்கு மட்டுமே பிரஜைகள் தங்கள் நம்பிக்கையையும் விசுவாசத்தையும் நல்கவில்லை. இயற்கைக்கும் தெய்விகத்திற்குமிடையே சமூகப் பாகுபாடு ஏதாவது இருப்பதாக அகுஸ்தீன் கருதவில்லை. கடவுளையும் அவரின் படைப்புக்களையும் கொண்ட ஓர் அண்டம் மட்டுமே இருக்கின்றது. பரவுலகில் நடைபெற்ற பாரதூரமான மோதலின் விளைவாக, சாத்தானும் அவனின் ஆதரவாளர்களும் தெய்விக சமுதாயத்திலிருந்து விரட்டியடிக்கப்பட்டனர். இதன் விளைவாக, சாத்தானினதும் அவனின் ஆதரவாளர்களினதும் இடங்களை நிரப்புவதற்காகப் புதிய அபேட்சகர்களைக் கடவுள் சிருட்டித்ததோடு, அவர்கட்குக் தேவையான பயிற்சியை அளிப்பதற்கு இம்மைக்குரிய அமைப்புக்களையும் உருவாக்கினார். இம்மைக்குரிய அமைப்புக்களும் நிறுவனங்களும் இரண்டாந்தரமானவை. கடவுளின் இலட்சியத்தை அடைய உதவுகின்றவையா இல்லையா என்ற அடிப்படையில் அவைகட்கு வரைவிலக்கணம் கூறலாம். எனவே, கடவுளுக்குக் கீழ்ப்படிவாக நடப்பவர்கள் என்றும், பிசாசுக்குக் கீழ்ப்படிவாக நடப்பவர்கள் என்றும் மாந்தரை இருதொகுதியினராக வகுக்கலாம். எனினும், பிசாசுக்குக் கீழ்ப்படிந்து நடப்பவர்களைக் குறிப்பிடுங்கால், உலகியல் நகர் என்ற சொற்றொடரை அகுஸ்தீன் பயன்படுத்துவது சிக்கல் மிகுந்த இந்தப் பாகுபாட்டைத் தெளிவாக்க உதவவில்லை. இரண்டு கீழ்ப்படிவுகளையும் இவ்வுலகிலுள்ள மதவிசுவாசம், குடியியல் விசுவாசம் ஆகியவைகளாகக் கொள்ளலாகாது. வேறொரு கோணத்திலிருந்து பார்க்கும்போது, திருச்சபையும் பேரரசும் கடவுளின் விருப்பத்தின்பேரில் உருவாகிய இரு செயற் கருவிகளே; கடவுளின் இரக்கத்தையும் நீதியையும் உலகிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குக் கொண்டு செல்லும் இருவழிகளே. ஆனால் இந்த இரு நிறுவனங்களினதும் அதிகாரிகள் தாங்கள் உண்மையில் யாருக்குக் கீழ்ப்படிவாக இருக்க வேண் டுமோ அவருக்குத் தங்கள் கீழ்ப்படிதலைக் கொடுப்பதில்லை. நிலையான இலட்சி யத்துடன் தொடர்புபடுத்திப் பார்க்காதுபோனால், இம்மைக்குரிய இந்த இரு நிறுவனங்களும் தீயவழியிலே பயன்படுத்தப்படக்கூடும்.

மனித சமுதாயத்தினதும் இலட்சியங்களினதும் இப்புதிய பாகுபாட்டை, புராதன சமூக, மனவியல் சிந்தனைகளின் அடிப்படையில் விளக்கமுடியாது. கட வுளுக்கும் மனிதனுக்குமிடையேயுள்ள தொடர்புகள் நிர்ணயிக்கப்பட்டதன் விளைவாக, உலகியல் ஒழுங்குகள் சிருட்டிக்கப்பட்டன என்ற கருத்தையும், இந் தக் கூட்டு முயற்சியிலிருந்து வேண்டுமென்றே மனிதன் தனது ஒத்துழைப்பை விலக்கிக் கொள்வதை விளக்குதற்குப் பாவம் என்ற சொல் பயன்படுத்தப்பட் டது என்ற கருத்தையும் கிறித்து மதக் கோட்பாடுகட்கு முன்னோடியாகத் திகழ்ந்த யூத கருத்துக்களிலிருந்து அகுஸ்தின் பெற்றார். பாவத்தின் நேர்வு, பரப்பு, விளைவுகள் ஆகியவை பற்றிய மதிப்பீடுகள் கிறித்துவ நூற்றாண்டு களில் மாறுபட்டு வந்திருக்கின்றன. அகுஸ்தின் மிகவும் தீவிரமான கருத்தைக் கொண்டிருந்தார். குழப்பம் மிகுந்த காலத்தில் அவர் வாழ்ந்ததை அதற்குக் காரணமாகச் சுட்டிக்காட்டலாம். சுயநலம் காரணமாகவும், இம்மை வாழ்விற் காட்டும் அக்கறை காரணமாகவும் பல மக்களின் விருப்பம் தெய்வத்தன்மை வாய்ந்த இலட்சியத்திலிருந்து திசை திருப்பப்பட்டுவிடுகின்றது என்று அவர் கருதினார். மதத்திற்குரிய விசேட பதமொன்றைப் பயன்படுத்துவதானால், அவர்களைத் "தெய்வநெறி தவறியவர்கள்" என்று வர்ணிக்கலாம். அறிவற்றவர் களுக்கு இருப்பதைப்போன்று தெய்வநெறி தவறியோருக்கும் மீட்சியுண்டு. ஆனால் அந்த மீட்சி உயர்குடிப்பிறந்தோராற் கொடுக்கப்படுவதன்று; கடவு ளால் அளிக்கப்படுவது. கடவுளின் கருணையொன்றுதான் பாவிகட்குப் பாவ மன்னிப்பு அளிக்கவல்லது. கிறித்துநாதரின் வாழ்க்கையாலும் மரணத்தா லும் இம்மீட்சிபெறும் சக்தி மக்கள் யாவருக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. பாவம் செய்ததற்காக வருந்தி மன்னிப்புக் கோரியவர்களை மறுபடியும் தெய் வீக சமுதாயத்திற் சேர்த்துக்கொள்வது திருச்சபையின் கடமையேயல்லாது விசேட உரிமையல்ல. திருச்சபையிலே சம்பிரதாயமுறைப்படி அங்கத்துவம் வகிக்காதவர்கள்கூட தெய்வத்தால் தெரிவு செய்யப்படலாம். தெய்வீக சமு தாயத்தின் இரண்டு வெளிப்பாடுகட்குமிடையேயுள்ள பிரதானமான வித்தி யாசத்தை இவற்றில் நாம் காணமுடிகிறது.

மதச் சார்பற்ற ஒழுங்கு என நாம் இப்பொழுது வழங்கும் கருத்துக்கோவைக் குக் கொடுக்கக்கூடிய இரு விளக்கங்களுக்குள்ளும் இத்தகைய வேறுபாட்டைக் காணலாம். கடவுளுக்கு எதிராகப் புரட்சி செய்பவர்களின் கூட்டம் என்ற விரி வான விளக்கத்தின்படி, திருச்சபை உட்பட மனிதரிடையேயுள்ள எல்லாக் குழுக்களையும் சேர்ந்தோரை அது உள்ளடக்குவதாகவிருக்கும். அத்துடன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விளக்கம் காலத்தாலும் இடத்தாலும் கட்டுப்படுத்தப்படமாட்டாது. அகுஸ்தினின் கருத்துப்படி, குழுக்கள் அவற்றின் உறுப்பினர்களின் ஈடுபாடு, இலட்சியம் ஆகியவற்றிற்கு ஏற்பவே உருவாக்கப்படுகின்றன. உலகியற் பற்றுடைய குடிமக்கள் குறைந்த, குறுகிய, தம்மோடு சம்பந்தப்பட்ட இலட்சியங்களேயும் ஈடுபாடுகளேயுமே தேர்ந்தெடுக்கின்றனர். எனினும், திட்பமான இம்மை வாழ்விற்குரிய விளக்கத்தின்படி, குடியியல் அதிகாரத்தையும் நிர்வாகத்தையும் சாத்தானின் நகருடன் ஒப்பிட முடியாது. ஆனல், கடவுளின் கருணையால் மீட்பு அளிக்கப்பட்ட பாவியைப்போன்று, குடியியல் அதிகாரமும் நிர்வாகமும், அதனிடையேயுள்ள திருச்சபையாற் புனிதமாக்கப்படாமற்போனல், உலகியல் தேவைகளேப் பூர்த்தி செய்வதில் மட்டுமே அது அக்கறை முழுவதையும் செலுத்தியிருக்கும்.

கருத்துக் குழப்பத்திற்கு இப்பாகுபாடு இடமளிக்கக்கூடும். ஆனல், குடியியல் அதிகாரிகட்கும் திருச்சபைக்குமிடையே இருந்திருக்கவேண்டிய தொடர்பைத் தெளிவாகக் காட்டுவதற்கு இந்தப் பாகுபாடு பயன்படும். மிகக் கூடுதலாகக் கூறுவதாயின், குடியியல் அதிகாரிகள் இரண்டாந் தர இடத்தை வகிக்க வேண்டுமென்று எதிர்பார்க்கப்பட்டனர். இதைக் கிரேக்க நகர்களே ஆட்சி புரிந்த அரசர்கள் அனுபவித்த தார்மீக, ஆத்மீக, ஆதிக்க உரிமைகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதாலே தெளிவாகும். மிகவும் குறைவாகக் கூறுவதாயின், குடியியல் அதிகாரிகளேக் கொள்ளேக் கூட்டத்தினர் என வர்ணிப்பதே அவர்கட்குச் சலுகை காட்டுவதாகும் என்று அகுஸ்தின் கருதுகின்ருர். மதச் சார்பற்ற அதிகாரத்தை சாத்தானின் இராச்சியத்துடன் ஒப்பிடவும் அவர் தயங்க வில்லே.

நல்வாழ்க்கைக்கு ஏற்படக்கூடிய இடர்கள் எனப் பிளேட்டோ அல்லது அரிஸ்தோத்தில் கருதியவைகளேத் தவிர்ந்த வேருெரு புதிய தடையை அகுஸ்தின் இனம் கண்டு கொள்கின்ருர். இந்தத் தடைகளே இவ்வுலகிலேயே அகற்றிவிட முடியும் என்று அகுஸ்தின் கருதவில்லே. மாந்தரிடையே நிலவும் இணக்கமின்மையைப் போக்க எதையாவது செய்யமுடியும். ஆனல் எச் சிறு உதவியானலும், கடவுளாற்ருன் அதைச் செய்யமுடியுமென்று அகுஸ்தின் நம்புகின்ருர். பாவம் என்ற இடர்ப்பாடான நிலேமையிலிருந்து, திருச்சபைமூலம் இணக்கமடைய முயன்ருலுங்கூட, தெய்வத்தின் உதவியைப் பெறமுடியாத எவரும் ஈடேறமுடியாது என்றும் அவர் கருதுகின்ருர். அன்றியும், கடவுளுடைய கருணையின் விளேவாகப் பாவத்திலிருந்து விடுதலேபெறும் அனுபவம் இவ்வுலகிலுள்ளவர்கட்கு ஏற்படுவது அடுத்த உலகில் கிடைக்கவிருக்கும் புகழின் அறிகுறியாகவே இருக்கின்றது; மோட்ச இராச்சியத்தை நிரந்தரமாகத் திரும்பவும் கட்டுவதற்குத் தேவையான தெய்வீக திட்டத்தைச் செயற்படுத்தும் முயற்சி என்ற முறையில் அதில் நம்பிக்கை வைத்தல் வேண்டும். அகுஸ்தினின் கருத்துப்படி மக்கள் இம்மை வாழ்க்கையில் நம்பிக்கை வைத்தலாகாது; மறுமை வாழ்க்கைக்காகவே வாழ்தல் வேண்டும். இந்த உலகிலே தங்கி இருக்கும் சொற்பகாலத்தில் இன்பத்தைத் தேடி அலேயாது துன்பத்தை அனுபவித்து வந்த போதிலும் (ஏன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தத் துன்பங் காரணமாக என்றும் கூறலாம்) தமது வாழ்க்கையை நெறி முறையில் நடத்துபவர்கள், அடுத்த உலகிலே கடவுளின் அன்பைப் பூரணமாகப் பெறுவார்கள். பாவிகட்குப் பாவ விமோசனம் பெற்றுக் கொடுப்பதற்காகவே இயேசுக் கிறித்துநாதர் மரித்தார். கடவுளின் நகர் என்ற சொற்றொடர், ஓர் அர்த்தத்திற் பார்க்கும்போது, தவறானதாகத் தோன்றுகின்றது. கிரேக்க அர்த் தத்தில், தற்செயலாகவே, இது அரசியல்பற்றி ஆராய்கின்றது. இதனுடைய கிறித்துவப் பின்னணியும், பழைய ஏற்பாட்டின் சிந்தனைப் பாரம்பரியங்களை இது பின்பற்றியிருப்பதும் மதவிளக்கத்திற்குரிய தன்மையை அதற்குக் கொடுத்துவிடுகின்றது. மனிதனைப் பொறுத்தவரையில், கடவுள் நடந்துகொள் ளும் முறைகள் நியாயமானவைகளே என வாதிடும் கருத்தாக அது மாற்றம் பெற்றுவிடுகின்றது.

இம்மையின் வளர்ச்சியினுடைய விளைவுப் பொருள்களாகவுள்ள அரசாங்கம், சொத்து (புராதன உலகிற் பொதுவாகக் காணப்பட்ட அடிமைத் தனத்தை யும் அகுஸ்தீன் இதனுடன் சேர்ப்பார்) ஆகிய மனிதனுடைய மிகச் சிறப் பியல்புடைய சமுதாய நிறுவனங்கள், பாவ விருப்பத்தின் விளைவுகளாகவும் தன்னலத்தின் தோற்றப்பாடுகளாகவும் இருப்பதனால் அடிப்படையிலேயே குறைபாடுள்ளவையாக இருக்கின்றன. எல்லா உலகையும் உள்ளடக்கியதும் எங்கும் நிறைந்ததுமான தெய்வத் தன்மைவாய்ந்த ஒழுங்கிலிருந்து எவருமே தப்பமுடியாது. அதற்கு இசைந்து நடந்தாலும், அதை மீறி நடக்க முற்பட்டா லும், மனிதன் அந்த ஒழுங்கை விட்டு விலகிச் சென்றுவிடமுடியாது. பாவியாக இருக்கும்போது அவனின் விருப்பங்களைக் கட்டுப்படுத்துவதோடு ஒழுங்கு படுத்தவும் உதவுகின்ற ஒரு தீர்ப்பாக மனிதன் தெய்விக ஒழுங்கைக் கருதிக் கொள்கிறான். இத்தெய்விக ஒழுங்கிற்குக் கீழ்ப்படிந்து ஒத்துழைப்புடன் நடந்துகொள்ளும்போது, தனது விருப்பங்களைப் பூர்த்திசெய்ய உதவும் அமை தியாகவும் இணக்கமாகவும் மனிதன் இவ்வொழுங்கை உணர்ந்து கொள்கின் றான். தெய்விக ஒழுங்கில் இவ்வகையாகத் தங்கியிருக்கின்ற காரணத்தினால் மனி தனின் நிறுவன அமைப்புக்கள், அவை எவ்வளவுதான் பாவமான ஆரம்பத் தைக் கொண்டிருந்தாலும், கடவுளின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யும் உபகர ணங்களாக மாறிவிடுகின்றன. எனவே, குடியியல் அதிகாரிகள் திணிக்கின்ற ஒழுங்குகள், கிறிஸ்துவ மதத்தின் இலட்சிய சமத்துவத்திலும் பார்க்கக் குறை வானவையாக இருக்கின்றபோதிலும், சமத்துவமின்மையின் விளைவுகள் சமு தாயத்தையே முற்றாக உருக்குலைத்துவிடாதவாறு பாதுகாத்துக்கொள்கின்றன. ஆதிகாலக் கிறித்துவ சமதர்மத்தினதும், பிளேட்டோவின் பாதுகாவலர் வகுப் பினரினதும் தாரதாரங்களின் அடிப்படையிற் பார்க்கும்போது குறைபாடுகளைக் கொண்டதாகக் காட்சியளிக்கும் சொத்துடைமை, தனக்கென எதையாவது தேடிப் பாதுகாத்து வைக்க வேண்டுமென்ற மனிதனின் ஆசையைக் குறைப்ப துடன் கட்டுப்படுத்தவும் செய்கின்றது. அடிமைத்தனம் பாவ விடுதலைக்கு உரிய ஒரு சாதனமாக இருப்பதாகவும் அதே வேளையில் மனிதனின் தீய விருப் பத்தின் வெளிப்பாடாகத் தோற்றமளிப்பதாகவும் அகுஸ்தீன் கூறுவது எமது சிந்தையைக் கவருவதாக இல்லை. அடிமைத்தனத்தை ஒரு தண்டனையாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டாலும், சமூதாயத்தைச் சேர்ந்த ஒரு தொகுதியினரை மட்டுமே அது பாதிக்கின்றது. அத்துடன், அடிமை வகுப்பைச் சேர்ந்த அங்கத்தவர்கள் ஒவ்வொருவாதும் பாவங்கட்கும் அங்கத்தவர் அனைவரதும் பாவங்கட்கு மிடையே ஏதாவது ஒரு தொடர்பு இருப்பதாகவும் தெரியவில்லை.

இந்த நிறுவனங்களின் குறைகளையும் வசதியீனங்களையும் அந்நிறுவனங் கட்கு உட்பட்டுள்ள மக்கள் பயங்கரமான தண்டனையாகக் கருதி, அவைகளை அனுபவிக்க வேண்டும். குடியியல்நீதியும் தெய்வநீதியும் ஒன்றல்ல. ஆனால், தெய்வ நீதிதான் உலகில் நிலவும் சூழ்நிலைகளுக்கேற்பத் திருத்தப்பட்டு ஒழுங்கு செய்யப்பட்டு, குடியியல் நீதியாக வழங்கப்படுகின்றது. உலகில் நிலவும் சூழ் நிலைகளிலே மிகச் சிறந்த அரசாங்கமாக விளங்கத் தக்கது எது என்பதுபற்றி அரிஸ்தோத்தில் கூறிய விளக்கவுரையை நாம் இங்கே ஒப்பிட்டுப் பார்க்கலாம். குறைகளையுடைய குடியியல் அதிகாரிகளைப் பகுத்தறிவிற்கேற்ற முறைப்படி கண்டிக்கும் வாய்ப்பை, குடியியல் ஆட்சியாளர்கட்குக் கீழ்ப்படிந்து நடப்பதே முறையானது என்று வற்புறுத்தும் கிறித்துவக் கொள்கை குறைத்துவிடுகின் றது. இக் கோட்பாட்டின் தீவிர உருவம் பிற்காலத்தில் வாழ்ந்தவர்களின் சிந்தனையைக் கிளறியது. அகுஸ்தீனின் கருத்துப்படி, குடியியல் அதிகாரிகட் குக் கீழ்ப்படிவதாற் கிடைக்கப்பெறும் நன்மைகள் அவ்வாறு நடப்பதால் ஏற் படும் தீமைகளிலும் பார்க்கப் பலமடங்கு அதிகமானவை. புறச்சமயத்தைச் சேர்ந்தவர்களால் உருவாக்கப்பட்டிருப்பினும், உரோமாபுரியின் நிர்வாக அமைப்பானது சமுதாயத்திற்குச் செய்துள்ள சேவைகளைப்பற்றித் தாம் நன்றாக அறிந்திருந்த காரணத்தினால், மதச் சார்பற்ற அமைதியையும் ஒழுங் கையும் குறைத்து மதிப்பிட அகுஸ்தீன் விரும்பவில்லை. உலகில் ஏற்பட்ட இந்த அமைதியை, தெய்வீக இராச்சியத்தைச் சேர்ந்த பிரசைகள் தங்களின் தெய் வீக இலட்சியங்களை அடைவதற்குப் பயன்படுத்தமுடியும். உண்மையில், இவ் வுலகினூடாகச் செய்யும் பாதுகாப்பான யாத்திரைக்கு ஏற்ற சிறந்த சூழ்நிலை யாக இந்த அமைதியையும் ஒழுங்கையும் அவர்கள் கருதினர்கள். எனவே, என்றுமுள்ள அரசியலமைப்பு 'இந்த உலகிலுள்ள உலகியல் அமைதிக்கு மதிப் பளித்து அதைப் பின்பற்றுகின்றது; மனச்சாட்சிக்குப் பங்கம் விளைவிக்காத முறையிலும் மனச்சாட்சிக்கு ஏற்றவகையிலும், நேர்மையான தார்மீக முறைக்கு ஒத்த வகையில் மனிதன் நிலையான அமைதியை அடைவதற்கு அந்த அமைதியைப் பயன்படுத்தலாம்.'[1]

பாவத்தின் மீது கடவுள் அளிக்குந் தீர்ப்பே மதச் சார்பற்ற அரசாங்கத்தின் பளுவாயிற்று. தீமை என்பது நற்செயலாக ஏற்படுவதோ அறியாமையின் விளை வாக உருவாகியதோ அன்று. மனிதனின் விருப்பத்தில் ஏற்படும் குறைபாட் டின் விளைவே அது. இக்குறைபாடுகளின் விளைவாக உருவாகிய அதே நிறு வனங்கள் மூலம் தெய்வீக ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் பின்பற்றி ஒழுகப் பயில்வதனுலேயே தீமைகளை அகற்றவோ திருத்தவோ முடியும். இங்கே பிளேட்

[1] *De Civitate Dei*, XIX, xvii (ஹீலியின் மொழிபெயர்ப்பு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டோவினது பாரம்பரியத்தின் இடத்தை யூதர்களின் மாபுமுறைகள் பிடித்துக் கொண்டதை அவதானிக்கலாம். அறிவியலுக்கேற்ற இலட்சிய உருவங்களிற் கவனஞ் செலுத்திய அறிவொளிவீசும் நியாயத்தின் விளைவாக, கிரேக்க நகரில் இலங்கிய தொழிற்பாட்டு இணக்கத்தை அன்பின் வழிவந்த இணக்கம் என்ற கிறித்துவக் கருத்து மாற்றீடு செய்தது.

நிறைவுடைமையை அடையும் முயற்சிக்கு மனித மனத்தை அல்லது ஆளுமையை இட்டுச் செல்லும் பொறுப்பை உடையதும் மனிதன் அனுபவிக்கும் இணக்கமின்மைக்கு மூல கர்த்தாவாக இருப்பதும் அவனுடைய விருப்பமேயன்றி அறிவல்ல என்று சொல்வது யூத, கிறித்துவ சிந்தனையை ஒத்திருக்கின்றது. அகுஸ்தீனைப் போன்று கிறித்துவர்கட்காகக் காப்புரை பேசுபவர்கள் இக் கருத்தைத் தீவிரமாகக் கொண்டிருக்கின்றனர். ஆனால் வேறு சிலர், புராதன மெய்யியலறிவு இக்கருத்தைத் திருத்தியமைப்பதற்கு ஓரளவு இடமளித்திருக்கின்றனர். விருப்பங்கள் பூர்த்தி செய்யப்படும் நிலையிலேயே அமைதி ஏற்படும் என்று அகுஸ்தீன் கருதுகின்றார். குறைகளற்ற தெய்வ-மனித அன்புத் தொடர்பு முறையின்கீழ் மட்டுமே ஆசைகள் முழுவதும் பூர்த்தி செய்யப்படும் நிலை தோன்றும். ஆனல், ஆன்மா அதன் உண்மையான இலட்சியத்தை அடையவிடாது தடுப்பதற்கு முயலும் எண்ணற்ற பந்தங்கள் உள்ளன. அவை, தற்காலிகமான குறைபாடுகள் மலிந்த, ஓரளவு மட்டுமே திருப்தியை அளிக்கும் அனுபவங்களை ஆன்மாவிற்குக் கொடுக்கின்றன. வேறுபட்ட இந்த நோக்கங்களுக்கிடையே இடம்பெறும் வேறோர் அம்சமும் உண்டு. நாணயத்தின் மறுபக்கம் என்று கூறக் கூடிய வகையில் உடன்நிகழும் அந்த அம்சத்தைக் குறிப்பிடுவதற்கு ஒழுங்கு என்ற பதத்தை அகுஸ்தீன் பயன்படுத்துகின்றார். தவறான வழியிற் செல்லும் இச்சைகளின்மீது தெய்வத்தின் கட்டுப்பாட்டினதும் தீர்ப்பினதும் விளைவாகச் சுமத்தப்படும் அமைதியே ஒழுங்கு எனப்படும். 'எழுதிச் செல்லும் விதியின் கை' தொழிற்படும் களமாகவுள்ள சரித்திரமானது, அடுத்தடுத்து நடைபெற்ற சம்பவங்களிலே தெய்வ நீதியை வெளிக்காட்டுமுகமாகத் தோன்றிய முக்கியமான அம்சங்களின் கோவையாகும். ஆக்கிரமிப்பின் விளைவாகச் சுமத்தப்பட்ட அமைதியை இதற்கு உதாரணமாக அகுஸ்தீன் கூறுகின்றார்.

எனவே, மனித சமுதாயம் குறைபாடுகளுள்ள நிறுவனங்களின்கீழ் இயங்குவதுடன், அதன் உண்மை இயல்பின் உருத்திரிபு பெற்ற பிம்பமாகவும் இருக்கின்றது. ஆனல், திருச்சபையின் மூலம் எய்தவிருக்கும் மோட்சவுலகின் அறிகுறிகளை அது கொண்டிருக்கின்றது. சமூக நிறுவனங்கள் பற்றிய இந்தக் கிறித்துவ விளக்கவுரையில், பிளேட்டோவின் செல்வாக்கை இலகுவிற் கண்டுகொள்ள முடியும். எனினும், வேற்றுமைகள் மிகவும் ஆழம் வாய்ந்தவையாகக் காணப்படுகின்றன. இலட்சிய சமூக இணக்கத்தை இயற்கையாக அடைவதற்கு எந்த வழியும் வகுக்கப்படவில்லை. மத நிறுவனங்கட்கும் மதச் சார்பற்ற நிறுவனங்கட்குமிடையேயுள்ள வேறுபாடுகள், மூன்று வகுப்பு முறைமையிலுள்ள தொழிற் பாகுபாட்டையோ, மெய்யறிவு பெற்றவர்கட்கும் அவர்களிலே தங்கியிருப்பவர்கட்குமிடையேயுள்ள மனவியல் வேறுபாட்டையோ ஒத்திருப்பதாகத் தெரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை. நிறைவும் இணக்கமும், ஒரு தரத்தை ஏற்படுத்துவதோடு எதிர்பார்ப்பு பற்றிய ஒரு நிலையையும் உணர்த்துவதைத் தவிர, இம்மைக்குரிய ஒழுங்கில் நிரந்தர இடத்தை வகிக்கவில்லை. திருச்சபை நிர்வாகமும் குடியியல் நிர்வாகமும் பரவுலக அமைதியைப் பெறுதற்குரிய மேலதிக சாதனங்களாகும். ஆயின் அவ்வமைதியைத் தனித்தோ அல்லது சேர்த்தோ இவைகளின் அதிகாரத்தினுட் கொண்டுவர முடியாது. திருச்சபையில் அங்கத்துவம் வகிக்கும் வாய்ப்பு குறிப்பிட்ட ஒரு சிலருக்கு மட்டும் அளிக்கப்படவில்லை. இதற்கு ஒப்ப, குடியியற் சமுதாயம் அதைப் பொறுத்தவரையிற் சிறந்ததாக இருந்தாலும், கடவுளின் கண்களுக்கு நிறைவற்றதாகத் தோற்றமளிக்கின்றது என்பதை அகுஸ்தீன் தெளிவுபடுத்துகின்றார். எய்தக்கூடிய பரவுலக அமைதியிலும் ஒழுங்கிலும் பார்க்கக் குறைந்த அளவுடைய நீதியையும் அமைதியையுமே குடியியற் சமுதாயம் அடைய முடியுமென்பதே அதற்குக் காரணம். பூவுலகிலுள்ள நீதியின் அதிகாரத்தையும் செல்லுபடியாகக் கூடிய தன்மையையும் தெய்வ நீதியின் அடிப்படையிலேயே நிர்ணயிக்கவேண்டும். பரவுலகத்துடன் ஒப்பிட்டுப் பார்ப்பதிற்றான் மதச் சார்பற்ற சமூகமும் அதனுடைய ஐக்கியமும் தங்கியிருக்கின்றன. 'நீதி இல்லாவிட்டால் சட்டத்திற்குக்கீழ்ப்படிந்து ஒழுக இணங்கும் சமூகம் இருக்கமாட்டாது. சமூகம் இல்லையேல் மக்களில்லை. மக்கள் இல்லையேல் அரசில் உரிமையுள்ள வகுப்பினர் இருக்கமாட்டார்கள்; குழப்ப நிலையிலுள்ள சனக்கூட்டம்தான் இருக்கும்.'[1]

கிறித்துமதம் ஏற்றுக்கொண்டுள்ள இக்கிரேக்க கருத்தின்படி, இவ்வுலகிலுள்ள நீதி தெய்வ நீதியுடன் ஒப்பிடும்போது குறைகளையுடையதாகக் காணப்படுகிறது. ஆனால் இவ்வுலகிற் காணப்படும் ஒற்றுமையையும் இணக்கத்தையும் சுட்டிக்காட்ட அமைதி என்ற கருத்தை அகுஸ்தீன் பயன்படுத்துகின்றார். அமைதி என்ற இந்தக் கருத்து பிளேட்டோவின் சமூகக் கடமைகளை அடிப்படையாகக் கொள்ளவில்லை. அதற்குப் பதிலாக, அன்பு என்ற புதிய கிறித்துவக் கருத்தின் பண்பாக அல்லது நிபந்தனையாக அமைதி என்ற கருத்து இருக்கின்றது. அமைதி என்பது சமூகக் கருதுகோளாகவே இருக்கிறது. ஒவ்வொரு மனிதனும் தானாகவே முன்வந்து தனது தீர்மானத்தாலும் நடவடிக்கையாலும் தனது சூழலுடனும் மற்ற மனிதர்களுடனும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்கின்றான் என அகுஸ்தீன் கருதுவதே அதற்குக் காரணம். நியாயப்படி நடந்து கொள்ளும் ஓர் ஆன்மாவிற்குக் கிட்டும் அமைதி 'ஒருவனின் அறிவுக்கும் நடத்தைக்குமிடையே ஏற்படும் உண்மையான இணக்கமாகும்.' பரிசுத்த பவுலினுடைய கருத்துக்களின் எதிரொலிகளை இந்தப் பந்தியிலும் எம்மால் கேட்கமுடிகின்றது. 'கடவுளின் என்றுமுள்ள சட்டத்தின்படி, விசுவாசத்தின் பேரில் ஒழுங்காகக் கீழ்ப்படிவதன்மூலமே இறக்கும் தன்மைவாய்ந்த மனிதன் இறவாத் தன்மையுடைய கடவுளிடத்து அமைதியைக் காணமுடியும். மனிதனுக்கும் மனிதனுக்குமிடையே ஏற்படும் அமைதி, அவர்கட்கிடையே ஏற்படும் ஒற்றுமையிலே தங்கியிருக்கின்றது. ஒரு குடும்பத்தில் ஏற்படும் அமைதி, அதன் அங்கங்களுள்

[1] *De Civitate Dei*, XIX, xxi

ஒன்று ஒழுங்காக ஆட்சிபுரிவதிலும் மற்றவை ஒழுங்காகக் கீழ்ப்படிந்து நடப்பதிலும் தங்கியிருக்கின்றது. நகரின் அமைதி, ஒழுங்கான அரசாங்கத்திலும் அதன் பிரசைகள் கீழ்ப்படிவாக நடந்து கொள்வதிலும் தங்கியிருக்கின்றது. கடவுளின் நகரில் நிலவும் அமைதி, கடவுளிற் சிறப்பாகவும் ஒழுங்காகவும் இணைந்திருப்பதில், கடவுளின் பயன்தருதலில், தங்கியிருக்கின்றது. சிறந்த முறையில் ஏற்பாடு செய்யப்பட்ட ஒழுங்கிலேயே எல்லாப் பொருள்களினதும் அமைதி தங்கியிருக்கின்றது.'[1]

அமைதி நிலையை அடைய முடியாது இடையூறு செய்யும் தடைகளைப்பற்றி அகுஸ்தின் நன்றாக அறிந்திருந்தார் என்பதை அவரின் பாவ ஒப்புதல்களிலிருந்து எம்மால் அறிந்துகொள்ள முடிகின்றது. கிறித்து மதத்திற்காகக் காப்புரை பேசுபவர்கள் யாவரினுள்ளும் அகுஸ்தின் இத்தடைகளைப்பற்றி அதிகமாகத் தெரிந்து வைத்திருந்தார் என்பது வெளிப்படை. தனக்குள்ளும், ஐந்தாம் நூற்றாண்டின் முற்பகுதியிலே தொல்லைகளுக்குள்ளாகிச் சிதறுண்டு கிடந்த உலகிற்குள்ளும் நிலவிய தகராறு, தீமை, அறியாமை, பாவம் ஆகிய கெடுதல்களை அவர் உணர்ந்திருந்தார். புராதன இலக்கியத்திலும் நல்ல பயிற்சியுள்ளவராதலின் பகுத்தறிவுக்கு ஒவ்வாத நாட்டங்களுக்கும் பகுத்தறிவையுடைய ஆன்மாவிற்குமிடையே நடைபெறும் தகராறுகளே தார்மீக முரண்பாடுகளுக்குக் காரணமாக இருக்கின்றன என்பதை அறிந்திருந்தார். அறிவுக்கும் நடத்தைக்குமிடையேயுள்ள இசைவின்மையின் முக்கியத்துவத்தைப் பரிசுத்த பவுலிடமிருந்து தெரிந்து வைத்திருந்தார். கடவுளின் கருணையால் இவைகளைக் கடந்த நிலையிலுள்ள அமைதியைப் பெறுவதில் ஏற்படும் முரண்பாடுகளை அவர் வரவேற்கின்றார். மிகச் சிறந்த நிலையிலுள்ள சமூகம்கூட மிகவும் நொய்மையானது. அதில் அங்கம் வகிப்பவர்களுட் பெரும்பாலோர் அழிவையே அடைகின்றனர். எனினும், மனிதனுக்கும் கடவுளுக்கும், மனிதனுக்கும் மனிதனுக்குமிடையே இருக்கவேண்டிய சரியான தொடர்புகளின் முதிரா நிலையிலுள்ள அமைப்பைத் திருச்சபையும் சாம்ராச்சியமும், அவை எவ்வளவுதான் குறைபாடுகளையுடையயனவாக இருந்தபோதிலும், குறிக்கின்றன. அன்பின் அடிப்படையில் இந்த இருவகைத் தொடர்புகளைப் பேணிக் காக்கவும் அவை முறிவுறும் சமயங்களில் அவைகளைச் சரிசெய்து பழையநிலைக்குக் கொண்டுவரவும் கடவுள் பாடுபடுகின்றார் என்ற நம்பிக்கையை இத் தொடர்புகள் கொண்டிருக்கின்றன. கடவுளுக்கும் மனிதனுக்குமிடையிலும் மனிதனுக்கும் மனிதனுக்குமிடையிலும் இணக்கத்தை ஏற்படுத்துவது பிளேட்டோவுக்கு மிகவும் பிரியமான ஒரு விடயமாகும். இதனை நீதி என அகுஸ்தின் குறிப்பிட்டார். புனரமைப்புச் செய்யப்பட்ட ஐக்கியத்தை ஒழுங்கு என அவர் குறிப்பிட்டார். அருள்பாலிக்கப்பட்டவர்கள் இந்த ஐக்கியத்தை அனுபவிப்பதை அமைதி எனவும் அகுஸ்தின் குறிப்பிட்டார்.

நட்பை உண்டாக்கும் இப் பணியிலே கடவுளின் ஆணைக்குட்பட்டுக் குடியியல் அதிகாரிகள் குறிப்பிடத்தக்க முக்கிய பங்கை வகிக்க வேண்டியவர்களாவர்.

[1] *De Civitate Dei*, XIX, xiii

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இணக்கத்தை மேம்படுத்துமுகமாக, இதற்கு மாறான நடவடிக்கைகளில் ஈடுபடும் குற்றத்தைச் செய்பவர்களாகவுள்ள குடியியல் அதிகாரிகள், இப் பணிக்கு மாறான காரியங்களைச் செய்வதையாவது நிறுத்தினால், பாவத்தின் மோசமான விளைவுகளைக் குறைக்கும் முயற்சிகளை மேற்கொண்டவர்களாவர். இரண்டு நிறுவனங்கள்பற்றிய கொள்கையும், பிளேட்டோ கோரியதைப்போல், மக்களைச் சரியான வழியில் நடத்திச் செல்லும் பொறுப்பு திருச்சபையையே சார்ந்தது என்ற கருத்தும், குடியியல் அதிகாரிகள் எதிர்மறையான இந்த வகையில் நடந்து கொள்வதற்கு வழிவகுத்தன என்று கூறலாம்.

கிரேக்க நன்னெறிகளான மூதறிவு, வீரம், நீதி, தன்னடக்கம் ஆகியவைகள் இயற்கை மனநிலைகள் எனக் கருதப்பட்டமை கைவிடப்பட்டு, திருச்சபையின் உதவியின்றி பாவிகள் அந்த மனநிலைகளை அடையமுடியாது என்ற கொள்கை தலைதூக்கியது. இந்த மனநிலைகள் ஆன்மாவின் மூன்று நிலைகளான விசுவாசம் நம்பிக்கை, தேவசிநேகம் ஆகிய மத நன்னெறிகட்குக் கீழ்ப்படிய வேண்டியிருந்தன. கடவுளின் கொடைகளான இந்த நன்னெறிகளைப் பெறாதுவிட்டால் இசைவான சமூக நடவடிக்கைகள் மூலம் இம்மைக்குரிய நன்னெறிகளைப் பெற முடியாது. தெய்வத்திலும் விடுபேற்றிலும் நம்பிக்கை வைத்து, தனித்தன்மை வாய்ந்த கிறித்துவ சிநேகத்தின் மூலம் நிறைவேற்றுவதனாலேயே கிரேக்க நன்னெறிகளை அடையவோ பாதுகாக்கவோ, அவற்றால் நன்மைபெறவோ முடியும்.

மோட்ச இராச்சியத்தின் பிரசைகள், அயலான, மதச்சார்பற்ற நகரினூடாக யாத்திரிகர்களைப் போல செல்கின்றனர். பிற்காலத்தில் நடைபெற்ற குழப்பங்களின் அடிப்படையிற் பார்க்கும்போது, அகுஸ்தீனின் வர்ணனை வருவதுரைத்தலைப் போலக் காணப்படுகின்றது. மத்திய காலத்தின் பிற்பகுதியிலே தோன்றிய பிரச்சினைபற்றிய குறிப்புக்களை அவரின் வர்ணனைகளிற் படிக்கும் தவறை நாம் இழைக்காமல் பார்த்துக்கொள்ளுதல் வேண்டும். பலம் வாய்ந்த திருச்சபை சார்ந்த அதிகாரத்தை அகுஸ்தின் ஆதரித்தார் என்று கூறுவதற்கு நாம் எந்தக் காரணத்தையும் காட்டமுடியாது. மற்றவர்களைப்போல், கிறித்துவர்களும் குடியியற் சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து நடத்தல் வேண்டும். ஆனால் அவர்களின் கீழ்ப்படிவு மதச் சார்பற்ற விடயங்களில் மட்டுமே இருக்கும்.

இந்த இரண்டு உலகங்களுக்குமிடையேயுள்ள வேறுபாடுகளைப் பிரித்துக் காட்டி, அவைகளின் கடமைகட்கிடையே ஏற்படும் மோதல்களுக்கும் தகராறுகளுக்கும் காரணம் காட்டுதல், அத்தகராறுகள் ஏற்படும்போது அவைகளைத் தீர்த்துவைப்பது, சரிநுட்பமான சரித்திரச் சூழ்நிலைகளிலே குடியியல், திருச்சபை ஆகியவைகளின் சட்ட வரம்புகளையும் ஆட்சியெல்லைகளையும் வேறுபடுத்திக் காட்டுவது ஆகியவைகளிலும் பார்க்கச் சுலபமானது. இக்கடினமான பிரச்சினைகள் ஏதோ ஒரு வகையில் இன்றுவரையும் எம்மை எதிர்நோக்கியுள்ளன. மதச்சீர்திருத்த இயக்கம் நடைபெற்ற காலத்திலும், பொதுநலவரசுகள் நிறுவப்படும் இக்காலத்திலும் இப் பிரச்சினைகள் புதிய பொலிவுடன் எம்மை எதிர்நோக்குகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியலுக்கு அப்பாற்பட்ட விசுவாசம் பற்றிய இருதலைக்கொள்ளி எறும்பு நிலையை, இரு நகர்களுக்குமிடையேயுள்ள வேறுபாடுகள் பற்றி அகுஸ்தீன் தெரிவித்த கருத்துக்கள் தீவிரமாக்கின. கூட்டு நிறுவனமாகவுள்ள திருச்சபைக்கு விசுவாசமாக இருக்கவேண்டுமா? அல்லது ஒவ்வொருவரும் தமது மனச்சாட்சிக்கு விசுவாசமாகவும் நேர்மையாகவும் இருந்தால் போதுமா? உதாரணமாக, தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் எதிர்ப்பார்வமுள்ள திருச்சபையினருக்கு அடிபணிய வேண்டிய காரணமென்ன? அகுஸ்தினின் கொள்கை இக் கருத்து வேறுபாடுகளுக்குரிய கருவைத் தன்னகத்தே அடக்கியுள்ளது. மதச்சீர்திருத்தத்தின் பின்பு கத்தோலிக்கர்களும் புரட்டஸ்தாந்த கிறித்துவர்களும், அகுஸ்தின் தமது கட்சியையே ஏற்றுக்கொண்டுள்ளார் என்று வாதாடி வந்தனர். சரித்திரத்தின்படி பார்க்கும்போது, கத்தோலிக்க சமூகக் கொள்கையானது மதப் பிரிவுக்கும் மதச் சார்பற்ற பிரிவுக்குமிடையேயுள்ள வேறுபாடுகளைக் காட்டுவதில் அதிக கவனம் செலுத்தியது என்பதும், புரட்டஸ்தாந்துகளின் சமூகக் கொள்கை மனிதனுக்கு வெளியேயுள்ள உலகியல் முழுவதற்கும் மனிதனுக்கு உள்ளேயுள்ள ஆன்மிக, சொந்த முறைமை வாம்பிற்குமிடையேயுள்ள வேறுபாட்டை வெளிக் கொணர்வதில் அதிக கவனத்தைச் செலுத்தியது என்பதும் வெளிப்படை.

திருச்சபை, மோட்ச நகர் என்ற இரு கருத்துக்களையும் ஒன்றின் மீது மற்றது படிந்திருக்கக்கூடியவகையில் உருவாக்கியதற்காக, ஓரளவு குற்றம் அகுஸ்தினையும் சேரத்தான் வேண்டும். பூமியிலுள்ள திருச்சபையைப் பற்றிப் பேசும்போது ஓரளவு அரசியற் பதங்களைப் பயன்படுத்துவது வழக்கமாகிவிட்டது. அரிஸ்தோத்தலின் அரசைப் போன்று சமூகம் பூரணத்துவத்தையும் நிறைவையும் அடைவதற்குத் தேவையான யாவற்றையும் கொண்டுள்ளதும், தன்னிறைவு பெற்றதுமான கூட்டவையென திருச்சபையைக் கருதும் மத்திய காலப் போக்கிற்கு அகுஸ்தீனின் கருத்துக்களும் காரணமாக அமைந்தன என்று சொல்வதில் தவறில்லை. பூவுலகிற்குரிய விடயங்களில் திருச்சபை பெற்றிருந்த அதிகாரத்திற்கெதிராக மதச்சார்பற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமைக்கு இந்தப் போலி உரிமைப் பாராட்டுக்களும் காரணமாக அமைந்திருக்கலாம். ஆனால் அகுஸ்தீனின் சிந்தனைகளில் இந்த அபிவிருத்திக்கான விதைகளை மட்டுமே எம்மாற் காண முடிகின்றது. கற்ற பிரசையாகவும் உரோமைப் பேரரசின் நிர்வாகியாகவும் இருந்த அகுஸ்தினது காலத்திற்கும், பாப்பரசருக்கும் சக்கரவர்த்திக்குமிடையிற் சிக்கலான தகராறுகள் உண்டான மத்திய காலத்திற்குமிடையிலே கிட்டத்தட்ட ஐந்நூறு ஆண்டுக்காலம் காட்டுமிராண்டித்தனமும் ஒழுங்கின்மையும், அழிவுமே ஏற்பட்டன. ஆயின் பவுல், அகுஸ்தீன் ஆகியோரின் போதனைகள், அக்காலத்தில் வாழ்ந்த மக்களுக்கு நல்வழியைக் காட்டின. அப்போதனைகளைப் பின்பற்றி வாழ்ந்ததினால், பிற்காலச் சந்ததியினர் பிளேட்டோவினதும் அரிஸ்தோத்திலினதும் அறிவுச் செல்வங்களைப் போற்றிப் படிக்கக் கூடிய சூழ் நிலையைக் கொண்ட ஒரு சமுதாயத்தை உருவாக்கினர்.

புராதன சாம்ராச்சிய அமைப்பு முறையின் இறுதிக் கட்டமான அகுஸ்தீனின் காலத்திற்கும் மறுமலர்ச்சிக் காலம் என நாம் அழைக்கும் தற்காலத்தின் ஆரம்ப காலத்திற்கும் இடைப்பட்ட நூற்றுக்கணக்கான ஆண்டுகளிலே வாழ்க்கை, சமூ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம் ஆகியவைகள் பற்றிய கிறித்துவக் கருத்துக்கள் பெரிதளவு செல்வாக்குப் பெற்றிருந்தன. வேறுபட்ட இயல்பையுடைய இந்த இரு காலகட்டங்களுக்கு மிடையே இருப்பதனுல் மத்திய காலம் என அழைக்கப்பட்ட இக்காலம், உள்ளத்திற் பதியும் தன்மைவாய்ந்த உரோமைச் சட்டம், நிர்வாகம் ஆகியவற்று டன் தொடர்பு கொண்டிருந்ததோடு, அமைதியாகவோ ஒழுங்காகவோ நடைபெருத சம்பவங்களுக்குக் கொடுக்கப்பட்ட கிறித்துவ விளக்கத்திற்குப் பொருத்தமானதாகவுமிருந்தது. ஆதிகாலத்திலிருந்து காட்டுமிராண்டித்தன மான வலிமையினுலும், தற்காலத்தினின்று முதிரா நிலையிலுள்ள பொருளாதார ஒழுங்கமைப்பாலும் முறைகளாலும் வேறுபட்ட மத்திய காலத்தில் (5 ஆம் நூற்றுண்டு தொடக்கம் 15 ஆம் நூற்றுண்டு வரையுள்ள காலம்) வாழ்ந்த மக்கள், குடியியல் ஆட்சியின் எத்தனங்கள், மக்களின் விருப்பங்கள் யாவற்றையும் பூர்த்தி செய்வதற்குப் போதியனவாக இருக்கமாட்டா என நம்புகின்றவர்களாக, அல்லது அகுஸ்தினைப்போல், நம்பக்கூடியவகையில் கொள்கை மாற்றம் பெறுபவர்களாக, இருந்தனர். புராதனக் கருத்துக்களின்படி, அரசியலுக்கு அப்பாற்பட்ட இந்த உலகத்தைக் கிறித்துவ திருச்சபை பிரதிநிதித்துவம் செய்தது. சாம்ராச்சிய அரசாங்கத்தின் மரபு, கிறித்துவின் திருச்சரீரத்தில் இணைந்திருக்கும் அனுபவம், ஆகிய இரண்டுமே மத்தியகால அரசியற் சரித்திரத்தை அணி செய்யும் இரண்டு முக்கிய கருத்துக்களாக இருந்தன.

அக்காலத்தின் சமூக சிந்தனைபற்றிய கணிப்பிற்குள் சேர்க்கப்பட வேண்டிய கருத்துக்களும், சாம்ராச்சியத்தை கைப்பற்றித் தமதாக்கியதோடு மட்டுமல்லாமல் தற்கால உலகின் நிலையான சமுதாயங்களாகப் படிப்படியாக வளர்ச்சியும் பெற்ற நாகரிகமற்ற மக்களின் வாழ்க்கையில் இடம்பெற்ற சம்பவங்களும் பழக்க வழக்கங்களும் வெவ்வேறுகப் பிரிக்கப்பட்டிருக்கும் அதிசயத்தை இக்காலம் முழுவதிலும் அவதானிக்க முடிகின்றது. "சென்ற காலக் கொள்கைகளைப் பற்றியே அவர்கள் சிந்திப்பதால், தற்கால உண்மைகளை அவர்களால் உணர்ந்துகொள்ள முடியவில்லை."[1] எல்லாக் காலத்திலும் வசிப்பவர்கள் இக்குற்றத்தை ஓரளவு இழைக்கத்தான் செய்வார்கள். அரசாங்க அலுவல்களைச் செய்யப் பயன்படுத்தப்படும் சமூக நிறுவனங்களுக்கும் அவை இயங்கும் முறைகளை விளக்க வழக்கமாக உபயோகிக்கப்படும் கொள்கைகளுக்கும் கருத்துக்களுக்குமிடையே காணப்படும் இடைவெளி மத்திய காலத்தில் மிகப் பெரிதாக இருந்தது.

சிக்கல் மிக்க இவ்விடயத்தைச் சிறிய கட்டுரை மூலம் விளக்கிவிடமுடியாது. ஆனுல், முற்காலத்தினர் கோரிய உரிமைகளுக்கும் வருங்காலத்தினரின் முதிரா நிலையிலுள்ள வடிவமைப்புகட்குமிடையேயுள்ள முரண்பாடுகளைச் சுட்டிக் காட்டுவதற்காக திருச்சபை, சாம்ராச்சியம் என்ற பொதுக் கருத்துக்கள் ஏற்படுத்திய விளைவுகளை முதலில் ஆராய்ந்த பின்னர், தற்கால உலகின் அரசியல் வடிவங்கள் உருவாகுவதற்குக் காரணமாகவிருந்த மத்தியகாலச் சமுதாயத்தினரின்

[1] E. Barker: 'Introductory: Mediaeval Political Thought' in *The Social and Political Ideas of some great Mediaeval Thinkers* (London 1923), p. 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்தப் பழக்க வழக்கங்கள் செல்வாக்குப் பெற்றுவந்த முறையைச் சுட்டிக் காட்டுவோம்.

சில வழிகளிலே கிறித்துவ சமூகச் சிந்தனை அரிஸ்தோத்திலின் சமூகச் சிந்தனையை ஒத்திருக்கின்றது. உலகியல் அதிகாரத்தையும் ஆன்மீக அதிகாரத்தையும் கொண்டிருக்கும் முக்கிய இரு நிறுவனங்களையும், ஒரு கருத்தில், பிளேட்டோவின் குடியரசுக்குரிய கடமைகளின் அடிப்படையில் விளக்க முடியும். இருவகை நிறுவனங்களும் இறுதி இலட்சியங்களின் தன்மையிற் பெரிதளவில் வேறுபடுகின்ற காரணத்தினால், அவைகளை அடைவதற்கு வெவ்வேறான அமைப்புக்கள் இருக்க வேண்டியது அவசியமாகின்றது. எனினும், மனித சமுதாயம் இரு சமூகங்களைக் கொண்டிருக்க வேண்டுமென்றோ, அதிகாரம் முழுவதும் கடவுளிடமிருந்தே வருவதனால் அதிகாரத்தின் பிறப்பிடம் ஒன்றிற்கு மேற்பட்டதாக இருக்க வேண்டுமென்றோ எவரும் கூறவில்லை. இக்கால கட்டத்தைச் சேர்ந்த சமூகக் கொள்கைகளின் கிறித்துவ வேலைத்திட்டம் எப்பொழுதும் தெளிவாகவும் வெளிப்படையாகவும் இருக்கின்றது. ஆனால் அக்கொள்கைகளை விளக்கப் பயன்படுத்தப்படும் சொற்பிரயோகங்களும் வாதங்களும் புராதனச் சொற்களாகவும் வாதங்களாகவுமே இருக்கின்றன.

'தே சிவிற்றாற்றே தெயி' (De Civitate Dei) என்ற புத்தகம் எழுதப்பட்டு எழுநூற்றிற்குமேற்பட்ட ஆண்டுகளுக்குப் பின்பே சமூக சிந்தனைபற்றி ஒழுங்காக ஆராய்வதற்கான அடுத்த முக்கியமான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. சலிஸ்பரியைச் சேர்ந்த ஜோன் என்பவர் 1159 ஆம் ஆண்டிற்றான் 'பொலிகிறாரிகஸ்' (Policraticus) என்ற புத்தகத்தை எழுதினார். பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த சிந்தனையாளரான அவர் கையாண்ட மொழியும் வாதங்களும் கிரேக்க மூலங்களிற் காணப்படுபவையாகவே இருக்கின்றன. அக்காலத்திலுள்ள சாம்ராச்சியம் ஆன்மீக அதிகாரங்களையும் உலகியல் அதிகாரங்களையும் வெவ்வேறாகக் கொண்டிருந்தது என்பது உண்மையே. ஆனால், சமுதாய நலத்தை எய்துவதற்கு அவையிரண்டும் இறுகப் பிணைக்கப்படல் வேண்டும். சமூக ஏணியிற் குறைந்த நிலையிலிருக்கும் குழுவினரின் வேலைகளும் கடமைகளும் பலவகைப்படுத்தப்பட்ட கடமைகளின் தனி முழுமைத் தொகுதியுடன் இசைவு படுத்தப்படல் வேண்டும். இது பிளேட்டோவின் சமுதாயத்தைக் குறிப்பிடத்தக்க வகையில் ஒத்திருக்கும். சேதன உருவகம் என நாம் அழைக்கக் கூடிய உருவகத்தைப் பயன்படுத்தி, மனித சமூகத்தை ஒரு மனிதனின் உடல், உயிர் ஆகியவற்றோடு, சலிஸ்பரியைச் சேர்ந்த ஜோன் ஒப்பிட்டிருக்கின்றார். மத்திய கால எழுத்தாளர் பலர் இந்த உருவகத்தைக் கையாண்டிருப்பதை எம்மாற் காண முடியும்.

வெளிப்படையாகப் பார்க்கும்போது, சேதனக் கொள்கையாகக் காட்சியளிக்கும் இக்கொள்கையைக் கூர்ந்து கவனித்தால், அதற்கு முந்திய காலத்திற்குரிய கிறித்துவக் கருத்துக்களின் செல்வாக்குத் தென்பட ஆரம்பிக்கும். தனி அங்கத்தவர் தம் வாழ்க்கையிற் கடைப்பிடிக்கும் நன்னெறியிலேயே சமூகத்தின் பொது நன்மை தங்கியிருக்கின்றது. இந்த நன்னெறி பிரசைகளின் பெறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேறுகளில் தங்கியிருப்பதிலும் பார்க்கக் கடவுளின் கடாட்சத்திலேயே அதிகம் தங்கியிருக்கின்றது. நன்னெறி தலையெடுக்காமல் தடுப்பது பாவமேயன்றி, அறியாமையன்று. தெய்வீகப் பரிகாரத்தின் மூலமே இத்தடையை அகற்றலாம்.

அடுத்த நூற்றாண்டில் வாழ்ந்த பரிசுத்த தோமஸ் அக்குயினஸின் எழுத்துக்களிலும் புராதன சிந்தனைகள் காணப்படுகின்றன. புராதனச் சிந்தனைகளின் சிரஞ்சீவித் தன்மைக்கு அவருடைய எழுத்துக்கள் மிகச் சிறந்த உதாரணமாகத் திகழ்கின்றன. இந்த வேளையில் அரசியல் இலட்சியங்கள் பற்றிய அரிஸ்தோத்திலின் விளக்கங்களே கிறித்துவச் சிந்தனையின் பெறுமதிகள், கருதுகோள்கள் ஆகியவற்றுடன் பொருந்தச் செய்யப்பட்டன. பரிசுத்த தோமஸ் அவர்கள் மேற்கொண்ட பணி முக்கியமானதாக இருப்பதுடன் சில வழிகளிற் புரட்சிகரமானதாகவும் இருக்கின்றது. அவரின் வாதங்களைப் பின்னால் நாம் மேலும் விரிவாக ஆராய்வோம். அரசியலமைப்பு இயற்கைத் தோற்றப்பாடாக இருப்பதுடன் பொது நன்மையை அடைவதற்கு மிகச் சிறந்த அமைப்பாகவும் திகழ்கின்றது என்ற அரிஸ்தோத்திலின் கருத்தை, பரிசுத்த தோமஸ் ஏற்றுக்கொள்வதாகத் தெரிகின்றது என்பதை இப்பொழுது குறிப்பிடுதல் வேண்டும். அகுஸ்தீன் கூறியதைப்போன்று அரசியல் ஆட்சிக்குக் கீழ்ப்படிவது பாவங்களின் விளைவாக ஏற்பட்டதென முற்றாகச் சொல்லிவிடமுடியாது. அரசியல் ஆட்சிக்குக் கீழ்ப்படிவதற்கு வேறொரு காரணமும் உண்டு. 'வேறுவிதமான கீழ்ப்படிதல் ஒன்றும் உண்டு. அக்கீழ்ப்படிதலின் பிரகாரம், எசமானன் தனக்குக் கீழ்ப்படிவாக நடப்பவர்களை அவர்களின் நன்மைக்காகவும் நல்வாழ்விற்காகவும் ஆட்சிபுரிவான்.'[1] நல்வாழ்க்கை பற்றிய தமது கருத்துக்களைத் தெரிவிக்கும்போது, திருச்சபையைப் பரிசுத்த தோமஸ் மறந்துவிட முடியாது என்பது தெளிவு. குடியியல் அதிகாரத்தாற் சிறப்பான முறையிற் கட்டுப்படுத்தப்படக்கூடிய ஒளிவுமறைவில்லாச் செயல்களை, திருச்சபையின் செல்வாக்கு எல்லையினுள் அமைந்த தியானம், வழிபாடு ஆகியவற்றிலிருந்து பரிசுத்த தோமஸ் வேறுபடுத்தி உணர்த்துகின்றார். இவ்விரண்டு உலகங்களும் மாறுபட்டவை என்ற அகுஸ்தீனின் கருத்திற்கு மாறாக இவைகட்கிடையே காணப்படும் இசைவைப் பரிசுத்த தோமஸ் அக்குயினஸ் அவதானிக்கின்றார். பதின்மூன்றாம் நூற்றாண்டில் தோன்றிய இப்பரிசுத்தர் அரிஸ்தோத்திலின் கருத்துக்களை மாற்றியமைத்தார் என்று சொல்வதிலும் பார்க்க விரிவாக்கினார் என்று சொல்வதே முறையானது. மனித சமூகத்தின் இலட்சியம் நல்வாழ்க்கையாக இருக்க வேண்டும் என்பதைப் பரிசுத்த தோமஸ் ஏற்றுக்கொண்டார். கடவுளை அடைவதே தனிமனிதன் அனுபவிக்கக்கூடிய மிகச் சிறந்த நன்னெறியாகும் என்று பரிசுத்த தோமஸ் கருதினார். மக்கட் கூட்டத்தின் இறுதி இலட்சியம் தனிமனிதனின் இலட்சியத்திலிருந்து எந்த வகையிலும் வேறுபடமுடியாது என்றும் அவர் நம்பினார். 'எனவே, நன்னெறியைப் பிரதிபலிக்கும் நல்வாழ்க்கையை வாழ்வதுமட்டுமே சமூக வாழ்க்கையின் இறுதி இலட்சியமாக இருத்தலாகாது; அதற்குப் பதிலாக நல்வாழ்க்கை மூலம் கடவுளை அடைய முயல்வதே சமூக

[1] *Aquinas : Selected Political Writings* (Oxford, 1948), p. 103

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையின் இறுதி இலட்சியமாக இருத்தல் வேண்டும்.'[1] தெய்வ கடாட்சத்தின் உதவியினாற்றான் அந்த இலட்சியத்தை அடைய முடியும். எனவே, திருச்சபையின் உதவியினாலேயே அரிஸ்தோத்திலின் நகர் தனது இறுதி இலட்சியத்தை எய்த முடியும்.

சொந்த உருவத்தில் அல்லது திறித்துவக் கோள்கைகள் என்ற போர்வையில் தொடர்ந்து பின்பற்றப்பட்டுவந்த புராதனக் கோள்கைகள், தார்மீக ஒழுக்கத்தின் ஒரு பகுதியாகவே அரசியற் கல்வி இருக்கின்றது என்ற கிரேக்கக் கருத்து மங்கி மறைந்துவிடாமற் பாதுகாத்து வந்தன. அத்துடன், குற்றவியலின் ஒரு பகுதியாகவே அரசியற் கல்வியைக் கருதவேண்டும் என்ற அகுஸ்தீனின் தீவிரமான கருத்தையும், கடவுளின் கடமையிலிருந்து தவறுபவர்களைக் கட்டுப்படுத்தும் ஓர் அங்கமாகவே அரசைக் கடவுள் சிருட்டித்தார் என்ற கருத்தையும் ஓரளவு திருத்தியமைப்பதற்கும் இப்புராதனக் கொள்கைகள் உதவி புரிந்தன. பரிசுத்த தோமஸ் அவர்களும் மீண்டும் புதியதோர் உறுதியான தொனியிற் பேசுகின்றார். அரசியல் ஒரு நடைமுறை அறிவியலாகும் என்ற அரிஸ்தோத்திலின் கருத்தை அவர் ஏற்றுக்கொண்டார். அரசியலானது 'நகரை அறிந்து வைத்திருப்பதோடு மட்டுமல்லாமல், அதனை உருவாக்கவுஞ் செய்கின்றது என்பதே அதற்குக் காரணமாகும்.'[2]

சாம்ராச்சியத்தின் அமைப்பானது தொழிற்படும் அரசியல் நிறுவனமாக இருக்கின்றது என்ற நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட அரசியல் தொடர்புகள் பற்றிய புராதனக் கொள்கைகள் காலவெள்ளத்தில் அழிந்து விடாமல் தொடர்ந்தமை மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். புராதன காலத்திற்குப் பிற்பட்ட காலத்தில் உரோமாபுரியைச் சேர்ந்த பிரதேசங்களில் வாழ்ந்தவர்களின் அரசியலமைப்புமுறை சாம்ராச்சிய அரசியலமைப்புமுறையை ஒத்திருக்காத போதிலும், புராதன காலச் சாம்ராச்சிய அமைப்பு முறையாற் கவரப்படவில்லை. அதோடு, காலத்தின் போக்கில் அவர்கள் தமது புதிய அரசியல் ஒழுங்கின் மாதிரிகளை உருவாக்கியபோதும் இறுதியில் தமது அரசியல் எல்லைகளை நிர்ணயித்தபோதும் சாம்ராச்சியம்பற்றிய கருதுகோள்களின் அடிப்படையிலேயே அவைகளை விவரிக்க முயன்றனர். 'அவர்களைப் பொறுத்தவரையில், மத்திய காலத்தைச் சேர்ந்த சாம்ராச்சியம் புராதன காலச் சாம்ராச்சியத்தின் வளர்ச்சியாகவே இருந்தது. புராதன காலச் சாம்ராச்சியங்கள் கொண்டிருந்த அதிகாரத்தை முன்னது கொண்டிருந்ததுடன் அதே அதிகாரங்களையும் செயல்படுத்தியிருத்தல் வேண்டும் என்று அவர்களின் கொள்கைகள் கூறின. ஆனால் நடைமுறையில் அவ்வாறிருக்கவில்லை என்பது தெளிவு.'[3] பதின்மூன்றும் நூற்றாண்டில் வாழ்ந்த வழக்கறிஞர்களின் கொள்கை பற்றியே இந்த மேற்கோள் குறிப்பிடுகின்றது. ஆயினும், மத்திய கால அவதானிகளை எதிர்நோக்கிய பொதுப் பிரச்சினையை இது கூறுவதாக இருக்கின்றது.

[1] *Political Writings*, p. 75 [2] *Political Writings*, p. 197

[3] R. W. and A. J. Carlyle: *A History of Mediaeval Political Theory in the West* (2nd ed, Edinburgh and London 1938), vol. v, pp. 465-66

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குலக சாம்ராச்சியத்தில் அதிகாரமும் வலுவும் சிதறுண்டு போயிருந்த நூற்றுண்டுகளில் உரோமாபுரியின் புகழையும் சாம்ராச்சிய பாரம்பரியத்தையும் பாதுகாப்பதற்கு, உரோமாபுரியிலுள்ள கிறித்துவ மதகுருவின் ஆட்சிக்குட்பட்ட பகுதியின் புகழும் நிர்வாகத்திறனும் பொருளாதார உறுதி நிலையும் பேருதவி புரிந்தன என்பதிற் சந்தேகமில்லை. உரோமாபுரியின் நிலையான ஆட்சியை மேற் குலகப் பிரதேசங்களுக்கு விரிவுபடுத்தப் பிற்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள், முற்றுக அழிக்கப்பட்டுவிடாத சாம்ராச்சியத்திற்குப் புத்துயிர் அளிப்பதற்கு, அல்லது மூன்றுவது ஒட்டோ கூறியதைப் போன்று, அதனைப் புதுப்பிப்பதற்கு, எடுக்கப்பட்ட முயற்சிகள் என்று அவற்றைத் தூண்டி யோர் கருதியது குறிப்பிடத்தக்கது. எட்டாவது நூற்றுண்டில் சாளமேன் மேற் கொண்ட முயற்சி மிகச் சொற்பகாலத்துக்கே வெற்றியளித்த போதிலும், அது மிகவும் முக்கியமானது. அம்முயற்சி புராதன சாம்ராச்சியத்தைக் கருத்திற் கொண்டு திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிகின்றது. தனி மன்னரின் ஆட்சியின் கீழ் ஒழுங்காக இணைக்கப்பட்ட சமூகத்திற்கு அமைதியைக் கொடுக் கும் முயற்சியாகவே கொள்கையளவில் அம் முயற்சி நோக்கப்பட்டது. உரோ மாபுரி சாம்ராச்சியப் பின்னணியில் உருவாக்கப்பட்ட கிறித்துவ இலட்சிய சமூகமாகவே கிறித்துவ சாம்ராச்சியம் இருந்தது. 789 ஆம் ஆண்டில் வெளி யிடப்பட்ட கொள்கை விளக்கத்தின் ஓர் அம்சம் கூறுவதாவது :—'கிறித்துவ மக்கள் யாவருக்கும், மேற்றிராணிமார், மதகுருவினர், பெருமகனுர், மற்றும் பெரியோர் சிறியோர் யாவருக்கும் அமைதி, இணக்கம், ஒருமித்ததன்மை ஆகி யவை கிட்டட்டும். அமைதி கிட்டாவிட்டால் கடவுளைப் பிரியப்படுத்த முடி யாது.'[1] போதனையும் நடைமுறையும் வெவ்வேறுனவை என்பதைச் சாள்ஸ் அறி வார். எனவே அவரின் நோக்கம் தெளிவாகவிருக்கின்றது.

பழைய கால நிலைமையைத் திரும்பவும் கொண்டு வருவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் கொள்கை உலகில் வெற்றியளித்த அளவிற்கு, மத்திய கால ஐரோப் பாவில் நிலவிய குழப்பநிலைமை காரணமாக, நடைமுறையில் வெற்றியளிக்க வில்லை. முந்திய காலத்துடன் ஒப்பிடும்போது, பதினோராம், பன்னிரண்டாம் நூற்றுண்டுகளில் வாழ்க்கை மிகவும் அமைதியாக நடைபெற்றதன் விளைவாக, புராதன அறிவையும் மரபொழுங்குகளையும் ஆராய்ந்து படித்து அவைகட்குப் புத்துயிர் கொடுக்கும் முயற்சிகளை மேற்கொள்ளக் கூடியதாகவிருந்தது. கல்விக் கழகங்களும் ஆராய்ச்சி நிலையங்களும் உருவாக்கப்பட்டன. அரிஸ்தோத்தில் எழு தியதைப்போன்ற முக்கியமான புத்தகங்கள் மீண்டும் கிடைக்கக்கூடியனவாக விருந்தன. எல்லாவற்றிலும் முக்கியமாக, உரோமாபுரிச் சட்டத்தின் புகழ்பெற்ற சட்டத் தொகுப்புக்கள் மீண்டும் ஆராயப்பட்டன. இதன் விளைவாக, சாம்ராச் சிய அதிகாரம் என்ற கருத்தை, சட்ட நிர்வாகம் பற்றிய விவரங்களைக் கொண்டு வலுப்படுத்த முடிந்தது. வேந்தனின் அதிகாரம்பற்றிச் சலிஸ்பரியைச் சேர்ந்த ஜோன் அவர்கள் எழுதியபோது, மத்திய கால மன்னர்களுக்கு ஏற்ற வகையில்

[1] J. M, Wallace-Hadrill என்பவரால் மேற்கோள் காட்டப்பட்டுளது :
*The Barbarian West* 400–1000 (London, 1952), பக். 103–4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபுத்துவ முறையைப்பற்றி ஆராயாமல், சமுதாயத்தினது பொது நலத்தின் பிரதிநிதியாகவே மன்னனைக் கருதலானுர். இக்கருத்துக்கள் புராதன சாம்ராச்சிய மரபு வழக்குக்களின் பிரதிபலிப்பாக அமைந்தனவேயன்றிப் பன்னிரண்டாம் நூற்ருண்டுக்குரிய நடைமுறைகளின் பிரதிபிம்பங்களாக இருக்கவில்லை.

வழக்கத்தின் விளைவாகவே சட்டங்கள் தோன்றின என்ற கருத்தையுடைய சமூகத்திலே சட்டத்தை இயற்றும் அதிகாரத்தையுடைய மன்னர், சட்டத்தை உருவாக்கும் முயற்சிகளின் மையமாகத் திகழ்கின்ருர் என்ற கருத்து உண்மை நிலையை எடுத்துரைக்காமல் இருப்பதில் ஆச்சரியமில்லை. அத்துடன், மத்திய கால அரசர்கள் சிந்தித்த விதத்திற்கும் நடந்துகொண்ட விதத்திற்கும், இந்தக் கருத்திற்கும் எவ்விதத் தொடர்புமே கிடையாது. ஆனல், இந்தக் கருத்து மறைந்துபோன பழைய காலத்து நடைமுறைகளை ஞாபகமூட்டுவதிலும் பார்க்க எதிர்கால அபிவிருத்திகளை அதிகம் சுட்டிக் காட்டுவதாக அமைந்திருந்தது. ஆட்சி செய்ய அழைக்கப்படாதவர்கள், ஆட்சியை நடத்துபவர்களின் ஆணைகட்குக் கீழ்ப்படிந்து நடந்துகொள்வதன்மூலம் நன்னெறிப்படி ஒழுகுபவர்களாகி விடுவார்கள் என்றும், ஒரு முழுப் பொருளுக்கும் அதன் பகுதிகட்குமிடையேயுள்ள தொடர்பையே சமுதாயத்திற்கும் தனிமனிதனுக்குமிடையேயுள்ள தொடர்புகள் ஒத்திருக்கின்றன என்று அரிஸ்தோத்தில் தெரிவித்த கருத்துக்களை, தாம் வாழ்ந்த காலத்தில் அவை பின்பற்றப் படாதவைகளாக இருந்த போதிலும், பரிசுத்த தோமஸ் ஆதரிக்கின்ருர். ஆனல், தெய்விக சட்டத்தின் பிம்பமாக மக்களின் வாழ்க்கையிலே தென்படும் இயற்கைச் சட்டத்திற்கு, மதச் சார்பற்ற எல்லாச் சட்டமும் கீழ்ப்படிந்ததாக வேண்டும் என்ற கருத்தைப் பரிசுத்த தோமஸ் கொண்டிருந்தார்.

ஆனல், பிற்காலச் சிந்தனையாளர்கள், குறிப்பாகப் பூவுலக ஆட்சியில் புதிது புதிதாகத் தோன்றிய கடினமான பல பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கும் முயற்சிகளில் ஈடுபட்ட சட்டவறிஞர்கள், பேரரசனை அல்லது மதச் சார்பற்ற ஆட்சியாளர்களைச் சட்டத்தின் பிறப்பிடமாகக் கருத முனைந்தனர். ஜஸ்டினியனின் 'சட்டத் தொகுப்பு' (Digest) என்ற நூலைக் கற்றதனுலேயே இக்கோட்பாட்டை அவர்கள் தெரிந்து கொண்டனர். ஆட்சிபுரிபவரது அதிகாரத்தின் திட்டமான அளவைக் கணிப்பது மிகவும் சங்கடமானது என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டனர். அதிகாரம் முழுவதும் பொதுமக்களிடமிருந்தே ஆரம்பமாகியது என்ற கருத்திற்கு உரோமைச் சட்டக் கொள்கை இடமளித்தது. இக்கொள்கைப்படி, மன்னர் தனி முடியாட்சிக்குப் பொறுப்பானவர் என்பதிலும் பார்க்க மக்களின் பிரதிநிதியாகவே கொள்ளப்படுகின்ருர். இரத்துச் செய்யமுடியாத வகையில் மன்னரிடம் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றதா அல்லது சமுதாயம் தனது அதிகாரத்தை மன்னரிடம் கொடுத்து வைத்திருக்கின்றதா என்பதைத் தீர்மானிப்பது மிகவும் கடினமானதாக இருக்கின்றது. பிந்திய கொள்கை மத்திய காலத்துக் கோட்பாடுகளுடன் அதிகம் ஒத்துப் போவதாக இருக்கின்றது. மத்தியகாலச் சமூகத்தில் வேருெரு சிக்கலையும் எதிர்நோக்கவேண்டியிருக்கின்றது. அக்காலத்தில் இருந்த பேரரசர்கள் பெரிது பலமற்றவர்களாக அல்லது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகக் குறுகிய ஆட்சிப்பகுதிகளைக் கொண்டிருந்தவர்களாக இருந்தமையால், ஆட்சியை நடத்தும் பொறுப்பு சிற்றரசர்களின் கைகளிலேயே இருந்தது. முழு அதிகாரத்துடன் இக்காலத்தில் ஆட்சிபுரிந்த சிற்றரசர்கள் உரோம சாம்ராச்சிய காலத்திலிருந்த சிற்றரசர்களிலிருந்து வேறுபட்டவர்களாகக் காட்சியளித்தனர்.

அகிலமும் பரந்துள்ள திருச்சபையானது நிர்வாக அமைப்பாகத் தொழிற்பட ஆரம்பித்தமையே இந்த நிலைமை தோன்றுவதற்குப் பெரிதும் காரணமாக அமைந்தது. மத்திய காலத்திலே திருச்சபையின் வலுவும் புகழும் ஓங்கி வளர்ந்தன் விளைவாகவும், சாம்ராச்சியம் சம்பந்தப்பட்ட மட்டில் கிறித்துவர்களின் சமூகத்தில் முக்கிய இடத்தைப் பெற்றுக் கொள்வதற்குத் திருச்சபை பல முயற்சிகளை மேற்கொண்டதன் விளைவாகவுமே நிர்வாக அமைப்பாகத் தொழிற்படும் சந்தர்ப்பம் அதற்குக் கிட்டியது. சாம்ராச்சிய அதிகாரிகட்கும் மத அதிகாரிகட்குமிடையேயுள்ள மிகமோசமான இசைவின்மையை ஓரளவு தணிப்பதற்கு இரு காரணங்கள் உதவின. கொள்கையளவில், இவ்விரண்டு அதிகாரிகளும் தங்கள் அலுவல்களைத் தனித்தனியாக, ஆனால் ஒற்றுமையாக நடத்த முடியும் என்று கருதப்பட்டது. கிறித்துவக் கோட்பாட்டிற்குள்ளே காணப்படும் இரட்டைத் தன்மையே முதலாவது காரணமாகும். திருச்சபைக்கும் உலகத்திற்குமிடையே தொடக்கத்திலிருந்து முரண்பாடிருத்தல், கடவுகளுக்கும் மனிதனுக்கும் விசுவாசமாயிருத்தல் ஆகிய இரட்டைத் தன்மை கிறித்துவ உலகம் முழுவதையுமே பாதித்தது. மற்றக் காரணம், மேற்குப் பிரதேசத்தில் மட்டுமே காணப்படுகின்றது. பைசாந்தியப் பேரரசர்களைப் பொறுத்தவரையில் இப்பிரச்சினை வேறு வகையாக அமைந்திருந்தது. நாகரிகமற்றவர்கள் படையெடுத்து ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்றிய நூற்றுண்டுகளில், சாம்ராச்சிய ஆட்சிமுறை படிப்படியாக அழிந்தொழிந்தது. ஆனால், பாப்பாண்டவரின் செல்வாக்கு அதிகரித்தது. எனினும், கரோலிங்கியன் சாம்ராச்சியம் சிதறுண்டதன் பின்பு தோன்றிய நிச்சயமற்ற சூழ்நிலையின்போது திருச்சபை தனது இராணுவ, பொருளாதார பாதுகாப்பிற்குக் குடியியல் அதிகாரிகளின் தயவை நாடி நிற்கவேண்டி நேரிட்டது.

மேற்குலக சாம்ராச்சியத்தின் உத்தியோக மதமாக கிறித்துவம் ஏற்கப்பட்டதன் பின்பு கொள்கையிலும் தொழிற்பாட்டு முறையிலும் ஒன்றையொன்று எதிர்த்து நின்ற இரண்டு அதிகாரங்களும், இரண்டிற்கும் பொதுவான நலனுக்காகப் பாடுபட ஆரம்பித்தன. இரண்டு அதிகாரங்களினதும் செல்வாக்கு, ஆட்சி யெல்லை, தொடர்புகள் ஆகியவைகளைக் கூறும் பொதுவான கொள்கை ஐந்தாம் நூற்றுண்டு முடிவடையுமுன்பே உருவாக்கப்பட்டுவிட்டது. அந்தக் கொள்கை, பாப்பாண்டவரான முதலாவது கெலாசியனின் பெயராற் கெலாசியன் கொள்கை என்றோ இரு வாள்களின் கோட்பாடு என்றோ அழைக்கப்பட்டது. அக் கொள்கையைச் சுருக்கமாகக் கூறுவதானால், சமமற்ற மேம்பாட்டையுடைய வெவ்வேறான இரண்டு இலட்சியங்களைத் தனிச் சமுதாயமோ அல்லது மக்களின் பொது அரசோ அடைய முயலுகின்றது. அந்த இலட்சியங்களில் ஒன்று தார்மீகத்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யைச் சார்ந்தது. அதைப் பரிசுத்த தோமஸ் அருள் மீட்பு அல்லது **வீடுபேறு** என அழைக்கின்றார். மற்ற இலட்சியம் பூவுலக வாழ்க்கையோடு சம்பந்தப்பட்டது. சில எழுத்தாளர்கள் அந்த இலட்சியத்தைச் சிற்றின்ப வாழ்க்கைக்குரிய இலட்சியம் என்று வர்ணித்தனர். குடியியற் பொதுநலம் என்று அந்த இலட்சியத்தைப் பரிசுத்த தோமஸ் அழைக்கின்றார். எனவே, சமூகத்தை இரண்டு அதிகாரங்கள் ஆட்சிபுரிகின்றன. அவைகள் மதிப்பில் வேறுபடுகின்ற போதிலும், சமமான ஆட்சியெல்லையைக் கொண்டிருப்பதுடன் ஒன்றிற்கொன்று தேவையானவையாகவும் இருக்கின்றன. உலகியல் அதிகாரிகளும் மத அதிகாரிகளும் இயேசுக் கிறித்து நாதரின் மூலமாகக் கடவுளிடமிருந்து தங்கள் அதிகாரத்தைப் பெறுகின்றனர். தங்கள் தங்கள் துறைகளில் இவ்விரண்டு அதிகாரிகளும் தமக்காகவும் தமது கூட்டாளியான மற்ற அதிகாரிக்காகவும் கடவுளின் சார்பாக நீதி என்னும் வாளைப் பிரயோகிப்பர். எனவே, திருச்சபையானது குடிமக்களின் தார்மீக மீட்சிக்காகப் பாடுபடும்போது. அம்முயற்சிக்குப் பதிலாகத் தனது உலகியல் நலன்களைப் பூமியில் ஆட்சி நடத்தும் அதிகாரிகள் பாதுகாக்கவேண்டும் என்று அது எதிர்பார்த்தது.

விசுவாசிகள் முழுப் பேரையும் கொண்ட சமுதாயமாகத் திருச்சபை திகழ்கின்றது என்ற விரிவான அர்த்தத்தில், இந்தக் கிறித்துவப் பொதுநலவரசைப் பற்றி பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த எழுத்தாளர் ஒருவர் எழுதுகின்றார். ஆனால் இரண்டு வாழ்க்கை முறைகளுக்குமிடையேயும், ஆட்சி எல்லைகட்குமிடையேயும் உள்ள வேறுபாடுகளை அவர் அவதானிக்கின்றார். கெலாசியன் கொள்கையைப் பொதுவாக ஆதரித்துப் பரிசுத்த தோமஸ் பேசும் ஆன்மீக அதிகாரிகட்கு உயர்ந்த ஓர் இடத்தை அளிக்கும் அதே சமயத்தில். தனிச்சமுதாயத்திற்குள்ளே வேறுபாடுகள் இருப்பதையும் காண்கின்றார். கிறித்துநாதரின் பிரதிநிதிக்கு மன்னர்கள் கீழ்ப்படிவாக இருக்க வேண்டும் என்று அவர் கூறுகின்றார். "கிறித்து நாதருக்குக் கீழ்ப்படிவாக இருப்பதைப் போல அவரின் பிரதிநிதிக்கும் கீழ்ப்படிவாக இருத்தல்வேண்டும். வாழ்க்கையின் இரண்டாந்தர இலட்சியங்களுடன் சம்பந்தப்பட்டவர்கள், தலைசிறந்த இலட்சியத்துடன் சம்பந்தப்பட்ட அப்பிரதிநிதியின் ஆணைகளுக்குக் கீழ்ப்படிவதுடன், அவரால் வழி நடாத்தப்படவும் வேண்டும்".[1] உலகியல் அலுவல்கள் உட்பட எல்லாத் துறைகளையும் நிர்வகிக்கும் இறுதி அதிகாரம் தமக்கே உண்டு என்று பாப்பரசர்கள் உரிமை கொண்டாடியதை அவர் ஆதரிக்கவில்லை. பொதுநலவரசின் ஆன்மாவான மத குருமார் அவ்வரசின் தலையான அரசர்களிலும் பார்க்க மேம்பட்ட வலுவையும் மதிப்பு நிலையையும் கொண்டிருக்கின்றனர் என்ற கருத்தை, சலிஸ்பரியைச் சேர்ந்த ஜோன் மட்டுமே தெரிவிக்கின்றார். உலகியல் நீதி, மதநீதி என்ற இரு வாள்களையும் கடவுள் திருச்சபைக்கே முதலாவது கொடுத்தார் என்றும், திருச்சபையானது உலகியல் நீதி என்னும் வாளை உலகியல் அதிகாரிகளிடம் திரும்பவும் ஒப்படைத்தது என்றும் ஜோன் கூறுகின்றார்.

[1] *Aquinas : Selected Political Writing*, p. 77

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனின் ஆன்மா, உடல் என்பவைகளின் இரட்டைத் தேவைகளோடு தொடர்புடைய சமூக அதிகாரிகள் தமக்குள் ஒத்துழைக்கின்றனர் என்ற இந்தக் கொள்கையைத்தான், பதினொராம் நூற்றாண்டிற்கும் பதினான்காம் நூற்றாண்டிற்குமிடையில் பேராசை பிடித்த பாப்பரசர்கள் ஒன்றிற்கு மேற்பட்ட தடவைகளில் எதிர்த்துநின்றனர். இறுதியில், இந்த எதிர்ப்புத் தோற்றுவிட்ட போது, இரண்டு வாள்கள் பற்றிய கோட்பாடே பெரும்பாலான கிறித்துவர்களின் கருத்தாகத் தொடர்ந்து இருந்து வந்தது. பரிசுத்த உரோமை சாம்ராச்சியமும், மத்திய காலப் பாப்பரசபீடமும் தம்மிடையே துவங்கிய தகராறுகளின் விளைவாகத் தங்களின் பலத்தை இழந்ததோடு, அடையாளம் கண்டுகொள்ள முடியாத வகையில் உருமாற்றமும் பெற்றன. இதன் விளைவாக, அவைகள் தமது அதிகாரத்தையும் புகழையும் திரும்பவும் பெறமுடியாத நிலைமை ஏற்பட்டது. இந்தத் தகராறுகளுக்கான சந்தர்ப்பங்கள் மத்திய காலத்திற்குச் சிறப்பியல்பாக இருந்தபோதிலும். அவைகளுக்கான காரணங்கள் என்றுமுள்ளவையே. அக்காரணங்களை இன்றும் எம்மாற் காணமுடிகின்றது. மக்களின் நடத்தைகளைக் கட்டுப்படுத்துவதாகக் கூறிக்கொள்வதும், பொருளாதார ஆதாரமாகத் தனக்கெனச் சொத்தை வைத்திருக்கவேண்டிய தேவைவையுடையதும், தனக்குப் பாதுகாப்பைத் தேடவேண்டியதுமான ஆன்மீகச் சமூகமானது, தன்னுடைய பூரண கட்டுப்பாட்டிற்குள் அமையாத அல்லது தன்னுடைய ஆட்சியெல்லையைப் பூரணமாக ஏற்றுக் கொள்ளாத குடியியல் அதிகாரிகள் செய்யும் தீர்மானங்கள், நிர்வாகம் ஆகியவற்றின் மேற் கவிந்து செல்லும் இயல்பைக் கட்டாயம் கொண்டிருக்கும்.

மத்திய காலச் சரித்திரத்தில் நாம் கற்கும் ஏழாம் கிரகரி-ஐந்தாம் ஹென்ரி, நான்காம் இனொசன்ட்-இரண்டாம் பிரெடரிக், எட்டாம் பொனிபேஸ்-பிரான்சின் பிலிப், ஆகிய பாப்பரச மன்னர் சோடிகளுக்கிடையே நடைபெற்ற தகராறுகள் தொடர்பான தகவல்களைப் பற்றி நாம் இங்கு கவலைப்படத் தேவையில்லை. மத்திய காலச் சமுதாயத்தின் நிலப்பிரபுத்துவ அமைப்பு முறை இத்தகராறுகளைத் தூண்டியிருக்கக்கூடும். உயர் பதவியை வகித்த மதகுருமார் யாவரும் நிலப் பிரபுக்களாகவும் திகழ்ந்தனர். மதகுருமாரைத் தவிர்ந்த மற்றவர்கள் கல்வி கற்காத காரணத்தினால், குடியியல் நிர்வாகத்திற்கும் பெரும்பாலும் மதகுருமாரே பொறுப்பாகவிருந்தனர். நிலமே முக்கிய செல்வமாகக் கருதப்பட்ட சமுதாயத்தில், பொருளாதார உறுதித் தன்மையை அடைவதற்கு நிலத்திற்குச் சொந்தக்காரராக இருப்பதே ஒரேயொரு வழியாகவிருந்தது. தகராறுகள் தோன்றுவதற்கு இவைகளே போதிய காரணங்களாகவிருந்தன. தமது சொந்தத் துறையிலேயே மதகுருமாருக்கு இருந்த முறையான அதிகார எல்லைகள் சந்தேகத்திற்குரியவையாகவும் திட்டமாக வரையறை செய்யப்படாதவையாகவும் இருந்தமை, தகராறு மேலும் அதிகரிப்பதற்கு வழிசெய்தது. தார்மீகத் துறையின், ஆன்மீக வாழ்க்கையின் எல்லைகள் யாவை? சமயச் சார்பற்ற வேந்தனை சமயவிலக்குச் செய்தால், அவன்தன் பிரசைகள் அவனிடம் விசுவாசமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருப்பதினின்று மன்னிக்கப்பட்டுவிடுவார்களா? வரிகளைச் செலுத்துவது போன்ற உலகியல் விடயங்களிலே பாப்பரசரின் அதிகாரத்திற்குக் கீழ்ப்படிய மறுப்பது பாவமா?

செயலூக்கமும் பகையுணர்ச்சியும் கொண்ட பாப்பாண்டவர்கள் வாழ்ந்த நிலப் பிரபுத்துவ ஐரோப்பாவில் நிலவிய சூழ்நிலையிலே, சாம்ராச்சியத்தின் பெரு நோக்கம் வெற்றிபெற்று, யாவருக்கும் அமைதியான நிலை அதனாற் கிடைக்கும் என்று எதிர்பார்க்கமுடியாது. ஆனால், அத்தகைய அமைதி நிலைநாட்டப்படல் வேண்டும் என்ற விருப்பம் கொள்கையளவிலே தெரிவிக்கப்பட்டது. அகிலமும் பரந்த பலம்வாய்ந்த உலகியல் அதிகாரத்தை மறுபடியும் நிறுவுவதன்மூலம் இத் தகராறைத் தீர்த்துவைக்கமுடியும் என்ற கருத்தை, தாந்தே பதினான்காம் நூற்றாண்டின் முற்பகுதியில் எழுதிய தமது புத்தகமான 'De Monarchia' இல் (முடியாட்சியில்) தெரிவித்துள்ளார். தாந்தேயின் கனவு நடைமுறைக்கு ஒவ்வாததாயினும், எல்லாக் காலத்திலும் கிறித்துவர்களின் கோரிக்கையாகவிருந்த முழு மொத்தமான அமைதியை மீண்டும் வலியுறுத்துவதாக இருந்தது. மனிதன் தனது முறையான இலட்சியங்களை அடைய முயற்சி எடுப்பதற்கு அமைதி இன்றியமையாதது. 'நாம் அருள் மீட்சிபெற உதவும் பொருள்களுள் மிகவும் முக்கியமானது முழு மொத்தமான அமைதி என்பது வெளிப்படை.'[1]

உலகியல் அதிகாரம் கடவுளிடமிருந்து நேரடியாகப் பெறப்பட்டதேயல்லாமல் திருச்சபையின் மூலமாகப் பெறப்பட்டதல்ல என்ற தாந்தேயின் வாதம் மரபு வழக்குக்கொள்கையை ஆதரிப்பதாக இருக்கின்றது. திருச்சபையின் கைகளில் உலகியல் அதிகாரத்தை ஒப்படைப்பது திருச்சபையின் உண்மையான இயல்பிற்கே பங்கம் விளைவிக்கும் என்றும், இறுதி உலகியலதிகாரம் பேரரசரின் கைகளிலேயே இருத்தல்வேண்டும் என்றும், பாப்பாண்டவர் கூட சபைகளின் அதிகாரத்திற்கும் திருநூல் தொகுதிக்கும் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும் என்றும் தாந்தே வாதிப்பது, ஏற்கனவே தெளிவாகத் தெரிய ஆரம்பித்த வருங் காலச் சம்பவங்களைச் சுட்டிக்காட்டுவதாக இருக்கின்றது.

மத்தியகாலத்தின் பிற்பகுதி முழுவதிலும் உலகியல் அதிகாரங்களுக்கும் ஆன்மீக அதிகாரங்களுக்குமிடையே நடைபெற்ற போராட்டங்கள் ஐரோப்பிய கொள்கை, நிறுவனங்கள் ஆகியவைகளின் பிற்கால வளர்ச்சிக்கு வழிவகுக்கின்றவைகளாக இருக்கின்றபோதிலும், அந்தக் காலத்தில் வாழ்ந்தவர்களின் சிந்தனைகளோடும் நிலையான நம்பிக்கைகளோடும் தொடர்பற்றவையாகக் காணப்படுகின்றன. காலைல்கள், இருவரினதும் கருத்துப்படி, இந்தப் பெரிய பிரச்சினை "மத்திய காலத்தின் நிறுவனங்களும் மற்ற அரசியற் கொள்கைகளும் வளர்ச்சியடைவதற்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ உதவவில்லை...ஆனால்...மனித வாழ்க்கையுடனும் அதன் ஒழுங்கமைப்புடனும் தொடர்புள்ள பொதுத் தத்துவங்களைப் பொறுத்தவரையில், ஆன்மீக வாழ்க்கைக்கும் அதை ஒழுங்குபடுத்தும் நிறுவனத்திற்கும் சுதந்திரம் இருக்கவேண்டும் என்ற இந்தக் கருத்து சரித்திரத்

[1] *De Monarchia*, I, iv

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் மிகவும் முக்கியமான இடத்தை வகிக்கின்றது." திருச்சபை தனது முக்கியத்துவத்தை அளவிற்கு மிஞ்சி வற்புறுத்தியமைக்கு அந்தக் காலத்தில் நிலவிய சூழ்நிலைதான் காரணம் என்று நாம் வாதாடலாம். ஆனால், திருச்சபை நடத்திய போராட்டம், அது பின்பற்றிய வழிமுறைகள் எவ்வளவு புத்திசாதுரியமற்றவையாக இருந்த போதிலும், குடியியல் அதிகாரத்தின் தன்னிச்சையான கட்டுப்பாட்டிலிருந்து தனி மனிதர்களின் தார்மீக வாழ்க்கைக்குச் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தன. கொள்ளைக்காரர்களை நீதியொடு பழக்கியெடுத்தல் என்று இந்தப் பணியை அகுஸ்தீன் வர்ணித்திருப்பார்.

பாப்பரசருக்கும் பேரரசருக்குமிடையே இடைவிடாமல் நடைபெற்ற போராட்டங்கள், அவைகளில் நேரடியாகச் சம்பந்தப்பட்டவர்களின் மனத்திலே தெளிவாகப் பதிந்திருக்கும் என்பதில் எள்ளளவேனும் சந்தேகமில்லை. ஆனால் மத்திய காலத்தின் உடனடிப் பிரச்சினைகளோடு அப்போராட்டங்கள் தொடர்பு கொண்டிராதமைக்குப் பல காரணங்களைக் காட்ட முடியும். ஆனால் அவைகளில் முதலாவதாகவும், மிகவும் முக்கியமானதாகவும், மத்தியகாலக் கொள்கையையும் நடைமுறையையும் இணைக்கும் சக்தியைக் கொண்டதுமாக அமைந்திருந்தது, அக்கால மக்களின் சட்டத்தை மதிக்கும் பண்பாகும். தெய்விகத் தன்மையையும் மனிதத்தன்மையையும் ஒருங்கே கொண்டிருந்த நிறுவனமான சட்டம், அரசின் மற்ற எல்லா அங்கங்களிலும் பார்க்க மதிப்புநிலை, ஆற்றல் எல்லை, யாவற்றையும் உள்ளடக்குந் தன்மை ஆகியவற்றில் மேம்பட்ட இயல்பைக் கொண்டிருந்தது.

முந்திய நூற்றாண்டுகளில் மேற்குலக சாம்ராச்சியமானது நாகரிகமற்ற குலங்கள் வாழும் சிறுசிறு பிரதேசங்களாகப் படிப்படியாகப் பிரிந்து சென்றதன் விளைவாக, ஜெர்மானிய மூலத்தையுடைய ஒழுங்கான குல வழக்கங்கள், நிலைத்து வாழ்ந்த உரோமைச் சமுதாயத்தின் நிலைநாட்டப்பெற்ற சட்ட நடைமுறைகளுடன் இணைந்து விடுவதற்குத் தேவையான அவகாசம் கிடைத்தது. காலத்தால் சிறிதளவு மாற்றமடைந்த போதிலும், இந்த உரோமை அடித்தளம் நாகரிகமற்ற மக்களின் நடைமுறைகளை நிலைநிறுத்துவதற்கும் யாவருக்கும் பொதுவான தாக்குவதற்கும் உதவியது. அத்துடன் முந்திய சாம்ராச்சிய நிர்வாகத்தினதும் திருச்சபையின் மதச்சட்டத்தினதும் புகழிலிருந்தும் செல்வாக்கிலிருந்தும் பெறப்பட்ட என்றுமுள்ள நீதிக்கும் அது கைகொடுத்துதவியது. பத்தாவது நூற்றாண்டு வரையில் நீதி, சமத்துவம் ஆகிய தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டதும் யாவற்றையும் உள்ளடக்கியதுமான அமைப்பாகச் சட்டம் வளர்ச்சிபெற்றது. அத்துடன், இத்தத்துவங்களை அன்றாட வாழ்க்கையில் நிலவிய சூழ்நிலைகட்குப் பிரயோகிப்பதற்கான முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது.

சட்டங்களைப் பிரயோகிப்பதாகிய இந்தச் செய்முறை, சட்டவாக்கம் என்ற சொற்றொடர் குறிப்பிடுவதைப்போன்று, புதிய நிர்வாக முயற்சிகளை மேற்கொள்வதினும் முறையான மரபுகளை அங்கீகரித்துக்கொள்வதாகவே இருந்தது. பழைய

[1] *Mediaeval Political Theory*, vol. v, pp. 451–52

உரோமைச் சட்டத்தின் செல்வாக்கையும் சட்டவமைப்பையும் பாதுகாத்துக் கொண்ட சரித்திர முக்கியத்துவம் பெற்ற மாற்றங்கள், அதே நேரத்தில் அதனுடைய தன்மையை மாற்றியமைத்தன. சட்டங்கள் ஆக்கப்படவில்லை; அவை கண்டுபிடிக்கப்பட்டு விளம்பரம் செய்யப்பட்டன. ஆள்பவர்களும் ஆளப்படுவர்களும் இந்தச் சட்டங்களை ஆக்குவதிற் பங்குகொள்ளாத போதிலும், இவைகட்குக் கீழ்ப்படிவாக நடந்து இவற்றைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடல் வேண்டும் என்பதில் எந்தவித சந்தேகமுமே இருக்கவில்லை. பிரக்டனின் புகழ்பெற்ற செற்றொடரான 'சட்டம் மன்னனை ஆக்குவிக்கின்றது' (Lex facit regem) என்பது அந்தக் காலத்திற் பின்பற்றப்பட்ட பொது நம்பிக்கையைப் பிரதிபலிக்கின்றது. மன்னர் சட்டத்தை இயற்றவில்லை. அதைப்போலவே வேறு எவரும் அதை இயற்றவில்லை. சமுதாயம் முழுவதற்கும் பொதுவான சிறப்பியல்பாக அது இருந்தது. தமக்குக் கீழ்ப்படிவாக நடந்துகொள்ளும் ஒவ்வொருவரையும் விளங்கிக்கொள்ளத்தக்க ஒரு முழுமையாக்கும் சக்தியையுடைய கருத்துக்களுள் ஒன்றாகச் சட்டம் என்ற கருத்தும் இருந்தது. சட்டத்திற்குக் கீழ்ப்படிந்து நடக்க மறுக்கின்ற அல்லது சட்டத்தால் அங்கீகரிக்கப்படாத மன்னர்கள் மத்தியகாலச் சமுதாயத்தில் எந்தவிதமான மதிப்புநிலையையும் பெறவில்லை. மன்னருக்கெதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க முடியாது என்ற அர்த்தத்தில், அவர் சட்டத்தின் கட்டுப்பாட்டிற்குள் அமையாதவர் என்று பரிசுத்த தோமஸ் கருதுகின்றார். ஆனால் இந்தக் கருத்து கொள்கையளவில் மட்டுந்தான் இருக்கமுடியும். மன்னர்கள் தமது விருப்பப்படி சட்டங்களை மாற்ற முடியுமென்றோ சட்டத்தைப் புறக்கணித்து நடக்கமுடியுமென்றோ இக்கருத்துச் சொல்லவில்லை. அவ்வாறு செய்வதற்கான தார்மீக சுதந்திரம் மன்னருக்குக் கூடக் கிடையாது.

குடியியல் அலுவல்களைக் கவனிப்பதற்காகத் தனியான மத்திய அதிகாரம் ஒன்று நிறுவப்படல் வேண்டும் என்ற உரோமை சாம்ராச்சிய மரபுக்கு, பூமியில் இதைப்போன்ற வேறு அதிகாரம் ஒன்றும் இருத்தல் வேண்டுமென்ற உயர்ந்த கருத்தைக் கிறித்துவக் கோட்பாடு வழங்கியிருக்கின்றது. எதிர்ப்பார்வமுள்ள திருச்சபை இவ்வுலகில் இயங்கி வந்தமையினால் இக்கருத்து உருவத்தையும் முக்கியத்துவத்தையும் பெற்றது. இன்ப துன்ப நடுநிலையாளரின் நகர அரசு என்ற கருத்தில் இவ்வியல்புகளைக் காணமுடியாது. 'மனிதனின் அரசாங்கம் (தனது அதிகாரத்தோடு) தெய்வத்தின் அரசாங்கத்திடமிருந்து வருகின்றது. எனவே, அது கடவுளின் அரசாங்கத்தைப் பின்பற்றுதல் வேண்டும்'[1] என்று எழுதுகின்றார் பரிசுத்த தோமஸ். புதிய ஐரோப்பிய மக்களுக்குத் திருச்சபை கற்றுக்கொடுத்த பாடத்தைப் பரிசுத்த தோமஸ் இவ்வார்த்தைகளில் அழகாகச் சுருக்கிக் கொடுக்கின்றார்.

புதிய செல்வாக்கைப் பெற்ற அரிஸ்தோத்திலின் கருத்துக்கள், கிறித்துவ நூற்றாண்டுகளுக்குரிய அகுஸ்தீனின் பாரம்பரிய சமூகக் கருத்துக்களுடன் மோதிய பதின்மூன்றும் நூற்றாண்டிற்றான் பரிசுத்த தோமஸ் வாழ்ந்தார். நிலையாகவும்

1 *Aquinas* : *Selected Political Writings*, p. 155

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியாகவும், வாழ்ந்த சமூகத்தின் புதிய ஆதார சக்தியை அவர் பிரதிபலித்தார். அரிஸ்தோத்திலின் நடுநிலைவாதத்தைப் பரிசுத்த தோமஸ் ஆதரித்திருப்பது, இம்மை வாழ்க்கைக்கும் மறுமை வாழ்க்கைக்குமிடையே பெரும் வேறுபாடு இருக்கின்றது என்ற அகுஸ்தினின் கருத்தைத் திருத்துவதற்குப் பெரும் உதவி செய்தது. ஆனால் அகுஸ்தினின் கருத்து முற்றாக மாற்றீடு செய்யப்படவில்லை என்பதை இங்கே குறிப்பிடுதல் வேண்டும். மனிதன் செய்யும் மோட்ச யாத்திரைக்கு இயற்கை வாழ்வும் மதச் சார்பற்ற அரசியலும் அத்தியாவசியமான கட்டங்களாக இருக்கின்றன என்பதைப் பரிசுத்த தோமஸ் ஏற்றுக்கொண்டார். மோட்ச உலகை அடைவதற்கு இவை தடையாக இருப்பதாக அவர் கருதவில்லை. இந்த இரு வாழ்க்கை முறைகளும் இணைந்து வெற்றிகரமாக நடக்கின்றனவேயல்லாமல் வேறுபடும் இயல்பைக் கொண்டிருப்பதில்லை. இயற்கை வாழ்க்கையைக் கடவுளின் கருணை பூரணமாக்குகின்றதேயல்லாமல் அழித்துவிட முயல்வதில்லை. நம்பிக்கை என்பது நியாயத்தின் விரோதியன்று; நியாயத்தை உறுதிப்படுத்துவதாகவேயுள்ளது. நன்னெறியைக் கடைப்பிடிக்கும் வாழ்க்கை, பேரின்பமயமான வாழ்க்கைக்கான பயிற்சியைக் கொடுக்கின்றது.

இரு வாள்கள் என்ற கோட்பாட்டினால் ஏற்பட்ட சமநிலையை நிலைகுலையச் செய்யும் தற்கால முயற்சிகளைப்போன்று, தோமஸ் பின்பற்றிய அரிஸ்தோத்திலின் கொள்கைகள் மத்தியகாலச் சிந்தனையைப் பாதித்ததிலும் பார்க்கப் பிற்கால வளர்ச்சியைப் பெருமளவு பாதித்தன. பகுத்தறிவின்படி வாழ்தல் என்ற புராதனக் கொள்கையைப் புனருத்தாரணம் செய்யும் முதற் கட்டமாக, மறுமலர்ச்சிக் காலத்திற் செல்வாக்குப் பெற்றிருந்த மனிதப் பற்றுக்கோட்பாடு விளங்கியது. ஆனால், பரிசுத்த தோமஸ் அவர்கள் தமது பகுத்தறிவின்பாற்பட்ட ஒழுக்கம் பற்றிய தத்துவங்கள் கடவுளிடமிருந்தே பிறந்தன என்று நம்பினார். இயற்கைச் சட்டம் என்ற பாரம்பரியக் கருதுகோளின்படியே அவைகள் சட்டத் தொகுப்புக்களாக்கப்பட்டன. இதை 'என்றுமுள சட்டத்திற் பகுத்தறிவுள்ள பிராணிகள் பங்குகொள்ளல்'[1] என்று வரையறை செய்தார் அவர். என்றுமுள்ள சட்டத்தை "உருவாக்கப்பட்ட பொருள்களைப் பகுத்தறிவிற்கொப்ப கடவுள் வழிநடத்தும்முறை" என்றும் கருதினார். எனவே, அரசியல் அர்த்தத்தில், சட்டத்திற்குக் கீழ்க்காணும் வரைவிலக்கணத்தைக் கொடுக்கலாம். சட்டம் என்பது 'பொது நன்மையுடன் சம்பந்தப்பட்ட பொருள்களைப் பகுத்தறிவிற்கொப்ப ஒழுங்கு படுத்துவதேயன்றி வேறொன்றுமன்று. சமுதாயத்தைப் பாதுகாக்கும் பொறுப்பைப் பெற்றிருப்பவர்களால் அது பிரகடனம் செய்யப்படுகின்றது.'[2] சட்டத்தின் இயல்புகள் பற்றிப் பரிசுத்த தோமசின் காலத்தவர்கள் கொண்டிருந்த கருத்தை இந்த வரைவிலக்கணம் பெரிதளவில் ஒத்திருக்கின்றது.

இயற்கை வாழ்க்கையும் குடியியல் வாழ்க்கையும் தெய்வீக வாழ்க்கைக்கு முரண்பட்டவையல்ல; தெய்வீக வாழ்க்கைக்கு உதவுபவையாகவே இருக்கின்றன என்ற கருத்தைப் பரிசுத்த தோமஸ் ஏற்றிருப்பது ஒரு முக்கிய விளைவை

[1] *Political Writings*, p. 115 [2] *Political Writings*, p. 113

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்தியது. சொத்துடைமை, கீழ்ப்படிதல் ஆகிய விடயங்களில் அகுஸ்தீனும் அவரைப் பின்பற்றியோரும் வழக்கமாகக் கொண்டிருந்த மனப்போக்கை இது மாற்றியமைத்தது. 'சொத்துக்களை வைத்திருப்பதும் கீழ்ப்படிந்து பணி செய்வதும் இயற்கையால் விதிக்கப்பட்டவையல்ல; மனித வாழ்க்கை செவ்வனே நடைபெறுவதற்காக மனிதனின் பகுத்தறிவால் ஏற்றுக்கொள்ளப்பட்டவை அவைகள். ஆனால், இந்தச் சந்தர்ப்பங்களில் இயற்கைச் சட்டம் திருத்தப்படவில்லை. இயற்கைச் சட்டத்துடன் புதிதாக அவை சேர்க்கப்பட்டன.'[1] சொத்துரிமையை இயற்கையானதாக்கும் அளவிற்குப் பரிசுத்த தோமஸ் கூறவில்லை. பகுத்தறிவால் ஒப்புக்கொள்ளக்கூடியது என்று சொல்வது அவா என்ற பாவத்திலிருந்து வேறுபட்டது. உண்மையைத் தேடித் தெரிந்து கொள்ளும் மனிதனின் திறமையைப் பாவம் பாதித்துவிடவில்லை. ஆனால், உண்மைப்படி நடந்து கொள்ளும் திறமையையே அது பாதிக்கின்றது. உலகியல் அலுவல்களைப் பகுத்தறிவு ஒழுங்கு செய்கின்றது என்ற தோமசின் கருத்தை இந்தப் பாரம்பரிய கிறித்துவக் கோட்பாடு ஆதரிக்கின்றது. மனிதனை அவனின் உயர்ந்த, சிறந்த இலட்சியமான வீடுபேற்றிற்கு உந்தித்தள்ளும் தெய்வச் சட்டத்தைப் பகுத்தறிவாலும் விசுவாசத்தினாலும் திடநம்பிக்கையினாலும் உணர்ந்துகொள்ளலாம்.

இயற்கையானதும் நேர்நிலையானதுமான சட்டமும் தெய்வச் சட்டமும் ஒன்றோடொன்று இணைந்து மாட்சிமை பெற்று, பெரிதளவில் மாற்றமெதையும் பெறாத அமைப்பைப் பற்றிப் பரிசுத்த தோமஸ் கண்ட கனவில், மத்தியகால உலகின் அரசனுக்குரிய அதிகாரம் பற்றி அச்சந் தரக்கூடிய இவ்வியல்பை ஓரளவு அறிந்துகொள்ள முடிகின்றது. இந்த அண்டத்தையும் அதிலுள்ள யாவற்றையும் ஒழுங்காகவும் அமைதியாகவும் வைத்திருக்கும் பொறுப்பு கடவுளையே சார்ந்தது. இப்பணியைச் செய்வதற்கு அவருக்கிருந்த அதிகாரமும் மேம்பட்ட தன்மையும் பாப்பரசருக்கும், பேரரசருக்கும், மன்னர்களுக்கும், சட்டமன்றங்களுக்கும் இருந்த அதிகாரத்திலும் பன்மடங்கு அதிகமாகும். மேன்மைமிக்க இந்தக் கருத்து மோட்ச உலகை விட்டு இறங்கியபோது, வழக்கங்கள், முன்மாதிரிகள், வழக்க வரையறையான உரிமைகள், நிலப்பிரபுத்துவக் கடமைகள் ஆகியவைகளைக் கொண்ட வாழ்க்கை முறையையுடைய வேறுபட்ட உலகொன்றை எதிர்நோக்கியது. மத்திய காலத்தின் அன்றாட வாழ்க்கை முறையும் மேன்மைமிக்க அக்கருத்தும் ஒன்றையொன்று சந்தித்து ஒன்றோடொன்று கலந்துவிட்டமை மத்திய காலத்தின் வெற்றிக்கு வலுவாகவும் புகழாகவும் அமைந்தது. அந்தக் காலச்சட்டம் பழைமையில் வாழ்வதாகவும் மாற்றத்தை எதிர்ப்பதாகவும் தனது சொந்த வளர்ச்சிக்கே முட்டுக்கட்டையாக இருப்பதாகவும் காணப்பட்டது. ஒழுங்கான சமூகத்தின் இந்த முக்கியமான இயல்பைப் பரிசுத்த தோமஸ் மறந்துவிடவில்லை. 'சட்டத்தைப் பின்பற்றி ஒழுகுவதற்கு, மரபுகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருக்கின்றன; அதைப்போலவே, பொது மரபிற்கு மாறான மிகச் சிறிய நடவடிக்கையும் மிகவும் இடர்ப்பாடுடையது போலத்

[1] *Political Writings*, p. 127



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்படுகின்றது. மரபிற்கு முரண்படக்கூடிய வகையிற் சட்டம் மாற்றப்படும் போது அம் மாற்றத்தின் அளவிற்கேற்ப அச்சட்டத்தின் கட்டாயப்படுத்தும் வலுவும் குறைகின்றது' என்று அவர் எழுதியுள்ளார்.[1] ஆனால் அகிலத்திற்குத் தெய்வத்தால் கொடுக்கப்படும் ஒழுங்கும் மரபுவழிச் செயல் முறையும் எவ்வளவு இணைந்து சென்றாலும்கூட, தெய்வத்தின் ஒழுங்கால் ஏற்படும் உறுநிலையை மரபுச் செயல்முறை கொடுத்துவிடாது. இந்தக் கருத்தைக் கொடுத்துதவிய பெருமை மத்திய காலச் சமுதாயத்தையே சாரும். உரோமாபுரியோ ஜெருசலமோ இக்கருத்தைக் கொடுத்துதவவில்லை. வடபகுதிகளில் வாழ்ந்த நாகரிகமற்ற மக்களே அதைக் கொடுத்துதவினர்.

* * * *

மக்களின் இயற்கைச் சமுதாயத்தில் நிலவும் தெய்வீக ஒழுங்கின் பகுத்தறிவின் பாற்பட்ட பிரதிபிம்பமாகவே சட்டம் விளங்குகின்றது என்ற கருத்து, பாவத்திற்குப் பரிகாரமாக மதச் சார்பற்ற ஆட்சி இருக்கின்றது என்ற அகுஸ்தீனின் நம்பிக்கையிலும் பார்க்க ஜெர்மானிய மரபுக் குழுக்களுக்குரிய பொது மக்கள் சட்டம் என்ற பாரம்பரியக் கருத்தைப் பெரிதளவில் ஒத்திருக்கின்றது. பதினொராவது நூற்றாண்டிற்குப் பின்பு உரோமானிய சட்டத்தைக் கற்பதிலே புதிய ஆர்வம் காட்டப்பட்டது முதல், குறிப்பாகப் புதிய பல்கலைக்கழகங்களில், சட்டத்திற்கான அதிகாரம் பொது மக்கள் எல்லோரிடமுமிருந்தே கிடைக்கின்றது என்ற கொள்கை, முற்கூறிய இரு கொள்கைகளுக்குமிடையே முன்பிலும் பார்க்க நெருக்கமான உறவை ஏற்படுத்தியது.

நடைமுறையில், பல நூற்றாண்டுகளுக்கு முன்பே உரோமையர் முறையும் நாகரிகமற்றவர்களின் அமைப்பு முறையும் ஒன்றையொன்று சந்தித்து ஒன்றாகக் கலந்தன. எட்டாவது நூற்றாண்டிலும், ஸ்பெயினில் அதற்கு முன்பும் ஆதிக்குடிகளின் நிலையான பழக்கவழக்கங்களுக்கு எழுத்துருவம் கொடுக்கும் வேலை ஆரம்பமாகியது. ஒரு குறிப்பிட்ட மக்கட் கூட்டத்தினருடைய சமூக நடத்தை முறைகளின் வடிவமைப்புக்களைச் சுட்டிக்காட்டுவனவாக அப்பழக்கங்கள் இருக்கின்றன. உரோமாபுரிமீது படையெடுத்த ஆதிக்குடிகள் பெரும்பாலும் பொது மூதாதையர்களையே கொண்டிருந்தமையினால் அவர்களுடைய சட்டக் கோவைகளுக்கிடையே அதிக வேறுபாடுகள் காணப்படவில்லை.

படையெடுத்த ஆதிக்குடிகள் உரோமையாது உலகின் வெவ்வேறு பாகங்களிற் சிறு சிறு இராச்சியங்களைத் தோற்றுவித்து அந்த அந்தப் பகுதிகளில் நிலைத்து வாழ ஆரம்பித்ததும், அந்த அந்த மக்களின் பழக்க வழக்க வடிவமைப்புக்கள் அவரவர்கள் வாழ்ந்த ஒவ்வொரு பகுதியுடனும் தொடர்புகொள்ள ஆரம்பித்தன. சமூக நடத்தைகளை மக்களுடன் தொடர்புபடுத்துவதை விடுத்து, இதனுடன் தொடர்புண்டாக்கும் இச்செயன்முறை, ஒவ்வொரு பகுதியிலும் பிரயோகிக்கப்படும் சட்டங்களை அந்தந்தப் பகுதியை ஆட்சிபுரிபவருடன் தொடர்புபடுத்தும் விளைவை ஏற்படுத்தியது. இத்தகைய சட்டங்கள் மன்னரின்

[1] *Political Writings*, pp. 143–45

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டங்கள் அல்லது பொதுச் சட்டங்கள் என அழைக்கப்பட்டன. இந்த ஒவ்வொரு சிறு பகுதியிலுமுள்ள பழக்கவழக்கங்களிலிருந்து இவை வேறுபடுத்தி உணரப்பட்டன. தமது ஆட்சியின் கீழுள்ள பிரதேசங்களுக்கான சட்டங்களைப் பிரகடனம் செய்வதற்கு மேலாக, மன்னர் எதையும் செய்ததாக இந்த அபிவிருத்தி எமக்கு உணர்த்தவில்லை. மத்திய கால அரசுகள் தற்கால தேசிய அரசுகளாக மாற்றமடைவதற்கான அடிப்படையை இந்த அபிவிருத்தி அமைத்துத் தந்தது.

சட்டங்கள் உருவாக்கப்படுவதில்லை, பிரகடனம் செய்யப்படுகின்றன என்ற கருத்து யாராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகும். கண்டறிதல் முறை மூலமே சட்டங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. எனவே சட்டங்களைக் கண்டு பிடிப்பதற்கு ஆராய்ச்சி செய்யவேண்டிய தேவை ஏற்பட்டதேயொழிய தீர்மானிக்கவேண்டிய அவசியமேற்படவில்லை. பழைய காலத்திற் பின்பற்றப்பட்டு நிலைத்துள்ள நடவடிக்கைகள் சரியானவையாகவும் நீதியானவையாகவும் இருக்கின்றன என்ற நம்பிக்கையின் விளைவாகவே சட்டம் பற்றிய இக்கருத்து உருவாகியது. நியம நடத்தைகள் யாவை என்பது பற்றி யாவரிடையேயும் ஏற்பட்ட இந்த உடன்பாடானது வழக்கங்களைப் பின்பற்றிய மக்களிடையே ஒற்றுமை உணர்ச்சியையும் இணைந்து வாழவேண்டும் என்ற அவாவையும் உண்டுபண்ணியது. மக்கள் முழுப்பேரினதும் அனுபவங்கள், சமூக நடத்தைகளுக்கு விளக்கம் கொடுக்கும் கொள்கைகளுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தன என்று சொல்லலாம்.

எனவே, கவனமாக அலசி ஆராய்தல் என்ற உருவத்திற் சட்டமுறைகள் இடம் பெற்றன. சட்டச் செயல்முறைகளுடன் சம்பந்தப்பட்ட குழுக்கள் யாவும், மக்கள் முழுப்பேருக்கும் பிரதிநிதித்துவம் வகித்தன. அவை அக்காலத்திற் பின்பற்றப்பட்ட நடைமுறைகளை நிலைநிறுத்துவதிலே அதிகக் கவனம் செலுத்தின. சரியான நடைமுறைகள் எந்த வடிவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதை நிர்ணயிப்பதிலும், முற்கால வழக்கங்களிலிருந்து அவை எந்த அளவில் வேறுபடலாம் என்பதைத் தீர்மானிப்பதிலுமே அக் குழுக்கள் தங்களுக்குள்ளே உடன்பாட்டைக் காண விழைந்தன. இந்தச் செயல்முறைகளிலே, பிற்காலக் கொள்கைகளில் முக்கிய இடத்தைப் பெற்ற ஆட்சியாளர்களின் இணக்கத்தைக் காணமுடிகின்றது எனச் சிலர் வாதிக்கின்றனர். எனினும், ஒரு குறிப்பிட்ட குழுவினரின் அல்லது தனி மனிதரின் ஆணையாக மத்திய காலச் சட்டம் இருக்கவில்லை. மக்களின் வாழ்க்கையோடும் மக்களின் வாழ்க்கையிலிருந்தும் அது வளர்ந்து செழித்தது. மன்னனின் ஆட்சிக்குக் கீழுள்ள குடித்திணைகள் சட்டங்களை அங்கீகரிக்கும்போது சட்டங்களிற் காணப்படும் உண்மைகளை அவை ஏற்றுக்கொள்வதாகக் கருதவேண்டுமேயல்லாமல், அச் சட்டங்களின் தீர்மானங்களுக்கு இணக்கம் தெரிவிக்கின்றன எனக் கொள்ள முடியாது.

மரபுக்குரிய நடைமுறையைப் பின்பற்றும் இந்த அமைப்பிலுள்ள உரிமைகளை வழக்க வரையறை நிலைநாட்டியது. எழுத்துருவத்தைப் பெற்றிராத வழக்கங்களை மூத்தோர் பாதுகாத்து வந்த காலங்களிலிருந்து பெறப்பட்ட இந்த உரிமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் முக்கியத்துவம், அவைகள் எவ்வளவு பழமையானவை என்பதைக் கொண்டு அளவிடப்பட்டது. ஒரு குறிப்பிட்ட சட்டம் முன்பு பின்பற்றப்பட்டது என்பது போதிய சாட்சியங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுவிட்டால், அச்சட்டம் பின்பற்றக்கூடிய உரிமையைப் பெற்றுவிட்டதாகக் கருதப்பட்டது. இந்த மரபு வரையறையுரிமைகள் எந்தத் தனி மனிதருடனும் தொடர்புபடுத்தப்படவில்லை; குறிப்பிட்ட சமூகக் குழுக்களுடனேயே சம்பந்தப்பட்டிருந்தன. ஒழுங்கான பதவணியில் ஒவ்வொரு சமூகக் குழுவினதும் கடமைகள் யாவை என்பதையும், அக்குழுக்கள் வைத்திருக்கும் சொத்துக்கள் எவையெவை என்பதையும், அவைகளின் மதிப்புநிலை என்ன என்பதையும், இந்த மரபு வரையறையுரிமைகள் நிர்ணயித்தன. சொத்து, மதிப்புநிலை, கடமைகள் ஆகியவைகளைச் சில சமயங்களிலே குறிப்பிட்ட அரசர்களே நிர்ணயித்தனர். ஆனால் மரபு வரையறையுரிமைகளும் வழக்கமுமே அவைகளைப் பாதுகாத்தன.

வழக்கங்கள், உரிமைகள், சட்டங்கள் ஆகியவைகளைக்கொண்ட இந்தச் சிக்கலான அமைப்பு, சமூக அமைதியையும், சமுதாயத்தைச் சேர்ந்த வெவ்வேறு உறுப்பினர்கள் தங்களுக்குள்ளே ஒத்துழைப்பதற்குத் தேவையாயிருந்த சூழ்நிலையையும் உருவாக்கியது. அந்த அமைதி, வேந்தனின் அமைதி என அழைக்கப்படலாயிற்று. இன்னும் அது அவ்விதமே அழைக்கப்படுகின்றது. இந்த அமைதியை முறிப்பவர்கள் சமுதாய ஒற்றுமையிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்பவர்களாவர். சமுதாய அமைதிக்குப் பங்கம் விளைவிப்பதன்மூலம் சமுதாயத்திலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டவர்கள் சமூகத்திலிருந்து தள்ளப்பட்டவர்களாகக் கருதப்பட்டனர். சமூகத்திலிருந்து தள்ளப்பட்டவர்களைச் சட்டத்தின் பிடியிலிருந்து தம்மை விடுவித்துக்கொண்டவர்கள் எனக் கொள்வதிலும் பார்க்கச் சட்டத்தின் பாதுகாப்பிலிருந்து தள்ளப்பட்டவர்கள் எனக் கருதுதல் வேண்டும். தவறு செய்வதர்கள் தாங்கள் செய்த தவறுகளுக்காக வருந்துவதுடன் அத்தவறை ஈடுசெய்து வருங்காலத்தில் நல்ல முறையில் நடந்துகொள்வதாக உறுதியளித்தால், சமுதாயம் அவர்களை மீண்டும் தன்னுடன் சேர்த்துக்கொள்ளும்.

இதைப்போன்று நிலையான சூழ்நிலைகள் மத்திய காலத்தைச் சேர்ந்த நூற்றாண்டுகளிலே, மிகவும் பரந்து விரிந்த பிரதேசங்களில் உருவாக்கப்பட்டன. புராதன காலத்தில் இத்தகைய நிலைமையைக் கரோலிங்கிய சாம்ராச்சியம் மட்டுமே மிகவும் சொற்ப காலத்திற்கு ஏற்படுத்தியது. பதினொன்காம் நூற்றாண்டிலே கிறித்துவ சாம்ராச்சியப் பொது அரசு ஒன்றை நிறுவுவது பற்றிக் கிறித்துவ மதகுருமாரும் தாந்தேயும் கண்ட கனவு நனவாகும் சூழ்நிலை தோன்றாத போதிலும், பிரதேச அதிகாரங்களை உருவாக்குவதற்கு அக்கனவு உதவி புரிந்தது. 'அரசியற்றுறைமூலம் யாவரையும் இணைப்பது கிறித்துவ மதகுருமாரின் இலட்சியமாகவிருந்தது. ஆனால், பிரெஞ்சு தேசத்துப் போர்வீரர்களுக்கு அத்தகைய இணைப்பு தற்செயலாக ஏற்பட்ட ஒரு விளைவாகவிருந்தது' என்று கூறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறுர் பேராசிரியர் வாலஸ்—ஹாடிரில் அவர்கள்.[1] மேற்கு ஐரோப்பாவில் அதிகாரம் பங்கிடப்பட்டிருக்கும் முறை காலத்தாலும் வழக்கத்தாலும் அங்கீகரிக்கப்பட்டதேயல்லாமல் நீதியின் அடிப்படையில் ஆரம்பமாகவில்லை.

அகில திருச்சபை என்ற நிறுவனத்திற்கும், பேரரசருக்கு இருக்கக்கூடிய மத்திய அதிகாரத்திற்கும் எதிராக, மேற்குலக சாம்ராச்சியத்தைச் சேர்ந்த பிரதேசங்களில் ஏற்படுத்தப்பட்ட ஒழுங்கு, அந்த அந்தப் பிரதேசத்திற்கே உரியதும் விரைவில் அழிந்துவிடக்கூடியதுமாக இருந்தது. மூன்ருவது நூற்ருண்டு தொடக்கம் நகரங்களின் பொருளாதார வாழ்க்கை படிப்படியாகச் சீர்குலைந்துகொண்டு சென்றதனுல், மத்திய ஒழுங்கும் விரைவாகச் சீர்குலையத் தொடங்கியது. நிலைமை மோசமாகிக்கொண்டு செல்லும்போது மேலும் மேலும் தமது சுயதேவையைப் பூர்த்தி செய்யும் பெரிய நாட்டுப்புறத் தோட்டங்களை விருத்திசெய்யும் போக்கைப் பிற்காலப் பேரரசர்கள் ஊக்குவித்தனர். அத்துடன், இத்தகைய வாழ்க்கை முறைக்குத் தாங்களே முன்னேடிகளாகவும் திகழ்ந்தனர். பொது வர்த்தகம் குறைந்து, தூர இடங்களுக்குப் போய் வருவது ஆபத்தானதாகவும் மிகுந்த செலவையேற்படுத்துவதாகவும் மாறியதோடு, ஒவ்வொரு பிரதேசமும் தனது பாதுகாப்பிற்குப் பாத்திரமாக இருத்தல் வேண்டும் என்ற நிலை தோன்றியதன் விளைவாக, பெரிய மாளிகைகளையும் பண்ணை மனையையும் தம்மகத்தே கொண்டுள்ள நாட்டுப்புறத் தோட்டங்கள் பொதுவாகப் பொருளாதாரக் கூறுகளாகவும், பெரிதளவு அரசியல் முழுமை பெற்ற கூறுகளாகவும் மாறின. இந்தக் கால கட்டத்தில் நகரங்களிலும் பார்க்கக் கிராமங்களே முக்கியத்துவம் பெற்றன. மத்தியதரைக்கடலை மையமாகக் கொண்ட வர்த்தகப் பேரரசுச் சமுதாயங்களுக்கு எதிராக, நிலத்தை நம்பி வாழ்ந்த விவசாயப் பொருளாதாரமே இந்தக் காலத்தின் சிறப்பியல்பாக விருந்தது. எனவே, அந்த அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்தோர் அந்த அந்தப் பிரதேசத்தை ஆட்சிபுரிந்தோருக்கே கீழ்ப்படிந்து நடந்தனர்; அந்த அந்தப் பிரதேசங்களை ஆட்சிபுரிந்தோரிடமே அதிகாரமும் இருந்தது. பின்பு, நிலப்பிரதேசத்தாற் சூழப்பட்ட கிறித்துவ சாம்ராச்சியத்தை விக்கிங்குகள், சராசென்கள், ஹங்கேரியர்கள் ஆகியோர் வெவ்வேறு பகுதியிலிருந்து தாக்கினர். பிரதேச அதிகாரத்தையுடைய நிலமானிய அமைப்பு வளர்ச்சியடைந்ததற்குக் கடலில் ஆதிக்கம் செலுத்தமுடியாத விவசாய சமுதாயத்தின் இராணுவத் தேவைகளே காரணமாகவிருந்தன என்றே, பிற்கால உரோமை சாம்ராச்சியத்திலே தென்பட்ட பொருளாதார, அரசியல் வடிவமைப்புக்கள் வளர்ச்சி பெற்றமை காரணமாயிற்று என்றே கூறமுடியும். இவற்றுள் எந்தக் காரணத்தை நாம் ஏற்றுக்கொண்டாலும், பேரரசுக்குரிய ஒற்றுமை பற்றிய இலட்சியக் கொள்கையிலிருந்து அது எவ்வளவு குறைவாக இருந்தபோதிலும், தேசிய குழுக்கள் என்ற கரு வளர்ந்து இராச்சியங்களாக மலர்ந்தமை உண்மையிலேயே மெச்சக்கூடிய அபிவிருத்தியாகவிருந்தது.

[1] *The Barbarian West*, p. 114

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய அரசியல் அதிகாரம் பேரரசர்களிடமே இருக்கின்றது என்ற கருத்து மறைந்து, அங்கீகரிக்கக்கூடிய அளவு மதிப்பைக்கூடப் பெருத மன்னர்களிடமும் அந்த அதிகாரம் இருக்க முடியும் என்ற கருத்துத் தோன்றுவதற்கு, மத்திய காலம் முழுவதும் சென்றது. ஆதிக்குடிகளுடைய போர்த்தலைவர்களின் வழித்தோன்றல்களான மத்திய கால மன்னர்கள், குறிப்பிட்ட சில பணிகளைச் செய்யும் அதிகாரிகளாகவே தமது வாழ்க்கையை ஆரம்பித்தனர். எனவே அவர்கட்கு எந்தவித அந்தஸ்தும் இருக்கவில்லை. அரசியலமைப்புச் சட்டத்தின்படி அளிக்கப்பட்ட நிலையிலும் பார்க்க அவர்களின் திறமைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டமையே மதச்சார்பற்ற அதிகாரத்தையுடைய பேரரசர்களின் முடிவான வாரிசுகளாக அவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டதற்குக் காரணமாகவிருக்கலாம்.

போர்த்தலைவராகவிருந்த மன்னர் படிப்படியாக மானியமுறைப் பற்றுறுதி என்ற அமைப்பின் நாயகமாக மாற்றம் பெற்ருர். சமூகத்தின் பதவணிபற்றிய மிகவும் சிக்கல்வாய்ந்த உரிமைகளையும் சிறப்புரிமைகளையும் பாதுகாத்தல், பொதுநலத்தின் பிரதிநிதி என்ற சிறப்புப் பதவியை வகிப்பதால் பொதுச் சட்டத்திற்கு உத்தரவாதம் கொடுத்தல், மத அதிகாரத்தையும் மதச் சார்பற்ற அதிகாரத்தையும் இணைத்து அதனை ஒருவழிப்படுத்தல் ஆகியவை மன்னரின் பணிகளாயின.

சட்டத்தை ஆக்கும் அதிகாரத்தையுடைய மத்திய அரசாங்கம் ஒன்று இருத்தல் வேண்டும் என்ற உரோமை அரசியற் சிந்தனையாளர்களின் கருத்து பதின்மூன்காவது நூற்றுண்டுவரையில் வெறும் கொள்கையளவிலே இருந்தது. நிலமானிய முறை அமைப்பையுடைய அந்தக் காலத்தில் மன்னரின் அதிகாரத்தைப் பிரயோகிக்கும் விடயத்திலுமே இக்கருத்து அதிகம் செல்வாக்குப் பெற்றிருக்கவில்லை. இந்த அதிகாரத்தின் பிறப்பிடம், எளிதானதாகவோ வரையறை செய்யக்கூடியதாகவோ இருக்கவில்லை. தகுதிவாய்ந்த ஒருவரை மக்கள் தங்கள் தலைவராக ஏற்றுக்கொள்ள முன்வந்தமையே இந்த அதிகாரத்தின் ஆரம்பமாக இருந்திருத்தல் வேண்டும் என்பதில் சந்தேகமில்லை. பொது மக்களின் ஆதரவுடன் ஆரம்பித்த இந்த அரசியல் அதிகாரம், எல்லா அதிகாரத்தையுமுடைய முடிமன்னர்கள் பிற்காலத்திலே தோன்றும்வரையில், சட்டத்தின்படி நடக்கும் அரசர்களின் இயல்புகளுள் ஒன்றுகவிருந்தது. ஆனல், இந்த இயல்பு உரோமர்களின் காலத்தில் நிலவிய பொதுமக்கள் அங்கிகாரம் அளிக்குமுறையிலிருந்து வேறுபட்டதாக இருந்தது. உரோமர்களின் காலத்திலே பொதுமக்களின் முடிபே பேரரசரின் அதிகாரத்திற்குக் காரணமாக அமைந்திருந்தது. சமுதாயத்தால் அங்கிகரிக்கப்படும் இந்த முறையை, ஒருவகையான தேர்தல் என்றும் சொல்லலாம். நிலமானிய முறைச் சமுதாயத்தின் மரபுரிமையான வழக்கத்தால் இதற்கு வலுவூட்டப்பட்டது. மரபுரிமையுடையவர்கள் என்பதற்காகத் திறமையற்றவர்களைச் சமுதாயம் தனது தலைவராக ஏற்றுக்கொள்ள மாட்டாது. ஆரம்பத்தில் முன்ருேன்றலுரிமை என்ற விதி பின்பற்றப்படவில்லை. ஆனல், நிலப் பிரபுவின், குறிப்பாக மன்னரின் மூத்த மகன் அல்லது அவரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களுள் ஒருவன், காலியாகும் பதவிக்கு நியமிக்கப்படுவதற்குக் கவனத்திற் கொள்ளத்தகும் வரையறை செய்யப்பட்ட உரிமையைக் கொண்டிருந்தான். இறுதியாக மன்னரின் அதிகாரம் கடவுளிடமிருந்தே பெறப்படுகின்றது. மன்னர் திருச்சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதும், மற்ற எல்லாத் தகைமைகளுடன் தெய்வத்தின் அங்கிகாரத்தையும் பெற்றுவிடுகின்றார். ஒப்பாருள் முதலோன் என்ற காரணத்தினால், தமது ஆட்சியிலுள்ள முதலாவது பதவியாளராகவும் காலக்கிரமத்தில் ஒரேயொரு பதவியாளராகவும் மாறிவிடுவதற்கான நிலையை மன்னர் பெற்றுவிடுவார். இந்தப் பதவியிலிருந்துதான் தேசிய அரசு என்ற கருத்துப் பிறந்தது.

எல்லைகளை மாற்றியமைத்து வாழ்ந்த முற்கால தேசிய குழுக்களும், உள்ளூரிலே பலம்வாய்ந்திருந்த பெருமக்களும் நிலப்பிரபுத்துவ அமைப்பு என அழைக்கப்படும் சிக்கல் மிகுந்த தொடர்புகளால் ஏற்பட்ட அரசியல் ஒற்றுமையிலே தங்கியிருந்தனர். திருச்சபை, பேரரசு ஆகியவைகளைப் பற்றிய கொள்கைகள் இந்த நிலைமையைத் தங்கள் கவனத்திற்கு எடுக்கத் தவறிவிட்டன. எனவே புராதனக் கொள்கைகளின் அடிப்படையில் மத்தியகால அரசர்களை, அவர்களின் அதிகாரங்களை, விளக்குவது மிகவும் கடினமாவிருக்கின்றது. மத்தியகாலத்து அரசர்கள், பேரரசர்கட்கு இருப்பதாகக் கூறப்படும் மத்திய அதிகாரத்தை என்றுமே கொண்டிருக்கவில்லை. அவர்கள் அடிப்படையில் நிலப்பிரபுத்துவ மேலாட்சியாளர்களாகவே திகழ்ந்தனர். பிரான்சு, இங்கிலாந்து, ஸ்பெயின் போன்ற நாடுகளிலே மத்திய முடியாட்சிகள் உருவாகி பேரரசருக்குரிய அதிகாரத்தை ஓரளவிற்கு அவை பிரயோகிக்க ஆரம்பித்ததும், உண்மை நிலைமையுடன் ஒத்துப் போகக்கூடிய வகையில், பேரரசர் பற்றிய கொள்கைள் திருத்தப்பட்டு, மன்னர்கள் யாவரும் தங்கள் தங்கள் இராச்சியத்திற்குள் பேரரசர்களாகக் கருதப்படுவர் என அறிவிக்கப்பட்டது.

பொருளாதார, அரசியல் முயற்சிகள் நகரங்களிலிருந்து நிலப்பண்ணைகட்கு மாற்றப்பட்டதைப்போலவே நிலையான சமூகத்தை உருவாக்கும் பொறுப்பும் மரபுவழிவந்த சாதியாரிடம் ஒப்படைக்கப்பட்டது. இதற்கான ஆரம்பத்தை உரோமையரின் மேற்குலக சாம்ராச்சியத்தின் நலிவுக் காலத்திற் காணமுடிகின்றது. மூன்றுவது நூற்றுண்டிலே பல தொழில்கள் சட்டத்தின்மூலம் வெவ்வேறு குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்டன. அக்குழுக்களின் சந்ததியினரும் அதே தொழில்களையே செய்தல் வேண்டும் எனப் பணிக்கப்பட்டனர். நான்காவது நூற்றுண்டில் வாரத்திற்குக் கமம் செய்தவர்கள், தாம் தொழில் செய்யும் பண்ணைகளுடன் சட்டத்தின் மூலம் பிணைக்கப்பட்டனர்.[1] இதை நிலப்பிரபுத்துவ அமைப்பு என அழைக்க முடியாது. ஆனல் நாகரிகமற்றவர்கள் தமது சொந்தப் பதவணித் தொடர்புகளை உருவாக்குவதற்குத் தேவையான பொருளாதார, சமூகப் பின்னணியை, அது கொடுத்துதவியது. நிலப்பிரபுத்துவ அமைப்பில்

[1] சாம்ராச்சியத்தின் பொருளாதார நலிவுபற்றிய தகவல்களுக்கு, F. W. Walbank எழுதிய *The Decline of the Roman Empire in the West* (London 1946), என்ற புத்தகத்தைப் பார்க்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கம்வகித்த வெவ்வேறு பகுதியினரும் சமூகத்திலே தங்களின் பொறுப்பும் பங்கும் எவ்வாறு இருத்தல் வேண்டும் என்பதை இவ்வழி மூலமே நிர்ணயித்தனர். இதற்கு மாறாக, இந்தக் காலத்திற்கு முன்பும் பின்பும் இருந்த சமூகங்களிலுள்ள வெவ்வேறு பகுதியினரின் உரிமைகளும் கடமைகளும் பலம்வாய்ந்த மத்திய அரசாங்கத்தால் உத்தரவாதமளிக்கப்பட்டதுடன் செயற்படுத்தவும்பட்டன. மற்றச் சமூக அமைப்புக்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, ஒருவர்க்கொருவர் கடமைப்பட்டிருப்பதன் விளைவாகவே நிலப்பிரபுத்துவத்திற் காணப்பட்ட ஒரு பகுதியினரில் மறுபகுதியினர் தங்கியிருக்கும் இயல்பு உருவாகியது. ஒருவரில் மற்றவர் தங்கியிருக்கும் இந்த இயல்பின் மையமாகவே தலைவருக்குக் கீழ்ப்படிந்து சத்தியம் செய்து கொடுக்கும் முறை அமைந்தது.

சத்தியத்திற்குக் கட்டுப்பட்டு நடப்பது நாகரிகமற்றவர்களின் நன்னெறிகளுள் தலைசிறந்து விளங்குவதாகக் கூறப்படுகிறது.[1] குழப்பம் மிகுந்த அந்தக் காலத்தில் ஒவ்வொருவரும் தமது கடமைகளைச் செய்ய முன்வந்தமையே ஒழுங்கான வாழ்க்கையை நடத்த உதவும் பிரதான சமூக சக்தியாக இருந்தது. பிற்கால உரோமைச் சமூகத்தின் மாறுத சாதிக் கட்டமைப்பிற்கு இது உயிர்த்துடிப்பையும் இலட்சியத்தையும் கொடுத்துதவியது. தத்துவரீதியிலாவது திருச்சபையின் தார்மீக நியம அளவுடன் இது ஒத்துப்போனது. கிறித்துவ உலகிற்கு வெளியேயுள்ள பகுதிகளிலிருந்து தொடர்ந்து நடைபெற்ற படையெடுப்புக்களைச் சமாளிப்பதற்கு இராணுவத் தேவை ஏற்பட்டபோது நிலப்பிரபுக்களுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்தவும் இது உதவியது.

எனவே, நிலப் பிரபுத்துவ சமூகம் பல சிறு துண்டுகளாலானது. மேலரசாட்சி செய்யும் அதிகாரத்தைப் பெற்றிருப்பவர் தமக்கு நேரடியாகக் கீழேயுள்ள நிலப்பிரபுக்களுடனேயே நேரடித் தொடர்புகொண்டிருந்தார். ஒரே பண்ணையில் ஒன்றிற்கும் மேற்பட்ட நிலப்பிரபுக்கள் இருக்கமுடியுமாகையாலும் ஓர் இடத்தில் மன்னராக இருப்பவர் வேறோர் இடத்திற் பெருமகனாக இருக்க முடியுமாகையாலும் நிலைமை மிகவும் சிக்கல் மிகுந்ததாக இருந்தது. புராதன அர்த்தத்திலும் நவீன அர்த்தத்திலும் இந்தத் தொடர்புகளை அரசியல் தொடர்புகள் என வர்ணிக்க முடியாது. எனினும், ஒவ்வொருவரினதும் சத்தியப் பிரமாணத்திலே தங்கியிருப்பதனாலும், ஒவ்வொருவரினதும் கடமைகளை ஒளிவுமறைவின்றி அங்கிகரிப்பதனாலும் இந்தத் தொடர்புகள் நடைமுறையில் அக்காலத்தின் மிக முக்கியமான அரசியல், சட்டத் தொடர்புகளாகத் திகழ்ந்தன. சிக்கல்மிக்க இந்த அமைப்புமுறை திறம்படச் செயற்பட்டதன் விளைவாகவே பண்ணைகளைக் கொண்ட மத்தியகாலப் பதவணியினர் இராணுவ, சட்ட, பொருளாதாரத் துறைகளிலே தமது சமூக இலட்சியங்களை அடைந்தனர். பழங்காலப் பொருளாதாரம், போக்குவரத்து வசதிக்குறைவு, எதிரிகளின் பெருங்கூட்டம், உண்மை நிலையைப் பிரதிபலிக்காத சமூகக் கொள்கை ஆகியவைகளைக் கொண்டிருந்த மத்தியகாலக் கிறித்துவ உலகம், தனக்குக் கிட்டாத மத்திய அரசாங்க முறைக்கு

[1] *The Barbarian West*, p. 110

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்று அமைப்பாக நிலப்பிரபுத்துவ அமைப்பு முறை திகழ்ந்ததைக் கண்டு கொண்டது.

அக்காலத்து மக்கள் நிலத்தையே தமது செல்வமாகக் கருதினர். சொத்துரிமையை அச்சொத்து வைத்திருப்பவரின் சமூக சேவையின் வகை, அளவு ஆகியவற்றுடன் தொடர்படுத்துவது, அவர்கள் செய்த சமூக சேவைக்கான சம்பளத்தைச் செலுத்தும் வசதியான முறையாக முன்பு பின்பற்றப்பட்டுவந்தது. இராணுவ உதவிக்கும் உள்ளூராட்சியை நடத்துவதற்கும் பெருமகன்களையே மன்னர் நம்பியிருந்தார். குறைந்த படிகளில் உள்ளவர்கள் கீழ்ப்படிவாக இருப்பதாகச் சத்தியப் பிரமாணம் செய்து கொடுப்பதன்மூலம் பெருமக்களிடமிருந்து பாதுகாப்பை எதிர்பார்க்கமுடியும். சேவைகளையும் பொருள்களையும் பரிமாறிக் கொள்ளும் விரிவான திட்டமாகவே இந்த அமைப்பு முழுவதும் இருந்தது. இத்திட்டம் ஒளிவு மறைவின்றி அங்கீகரிக்கப்பட்டமையினாலும் வழக்கத்தில் இருந்தமையினாலும் அதை விளக்க எந்த வகையான சமூகக் கொள்கையும் தேவைப்படவில்லை.

கட்டுப்பாடு இரு வழிகளில் பிரயோகிக்கப்பட்டது. பிரபுக்களும் பண்ணையாட்களும் ஒருவர்க்கொருவர் கடமைப்பட்டிருந்தபோதிலும், பலமுள்ளவருக்குப் பலங் குறைந்தவர் கீழ்ப்படிவாக நடந்துகொண்டார். இக்கீழ்ப்படிவிற்குப் பதிலாக, பலமுள்ளவர் தமக்குக் கீழ்ப்படிவாக நடந்துகொள்ள வேண்டுமென்று பலங்குன்றியவர் கோரமுடியாது. எனினும், பிரபு தாம் ஏற்றுக்கொண்ட கடமைகளை நேர்மையாக நிறைவேற்றுவார் எனப் பண்ணையாட்கள் எதிர்பார்க்கலாம். பிரபு தமது கடமைகளைச் சரிவர நிறைவேற்றத் தவறினால் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்யும் உரிமை பண்ணையாட்களுக்குண்டு. தற்கால நிர்வாகச் சட்டத்தின்கீழ் அமைச்சர் ஒருவருக்கு மேன்முறையீடு செய்வதை, அது ஒத்ததாகவிருக்கவில்லை. தமக்கு எதிராகத் தொடரப்பட்ட மேன் முறையீட்டை விசாரித்துத் தீர்ப்பளிக்கும் உரிமையை எந்தப் பிரபும் கொள்கையளவிற் பெற்றிருக்கவில்லை. நீதிமன்றத்தில் குழுமியிருக்கும் உறுப்பினர்களுக்கு முன்னிலையில் அம்மேன்முறையீடு விசாரணைக்கு வரும். வழக்கிற்கு என்ன தீர்ப்பைக் கொடுப்பது என்பதுபற்றி நீதிமன்ற உறுப்பினர்கள் யாவரும் ஒருமனதான முடிவிற்கு வருதல் வேண்டும். தீர்ப்பை அமுல் செய்தல் அவர்கள் யாவரையும் சார்ந்ததாகும். கொள்கையளவில், வேந்தரவையிலும் இதே முறைதான் பின்பற்றப்பட்டது. பிற்காலங்களிலே கருதப்பட்டதைப்போன்று, மன்னருக்கெதிராகத் தீர்ப்பளிப்பது புரட்சி செய்வதாகக் கருதப்படவில்லை. மன்னருக்கெதிராகத் தீர்ப்பளிப்பது நிலப்பிரபுக்களின் நீதிமன்றத்தினது மேலாண்மையைக் குறிப்பதாகவே கருதப்பட்டது. நீதிப்படி பிரயோகிக்கப்படும் அதிகாரத்திற்கு மட்டுமே கீழ்ப்படிதல் வேண்டும். முறையாகத் தம்மைச் சேராத அதிகாரத்தைக் கைப்பற்றும் அரசர்கள், தங்களின் கீழுள்ள பெருமக்களாலே பதவிநீக்கஞ் செய்யப்படுவது முறையானதாகக் கருதப்பட்டது.

நிலப் பிரபுத்துவ ஒழுங்கமைப்பின்கீழ் வெவ்வேறு பகுதியினருக்குமிடையேயுள்ள மிகவும் தளர்ந்த தொடர்புகள், அரசியல் ஒற்றுமையை உருவாக்குவதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த அளவிற்குக் காரணமாக இருந்தன என்பது விவாதத்திற்குரிய விடயமாக இருக்கின்றது. மத்தியகால உலகின் சமூக, அரசியல் அமைப்புமுறை எந்த மாதிரி இருந்தது என்பதை நிர்ணயிக்க உதவுவதிலும் பார்க்க பிரதிநிதித்துவ அடிப்படையில் வெவ்வேறு சமூகப் பிரிவுகட்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்தும் முறையாக எப்படி அத்தொடர்புகள் விளங்கின என்பதுதான் மிகவும் முக்கியமானதாகும். இந்த நாட்டின் பாராளுமன்றத்திற்குரிய மத்தியகால உயர்நீதிமன்றம் தன்னுடைய உத்தரவின் பேரில் முழுச் சமுதாயமும் ஒன்றுகக் கூடுவதைப் பிரதிபலிப்பதாகவிருந்தது. குழுவாழ்க்கைபற்றிய தமது ஆராய்ச்சிகளின்போது ஜெர்மானிய சரித்திராசிரியர் கியர்க் கண்டுபிடித்ததைப் போன்று, சமுதாயம் என்பது பல சிறிய முழுமைக் குழுக்களால் ஆனதாகவிருந்தது. இச் சிறு குழுமைக்குழுக்கள் மத்திய அரசாங்கத்தாலோ அல்லது அரசரின் அனுமதியின்பேரிலோ உருவாக்கப்படவில்லை; அவைகளின் அனுமதியின் பேரில் இயங்கவுமில்லை; தம்மைத்தாமே ஒழுங்குபடுத்திக் கொள்ளும் சிறு உலகங்களாகவே அவை இயங்கின.

அரசின்கீழுள்ள பெரிய பண்ணைகள் மட்டுமே சமுதாயத்தின் முக்கியமான பகுதிகளாக இருக்கவில்லை. தொழிலாளர் சங்கங்கள், பிற்காலத்தில் வணிகர்களின் குழுக்கள், ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் சங்கங்கள், பெரிய பிரபுக்களின் பாதுகாப்பில் வளர்ந்து பின்பு சுதந்திர உரிமைப் பட்டயத்தைக் கோரிய நகரங்கள் ஆகியவை யாவும் திருச்சபையின் பெரிய சமூகத்திற்குள்ளும் கிறித்துவ சாம்ராச்சியத்திற்குள்ளும் சிறிய கூட்டவைகளாக, சமுதாய வாழ்க்கையை மிக ஊக்கத்துடன் நடாத்திவந்தன. மத்திய காலத்திற் பலராலும் விரும்பிப் பயன்படுத்தப்பட்ட சமூக உருவகத்தை உபயோகிப்பதானால், இந்தக் குழுக்கள் தங்களை உயிர்ப்பொருளான ஓரமைப்பையுடைய முழுமைகளாக அமைத்துக்கொண்டு, பிரதிநிதித்துவ நிறுவனங்கள் மூலம் தங்கள் அலுவல்களிற் பெரும்பகுதியினைச் செய்து முடித்தன எனலாம். பிரித்தானியப் பாராளுமன்றமும் மேற்குலக ஐரோப்பிய பல்கலைக் கழகங்களும் இவைகட்குச் சிறந்த உதாரணங்களாக இன்றும் திகழ்கின்றன. இவைகளின் அமைப்புமுறை தொடர்ந்து பின்பற்றப்படுவதிலும் பார்க்கப் பிரதிநிதித்துவம் என்ற கருத்துக்கே மிகவும் முக்கியத்துவம் இருந்து வருகின்றது. மட்டற்ற அதிகாரத்தை அரசர்கள் கொண்டிருந்த காலத்தில் அதிகம் செல்வாக்குப் பெற்றிராத இந்தக் கருத்திற்கு அண்மைக்காலத்தில் புத்துயிர் கொடுக்கப்பட்டிருப்பதுடன், பெரிதும் வேறுபட்ட சமூகத்தின் விரிவான நோக்கத்தைப் பூர்த்தி செய்வதற்கும் இது பயன்படுத்தப்படுகின்றது.

மத்திய காலச் சமூகத்திலே பிளவையுண்டாக்கிச் சிதறடிக்கும் போக்கு இடையறாது தொழிற்பட்டு, அச்சமூகத்திற் கொள்கையளவில் இருந்துவந்த ஐக்கியத்தை, தாந்தேயின் பேரரசு பற்றிய கனவைப்போன்று, பயனற்றதாக்கி விட்டது. இறுதியில், சிதறடிக்கும் இந்தத் தூண்டுதல்களுக்கு திருச்சபைகூடச் சரணடைய வேண்டி நேரிட்டது. இத்தூண்டுதல்கள் நீண்டகாலமாகப் பலம் பெற்றுவந்தன. சாளமேனின் மரணத்திற்கு முன்பே உரோமன் மொழியையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியூதோனிக்கு மொழியையும் பேசும் மக்களிடையே மிகப்பெரிய வேறுபாடுகள் தோன்றவாரம்பித்தன. அந்தக் காலந் தொடக்கம் தற்கால சகாப்தத்தைச் சேர்ந்த நாடுகள் படிப்படியாக உருவாகி வருவதைக் கவனிக்கமுடியும். சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்கள் மத்திய கால ஐரோப்பா உருமாற்றம் பெற்றுவருவதை அறிவித்தன. புதிய சூழ்நிலையை விளக்குவதற்காக அரசியல் அதிகாரம், நோக்கம் ஆகியவைகளைப்பற்றிய புதிய கொள்கைகள் ஆராயப் பட்டன.

அரசியற் சிந்தனைகளில் ஏற்படவிருந்த மாற்றங்களைப்பற்றி ஒன்றிற்கும் மேற் பட்ட மத்தியகாலச் சிந்தனையாளர்கள் முன்கூட்டியே அறிந்து எமக்கு உணர்த் திச் சென்றிருக்கின்றனர். அவர்களால் முன்கூட்டியே உணர்த்தப்பட்ட அச்சிந் தனைகள் மதமறுமலர்ச்சிக் காலத்தின் பின்பே பூரணவளர்ச்சியை அடைந்தன என்பதை இங்கு குறிப்பிடுதல் வேண்டும். அவர்களில் ஒருவரான பதினுன்காம் நூற்றுண்டைச் சேர்ந்த பாதுவையைச் சார்ந்த மாசிலியஸ் என்பவர்பற்றிப் பின்வரும் அத்தியாயத்திற் குறிப்பிடுவோம். ஆன்மீக அதிகாரத்திலும் பார்க்க உலகியல் அதிகாரம் பலம் வாய்ந்ததாக இருத்தல் வேண்டும் என்ற கருத்தை அவர் ஆதரித்தார் என்பதை மட்டும் இங்கே சொல்லி வைத்தாற் போதுமா னது. வருங்கால வளர்ச்சி பற்றிய அதிகமான தகவல்களைப் பரிசுத்த தோமஸ் அக்குயினுசின் எழுத்துக்களிற்றுன் பெரிதளவிற் காணமுடிகின்றது. விக் கட்சி யைச் சேர்ந்த முதலாவது ஆள் என்று பரிசுத்த தோமசைக் குறிப்பிடுவது வழக்கம். இது ஓரளவு தவருன கருத்தாகவேயுள்ளது. கிறித்துவ மதத்தின் அரு ளுக்கும் அரிஸ்தோத்திலின் இயற்கைக்கு மிடையே அவர் வேறுபடுத்திக் காட்டியிருந்ததாற்றுன் பின் நூற்றுண்டுகளில் அந்த இரண்டு உலகங்களையும் முற்றுகப் பிரிப்பது இலகுவாக இருந்தது என்று கூறலாம். மக்களின் தேவை களைத் திறமையாகப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான அதிகாரத்தையும் வலுவையும் உடைய தன்னிறைவுபெற்ற நகரம் என்ற அரிஸ்தோத்திலின் கருத் திற்குத் தோமஸ் மீண்டும் உயிர்கொடுத்தமை, அவருடைய சிந்தனையின் செல் வாக்கைத் தெளிவாகக் காட்டுகின்றது.

திருச்சபையையும் பேரரசையும் தவிர்த்து, மத்தியகாலத்தின் பிற்பகுதியைச் சேர்ந்த வேறு எந்தக் குழு இந்த வரைவிலக்கணத்திற்கு எல்லா வகைகளிலும் தகுதியானதாக இருக்கக் கூடும்? ஐரோப்பாவின் சில பகுதிகளிலே புதிய வர்த்தக நகரங்கள் இந்த வரைவிலக்கணத்திற்கு ஏற்றவையாக இருந்தன. நிலப் பிரபுத்துவ பற்றுறுதிக்குஞ் சிறிது மேலான காரணங்களால் ஒன்றுக இணைக்கப்பட்ட அரசுகளும் இந்த வரைவிலக்கணத்திற்குத் தகுதியானவை யாகக் காணப்பட்டன. இந்த அரசுகளிலே தேசிய, மொழி உணர்வுகள் ஐக்கி யத்தை ஏற்படுத்துவதையும், நிலப் பிரபுக்களிலும் பார்க்கச் சற்று அதிகமான அதிகாரத்தைத் தமக்காக்கிக் கொண்ட அரசர்களால் அவை ஆளப்படுவதை யும் காணமுடியும். இவ்வரசர்கள் தங்களையே அரசு என அழைத்துக் கொண் டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றும் அத்தியாயம்

## உரிமைகள்

அரசு என்பது நானே என்று பதினுன்காவது லூயி அறிவித்தபோது பொது உண்மையொன்றை அவன் கூறினுனேயல்லாது கொடுங்கோலனுகை நடந்து கொள்ளவில்லை. பண்ணைகளையும் கூட்டவைகளையும் கொண்ட சிக்கல்வாய்ந்த மத்தியகால அமைப்பு பதினேழாவது நூற்றுண்டின் நடுப்பகுதியிலேயே ஐரோப்பாவின் சில பகுதிகளிலேனும், தேசிய குடிமக்களை ஆட்சிபுரியும் இறுக்கமாக இணைக்கப்பட்ட இறையுரிமையைக் கொண்ட இராச்சியங்களாக மாற்றமடைந்துவிட்டது என்பதையே மிகவும் பிரபலமான இக்கூற்று எமக்கு உணர்த்துகின்றது. இந்தக் காலத்தில் வெற்றியளிக்கும் அரசியல் அமைப்பு முறைக்கு முன்மாதிரியாக நாடு—அரசுகள் இருப்பதாக மேற்கு ஐரோப்பா எங் கணும் கருதப்பட்டது. நாடு—அரசுகள் உருவாக்கப்படுவதற்கு முன்னர் அவை உருவாக்கப்படவேண்டிய தேவையும் காரணங்களும் கொள்கையடிப்படையில் ஆராயப்பட்டன. தற்காலம் என அழைப்பதற்கு வசதியாக அமைந்துள்ள காலப்பகுதியின் முதல் மூன்று நூற்றுண்டுகளும் (மறுமர்லச்சிக்காலம் தொடக் கம் பிரெஞ்சுப் புரட்சிவரையும்), மத்திய கால ஒழுங்கு இவ்விதம் உருமாற்றம் பெற்ற காரணத்தை விளங்கிக்கொள்வதற்காகவே செலவிடப்பட்டன. அந்தக் காலத்தின் இறுதிப் பகுதியிலிருந்து இற்றைவரைக்கும் நாடு—அரசின் விளக் கத்தையும் அர்த்தத்தையும் கொடுப்பதையே அரசியல், சமூகக் கொள்கைகள் தமது முக்கிய பணியாகக் கொண்டிருக்கின்றன. இக்கொள்கைகள் நாடு—அர சின் வெளி உருவத்தை ஆராய முயலவில்லை; அவைகட்குள்ளேயுள்ள தொடர்பு களைத் திரும்பவும் வரையறை செய்வதிலேயே கவனம் செலுத்துகின்றன. இந்த அத்தியாயத்திலும் இதற்கு அடுத்த அத்தியாயத்திலும் பிரெஞ்சுப்புரட்சிக்கு முன்பு செல்வாக்குப் பெற்றிருந்த கொள்கைகளை ஆராய்வோம். இறுதி இரண்டு அத்தியாயங்களிலும் புரட்சியைத் தூண்டிவிட்டவையும் பத்தொன்பதாம் இரு பதாம் நூற்றுண்டுகளிலே பூரண வளர்ச்சியை அடைந்தவையுமான கொள்கை களை ஆராய்வோம்.

புதிய அரசியற் சமுதாயங்களின் பொது அமைப்பு முறையை ஆதரித்தவர் களை இரண்டு பகுதியினராக ஓரளவு நுட்பமற்ற வகையில் பகுக்க முடியும். மதச்சார்பற்ற அரசரைத் தவிர்ந்த மற்றைக் குழுவினரும் தனிமனிதர்களும் அரசருக்கெதிராக உரிமைகளைக் கொண்டிருந்தனர் என வாதிப்போர் ஒரு பகுதி யினராவார். குழுக்களுக்கும் தனிமனிதர்கட்கும் எந்தவித உரிமையும் கிடை யாது; சில நலவுரிமைகள் மட்டுமேயுள்ளன என வாதாடுவோர் இரண்டாவது பகுதியினர். இவ்வேறுபாடு, தத்துவத்தின் அடிப்படையிற் செய்யப்பட்டதாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறமுடியாது. சமுதாயத்தின் இலட்சியங்களைத் திறம்பட அடைவதற்கான பொறுப்புக்கள் எவ்வாறு பகிரப்படுகின்றன என்ற வாதம் இப்பாகுபாட்டிற்குக் காரணியாக இருப்பதே அதற்குக் காரணம். பலம் வாய்ந்த மத்திய அரசியலதிகாரத்தின் தேவையை இரண்டு பகுதியினரும் ஏற்றுக்கொள்கின்றனர். அந்த அதிகாரம் எல்லாம் வல்லதாக இருக்க முடியாதாகையால், பல நடவடிக்கைகள் தனிமனிதருக்கென ஒதுக்கப்படல் வேண்டுமென இரு பகுதியினரும் கருதுகின்றனர். தனிமனிதனுக்கென ஒதுக்கப்படும் இந்தத் துறைகள், ஓர் அர்த்தத்தில் அரசியலுக்கு அப்பாற்பட்ட துறைகளாகும் எனக் கூறலாம். இவை சூழ்வினைத் திறத்தின் அடிப்படையில் பொதுவாழ்விற்குரியவை என வரையறை செய்யப்படவேண்டுமா அல்லது எதிர்பார்க்கப்படும் விளைவுகளின் அடிப்படையில் வரையறை செய்யப்பட வேண்டுமா அல்லது மத அடிப்படையில் ஒன்றுகச் சேருதலும் வழிபடுதலும், சொத்துரிமை வைத்திருத்தலும் சொத்துக்களைக் கட்டுப்படுத்தலும், நீதியைத் தார்மீகக் கொள்கைகளைக் கொண்டு அளவிடுதல் ஆகிய பிரச்சினைகள் அரசியல் தலையீட்டிற்குள்ளும் கட்டுப்பாட்டிற்குள்ளும் அடங்காதவை என்றும் தெய்வத் தன்மைவாய்ந்தவை என்றும் வரையறை செய்யப்படவேண்டுமா என்பன போன்ற விடயங்களில் இருபகுதியினரிடையேயும் கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன.

பதினைந்தாம் பதினாறும் நூற்றாண்டுகள் குழப்பம் மிக்கவையாகக் காட்சியளிக்கின்றன. எல்லாக் காலக் கட்டங்களையும் மாற்றம் ஏற்படும் காலங்கள் எனத் திடமாகக் கூறமுடியும். ஆனால் அவற்றுள்ளே சில காலக் கட்டங்கள் அம்மாற்றங்களை உணர்ந்துகொள்வனவாக இருக்கின்றன. சம்பவங்களைப் போன்று கொள்கைகள் புரட்சிகரமானவைகளாக எப்போதுமே இருப்பதில்லை. சமூக, அரசியல் மாற்றங்கள் நடைபெறும் வேகமும் அவைகளின் சிக்கலான தன்மையும் பாரம்பரிய சிந்தனையின் புரட்சிகரமான கண்டுபிடிப்புக்களாக இருப்பதற்குப் பதிலாக, புரட்சிகரமான கருத்துக்களையும் கொள்கைகளையும் உருவாக்கும் காரணிகளாக இருக்கும் காலங்களுமுண்டு. பதினாறும் நூற்றாண்டை அதற்கு உதாரணமாகக் கொள்ளலாம். இந்தச் சூழ்நிலைகளில் மத்தியகாலச் சமுதாயத்தின் இடத்தைப் பிடித்துக் கொண்டவையும் அதன் அழிவிற்கு ஓரளவு காரணமாக இருந்தவையுமான சமூகத் தொடர்புகளின் புதிய வடிவங்களை அவதானித்தவர்கள், மத்தியகாலச் சிந்தனைகளிலிருந்தும் நடைமுறைகளிலிருந்தும் பெறப்பட்ட கருதுகோள்களினதும் நியாயங்களினதும் துணைகொண்டு அவற்றை விவரித்தனர்.

கிறித்துவ சாம்ராச்சியத்திலே அரசியல் முதன்மைபெற முயன்ற இருவரும் தமது ஆட்சியில் ஒற்றுமையையும் இணக்கத்தையும் ஏற்படுத்தத் தவறியதோடு, ஒருமைப்பாட்டையும் போதிய அளவு வலுவையுமுடைய ஆட்சியைக் கொடுக்கவும் தவறிவிட்டனர். இருவாள்களையும் சமன் செய்யத் தவறியமைக்காக பாப்பாண்டவர்மீது குற்றம் சாட்டக்கூடியதாகவிருக்கலாம். ஆனால், மத்திய கால ஐரோப்பாவில் நிலவிய பிளவுபடுத்தும் போக்குக்களை பேரரசாற் கூட நிறுத்தியிருக்க முடியுமா என்பது சந்தேகமே. பற்றுறுதி, வலு, அதிகாரம் ஆகி

யவை புதிய தேசிய குழுக்களின் கைகளில் மேலும் மேலும் குவியத் தொடங்கின. இந்தப் புதிய குழுக்கள் தங்கள் மன்னர்களை மேலாண்மை அதிகாரத்தையுடைய நிலப்பிரபுக்களாகவே கருதின. ஆனால், நிலப்பிரபுத்துவ நடைமுறையின்கீழ் நிர்வாக, சட்டவாக்க வலுக்கள் எவருடைய கைகளிலும் குவிந்திருக்க அனுமதிக்கப்படவில்லை. இந்த வலுக்கள் கொள்கையளவிலே பேரரசரிடம் இருந்தபோதிலும் நடைமுறையில் அவரிடம் இருக்கவில்லை. இந்தப் பகுப்பு முறை அந்தக் காலத்தின் கொள்கைப் பிரச்சினையாகவிருந்தது.

இந்தக் கடினங்களை மத்தியகாலக் கிறித்துவப் பேரரசினது கட்டமைப்பின் அடிப்படையிலே தீர்க்கும் முயற்சிகள் தொடர்ந்து பின்பற்றப்படாதவாறு வேறு காரணிகள் செயலாற்றின. மதகுருமார் அமைப்பு முறையே தேசிய உணர்ச்சியின் செல்வாக்கிற்கு உட்பட்டது. கோட்பாடு சம்பந்தமான எல்லாப் பிரச்சினைகளையும் கவனத்திற்கு எடுக்காமல் இருந்தாலுமே, மத மறுமலர்ச்சி தகர்த்தெறியப்படுவதற்கு முன்பே ஆங்கிளிக்கன் திருச்சபையும் கலிக்கன் (பிரான்சிய) திருச்சபையும் வளர்ச்சி பெற்ற முழுமைகளாகிவிட்டன. அவைகள் கூட்டுச் சேர்ந்திருந்த அரசியல் இராச்சியங்களைக் காரணம் காட்டி விளக்கவேண்டிய தேவையிலும் பார்க்க, இத்திருச்சபைகளைச் சுட்டிக் காரணம் காட்டி விளக்கவேண்டிய தேவை குறைவானதாகவே இருந்தது.

அரசியல், மத நலவுரிமைகளுடன் சமுத்திரங்களிற் சென்று இஸ்லாத்தின் எதிர்ப்பைச் சமாளித்து வெற்றி பெறக்கூடிய வகையில், நிலத்தால் சூழப்பெற்ற விவசாய சமுதாயமாகவிருந்த மத்திய காலச் சமுதாயத்தை, வர்த்தக முயற்சிகளின் மையமாக மாற்றியமைத்த பொருளாதார மாற்றம் புதிய போக்கு ஒன்றை உருவாக்கியது. அந்தப் போக்கு மத்தியகாலத் திருச்சபைக்குக் கட்டுப்பாடுகள் விதிப்பதையும், சிறுசிறு பிரதேசங்கட்கு மட்டும் கீழ்ப்படிவாக இருப்பதையும், நிலையான தொடர்புகளையும், நிலப் பிரபுத்துவ சமூகம் கொண்டிருந்த நிலையான சில படி மரபுகளையும் எதிர்த்தது. தங்களின் புதிய முயற்சிகளுக்கு நிதிவசதி செய்து கொடுத்த வர்த்தகர்களும் வணிகர்களும் முதலாளிகளும், பொது ஒழுங்கு, ஒப்பந்தங்களைச் சட்டப்படி நிறைவேற்றல், போக்குவரத்தை நடத்துவதற்குத் தேவைப்படும் பாதுகாப்பான சூழ்நிலைகளை உருவாக்குதல் ஆகியவைகளைச் செய்து கொடுக்க முன்வரும் மத்திய அதிகாரத்திற்கு ஆதரவு நல்க முன்வந்தனர். தமது வர்த்தகத்திற்கும் வாழ்க்கை வசதிகளுக்கும் உத்தரவாதமளிக்கும் அதிகாரத்தைச் சார்ந்திருப்பதற்கு அவர்கள் பெருமகிழ்ச்சியுடன் முன்வந்தனர் என்றே சொல்லுதல் வேண்டும்.

இந்தச் சமூக வளர்ச்சிமுறையை அரசு, தனிமனிதன் என்ற இரு புதிய சமூகக் கருதுகோள்களின் அடிப்படையில் கியர்க் விவரித்துள்ளார். இவ்விரண்டிலே பலம்வாய்ந்த அம்சமான அரசு இதுவரையும் பாப்பாண்டவருக்கும் பேரரசருக்கும் ஒதுக்கப்பட்ட இறையுரிமையைத் தனதாக்கிக் கொண்டது. பலங்குறைந்த அம்சமான தனிமனிதன், சட்டத்திற்குக் கீழ்ப்பட்ட சுதந்திரத்தைக் கோரிப் பெற்றான். மத்தியகால உலகிற் காணப்பட்ட இடைநிலையிலுள்ள குழுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் யாவும் படிப்படியாகத் தமது மதிப்புநிலையையும் சட்டத்தை ஆக்கும் சுதந்திரத்தையும் இழந்தன. இவைகட்குப் பதிலாக உயர்ந்த மதிப்புநிலையையுடைய மத்திய அதிகாரம், அதாவது பொதுவாக அரசின் அதிகாரம், குடிமக்களின் சுதந்திரம் ஆகியவை தோன்றி வளரலாயின. நிலப்பிரபுத்துவச் சமூக அமைப்பின் கட்டுப்பாடுகளிலிருந்தும் நிலையான சிறப்புரிமைகளிலிருந்தும் விடுபட்ட குடிமக்கள் யாவரும் படிப்படியாகத் தமது மதிப்புநிலையையும் சட்டத்தை ஆக்கும் சுதந்திரத்தையும் பெற்றனர். முடியும் குடிமக்களும் ஒருவரை யொருவர் எதிர்த்து நிற்கும் இந்தச் சூழ்நிலையும், அவர்கட்கிடையேயுள்ள தொடர்புகளும் தற்கால அரசியற் சிந்தனையினதும் வாழ்க்கையினதும் சிறப்பியல்பாக அமைந்திருக்கின்றன.

தமக்கு மேம்பட்ட அதிகாரம் எதையும் அங்கீகரிக்காத சுயாட்சியுடைய தேசிய அரசுகளின் அடிப்படையில் அரசியல் தொடர்புகளை மீளவும் கணிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட இரு முயற்சிகளையே இந்த அத்தியாயத்தில் நாம் எமது கவனத்திற்கு எடுத்துக்கொள்வோம். இக்கொள்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதற்கு அவைகளின் உலகியல் கருத்தை மட்டுமே கொள்ள வேண்டியதில்லை. குடிமக்களின் நலவுரிமைகளைத் திருப்திப்படுத்துவதே அரசியல் அதிகாரத்தின் நோக்கமாக இருத்தல்வேண்டும் என்ற கருத்தை, உரிமைகள் என்ற கட்டமைப்பிற்குள் அதிகாரத்தைக் கட்டுப்படுத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளிலே காணமுடிகின்றது. ஆனால், உரிமைகள் பற்றிய கருத்து, மத்தியகால மொழி வழக்குடனும் நடைமுறையுடனும் மிகவும் நெருங்கிக் காணப்படுகின்றது. உரிமைகள் என்ற கருத்தை ஆதரித்தவர்கள் மத விடுதலை என்ற பிரச்சினையில் அதிக கவனம் செலுத்தியதனால், மத மறுமலர்ச்சியையடுத்த நூற்றுண்டுகளில் வாழ்ந்தவர்கள் அக்கருத்தில் அதிக அக்கறையும் ஆர்வமும் காட்டினுர்கள். இறையுரிமைவலு இயற்கைச் சட்டத்தினுல் கட்டுப்படுத்தப்படுகின்றது என்ற கருத்தையுடைய போடின், ஒழுங்கை நிலைநாட்டும் திறனுலும் எதிர்ப்பை அடக்கும் தகைமையினுலுமே இறையுரிமைவலு கட்டுப்படுத்தப்படுகிறது என்ற கருத்தைக் கொண்டிருந்த ஹொப்சிலும் பார்க்கக் கிட்டத்தட்ட நூறு ஆண்டுகளுக்கு முன்பே தமது கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

மத்திய காலப் பகுதி முடிவடைவதற்கு முன்பே, அரசின் முதலாவது அல்லது பிரதம பதவி அரைகுறையான பேரரசர் பதவியாக இருப்பதாகக் கூறப்பட்டது. ஒரு குறிப்பிட்ட அரசியல் அல்லது ஆட்சிப் பகுதியில் அரசாட்சியை நடத்துவோர், வேறு எந்த மேலதிகாரத்தையும் அங்கீகரிப்பதில்லை என்ற கருத்தை இது உள்ளடக்கியதாகவிருந்தது. இங்கிலாந்து, பிரான்சு, ஸ்பெயின் போன்ற நாடுகளில் மிகவிரைவில் இது உண்மைநிலையாக மாறிவிட்டது என்பதில் ஐயமில்லை. இந்த மாற்றத்தைக் கொள்கையடிப்படையிற் காரணம்காட்டி விளக்குவது அவ்வளவு இலகுவாயிருக்கவில்லை. மதச்சார்பற்ற உலகியல் அதிகாரம் முழுவதையும் ஒரு மையத்திற் குவிக்கும் தனி அரசர்கள் உரோமர்களின் காலத்தின் பிற்பகுதியில் இருந்ததை இந்தப் பிரதேச ஏகாதிபத்தியத்திற்கு ஆதாரமாகக் காட்டலாம். மன்னர்களை நோக்கி விளிக்கும்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கோமானின் திருமேனி' என்ற பதினாும் நூற்றாண்டிற் பயன்படுத்தப்பட்ட கிறித்துவச் சொற்றொடர் கைவிடப்பட்டு, மாட்சிமை என்ற பொருளில் மதச் சார்பற்ற இலத்தீன் பதமொன்று படிப்படியாக உபயோகத்திற்குக் கொண்டு வரப்பட்டமை இந்தப் போக்கை விளக்குவதாக இருக்கின்றது. இறைவனு பிரதிநிதித்துவத் தன்மையை உடையதா அல்லது முழுமையானதா, நிபந்தனை எதுவுமின்றி அது மன்னரிடம் ஒப்படைக்கப்பட்டதா அல்லது நிபந்தனைகளுடன் ஒப்படைக்கப்பட்டதா என்பனபோன்ற பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. அத்துடன், கிறித்துவப் போதனைகள் முழுவதையும் மறந்து மத நம்பிக்கையற்ற பழங்காலத்திற்குத் திடீரெனத் திரும்பிவிடவும் முடியாது.

கொள்கையளவில் அதிகாரத்தைக் கட்டற்ற முறையிற் பிரயோகிப்பதை ஒழுக்கநெறிகள் கட்டுப்படுத்துகின்றன. அதிகாரம் முழுவதும் கடவுளிடமிருந்து பெறப்படுவதே அதற்குக் காரணமாகும். நிலையான வழக்கத்திற்கும் முன் மாதிரிகட்கும் மாறாகப் புதிய அறிமுகமற்ற வழிகளில் அதிகாரம் பிரயோகிக்கப்பட்டால், பொதுவாழ்வில் நன்மையை மட்டுமே கருதி அவ்வாறு செய்யப்பட்டதாகப் பதினாும் நூற்றாண்டைச் சேர்ந்த சிந்தனையாளர்கள் கருதமாட்டார்கள். அவ்வாறு பிரயோகிப்பதற்கு ஆதாரமாகச் சட்டப்படி செல்லக்கூடிய உரிமையைக் காட்டுதல் வேண்டும். எல்லா உரிமைகளும் இறுதியிலே தெய்வத் தன்மை வாய்ந்தனவாகும். இந்த அர்த்தத்தில், கட்டுப்பாடற்ற அதிகாரத்தைப் பெறவிரும்பிய மன்னர்கள் தமக்கு ஆதாரமாகக் காட்டிய தெய்வவழியுரிமை என்னும் மத்தியகாலக் கொள்கை, அரசின் மாட்சிமைமிக்க மன்னர்களுக்குரிய விசேட சந்தர்ப்பத்திற்கு விரிவுபடுத்தப்பட்டது. அத்துடன், மன்னர்கள் வழங்கிய ஒழுங்கு, பாதுகாப்பு ஆகியவற்றைப் பெரும்பாலோர் பெருமளவுக்கு ஆதரித்தனர். குடிமக்களின் சம்மதத்திற்கு மதிப்பளியாது, இந்த மத்திய அதிகாரம் சில குடும்பங்களின் மரபுவழி உரிமையாகக் கோரப்பட்ட போது அதற்கு எதிர்ப்புத் தோன்றவாரம்பித்தது. மத்தியகாலக் குடித்திணை அமைப்புக்களானவை பாராளுமன்றம் என்ற நிறுவனத்தின் மூலம் வாழ்ந்து வந்த இங்கிலாந்தில், மத்திய அரசாங்கத்தின் வலுவையும் அதிகாரத்தையும் பகிர்ந்து கொள்ளவேண்டும் என்ற கோரிக்கை, பதினேழாம் நூற்றாண்டில் நடந்த உண்ணாட்டுப் போருக்கு வழிவகுத்தது. இந்தப்போர், அரைகுறையான மத்தியகாலச் சட்டமன்றமானது பலம்வாய்ந்த அரசர்களதும் பின்பு உயர்குடிப் பிறந்தோரதும் நிருவாகத்துடன் ஒத்திசைந்து தொழிற்படத்தக்க தனித்தன்மை வாய்ந்த ஒப்பந்தத்தை ஆக்கிக் கொடுத்தது.

போலியான அகில உலக சாம்ராச்சியத்திலிருந்து வெவ்வேறாகப் பிரித்தெடுக்கப்பட்ட சுயாட்சியையுடைய இராச்சியங்களின் அந்தஸ்து, உரிமைகள் ஆகிய கொள்கை பற்றிய பிரச்சினைகளுடன், திருச்சபைக்கும் உலகியல் அரசாங்கத்திற்குமிடையேயுள்ள தொடர்புகள் என்ற அவிழ்க்கப்படாத சிக்கலையும் மத்தியகாலம் அதை அடுத்துவந்த நூற்றாண்டுகளுக்குக் கையளித்தது. சுயாட்சியை நடத்துவதாகக் கூறிக்கொண்ட பல்வேறு அரசியல் முழுநிறைக்கூறுக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளாகவிருந்த கிறித்துவக் குடியரசு பிரிந்துவிட்டதனால், இச்சிக்கல் மேலும் தீவிரமானதாகக் காணப்பட்டது. மேற்குலகத் திருச்சபையைச் சீர்குலைக்காத வகையில் மதமறுமலர்ச்சி நடைபெற்றிருக்கவேண்டுமா அல்லது நடைபெற்றிருக்கக்கூடுமா என்பதை விவாதிப்பது நேரத்தை அவமே செலவிடுவதாக முடியும். பதினைந்தாம் நூற்றுண்டைச் சேர்ந்த பொதுச்சபைகள் பாப்பாண்டவரைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்தன. திருச்சபையின் அரசாங்கத்திலே பாப்பாண்டவரின் மத ஆட்சிக்கு முக்கியத்துவம் கொடுக்க விரும்பிய கத்தோலிக்கர்கள் சீர்திருத்த வேலைகளை அக்கறையுடன் மேற்கொள்ள முன்வந்த காலத்தில், மற்றக் குழுக்கள், குறிப்பாக உரோமாபுரியுடன் நட்புறவுகொண்டிராத வடக்கு ஜெர்மனியிலுள்ள குழுக்கள் உரோமையரின் கட்டுப்பாட்டிலிருந்த தம்மை விடுவித்துக்கொண்டன. உரோமையரின் பிடியிலிருந்து பிரிந்து சென்ற மதக் குழுவினருக்குப் பின்னால் பிரதேச உலகியல் ஆட்சியாளர்களின் வலுவும் அதிகாரமும் இருந்தமை அரசியலில் அக்கறை கொண்டிருந்தவர்கட்கு மிகவும் முக்கியமான அம்சமாகத் தோற்றமளித்தது. ஆனால், இதனிலும் மேலாக, உரோமைக்கு இன்னும் கீழ்ப்படிவாகவும் விசுவாசமாகவும் இருந்த பிரதேசங்களின் அதிகாரிகள், ஜெர்மானிய இளவரசர்களை அல்லது தியூடர் மன்னர்களைப்போன்றே திருச்சபையின் சொத்துக்களைப் பொறுத்தமட்டில் நடந்துகொண்டனர். திருச்சபையின் புதிய ஆட்சியுறவுக்கும் புதிதாகத் தோன்றிய—நாடு அரசுகளுக்குமிடையேயுள்ள நெருங்கிய தொடர்புகள், வழக்கத்திற்குமாறுன சூழ்நிலையில் ஆன்மீக அதிகாரத்திற்கும் உலகியல் அதிகாரத்திற்குமிடையேயுள்ள பழைய பிரச்சினையை மீண்டும் தலைதூக்கச் செய்தன.

இந்தச் சூழ்நிலைக்கு மூன்று முக்கிய வழிவகைகள் இருந்தன. முதலாவதும், மாதிரியாக அமைந்ததுமான வழிவகை, தேசீய திருச்சபையொன்றை உருவாக்குவதாகவே இருந்தது. இங்கிலாந்தின் ஆங்கிளிக்கன் மதத்தையும் பிரான்சின் கத்தோலிக்க மதத்தையும் உலகியல் அரசர்கள் ஆதரித்தனர். ஆனால், அவை ஒரே தத்துவத்தின் அடிப்படையிலேயே செழித்தோங்கின. உத்தியோக மதத்தை ஏற்றுக்கொள்ளாதவர்களிடமிருந்து (இவர்கள் இருநாடுகளிலும் வெவ்வேறு கருத்தினராய்க் காணப்பட்டனர்), இரு நாடுகட்கும் தீராத தொல்லைகள் ஏற்பட்டுவந்தன. விட்டுக்கொடுக்கும் கொள்கைமூலம் இந்த நெருக்கடி பிரிட்டனிலே தீர்க்கப்பட்டது. கத்தோலிக்க மதத்திற்குக் கொடுக்கப்பட்ட உத்தியோக அந்தஸ்தை வாபஸ் பெற்றுக்கொள்வதன்மூலம் பிரான்சில் நெருக்கடி தளர்த்தப்பட்டது.

மதமறுமலர்ச்சிக் கட்சிகளின் கொள்கையை உருவாக்கியவர்களிலே. தலை சிறந்தவரான ஜீன் கல்வின் இச் சூழ்நிலைக்கு மேற்கொள்ளத் தகுதிவாய்ந்த இரண்டாவது வழிவகையைத் தயாரித்தார். முற்காலத் திருச்சபைக்கு இருந்ததைப்போன்று எல்லா உலகங்கட்கும் பொதுவான இயல்புகளைக்கொண்டிருக்கக்கூடிய மறுதலைக் கிறித்துவ இயக்கத்தை ஒழுங்குபடுத்துவதுபற்றியும் வழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்துவதுபற்றியும் கணக்கண்ட கல்வின், உண்மைக் கோட்பாட்டை நிலை நாட்டுவதிலும் மதத்தை எதிர்ப்பவர்களை அடக்கியொடுக்குவதிலும் அரசாங் கம் அக்கறைகாட்ட வேண்டுமென்று விரும்பினர். அத்துடன், உண்மையான கோட்பாடு எது என்ற விடயத்தில் திருச்சபையின் விளக்கத்தை அரசாங்கம் மூற்ருக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும் கல்வின் கருதினர். இரு வாள்களை யும் சம நிலையில் வைத்திருப்பதற்கு எடுக்கப்பட்ட இப்புதிய முயற்சி ஜெனீ வாவில் வெற்றியளித்தது. அத்துடன், மற்ற இடங்களிலுள்ள கல்வின் திருச் சபைகளையும் அது பாதித்தது. எல்லா உலகிற்கும் பொதுவான திருச்சபை தனது மத்திய அமைப்பை இழந்துவிட்டதோடு, அத்தகைய திருச்சபையை ஏற்படுத்துவதற்குத் தேவையான புதிய அமைப்பு எதுவும் உருவாக்கப்படாத அந்தக் காலத்தில், கெலாசியக் கொள்கைகளுக்கு மறு உயிர்கொடுப்பதற்கு எடுக்கப்பட்ட இந்த முயற்சியும் மிகக் குறைந்த செல்வாக்கையே பெற்றிருந்த தில் வியப்பெதுவுமில்லை. இந்தக் கொள்கைகள் திருச்சபையின் கொள்கைகளி லும் பார்க்கக் குறைந்த அளவிலே பொருள் மயக்கத்தைக் கொடுத்தன என் பது உண்மையே. எனினும், கல்வினின் கொள்கைகள் உண்மை நிலைகளைப் பிரதி பலிக்கத் தவறியமையினல், அவை அரசியல் வருங்காலத்தை இழந்துவிட்டன.

இறுதியாக, தாபித்த தேசிய திருச்சபை அரசாங்கத்திற்குக் கீழ்ப்படிவாக இருத்தல் வேண்டும் என்ற கருத்தை ஏற்றுக்கொள்ள விரும்பாதவர்கள், குறிப்பாக ஸ்பெயினைச் சேர்ந்த கத்தோலிக்கச் சிந்தனையாளர்கள், இரு சமூ கங்கள் என்ற பழைய கோட்பாட்டிற்குத் திரும்பிச் சென்றனர். ஆனல், திருச் சபை நிறைவையுடைய சமூகமாகும் என்றும் அது தன்னிறைவு உடையதாக வும் சுயாட்சியை நடாத்துவதாகவும் இருக்கக்கூடும் என்றும் அவர்கள் கருதி னர். எல்லா உலகங்கட்கும் பொதுவான கிறித்துவ உலகம் சிதறுண்டு விட்ட தனுலும், கத்தோலிக்க நாடுகளிற்கூட தேசியவாதம் வளர்ச்சியுற்றதனுலும், மறுதலைக் கிறித்துவ அரசாங்கங்களின் கீழ் வசித்த கத்தோலிக்கர்களின் உல கியல் விசுவாசம் பற்றிக் கடினமான பிரச்சினை தோன்றியதனுலும், இக்கட் டான நிலையிலிருந்து வெளியேற உதவும் இக்கொள்கையை, திருச்சபையை நிறைவான சமூகமாகக் கொள்ளும் இக்கொள்கையை, அனுதாபத்துடன் பார்த் தல்வேண்டும். அக்காலத்தின் பொருளாதார, அரசியல் கருத்துக்கள் சென்ற திசைக்கு எதிரான திசையில் இக்கொள்கை சென்றமையினல், இது அதிகம் செல்வாக்கைப் பெற்றுக்கொள்ளத் தவறிவிட்டது. கத்தோலிக்கத் திருச்சபை யோ சீர்திருத்தப்பட்ட திருச்சபையோ, அல்லது பிரிட்டனில் இருந்தது போல இரண்டுமோ, முன்பு போல எல்லா உலகங்களினதும் ஒழுங்கிற் பங்கு கொள்ளமுடியாத நிலையில் இருந்தன. புதிதாகத் தோன்றிய பிரதேச அதி காரங்களிலேயே அவை எல்லாவற்றிற்கும் தங்கியிருக்க வேண்டிய அவசியம் நேரிட்டது. இந்தப் பின்னணியிலே மிகவும் முக்கியமான வழிவகைகளைக் கவ னிக்க வேண்டியது அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாபித்த திருச்சபைகள் தங்களைப் பாதுகாக்கும் அரசர்களிற் பெரிதள விலே தங்கியிருந்தமையினுல், அம்மன்னர்கள் தாமாகவே விரும்பிக்கொடுத்த உரிமைகளையே பெற்று அனுபவித்து வந்தன. தமக்குத் தேவையான உரிமை களைக் கோரிப் பெற்றுக்கொள்ளும் நிலையில் அவை இருக்கவில்லை. மாட்சிமை தங்கிய அரசுவரையில் மற்றக் குழுக்களையோ அல்லது நிறுவனங்களையோ போன்றே அவைகளும் கருதப்பட்டன. தனிமனிதனின் மனச்சாட்சியை மீற லாகாது என்ற மறுதலைக் கிறித்துவ போதனையே, தனிமனிதரின் உரிமைகளை அவர்களிடமிருந்து பறிக்க முடியாது என்ற கருத்தின் உண்மையான அடிப் படை என்று அடிக்கடி கூறப்படுகின்றது. கண்ணுக்குத் தோன்றுகின்ற வெளித் திருச்சபையின் சிறுசிறு பிரிவுகளுக்குப் பின்னுலே தென்படும் ஆன்மீக ஒற்று மைக்கு எல்லா உலகத்திற்கும் பொதுவான திருச்சபையே காரணமாகவிருக் கின்றது என்ற பரந்த நம்பிக்கை (இந்த நம்பிக்கை மறுதலைக் கிறித்துவர்களி டம் மட்டுமல்லாமல் சில கத்தோலிக்க வட்டாரங்களிலும் நிலவியது) தனிமனிதரை ஆன்மீக வலுவின் வைப்பிடங்களாகக் கொள்வதற்கு உதவி யது. எல்லா உலகத்திற்கும் பொதுவான விசுவாசத்தை அல்லது அதைப் போன்ற ஒன்றைத் திரும்ப ஏற்படுத்தும் விடயத்தில், ஜெனீவா, கன்ரபெரி ஆகியவைகளிலும் பார்க்க மிகவும் சாதகமான நிலைமையில் உரோமாபுரி இருந் தது. ஆனுல், மத்தியகாலத்தில் இருந்த அரைகுறை அரசியல் மதிப்பு நிலையை யும், உலகியல் அதிகாரத்தையும் உரோமாபுரி என்றுமே திரும்பவும் பெறவில்லை. மறுதலைக் கிறித்துவ மனச்சாட்சி என்று சரிநுட்பமற்ற முறையில் அழைக்கப் படுவது ஆன்மீகத் துறையைச் சேர்ந்ததாகவே இருந்தது. உடற்பகுதியிலிருந் தும் அதனுடைய இயல்புகளிலிருந்தும் இதை ஊதர் வேறுபடுத்தி உணர்த்தி யுள்ளார். அத்துடன், மறுதலைக் கிறித்துவ மனச்சாட்சி என்பது உலகியல் அதி காரத்தின் கவனத்திற்கு அப்பாற்பட்டது என்பதையும் அவர் காட்டினுர். அர சின் அதிகாரம் முழுவதும் ஒரு மையத்திற் குவிக்கப்பட்டதன் பின்பு, மன்ன னின் அதிகாரத்திற்கு எதிராகக் கணிக்கப்படும் ஓரமிசத்தை, அதாவது தெய் வத்தால் அளிக்கப்பட்ட உரிமைகளை, தனிமனிதனிடம் மட்டுமே காணமுடியும் என்ற கருத்தைப் பதித்து வைக்க இது உதவியது.

உடலின் இயற்கையான தேவைகளைப் பூர்த்தி செய்வதுடன் வாழ்க்கையின் இலட்சியம் முடிவடைந்துவிடவில்லை என்பது ஏற்றுக்கொள்ளப்படுமிடத்து, குடிமக்கள் வீடுபேற்றையும் நன்னெறியையும் அடையக்கூடியவராயிருந்தால் மட்டுமே மன்னர்களின் தெய்வீக உரிமைகள் பற்றிய கருத்து நியாயமானதாக ஏற்றுக்கொள்ளப்படலாம். வீடுபேற்றையும் நன்னெறியையும் குடிமக்கள் அடைவதற்கான முழுப்பொறுப்பும் மன்னர்களையே சார்ந்தது என்று கூற எந் தச் சிந்தனையாளரும் துணியமாட்டார். நன்னெறியை அடையும் முயற்சி இயற்கைச் சட்டம் பற்றிய பரிசுத்த தோமஸ் அக்குயினுசின் கோட்பாடு, மத நூல் தொகுதிகட்குப் புதிதாகக் கிடைத்த அதிகாரம் ஆகிய யாவும் சேர்ந்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடுபேற்றை அடைவதற்குத் தனிமனிதனின் ஆன்மாவிற்கு இருந்த தெய்வீக உரிமையை இயற்கையானதும் மறுக்கப்பட முடியாததுமான உரிமையாக மாற்றியமைத்தன. புகழ்பெற்ற பிற்காலச் சிந்தனையாளர்கள் இந்த உரிமையை "வாழ்க்கை, சுதந்திரம், வீடுபேறை அடைய முயலுதல்" என்று அழைத்தனர்.

* * * *

பேரரசாகவோ நகரரசாகவோ காட்சியளிக்காத அரசு என்ற புதிய அரசியற் கருத்தை, யாவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட மத்தியகாலச் சிந்தனையின் கட்டமைப்புக்குள் விவரிப்பதிலும், காரணம் காட்டி விளக்குவதிலுமுள்ள கடினங்களை, பதினாறும் நூற்றாண்டிலே பிரெஞ்சு வழக்கறிஞர் ஜீன் போடின் எழுதிய புகழ்பெற்ற 'டி லா றிபப்ளிக்' (De La Republique) புத்தகத்திலே குறிப்பிடத்தக்க வகையில் நாம் அவதானிக்கக் முடியும். ஆறு பாகங்களைக் கொண்ட போடினின் புத்தகம் 1576 ஆம் ஆண்டில் வெளிவந்தது. நன்றாக எழுதப்படாத அப்புத்தகம் பல சிந்தனைக் குழப்பங்களையும் தர்க்க ரீதிக்குப் புறம்பான முடிவுகளையும் கொண்டிருந்ததினால், பலரின் கண்டனங்களுக்கு இலக்காகியது. போடினின் கருத்துக்களிற் காணப்படும் முரண்பாடுகள், பாரம்பரியக் கொள்கைகள் எந்த அளவு இக்கட்டான நிலைக்குக் கொண்டுவரப்பட்டுவிட்டன என்பதையே பிரதிபலிக்கின்றன. அவரின் காலத்தில் வசித்த சிந்தனையாளர்களைப்போன்று, தார்மீகக் கட்டுப்பாட்டிற்குள்ளும் பகுத்தறிவின் வரம்பிற்குள்ளும் அரசியல் அதிகாரம் கொண்டுவரப்படல் வேண்டுமென்று போடினும் நம்பினார். ஆனால் அதேவேளையில், வெற்றிகரமான முறையிற் பிரயோகிக்கப்படும் பலத்தின் விளைவாகவே அரசியல் அதிகாரங்கள் தோன்றுகின்றன என்றும், பலத்தை மாத்திரம் கொண்டு திருப்திகரமான அரசியல் அதிகாரத்தை அமைக்க முடியாது என்றும் அவர் கூறினார். இதற்குமாறாக, அன்றிருந்த சூழ்நிலையில், பலம் தவிர்ந்த வேறு எந்தவழியாலும் தார்மீக முறையிலும் சட்டரீதியாகவும் திருப்திகரமான சமுதாயத்தை அமைக்க முடியாதிருந்தது. அதிகாரத்தின் மையத்தினாலேயே எந்தச் சமுதாயத்தையாவது உருவாக்க முடியும் என்பதைப் போடின் அனுபவரீதியாகக் கண்டார். அகுஸ்தீனின் கொள்ளைக்காரர் கூட்டம் என்பதையும் இக்கருத்தையும் வேறுபடுத்தி உணர்ந்து கொள்வது எவ்வாறு? அடுத்த நூற்றாண்டில் வாழ்ந்த ஹொப்ஸ் செய்ததைப் போன்று, தார்மீகத் துறையிலிருந்து அரசியல் அதிகாரம் என்ற கருத்தைப் பூரணமாகப் பிரித்தெடுப்பதற்கும், உலகியலுக்குப் பொருத்தமான முறையில் அதன் பெறுபேறுகள் வெற்றியளித்திருக்கின்றனவா என்பதை ஆராய்வதற்கும் போடின் தயாராக இருக்கவில்லை.

தம்முடைய புதிரைத் தீர்ப்பதற்கு போடின் அரிஸ்தோத்திலிடமிருந்து நிறையக் கடன்வாங்கினார். ஆனால், குடிமக்களின் மகிழ்ச்சியே அரசாங்கத்தின் நோக்கமாக இருக்கவேண்டும் என்ற கருத்தை மட்டும் கடன்வாங்கவில்லை. புராதன சிந்தனைகள் பெரிதளவிற்குச் செல்வாக்குப் பெற்றிருந்தபோதிலும், குடிமக்களின் தேவைகள் யாவற்றையும் திருப்திப்படுத்தும் விடயத்தில் ஓர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியற் சமுதாயம் எல்லாம் வல்லதாகவிருக்கும் என்ற கருத்து, அக்காலத்தில் நியவிய பெரிதளவு கிறித்துவ சமூக எடுகோள்களுடன் அவ்வளவு ஒத்துப் போகவில்லை. எனவே, அக்கருத்தை யாரும் உடனடியாக ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனல் அரசியல் அமைப்பை அதனுடைய இலட்சியங்களிலிருந்து வேறுபடுத்திப் பார்க்கும்வழி, அது எவ்வாறு உருவாகியது என்ற அவரின் ஆராய்ச்சியின் பயனுக, சிறிய குடும்பங்களிலிருந்து பெரிய பரந்த சமுதாயங்கள் தோன்றின என்ற அரிஸ்தோத்திலின் இயற்கையின்பாற்பட்ட கருத்தை போடின் ஏற்றுக்கொண்டு பயன்படுத்துகின்ருர் என்று அறியக்கிடக்கிறது. அரசியல் உருவத்தைப் பெறுவதற்குத் தன்னிறைவை அளவு கோலாகக் கொள்ளவேண்டும் என்ற கருத்தைப் போடின் ஏற்றுக்கொள்ளவில்லை; ஆனல் தன்னைத் தானே வழி நடத்திச் செல்வதையே அளவு கருவியாக அவர் ஏற்றுக்கொண்டார். கடவுளைத் தவிர்ந்த வேறு எந்த வெளி அதிகாரத்திற்கும் கட்டுப்படாமல், தனது பொது நடவடிக்கைகளை அதிகாரத்துடனும் அறுதியுடனும் நடாத்தும் வலுவைத் தனது கட்டமைப்பிற்குள் உள்ள எந்த ஒரு நிலையிலாவது கொண்டிருக்கும் அமைப்பே அரசு எனப்படும். மனித அதிகாரம் அமரும் இவ்விருக்கையை இறைவலு எனப் போடின் அழைத்தார்.

அரசாங்கத்தையுடைய எந்த அமைப்பும் அரசாகிவிடும் என்று போடின் இந்த அரசியல் வரைவிலக்கணத்திற் குறிப்பிடவில்லை. இறையின் விருப்பத்தை அமுல்நடத்துகின்ற முறை அரசை ஆக்கிவிடாமையே அதற்குக் காரணம். அரசாங்கத்தையுடைய எந்த அமைப்பும் அரசாக மாறுவதற்கு அதிகாரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். அரசுகள் அத்தியாவசியமான இரண்டு அம்சங்களைக் கொண்டிருத்தல் வேண்டும். மனிதனின் எந்தச் செயல்களுக்கும் கீழ்ப்படியாதிருப்பது, தன் குடிமக்கள் யாவரிடமிருந்தும் கீழ்ப்படிவைப் பெறுவது ஆகிய இரண்டுமே அந்த அம்சங்களாகும். இறையுரிமையும் கீழ்ப்படிதலும் ஒன்ருேடொன்று தொடர்புடைய பதங்களாகும். முடியாட்சியே நடைமுறையில் மிகச் சிறந்த பயனைக் கொடுக்கக்கூடிய அரசாங்க அமைப்புமுறையாக இருக்கும் எனப் போடின் கருதினர். இதன்வழி, பதினரும் நூற்ருண்டின் அடக்கமான கருத்தை அவர் பிரதிபலித்தார். வெனிஸ் நகரில் நடந்ததைப் போன்று, இறையதிகாரத்தை, பலரைக் கொண்ட குழுவும் பிரயோகிக்க முடியும்; வலுக் குறைந்த முடிமன்னர் தமது இறையுரிமையை அதிகம் பிரயோகிக்க முடியாதவராக இருக்கலாம். அரசுகள் தேசிய குழுக்களாக இருத்தல் வேண்டும் என்றும் போடின் கூறவில்லை. எனினும், அவரின் காலத்திற்குப் பிந்திய நூற்ருண்டுகளில் தேசிய குழுக்கள்தாம் மிகவும் பயனைக் கொடுக்கின்ற அரசுகளை உருவாக்கின. ஆனல், இதனைச் சரித்திரத்திலே தற்செயலாக இடம் பெற்ற நிகழ்ச்சி என்றுதான் கூறுதல் வேண்டும். போடினின் அரசு பலவகைப்பட்ட குழுக்களைக் கொண்டதாக இருக்கலாம். விசுவாசிகளின் குழுக்கள், மத குருமார்களின் குழுக்கள், மத்தியகாலக் கட்டத்தைச் சேர்ந்த வேறுபடுத்தப்பட்ட குடித்திணைகள், பொருளாதாரக் கூட்டு அமைப்புக்கள், தொழிலாளர் கூட்டவைகள் போன்ற பலவகைப்பட்ட குழுக்கள் அரசின் கீழ் இருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அவையாவும் இறைவனுவிற்குக் கீழ்ப்படிவான நிலையிலிருந்துகொண்டு இறையின் அனுமதியின் பேரில் தமது சிறப்புரிமைகளை அனுபவிப்பதோடு, பாரம்பரிய உரிமைகளையும் பேணுதல் வேண்டும்.

மேற்கு ஐரோப்பாவில் முதிரா நிலையிலிருந்த அரசியற் சமுதாயங்கள் எந்த முறைகளில் வளர்ச்சிபெற்றன என்பதை வருணிக்குமுகமாக, இவ்வனுக்களுக் குக் கொள்கையளவில் ஓரளவு மதிப்பு நிலையை வழங்குவதற்கு மேற்கொள்ளப் பட்ட ஒரு சிறந்த முயற்சியாக இவ்வரைவிலக்கணம் பேருதவி புரிந்தது. சம்ப வங்களை வருணித்ததைத் தவிர, அதற்கு மேலாக அரசியற் சிந்தனைத் துறை யிலே போடின் முக்கிய பணி எதையும் செய்தாரா என்ற கேள்விக்கு விடை யிறுப்பது மிகவும் கடினமாகவே இருக்கின்றது. மிகவும் வலுவையுடைய எந்த மத்திய அரசாங்கமும் பலம் குறைந்த குழுக்களின் கீழ்ப்படிவைப் பெற்றுச் சில காலத்திற்கு ஒழுங்கை நிலைநாட்டுவதுடன், வெளியதிகாரம் எதற்கும் தலை குனியவும் அதனை மறுக்கவும் முடியும். இத்தகைய சூழ்நிலை காலத்தின் போக் கில் நிலையான அரசியற் சமுதாயமாக வளர்ச்சியடையக்கூடுமெனினும், அத்த கைய சமுதாயம் ஆரம்பத்திலிருந்தே ஏற்பட்டதாகக் கொள்ளமுடியாது. நீதிக்குமட்டுமே கட்டுப்பட்டு உலகியல் ஆதிக்க வாள் கையாளப்பட வேண்டு மென்ற அகுஸ்தீனின் வெளிப்படையான கருத்தை ஏற்கப் போடின் மறுத்துள் ளார். அத்துடன் அரிஸ்தோத்திலின் கருத்தை முற்றாக ஏற்றுக்கொள்ளவும் அவர் தயாராகவில்லை. எனினும், அவரின் புத்தகத்திற் காணப்படும் நியாயங்கள் அதிக மாகக் குழப்பம் தருபவையாக இருக்கின்ற போதிலும், கொடுங்கோலாட்சி நடத்துவதற்கு வலுவைப் பிரயோகிப்பதற்கும், அவர் கூறியதைப்போல், நல்ல ஒழுங்கையுடைய அரசை நிருவகிப்பதற்கு வலுவைப் பிரயோகிப்பதற்குமிடையே யுள்ள முக்கிய வேறுபாட்டை அவர் தெளிவாக உணர்ந்திருந்தார்.

குழப்பமில்லாதிருத்தல் என்ற நிலையிலும் பார்க்கச் சிறிதளவு கூடிய நிலையை, நல்ல ஒழுங்குள்ளதொன்றாகப் போடின் கருதினார் என்பதில் ஐயமில்லை. குடி மக்களின் பொது இலட்சியங்களை அடைவதற்குச் சட்டங்கள் உதவுதல் வேண் டும் என்ற கருத்தை அவ்வொழுங்கு உள்ளடக்கியிருந்தது. முதலாவதாக, பொதுமக்களின் உலகியல் தேவைகளைப் பூர்த்தி செய்யச் சட்டங்கள் உதவுதல் வேண்டும் என்பது வெளிப்படை. இரண்டாவதாக, குடிமக்கள் நன்னெறிப்படி வாழ்வதற்குத் தேவையான சூழ்நிலைகளை அவை உண்டாக்கிப் பாதுகாத்தல் வேண்டும். எனினும், இறையாட்சியைச் செய்பவரே சட்டம் அனைத்திற்கும் ஒரேயொரு பிறப்பிடமாகவிருந்தார். அவரின் விருப்பத்திலிருந்தே சட்டங்கள் தோன்றின. தமது முடிவுகளுக்கான காரணங்களைத் தமது குடிமக்கள் எவருக் கும் அவர் கூறத்தேவையில்லை. தமது சொந்த விருப்பத்தின் பேரிலேயே சட் டங்களை அமுல் செய்வதற்கு இறையாட்சி செய்யும் மன்னர்கள் அனுமதிக்கப் பட்டனர்.

இந்த நிலையால் ஏற்பட்ட முரண்பாட்டைப் போடினால் சரியாகத் தீர்த்து வைக்கமுடியவில்லை. இறையாட்சி செய்பவர் சட்டத்தாற் கட்டுப்படுகின்றாரா இல்லையா என்பதே அந்த முரண்பாடு ஆகும். குடிமக்கள் வெறும் படைபலத் திற்கு மட்டும் கீழ்ப்படிவாக இருப்பதாகவிருந்தால் அவ்வாறு செய்வதற்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தார்மீகக் கடமை அவர்கட்குக் கிடையாது. நன்னெறியிலான வாழ்க்கை என்ற இலட்சியத்தை அடையச் சட்டங்கள் உதவுவதாகவிருந்தால் இறையாட்சி செய்பவரும் சட்டத்தாற் கட்டுப்படுத்தப்படுகின்றார் என்று கூற முடியும். அவ்வாறிருந்தால் இறையாட்சி செய்பவரும் மத்திய கால அரசரை ஒத்தவராகவே இருப்பார். நிலைமை இவ்வாறிருந்ததால், புதிய அரசியல் தத்துவம் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை என்று சொல்லலாம். ஒழுங்கை நிலைநாட்டுவது சம்பந்தமாக நடைபெற்ற உண்மையான சம்பவங்கள் பற்றிய தமது அனுபவ ரீதியான நோக்கல்களிலிருந்து, தார்மீக வாழ்க்கை நடத்துவதற்கு எத்தகைய சூழ்நிலைகள் உருவாக்கப்பட வேண்டும் என்ற தமது கருத்துக்களைப் பூரணமாக வேறுபடுத்திக்காட்ட போடின் தவறிவிட்டார் என்றே தோன்றுகின்றது. இறைவலு, சட்டத்தால் கட்டுப்படுத்தப்படுவதில்லை என்று அவர் கூறினர். ஆனல் அவ்வாறு இருத்தலாகாது என்பதையும் அவர் தெரிந்திருந்தார். இறையாட்சி செய்பவருக்கு உரிமைகள் உள்ளன என்பதை அவர் அறிந்திருந்தமையே அதற்குக் காரணம். வேருேர் உருவில் பிரெஞ்சுச் சிந்தனையாளரான மொன்டஸ்கியூவையும் திகைக்க வைத்த இந்தப் பிரச்சினை, அடுத்த நூற்றண்டில் வாழ்ந்த பிரித்தானிய மெய்யியலறிவாளரான லொக் என்பவரால் வெற்றிகரமாகத் தீர்த்து வைக்கப்பட்டது.

இந்தப் பிரச்சினை பற்றித் தமது மனத்திலே தோன்றிய சந்தேகங்களை வெளியே காட்டுவதற்காகச் சில நியாயங்களை எடுத்துக் கூறும்படி போடின் உந்தப்பட்டார். அந்த நியாயங்களுட் சில பிற்காலத்திற் பயன்படுத்தப்பட்டன என்பதைப் பின்னுற் பார்ப்போம். போடின் அரசினுள்ள சிறு குழுக்கள் யாவும், ஒன்றைத் தவிர, அரசியற் கீழ்ப்படிவுடன் இருந்தன. அரசியற் கீழ்ப்படியிலிருந்து குடும்பத்திற்கு மட்டுமே விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. விரிந்து பரந்த சமுதாயங்கள் யாவும் குடும்பத்திலிருந்தே தோன்றின. மனித சமுதாயத்தின் சாரமாக இருந்த காரணத்தினலேயே குடும்பம் சிறப்புரிமையுடைய நிலையைப் பெற்றது. குடும்பம் தொடர்ந்து இருப்பதற்குச் சொத்துரிமையே காரணமாகவிருந்து. இந்தச் சொத்துரிமை, தார்மீக அடிப்படையிலேனும், இறைவலுவின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டதாகவிருந்தது. பொதுத்துறைக்கு எதிராகவும் மேலாகவும் இயற்கைப் பகுதியான குடும்பத்தையும் அதன் பொருளாதாரப் பெருக்கத்தையும் போடின் அமைத்தார். எல்லாவற்றிலும் மேலாக, குடிமக்களின் இணக்கத்தைப் பெருமல் இறையாட்சியை நடத்துபவர்கள் அக்குடிகள் மீது வரிவிதிக்க முடியாது எனக் கூறுவதன்மூலம் அவர் தமது கருத்தை மேலும் வலியுறுத்தினர்.[1]

1 தேசிய மட்டத்திலே சொத்துரிமையின் தெய்வத்தன்மை பற்றிய தத்துவத்தையும் போடின் பிரயோகித்தார். ஆண் சந்ததியினர், எவ்வளவு தூர உறவினர்களாக இருந்த போதிலும், அவர்கள் இருக்கும்போது, பெண்கள் சொத்தைப் பெறுவதைத் தடைசெய்யும் லெக்ஸ் சாலிகா (*Lex Salica*) போன்ற பழைய காலத்துக் காணிச்சட்டங்களைத் திருத்துவதற்கும், அரசின் ஆட்சிப்பகுதியை பேற்றுரித்தாக்குவதற்கும் உரிமையை மறுப்பதன் மூலம், இறைவலுவானது சட்டரீதியாகக் கட்டுப்படுத்தப்படுதல் வேண்டும் என்று அவர் கருதியமையே அதற்குக் காரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல ஒழுங்கையுடைய அல்லது அரசியல் நீதியையுடைய அரசு ஒன்றின் மாதிரியை நாம் இங்கே காண்கின்றோம். கடவுளுக்கு மட்டுமே பணிந்து நடக்க வேண்டிய இறைவனு தானுகவே இயற்கைச் சட்டத்தின் எல்லைகளை மீறத் தக்க வகையில், குறிப்பாகக் குடும்பத்தின் தனி நிலையையும் சொத்துக்களையும் பறிக்காத வகையில், தனது சட்டவாக்க அதிகாரத்தைப் பிரயோகிப்பதைத் தவிர்க்க முன்வருகின்றது. குடிமக்களுக்கென ஒதுக்கப்பட்ட இத்துறைகள், இயற்கை உரிமைகள் என இன்னும் வெளிப்படையாக விவரிக்கப்படவில்லை. ஆனுல் இறைக்கு எதிரான—இறை ஏற்றுக்கொள்ள வேண்டிய—உரிமைகளை அவை குறிப்பிடுகின்றன. ஆனுல் இந்த உரிமைகள் இருப்பதற்கு அரசியலோ மதமோ காரணமாக இருந்ததாகக் கூறப்படவில்லை. இயற்கை உரிமைகள் பற்றிப் பிற்காலத்தில் உருவாக்கப்பட்ட மதச்சார்பற்ற கொள்கைகள் போடின் ஆராய்ச்சியிற் காணப்பட்ட குழப்பங்களைக் கொண்டிராததோடு, அரசியலமைப்புச் சட்டத்திற்கமைந்த அரசின் இறையுரிமைக் கருத்தை வரையறை செய்யவும் உதவின. இயற்கை உரிமைகள் பற்றிய பிற்கால மதச்சார்பற்ற கொள்கைகள் இயற்கைச் சட்டத்தின் அடிப்படையிலே தார்மீக முறையிற் காரணம் காட்டி விளக்கப்பட்டன.

மதப் போர்களாலும் சச்சரவுகளாலும் பிளவுபடுத்தப்பட்ட நாட்டில் வசித்த போடின், பிரெஞ்சு மன்னர்கள் ஒன்றிணைக்கப்பட்ட இறையுரிமையைப் பிரயோகிக்க வேண்டும் என விரும்பினுர். அத்தகைய ஒன்றிணைக்கப்பட்ட இறையுரிமையை நோக்கித் தமது நாடு மெதுவாக முன்னேறுவதையும் உணர்ந்தார். எனவே, ஒரே அமைப்பை உருவாக்குதல் என்ற தத்துவத்தில் நம்பிக்கை வைப்பதிலும் பார்க்க வழிநடத்திச் செல்லும் அதிகாரம் அரசில் இருத்தல் வேண்டும் என்று அவர் வற்புறுத்தியிருப்பது புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. சரித்திரத்திலும் மரபு வழக்கிலும் தனது ஆரம்பத்தைக் கொண்டிராத சமுதாய அல்லது தேசிய வாழ்க்கையின் வடிவத்தைச் சுட்டிக் காட்டிய புகழ், இறையுரிமையையுடைய அரசின் சட்டமியற்றும் வலுவை ஆதரிப்பவரும் இளஞ் சந்ததியைச் சேர்ந்தவருமான ஆங்கிலேயர் ஒருவரையே சார்ந்தது. அவர் சுட்டிக் காட்டிய அந்த வடிவம் புதிய அரசியலதிகாரம் செயற்பட வேண்டிய சமூகக் கட்டமைப்பைக் கொடுத்துதவியது.

“கற்றவரும் பகுத்துணர்வுடையவரும் தெய்வத்தன்மை வாய்ந்தவருமான” ரிச்சட் ஹூக்கர், ‘மத அரசுகளின் சட்டங்களைப்பற்றி’ என்ற ஆராய்ச்சிக் கட்டுரையைப் பதினுரும் நூற்றுண்டின் இறுதிப் பகுதியில் எழுதினுர். போடினிலும் பார்க்கத் தர்க்க ரீதியாகச் சிந்தனை செய்த ஹூக்கர், பிரெஞ்சு வழக்கறிஞரின் பொதுவாழ்விற்குரியதும் மதச் சார்பற்றதுமான முறையில் அரசியற் பிரச்சினைகளை அணுகவில்லை. சட்டங்களை ஆக்கும் இறையுரிமையை உடையவர்கள் செய்யக்கூடியவை, செய்யமுடியாதவை ஆகியவைகளிலிருந்து அரசின் எந்த ஒரு குறிப்பிட்ட அங்கமும் விதிவிலக்கு அளிக்கப்படுவதில்லை. போடின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறியதைப்போல், குடும்பங்கட்கோ அல்லது தனிமனிதருக்கோ எந்த வகை யிலும் விதிவிலக்கு அளிக்கப்படுவது கிடையாது. உடல் இயல்பான வளர்ச்சி யடையும் தன்மையை அரசியற் சமூகம் கொண்டிருந்தது என்ற கருத்தை ஹூக்கர் கொண்டிருந்தார். வேறுபல விடயங்களிற் செய்ததைப்போன்று, இதி லும் மத்திய கால மரபு வழக்கான கிறித்துவ சாம்ராச்சியத்தைப் பதினாறும் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்த ஆங்கில சமுதாயத்தில் நிலவிய பெரிதும் வேறுபட்ட சூழ்நிலைக்கு எடுத்துச் சென்றார். சூழ்நிலைகள் பற்றி விளக்கும் கைந்நூல் என்ற முறையில் ஆரம்பிக்கப்பட்ட ஹூக்கரின் தலை சிறந்த ஆய்வுக் கட்டுரையானது, அரசியல் அதிகாரம், அரசியலமைப்புச் சட்டம், கடப்பாடு போன்ற என்றுமுள்ள பிரச்சினைகளைக் கிளப்பியதுடன், புதிய நாடு—அர சிற்குப் பிரயோகிக்கக்கூடிய வகையில், அரசியல் அதிகாரத்துக்குத் தார் மீகக் கட்டுப்பாடுகளை விதிக்கும் மத்தியகாலக் கோட்பாட்டையும் கடைசி முறையாக வெளியிட்டது. தார்மீகக் கட்டுப்பாடு பற்றிய பிற்காலக் கருத்துக்கள் பெருமளவில் மதச் சார்பற்ற தன்மையைப் பெற்றுக் கொள்ள ஆரம்பித்தன. தார்மீகக் கட்டுப்பாடு என்ற கருத்து தெய்வத்தின் அங்கீகாரத்தைக் கோரிப் பெற்றுக்கொள்வதுடன் தொடர்புடையதாக இருந்தது. ஆயினும், மனிதாபி மானக் கோட்பாட்டின் அடிப்படையில் அதற்கு விளக்கம் கொடுக்கமுடியும்.

தாபித்த ஆங்கிளிக்கன் திருச்சபைக்குச் சமய ஆசாரத்தில் நம்பிக்கை வைத்த குழுக்களிடமிருந்து வந்த எதிர்ப்புக்களையும் கண்டனங்களையும் சமா ளிப்பதற்கு எலிசபெத் மகாராணியார் எடுத்த நடவடிக்கைகளை ஆதரிக்கவேண் டிய நிலைக்குக் ஹூக்கர் உந்தப்பட்டார். உரோமாபுரி ஆட்சிக்கு உட்படாத நாடுகளில்வசித்த கத்தோலிக்கர்கள் செய்ததைப்போன்று மறுதலைக் கிறித்துவத்தைச் சேர்ந்த தீவிரவாதிகளும், திருச்சபையும், அரசும் வெவ்வேறு சமுதாயங்கள் என்ற கருத்தை ஏற்றுக்கொண்டு வற்புறுத்துவதன் மூலம் அர சியற் கட்டுப்பாட்டிலிருந்து தமக்கு விடுதலை கோரினர். இம்மை இராச்சியத் திற்குப் புறம்பான இராச்சியத்தின் அதிகாரியான பாப்பாண்டவருக்குப் பதி லாக, தெய்வத்தால் அருளப்பட்ட திருமறைகளின் விளக்கம் வைக்கப்படல் வேண்டும் என அவர்கள் வாதாடினர். இந்தத் திருமறை விளக்கம் அவர்களின் அத்தியாவசியத் தேவைகட்கேற்ப மிக அழகாகத் திருத்தப்பட்டுள்ளதாக ஹூக்கர் சுட்டிக் காட்டினார். அரசியல் அதிகாரத்தைச் சிதறச் செய்யும் இந்த இயக்கத்திற்கு எதிராக தனிக் கிறித்துவ சாம்ராச்சியத்தில் இலௌகீக, ஆன் மீக உறுப்பினர்கட்கிடையே ஐக்கியம் ஏற்படுதல் வேண்டும் என்ற கருத்தை ஹூக்கர் வற்புறுத்தினார். மத்திய காலத்தில் வற்புறுத்தப்பட்டதைப்போல, எல் லாவற்றையும் உள்ளடக்கும் சமுதாயத்தைப் பற்றி அவர் கூறவில்லை. 'சுதந் திரமான மக்கட் கூட்டம்' தனது வாழ்க்கையை நடத்துவதற்குத் தெரிந் தெடுத்த ஒழுங்கமைப்புக்கள் யாவற்றையும் அங்கீகரித்தல் வேண்டும் என்றே அவர் வற்புறுத்துகின்றார். 'மனித இனத்தைப் படைக்கும் போது அது தனது வாழ்க்கையை நடத்துவதற்குத் தேவையான எந்த வித

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான சமூகத்தையேனும் தேர்ந்தெடுத்துத் தன்னை வழிநடத்துவதற்கு வேண்டிய பூரண வலுவை இயற்கையாகவே அதற்குக் கடவுள் கொடுத்துள்ளார்'.[1] மனித சமுதாய அமைப்பின் இரு பகுதிகளையும் அவைகட்குக் குறிப்பிட்ட வெவ்வேறு இலட்சியங்களைக் கொடுப்பதன்மூலம் வேறுபடுத்திக் காட்டலாம் என்ற கருத்தை இது நிராகரித்தது. கிறித்துவ மக்களின் அடிப்படை இலட்சியங்கள் பொதுவானவையாக இருத்தல் வேண்டும். 'அவ்வாறிருந்தபோதிலும், ஒருவகைப் பண்புகளும் நடவடிக்கைகளும் சாம்ராச்சியம் என்ற பெயரைக் கொண்டிருக்கும்; ஆனல், அதிலுள்ள மக்கட் கூட்டம் வேறொரு பண்பையும் பணியையும் கொண்டிருக்கும்போது திருச்சபை என்ற நாமகரணத்தைப் பெற்றுவிடும். எனவே, ஒரே மக்கட் கூட்டமே இருவகைப் பெயர்களையும் பெறுகின்றது. எங்களைப் பொறுத்தவரையும், ஒன்றில் இடம் பெற்ற எவருக்கும் மற்றதில் அங்கத்துவம் வகிக்க அனுமதி மறுக்கலாகாது'.[2] பிரதானமாக இங்கிலாந்து பற்றியே ஹூக்கர் சிந்திக்கின்ற காரணத்தினுல், இந்தத் தனிப்பட்ட தேசிய குழு ஒரேயொரு வழி நடத்தும் அதிகாரியைக் கொண்டிருத்தல் வேண்டுமென்று அவர் கருதுகின்ருர். பாராளுமன்றத்தின் மூலம் ஆட்சியை நடத்தும் மகாராணியாரே இந்தத் தனி அதிகாரியாக இருப்பார். இந்த அரசியலமைப்பானது பொதுமக்கள் முழுப்பேரையும் பிரதிநிதித்துவப்படுத்துவதுடன் அவர்களின் தேவைகள் யாவற்றையும் ஆராயும் தகுதியை உடையதாகவும் இருக்கின்றது. கிறித்துவ அடிப்படைகள் பற்றிய உடன்படிக்கைகள் பற்றி அவர் கொண்டிருந்த கருத்து, அவர் எழுதிய காலத்திலே தென்பட்டதிலும் பார்க்க விரிந்து பரந்திருந்தது. இன்றும் கொள்கையளவில் இருக்கும் ஆங்கிலிக்கன் சாம்ராச்சியம் என்ற இலட்சியத் தோற்றத்தை அவர் படம்பிடித்துக் காட்டுகிருர். ஆங்கிளிக்கன் திருச்சபை நிறுவப்பட்ட பின்னருமே அந்த இலட்சியம் பிரித்தானிய முடியாட்சியின் கீழுள்ள ஆங்கிலேயக் குடிமக்களிடத்திலிருந்து நடுத்தரத்திற்குங் கூடுதலான விசுவாசத்தைப் பெறவில்லை.

சரித்திரத்தில் முக்கியத்துவம் பெற்ற இத்தோல்வி ஹூக்கரின் ஆராய்ச்சியினது மிகப்பெரிய கொள்கை முக்கியத்துவத்தைச் சிறிதளவேனும் குறைத்துவிடவில்லை. பரிசுத்த தோமஸ் அவர்களைப் போன்றே இவரும், கடவுளால் அளிக்கப்பட்ட சரியாகச் சிந்திக்கும் இயல்பு மனிதனிடம் இருப்பதாகவும், அவனுடைய அலுவல்கட்குப் பொருத்தமான தெய்வச் சட்டத்தின் பகுதியை உணர்ந்துகொள்ளும் தன்மை அவனிடம் உள்ளதாகவும் கருதியமையினுலே, கிறித்துவ அடிப்படை அம்சங்கள் பற்றிய பொது இணக்கம் மாந்தரிடையே ஏற்படும் என நம்பினர். ஹூக்கர் கூறுவதைப் போன்று, அரசியல் அதிகாரத்திற்குக் கீழ்ப்படிந்து நடப்பது பற்றிய அவர்களின் உடன்படிக்கையைத் தவிர்த்துப் பார்க்கும்பொழுது, இயற்கைச் சட்டம் பற்றிய தங்களது அறிவில் எல்லா மக்களுமே நீதி, நன்னடத்தை ஆகியவைகளிலே சிறந்த தரத்தை அடைவதற்

[1] *Of the Laws of Ecclesiastical Polity*, in *Works*, arranged by J. Keble, revised by R. W. Church and F. Paget, VIII, ii, 5

[2] *Ecclesiastical Polity*, VIII, i, 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குப் பொதுவான வாய்ப்பைப் பெற்றிருக்கின்றனர். 'மாந்தர்களின் பொதுவானதும் இறவாத்தன்மை வாய்ந்ததுமான குரல், கடவுளின் திருவாய் மொழியை ஒத்ததே. எல்லாக் காலத்திலும் எல்லா மக்களும் கற்றறிந்தவைகளை இயற்கை தான் அவர்களுக்குக் கற்பித்திருத்தல் வேண்டும். இயற்கையைப் படைத்தவர் கடவுள் என்பதால் இயற்கையின் குரல் கடவுளின் கருவியாகும்.'[1]

மக்கள், சமூக வாழ்க்கையை வாழும் இயல்பை உடையவர்கள் என்பதிலும், அவர்கள் ஒன்றுசேராவிட்டால் அவர்களின் முயற்சிகள் அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் போதியவையாயிரா என்ற விடயத்திலும், ஹூக்கர் அரிஸ்தோத்திலின் கருத்துக்களை ஏற்றுக்கொண்டிருக்கின்றார். ஆனால் அவரின் கருத்துப்படி, மனிதன் இயற்கையாகவே அரசியல் மிருகமல்ல; அரசை உருவாக்க அவன் செய்துகொண்ட உடன்படிக்கை மரபுவழி வந்தது. நியாயம் என்ற சட்டத்துடன், மனித இனத்திற்குப் பொதுவான வேறொரு சட்டத்தையும் மாந்தர் தங்களின் இதயங்களிலே தாங்கியிருக்கின்றனர். பொதுச் சமூகமொன்றில் வாழவேண்டும் என்பதே அந்தச் சட்டமாகும். ஆனால் இந்தச் சட்டத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக உருவாக்கப்பட்ட அதிகாரம், யாவற்றிற்கும் மேலானது என்கிறார் ஹூக்கர். 'எல்லாச் சமுதாயங்களினதும் பொதுவலு அச்சமூகங்களில் அங்கம் வகிக்கும் ஒவ்வொருவரிலும் பார்க்க மேலானது. அவ்வலுவின் பிரதான உபயோகம் அதன்கீழுள்ள யாவருக்கும் சட்டங்களைக் கொடுப்பதாகும். அத்தகைய சட்டங்களுக்கு நாங்கள் கீழ்ப்படிந்து நடத்தல் வேண்டும்; நியாயத்தின் சட்டமோ தெய்வத்தின் சட்டமோ அச்சட்டங்கட்குக் கீழ்ப்படிதலாகாது என்று எமக்கு அறிவுறுத்தினால் மட்டுமே அவைகட்குக் கீழ்ப்படிய மறுக்கும் உரிமை எமக்குண்டு'.[2]

கடவுளின் சட்டத்தையும் நியாயத்தின் சட்டத்தையும் போன்றே அரசியல் அதிகாரத்தைப் பிரயோகிப்பதற்கு மக்கள் தெரிவிக்கும் இணக்கமும் பொது அரசியல் வலுவின் எல்லைகளை நிர்ணயிக்கின்றது. உயர்குடிப் பிறந்தோர், மூதறிஞர், நன்னெறியுடையோர் ஆகியோருக்கு மற்றவர்களை ஆட்சிபுரியும் உரிமை இயற்கையாகக் கிடைக்கவில்லை என்று ஹூக்கர் கருதினார். பிற்காலத்தில் லொக் கருதியதைப் போன்று அரசியற் கட்டுப்பாடற்ற சமூக வாழ்க்கையானது போட்டியையும் பலாத்காரத்தையும் ஊக்குவிக்கும் என்று அவர் கருதினார். 'இத்தகைய குறைபாடுகளையும் தவறுகளையும் நீக்குவதற்குத் தங்களுக்குள் ஒன்றுசேர்ந்து உடன்படிக்கை ஒன்றைச் செய்து, ஏதோ ஒருவித பொது அரசாங்கத்தை ஏற்படுத்தி (இதைத் தவிர வேறு எந்த வழியும் கிடையாது), அத்தகைய அரசாங்கத்திற்கு அவர்கள் தாங்களாகவே கீழ்ப்படிதல் வேண்டும். ஆட்சிபுரியும் அதிகாரத்தை அவர்கள் எவருக்குக் கொடுத்தார்களோ அவரிடமிருந்து அமைதி, ஒழுங்கு, மகிழ்ச்சி ஆகியவைகளை இவர்கள் பெறுதல் வேண்டும்.'[3]

1 *Ecclesiastical Polity*, I, viii, 3
2 *Ecclesiastical Polity*, I, xvi. 5
3 *Ecclesiastical Polity*, I, x, 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாபுவழிவந்த உடன்படிக்கையிலிருந்து ஆரம்பித்த ஹூக்கரின் கிறித்துவ நாடு—அரசானது காலத்தாற் கட்டுப்படாத கூட்டவையாகப் பூரணத்துவ மடைகின்றது. ஆட்சிபுரியும் அரசு வலுவின் கீழிருப்பதற்குத் தன் உறுப்பினரது இணக்கத்திற்கு—இது வெளிப்படையாகத் தெரிவிக்கப்படத் தேவையில்லை—மட்டும் கட்டுப்பட்ட இந்த நாடு—அரசு, தனது உலகியல், ஆன்மீகத் தேவைகளைப் பூர்த்தியாக்குவதற்குத் தேவையான எல்லாவற்றையுமே கொண்டிருந்தது. அத்துடன் முழுச் சமுதாயத்தின் குடியியல், மத நன்மைகட்குத் தேவையான சட்டங்களை ஆக்கும் அதிகாரத்தையும் கொண்டிருந்தது. இலட்சிய நிலையின் வர்ணனையாகவே இந்தக் கொள்கை அமைந்தது. அதிகார உரிமையற்ற பலாத்காரத்தைப் பயன்படுத்தி அரசியல் வலுவை நிறுவுவது பற்றியோ, அல்லது போப்பாண்டவரின் விருப்பப்படியோ விவிலிய நூலின்படியோ அரசியலமைப்புச் சட்டத்திற்கு வெளியேயும் மேம்பட்டதாகவும் தெய்வ அதிகாரத்தை நிறுவுவது பற்றியோ சிந்திக்கப்படவில்லை. சட்டங்கள் நீதியானவையா என்பதைப் பரிசோதிக்கும் அளவு கருவியாக அவை எவற்றை மேற்கோள் காட்டுகின்றனவோ அவை கொள்ளப்படாமல், அவை பகுத்தறிவின்பாற் பட்டவையா என்பதே கருத்திற் கொள்ளப்பட்டது.

ஹூக்கரின் ஆங்கிளிக்கன் சாம்ராச்சியம் அதன் தேசிய இலட்சியத்திலிருந்து விலகிச் சென்றுகொண்டிருந்த அடுத்த இரண்டு நூற்றாண்டுகளிலும் இந்த மாபு வழக்கே மதச் சார்பற்ற உருவிலே தப்பிப் பிழைத்தது. வேத நூலுக்குக் கொடுக்கப்படும் விளக்கத்தில் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம்; இங்கிலாந்தின் பாரம்பரிய திருச்சபை அந்த நாட்டைப் பிரதிநிதித்துவம் செய்தது என்பதையும் ஏற்றுக்கொள்ள மக்கள் மறுக்கலாம்; ஆனால் இயற்கையிலும் இயற்கையின் கடவுளிடத்திலும் பொது மனிதத்தன்மையும் பொதுப் பகுத்தறிவுத் தன்மையும் இருக்கின்றன என்பதை யாவரும் ஏற்றுக்கொள்வர்.

* * * *

மதச் சார்பற்ற இயற்கைச் சட்டத்தின் எல்லைக்குள் இயற்கை உரிமைகளின் கொள்கையை வெளியிட்டவர்களிலே தலை சிறந்து விளங்குபவர் ஜோண் லொக். பதினேழாம் நூற்றாண்டைச் சேர்ந்த இவர் பரிசுத்த தோமசை, ஹூக்கர் ஊடாகப் பார்க்கின்றார். மத்தியகால இரட்டைச் சமூகத்திற்கும் அமெரிக்க, பிரெஞ்சுப் புரட்சிகளின் விளைவாக உருவாக்கப்பட்ட ஒன்றாக இணைக்கப்பட்ட சனநாயக நாடு—அரசுகளுக்கும் மத்தியிலுள்ளவராய் அவர் காணப்படுகின்றார். பதினெட்டாம் நூற்றாண்டில் அவருக்கிருந்த செல்வாக்கை, அக்காலத்திற் பிரபல்யமடைந்திருந்த சில கோட்பாடுகளும் மிக முக்கியமான இரண்டு சரித்திர சம்பவங்களும் எமக்கு உணர்த்துகின்றன. இரண்டாம் ஜேம்ஸ் மன்னரின்கீழ் இங்கிலாந்தின் கட்டுப்பாடற்ற அதிகாரத்தையுடைய அரசாங்கம் மீண்டும் தலை தூக்கக்கூடிய அபாயம் தோன்றியமையே, அரசியலிற் கீழ்ப்படிதல் பற்றிய தத்துவங்களை விரித்துரைக்கும் சந்தர்ப்பத்தை லொக்கிற்கு நல்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1689 ஆம் ஆண்டில், முதலாவது இலத்தீன் மொழியிலும் பின்பு ஆங்கிலத்திலும் எழுதப்பெற்ற "சகிப்புத்தன்மை பற்றிய கடிதத்தை" லொக் வெளியிட்டார். அவரின் இரண்டாவது புத்தகமான 'குடியியல் அரசாங்கம் பற்றிய இரண்டாவது ஆராய்ச்சிக் கட்டுரை", ஜேம்ஸ் மன்னர் பதவி நீக்கம் செய்ததன் பின்பு 1690 ஆம் ஆண்டில் வெளிவந்தது. இந்தப் புத்தகங்களை அவை எழுதப்பட்ட காலத்திற்குரிய சம்பவங்களுடன் தொடர்புபடுத்துவது பொருத்தக்குறைவானதன்று. எனினும், அவைகளின் நிரந்தரப் பெறுமதியும் அக்கறையும், விக், தோரி ஆதரவாளர்களின் கட்சித் தொடர்புகளையும், ஒரேஞ் நாட்டினருக்கும் ஜாக்கோபியருக்குமிடையே நடைபெற்ற சச்சரவுகளையும் தாண்டிச் செல்கின்றன.

குடியியல் ஆட்சியாளர் தன்னிச்சையாக அதிகாரத்தைப் பிரயோகிக்கத் தமக்குத் தெய்வ உரிமைக் கோட்பாடு அனுமதியளிக்கின்றது என்று கூறுவது முறைதானா என்பதை அதே தெய்வ உரிமைக் கோட்பாட்டின் அடிப்படையில் லொக் ஆட்சேபித்ததானது, கிறித்துவ மரபு அரசியலுக்கு விட்டுச் சென்ற முரண்பாட்டைக் காட்டுவதாக இருக்கின்றது. முறையான குடியியல் அதிகாரத்தின் எல்லைக்கு வெளியே இந்தச் சட்டம் தொழிற்பட்டதாக அல்லது தொழிற்படுவதாக நம்பப்பட்டது. அரசியலுக்கு அப்பாற்பட்ட இந்த நிலையிலிருந்து, குடியியல் ஒழுங்கைக் கண்டிக்கவும், அது எவ்வாறு உருவாகுகின்றது, அது அடைவதற்கு முயலும் இலட்சியங்கள் யாவை என்பவற்றை வினவவும் கூடிய நிலையில் லொக் இருந்தார். கடவுளின் விருப்பத்தைப் பகுத்தறிவுடைய தனிமனிதனுக்குக் கொடுத்துதவும் இயற்கைச் சட்டத்திற்கு மிக அண்மையாகவும் அச்சட்டத்தின்படி நீதியானதாகவும் இருக்கக்கூடிய அமைப்பு முறை எதுவாகவிருக்கும் என்பதை ஆராயக்கூடிய நிலையிலும் லொக் இருந்தார். தமக்கிடையேயுள்ள தார்மீகத் தொடர்புகள், பிரசைகள் என்பதிலும் பார்க்க மனிதர்கள் என்ற இயற்கையான மதிப்புநிலை ஆகியன சம்பந்தமாய் தனிமனிதரின் உரிமைகட்காக லொக் வாதாடும்போது, தனிமனிதரின் முழு உலகமும் அரசியல் அரங்கிற்கு வெளியே இருக்கின்றது. கொரிந்திலுள்ள கிறித்துவ இரகசியக் குழுக்களினதும், யாவருக்குமே காணப்படாத தேர்ந்தெடுத்த சமுதாயத்தினதும், மத்தியகாலத் திருச்சபையின் நிறுவன அமைப்பினதும் எதிரொலிகளைத் திரும்பத் திரும்பக் கேட்க முடிகின்றது. மறுதலைக் கிறித்துவ உலகிலே ஒவ்வொரு மனிதரும் தமக்குத்தாமே போப்பாண்டவராக மாறிவிட்டார். தனிமுதன்மையையுடைய நாடு—அரசுகள் என்ற புதிய அரசியல் வடிவத்தில் ஒருமுகப்படுத்தப்பட்ட குடியியல் அரசாங்கங்களுக்குரிய மகுடாபிசேகம் செய்யப்பட்ட மன்னர்கள் இரு வாள்களினதும் இரட்டை அதிகாரங்களை மரபுவழியுரிமையாகப் பெற்றுர்கள். கிறித்துவ சமூகக் கோட்பாடு இரண்டாகப் பிரிந்து ஒன்றிற்கொன்று மாறுபட்டுப் போனதாகவும் ஓர் அர்த்தத்திலே கூறலாம். இந்தக் கொள்கைச் சிக்கலை அவிழ்க்க வேண்டுமென்ற உள்ளுணர்வுடனேயே லொக் தமது முயற்சிகளை மேற்கொண்டாரா என்பது சந்தேகத்திற்குரியதே. ஆனுல், மேற்குலக அரசுகளின் செல்வாக்கு இன்றுவரையிலே தொடர்ந்திருப்பதைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு, 17 ஆம் நூற்றுண்டின் இறுதிக் கட்டத்தில் ஐரோப்பாவை எதிர் நோக்கிய அரசியற் பிரச்சினைகளைப் பகுத்தாராய்ந்து முறைப்படுத்திக் கூறுவதில் அவர் எவ்வளவு பெற்றிபெற்ருர் என்பதை எம்மாற் கண்டுகொள்ள முடிகின்றது.

முந்திய அரசியற் சிந்தனையாளர் செய்ததைப் போன்று திருச்சபையின் நிறுவன அமைப்பிற்குள் இருந்து தன்னிச்சையான அரசியல் வலுவைக் கண்டிக்காமல், கொள்கையளவில், அரசியல் அரங்கிற்கு வெளியேயிருந்து தமது கண்டனத்தைத் தெரிவித்தமை லொக்கின் கண்டனத்தின் முக்கியத்துவமாகும். அரசியல் ஒற்றுமையைக் கொண்டிராதவர்களாகக் கருதப்பட்ட மக்கள் நாகரிகமற்றவர்களோ, போர் விருப்புடையவர்களோ, கடவுளாற் கைவிடப்பட்டவர்களோஅல்லர். பொதுநன்மைக்காக இயற்கையால் வற்புறுத்திக் கூறப்படும் உரிமைகளை அமைதியாக அனுபவிப்பதில் ஆர்வமும் அக்கறையும் கொண்ட, தார்மீகப் பண்பையும் பகுத்தறிவையுமுடைய தனிமனிதர்களின் கூட்டமே அதுவாகும். கொள்கையளவில் இயற்கையின் அரசியற் சார்பற்ற அரசுடன் ஒப்பிடுவதன் மூலம், அரசியல் நிறுவனங்களை விளக்கும்முறை, அல்லது அவற்றுக்கு நியாயங் காட்டி விளக்கும் முறை, பதினெட்டாம் நூற்றுண்டின் இறுதிப் பகுதியில் அதிகமாகப் பின்பற்றப்பட்டு வந்தது. இயற்கையின் அரசு என்ற கருதுகோளின் அடிவேரைச் சிசரோவிடமும் அரிஸ்தோத்திலிடமும் காண முடிகின்ற போதிலும், குடியியல் அதிகாரத்தின் ஆட்சியெல்லைக்கு வெளியேயுள்ள மனிதத் தொடர்புகளின் பரப்பை வரையறை செய்வதற்குப் பதினேழாம் பதினெட்டாம் நூற்றுண்டுகளைச் சேர்ந்த சமூகச் சிந்தனையாளர்கள் அக்கருத்தைப் பயன்படுத்தியபோது, புராதன சிந்தனையாளரிடமிருந்து எதையும் இரவல் வாங்கவில்லை. அத்துடன், குடியியல் ஒழுங்கிலிருந்து வெளியேறியவர்களாகக் கொள்கையளவிற் கருதப்பட்ட மக்களை வர்ணிப்பதற்கு அவர்கள் பயன்படுத்திய இந்த ஏற்பாடு, முரண்பாடுகளைக் கொண்டிராததாகவோ விடயத்தை நன்ருக விளக்குவதாகவோ இருக்கவில்லை. இந்த நிலை சரித்திரத்தில் ஒரு கண நேரம் மாத்திரமே நிலைத்திருக்கக்கூடியது என்பதை நிரூபிப்பதற்காக ஹொப்ஸ் அக் கருதுகோளைப் பயன்படுத்தினர். பழைய காலத்திலே பறித்தெடுக்கப்பட்டனவும் சீர்திருத்தப் பெற்றவுமான அரசியல் நிறுவனங்கள் மூலம் திரும்பவும் பெறக்கூடியதான இலட்சிய நிலையை அக்கருத்துக் குறிப்பதாக ரூசோ கருதினர். உண்மையில் இயற்கையான சமூக உறவிற்கான அக்கறைகளை (அவை அரசியலுக்கு முற்பட்டவை என்ருே அரசியலுடன் தொடர்பற்றவை என்ருே நாம் அழைத்தபோதிலும்) குறிப்பிடுவதற்குக் குழப்பம் மிகுந்த இந்த ஊகத்தை லொக் மட்டுமே பயன்படுத்துகின்ருர். மாந்தரின் எல்லாத் தொடர்புகளுக்கும் தேவையாக இருப்பதனுல், அந்த அக்கறைகள் உண்மையில் இயற்கையானவையாக இருக்கின்றன. தார்மீக சட்டத் தொகுதியொன்றை ஏற்றுக்கொள்ளும் விடயத்திலே பகுத்தறிவுள்ள தனிமனிதர் யாவரையும் ஒற்றுமைப்படுத்துவதனுல், இந்த அக்கறைகள் சமூக உறவிற்கான இயல்புகளைக் கொண்டிருக்கின்றன. இந்தக் கருதுகோள் தார்மீக அடிப்படையைக் கொண்டிருக்கின்றது என்பதை மறுக்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், மத்தியகாலத் திருச்சபைக் கொள்கையைப் போன்ற மத அடிப்படையை அது கொண்டிருக்கவில்லை என்பதும் தெளிவு. புராதன அர்த்தத்தில் இந்தக் கருதுகோளை சமூகவியற் கருதுகோள் என்று கூறமுடியுமேயல்லாது அரசியற் கருதுகோளாகக் கொள்ள முடியாது என்பதும் வெளிப்படை. இயற்கைச் சமூகத்திலுள்ள உறுப்பினர்களின் தார்மீக சமத்துவத்திற்கு மதிப்புக் கொடுக்கும் விடயத்தில் மட்டுமே இந்தக் கருதுகோள் தனித்தன்மையுடையதாய் இருக்கின்றது. மனிதப் பண்பு, நியாயம், ஒரே கடவுளின் விருப்பத்தை வெளிப்படுத்தும் தார்மீகச் சட்டம், இந்த உலகில் வாழ்ந்து அடுத்த உலகில் மீட்பைப் பெறுவதில் அவர்களுக்குள்ள அக்கறைகள் ஆகியவற்றை லொக்கின் அரசியற் சார்பற்ற பகுத்தறிவுள்ள மக்கள் தங்களின் பொதுப் பண்புகளாகக் கொண்டிருந்தனர். ஆனால், கொள்கையின் அடிப்படையிற் பார்க்கும்போது, அவர்களுக்குத் திருச்சபையோ அரசோ இருக்கவில்லை.

குடியியல் அமைப்பு ஏற்படுவதற்கு முன்பு இருந்த சமூக நிலைபற்றிக் குறிப்பிடும் அரசியற் சிந்தனையாளர்கள் பயன்படுத்தும் உருவகங்களில், அந்தக் காலநிலையானது ஒப்பந்தத்தின் விளைவாக ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. பல்வேறு உடன்படிக்கைகளும் ஒப்பந்தத்தைப் பெரிதளவில் ஒத்திருந்தபோதிலும், அவைகளை ஒப்பந்தம் என வர்ணிப்பது தவறானதாகும். தனித்தனியே பிரிந்திருந்த மக்கள் ஒரு சமூகத்தை எந்த வகையில் உருவாக்கினர் என்பதை ஆராயும் ஹொப்ஸ், வேதாகமத்திலிருந்து எடுக்கப்பட்ட ஏற்பாடு என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றார். ஏற்கனவே இருக்கும் சமூகத்தின் உறுப்பினர்கள், பொதுத் தார்மீக இலட்சியத்தை அடையும் பொருட்டுத் தமது சமூக, அரசியல் தொடர்புகளை ஒருமனதாகத் திருத்தியமைப்பதற்கு எந்தெந்த நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும் என்பதுபற்றி ரூசோ ஆராய்கின்றார். அரசியல் ஆட்சி அல்லது அரசாங்கம் எவ்வாறு அமைக்கப்படுகின்றது; கட்டுப்படுத்தப்படுகின்றது என்பது பற்றிய பிரச்சினைகளை லொக் தமது விசேட கவனத்திற்கு எடுத்துக் கொள்கின்றார். நம்பிக்கைப் பொறுப்பு என்ற அவரின் உருவகம், அவர் எந்த வகையான தொடர்புகளை எதிர் நோக்குகின்றார் என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றது. அரசியல் தொடர்புகள் எவ்வாறு அமைந்திருத்தல் வேண்டும் என்ற தமது கருத்துக்களின் அடிப்படையிலேயே இந்தச் சிந்தனையாளர் எல்லோரும் அத்தொடர்புகளை ஆராய்கின்றனர். அவர்கள் படம் பிடித்துக் காட்ட விரும்பிய தொடர்புகளிலும் பார்க்க அவர்கள் பயன்படுத்திய உருவகங்கள் முக்கியத்துவம் குறைந்தவையாகவே காணப்படுகின்றன. இந்த உலகிலும் அடுத்த உலகிலும் வேறுபட்ட இரண்டு இலட்சியங்கள் பின்பற்றப்படுதலால் வெவ்வேறு அரசியலமைப்புச் சட்டங்களைக் கொண்ட வெவ்வேறு கூட்டவைகள் தேவைப்படுகின்றன என்ற கருத்தை லொக் வற்புறுத்துவதனால், மத்தியகாலக் கருத்துக்களுக்குப் புத்துயிர் அளிப்பவராகத் தென்படுகின்றார். ஆனால், மோட்ச உலக யாத்திரைக்குத் தேவையான முடிவுகளையும் நடவடிக்கைகளையும் எடுக்கும் பொறுப்பைப் பகுத்தறிவுடைய குடிமக்களின் சொந்தத் தீர்மானத்திற்கு விட்டுவிடல் வேண்டும் என வற்புறுத்துவதன் மூலம் பிற்காலக் கருத்துக்களுக்கு முன்னோடியாக அவர் திகழ்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிமுதன்மை அரசாங்கத்தை ஆதரிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட கொள்கை வாதங்களில் முக்கியமானவைகளை ஆராய்வதில் லொக் விசேட கவன மெடுத்துக் கொண்டார். அவர் தமது முதலாவது ஆராய்ச்சிக் கட்டுரையிலே, தெய்வவழியுரிமைக் கொள்கையை விரித்துரைப்பதற்குச் சர். ரொபேட் பில்மர் எடுத்த முயற்சிகளைக் கண்டிக்கின்றார். இரண்டாவது ஆயாய்ச்சிக் கட்டுரையிலே சட்டத்திற்குக் கட்டுப்படாத மத்திய இறையுரிமை இருத்தல் வேண்டும் என்ற வாதத்திற்கு, இயற்கையின் அராஜக நிலைமை என்ற தமது கருத்தை ஹொப்ஸ் ஆதாரமாகக் கொண்டிருப்பது தவறானது என்பதை அவர் சுட்டிக் காட்டுகின்றார். இயற்கை நிலையை யுத்த நிலையுடன் சிலர் குழப்பிவிடுகின்றனர் என்று லொக் கூறுகின்றார். அமைதியையும் நல்லெண்ணத்தையுமுடைய இயற்கைச் சூழ்நிலையுடன் இயற்கை நிலையை ஒப்பிடும் அளவிற்கு அவர் கூறாதபோதி லும், பகையும் பலாத்காரமும் மலிந்த சூழ்நிலையிலும் பார்க்க முற்கூறிய சூழ் நிலையே இயற்கை நிலைக்கு மிகவும் அணித்தாக இருப்பதாக அவர் நம்புகின்றார். புகழ்பெற்ற இந்தக் கருத்தை ஓர் உண்மையாக அவர் அமைத்துக் கொடுத்துள் ளார். லொக்கின் தெளிவான வரைவிலக்கணம் கூறுவதாவது : "தமக்கிடையே தீர்ப்புக் கூறக்கூடிய அதிகாரத்தையுடைய பொது மேலதிகாரியொருவர் இந்த உலகில் இல்லாதபோது, மக்கள் ஒன்றாகக் கூடி நியாயத்தின்படி வாழ்க்கை நடத்தும் நிலையே உண்மையான இயற்கை நிலையாகும்."[1] தீர்ப்பளிக்கும் அதிகா ரத்தையுடைய ஒருவர் இல்லாததையும், இந்த இயற்கைச் சமூகத்தின் உறுப் பினர்களிடையே அதிகார சமத்துவம் இருப்பதையுமே லொக் வற்புறுத்திக் கூற விரும்புகின்றார். எனினும், இதன் விளைவாக அவர்கள் தங்கட்கான தார் மீகப் பிணைப்புக்களிலிருந்து விடுவிக்கப்படவில்லை. "சமூகத்தின் உறுப்பினர்கள் என்ற முறையிலல்லாமல், மனிதர்கள் என்ற முறையில் உண்மையும் மதநம்பிக் கையும் எல்லா மாந்தரிடமும் இருப்பதுவே அதற்குக் காரணம்."[2] "பொது நியா யம், ஒப்புரவு" ஆகியவைகட்கு அவர்கள் பொதுவாகக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டியவராவர். "மனிதரின் சொந்தப் பாதுகாப்பிற்காக, அவர்களுடைய நடத்தைகளின் அளவு கருவிகளாக பொது நியாயம், ஒப்புரவு ஆகியவைகளைக் கடவுள் ஏற்படுத்தியுள்ளார்."[3]

அரசியலற்ற மனிதனைப்பற்றிய இந்த வர்ணனை அரிஸ்தோத்திலாற் சிந்திக் கவே முடியாத தன்மையினதாய் இருப்பதுடன், அகுஸ்தீனுக்கும் ஆச்சரியத் தைக் கொடுத்திருக்கும். இயற்கைச் சமூகத்திற்கு அரசியல் வேலைத்திட்டம் எந்தவித அபிவிருத்தியையும் ஏற்படுத்தவில்லை என்பது உண்மையானால், அர சாங்கம் வேண்டுமென்பதை விளக்குவதற்கு லொக் அவர்களால் எந்தவிதமான ஆதாரத்தைக் காட்டமுடியும் என்று நாம் கேட்பதைத் தவிர்க்க முடியாதல்

[1] *The Second Treatise of Civil Government and A Letter concerning Toleration* Oxford, 1946 ), பக். 11

[2] *Second Treatise*, பக். 9

[3] *Second Treatise*, பக். 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லவா? குடியியலுக்கு வரையறுத்த வலுவை அவர் அனுமதிப்பதும், தனிமனிதனின் உரிமைகள் என்ற தன்னியல்பான அரசியலுக்கு அப்பாற்பட்ட பகுதியைப் பாதுகாப்பதே குடியியல் அதிகாரத்தின் தலையாய கடமையாகும் என அவர் வற்புறுத்துவதும், மனிதன் பகுத்தறிவிற்கொப்பவே நடந்துகொள்வான் என்ற நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டுள்ளன. சுருக்கமாகக் கூறுவதானால், இயற்கைச் சட்டத்தின் விதிகட்குக் கீழ்ப்படிந்து நடக்கச் சிலர் தவறுவதனாலேயே அரசாங்கம் வசதியான-தேவையான வசதி என்று சொல்லக்கூடிய-ஓர் அமைப்பாக இருக்கின்றது. பகுத்தறிவிற்கொப்ப நடக்காத சிறுபான்மையினர் அமைதிக்குப் பங்கம் விளைவிப்பர். விடுதலை என்ற தலையாய இயற்கை உரிமை நிச்சயமற்றதாகவும் பறிக்கப்படும் ஆபத்திற்கு இலக்கானதாகவும் இருக்கின்றது. சொத்துரிமை பாதுகாப்பற்றதாகவும் நிலையற்றதாகவும் இருக்கின்றது. "எவ்வளவுதான் சுதந்திரமானதாக இருந்தாலும், அச்சங்களும் ஆபத்துக்களும் நிறைந்துள்ள சூழ்நிலையிலிருந்து வெளியேறவே" மக்கள் விரும்புவர் என்கின்றார் அவர்.[1] அத்துடன் தார்மீக அடிப்படையில் அமைந்த வாதமொன்றும் உண்டு. பகுத்தறிவிற்கு ஒவ்வாதவாறு நடப்பதன் மூலம் குற்றங்களை இழைத்த சிறுபான்மையினரை இயற்கை நீதிப்படி தண்டிக்க முற்படும்போது, மக்கள் பட்சபாதகமாக நடந்துகொண்டு குற்றவாளிகள் மீது பழிதீர்த்துக்கொள்ள முற்படலாம். இந்தக் கருத்தும், குற்றம் இழைப்போருக்கு நீதியான தண்டனையைக் கொடுப்பது—நன்கமைக்கப்படாத சமூகத்தில் இது எப்போதுமே சாத்தியமில்லை—சம்பந்தமான நடைமுறைப் பிரச்சினைகளும், மத்திய அதிகாரமொன்றினாற் பிரகடனஞ் செய்யப்பட்ட சட்டம், அறிமுகமான, ஆனால் பாரபட்சமற்ற நீதிமுறை, சமூக விரோதிகளைத் தேடிப் பிடித்துத் தண்டிக்கும் அதிகாரம், ஆகியவைகள் அத்தியாவசியமான அமைப்புக்களே என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியத்தை லொக்கிற்கு ஏற்படுத்துகின்றன. இயற்கைச் சமூகத்தாலே சரியான முறையிற் பாதுகாக்கப்படாத சில தார்மீக இலட்சியங்களை அடைவதற்கு இந்த அரசியல் ஒழுங்குகள் தேவையானவையே என்பது தெளிவாகின்றது. குடியியல் அதிகாரத்தின் அத்தியாவசியத்தை விளக்குவதற்காகக் காட்டப்பட்ட அமிசங்களாகிய பாவிகள் மீது கடவுளின் தீர்ப்பை அமுல் செய்வது, பூமியிலே திருச்சபைக்குப் பாதுகாப்பு அளிப்பது ஆகிய விடயங்களிலிருந்து இந்த நோக்கம் ஓரளவு வேறுபட்டுள்ளது என்பது தெளிவு.

தவறான வழியிற் செல்லும் மனிதர்களின் தலையீட்டிலிருந்து லொக் பாதுகாக்க விரும்பிய இயற்கை உரிமைகளை வாழ்க்கை, சுதந்திரம், சொத்துடைமை ஆகிய மூன்று பதங்களாற் குறிக்கலாம். 'தனது சொத்துக்களை அமைதியாகவும் பாதுகாப்புடனும் அனுபவிப்பதே மனிதன் சமூகத்தில் இணைந்து வாழ முற்பட்டதன் பெரிய இலட்சியமாகும்' என்று ஒரு பந்தியில் அவர் கூறுகின்றார்.[2] முடிந்தவரையும் தமது சொந்த வாழ்க்கையை நிச்சயப்படுத்திக்கொள்வ

[1] *Second Treatise*, பக். 62

[2] *Second Treatise*, பக். 66

6—CP 2592 (1/68)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்கான மாந்தரின் வெளிப்படையான உரிமையையும், மற்றவர்களின் ஆணவமான தலையீடெதுவுமில்லாமல் தமது அலுவல்களை ஒழுங்கு செய்தற்குப் பகுத்தறிவுள்ள மக்களுக்கு இருப்பதாகக் கொள்ளப்படும் உரிமையையும் வாழ்க்கை, சுதந்திரம் என்ற பதங்கள் குறிக்கின்றன. சாதாரணமாக அவர்கள் இந்த ஒழுங்குகளைப் புத்திசாதுரியமான முறையிற் செய்வார்கள் என்று லொக் கருதிக்கொள்கின்றார். ஆனால், சொத்துடைமை என்ற பதம் லொக்கின் கொள்கையைக் கற்கும் மாணவர்களிடையே மட்டுமல்லாமல், அவரின் காலந் தொட்டு அவரின் செல்வாக்காற் பாதிக்கப்பட்ட அரசியல் நிறுவனங்களிடையேயும் பெரிய குழப்பத்திற்கு இடமளித்துள்ளது. குறிப்பாக, பொருளாதார நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்கு எந்த அளவிலே குடியியல் அதிகாரம் தலையிடலாம் என்ற வாதம் முழுவதையும் லொக்கின் கொள்கையிலிருந்து மேற்கோள் காட்டுவதன்மூலம், அந்த மேற்கோள் ஒவ்வாததாக மாறியதன் பின்பும், அதனைத் தரை தட்டச் செய்துவிட்டனர்.

சொத்துரிமை என்ற பதத்தை மிகவும் விரிவான அர்த்தத்திலேயே லொக் பயன்படுத்தினர். முதலாவதாக, ஒவ்வொரு மனிதனுடைய உடலும், அடிமைத் தத்துவத்தை நாம் நிராகரிப்பதாயின், அவனவனுடைய சொத்து என்பதை மறுக்கமுடியாது. அத்துடன், தனிமனிதன் தான் வாழும் உரிமையைப் பிரயோகித்ததன் விளைவாக, இம்மைக்குரிய அல்லது பொருளாதாரத்திற்குரிய துறையில் எடுத்த நடவடிக்கைகளினூற் கிடைத்த பயன்களையும் சொத்துடைமை என்ற பதம் குறித்தது. மற்றவர்கட்கும் போதிய காணியிருந்தால், சொத்தைச் சேர்க்கும் இந்த நடவடிக்கையின் விளைவாகச் சமூகத்தைச் சேர்ந்த உறுப்பினர்களிடையே தகராறு, போட்டி முதலியவை ஏற்படமாட்டா என்று லொக் கொள்கின்றூர். அந்தக் காலத்துப் பொருளாதாரச் சொத்தின் நியம அளவாகக் காணியே கருதப்பட்டது. மற்ற வகைப் பொருள்கள் யாவும் அழிந்துவிடும் இயல்பைக் கொண்டவையாதலின் அவைகளைச் சேகரித்து வைக்கும் வழக்கம் இருக்கவில்லை. ஒவ்வொரு மனிதனும் தனது காணியிற் செலவிடும் உழைப்பின் மூலமே அக்காணிகளை வைத்திருக்கும் உரிமையைப் பெற்றான். லொக்கின் காலத்திலேயே நாணயம், வங்கிக் கையிருப்பு ஆகியவை பயன்படுத்தப்பட்ட முறையானது சொத்துடைமையே ஆபத்துக்குறைந்ததாகும் என்ற உணர்ச்சியை ஏற்படுத்திற்று. இந்தப் புதிய காரணியைப்பற்றி லொக் அறிந்திருந்தபோதிலும், தமது கொள்கையை அது எவ்வாறு பாதிக்கும் என்பதை அவர் தீர ஆராயவில்லை. பொருளாதார நடவடிக்கைகள் முழுவதும் சொத்துடைமை வைத்திருப்போரின் பொறுப்பாகவே இருத்தல் வேண்டும் என்றும், சொத்துக்கள் உடையோரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவே குடியியல் வலு உருவாக்கப்பட்டது என்றும் அமைந்துள்ள முடிவுகள் இவ்வாதத்திலிருந்து பெறப்பட்டவை. இந்த முடிவுகள் மிகவும் செல்வாக்குப் பெற்றுவிளங்கியதுடன், இன்னும் பின்பற்றப்பட்டும் வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கை உரிமைகளைப் பாதுகாப்பதன்மூலமே குடியியல் அதிகாரம் தான் செல்லுபடியாவதற்கான நியாயத்தையும் அங்கீகாரத்தையும் பெறுகின்றது என்ற நம்பிக்கையால் எழும் அரசியல் விளைவுகள் மிகவும் முக்கியமானவை. முதலாவதாக, அரசாங்கம் இயற்கைச் சமூகத்தின் உறுப்பினர்களால் உருவாக்கப்பட்டமையினால், அது அந்த அதிகாரத்தைத் தொடர்ந்து பெறுவது, குடிமக்கள் என்ற முறையில் அந்த உறுப்பினர்களின் இணக்கத்திலேயே தங்கியிருக்கின்றது என்று வாதிக்கப்படலாம். அம்மக்கள் தங்களின் இணக்கத்தைப் பிறக்கீடு செய்து கொண்டால், தனக்கு ஆதரவளிக்குமாறு அரசாங்கம் கடவுளைக் கேட்டுக் கொள்ளமுடியாது. இங்கு லொக்கினுடைய சிந்தனைக்குச் சனநாயக முறையில் விளக்கம் கொடுப்பதில் நாம் மிகவும் கவனமாக இருத்தல் வேண்டும். தற்காலத்தின் சனநாயக நடைமுறை என்ற கருதுகோளில் இணக்கம் என்ற கருத்து இடம்பெற்றிருக்கின்ற போதிலும், அரசியல் விளைவுகளெவையுமில்லாத ஒரு தொடர்பற்ற அர்த்தத்திலன்றி, லொக்கின் கொள்கையிலே மக்களின் விருப்பத்தின் பேரிற் சட்டமியற்றுதல் என்ற கருத்து எந்த விதமான பங்கையும் வகிக்கவில்லை. ஐயமில்லாத விதிப்புக்களின் உருவில் முறைப்படி பிரகடனஞ் செய்யப்பட்ட இயற்கைச் சட்டங்களைப் பகுத்தறிவிற்கொப்ப அங்கிகரிப்பதை ஆதரித்து அவர் வாதாடுகின்றாரேயல்லாமல், விருப்பப்படி உருவாக்கப்படாத சட்டங்களுக்குக் கீழ்ப்படியும் கடமை எமக்கில்லை என்பதை அவர் சுட்டிக் காட்டவில்லை. புதிய அரசியற் சமுதாயங்கள் ஆரம்பிக்கப்பட்டமை, குறிப்பாக அமெரிக்கக் குடியேற்ற நாடுகளிலே அறியப்பட்டதொன்று என்றாலும், இணக்கம் குறிப்பாயமைந்துள்ளதொன்று என்பதை லொக் ஏற்றுக் கொள்கிறார். குறிப்பாயமைந்துள்ள அல்லது உய்த்தறியப்படுகின்ற இணக்கம் செல்லக்கூடியதல்ல என்று லொக் கருதவில்லை. நீதி பிறழ்ந்துவிட்டது என்று எண்ணினால், அல்லது தனது பற்றுறுதியை மாற்றிக்கொள்ளவேண்டும் என்று சுதந்திரமான முறையில் முடிவு செய்தால், தனது விசுவாசத்தைப் பிறக்கீடு செய்துகொள்ளும் உரிமை ஒவ்வொரு குடிமகனுக்கும் உண்டு என்று கொள்வதிலேயே லொக்கினுடைய வாதத்தின் ( கிய வலிமை யாவும் இருப்பது அதற்குக் காரணமாகும். ஆள்பவர்கள் உட்பட எல்லா மக்களும் ஒரே தார்மீக விதிகட்குக் கீழ்ப்படிந்து நடக்கின்றனர் என்ற எடுகோளானது, அவ்விதிகளிலிருந்து விலகி அல்லது அவைகளை மீறி நடக்கும் சம்பவங்கள் மிக அரிதானவையாகவே இருக்கும் என்பதற்கு உத்தரவாதமளிக்கின்றது.

கருத்துவேறுபாடுகள் இருக்கும் சந்தர்ப்பங்களிலே பெரும்பான்மையினரின் இணக்கம் கிடைக்கப்பெறவேண்டும் என்று வாதாட இந்த எடுகோள்தான் லொக்கிற்கு உதவியது. பெரும்பான்மையினரின் தீர்ப்பை ஆதரிக்குமுகமாக 'அதிக பலம் பிரயோகிக்கப்படும் பக்கம்' உடல் அசைவதை அவர் உருவகப்படுத்திக் காட்டுகின்றார். குடிமக்களுட் சிறுபான்மையினரே சமூகத்திற்கு விரோதமானவகையில் நடந்துகொள்வார்கள் என்ற அவரின் நம்பிக்கை செல்லக்கூடியதாகவிருந்தால், சமயத்துக்கேற்ற சூழ்நிலையிலிருந்து பெறப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாதம் லொக்கிற்குத் தேவைப்படாது. அரசியல் அதிகாரத்திற்குக் கீழ்ப் படிந்து நடக்கும் உண்மைநிலை அவ்வதிகாரம் முறைப்படி பிரயோகிக்கப்படுகிறது என்று கொள்வதற்கு இடமளிக்காது என்ற கூற்று, அவரின் உண்மையான கருத்தை எடுத்தியம்புகின்றது. அதிகாரம் சரியான முறையிற் பிரயோகிக்கப்படுகின்றதா என்பதை அரசியல் வலுவிற்கு வெளியேயுள்ள அளவுகருவி ஒன்றைக்கொண்டே அளவிடல்வேண்டும். குடி மக்களின் இணக்கம் (சொத்துரிமைகளை அவர்கள் அனுபவிப்பதைக்கொண்டு இதை அறியலாம்) அல்லது இயற்கைச் சட்டத்தின் எல்லைகட்குள் அரசியல் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தல் ஆகிய இரண்டில் எதனையாவது அந்த அளவுகருவியாகக் கொள்ளமுடியும். இந்த இரண்டு அளவுகருவிகளையும் ஒன்றோடொன்று இறுகப் பிணைத்து, அநீதியான முறையிற் பிரயோகிக்கப்படும் அரசியலதிகாரம், பெரும்பாலான குடிமக்களின் அங்கிகாரத்தை மிக விரைவில் இழந்துவிடுவதே அதற்குக் காரணமாகும். இக்காரணத்தினாலேயே பெரும்பான்மையினர் 'சமுதாயத்தின் பூரணவலுவையும் இயற்கையாகவே தங்களிடம்..................கொண்டுள்ளனர்' என்று லொக் கூறுகின்றார்.[1]

லொக்கைப் பொறுத்தவரையில் அரசியல் வலுவின் பிரயோகம் வரையறைக் குட்பட்டதொன்று. 'மக்களின் நலன், பாதுகாப்பு, அமைதி' ஆகியவைகளை மட்டுமே அரசியல் வலு தனது இலட்சியங்களாகக் கொண்டிருத்தல் வேண்டும். அரசியல் வலு பின்பற்றும் வழிமுறைகள், எல்லாக் காலத்திற்கும் சட்டத்தின்படி வரையறை செய்யப்பட்டுள. 'பொதுநலவாயத்தின் சட்டவாக்க அல்லது மேலாண்மை வலுவைக் கொண்டிருப்பவர்கள், பிரகடனம் செய்யப்பட்டனவும் மக்களுக்குத் தெரிந்திருப்பனவுமான நிலையான சட்டங்களின்படி ஆட்சியை நடத்தவேண்டுமேயல்லாமல், அந்தந்த நேரங்களில் உருவாக்கப்படும் கட்டளைகள் மூலமோ ஆணைகளின்படியோ ஆட்சியை நடத்தலாகாது. அச்சட்டங்களின் கீழ் ஏற்படும் தகராறுகளை அல்லது கருத்து வேற்றுமைகளை நேர்மையானவர்களும் பாரபட்சமற்றவர்களுமான நீதவான்கள் தீர்த்துவைத்தல் வேண்டும். தகைய சட்டங்களை அமுல் செய்வதற்கு மட்டுமே நாட்டிலுள்ள சமுதாயத்தின் வலிமை பிரயோகிக்கப்படல் வேண்டும்...............'[2] எனவே, குடியியல் நிலை தோன்றுமுன்பு கொள்கையளவிலே தனிமனிதர்களால் நிர்வகிக்கப்பட்டவையும் பாதுகாக்கப்பட்டவையுமான பொது உரிமைகளைச் சட்டவாக்க, நீதி நிர்வாக வலுக்கள் பிரதிபலிக்கின்றன. அரசியற் சமூகத்தில் ஒன்றாக இணைக்கப்பட்ட இந்த ஒழுங்கு முறை தனது ஒன்றிணைப்பை இயற்கைச்சட்டத்திலிருந்து பெறுகின்றது. இச்சட்டந்தான் அரசியற் சமூகத்தை நீதியானதாகவும் ஆக்குகின்றது.

சட்டத்திற்கும் மக்களுக்கும் நடுவே இருப்பதோடு, இரண்டிற்கும் விடையிறுக்கவேண்டிய நிலையிலும் இருப்பதனாலேயே சட்டமன்றம் அல்லது சட்டத்தைப் பிரகடனஞ் செய்யும் நிறுவனம் அரசில் மேலான நிலையைப் பெறுகின்றது. எனினும், சட்டமன்றம் இறையுரிமையைக் கொண்டிருப்பதாக முழுமை

[1] *Second Treatise*, பக். 65 [2] *Second Treatise*, பக். 64

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யான அர்த்தத்திற் கூறமுடியாது. சட்டமன்றம் நம்பிக்கைப் பொறுப்பையே பிரயோகிக்கின்றது என வர்ணிப்பதன்மூலம் இறைமை பற்றிய பிரச்சினைகள் சம்பந்தமான இடர்களை லொக் தவிர்க்கின்றார். பயன்பயப்பதும் நன்றாக உதவுவதுமான இந்தக் கருதுகோள் மிகவும் பரந்து செல்வாக்குப் பெற்றிருந்தது; அவ்வாறு செல்வாக்குப் பெறும் தகுதியையும் அக்கருதுகோள் பெற்றிருந்தது. மக்களினுடைய சட்டத்தின் நம்பிக்கைப்பொறுப்பு மன்றமாக இருப்பதனால் தனக்கு அரசியல் மேலாண்மை இருக்க வேண்டுமென்று சட்டமன்றம் கோருவது முறையே. இந்த நம்பிக்கைப் பொறுப்பிலிருந்து நன்மைகளைப் பெறுகின்ற காரணத்தினால் சமுதாயம் மரபுவழிவந்த இறைமையை அனுபவிக்கின்றது. இயற்கைச் சட்டத்தைப் பிரதிபலிப்பதுவும் கடவுளைப் பிரதிநிதித்துவம் செய்வதுமான சட்டமே குடிமக்களின் இறுதி விசுவாசத்தைப் பெறுகின்றது. இந்தச் சட்டத்தின் பெயராலே தங்களை ஆட்சிபுரிபவர்களைக் குடிமக்கள் பதவி நீக்கம் செய்வதும் முறைப்படி அமைவதாகவிருக்கும். அரசியல் வலு, சட்டத்தாற் கட்டுப்படுத்தப்படுவதோடு சட்டத்தின்படி பயன்படுத்தப்படவும் வேண்டும். சட்டமன்றத்திலிருந்து நிர்வாக வலுவைப் பிரித்தல் வேண்டும் என்று லொக் ஆலோசனை கூறியதற்கு, சட்டமன்றத்திற்கு நிர்வாக வலு கீழ்ப்படிவாக இருத்தல் வேண்டும் என்பதோடு, 'மனிதனின்' உறுதியற்ற இயல்பானது வலு முழுவதையும் தனதாக்கிக் கொள்ள முயலும்[1] என்ற பயமும் காரணமாக இருந்தது.

மிகவும் முக்கியமான காரணத்துக்காகவன்றி மற்றும்படி மோட்ச உலகிற்கு மேன்முறையீடு செய்யும் இறுதி உரிமையைக் குடிமக்கள் கொண்டிருந்தனர். அவர்கள் புரட்சி செய்து புதிய அரசியல் அமைப்பை உருவாக்கலாம். அத்தகைய சந்தர்ப்பத்தில் அரசாங்கம் மட்டுமே கலைக்கப்படும்; இயற்கைச் சமுதாயம் எப்பொழுதும் தொடர்ந்திருக்கும். 'தன்னைத்தானே பாதுகாப்பதற்கு அதற்கு ஆரம்பமுதல் இருந்துவரும் உரிமையை'[2] எதனாலும் அழிக்க முடியாது. லொக்கின் கொள்கை முழுவதிலும், ஒரே நியமமான தார்மீக நடத்தையைப் பின்பற்ற வேண்டும் என்ற உள்ளுணர்வைக் கொடுக்கும் பொதுவான பகுத்தறிவின்பாற்பட்ட ஆற்றலை மாந்தர் அனுபவிக்கின்றனர் என்ற எடுகோளைக் காணமுடிகின்றது. இந்த நியம அளவின் அடிப்படையிலேயே அவர்கள் தங்களின் செயல்களை மதிப்பிடுவதோடு, குடியியற் சமூகத்திலே தாம் கீழ்ப்படிய இணங்கியுள்ள சட்டங்களின் நீதித்தன்மையையும் தகுதியையும் நிர்ணயிக்கமுடியும்.

சமூக நன்மை, தனிமனிதன் மீட்பு ஆகிய இரு துறைகளுக்குமிடையேயுள்ள வேறுபாட்டை லொக் தெளிவாகச் சுட்டிக் காட்டுகின்றார். மீட்பானது அடுத்த உலகைச் சேர்ந்ததாக இருப்பதனால் உடனடியாகக் கவனம் முழுவதும் பூவுலக விடயங்களிலேயே செல்லுதல் வேண்டும். ஆனால் இந்த வெவ்வேறு இலட்சியங்களை அடைய முயலும்வகை ஒத்ததாகவிருக்கின்றது. குடியியல் அதிகாரம், மத அதிகாரம் ஆகியவற்றிற்கும் தனிமனிதருக்குமிடையேயுள்ள

[1] *Second Treatise*, பக். 72 [2] *Second Treatise*, பக். 107

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்புகளில் ஏற்படும் மாற்றங்கள் ஒன்றையொன்று நிறைவு பெறச் செய்வனவாகவிருக்கின்றன. இந்தத் தொடர்புக்குரிய மாற்றங்கள், இந்தக் கால கட்டத்தை மத்தியகாலக் கொள்கையிலிருந்தும் நடைமுறையிலிருந்தும் வேறுபடுத்திக் காட்டுகின்றன. லொக் விவரிப்பதைப்போன்ற பகுத்தறிவுள்ள மக்கள் மட்டுமே அவர் கூறும் குடியியல் அரசியலமைப்புச் சட்டத்தை விளக்கமான முறையில் இயங்கச் செய்ய முடியும். அதைப் போலவே இத்தகைய தகைமைகளைக்கொண்ட தனிமனிதரால் மட்டுமே ஒழுங்கமைப்பையுடைய திருச்சபையளிக்கும் கூட்டவை, திருவருட்சாதனம் ஆகியவைகளின் உதவியை ஏற்றுக் கொள்ள மறுக்கமுடியும். குடியியல் அதிகாரம் மதவலுவிலே தங்கியிருக்கும் ஓர் இணைப்பன்று; அதற்குமாறாக அதற்குச் சமாந்தரமானதும் சுதந்திரமானதும் மதச் சார்பற்றதுமான ஓர் அதிகாரமாகும். கடவுளின் வெளிப்பாட்டின் மேன்மைமிக்க சோதனைக்கு உண்மையானது கீழ்ப்பட்டிருந்த காலம் மலையேறி விட்டது. உண்மை என்பது மதச் சார்பற்ற உயர்நிலையைப் பெற்றுவிட்டது. ‘கருத்துரைகளின் உண்மையைப்பற்றி’ சட்டங்கள் அக்கறைப்படவில்லை. அதற்குமாறாக, “பொது அரசினதும் ஒவ்வொரு மனிதனதும் அவனுடைய சொத்துக்களினதும் பாதுகாப்புடனேயே சட்டங்கள் சம்பந்தப்பட்டிருந்தன. உண்மை தனித்து நிற்க அனுமதிக்கப்பட்டால், சட்டங்கள் உண்மையையும் பாதுகாக்கும் என்பதிற் சந்தேகமில்லை”.[1]

ஆன்மீக ஒழுங்கிற்கு இம்மையில் நிலவும் ஒழுங்கு கீழ்ப்படிவாக இருத்தல் வேண்டும் என்று கூறுவதற்கு லொக்கின் எழுத்துக்களில் எமக்கு எந்த விதமான ஆதாரமும் கிடைக்காத போதிலும், இம்மைக்குரிய ஒழுங்கு பகுத்தறிவின்படி உணரப்பட்ட ஒழுங்கிற்குக் கீழ்ப்படிவாகவே இருக்கிறது. பாரம்பரிய ஒழுங்கு முறைகள் மாற்றப்படல் வேண்டுமென்ற கருத்துத் தெரிவிக்கப் படவில்லை. இதே மனப்போக்கில் அரசுகளையும் திருச்சபைகளையும் தனிமனிதர் உருவாக்கினர். ஆனால் அவர்கள் அவ்வாறு செய்தற்கான நோக்கங்கள் வெவ்வேறானவையாக இருந்தன. குடியியல் நலவுரிமைகளைப் பாதுகாப்பதற்கும் வளர்ப்பதற்கும் உருவாக்கப்பட்ட சமூகமாகப் பொதுநலவாயம் இருக்குமானால், “கடவுளுக்கு விருப்பமான முறையெனத் தாங்கள் கருதும் முறையிலும் தம்முடைய ஆன்மாக்கள் ஈடேற்றம் பெறுவதற்குச் சிறந்த முறையெனத் தாம் கருதும் முறையிலும், பகிரங்கமாகக் கடவுளை வணங்கும் பொருட்டுத் தமது சொந்த விருப்பத்தின் பேரில்”[2] தாமாகவே முன்வந்து ஒன்றாகச் சேரும் மக்களின் சமூகமாகத் திருச்சபை திகழும். இந்த இரு துறைகளுக்குமிடையேயுள்ள சகிப்புத்தன்மை அடிப்படைத் தொடர்பாக இருத்தல் வேண்டும். தமது சொந்தத் தீர்மானத்தைச் சுதந்திரமாகச் செய்வதற்கு மக்கள் அனுமதிக்கப் படல் வேண்டும். குடியியல் அதிகாரம் அக்கறை கொள்ளாத காரணத்தால் ஒரு மனிதன் தனது உடல்நலத்தையும் சொத்துக்களையும் கெடுத்துக்கொள்ள முடியுமானால், அவனுடைய ஆன்மாவைப் பற்றிய விடயத்திலே குடியியல்

[1] *A Letter on Toleration*, முற்கூறிய நூல், பக். 151

[2] *A Letter on Toleration*, பக். 129

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரம் தலையிடுவது இதனிலும் குறைவாக இருக்கவேண்டுமல்லவா ? இதைப் போலவே, தனது கோட்பாடுகளை யாவரும் ஏற்றுக்கொள்ளச் செய்வதற்காகத் திருச்சபையானது குடியியல் அதிகாரத்தைப் பயன்படுத்துதலாகாது.

குடியியல் தனிமுதன்மையும் சமயத் தனிமுதன்மையும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையவை. இரண்டாவது ஜேம்ஸ் மன்னரின் ஒழுங்கற்ற ஆட்சியைப்போலவே உரோமாபுரிக்கு அவர் விசுவாசமாக இருந்தமையும் அவர் தம் குடிமக்களின் வெறுப்புணர்ச்சிக்கு மூலகாரணமாக அமைந்தது. எனவே, சகிப்புத்தன்மை பற்றிய லொக்கின் கருத்து அரசியல் விடுதலை பற்றிய அவரின் கோட்பாட்டிற்கு முழுமைத் தன்மையைக் கொடுக்கும் அம்சமாக இருக்கின்றது. இந்த மையக் கருத்து குடியியல் நலவுரிமைகளின் உயர்நிலை என்ற தெளிவான கருத்துடன் இணைந்துள்ளது. குடிமக்களின் இயற்கை உரிமைகளைப் பாதுகாப்பதற்காகச் சட்டத்தின்மூலம் சுதந்திரத்திற்கு உத்தரவாதமளிப்பது, குடியியல் அரசாங்கத்தின் இலட்சியத்திற்கே வேறோர் அழுத்தம் கொடுப்பதாக இருக்கின்றது. குடியியல் அரசாங்கம் பாவிகட்கு எதிராகக் கடவுள் கொடுத்த தீர்ப்பைப் பிரதிபலிக்கின்றது என்ற கருத்திலிருந்தும், அறிவற்றோரின் உடலையும் ஆன்மாவையும் அறிவுள்ளவர்கள் பாதுகாப்பதற்கு உதவும் இயற்கையான சாதனமாகவே குடியியல் அரசாங்கம் திகழ்கின்றது என்ற கிரேக்க நம்பிக்கையிலிருந்தும் மேலே குறிப்பிட்ட கருத்து வேறுபடுகின்றது.

* * * *

பதினெட்டாம் நூற்றாண்டில் லொக்கின் செல்வாக்குப் பெரிதும் பரவியிருந்தமைக்கு இரண்டு முக்கிய காரணங்களைக் கூறமுடியும். ஆங்கிலேயரின் அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ் அமைந்த சுதந்திரம் பலரின் பெருமதிப்பையும் பெற்றிருந்த அந்தக் காலத்தில், ஆங்கிலேயர் புரட்சிக்கு லொக்கின் அரசியற் கொள்கை நியாயங்காட்டி விளக்கியிருப்பதாக நம்பப்பட்டது முதலாவது காரணம். தன்னிச்சையான வல்லாட்சிகள் தார்மீகக் கோட்பாடுகட்குக் கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும் என்ற தமது சமகாலத்து மக்களின் கருத்தை இலகுவாக லொக் விளக்கிக் கூறியிருப்பது இரண்டாவது காரணம். அந்தக் காலகட்டத்தில் மிகவும் பலமுள்ளதும், செல்வச் செழிப்புடையதும், பண்பாட்டுத் துறையில் வளர்ச்சிபெற்றதுமான நாடு—அரசான பிரான்சிலே தார்மீகக் கட்டுப்பாடற்ற வல்லாட்சி நடந்து கொண்டிருந்தது. பிரான்சில் ஒருமுகப்படுத்தப்பட்ட முடிமன்னர்களின் பணிக்குழு முந்திய நூற்றாண்டில் நடைபெற்றதைப் போன்ற வெற்றிகரமான ஆட்சியை நடத்தத் தவறியதுடன் முன்னரிலும் பார்க்கக் கடுமையான கண்டனத்திற்கும் இலக்காகியது. அந்த நூற்றாண்டு முழுவதும் பிரிட்டனுக்கும் பிரான்சுக்குமிடையே மிக நெருங்கிய கலாசாரத் தொடர்புகள் இருந்துவந்தன. அந்த நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தங்களில் பொலிங்புரோக் நாடுகடத்தப்பட்டவராகப் பிரான்சில் வாழ்ந்தபோது, இளைஞரான வோல்டயரும் பின்பு மொன்டஸ்கியூவும் இங்கிலாந்திற்கு விஜயம் செய்தனர். இந்தத் தொடர்புகள் லொக்கின் கொள்கையையும் ஆங்கிலேய அரசியலமைப்புச் சட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைகளையும் பிரபல்யமடையச் செய்தன. முடியாட்சித் தனிமுதன்மைக்குத் தாங்கள் தெரிவிக்கும் கண்டனங்களுக்கு ஆதரவு கிடைப்பதை பிரான்சின் சீர்திருத்தவாதிகள் வரவேற்றனர். மொன்டஸ்கியூவைப் போன்ற சமூகச் சிந்தனையாளர்—அவரின் விசாரணைகள் லொக்கின் விசாரணைகளிலிருந்து வேறுபட்ட அமைப்பை உடையனவாக இருந்தபோதிலும்—பகுத்தறிவுள்ள மக்களிடையே தார்மீக இணக்கமும் ஒற்றுமையும் ஏற்படுவதற்குச் சிறந்த அரசியற் சூழ்நிலை எவ்விதமாக அமைந்திருத்தல் வேண்டும் என்பதை விவரிக்கும் விடயத்தில் லொக்கைப்போன்ற நோக்கத்தையே கொண்டிருந்தனர்.

அந்தக் காலத்திலே பிரான்சில் வெற்றிகரமான அரசியல் புரட்சி எதுவும் நடந்துவிடவில்லை. இக்காரணத்தினுற் போலும், பிரெஞ்சு ஆட்சியைக் கண்டித்தவர்கள், சிறந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட நாடு—அரசானது தார்மீக விடுதலைக்கும் அரசியல் விடுதலைக்கும் விடுத்த பயமுறுத்தல்களையிட்டு மிகவும் கவலையடைந்தனர். எப்படிப் பார்த்தாலும், லொக்குடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, வோல்டயர், மொன்டஸ்கியூ ஆகியோர் அரசியற் பிரச்சினைகளைச் சரித்திர அடிப்படையில் அணுகினர். தார்மீகப் பொறுப்பு வாய்ந்த அரசாங்கங்கள் தமது கடமைகளைச் செய்வதற்குத் தேவையான சமுதாய, அரசியல் நிலைமைகளில் அக்கறை காட்டும் விடயத்தில், மொன்டஸ்கியூ சிறப்பாகக் குறிப்பிடப்பட வேண்டியவராக இருக்கின்றூர். பண்பியல்பான தனிமனிதரின் உரிமைகள் என்ற கொள்கையை ஆதரிக்க மொன்டஸ்கியூ முன்வராத போதிலும், இயற்கைச் சட்டம் சம்பந்தப்பட்டவரையில் லொக்கின் கருதுகோள்களையே அவரும் ஏற்றுக் கொள்கின்றூர். அரசியல், சமுதாய சுதந்திரத்திலே தன்னிச்சையான முறையில் தலையிடுவதைத் தடைசெய்வதே சமநிலையான அரசியலமைப்புச் சட்டத்தின் பிரதான நன்மையாகவிருக்கும் என்று வாதாடும்போது, அரசியல் வலுவிற்கு லொக் விதித்த அதே புள்ளியிலும், லொக் காட்டிய அதே காரணங்களுக்காகவும் மொன்டஸ்கியூவும் எல்லையை விதிக்கின்றூர். தார்மீகக் கருத்து ஒற்றுமை எவ்வாறு ஏற்படுகின்றது; அது எவ்வாறு போற்றிப் பாதுகாக்கப்படுகின்றது என்பனவற்றை மொன்டஸ்கியூ பகுத்து ஆராய்ந்துள்ள முறை லொக்கிலும் பார்க்க நுட்பமானதாக இருக்கின்றது. குறிப்பிட்ட சரித்திரச் சூழ்நிலைகளிலே இத்தகைய தார்மீக ஒற்றுமை வளருவதைச் சிறந்த முறையில் அனுமதிக்கும் அரசியல் அதிகாரத்தின் மாதிரியும் கட்டமைப்பும் எவ்விதமாக இருக்கும் என்ற தமது நம்பிக்கையை அவர் பலமாக வற்புறுத்துகின்றூர்.

முழு அகிலத்திற்கும் பொருத்தமான தார்மீக நியதியினுல் நிர்ணயிக்கப்படும் அகிலத்திற்கும் பொதுவான மனித இயல்பு என்ற கருத்தின் அடிப்படையிலேயே லொக்கைப் போன்று மொன்டஸ்கியூவும் அரசியல் நிறுவனங்களை விமர்சிக்கின்றூர். சமுதாய நடவடிக்கைகளின் சிறப்பியல்புகள் என அவர் திடமாக நம்பியவைகளில் அவர் காட்டிய அக்கறை, இந்த அளவுகோலாலே அளக்கப்பட்டது. பகுத்தறிவின்பாற்பட்ட தார்மீக வாழ்க்கையைக் கொள்ளும் பொது மனநிலையை மக்கள் பொதுவாகக் கொண்டிருக்கின்றனர் (இது வோல்டயரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்றொடராகும்)[1] என்ற கருத்தை மொன்டஸ்கியூ ஏற்கவில்லை. அந்த நூற்றாண்டின் பிற்பகுதியிற் செல்வாக்குப் பெற்றுவந்த ஒரு கருத்து—மக்களின் ஆதாரசுருதியாக அவர்களின் உணர்ச்சிகளே இருக்கின்றன என்ற கருத்து—அவரின் கருத்துடன் ஒத்துப்போவதாக இருந்தது. சமுதாய நடத்தைக்கான பொதுக் காரணங்களைச் சரித்திரத்திற் கண்டுபிடிக்க அவர் மேற்கொண்ட முயற்சிக்கு இந்த நம்பிக்கைதான் தூண்டுகோலாக அமைந்தது. அவர் எழுதியதாவது: "எல்லாக் காலங்களுக்குமுரிய மக்கள் ஒத்த மனவெழுச்சிகளைக் கொண்டிருக்கின்றமையினுல், பெரிய மாற்றங்களை ஏற்படுத்தும் சந்தர்ப்பங்கள் வேறுபட்டவையாக இருந்தபோதிலும், அம்மாற்றங்களுக்கான காரணங்கள் எப்பொழுதும் ஒன்றாகவே இருக்கின்றன". இந்த விசாரணை பற்றிய மொன்டஸ்கியூவின் பிரதான ஆராய்ச்சிப் புத்தகம் பல ஆண்டுக் காலம் செய்யப்பட்ட ஆராய்ச்சிகளின் விளைவாக, 1748 ஆம் ஆண்டில் வெளிவந்தது. அதனுடைய தலைப்பாகிய, 'டி இல் எஸ்பிறி தே லுவா, (De l' Esprit des lois) என்பதை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பது மிகவும் கடினம். மூலமொழியான பிரெஞ்சு மொழியில் அதனை விளங்கிக் கொள்வதும் அவ்வளவு இலகுவானதல்ல. இத்தகைய விரிவான பலவகைப்பட்ட ஆராய்ச்சிக்கு மூலகாரணமான சட்டங்கள் சார்ந்த இந்த 'எஸ்பிறி' ('Esprit'), சமூகச் சட்டத்திலுள்ள ஒன்றோடொன்று தொடர்புடையனவும் தனிப்பட்டனவுமாய இரண்டு சிறப்பியல்புகளைப்பற்றி அடிக்கடி குறிப்பிடுகின்றது. இந்த இரு சிறப்பியல்புகளும் ஒன்றையொன்று எவ்வாறு பாதிக்கின்றன என்பதே அவரது விசாரணைகளின் உண்மையான நோக்கமாக (இதை அவர் முற்றாக ஒப்புக்கொள்ளவில்லை) இருந்தது.

முதலாவதாக, சட்டத்தின் தார்மீக நோக்கம் என்று அழைக்கக்கூடியதை, சட்டத்தினது இறுதி விளைவின் அடிப்படையில் அதனுடைய உள்நோக்கத்தை, கண்டுபிடிக்க மொன்டஸ்கியூ விரும்பினார். அத்துடன், சட்டங்கள் தொழிற்படும் குறிப்பிட்ட சந்தர்ப்பங்களுக்கு அவை ஏற்றவையாக இருக்கின்றனவா என்பதையும் ஆராய அவர் விரும்பினார். இறுதியாக, அவர் எழுப்பிய மூன்றாவது கேள்வி இந்த இரு பிரச்சினைகளையும் இணைத்ததாகும். சட்டங்களுக்கும் சூழ்நிலைகளுக்குமிடையேயுள்ள தொடர்பு என்ன என்ற கேள்வியை அவர் எழுப்பவில்லை. அதற்குப் பதிலாகக் குறிப்பிட்ட சூழ்நிலைகளிலே சட்டங்கள் எவ்வாறு அமைந்திருத்தல் வேண்டும் என்பதே அவர் எழுப்பிய கேள்வியாகும். அத்துடன் பழக்கவழக்கங்கள், காலநிலைகள், செல்வச் செழிப்பு, சனத்தொகை ஆகியவைகளை மட்டுமே சூழ்நிலைகள் கொண்டிருக்கவில்லை. ஆராயப்படும் சமுதாயத்தினுடைய அரசியல் நிறுவனங்களின் இயல்புகளையும் சூழ்நிலையானது உள்ளடக்கியதாகக் கருதப்பட்டது. சிக்கல் மிக்க தற்செயலான இந்த அமைப்பைக் கட்டுப்படுத்தும் தத்துவங்களைப் பொருந்தவைப்பது நியாயத்தின் செயலாகும். இந்தப் பிரச்சினை பற்றியே மொன்டஸ்கியூ சிந்தனை செய்ய முற்பட்ட

[1] 'L'homme en general a toujours ete ce qu'il est :' *Œuvres* (Kehl), xvi, 32. *Essai sur lesmoeurs*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைக் கொள்கையளவிற் பார்க்கிறபோது, அவர் பெரிய வெற்றியெதையும் அடைந்து விடவில்லை. அரசியலைப் பகுத்தறிவு முறையில் அணுகுவதிலுள்ள பலவீனத்தைப் பகிரங்கப்படுத்துவதற்கு அவர் பெரிதளவில் உதவினர். லொக்கின் செல்வாக்கைப்போன்று இவரின் செல்வாக்கும் விரிந்து பரந்திருந்ததற்கு, இவருடைய சிந்தனைக் குழப்பமும் பிழைபாடான தன்மையுமே காரணமாகவிருந்தன என்று கூறலாம்.

இயற்கை விஞ்ஞானிகள் அந்தக் காலத்திற் கண்டுபிடித்த காரண காரிய விதிகளைப் போன்று, மனித அலுவல்களிலும் ஓர் ஒழுங்கான மாதிரியைச் சமூகச் சரித்திராசிரியர்கள் கண்டுபிடிக்க முடியும் என்ற நம்பிக்கையானது சம்பவங்களை அனுபவ ரீதியாக ஆராயும் முயற்சிக்குக் காரணமாக இருந்தது என்பதில் சந்தேகமில்லை. இந்த இரு துறைகளையும் சேர்ந்த சட்டங்களை ஒன்றோடொன்று இணைக்க முடியும் என்று மொன்டஸ்கியூ கருதினர். இந்த இணக்கம் பற்றிய அறிவைக் கொண்டு நற்காலத்தின் கோளாறுகளிலிருந்து அல்லது தெய்வத்தின் ஒழுங்கற்ற தலையீடுகளிலிருந்து இயற்கை ஒழுங்கு பாதுகாக்கப்படுவதாகத் தோன்றுவது போலவே தன்முனைப்பான வல்லாட்சியிலிருந்து விடுவிக்கப்பட்ட பகுத்தறிவுள்ள ஓர் அரசியற் சமூகத்தை உருவாக்கமுடியும். இத்தகைய சமூகம் நன்னெறியான பயிற்சியால் ஒற்றுமைப்படுத்தப்படும். இந்த நன்னெறி கடினமானதாகவோ தியாகங்களைச்செய்வதன்மூலம் அடையக்கூடியதாகவோ இராது. உள்ளுணர்வின்படி வழிநடத்தப்படுவதன் விளைவாகவே இந்த நன்னெறி அமையும். 1721 ஆம் ஆண்டில் வெளிவந்த 'லெற்றஸ் பேசனெஸ்' (Lettres persanes) என்ற அங்கத நூலில், 'இலகுவான பழக்கவழக்கங்களையும் கள்ளங்கபடமில்லாத ஒழுக்கங்களையும்' கொண்டுள்ள இயற்கை வாழ்க்கை எப்படியிருக்கும் என்பதை மொன்டஸ்கியூ சுட்டிக்காட்டியுள்ளார். அந்த நூலிலே, பாரிஸ் நகருக்குச் சென்ற பாரசீக மக்கள் சர்வதேசப் பகுத்தறிவுடைய மக்களாகக் கொள்ளப்படுகின்றனர். அவர்களின் நடைமுறைகள் திருக்குர் ஆனல் வகுக்கப்படவில்லை; இயற்கையாலே வகுக்கப்பட்டது. அவர்களின் அரசியல் நம்பிக்கைகள் மக்கள் என்ற முறையிலும் குடிமக்கள் என்ற முறையிலுமே தெரிவிக்கப்பட்டன.

இயற்கை நிலைபற்றி எழுதிய மற்ற அரசியற் சிந்தனையாளர்கள் மெய்யியல் எடுகோள்களாகக் கொண்ட ஒன்றை, அதாவது இயற்கை மனிதனுடைய பொதுவான, ஒழுங்கான சமூகப் பழக்கவழக்கங்களை, சரித்திரம் வெளிகாட்டக்கூடும் என்பதை மொன்டஸ்கியூ நம்பினர். பொதுக் காரணங்களின் இந்த அமைப்பை ஆராய்வதற்காகவே அவர் தமது புத்தகத்தைத் திட்டமிட்டு எழுதினர். காரணத்திலிருந்து காரியம் என்பதை அடிப்படையாகக் கொண்ட கொள்கைகளை விளக்குவதற்கு அவர் அதிகமாகத் தமது உதாரணங்களைத் தெரிந்தெடுத்தபோதிலும், சமூகத் தோற்றப்பாடுகளைப் பௌதிக நிலைமைகளுடன் அவை கொண்டுள்ள சிக்கலான தொடர்புகளின் அடிப்படையில் விளக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்பதே முக்கியமான எடுகோளாகும். சூழ்நிலைகள் முழுமையான அரசியற் கொள்கைகளுக்குப் பொருத்தமானவையாகவே இருக்கின்றன என்பது புதிய கருத்தல்ல. அரசியலமைப்புச் சட்டத்திற்கு அதனுடைய தார்மீக இலட்சியத்தினதும் சமூகச் சூழ்நிலையினதும் அடிப்படையில் வரைவிலக்கணம் கொடுக்கப்படவேண்டிய அவசியத்தை அரிஸ்தோத்தில் வற்புறுத்தினர். காலநிலையும் மற்றும் இயற்கைச் சூழ்நிலைகளும் ஏற்படுத்தும் விளைவுகளைப் போடின் தமது 'குடியரசியலும்', ஓரளவிலே அதிக பிரபல்யமடையாத சரித்திரம் பற்றிய கட்டுரையிலும் ஆராய்ந்துள்ளார். புராதன கிரேக்க நகரை அளவு கோலாகக் கொண்டால் மிகவும் சிறந்த நகர அரசு எவ்விதமிருத்தல் வேண்டும் என்பதைக் கணிப்பது இலகுவானதாகவிருக்கும். இயற்கை ஒழுங்கு அரசியல் ஒழுங்கையும் உள்ளடக்கியதாக இருந்தது என்று கருதப்பட்ட காலத்தில், மொன்டஸ்கியூவை எதிர்நோக்கிய கடினமான தார்மீக, அரசியற் பிரச்சினைகள் தோன்றவில்லை. பொறியியக்கத்திலிருந்து எடுத்துக்காட்டுக்களையும் உதாரணங்களையும் கூறுவதற்கு மொன்டஸ்கியூ முயன்றதிலும் பார்க்க, சேதனவுறுப்புக்களிலிருந்து ஒப்புமைகளைக் காட்டுவதற்கு அரிஸ்தோத்திலுக்கு அதிக காரணங்கள் இருந்தன.

கடவுள், மனிதன், இயற்கை ஆகிய மூன்று துறைகளையும் வேறுபடுத்திக் காட்டும் முறையை மத்தியகாலத்திலிருந்து மொன்டஸ்கியூ பெற்றுக்கொண்டார். 'மிகவும் விரிவான அர்த்தத்தில், பொருள்களின் இயற்கைத் தன்மையிலிருந்து பெறப்படும் தேவையான தொடர்புகளே சட்டங்களாகும்'[1] என்று கூறி அவர் 'எஸ்பிறி தே லுவா' (Esprit des lois) என்ற புத்தகத்தை ஆரம்பித்த போதிலும், சம்பவங்கள் கடவுளின் மட்டத்தில் அல்லது மனிதனின் மட்டத்தில் அல்லது இயற்கையின் மட்டத்தில் நடைபெறுகின்றனவா என்பதற்கேற்ப, சட்டங்களிலுள்ள குறிப்பிட்ட வேறுபாடுகளிலேயே அவர் தமது கவனத்தின் பெரும்பகுதியைச் செலுத்தினர். லொக் கூறியதைப் போன்று தார்மீகச் சட்டம் நியாயத்தாற் புரிந்து கொள்ளப்படுகின்றது. சட்டங்களை ஒன்றிலிருந்து மற்றதைப் பிரித்துணர்வதும், சம்பவங்களை விளங்கிக் கொள்வதற்கும் நடைமுறைக்கு ஒத்த தீர்ப்புக்களைச் செய்வதற்குமாக இந்த அறிவைப் பயன்படுத்துவதும் நியாயத்தின் மற்றொரு பணியாகும் என்று மொன்டஸ்கியூ கூறினர்.[2] மனிதனின் தார்மீகத் தன்மை, பருப்பொருளான அண்டத்தின் பௌதிகத் தன்மை ஆகிய இயற்கையின் குழம்பிய இரு துறைகளையும் தெளிவாக்க அவர் முயன்றார். இரு துறைகளிலும் செய்யப்பட்ட தீர்ப்புக்களுக்கிடையிலே தாம் விரும்பிய இணக்கத்தை ஏற்படுத்தும் விடயத்தில் அவர் பூரண வெற்றி பெருத போதிலும், பதினெட்டாவது நூற்றாண்டின் சமூகச் சிந்தனையாளர்களை எதிர்நோக்கிய மிகவும் கடினமான பிரச்சினைகளில் ஒன்றான இப் பிரச்சினையை வெளிக்கொணர்வதில் அவர் வெற்றிபெற்றார்.

1 1748 இற் பதிப்பிக்கப்பட்டது. நூல் தொகுதி i, பக். 2

2 நூல் தொகுதி ii, பக். 228

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்ட சரித்திரச் சம்பவங்களின் ஒரு மாதிரியிலே தார்மீகக் காரணங்களா அல்லது பௌதிகக் காரணங்களா முக்கியமானவையாக இருக்கின்றன என்பதையும், அவைகட்கிடையேயுள்ள தொடர்புகள் எவ்வாறு அமைந்திருக்கின்றன என்பதையும் தீர்மானிப்பது மிகவும் கடினமாகும். இயற்கைச் சட்டத்தின் விதிப்புக்களின்கீழ் நீதி, சமத்துவம் ஆகியவைகளின் கோரிக்கைகள் நேரடியாகவும் உள்ளுணர்வாலும் உணரப்படுகின்றன என்பதையும், பௌதிகவியற் காரணங்களோ நோக்கங்கள் மூலம் கண்டுபிடிக்கப்படுகின்றன என்பதையும் மொன்டஸ்கியூ அறிந்திருந்தார் என்பது அவரின் கொள்கையிலிருந்து புலப்படுகின்றது. இந்த இருவகைச் சட்டங்களுக்குமிடையேயுள்ள தொடர்புகளையும் நோக்கல்கள் மூலமே தெரிந்து கொள்ளுதல் வேண்டும். இந்த இருவகைச் சட்டங்களுக்குமிடையே வேற்றுமையைப் போக்கி, எந்த வகையில் ஒற்றுமையை உருவாக்கவேண்டுமென்று தாம் நிரூபித்துக் காட்டிவிட்டதாய் மொன்டஸ்கியூ நம்பியிருந்ததாகத் தெரிகின்றது. அரசியலமைப்புச் சட்டமும் சட்டவாக்கமும் இயற்கைச் சட்டத்துடனும் என்றுமுள நீதியுடனும் ஒத்தியங்கவேண்டும் அல்லது ஒத்தியங்க முயலவேண்டும் என்ற தம்முடைய கருத்திலிருந்து பின்வாங்க அவர் விரும்பவில்லை என்பதே அதற்குக் காரணமாக இருக்கலாம். அத்துடன், மாற்றமுடியாதவையும், கவனத்திற்கு எடுக்காது விட்டால் அல்லது மீறப்பட்டால் மிகவும் சிறந்த அரசியல் திட்டத்தையே கெடுக்கக்கூடியவையுமான சூழ்நிலைகள்பற்றிச் சட்டத்தை ஆக்குபவர்கள் கவனம் செலுத்துதல் வேண்டும். தமது காலத்தில் வாழ்ந்த மற்றச் சிந்தனையாளர்களைப்போன்று மொன்டஸ்கியூவும் இந்த இரு காரண முறைமைகளும் கடவுளின் விருப்பத்தில் ஒன்றாகச் சேர்ந்தன எனக் கருதினர். ஆனல் இந்தக் காரண முறைமைகளின் வடிவங்களை மதிப்பிட்டு, அவைகட்கிடையே நடைமுறைக் கொத்த ஒற்றுமையை ஏற்படுத்தும் பணியை மக்கள் இந்த உலகிலேயே செய்தல் வேண்டும் என்று அவர் கருதினர்.

சமூக, பொருளாதார, இயற்கைச் சூழ்நிலைகளைக் கவனத்திற்கு எடுக்காமல் விடுவதன்மூலம் நீதியை வெற்றிடமாக்காதிருப்பதற்கு உதவும் இந்தச் சமூக இணக்கத்தை உருவாக்குவதற்கு மொன்டஸ்கியூ வழங்கிய பங்கின் மிக முக்கியமான அம்சமாக, தமது இலட்சியத்தை மிகவும் நெருங்கியுள்ள அரசியலமைப்புச் சட்டத்தை விவரிப்பதற்குப் பொறியியலிலிருந்து அல்லது நியூட்டனின் அண்டவியலிலிருந்து அவர் காட்டிய ஒப்புமை அமைந்திருக்கின்றது. சத்திகளின் சமநிலை அடிப்படையில் அரசியல் அதிகாரத்தைப் பகுத்தாராய்ந்தமைக்காகவே அவரை நாம் முக்கியமாக நினைவு கூருகின்றோம். குறிப்பாக மற்றக் கருதுகோள்களோடு இக்கருதுகோளும் ஐக்கிய அமெரிக்காவின் அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்க உதவியது. சங்கீத இணக்கத்திலிருந்து பயன்படுத்திய ஓர் உருவகத்திலுள்ள ஒரேயொரு பந்தியைத் தவிர்த்து, அவரின் வழக்கமான கருத்து இதுவாகவே இருந்தது: 'குழப்பத்தைத் தவிர்ந்த வேறென்றும் இல்லையெனக் கருதப்பட்ட அரசிலே ஒற்றுமையை ஏற்படுத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும்; அதாவது உண்மையான அமைதியைத் தரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தும் இணக்கமாக அது இருக்கும். சில பகுதிகளின் தாக்கத்தினுலும் வேறு சிலவற்றின் எதிர்த் தாக்கத்தினுலும் என்றுமே ஒன்ருக இணைக்கப்பட்டுள்ள அண்டத்தின் பகுதிகளை அது ஒத்திருக்கும்.'[1]

எனவேதான், மொன்டஸ்கியூ குறித்த எந்தவோர் அரசியலமைப்புச் சட்டத்திற்கும் விருப்பம் தெரிவித்திருப்பதை எம்மாற் காணமுடியாமலிருக்கின்றது. சட்டத்திற்குக் கீழ்ப்படிந்து சுதந்திரமான தார்மீக வாழ்க்கை நடத்துவதை நிலைநிறுத்துவதே அவரின் தலையாய நோக்கமாகவிருக்கின்றது. விரிவான அர்த்தத்தில், குறிப்பிட்ட சூழ்நிலைக்கு ஏற்றதாக அரசியற் கட்டமைப்பு அமைவதில் இந்நிலைநிறுத்தல் தங்கியிருந்ததேயல்லாமல், அரசியற் பதவிகள் எந்த ஒழுங்கில் அமைந்திருந்தன என்பதிலே தங்கியிருக்கவில்லை. அரசியலமைப்புச் சட்டம் எந்த வகையினதாக இருந்தபோதிலும், அரசியலமைப்புச் சட்டத்திற்குள்ளே சமநிலை இல்லாததையும் ஆட்சிபுரியும் தார்மீக நோக்கம் இல்லாததையும் தவிர்க்க வேண்டும். பொதுநலத்தில் அக்கறை கொண்டிராத குடியரசு கொடுங்கோலாட்சியிலும் பார்க்கக் கொடியதாக இருத்தற் கூடும். எந்தச் சமூக நன்மைகளைக் கொடுப்பதற்காக மதிக்கப்படுகின்றதோ அந்தச் சமூக நன்மைகளைக் கொடுக்க நடைமுறையில் தவறும் அரசு எவ்வளவுதான் நேர்மையான நிர்வாகத்தையும் பாரபட்சமற்ற நீதிமுறையையும் கொண்டிருந்தபோதிலும், அது சுதந்திரமான அரசு என்று வரையறை செய்யப்படுவதற்குத் தேவையான இயல்புகளைக் கொண்டிருக்க மாட்டாது. வல்லாட்சியைத் திருத்த முயற்சி எடுப்பதிலும் பார்க்க அதைக் கண்டிப்பது மிகவும் இலகுவானது என்பதை மொன்டஸ்கியூ அறிந்திருந்தார். 'நடுத்தரமான அரசாங்கத்தை உருவாக்குவதற்கு வலுக்களை ஒன்று சேர்த்து, ஒழுங்குபடுத்தி, பக்குவப்படுத்தி, அவை செயற்படச் செய்தல் வேண்டும். வேறொன்றின் எதிர்ப்பைத் தாங்குவதற்கு ஒன்றிற்கு அடிச்சுமை கொடுத்தல் வேண்டும். இவ்வாறு அமையும் மிகச் சிறந்த சட்டவாக்கமொன்று சிலவேளைகளிற் சந்தர்ப்பவசத்தால் உருவாக்கப்படுகிறதேயன்றி ஒருபோதும் முன்கவனத்தால் உருவாக்கப்படுவதில்லை.'[2]

நல்வாழ்க்கையை நடத்துதற்குத் தேவையான நிபந்தனையென மொன்டஸ்கியூ அடிக்கடி வற்புறுத்தும் அரசியல் விடுதலை பற்றிய கருத்து, சட்டத்தின் மேலாண்மையின்கீழ் வாழ்க்கையை நடத்துவது என்ற லொக்கின் கருத்திலிருந்து குறிப்பிடத்தக்கவகையில் வேறுபடவில்லை. முதலாவதாக, தன்னிச்சையான தலையீடு இருத்தலாகாது என்று அச்சுதந்திரம் கூறுகின்றது. கடவுளைப் போன்று அரசாங்கங்களும் பொதுச் சட்டங்களுக்கேற்ப நடக்கவேண்டும் என்ற கோரிக்கையே அது. தார்மீக விதிக்கு இயைய நடந்துகொள்ளும் சுதந்திரத்தையும், சமூகத்திற்கு விரோதமாக நடக்காத விசேட சுதந்திரத்தையும், அது தன்னுட் கொண்டிருக்கின்றது. நாம் விரும்பிய யாவற்றையும் செய்தற்காக இருப்பதல்ல அரசியல் சுதந்திரம் என்று அவர் எமக்குக் கூறுகின்ருர். 'ஓர் அரசில், அதாவது சட்டங்களுள்ள ஒரு சமூகத்தில், ஒருவர் விரும்ப

[1] *Considerations*, பக். 98 [2] *Esprit des lois*, vol. i, பக். 100

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டியதைச் செய்ய இயலுவதற்கான சுதந்திரம் இருக்குமேயன்றி அவர் விரும்பக்கூடாததைச் செய்வதற்குத் தடைசெய்வதாய் அது இருத்தலாகாது.'[1]

இந்தப் பந்தி தார்மீக நடத்தையைப்பற்றியே குறிப்பிடுகின்றது. ஆனல், சமூகத்தைத் தன்னுடைய சூழ்நிலைக்கேற்ப திருத்தியமைக்கும் முறையாகவும், சமூகத்திலுள்ள தனி நபர்களின் நடத்தைகளைக் கட்டுப்படுத்தும் கருவியாகவும் மொன்டஸ்கியூ சட்டத்தைக் கருதினர். இந்தக் கருத்து காரணமாக, தார்மீக விடுதலையின் தேவைகட்கும் அந்தச் சூழ்நிலையின் சமூக, பொருளாதார தேவைகட்குமிடையேயுள்ள முரண்பாட்டை அவரால் எதிர்நோக்க வேண்டியிருந்தது. இயற்கைச் சூழ்நிலையின் விளைவுகளைக் கட்டுப்படுத்த வேண்டிய அரசியல் வலு, தார்மீக விடுதலையின் எல்லைகளை மீறும் ஆபத்திற்கு எந்தச் சூழ்நிலையில் உட்படும்? அடிமைத்தனம் இயற்கைச் சட்டத்திற்கு மாறானது என்பது வெளிப்படை. எனினும், வெப்பமான நாடுகளில் மக்கள் நிர்ப்பந்திக்கப்படாவிட்டால் எவருமே வேலை செய்யமாட்டார்கள். மிதப்போக்கைப் பின்பற்றும் எந்த அரசாங்கமும் நடப்பிலுள்ள சூழ்நிலைகளைப் பயன்தரு முறையிற் கட்டுப்படுத்த முடியாதிருக்கலாம். வல்லாட்சியை நடத்தும் அரசாங்கம் எந்தச் சூழ்நிலையிலும் தார்மீக விடுதலைக்கு ஆபத்தை ஏற்படுத்தவே செய்யும்.

இந்தக் கருத்துக்கள், அரசியல் வலு தவருகப் பிரயோகம் செய்யப்படுவதை அரசியலமைப்புச் சட்டத்தின் மூலமே தவிர்க்கமுடியும் என்ற எண்ணத்தை மொன்டஸ்கியூவின் மனத்திலே தோன்றச் செய்தன. தம்மை எதிர்நோக்கிய முரண்பாடடைத் தீர்த்து வைப்பதற்கு அரசியலமைப்புச் சட்டமே சிறந்த வழி என்று அவர் உணர்ந்தார். அரசியல் வலு தவருகப் பிரயோகம் செய்யப்படுவதைத் தடுப்பதற்காக, அரசியலமைப்புச் சட்டத்தின் எந்தப் பகுதியும் மற்றப் பகுதிகளைத் தனது ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவரக்கூடிய அளவு பலத்தைக் கொண்டிருத்தலாகாது. அத்துடன், ஒவ்வொரு பகுதியும் மற்றப் பகுதியைச் சமன்செய்யக்கூடியதாகவும் எதிர்க்கக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும். லொக் பொதுவாகச் சட்டமன்றமே ஆதிக்கத்தைப் பெற்றிருக்க வேண்டுமென்று ஆலோசனை கூறியதோடு, தமது காலத்தில் நிலவிய பிரித்தானியப் பாராளுமன்ற நடைமுறைக்குப் பின்னணியாக விளங்கிய கொள்கையையும் படம்பிடித்துக் காட்டினர். மொன்டஸ்கியூ லொக்கிலும் பார்க்க ஒரு படி மேலே சென்ருர். அவர் அவ்வாறு செய்தமைக்கு இங்கிலாந்தின் அரசியல் அபிவிருத்திகளை மேலெழுந்தவாரியாகத் தவருனமுறையில் ஆராய்ந்தமை காரணமாக இருக்கலாம். அரசிலுள்ள சட்டவாக்க, நிர்வாக, நீதித்துறை அதிகாரிகளே அரசியல் இயந்திரத்தின் பிரதான உறுப்புக்களாவர் என அவர் வாதாடினர். கொள்கையளவில் அப்பிரிவுகள் வகுக்கப்பட்டிருப்பதை, அவைகளின் அதிகாரத்தையும் பணியையும் நடைமுறையிற் சமன்செய்வதன் மூலம் ஈடுசெய்தல் வேண்டும். இந்த மூன்று பிரிவுகளிலும் எந்த ஒரு பிரிவும் மற்ற இரு பிரிவுகளுள் எதையும் பணியச் செய்யமுடியாதவகையிலும், எந்த ஒரு பிரிவும் மற்ற

[1] *Esprit des lois*, vol. i, பக். 241

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு பிரிவுகளினதும் இணக்கமின்றித் தனது சிறப்பியல்பான கடமைகளைச் செய்யமுடியாத வகையிலும் இந்தப் பிரிவுகள் சமன் செய்யப்படல் வேண்டும். அரசிலே இத்தகைய வலுச் சமநிலை இருத்தல் வேண்டுமென்று இயற்கைச் சூழ் நிலையிலுள்ள தன்மைகள் நிர்ப்பந்திக்கின்றன என்று மொன்டஸ்கியூ எமக்குக் கூறுகின்றார். பொறியியக்கமுறையில் உருவாக்கப்பட்ட இத்தகைய இணக்கத் திலே குடிமக்களின் தார்மீக விடுதலை தங்கியிருக்கும்.

லொக்கின் காலத்திற்கூட, இங்கிலாந்தில் நடைமுறையிலிருந்த அரசிய லமைப்பு முறை இந்தக் கருத்துடன் ஒத்துப்போகவில்லை. மொன்டஸ்கியூ இங்கிலாந்திற்கு விஜயம் செய்த காலத்தில் அரசாங்கத்தின் நிர்வாக, சட்ட வாக்கப் பிரிவுகட்கிடையே நெருக்கமான உறவுகளை உருவாக்குவதிற் கவனம் செலுத்தப்பட்டது. ஆனால் மொன்டஸ்கியூவின் கொள்கை மிகவும் செல்வாக் குப் பெற்றிருந்தது. ஐக்கிய அமெரிக்க இராச்சியங்களில் இந்தச் செல்வாக் கைக் குறிப்பாக அவதானிக்கமுடிந்தது. அந்த நாட்டில் வலுவேருக்கற் கோட் பாடு நடைமுறையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அந்த நாட்டிலே, தமது பகுத் தறிவுள்ள குடிமக்களுக்கு இருக்கவேண்டுமென்று லொக்கும் மொன்டஸ்கியூவும் விரும்பிய அமைதியையும் மகிழ்ச்சியையும் அடைய உதவுவதற்காகவும், இயற்கை உரிமைகள், தார்மீக விடுதலை ஆகிய துறைகளைப் பாதுகாப்பதற்காக வும் விசேட ஒழுங்குமுறைமூலம் நிறுவன அதிகாரச் சமநிலை ஏற்படுத்தப் பட்டது.

* * * *

அரசியற் கொள்கைகள், சரித்திர சம்பவங்களை நேரடியாகப் பாதிக்கும் சந் தர்ப்பங்கள் மிகவும் அரிதாகவே காணப்படுகின்றன. லொக், மொன்டஸ்கியூ ஆகியோரின் விடயத்திலும் இது உண்மையாகவே இருக்கின்றது. அமெரிக்கா விலும் பிரான்சிலும் நடைபெற்ற புரட்சிகரமான மாற்றங்களை விளக்கும் அர சியலமைப்புச் சட்ட ஆவணங்களை ஆராயும்போது, இவர்களின் நம்பிக்கைகள் ஏற்படுத்திய விளைவுகளைக் கவனிக்க முடியும். அமெரிக்க, பிரெஞ்சுப் புரட்சி களின் காலத்தைச் சேர்ந்த பிற்காலச் சந்ததியினர் இச்சிந்தனையாளர்களின் கொள்கைகள் மீது கொண்டிருந்த பற்றும் நம்பிக்கையும், உண்மையில் அவர் கள் கொண்டிருந்த பற்று, நம்பிக்கை ஆகியவற்றின் அளவிலும் பார்க்க அதிக மாகத் தோற்றமளிப்பதுடன் இவர்களின் கொள்கைகள் ஏற்படுத்திய விளைவு களும் உருத்திரிபு பெற்றவைகளாகக் காட்சியளிக்கின்றன. 1776 ஆம், 1789 ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட பிரசித்திபெற்ற இரு பிரகடனங்களை ஆயத்தஞ் செய்தவர்கள் தமது நடவடிக்கைகளுக்கு இயற்கை உரிமைகள் கோட்பாட்டின் அடிப்படையிலே காரணம் காட்டப் புகுந்ததோடு, அக்கோட் பாட்டின் ஒழுக்க நெறிகட்கியையப் புதிய அரசியல் நிறுவனங்களை அமைப் பதற்கு ஓரளவு முயற்சியையும் மேற்கொண்டார்கள் என்று கூறுவதற்குப் போதிய சான்றுகள் உள்ளன. பதினெட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த இக் கொள்கை ஆதரவாளர்களில் இறுதியானவரான தோமஸ் பெயின், புரட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்கத்தின் பொது மெய்ப்பாட்டைச் சொற்றிறம்வாய்ந்த இந்த வசனத்திற் பொழிப்பாகக் கூறியுள்ளார் : 'நாட்டின் அலுவல்களை மேற்பார்வை செய்வதை விட வேறு எது அரசாங்கத்தின் வேலையாக இருக்க முடியும்?'[1] பிரான்சில் நடைபெற்ற பணிக் குழு ஆட்சியைக் கண்டிக்கும்போதும் பிரித்தானிய போரசைக் கண்டிக்கும்போதும், ஆட்சிப் பொறுப்பை அரசாங்கத்திடம் ஒப்படைப்பதே வசதியானது என்ற லொக்கின் கருத்தைக் கண்டனக்காரர்களும் ஏற்றுக் கொண்டனர். ஆனல், லொக் கூறியதைப்போன்று மக்களின் விருப்பத்தினுல் (இக்கருத்து ரூசோவிடமிருந்து பெறப்பட்டது), அல்லது அடிப்படை இயற்கைச் சட்டத்தை உள்ளடக்கிய அரசியலமைப்புச் சட்டத்தினுல் அரசாங்கங்கள் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்தையும் அவர்கள் தெரிவித்தனர். இந்த அரசியலமைப்புச் சட்டங்களின் அடிப்படையிலேயே அரசாங்கங்கள் மதிப்பிடப்படுதல் வேண்டும் எனவும் அவர்கள் கருதினர். அமெரிக்க, பிரெஞ்சுப் புரட்சி வாதிகள் பின்பற்றிய, பிரயோகித்த அரசியல் வழிமுறைகளிலே கொள்கையிலும் நடைமுறையிலும் இரு பகுதியினருக்குமிடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஆனல், தங்களின் இறுதி இலட்சியங்களைப் பொறுத்தவரையில் இரு பகுதியினருக்கிடையேயும் நெருங்கிய ஒற்றுமை காணப்படுகின்றது. தார்மீகச் சட்டத்தின்படி நடக்கும் பொறுப்பைக் கொண்டிராத வல்லரசாங்கங்கள் தன்னிச்சையாகக் குடிமக்களின் உரிமைகள், விடுதலை ஆகியவற்றிலே தலையிடுவதைத் தடுக்கும் நடவடிக்கை எடுப்பதையே இரு பகுதியினரும் தமது நோக்கங்களாகக் கொண்டிருந்தனர்.

அரசாங்க அதிகாரம்பற்றி சட்ட எல்லைகளை வகுப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள், அமெரிக்க, பிரெஞ்சுப் புரட்சிகளை, பதினெட்டாம் நூற்றுண்டில் வாழ்ந்த அரசியற் சிந்தனையாளர்களின் கொள்கைமுறையான எடுகோளுடன் இணைக்கின்ற அம்சமாகக் காணப்படுகின்றன. அமெரிக்காவின் அரசியல் அமைப்புத் திட்டம் உருவாக்கப்பட்டதைத் திறனுய்வு செய்து வந்துள்ள கட்டுரைகளைத் தாங்கியுள்ள 'த பெடரலிஸ்ட்' (The Federalist) என்ற தொகுப்பிலே வலுவேருக்கல் பற்றிய மொன்டஸ்கியூவின் உறுதிமொழியை ஆராயும் இரண்டு கட்டுரைகளைக் காணமுடிகின்றது.[2] பூரண வலுவேருக்கலுக்கு பிரித்தானிய அரசியலமைப்புச் சட்டத்தை உதாரணமாகக் கொள்ளமுடியாது எனக் குறிப்பிட்டுள்ள அக்கட்டுரைகளின் ஆசிரியர், எத்தகைய அரசாங்கத்தைப் பெறுவதற்காகக் குடியேற்ற நாடுகள் போராடின என்பதைச் சுட்டிக் காட்ட முற்படுகின்ருர். 'விடுதலைத் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்ட அரசாங்கத்திற்காக மட்டுமே குடியேற்ற நாடுகள் போராடவில்லை; அவை தாம் விரும்பிய அரசாங்கத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் பல்வேறு அமைப்புக்களுக்கிடையே வலுக்கள் பிரிக்கப்படுவதோடு, எந்த ஓர் அங்கமாவது தனது

[1] *The Writings of Thomas Paine* (1894), vol. ii, பக். 385, *Rights of Man*
[2] XLVII ஆம், XLVIII ஆம் கட்டுரைகள். இரண்டும் மடிசனுல் எழுதப்பெற்றவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்ட எல்லையை மீற முயன்றால் அந்த அங்கத்தை மற்ற அங்கங்கள் தடுத்து நிறுத்தக்கூடிய வகையில் வேறாக்கப்பட்ட அவ்வலுக்கள் ஒன்றையொன்று சமன் செய்யவும் வேண்டுமெனக் கூறினர்'.[1] ஏதோ அரசியலமைப்புச் சட்டத்திற்குரிய தந்திர வித்தை என்று இக்கோட்பாட்டைக் கொள்ளக்கூடாது. அரசின்கீழுள்ள ஓர் அதிகாரத்தின் வலுமுழுவதும் மற்ற இரண்டு அதிகாரங்களில் ஏதேனும் ஒன்றின் வசம் சேர்ந்துவிடுவதைத் தடுப்பதே இந்தக் கோட்பாட்டின் நோக்கமாகும். பிரித்தானியாவில் இருப்பதாகக் கூறப்படும் அரசுவலுச் சமநிலை அர்த்த மற்றது என்று பெயின் கருதினர். சனநாயக சக்திகளைப் பிரதிநிதித்துவம் வகிக்கும் மக்கள் சபை தனது அதிகாரத்தைக் கட்டற்ற முறையிற் பிரயோகிப்பதைத் தடைசெய்யும் ஏற்பாடு இதுவாகும் என்றே பெயின் கருதினர். அந்த நூற்றுண்டின் இறுதிப் பகுதியிலே தடையாக இருப்பதைத் தவிர வேறு எந்த நன்மையையும் அரசியலமைப்புத் திட்டம் நல்குமா என்ற அவநம்பிக்கை அரசியற் சிந்தனையாளர்களின் மனத்திலே தோன்றவாரம்பித்துவிட்டது. அத்துடன் அடிப்படைச் சட்டங்களின் தெளிவான தன்மையிலுமே அவர்கள் அவநம்பிக்கை கொள்ள ஆரம்பித்து விட்டனர். 'சட்டத்தால் அரசாங்கமேயன்றி மக்களாலல்ல'' என்று விடுதலைக்கு வரைவிலக்கணம் கூறுவதுடன் நின்றுவிடலாகாது, என்று குடியேற்ற நாடுகள் பிரித்தானிய தேசத்திலிருந்து பிரிந்து செல்வது பற்றி ஆராயும் துண்டுப் பிரசுரத்தில் றிச்சாட் பிரைஸ் மிகவும் அழுத்தமாகக் கூறிப்போந்துள்ளார். எத்தகைய மக்கள் சட்டங்களை இயற்றுகின்றனர் என்பதிலேயே சட்டத்தின்படி நடக்கும் அரசாங்கம் தங்கியிருக்கின்றது என்று அவர் சுட்டிக்காட்டுகின்றார்.[2] இந்த நிலைமைக்கான குற்றம் ஓரளவுக்கு லொக்கையே சார்ந்தது. தனிமனிதனின் அரசியலுக்கு முற்பட்ட விரிவாக்கமாகச் சொத்து இருக்கின்றது என்ற கருதுகோளுக்கு அவர் தமது உரிமைக் கொள்கையில் முக்கியத்துவம் அளித்திருப்பதே இதற்குக் காரணம். சொத்துக்களையுடைய வர்க்கத்தினரின் நலவுரிமைகளைப் பாதுகாத்தல் வேண்டும் என்ற விடயம் அமெரிக்க அரசியலமைப்புச் சட்டத்தைத் தயாரிக்கும்போது மிகவும் முக்கியமான இடத்தை வகித்தது. இந்தக் காரணத்திற்றான் அரசியல் நீதி என்ற தமது புத்தகத்திலே, 'சமூக நிலைமையைப் போர் நிலைமை என்று கருதுமாறு ஏழை மனிதர்கள் தூண்டப்பட்டால் அதில் ஆச்சரியமடைவதற்கொன்றுமில்லை; ஒவ்வொரு தனிமனிதனதும் உரிமைகளைப் பாதுகாத்து அவனின் வாழ்க்கைக்கான வழிகளைப் பெற்றுக் கொடுப்பதற்குப் பதிலாக, அது தனது நன்மைகள் யாவற்றையும் தனக்குச் சார்பான சில தனிமனிதர் மீது பொழியும் நீதியற்ற சேர்க்கையாகுமென அவர்கள் கருதினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை'[3] என்று கொட்வின் என்பவர் எழுதியுள்ளார். பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் நாம்

[1] ***The Federalist,*** பதிப்பாசிரியர் எம். பிலோவ் (ஒக்ஸ்போட், 1948), பக்கங்கள் 254–55

[2] ***Observations on the Natue of Civil Liberty, the Principles oj Government, and the Justice and Policy of the War with America*** (இலண்டன், பிலடெல்பியா 1776), பக். 6.

[3] ***Political Justice*** (2 ஆம் பதிப்பு, இலண்டன் 1796), தொகுதி i, பக். 17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்கின்ற இந்த நூற்றுண்டிலும் முன்னணிக்கு வந்துள்ள இந்த முக்கியமான பொருளாதாரப் பிரச்சினைகள், பல அவதானிகளைப் பொறுத்த வரையும், உரிமைகள் என்ற கருத்துப்பொருட் கொள்கையின் சரித்திரத்திற்கொவ்வாப் பின்னணியில் மறைக்கப்பட்டு விட்டன.

பிரபல்யமான அமெரிக்கப் பிரகடனங்கள் யாவும் தமது கொள்கைக்குரிய உட்பொருளை லொக்கிடமிருந்தே பெற்றன. தார்மீக ரீதியில் கட்டுப்பாடு எதுவுமில்லாத தனிமனிதன் பற்றி லொக் கூறிய புகழ்மிக்க கருத்தை, சுதந்திரப் பிரகடனம் கொண்டிருக்கின்றது. 'இந்த உண்மைகளுக்கு விளக்கம் தேவையில்லை எனக் கருதுகின்ருேம்; எல்லா மக்களும் சமத்துவமாகப் படைக்கப்பட்டவர்கள்; பிரிக்க முடியாத உரிமைகள் சிலவற்றைப் படைத்தவன் அவர்கட்குக் கொடுத்திருக்கின்ருன்; வாழுமுரிமை, சுதந்திரம், மகிழ்ச்சியை அடைய முயலுதல் ஆகியவை அவைகளுட் சில.' லொக்கின் வாக்கியத்திற் காணப்படும் 'சொத்து' என்ற பதத்திற்குப் பதிலாக 'மகிழ்ச்சியை அடைய முயலுதல்' என்ற சொற்ருெடர் பயன்படுத்தப்பட்டிருப்பது இந்தக் கூற்றின் உள்நோக்கத்தில் எந்தவித மாறுபாட்டையும் ஏற்படுத்தவில்லை. இந்த உலகிலே திருப்தியைப் பெறுதலை விவரிப்பதற்கு லொக் இதே சொற்ருெடரைப் பயன்படுத்துகின்ருர். 1780 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட மசாச்சுசெட்ஸ் உரிமைகள் சட்டமானது வாழுமுரிமை, சுதந்திரம் ஆகியவைகளுடன், சொத்தைச் சேர்த்து வைத்திருந்து பாதுகாக்கும் உரிமையையும், சொத்துக்களின் பாதுகாப்பைத் தேடிப் பெறுவதையும், மகிழ்ச்சியைப் பெறுவதையும்[1] இணைத்தது. 1776 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட வேஜீனிய உரிமைகள் சட்டத்திலும் இதைப் போன்ற ஒரு வாசகம் சேர்க்கப்பட்டுள்ளது. இந்த வாசகத்திலே சொத்துரிமையுடன் மகிழ்ச்சியைப் பெறும் உரிமையும் சேர்க்கப்பட்டுள்ளது. ஆனல் அவையிரண்டும் ஒன்ருேடொன்று இணைக்கப்படவில்லை. அமெரிக்கப் புரட்சி என்ற சரித்திர சம்பவத்திலே கொள்கையும் நடைமுறையும் ஒன்ருேடொன்று நெருங்கிப் பிணைந்திருப்பதை எம்மால் அவதானிக்க முடிகின்றது. நாட்டுக் கூட்டிணைப்பை நிறுவ அவர்கள் முடிவு செய்தமை, இயற்கை நிலையிலுள்ள மக்கள் அரசியற் சமுதாயம் ஒன்றை அமைக்கத் தாமாக உணர்ந்து தமக்குள் ஓர் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டமைக்குச் சமமாகவிருக்கின்றது. ஏற்கனவே செயற்பட்டுக் கொண்டிருந்த அரசிலிருந்து பிரிந்து செல்வதற்குக் காரணமாகவிருந்த சரித்திர சம்பவத் தொடர்களை விரும்பாதவர்கள், அவற்றைப் புரட்சி என அழைத்தனர்; "இயற்கையின் சட்டங்களும் இயற்கையின் கடவுளும்" தமக்கு அளித்த "தனிப்பட்ட, சமமான உயர்நிலை" தமக்குக் கிட்டப்போகிறதென்ற நம்பிக்கையைக் கொண்டிருந்த அவற்றின் ஆதரவாளர்கள் அச்சம்பவங்களை வரவேற்றனர். 'மனிதனின் உரிமைகள்' என்ற பிரசுரத்தை ஜோர்ஜ் வாஷிங்டனுக்கு அன்பளிப்பாகக் கொடுக்கும்போது, 'தங்களின் மிகச் சிறந்த நற்பண்புகளால் மிகத் திறமையுடன் நிலைநாட்டப்பட்ட விடுதலைத் தத்துவங்களை ஆதரிக்கும் ஓர் ஆராய்வுக் கட்டுரை,' என்றே தமது புத்தகத்தைப் பெயின் விவரித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிமனிதனின் உரிமைகளுக்கும் சமூகக் கட்டுப்பாட்டிற்குமிடையேயுள்ள தொடர்புகளைப்பற்றி எமக்குக் கிடைத்துள்ள மிகச் சிறந்த விளக்கத்தைப் பெயின் இந்த ஆராய்வுக் கட்டுரையிற் கொடுத்துள்ளார். லொக்கினுடைய மரபு முறைகளின் பொழிப்பு என்று ஓர் அர்த்தத்தில் அந்த விளக்கத்தைக் கூறலாம். ஆனால் இரண்டிற்குமிடையேயுள்ள தொடர்புகளை லொக்கிலும் பார்க்கத் தெளிவாகப் பெயின் விளக்கியுள்ளார். பெயின் தமது ஆராய்ச்சிக் கட்டுரையை எழுதிய காலத்திற் செல்வாக்குப் பெற்றிருந்த மற்ற அரசியற் செ ்கைகளால் உரிமைகள் பற்றிய கொள்கையிலே ஏற்படுத்தப்படவிருந்த மாற்றங்களை அவரின் விளக்கம் நிழலிட்டுக் காட்டுகின்றது. வாழும் உரிமையிலிருந்து தனிமனிதனுக்குக் கிடைத்ததாகக் கருதப்படும் இயற்கை உரிமைகளை, சமூகத்தின் ஓர் உறுப்பினன் என்ற வகையில் அவனுக்குக் கிடைக்கும் குடியியல் உரிமைகளிலிருந்து அவர் வேறுபடுத்திக் காட்டுகின்றார். குடியியல் உரிமைகள் யாவும் இயற்கை உரிமைகளின் அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டன. ஆனால், தனது சொந்த வலுவைக்கொண்டு இயற்கை உரிமைகளை அனுபவிக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்க முடியாது என்பதைத் தனிமனிதன் உணர்ந்ததன் விளைவாகவே அவைகட்கு சமூக உயர்நிலை கொடுக்கப்பட்டது. எனவே, எந்தெந்த உரிமைகளைப் பிரயோகிப்பதற்குத் தன்னிடம் வலுவுண்டோ அந்த உரிமைகளை மாத்திரம் தனிமனிதன் தனக்கென வைத்துக்கொண்டான். குறிப்பாக, அறிவியல், மத உரிமைகளை அவன் தனக்கென வைத்துக்கொண்டான். தானாகப் பாதுகாத்துக் கொள்ளமுடியாத உரிமைகளை, குறிப்பாகப் பாதுகாப்பு சம்பந்தமானவற்றைச் சமூகத்திடம் அவன் கையளித்துவிட்டான். "சமூகம் அவனுக்கு ஒன்றையும் கொடுப்பதில்லை. ஒவ்வொருவனும் சமூகத்தில் ஓர் உரிமையாளனாக இருக்கின்றான்; மூலதனத்திலிருந்து உரிமையுடன் தனக்கு வேண்டியதைப் பெற்றுக்கொள்கின்றான்"[1] என்ற முடிவிற்கு வருகின்றார் பெயின். உரிமைகளின் கொள்கையில் இந்த இறுதி அம்சத்திற்றான், குறிப்பாக அடுத்த நூற்றாண்டில், திருத்தம் செய்யவும் அபிவிருத்தி செய்யவும் வேண்டிய தேவை ஏற்பட்டது. சரித்திரத்திற்கு ஒவ்வாததும் கருத்து நிலையானதுமான இந்த முறைப்படுத்தல், குடிமக்களிடமிருந்து அரசியலதிகாரத்தைப் பெறுவதும், சமூகத்திலடங்கியுள்ள தனிமனிதர்களுக்கே சமுதாய நன்மைகளும் அனுகூலங்களும் இருப்பனவாகக் கொள்வதும் ஒன்றல்ல என்பதை உரிமைகளின் கொள்கையை விரித்துரைத்தவர்கள் விளங்கிக் கொள்ட ற்குத் தடையாகவிருந்தது. மூலதனம் பற்றிய உருவகத்தைப் பெயின் ப ்ரபடுத்தியிருப்பது தீக்குறியாகவே இருக்கின்றது.

சிறிது காலத்திற்குப் பிரெஞ்சுப் புரட்சிவாதிகள் அமெரிக்கர்களின் கருத்துக்களைப் பெரிதளவில் ஏற்றுக்கொண்டனர். அமெரிக்கா சுதந்திரமாகத் தனித்து வாழ அப்பொழுதான் ஆரம்பித்தது. அதற்கு மாறாக, பிரான்சு மிகப்பெரிய வல்லரசாக இயங்கிக்கொண்டிருந்தது. ஆட்சிபுரியும் முறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதாக மட்டுமே பிரஞ்சுப் புரட்சி அமைந்திருந்தது. எனவே, பிரான்சை எதிர்நோக்கிய பிரச்சினைகள் வேறானவையாக இருந்தன. எனினும், மனித உரி

[1] *Rights of Man*, முற்கூறிய நூல், தொகுதி ii, பக், 306–7

மைகள் பிரகடனத்தின் இரண்டாவது உறுப்பு அமெரிக்கப் பிரகடனத்திற் காணப்பட்ட அதே அரசியல் இலட்சியத்தையே வற்புறுத்துகின்றது. 'மனிதனின் இயற்கையானவையும் மாபு வரையறை செய்ய முடியாதவையுமான உரிமைகளைப் பாதுகாப்பதே அரசியல் சங்கங்களின் இலட்சியமாகும். சுதந்திரம், சொத்து, பாதுகாப்பு, அடக்குமுறைக்கு எதிர்ப்பு ஆகியவைகளே இந்த உரிமைகளாகும்.' 1793 ஆம், 1795 ஆம் ஆண்டுகளில் இயற்றப்பட்ட அரசியலமைப்புச் சட்டங்களின் தொடக்கத்திற் சேர்க்கப்பட்ட பிரகடனங்களில் இந்த உரிமைகள் மீண்டும் விரித்துரைக்கப்பட்டுள்ளன. மற்றவர்கட்குத் தீங்கு விளைவிக்காமல் இருப்பதற்காகப் பரிமாற்றமாகக் கிடைக்கும் உரிமையே சுதந்திரம் என வரையறை செய்யப்பட்டது. உரிமைகளிற் சமத்துவம் என்பது, குறிப்பாகச் சட்டத்தின் முன் சமத்துவமாக நடத்தப்படுதல் என வரையறை செய்யப்பட்டது. ஒருவர் தமது முயற்சி, தொழில் ஆகியவைகள் மூலம் பெற்றவைகளைத் தாம் விரும்பியவண்ணம் பயன்படுத்தும் உரிமை என்ற லொக்கின் கருத்துப் படியே சொத்துரிமைக்கு வரைவிலக்கணம் வகுக்கப்பட்டது. எனினும், அரசியல் அதிகாரம் என்ற பிரெஞ்சுக் கோட்பாட்டில் ரூசோவின் செல்வாக்கைப் பெரிதும் காண முடிகின்றது. இறைமையின் பிறப்பிடமாக நாட்டைக் கொண்ட போதும், 1795 ஆம் ஆண்டில் பொதுமக்களின் விருப்பமே சட்டமாகும் என அறிவிக்கப்பட்டபோதும், புரட்சியை வழிநடத்தியவர்கள் இயற்கை உரிமைகள் என்ற பாரம்பரிய மொழிவழக்கைக் கையாளுவதைக் கைவிட்டுவிட்டதைக் காணமுடிகின்றது.

இந்தக் கால கட்டத்தைச் சேர்ந்த பருமாற்றவாதச் சிந்தனையாளர்கள் யாவரும், கொட்வினைத்தவிர, ஏதோ ஒருவகை அரசாங்கம் இருக்கவேண்டிய அவசியத்தை ஏற்றுக்கொள்கின்றனர். 1789 ஆம் ஆண்டுப் பிரகடனத்திற் குறிப்பிட்டிருந்ததைப்போல் மனித உரிமைகளை அறியாமல் இருப்பது, அவைகளை மதித்து நடக்கத் தவறுவது, அவைகளை வெறுத்தொதுக்குவது ஆகியவைகளே பொது இடையூறுகள், சீர்கெட்ட அரசாங்கம் ஆகியவற்றிற்குக் காரணங்களாக அமைகின்றன. இந்தக் குறைபாட்டிற்கு எது காரணமாக இருக்கின்றது என்பதுபற்றிக் கருத்தொற்றுமை காணப்படவில்லை. அரசியலமைப்புச் சட்டங்களில் அடிப்படை உரிமைகளைப் பிரகடனம் செய்வது இத்தவறை நிவிர்த்தி செய்ய உதவக் கூடும் என்ற நன்னம்பிக்கை காண. டுகின்றது. 'மனச்சாட்சியின் தெளிவான உந்தல்களை ஒழுங்காகவும் கட்டாய ாகவும் பின்பற்றினால், சட்டத்தை ஆக்கிக் கொடுப்பவர் எவரது உதவியும் மனிதனுக்குத் தேவையில்லை' என்று பெயின் தமது 'கொமன் சென்ஸ்' (Common Sense) (பகுத்தறிவு) என்ற புத்தகத்தின் முதலாவது பக்கத்திலேயே குறிப்பிட்டுள்ளார்.[1] 'த பெடறலிஸ்ட்' (The Federalist) (கூட்டாட்சிவாதி) என்ற புத்தகத்திலும் இதே கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதிலே கூறியிருப்பதாவது: 'அரசாங்கம் என்பது மனித இயல்பின் மிகச் சிறந்த பிரதிபிம்பமாக இருப்பதைத் தவிர வேறு யாதாக இருக்கமுடியும்? மக்கள் யாவரும் தேவதூதர்களாக மாறிவிட்டால் அரசாங்

[1] முற்கூறிய நூல், தொகுதி i, பக். 69

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமேதேவைப்படாது" இயற்கையிலேயே மனிதன் நல்லவன் என்ற கொள்கை பிரபல்யமடைந்திருந்தபோதிலும், அறியாமையே மனிதனின் குறைபாடுகள் யாவற்றிற்கும் காரணமாக இருக்கின்றது என்ற கருத்து பதினெட்டாம் நூற்றுண்டின் பிற்பகுதியிற் செல்வாக்குப் பெற ஆரம்பித்துவிட்டது. 'விளக்கத்தின் அடிப்படையில் மனித மனம் செய்யும் முடிவுகள், அவை மனத்திற் பதிந்திருக்கும் வரையும், மனிதனின் நடத்தைகளைக் கட்டுப்படுத்துவனவாகவிருக்கும்.'[2] பொதுவான சூழ்நிலையிலே தெரிவிக்கப்பட்ட கருத்தாக கொட்வினின் இந்தக் கருத்துத் தென்படுகின்றபோதிலும், தவறிழைக்கும் அரசாங்கங்கள் பின்பற்ற வேண்டிய அரசியல் உண்மைகளை அவற்றுக்குச் சுட்டிக்காட்டும் பதினெட்டாம் நூற்றுண்டைச் சேர்ந்த புரட்சிவாதிகளின் முயற்சிகள் எந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தன என்பதை அது தெளிவாக விளக்கிக் காட்டுகின்றது.

தார்மீக விடுதலையின் உண்மையான இருக்கையாக இருந்துள்ள சொந்த முடிவு செய்வதற்கான வாய்ப்பைக் கட்டுப்படுத்திய காரணத்தினுல், அரசாங்கத்தின் நடவடிக்கைகள் யாவற்றையும் தீமையானவையெனக் கொட்வின் நம்பினுர். தாம் இயற்கை உரிமைகளுக்கு ஆதரவளிக்கும் அதே நேரத்தில், சனநாயக முறையில் நடத்தப்படும் அரசாங்கம் மக்களுக்குச் செய்வதன் சேவை அவசியம்பற்றியும் பெயின் கவனத்தைச் செலுத்துகின்றுர். சரியானதை இடித்துக்காட்டும் மனச்சாட்சியை மீறலாகாது என்ற கருத்தின் அடிப்படையிற் பிறந்த இயற்கை உரிமைகள் என்ற கொள்கையானது, கொட்வினின் காலத்தை நாம் அணுகுவதற்குள் தீவிர ஆட்சியறவுடைய தனியாண்மையாக வளர்ச்சி பெற்றுவிட்டது என்பதை எண்ணும்போது, பிரித்தானிய, அமெரிக்க அரசியலமைப்புச் சட்டங்களிலே அக்கொள்கை மேற்குலகின் சரித்திர வளர்ச்சியைப் பாதித்திருக்கின்றது என்பதையும், எமது வாழ்நாளிலேயே, 1789 ஆம் ஆண்டின் உரிமைச் சாசனம் பிரகடனம் செய்த மனிதனதும் குடிமக்களினதும் உரிமைகளையும் சுதந்திரங்களையும் நான்காவது பிரேஞ்சுக் குடியரசினது அரசியலமைப்புச் சட்டத்தின் பாயிரம் உறுதிப்படுத்தியிருக்கின்றது என்பதையும் நாம் மனத்திற் கொள்ளுதல் வேண்டும். அந்தப் பாயிரத்தின் ஆரம்ப வசனம் கூறுவதாவது: 'மனிதனை அடிமைப்படுத்தி இழிவுபடுத்த முயன்ற ஆட்சிகளுக்கு எதிராகச் சுதந்திர மக்கள் ஈட்டிய வெற்றியின் தொடக்க நாளிலே, இனம், மதம், கோட்பாடு வேறுபாடுகள் எவையுமில்லாமல் மக்கள் யாவரும் பிரிக்க முடியாத, தெய்வத் தன்மையுடைய உரிமைகளைக் கொண்டிருக்கின்றனர் என்பதைப் பிரெஞ்சு மக்கள் புதிதாகப் பிரகடனம் செய்கின்றனர்'.

[1] எண். L1

[2] *Political Justice*, தொகுதி i, பக். 93

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்காம் அத்தியாயம்

## மிகு மகிழ்ச்சி

"மனிதன் நேரத்திற்கு நேரம் விரும்புபவைகளைப் பெறுவதிலே 'தொடர்பாக வெற்றியீட்டுதலை,' அதாவது, தொடர்பாகச் செழிப்புறுதலை, மிகு மகிழ்ச்சி என மக்கள் வழங்குகின்றனர் என்று ஹொப்ஸ் கூறுகின்றார். இந்த வாழ்க்கைக்குரிய மிகுமகிழ்ச்சியையே ஈண்டு நான் குறிப்பிடுகின்றேன். நாம் இங்கு வாழும் போது முடிவில்லாத அமைதி என்ற ஒன்றுமே ஏற்படமாட்டாது, வாழ்க்கையே அசைவு மயமானது. எனவே விருப்பம், பயம், உணர்வு ஆகியவைகளை வாழ்க்கையிலிருந்து பிரித்துவிடமுடியாது"[1]. வாழ்க்கை முறைபற்றிப் புதிதாக இது எதையும் விரித்துவிடவில்லை. மறுமலர்ச்சிக் காலத்திற்குப் பின்பு வளர்ச்சி பெற்ற வெவ்வேறு அரசியற் கொள்கைகளின் இரண்டாவது பிரதான அம்சத்தைக் குறிப்பிடுவதற்கு மிகுமகிழ்ச்சி என்ற சொற்றொடரை நாம் பயன்படுத்தும் போது, அந்தக் காலத்திற்குள் ஹொப்சின் கருத்துக்கள் அரசியல் முக்கியத்துவம் பெற ஆரம்பித்துவிட்டன என்பதையே வற்புறுத்துகின்றோம். மிகு மகிழ்ச்சியை அடைவதற்கு மக்கள் ஓயாது முயல்வதனால் ஏற்பட்டுள்ள உளவியற் பண்புகளுடன் குடியியல் ஒழுங்கு கடமை ஆகியவற்றின் மாதிரியைத் தொடர்பு படுத்துதல் வேண்டும் என்ற அவருடைய கருத்து, தற்கால உலகிற் செல்வாக்குப் பெற்றிருக்கின்றது. ஆரம்ப, பிற்காலத் தோற்றங்களில் இந்தத் தத்துவவியல், சில முக்கிய அம்சங்களிலே பாரம்பரிய அரசியல் மெய்யறிவு என்ற பெருநிதியத்திற்கு புதிய சிறந்த வாதங்களை நல்கியுள்ளது. இயற்கைச் சட்டம், இயற்கை உரிமைகள் என்ற கொள்கையோடு மனித இயல்பு பற்றிய ஹொப்சின் விளக்கம் இணங்கமுடியாமலிருக்கின்றது என்ற காரணத்தினாலே, ஹொப்சின் கருத்துக்களை லொக் கண்டித்தார். ஹொப்சின் மிகுமகிழ்ச்சி என்ற தலைப்பிலே தொகுக்கப்பட்டுள்ள கொள்கைகளின் சிறப்பியல்புகள் பலவற்றை முற்காலச் சிந்தனையாளர்களிடமும் முற்கால மரபுகளிலும் காணக்கூடியதாக இருக்கின்றது. ஆனால் அந்தச் சிறப்பியல்புகளைப் புதிய ஒழுங்கு முறைப்படி அமைத்துக் கொடுத்திருப்பதனால், ஹொப்சின் பிரசித்திபெற்ற ஆராய்ச்சிக் கட்டுரையான 'லெவியதன்' (Leviathan) அரசியற் சிந்தனை சம்பந்தமான தலைசிறந்த நூலாகத் திகழ்கின்றது.

இந்த உலகின் குடியியல் நலவுரிமைகள் லொக் ஆராய்ந்ததிலும் பார்க்க விரிவான முறையில் ஆராயப்படுவதோடு, மனித இயல்பு, சூழ்நிலைகள், நிறுவனங்கள் ஆகியவற்றிற்கிடையேயுள்ள தொடர்புகளும் மொன்டஸ்கியூ ஆராய்ந்ததி

[1] *Leviathan*, edited M. Oakeshott (Oxford), p. 39



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லும் பார்க்க நுண்ணிய முறையிற் பகுத்தாராயப்படுகின்றன. உலகியல் இயக்கத்திற் சிக்கியுள்ள மனித இனத்தின் உடனடித் தேவைகட்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருப்பதனால், மிகுமகிழ்ச்சி பற்றிய இக்கொள்கை மதத்தை எதிர்க்கும் இயல்பைக் கொண்டிருப்பதாகக் கருதப்பட்டது. மதச் சார்பற்ற அதிகாரிகளின் இறையுரிமைக்கும் வலுவிற்கும் இக்கொள்கை முக்கியத்துவமளிப்பதையும், குடிமக்களின் மகிழ்ச்சிபற்றியே அக்கறை கொண்டிருப்பதையும் அக்கருத்திற்கு ஆதாரவாகக் காட்டப்பட்டது. எனினும், புராதன பாரம்பரியத்திலும் பார்க்க கிறித்துவ மரபிலும் உளவியலிலும், சில அம்சங்களில் மனிதனையும் சமூகத்தையும் பற்றி அகுஸ்தீன் தெரிவித்த மதச் சார்பற்ற கருத்துக்களிலுமே, இக்கொள்கை பெரிதும் தங்கியிருக்கின்றது என்பதைச் சுட்டிக் காட்டுதல் வேண்டும்.

இம்மையில் மக்களைத் திருப்தி செய்வதனால்—இது குறைபாடுள்ளதும் பின்னால் வரவிருக்கும் மகிழ்ச்சியின் முன்னோடியாகவுமே இருக்க முடியும்—ஏற்படும் தற்காலிகமானதும் நிச்சயமற்றதுமான அமைதியென அகுஸ்தீன் வழங்கியிருக்கக் கூடிய அமைதியையே ஹொப்ஸ் மிகுமகிழ்ச்சி எனக் குறிப்பிடுகின்றார். கடவுளின் உதவிப் பதிலாட்சியாளர் என்ற முறையில் இந்த உலகின் தலைமுதலான குடியியல் அதிகாரிகள் அளிக்கும் நீதியானது குடியியல் அமைதியின் வேலைத் திட்டத்தை உருவாக்குகின்றது. ஒவ்வொரு மனிதனும் இந்த அமைப்பிற்குட்பட்டே அவனது மீட்பை அடைவதற்காகப் போராடுதல் வேண்டும். இதைப் போலவே, குடிமக்களின் விருப்பத்திற் காணப்படும் இணக்கத்திலிருந்து தனது அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் ஹொப்சின் இறையுரிமை வலுவானது குடியியல் அமைதியைக் கொடுக்கின்றது. அது இல்லாதவிடத்துக் குடிமக்கள் தமது அவாக்களைப் பூர்த்தி செய்வதென்பது முடியாத காரியம் எனலாம். மன்னரின் அல்லது தனிமனிதனின் விருப்பந்தான், உலகியல் வெளிப்பாடுகளான அமைதி, ஒழுங்கு ஆகியவைகளைத் தேடிப்பெற்று, பலாத்காரத்தின் ஆதரவுடன் இந்த உலகின் இறுதியான அரசியல் அதிகாரமாக ஆட்சிப்பீடத்தில் அமருகின்றது என்பதை ஞாபகப்படுத்தும்போது, இந்த ஒப்புமை பூரணத்துவத்தைப் பெறுகின்றது.

நாம் முன்பு பார்த்ததைப் போன்று, மேற்குலக சாம்ராச்சியம் சீர்குலைந்தமை, எல்லாக் குடிமக்களும் கத்தோலிக்க திருச்சபைக்கு மட்டுமே விசுவாசமாக இருந்தமை, அரிஸ்தோத்திலின் பகுத்தறிவுவாதத்தைக் கிறித்துவ வெளிப்படுத்துதலோடு பரிசுத்த தோமஸ் அவர்கள் தொகுத்தமை ஆகியவை, மனிதனின் இயல்பு, சமுதாயத்தின் அமைப்பு போன்றவைகளைப் பற்றிய அத்தகைய கருத்துக்களை காலத்திற்கொவ்வாதனவாயும் பொருத்தமற்றனவாயும் ஆக்கிவிட்டன. இயற்கைச் சட்டத்தின் நியமங்கள், வெளிப்பாடுகட்குத் திருச்சபை அளிக்கும் விளக்கங்கள் ஆகியவைகளுடன் குடியியற் சட்டத்தை ஒப்பிட்டுப் பார்த்தல்வேண்டும் என்று கருதப்பட்டது. மறுமலர்ச்சிக் காலத்தின் புதிய சூழ்நிலைகளிலே தோமஸ் அக்குயினசின் அரசியற் கொள்கையிலும் பார்க்க அகுஸ்தீனின் அரசியற் கொள்கையுடன் நெருங்கிய கொள்கையொன்றை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றுக்கொண்டமை, ஹொப்ஸ் கூறியதைப் போன்று, சுயநலத்தை நாடும் அவரின் மனிதர்கட்கும் அவரின் நிபந்தனைகளற்ற, தனித்த குடியியல் அதிகாரத்திற்குமிடையே ஏதாவது தர்க்கரீதியான தொடர்புண்டா, அல்லது தமக்கே தெரிந்திராத சரித்திர காரணங்களுக்காக, இன்பவிருப்புடையோர் அகுஸ்தீனின் உவமைகளையும் வாதங்களையும் பயன்படுத்தினரா என்ற கேள்விக்கு இடமளிக்கின்றது.

[illegible]

ளர்களுள், குறிப்பாக லொக், ரூசோ ஆகியோர், ஹொப்சின் முடிவிலிருந்து வேறுபட்ட முடிவிற்கு வந்தனர். அத்துடன் அவ்விருவருடைய முடிவுகளுமே தம்முள் வேறுபட்டன. அன்றியும், மத்தியகாலத்தைச் சேர்ந்த மூரணை கொள்கைக்காரரான பாதுவாவைச் சேர்ந்த மாசிலியஸ் என்பவர் ஹொப்சிற்கு மூன்று நூற்றுண்டுகளுக்கு முன்பே தன்விருப்பார்ந்த வாதத்திற்கு முக்கியத்துவம் அளித்திருந்தார். சட்டத்தைக் கொடுப்பவரின் விருப்பத்திலே நீதி தங்கியிருக்கின்றதென்றும், அரசியல் அதிகாரம் ஒற்றையாட்சிக்குரியதாயும் குடியியல் சார்ந்ததாயும் இவ்வுலகிலே இறுதியானதாயும் இருக்கின்றதென்றும் அவர் கருதினுர். அத்துடன், தம் குடிமக்கள் யாவரும் நல்ல கிறித்துவர்களாகவே இருப்பார்கள் எனக் கருதிக்கொண்ட அவர், அரசியற் சமூகம் செயற்கையானதன்றி இயற்கையானது என்ற அரிஸ்தோத்திலின் கோட்பாட்டில் நம்பிக்கையும் வைத்திருந்தார்.

இரட்டைச் சமூகம் என்ற கொள்கையும், திருச்சபைக்கும் சாம்ராச்சியத்திற்குமிடையே இருப்பதாகக் கருதப்பட்ட சமநிலையாக்கப்பெற்ற இசைவினக்கமும் தோல்வியடைந்தமையாலும், அவை நடைமுறையிற் கைவிடப்பட்டமையாலும் மாசிலியஸ் பெரிதும் வருந்தினுர். சுருக்கமாகக் கூறின், இறைமையுரிமையைக் கொண்ட ஒரேயோர் அதிகாரம் இருப்பதாஞல், அது திருச்சபைக்குரிய ஆட்சியாகவோ மதச் சார்புள்ள ஆட்சியாகவோ இருத்தலாகாது என்று வாதாடினுர் அவர். இந்த உலகிலே குடியியல் வலுவே சட்டவனுமதிகளைப் பயன்படு முறையில் பிரயோகிக்கின்றது என்பதை அவர் கவனித்தார். அவர் அங்கீகரித்த தெய்வீகச் சட்டம் மறுமை வாழ்வையும் உள்ளடக்குவதாக இருப்பதஞல், பரந்த ஆளெல்லையைக் கொண்டதாக இருந்தது. எனினும், அதனுடைய உரிமைகள் இலட்சியத் தன்மை வாய்ந்தவையாகவும் திட்டமற்றவையாகவும் இருந்தன. குடியியற் சட்டத்தின் எல்லைக்கு அப்பாற்பட்ட குடிமக்களின் மனச்சாட்சிகளைக் கட்டுப்படுத்துவதற்கு மட்டுமே தெய்வீகச் சட்டம் குடியியல் சட்டத்திற்கு வலுவூட்டும் பணியைச் செய்தது. பரிசுத்த தோமஸ் கொடுத்த உருவத்திற்கேற்ப இயற்கைச் சட்டத்திற்கு மாசிலியஸ் எந்த இடத்தையும் கொடுக்கவில்லை. அமைதியை நிலைநாட்டும் விடயத்தில் அகுஸ்தீன் வற்புறுத்தும் முறையின் பொது மாதிரியைப் பின்பற்றிய மாசிலியஸ், பதினுன்காம் நூற்றுண்டிலிருந்த போப்பாண்டவர்கள் குடியியல் ஒழுங்கைச் சீர்குலைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனர் என்று வன்மையாகக் கண்டிக்கின்றார். எனவே, 1324 ஆம் ஆண்டில் எழுதி முடிக்கப்பெற்ற 'டிபென்சர் பசிஸ்' (Defensor Pacis) (அமைதியை ஆதரித்து) என்ற அவரின் புத்தகத்தைத் திருச்சபை கண்டித்ததில் ஆச்சரிய மெதுவுமில்லை.

பரிசுத்த தோமசின் கொள்கையைப்போன்றே கிறித்துவ இயல்பையும் மத்தியகாலத்திற்குரிய தன்மையையும் கொண்ட இந்தக் கோட்பாட்டின் அடிப்படை அமைப்பை, பிற்கால இன்பக் கோட்பாட்டினர் தங்களின் மரபுரிமையாகப் பெற்றனர். குடியியற் சமூகத்தின் அமைதிக்கும் இணக்கத்திற்கும் பங்கம் விளைவிக்கக்கூடிய ஆபத்தை உருவாக்கிய காரணங்கள் யாவை அல்லது ஆட்கள் யார் என்ற கேள்வி விவாதத்திற்குரியதாகவிருந்தது. இந்த விசாரணையின்போது அளிக்கப்பட்ட எந்த விடையிலாவது, அமைதியைப் பெறுவதற்கு உகந்த சூழ்நிலையைப் பலம்வாய்ந்ததும் மத்தியிலமைந்ததும், கட்டுப்பாடெதுவுமே இல்லாததுமான வலுவினுற்றான் ஏற்படுத்த முடியுமென்று கூறப்படவில்லை. எனினும், அத்தகைய வலுவின் அவசியத்தை மரபு முறை ஏற்றுக் கொண்டுவிட்டது. மற்ற விடயங்களில் வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருந்த அகுஸ்தீன், மாசிலியஸ், ஹொப்ஸ் போன்ற சிந்தனையாளர்களும் இந்த விடயத்தில் மரபு முறையை ஏற்றுக்கொண்டனர்.

மேற்குலகத் திருச்சபையிற் பதினைந்தாம் நூற்றாண்டிலே தோன்ற ஆரம்பித்த பிளவுகள் மதச்சீர்திருத்த காலத்தில் வெளிப்படையாகத் தென்படலாயின. சமயப்போட்டிகளும் போர்களும் குடியியல் அமைதியை முன்னிலும் பார்க்க அதிகமாகக் குழப்பவாரம்பித்தன. அதே சமயத்தில், மத்தியகாலத்தைச் சேர்ந்த பாப்பரசர்கள் மதச்சார்புள்ள இறையுரிமை தம்மிடமிருப்பதாகக் கூறிவந்தமை குன்றவாரம்பித்தது. இதே காலத்தில், ஐரோப்பிய கலாசாரப் பெறுமதிகள் (மொத்தமாக இவைகளையே மறுமலர்ச்சி என்று வழங்குகின்றோம்) உருமாற்றம் பெற ஆரம்பித்ததன் விளைவாக, இவ்வுலக வாழ்க்கையின் மகிழ்ச்சிக்கும் திருப்திக்கும் மதிப்பளிக்கும் மனநிலை உருவாகியது. கிரேக்க தத்துவவியலினது மறைபொருளாராய்ச்சியின் நுணுக்கங்களைப் பற்றிக் கவலைப்படாமல், மனித வாழ்க்கைக்கு முக்கியத்துவமளித்தல் என்ற கிரேக்க உதாரணத்தைப் புதிய உத்வேகத்துடன் பின்பற்றுவதாக இருந்தது இந்தப் புதிய போக்கு. அந்தக் காலத்தைச் சேர்ந்த உணர்ச்சித்திறன் மிக்க அவதானிகள் நன்றாக அறிந்திருந்த மிகவும் பரந்த பொருளாதார, சமூக மாற்றங்கள், தனி மனிதருக்கு முக்கியத்துவம் கொடுக்கும் பரிசோதனை இடையூறின்றி அபிவிருத்தியடைவதற்குப் புதிய ஊக்கத்தைக் கொடுத்ததோடு, ஐரோப்பாவில் நிலப் பிரபுத்துவ முறைக்குரியதும் மதச் சார்புள்ளதுமான, பிளவுபட்ட, சச்சரவிற்கு இடமளிக்கின்ற அதிகாரத்திற்குரிய இடத்தைப் பிடித்துக்கொண்ட நாடு—அரசின் புதிய மத்திய வலுக்களுக்குக் கிடைத்துவந்த ஆதரவையும் அதிகரிக்கச் செய்தன.

பதினைந்தாம் நூற்றாண்டில் ஏற்பட்ட குழப்பநிலைகளிலிருந்து உருவாகிய புதிய வர்த்தகங்களினதும் தனியாட்களினதும் பொதுவாழ்விற்குரிய தேவைகளை, தனிமுதன்மையான மதச் சார்பற்ற அதிகாரம்பற்றிய ஒரு கொள்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூர்த்தி செய்யக்கூடிய நிலைமைகளை உருவாக்குவதற்கு இரண்டு இயக்கங்களும் சேர்ந்து சதி செய்தன. இன்பம், வெற்றி ஆகியவைகளைத் தேடிப் பெறுதல் வேண்டும் என்ற கொள்கைகளையுடையோர் புறச் சமயத்தவர்கள் காலத்தி லும் காணப்பட்டார்கள். ஆனால் சாம்ராச்சியத்தின் அரசியற் கட்டமைப்பை அவர்கள் அப்படியே ஏற்றுக்கொண்டதோடு அதை மாற்றவோ, திருத்தவோ, நிர்ணயிக்கவோ முயலவில்லை. அரசியல் உறுதியின்மை, மத இணக்கமின்மை, பொருளாதார, சமூகப் புரட்சி ஆகியன நிலவிய காலத்தில் அக்கருத்துக்கள் மறுபடியும் தோன்றியமையினால் அவைகட்கேற்ற அரசியற் கொள்கையை உரு வாக்க வேண்டிய தேவை உண்டாயிற்று. கிறித்துவ உலகின் தார்மீகப் பாரம் பரியத்திற்குள் வாழ்ந்தவர்கட்கு இயற்கைச் சட்டக் கோட்பாடுகள் நல் கிய நன்மைகள் புதிய அரசுகளினதும் புதிய மனிதாபிமானிகளினதும் தேவை கட்கு ஏற்றவையாக இருக்கவில்லை. அரிஸ்தோத்திலினது இயற்கைச் சமூகத் தின் நன்னெறி சார்ந்த அமைப்பிலிருந்து பிரிக்கப்பட்டால் இன்பக் கோட் பாட்டினர் எவ்வாறு நடந்துகொள்வர் என்ற கேள்விக்கு என்ன விடையை அளிக்கமுடியும் என்பதைத் திடமாகச் சொல்ல முடியாது. அவ்வாறு பிரிக்கப் படுவதன் விளைவாக சமூக இணக்கம் ஏற்பட்டிருக்குமா அல்லது ஒரே குழப்ப நிலை ஏற்பட்டிருக்குமா என்பது மிகு மகிழ்ச்சிபற்றிப் பேசப்பட்ட மூன்று நூற் றூண்டுக் காலங்களிலும் வாய்ப்பாராயப்பட்ட முக்கிய விடயமாக இருந்தது.

மாற்றமடைந்துவரும் உலகிலே திருப்திநிலையைப் பெற்றுள்ள தனி நபர்களின் நிலையை விவரிப்பதற்குப் புதிய சொல் ஒன்றை நாம் பயன்படுத்துவதை வெறும் மொழி மாற்றம் எனக் கொள்ளலாகாது. அமைதி, ஒழுங்கு பற்றிய கிறித்துவக் கருதுகோள்களில் மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதற்கு அந்தப் புதுச் சொல் சான்றுபகருகின்றது. நன்ருக ஒழுங்கு செய்யப்பட்ட குடியியற் சமூகத்தின் இலட்சியங்களாகவே அக்கருதுகோள்கள் இருந்தன. மறுமைக்கு ஊடாகச் செல்ல உதவுமுகமாக மதநம்பிக்கையுடையோருக்கோ திருச்சபைக்கோ ஆதா வாக இருப்பதற்கு அமைதியையும் ஒழுங்கையும் பெறவேண்டியதில்லை. குடி யியல் வலுவின் ஆதாவின்கீழ் தனது சொந்த நலவுரிமைகளிற் கவனம் செலுத் தும் நோக்கையுடைய ஒவ்வொரு மனிதனும் தன்னையொத்த மனிதர்கள் வாழும் அபாயகரமான, ஆனல் பயனளிக்கும் சமூகத்திலே கிட்டத்தட்ட வெற்றியளிக்கும் வாழ்க்கையை அடைவதற்குத் தேவையான விருப்பம். சாதனை ஆகியவைகளின் சமன்படுத்தப்பட்ட சூழ்நிலையைப் பெறுவதற்கே இவை உதவி புரிகின்றன. தனிமுதன்மையான போட்டிகளில்லாத இறைமை வலுவினல் விரும்பிச் செய்யப்பட்ட முடிபாகச் சட்டம் இருக்கும்போதுதான், இந்தச் சாதனையை அடையமுடியும். இதையே வேறு விதமாகச் சொல்லுவதானல், மற்ற எல்லா கிறித்துவ மரபுகளிலும் பார்க்கப் பேரரசின் பாதுகாப்பு, ஒழுங்கு என்ற பழைய கருத்தின் எதிரொலியாகவிருக்கும் இந்தச் சிந்தனையோட்டமே, புதிய காலக்கட்டத்தின் தேவைகளுக்கு ஏற்றதாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணிதவியல் ஆராய்ச்சியிற் பதினேழாம் நூற்றுண்டில் ஏற்பட்ட வளர்ச்சி, காட்டீசிய தத்துவவியலின் செல்வாக்கு, குறிப்பாக ஹொப்சிற்கு நிகழ்ந்ததைப்போன்று, சிறந்த வாதிடுதலுக்கு மாதிரியாகக் கேத்திரகணிதமுறையில் நியாயங்களைக் கூறுவதில் ஏற்பட்ட ஈடுபாடு ஆகியவை இந்தக் காலகட்டத்தை மிகவிரைவில் ஈடாடச் செய்யக் காரணமாயின. மத்திய காலத்திற் பயன்படுத்தப்பட்ட சேதனவுறுப்பு பற்றிய உருவங்களைப் பிரயோகிப்பதை அறிவுத்துறையில் ஏற்பட்ட இந்தப் புரட்சி ஊக்குவிக்கவில்லை. பருப்பொருளிலுள்ள அணுக்கள் பௌதிக வலுக்களாற் கட்டுப்படுத்தப்படுவதைப் போன்று, தனிமனிதர் தற்செயலாக ஒன்று சேர்க்கப்பட்டதன் விளைவாகவே சமுதாயங்கள் உருவாகின என்று சிந்திக்கும் போக்கை இந்த அறிவியல் புரட்சி ஊக்குவித்தது.

சமூக சிந்தனைபற்றிய இந்த முக்கியமான மரபுபற்றி ஆராயும்போது பெருமளவு உணர்ச்சியும் பகைமையும் காட்டப்பட்டுவிட்டமையினுல், திரிபற்ற முறையில் அதனுடைய அடிப்படை அம்சங்களை அறிந்துகொள்வது மிகவும் கடினமாக இருக்கின்றது. சமய மறுப்பாளர் என்று மாசிலியஸ் பகிரங்கமாகத் தூற்றப்பட்டார். 'நாத்திகர்களின் தந்தை' என்ற பட்டம் ஹொப்சிற்குச் சூட்டப்பட்டது. மறுமலர்ச்சிக்காலத்தில் இந்தக் கருத்தைச் சிறந்தமுறையில் விளக்கிக்கூறியவரும் இந்தக்கருத்தைக் கொண்டிருந்தவர்களிடையே புத்திக்கூர்மையுடன் ஆராய்ந்து மிகச் சிறந்தமுறையில் எழுதியவருமான மக்கியவெல்லி, எடுத்ததற்கெல்லாம் குறைகூறுபவருக்கும், உலகியலுக்குரிய பழிகளைச் செய்பவருக்கும் உதாரணமாகக் கொள்ளப்பட்டார்.

மக்கியவெல்லி எவ்வாறு தவறுகப் புரிந்துகொள்ளப்பட்டார் என்பதைச் சுட்டிக்காட்டுவது கடினமானதல்ல. பதினைந்தாம் நூற்றுண்டு முடிவடைந்து பதினும் நூற்றுண்டு ஆரம்பமாகிய காலத்திலே புளோரன்சின் பிரபல குடிமகனுகத் திகழ்ந்த மக்கியவெல்லி, கொந்தளிப்பான அந்தக் காலத்தில் தம்முடைய சந்தர்ப்பங்கள் பற்றித் தப்புக்கணக்குப் போட்டுக்கொண்டதன் விளைவாக, தமது வாழ்க்கையின் இறுதிப் பதினைந்து ஆண்டுகளையும் பதவியைத் துறந்து நாட்டுப்புறத்தில் கழிக்கவேண்டிய அவசியம் நேரிட்டது. அரசியல் வலுவைப் பெறுவதற்கும் பிரயோகிப்பதற்கும் சிறந்தவழி எது என்பதுபற்றி அவர் இந்தக் காலத்திற் சிந்தித்தார். அவர் தமது சிந்தனைக்கு அடிப்படையாக எடுத்துக்கொண்ட அரசியல், மனவியல் எடுகோள்களிலும்பார்க்க அவருடைய சிந்தனைகளே கவர்ச்சிமிக்கவையாக இருக்கின்றன. கொள்கையளவில் வல்லாட்சியிலும்பார்க்க குடியரசையே மக்கியவெல்லி விரும்பினுர் என்பதையும், மிகச் சிறந்ததாகக் கருதப்பட்ட உரோமைக் குடியரசின் சிறப்புக்களை மிகுந்த கவலையுடனே அவர் பார்த்தார் என்பதையும் பலர் பெரும்பாலும் மறந்துவிடுவது வழக்கம். காலம் கெட்டுப்போய்விட்டது என்றும், மிகக்குறைந்த அளவு தொகை பொதுமக்களே பொதுநன்மைக்குத் தமது உண்மையான ஒத்துழைப்பை நல்குவர் என்றும், தான் வாழ்ந்த காலத்தில் வேறுவழிகளிற் கவனத்தைச் செலுத்துகின்ற இத்தாலிய நகர்களுக்குப் பலம் வாய்ந்த, ஈவிரக்கமற்ற, சுதந்திர மனப்பான்மையையுடைய ஆட்சியாளர்களே தேவைப்படுகின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றனர் என்றும் அவர் நம்பினர். அன்று நிலவிய சூழ்நிலைகளில் இது குறைபாடு களையுடையதும் இரண்டாந்தரமானதுமான ஒழுங்கமைப்பேயாகும். இதைப் போலவே, மனிதரின் நடத்தைகளைப் பற்றிய தார்மீக மதிப்பீட்டையும் மக்கிய வெல்லி செய்துள்ளார். தங்களுடைய நன்மைகளை வெற்றிகரமாகப் பெறுவதற் குத் தேவையான புத்திசாதுரியம் அவர்களிடம் கிடையாது. ஆயின் இப்படித் தான் அவர்கள் நடந்துகொள்ளவும் வேண்டும். ஒன்றரை நூற்றுண்டுகளுக்குப் பின்னுல் வாழ்ந்த ஹொப்சிற்கு, இந்தச் சார்பினடிப்படையிலான தார்மீக மதிப்பீடுகள் முழுமையானவையாகவும் நியமமானவையாகவும், தார்மீக முறையில் நடுநிலையானவையாகவும் தென்படுகின்றன. மனித சூழ்நிலை நிரந்தர மாக இந்த வகையினதாகவே இருக்கும்; ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்கு மட்டும் பொருத்தமானதல்ல இது; உண்மைநிலையையே இது விவரிக்கின்றது.

இந்த உலகிலே தனது உணர்ச்சிகளைத் திருப்தி செய்யும் (இதில் அதிகமாக வெற்றி கிட்டுவதில்லை) விருப்பையுடைய பிராணியாகவே மக்கியவெல்லி மனி தனைக் காண்கின்றுர். மக்கியவெல்லி நன்னெறி என்றழைக்கும் பண்புகளை, அல் லது முயற்சியில் ஈடுபடுதற்குத் தேவையான மனப்பக்குவத்தைப் பெரும்பாலு மாய், இந்த நோக்கத்திற்காக மனிதன் தான் வாழும் சூழ்நிலைக்கேற்றபடி தன்னை ஒழுங்கு செய்துகொள்ளவேண்டும். வெற்றிக்கு வழியான வலுவும் மனி தனுக்கு இருத்தல்வேண்டும். வெற்றியை அடைவதற்கு இருக்கவேண்டிய மன நிலையிலிருந்து இது வேறுபட்டது. ஆனுல் அதிகமாக மனிதர்கள் ஏமாற்றத் தையும் மனவெறுப்பையுமே அடைகின்றனர். விருப்பங்கள் அளவில் அடங்கா தவை. வலுவோ வரையறுக்கப்பட்டது. விருப்பங்களுக்கும் வலுவுக்கு மிடையே சமநிலையை ஏற்படுத்துவது கடினமானது. இத்தகைய சமநிலையை ஏற்படுத்தினுலும் அதை நிலைநிறுத்துவது என்பது மிகவும் கடினமானது. தற் பெருமையால், அல்லது, சரியான தீர்மானத்திற்கு வருவதைக் குலைக்கும் ஏதோ ஓர் உணர்ச்சிக் குழப்பத்தினுல் உருவாகும் இத்தகைய சமநிலையின்மை யானது நன்மையான அல்லது வெற்றிகரமான வாழ்க்கையின் மதச்சார்பற்ற கருத்தின்படி பாவத்தின் பங்கை வகித்துக்கொண்டது. எனவே, அமைதியற்ற வரும் அடங்கி நடக்காதவருமான குடிமக்கள், மாற்றமடையும் சூழ்நிலைகளில் உறுதியான பொது ஒழுங்கமைப்புக்குரிய பாதுகாப்பின்கீழ் தங்களுக்குக் கிடைக்கக்கூடிய திருப்தியைப் பெறுவதற்குப் பலம்வாய்ந்த மத்திய அரசியல் வலு இருப்பது அவசியமானது என்ற முடிவிற்கு, அகுஸ்தீனைப்போன்று மக் கியவெல்லியும் வந்தார்.

மாசிலியஸ் செய்ததைப்போலவே, தமது காலத்தில் நிலவிய மனநிறைவின் மைக்கும் அரசியல் ஒழுங்கின்மைக்கும் திருச்சபையே, குறிப்பாக போப்பாண் டவர்களே காரணம் என்று மக்கியவெல்லியும் குற்றம்சாட்டுகின்றுர். எதையும் எதிர்ப்புக்காட்டாமல் ஏற்றுக்கொள்ளும் இயல்பையும், இழைக்கப்படும் தீங்கு கள் யாவற்றையும் பொறுமையாகச் சகித்துக்கொள்ளும் பண்பையும் உருவாக் கியதற்காகவும், 'இந்த உலகின் சொத்துக்கள், நற்பெயர், நற்புகழ் ஆகியவை கட்கு அதிக மதிப்பு கொடுக்காதிருக்கத்' தூண்டியதற்காகவும் மக்கியவெல்லி ஒரு படி மேலேசென்று கிறித்துவ மதத்தையே கண்டிக்கின்றுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைக்கொண்டு, உலகியற் பொருள்களை அடைவதையே மனிதனின் இலட்சியமாக மக்கியவெல்லி கருதுகின்றார் என்று கொள்ள முடியாது. அதற்கு மாறாக, நற்காலம் என அவர் அழைக்கும் இனந்தெரியாத பல காரணங்களாலான மாறும் சூழ்நிலைக்கும் மனிதனுக்குமிடையே ஏற்படுத்தப்படும் சமநிலையைப் பாதுகாப்பதற்குத் தேவையான ஒரு வழியாகவோ, ஒழுங்குபடுத்தலாகவோதான் உலகியற் பொருள்களுக்கு அவர் மதிப்பளிக்கின்றார். அடங்காத குணத்தையுடைய தனியாரையும் அரசியல் அக்கறைகளைக்கொண்டுள்ள திருச்சபையையும் கட்டுப்படுத்தத்தக்க பலம்வாய்ந்த மதச் சார்பற்ற, மத்திய வலுவொன்றை உருவாக்குவதே சமூகத்துறையில் இதே இலட்சியத்தை அடைவதற்குரிய மிகவும் முக்கியமான ஒரே வழியாகும். தங்களின் சூழ்நிலைகளை மிக விரைவாகவும், மிகுந்த திடநம்பிக்கையுடனும் வெல்லுவதற்கும் வருங்காலத்தில் அதிக நம்பிக்கை வைப்பதற்கும் இத்தகைய வலு தன்னுடைய குடிமக்களுக்கு உதவிபுரியும். தாம் வாழ்ந்த காலத்தில் நிலவிய சூழ்நிலைக்கு நல்லனவும் ஏற்றனவும் எனத் தாம் கருதிய பலாபலன்களை ஏற்படுத்துவதற்குத் தேவையான வழிவகைகளை, வெற்றிப்பாதையிற் செல்லும் இளவரசருக்குச் சுட்டிக்காட்டக்கூடிய முதுமொழிகளை, அவை பாரம்பரிய தார்மீக நியமக் கொள்கைகளுக்கு மாறுபட்ட ஆலோசனைகளைக் கொண்டிருந்தபோதிலும், கூறுவதே தமது பணியென்று மக்கியவெல்லி கருதினர்.

பதினேழாம் நூற்றுண்டின் மத்திய பகுதியில் இப்பொருள்பற்றிய தலை சிறந்த கட்டுரையை ஹொப்ஸ் வெளியிட்டார். குழப்பம் மிகுந்த காலகட்டத்திற்குத் தேவையான தற்காலிகமான ஒழுங்கு என மக்கியவெல்லி கருதிய அரசியல் அமைப்புமுறையை, எல்லாக் காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்றதொன்ருக ஹொப்ஸ் மாற்றியமைத்தார். அத்துடன், மக்கியவெல்லியின் மனவியலிற் புதைந்திருந்த எடுகோள்களைக் கண்டிப்புடன் விளக்கியதன்மூலம் அதிற் காணப்பட்ட ஒவ்வாத தார்மீக முடிவுகளை அகற்றினர்; அத்துடன், விரைவில் மறையும் திருப்தியை அடைதற்கும், மனிதனின் இயல்புக்கும் அவனை எதிர்நோக்கும் நிலைமைகளுக்குமிடையே காணப்படும் உறுதியற்ற சமநிலையைப் பெறுதற்கும் (இதனை மிகுமகிழ்ச்சியென அவர் வழங்கினர்) முயலுகின்ற இயறகை மனிதனைப் பிறந்த மேனியனுய் ஹெப்ஸ் படம் பிடித்துக் காட்டினர்.

* * * *

மன்னர்களின் தெய்வீக உரிமை என்ற கொள்கைக்கு நிறைய ஆதரவு இருந்து வந்தபோதிலும், அரசியல் அதிகாரம் மேலேயிருந்து கிடைக்கின்றது என்ற கொள்கையை ஆட்சியாளர்களின் உயர்குடித் திறனைக்கொண்டோ தெய்வத்தின் புரியாத கையளிப்பைக் கொண்டோ விளக்கமுடியாது என்ற போக்கு, மத்திய காலத்தை அடுத்த காலத்துக்குரிய அரசியற் சிந்தனைகளிலே முக்கியத்துவம் பெறலாயிற்று. எல்லா அரசாங்கங்களும் கைமாற்றல் மூலமோ, ஆட்பேர் உரிமை ஒப்படைப்பு மூலமோ, நியமனம் மூலமோ, அல்லது பிரதிநிதித்துவம் மூலமோ தமது அதிகாரத்தைக் குடிமக்களிடமிருந்தே பெறுகின்றன என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் அர்த்தத்திற் கூறலாம். விசுவாசிகள் தங்களின் யாத்திரையை முறையாக மேற்கொள்வதற்குத் தேவையான அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கான ஓரமைப்பை வழங்குதலே மதச் சார்பற்ற அரசாங்கத்தின் சரியான கடமையாகும் என்ற முந்திய வாதங்களிலிருந்து ஹொப்சின் அரசியற் சிந்தனையை வேறுபடுத்திக் காட்டுவது இந்தக் கருத்துத்தான். ஹொப்சின் கருத்துப்படி, இறையுரிமையையுடைய ஆட்சியாளர்கள் தம் குடிமக்களுக்கு இந்தச் சேவையைச் செய்யவேண்டும் என்றே எதிர்பார்க்கப்பட்டனர். குடிமக்கள் ஒவ்வொருவரையும் தமது இயற்கையான வாழ்க்கையைச் சுதந்திரமாக வாழ்வதற்கு அனுமதிப்பதே இந்த ஒழுங்கமைப்பின் நோக்கமாகவிருந்தது. தமது இயற்கையான வாழ்க்கையை எவ்வளவிற்கு வெற்றிகரமாக வாழமுடியுமோ அவ்வளவிற்கு வெற்றிபெறச் செய்வதற்கு அரசியல் அமைப்பு ஒன்றை உருவாக்கவேண்டும் என்ற உணர்ச்சி குடிமக்களிடம் ஏற்படுவதன் விளைவாகவே, அத்தகைய அரசியலமைப்பு உருவாகின்றது. கடவுளின் நன்கொடையாகவோ, திருச்சபையின் மதச் சார்பற்ற அங்கமாகவோ, நன்னெறி வாழ்க்கையை நடத்தும் சிறுபான்மையினரின் பிரதிபலிப்பாகவோ அரசு இருக்க மாட்டாது. பிரசைகள் யாவரினதும் பொதுத் தார்மீக நலவுரிமையைப் பிரதிபலிக்கும் வசதியான நிர்வாக ஒழுங்காகவும் அரசு இருக்கமுடியாது. மிகுமகிழ்ச்சியை அடைவதற்குத் தனிமனிதன் முயலும்போது, அம்முயற்சி வெற்றிபெறுவதற்குத் தேவையான முன் நிபந்தனையாக ஓர் அரசியல் நிறுவனத்தை அவன் உருவாக்குகின்றான் என்று ஹொப்ஸ் வாதிக்கின்றார். அந்த அரசியல் நிறுவனம் தொடர்ந்து செயற்படுவதற்கும் குடிமக்களே தொடர்ந்து பொறுப்பாக இருக்கின்றனர். இந்த ஒழுங்கமைப்பின் மூலம் மனிதன் நேரடியாக எதையும் பெற்றுவிடுவதில்லை. மக்களை மகிழ்வுறச் செய்வதோ வெற்றிபெறச் செய்வதோ அரசாங்கத்தின் வேலையல்ல என்பதே அதற்குக் காரணம். அதே நேரத்தில் அரசியல் அமைப்பின் உதவியில்லாமலும் மனிதனால் எதையும் சாதித்துவிட முடியாது. மரணத்தைப்பற்றிய பயமே அரசியலின் ஆரம்பமாகும்.

ஹொப்ஸ் தமது புத்தகமான **லெவியதன்** என்பதிலே முதலாவது பாகத்தை மனித உளவியலைப் பகுத்தாராய்வதிற் செலவிடுகின்றார். தார்மீக எடுகோள் எதையும் செய்துகொள்ளாமல், அல்லது இப்பொழுது நாம் கூறுவதைப்போல், பெறுமதித் தீர்ப்பு எதையுமே செய்யாமல் எச்சார்புமின்றி விவரிப்பதில் அவருடைய உளவியல் ஆராய்ச்சிகள் தற்கால ஆராய்ச்சிகளைப் பெரிதளவில் ஒத்திருக்கின்றன. தாங்கள் வசிக்கும் சூழ்நிலைகளை எதிர்த்து எவ்வாறு மக்கள் நடந்துகொள்கின்றனர் என்பதையும், இந்த நடவடிக்கைகளை நல்லதும் கெட்டதும் தொடர்பாக அவர்கள் எவ்வாறு மதிப்பிடுகின்றனர் என்பதையும் அறிந்துகொள்வதிலே அவர் கவனம் செலுத்தினார். ஆனால் அவர் பின்பற்றும் ஆய்வு முறை தற்கால ஆய்வு முறையைப் போன்றதல்ல. தனிப்போர் உதாரணத்தை எடுத்து அதை மிகவும் விரிவான முறையிற் பகுத்தாராய்ந்து, அதற்குள் எல்லாக் காலத்திற்கும் பொருத்தமான உண்மைகளைக் கண்டுகொள்ளும் மத்தியகால முறையையே ஹொப்ஸ் பின்பற்றுகின்றார். மனிதனின் நடத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யைப் பற்றிய விடயத்தில், உள்முக ஆராய்ச்சியோடு இது சம்பந்தப்பட்டிருக்கின்றது. எனவே, தம்மை உள்நோக்கி ஆராய்வதையே இந்த வகை ஆராய்ச்சிக்கு மாதிரியாக ஹொப்ஸ் எடுத்துக்கொண்டார். 'முழு நாட்டையும் ஆள முற்படுகின்றவன் தன்னிடத்திலே இந்த அல்லது மற்றத் தனிமனிதனைக் காணலாகாது; மனித இனத்தையே காணுதல் வேண்டும்...............'[1] விஞ்ஞான முறைப்படியோ சரித்திர முறைப்படியோ அமைந்திராத இந்த மெய்யியல் முறை, ஹொப்சின் பகுப்புமுறையைச் சில வெளிப்படையான திரிபுகளுக்கும் தவறுகளுக்கும் ஆளாக்குகின்றது. மனிதனின் இடுக்கண் நிலையை, அக்குறைபாடுகளுக்கான முழுக் குற்றமோ, ஓரளவு குற்றமோ மனிதனையே சார்ந்தது எனக் கூறுமல், முதன்முதலில் விவரித்த பெருமையுடன் ஒப்பிட்டுப்பார்க்கிற போது, இக் குறைபாடுகள் மிகவும் அற்பமானவையாகவே தென்படுகின்றன. குரொக்கிரேதியஸ் போன்ற புராதன சிந்தனையாளர்களையும் இவண் சேர்த்துக் கொள்வதானுல் இந்தக் கூற்றை வரைப்படுத்தல் வேண்டும். திட்டமிடப்பட்ட, இயற்கையான, அகிலத்துக்கும் பொதுவான ஒழுங்கின் ஒரு பகுதியாக மட்டுமே குரொக்கிரேதியஸ் மனிதனைக் கண்டார். தார்மீகக் கடமைகளிலிருந்து அரசியல் தேவைகள் பெறப்படுகின்றன என்ற வழக்கமான கருத்திற்கு மாருக, அரசியல் தேவைகளிலிருந்து தார்மீகக் கடமைகளை உய்த்தறிந்துகொள்ளும் சமூக மெய்யியலை இந்த அடிப்படையிலிருந்து பெறுவதற்கு ஹொப்ஸ் மட்டுமே முயற்சி எடுத்தார்.

மனிதனின் குறைபாடுகளைப் பகுத்தாராய்ந்தபோது, கிரேக்க அல்லது கிறித்துவக் கருத்துக்களின்படி பாவம் என்றே அறியாமை என்றே அழைக்கப்படுபவைகளை ஹொப்ஸ் காணவில்லை. அவற்றிற்குப் பதிலாக, மனித இயல்பிற் காணப்படுகின்றனவும் தவிர்க்கமுடியாதனவுமான மாறுபாடுகள், தவருன முடிவுகளுக்குப் பதிலாக இடையூறுகள், கொடுமைக்குப் பதிலாக அதிருப்தி ஆகியவைகளையே அவர் கண்ணுற்றூர். இந்தக் கருத்தைக் குறிப்பிடுவதற்கு உபயோகிக்கப்பட்ட சொற்றொடர்களான 'எடுத்தற்கெல்லாம் குறைகூறும் கொள்கை' 'எதிலும் கெடுதலையே காணும் மனப்பான்மை', 'கீழ்த்தரமானது' என்பன போன்றவை ஹொப்சின் கொள்கையைக் கண்டித்தவர்களுக்குப் புகழைத் தேடிக் கொடுப்பனவாகவில்லை. மனித நடத்தையை விவரிக்கும்போது எல்லாத் தப்பெண்ணங்களையும், குறிப்பாக எல்லாத் தார்மீக தப்பெண்ணங்களையும், தவிர்த்துவிடுவதற்கு அவர் மேற்கொண்ட முயற்சிகளை, கண்டிப்பதற்குப் பதிலாக முன்மாதிரியாகக் கொள்ளுதல் வேண்டும். மிகவும் கவனமான எழுத்தாளரான ஹொப்ஸ், சில அம்சங்களில் தம்மைத்தாமே குற்றவாளியாக்கிக் கொள்கின்றூர். மில்டனின் சாத்தானைப் போன்று, கட்டுப்பாடற்ற சமூகத்தின் பயங்கரமான விளைவுகளை அவர் வருணிக்கும் விதம் வாசகர்களின் கவனம் முழுவதையும் தன்பால் இழுத்துக்கொள்கின்றது. பகுத்தறிவின் ஆலோசனையின் பேரில், மனிதனுடைய விருப்பங் காரணமாக உருவாக்கப்படும் ஒழுங்கான அரசியல் ஆட்சிக்குப் பதிலாக, நிகழமுடியாதது என்று ஹொப்ஸ் வாதாடும்

[1] *Leviathan*, முகவுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கை நிலைதான் எமது மனத்திலே தெளிவாகப் பதிகின்றது. மனிதனின் வாழ்க்கை 'தனிமைமிக்கதாகவும், வறுமையுடையதாகவும், அருவருப்பான தாகவும், விலங்குத்தன்மையுடையதாகவும், குறுகியதாகவும்' இருக்கின்றது என்பதை ஹொப்சின் மாணவர்கள், அவரின் புத்தகத்தைப் படித்தாலும் படிக்காவிட்டாலும், நன்கறிவார்கள். இந்த ஆபத்து மிக அரிதாகவே நிவர்த்தி செய்யப்படுகின்றது என்ற முடிவிற்கு வர ஹொப்சின் மாணவர்கள் மறந்து விடக்கூடும். இந்த ஆபத்தைத் தடுப்பதற்காக மனிதன் எல்லாக் காலத்திலும் மிகவும் சிரமப்பட்டு அரசியல் நடவடிக்கையை மேற்கொள்ளுகிறான்.

அரசியலற்ற சூழ்நிலை என்று சொல்லப்படும் சூழ்நிலையை, லொக் கூறுவதைப் போன்று சமுதாயமாகவோ, ஹொப்ஸ் கூறுவதைப்போன்று தனியாருக்குரிய தும் தார்மீகத் தன்மையற்றதுமான அமைப்பாகவோ, அல்லது ரூசோ கூறு வதைப்போன்று இவற்றுள் ஒவ்வோர் அம்சத்தையும் சிறிதளவு கொண்டிருப்ப தாகவோ கொண்டாலும், எப்பொழுதும் அது கருத்துக்குழப்பம் விளைவிப்ப தாகவே இருக்கின்றது. ஒழுங்காக அமைக்கப்பட்ட அரசியற் சமூகத்தின் நடைமுறைச் சட்டத்திலிருந்து, சமுதாய ஒப்பந்தக் கொள்கையிலுள்ள வாச கம் தனது பிரதான உருவகத்தைப் பெற்றுக்கொள்வதனால், அது மனித வாழ்க்கை நடைபெறுவதற்குத் தேவையான முன்நிபந்தனையாக அரசியல் இருக்கின்றதா, அல்லது வேறொரு தனியான இலட்சியத்திற்குக் கீழ்ப்படிவான ஒரு பகுதியாக மட்டும் இருக்கின்றதா என்ற முக்கியமான கேள்விக்குத் தெளி வான விடையைக் கொடுக்கத் தவறிவிட்டது. இந்த இரு கருத்துக்களிலும் முதலாவதாகவுள்ள கருத்தை ஆதரிக்கும் ஹொப்ஸ், இரண்டாவது வாதத்தை ஏற்றுக்கொண்டவரைப்போன்று தமது வாதத்தை நிரூபிக்க முயலுகின்றார். அரசியல் இறையுரிமையைக் கொண்டிருப்பவரின் பாதுகாப்பில்லாமல் மிகு மகிழ்ச்சி என்பது இருக்கமுடியாது என்பதே அவரின் உண்மையான நம் பிக்கையாகும். மனித இயல்பை முக்கிய தரவாகக் கொண்ட கேத்திரகணிதத் தேற்றத்தை நிரூபிக்கும் வெவ்வேறு கட்டங்களோடு ஹொப்சின் முறையை ஒப்பிட்டுப்பார்ப்பது அதனை விளங்கிக்கொள்ள உதவிபுரிவதாகவிருக்கும். வாதத்தை விளக்க உதவும் அமைப்புக்கோடுகளாக, புராணக் கதைகளில் வரும் அரசியலற்ற நிலைமையில் வசிக்கும் மனிதருடைய நடத்தைகளின் விளைவுகளைக் கொள்ளலாம். இந்த அமைப்புக் கோடுகளைப் புறக்கணித்துவிட்டுப் பலம் வாய்ந்த இறைமையுடைய ஆட்சியாளரின் கீழ்த்தான் மக்கள் வசிக்க முடியும் என்ற முடிவைப் பார்த்தால், அது கேத்திர கணித நிரூபணத்தை ஒத் திருக்கும்.

இயற்கையான மனிதனுக்கு இருப்பதாக இந்தச் சிந்தனைமரபை ஆதரிப்பவர் கள் கூறுகின்ற பண்புகளே, இச் சிந்தனை மரபிற்கும் பிரெஞ்சுப் புரட்சிவரையில் இதற்கு முக்கிய போட்டியாகவிருந்த சிந்தனைக்குமுள்ள பிரதான வேறுபாடா கும். ஒழுங்கிற்கு அமைந்து நடக்குமாறு நிர்ப்பந்திக்கப்படவேண்டிய பாவி யாக மனிதன் இருக்கின்றானா? அடிக்கடி தவறான வழியிற் செல்லும் தார்மீகப் பிராணியாக அவன் உள்ளானா? அல்லது ஹொப்ஸ் கூறுவதைப்போல் " மரணத்

தின் போது மட்டும் முடிவடையும் அரசியல் வலுக்களை இடைவிடாமல் நாடும் தீராத விருப்புடையவனாக"[1] மனிதன் இருக்கின்றானா? ஆவலைப் பூர்த்தி செய்யும் வழிவகைகளை இவ்வாறு விரும்பிக் கடைப்பிடிப்பதை ஆதரித்தோ அல்லது எதிர்த்தோ ஹொப்ஸ் எந்தவித தார்மீகத் தீர்ப்பையும் கூற முன்வரவில்லை. அரசியல் அமைப்பு தோன்றுவதற்கு முன்பே மக்கள் ஒவ்வொருவரும் தார்மீக முறையிற் பிணைக்கப்பட்டிருக்கின்றனர் என்றும் அந்தத் தார்மீகப் பிணைப்பைப் பாதுகாப்பதே மக்களின் முதலாவது அரசியல் முயற்சியாக இருத்தல் வேண்டும் என்றும் கூறும் கோட்பாட்டைக் குறிப்பால் உணர்த்துதல் மூலம் அவர் மறுத்துரைக்கின்றார். இந்த நிலைக்கு மாறாக, அசைந்துகொண்டிருக்கும் தூண்டல்களுக்கேற்ப வினையாற்றும் ஓர் இயற்கைச் சூழலாக அவர் மனிதனைக் கண்டார். இந்த ஓயாத அசைவின்போது தனக்கு விருப்பமானவைகளை அணுகிக்கொண்டும் வெறுப்பை ஏற்படுத்துபவைகளிலிருந்து விலகிக்கொண்டும் மனிதன் செல்கின்றான் என்றும் அவர் கருதினார். சூழ்நிலைக்கு ஏற்ப நடைபெறும் இச்செயல்களின்போது எடுக்கப்படும் தீர்மானங்கள் மனிதனின் சொந்த விருப்பத்தின்பேரிலேயே செய்யப்பட்டவை. ஒரு குறிப்பிட்ட விதத்தில் நடந்து கொள்வது என்று தீர்மானம் செய்ததன் பின்பு, உணர்ச்சித் தாக்கங்கள் தடைப்படுவதற்கு எது காரணமாக இருக்கின்றது என்பது ஹொப்சின் விளக்கத்திலே தெளிவாக்கப்படவில்லை என்பது உண்மையே. பூரண திருப்தி என்றுமே ஏற்படாது என்பது மிகவும் முக்கியமான முடிவாகும். நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் திருப்தியை ஏற்படுத்துவதற்காக, பல்வேறு வகையான வலுக்களையும் பல்வேறான வழிகளையும் தேடும் முயற்சி கால வரையின்றித் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டேயிருக்கும்.

எனினும், இயந்திரமொன்றையோ அல்லது மரபுப்படியான மனிதச் சிறப்பியல்பு எதையுமே கொண்டிராத விலங்கின் இனவகையொன்றையோ ஹொப்ஸ் விவரிக்கவில்லை. பேச்சுச் சக்தி, ஞாபக சக்தி ஆகிய கொடைகளைச் சிறந்த அளவிற்கு மனிதன் விருத்தி செய்திருப்பதுடன், தற்செயல் முறைமையின்வழி பழைய அனுபவங்களின் அடிப்படையில் ஒழுங்காக வாதிட்டு, எதிர்கால நடத்தைகளை வகுத்துக் கொள்ள உதவும் பகுத்தறிவையும் பெற்றிருக்கின்றான். அதே நேரத்தில், தொடர்பில்லாத பல காரணங்களின் இயல்புகள் தனது அறிவின் எல்லைக்கு அப்பாலுள்ள என்ற உள்ளுணர்வால் முன்கவனமில்லாத முறையில் நடந்துகொள்ளாதவாறு மனிதன் தடுக்கப்படுகின்றான். தெரிந்திராத காரணங்களையிட்டு ஏற்படும் இந்தப் பயமும்—மதத்தின் முறையான சிறப்பியல்பு என இதை ஹொப்ஸ் கருதினார்—பகுத்தறிவும் சேர்ந்து, கீழ்ப்படிவின்மையால் வரும் ஆபத்துக்களைத் துணிந்து ஏற்றுக்கொள்ள முடியாதவாறு சமூகத்தில் வாழும் மனிதர்களைத் தடுக்கின்றன.

வாழ்க்கையில் நம்பிக்கைகளுக்கும் மகிழ்ச்சிகளுக்கும் ஏற்படும் இறுதித் தோல்வி மரணமே. எனவே, ஹொப்ஸ் தமது மரணத்தைத் தொண்ணூறு ஆண்டுகளுக்கு வெற்றிகரமாகத் தள்ளிப்போட்டதைப் போன்று, மனிதன்

[1] *Leviathan*, பக். 64



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணத்தை இயன்ற அளவுக்குத் தள்ளிப்போடுதல் வேண்டும். மரணத்தைத் தவிர்ப்பதும், அதைத் தவிர்ப்பதற்கான வழிகளைத் தேடிப்பெறுவதும், எமதூதன் வருவதற்கு முன்னுள்ள இடைக் காலத்தில் வாழ்க்கையைப் பேணுவதும் மனிதனின் மிக முக்கிய மான வேலையாகும். இந்த நோக்கங்களை அடைவதற்குத் தனக்குள்ள சூழ்நிலையிலே தனது பகுத்தறிவு சரியானது எனக்கூறும் நடவடிக்கைகளை எடுக்க—அதாவது மிகப் பொருத்தமான வழியைக் கடைப்பிடிக்க—மனித னுக்குச் சுதந்திரமுண்டு. இந்த நடவடிக்கை எதுவுமே தார்மீக அடிப்படை யைக் கொண்டதன்று. கொள்கையளவில், மனிதன் தனது நடவடிக்கைகளுக்கு எவருக்கும் எந்தவிதமான காரணங்களையும் காட்டத் தேவையில்லை. மனிதனின் உரிமைகள் என்று ஹொப்ஸ் அழைப்பவை, உள்ளுணர்வுப் பெறுமதிகளாலோ அல்லது வெளிப்பாட்டு உண்மைகளாலோ கட்டுப்படுத்தப்படுவதில்லை. நீண்ட காலம் சிறந்தமுறையிற் பிழைத்து வாழ்வதற்காக மனிதன் தனது வலுவைப் பிரயோகிக்கும் முறைமையை உரிமைகள் என்று ஹொப்ஸ் அழைக்கின்றார். தார் மீக அடிப்படையில்லாத வாழ்க்கை பற்றிய இந்த வரலாற்றிலே நன்னெறியா னது மக்கியவெல்லி கருதியதைப்போன்று, பிழைத்து வாழ்வதற்குத் தேவை யான ஒருவிதத் தகுதியையே குறிக்கின்றது; அதாவது, சூழ்நிலைக்கு ஏற்ற மிகச் சிறந்த சரிப்படுத்தலையே அது குறிக்கின்றது. அந்தச் சரிப்படுத்தல் மிகச் சிறந்ததாக இருக்கின்றதா என்பதை வெற்றி என்ற அளவுகோலைக்கொண்டே பரிசோதிப்பது வழக்கம். ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் ஒரு மனிதனுக்குள்ள பலம் அல்லது திறமை பற்றிய மதிப்பீடுகள் தவருகச் செய்யப்படுவதன் விளை வாக, இந்தத் தகுதியிற் பலவித வேறுபாடுகள் காணப்படுகின்றன. இத்தகைய தவருன மதிப்பீடுகளுக்குத் தற்பெருமையே காரணமாகும் என்று ஹொப்ஸ் கருதினர். மனிதனின் நிறைவில்லாத்தன்மைக்குப் பாவமோ அல்லது அறியா மையோ காரணமாக இருக்கிறதென்று அவர் தெரிவிக்கவில்லை.

ஒத்த குணதிசயங்களையுடைய வேறு மக்களும் சமகாலத்தில் வாழ்கின்றனர் என்ற உண்மையே சமூகமாக வாழ்வது பற்றிய பிரச்சினையை ஏற்படுத்துகின் றது. மிகவும் இடர்ப்பாடானதும் ஆபத்தானதுமான இந்த அண்டத்தில் வாழும்போது ஏற்படும் இடையூறுகள் முடிவின்றி அதிகரித்துக்கொண்டு செல் வதனுல், பாதுகாப்பின்மையே விதியாகின்றது; மிகுமகிழ்ச்சி மிகக் குறைந்த அளவினதாகிவிடுகின்றது. இவை யாவும் கற்பிதமான வாதங்களே என்பதை நாம் மறந்துவிடலாகாது. பொது இணக்கத்தின்மூலம் அரசியற் பிணைப்பொன் றிலே மக்கள் ஒற்றுமைப்படுத்தப்படாமல் இருக்கும்போது ஏற்படும் விளைவு களே இவை என்பதையும் இங்கே கூறுதல் வேண்டும். தன்னுடைய சொந்த வளத்தில் மட்டும் தங்கியிருக்கவிடப்பட்டால், அகுஸ்தீன் கருதியதைப் போன்று, மனிதன் தன்னையே இழந்துவிடுவான்; பாவத்தால் அல்லது இயற்கை யால் கண்டிக்கப்பட்டு, வாழமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுவிடுவான் என்று ஹொப்ஸ் கருதினர். ஆனல், மற்றவர்களின் துணையுடன் வாழும்போது அவன் காப்பாற்றப்பட்டுவிடுவான்; வாழ்க்கையிலுள்ள கடினங்களை அகற்ற முடியாது போனலும், அவைகளைப் பெரிதளவில் மட்டுப்படுத்த முடியும். மனிதனைக் குழப்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைக்கு இழுத்துச் செல்லக் கூடியதும் மனிதனின் மிகவும் பிரதான மனநிலையுமான பயம், ஒழுங்கை உருவாக்கும் விருப்பத்தை ஊக்குவிக்கும் அல்லது ஒழுங்கைத் தொடர்பாகப் பேணவேண்டும் என்ற விருப்பத்தை உண்டுபண்ணும் பகுத்தறிவினாற் சமனாக்கப்படுகின்றது.

மனிதனுக்கும் அவனின் அரசியல் நிறுவனத்திற்குமிடையேயுள்ள தொடர்புகள், ஹொப்ஸ் விவரித்தபடி, கிறித்துவ சிந்தனையிலே கடவுளுக்கும் அண்டத்திற்குமிடையேயுள்ள தொடர்பை ஒத்திருக்கவில்லை என்று சொல்ல முடியாது. விருப்பத்தின்பேரில் இருவரும் படைப்புத் தொழிலைச் செய்வதன்மூலம் ஒழுங்கின் மாதிரியை உருவாக்கி, ஒவ்வொரு விநாடியும் அதற்கு வலிமையளிக்கின்றனர். இந்த ஒழுங்கின் மாதிரியானது மாற்றத்திற்கு உள்ளாகிக்கொண்டிருக்கின்றது என்பது உண்மையே. அத்துடன், இந்த ஒழுங்கிற்குள்ளே தனியார் தமக்கென ஒதுக்கப்பட்ட இலட்சியங்களைச் சுதந்திரமாக அடைவதற்கு முயற்சி செய்ய வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. எனவே, ஹொப்சின் வாதத்தை அரசியல் தொடர்பின் கண்டிப்பான பருப்பாராய்வாக, குடிமக்களுட் பெரும்பாலோர் தம்முட் சிலரின் வல்லந்தத்துக்குக் கட்டுப்பட்டு வாழ்வதுபற்றிய பகுப்பாராய்வாக நாம் காண்கின்றோம். மக்கள் பிழைத்து வாழ்ந்து திருப்தியைப் பெறுவதற்கு, அதாவது மிகுமகிழ்ச்சி என அழைக்கப்படுவதும் தனக்கும் தனது சூழ்நிலைக்குமிடையே நிச்சயமற்றிருப்பதுமான சமநிலையைச் சுதந்திரமாக அடைவதற்கு, தேவையான முன்நிபந்தனையை இந்தத் தோற்றப்பாடு குறிக்கின்றது என்று ஹொப்ஸ் விளக்கம் கொடுத்தார். ஹொப்சுடன் சேர்ந்து இறைவலு ஏன் உருவாக்கப்பட்டது என்பதை நாம் ஆராயும்போதும், இறைவலு இருப்பதாக வைத்துக்கொண்டு இதற்கு மக்கள் ஏன் கீழ்ப்படிவாக நடந்துகொள்கின்றனர் என்பதை ஆராயும்போதும், எமக்கு ஒரேயொரு விடைதான் கிடைக்கின்றது. ஹொப்சின் கருத்துப்படி மக்கள் யாவரும் பகுத்தறிவையுடையவர்களாகையினால், அவர்கள் தங்களின் இயற்கையான இலட்சியங்களை அடைவதற்கு அத்தகைய அரசியல் ஒழுங்கமைப்பே சிறந்தது. உண்மையில் அதுமட்டுமே சிறந்தது என்பதை யாவரும் உணர்கின்றனர். மிகுமகிழ்ச்சியை அடையும் முயற்சி—அதிலிருந்து எவரும் தப்பிவிடமுடியாது—தன்னைப்போன்ற பகுத்தறிவையுடைய அயலவர்கள் சமகாலத்தில் ஏற்றுக்கொள்ளத்தக்க சில விதிகளின்படி அமைந்தாலே, மிகுந்த பயனைக் கொடுக்கும் என்று பகுத்தறிவையுடைய மனிதன் தனக்குக் கூறிக்கொள்வான். தனிமனிதனின் வலுதான் இதிலே தியாகம் செய்யப்படுகின்றது. சகிக்கக்கூடிய நிலைமைகளை உருவாக்குவதன் மூலம் இந்தத் தியாகம் நூற்றிற்கும் மேற்பட்டமடங்கு நன்மையை உண்டுபண்ணுகின்றது. 'சுதந்திரத்தையும், மற்றவர்களை அடக்கி ஆள்வதையும் இயற்கையிலேயே நேசிக்கும் இயல்பையுடைய மனிதர் பொதுநலவமைப்பில் வாழ்வதற்குத் தம்மீது கட்டுப்பாடுகளைப் புகுத்துவதன் இறுதி நோக்கம் அல்லது இலக்கு அல்லது திட்டம் யாதெனில், தங்களைப் பேணி, அவ்வழி முன்னரிலும் நிறைவான வாழ்க்கை வாழவேண்டுமென எதிர்பார்த்தலாகும்.'[1]

1 *Leviathan*, பக். 109

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும், இறையுரிமையையுடைய அரசாங்கத்தை உருவாக்குவதற்கு உளவியல் காரணங்களின் விளைவே அடிப்படையாகும் என்று ஹொப்ஸ் விவரிக்கின்ற போதிலும், அரசாங்கத்தை அமைக்கும் முறையைத் தனிமனிதருடைய விருப்பங்களின் விளைவு எனக் கூறுகின்றார். புதிய பொதுநலவமைப்பு உருவாக்கப்பட்டதும் தனிமனிதர் தங்கள் விருப்பத்தின்பேரிலே அதன் குடிமக்களாகி விடுகின்றனர். ஹொப்சைப் பொறுத்தவரையில், அரசியற் சூழ்நிலையில் இத்தகைய தொடர்பின் உருவாக்கம் அடங்கியிருந்தது. எனவே, சரித்திர சம்பவமொன்றைப் படம் பிடித்துக்காட்டும்போது இருப்பதாகத் தோற்றமளிக்கும் இந்த முரண்பாடு வெறும் பொய்த்தோற்றமாகவே இருக்கின்றது. இறைவனு யாவும் பெறுதியுடையதாயும் வகைக்குறிப்புடையதாயும் இருக்கின்றது என்பதே இந்தவிதமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. அரசாங்கம் தனது நடத்தைக்குக் கடவுளிடம் காரணம் காட்டியே ஆகவேண்டும் என அவர் எழுதியிருக்கமுடியுமென்றாலும், அது தனது அதிகாரத்திற்கு குடிமக்களின் ஒருப்பாடான இச்சையையே நம்பியிருக்கின்றது. அரசியற் கட்டுப்பாட்டைப் பிரயோகிப்பதற்கு இறுதியில் வல்லந்தத்திடமே தஞ்சமடைதல் வேண்டும் என்பது உண்மையாக இருக்கின்றபோதிலும், மாக்ஸ் எங்களை நம்பவைக்க முயலுவதைப் போல், போலிப்பகட்டான முறையிலும் தார்மீக இயல்பிற்குப் புறம்பான வகையிலும் நியாயங்காட்டி அரசியற் கட்டுப்பாட்டைப் பிரயோகிப்பதற்கு வல்லந்தத்தை மட்டுமே நம்பியிருக்கமுடியாது. ஹொப்சின் உளவியல், தார்மீகப் பண்பு அற்றதாகவிருக்கலாம். அவரின் சொந்த வார்த்தையை உபயோகிப்பதானால், அதிகாரம் பெற்றது என்று சொல்லிக் கொள்வதன் மூலம் அரசியல் வலுவிற்கு நியாயங் காட்டி விளக்குவதற்கு அவரின் அரசியற் கொள்கை முயலுகின்றது. தொடர்பற்ற தனிமனிதர்களை அரசியல் அமைப்பாக இணைக்கும் ஏற்பாடாக அவர்களின் நோக்கங்களிற் காணப்படும் இணக்கமே செயற்படுகின்றது. இந்த இணக்கம் அரசைப் பேணுவதிலும் பகுத்தறிவுக்கேற்ற வகையிற் சட்டத்திற்குக் கீழ்ப்படிவாக இருப்பதிலும் பிரதிபலிக்கின்றது. இந்தக் கருதுகோளை நவீனமயமாக்கி அனைத்தாண்மை என நாம் அழைத்தலாகாது. 'அரசன் சட்டங்களை அல்லது விதிகளை ஆக்கித்தராத விடயங்களிலே தமது முடிவின்படி நடந்துகொள்ளக் குடிமக்களுக்கு உரிமையுண்டு.'[1] அதிகாரத் தன்மை வாய்ந்ததாக அது இருந்தாலும், அந்த அதிகாரம் கீழேயிருந்தே பெறப்படுகிறது. மிகுமகிழ்ச்சியை அடையும்படி தனிமனிதனைத் தூண்டும் உளவியல் தேவையைப் போன்ற அரசியல் தேவையொன்றை ஹொப்சின் கொள்கையிற் காணமுடிகின்றது. இரண்டு சந்தர்ப்பங்களிலும், புரட்சி செய்வதிலும் பார்க்கக் கீழ்ப்படிவாக நடந்துகொள்வதிலேயே மனிதன் மகிழ்ச்சியைக் காண்கின்றான்.

ஹொப்ஸ் கூறுவதைப்போல், சட்டத்தின் மௌனம் திருச்சபையை உள்ளடக்குவதாக இருந்திலது. லொக்கின் வாதத்தில் இருப்பதைப்போன்று சமமதிப்பு நிலையுடைய இரண்டு ஆட்சிப் பகுதிகள் இருக்கமுடியாது. தனிமனிதரின்

[1] *Leviathan*, பக். 143

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையில் வழிநடத்தப்படாத சந்தர்ப்பங்கள் மட்டுமே வெளிப்படையாகத் தெரியும் அரசியலுக்கு அப்பாலுள்ள பகுதிகளாகும். தெரிந்திராத ஒன்றிற்கு அத்தனிமனிதர் காட்டும் மறுதலிப்பை, அனுபவமில்லாத ஒன்றுபற்றி அவர்கள் கொண்டுள்ள பயத்தை, தாபன அமைப்பாக்குவதற்கு எடுக்கப்படும் எந்த விதமான ஒழுங்கும், இந்த உலகின் அதிகாரம் முழுவதும் ஒப்படைக்கப்பட்டுள்ள தனிஇறையாற் கட்டுப்படுத்தப்படல் வேண்டும். ஹொப்சின் குழப்பம் மிகுந்த கால கட்டத்தில் ஒரு தெறிப்பு ஏற்படுவதை அல்லது புராதன உலகத்தின் குடியியற் கடவுளரிடம் மீண்டுசெல்வதை, இங்கே காணக்கூடியதாக விருக்கலாம். பதினேழாம் நூற்றுண்டில் மதத்தகராறுகள் அளவிற்கு மீறிக் காணப்பட்டன என்றும், அமைதியைப் பேணுவதற்காக அவை கட்டுப்படுத்தப்படல் வேண்டும் என்றும் ஹொப்ஸ் வாதித்திருந்தால், அவரை மன்னித்திருக்கலாம். எனினும், எல்லாக் காலத்திற்கும் இடத்திற்கும் பொருத்தமாக இருக்க வேண்டியவைகளைப் பற்றியே அவர் பேசுகின்றுர். குடியியல் வலுவின்மூலமே ஒருசீரான தன்மையைச் சிறந்த முறையில் ஏற்படுத்த முடியும். எனவே, தெய்விக வெளிப்படுத்தலையுமே பொறுப்புள்ள அமைச்சரொருவர் கையெழுத்திட்டு உறுதிப்படுத்துதல் வேண்டும். அரசியலமைப்புச் சட்டத்திற்குட்பட்ட மன்னராகக் கடவுளும் மாறிவிட்டார். அவர் ஆட்சிபீடத்தை அலங்கரித்தாரேயல்லாமல் ஆட்சியை நடாத்தவில்லை.

எனவே, திருச்சபை, அரசு ஆகியவைகளாலான இரட்டைச் சமூகத்தைப் பூரணமாக மதச் சார்பற்றதாக மாற்றும் விடயத்தில், இயற்கைச் சட்டக் கொள்கையாளரிலும் பார்க்க ஹொப்ஸ் ஒருபடி மேலே சென்றுவிட்டார். ஆனுல், சட்டப்படி கட்டாயப்படுத்துதல், தனிமனித சுதந்திரமிருத்தல் ஆகிய இரு பகுதிகளுக்குமிடையே முக்கியமான சட்ட உரிமை வேறுபாடு ஒன்றைக் காணமுடிகின்றது. ஓர் அர்த்தத்திற் பார்க்கப்போனுல் அரசியல் வற்புறுத்துதல் எதிர்மறையானதாகவே இருக்கின்றது. மிகுமகிழ்ச்சியை உண்டுபண்ணுவதல்ல அரசாங்கத்தின் கடமை; குழப்பநிலை ஏற்படாமல் தடுப்பதே அதன் கடமை. குழப்பநிலையை ஏற்படுத்தக்கூடிய ஆபத்து நிறைந்த சூழ்நிலையில் நல்ல விளைவுகளைப் பெறுவதிலே ஹொப்ஸ் அக்கறைகொண்டிருந்தமையினுலும், இந்த உலகிற் பயன் நல்கக்கூடிய இசைவாணைகளைக் கொடுப்பதிலே விளைவுகள் தங்கியிருந்தமையினுலும், தனது பராமரிப்பின்கீழ் சமுதாய பலம் முழுவதையும் கொண்டிருந்த இறையுரிமையையுடைய அரசாங்கம், மதச் சார்புள்ளனவும் மதச்சார்பற்றனவுமான எல்லாத் தார்மீகப் பெறுமதிகளையும் பிரகடனம் செய்வதாகவும், அவைகளின் அர்த்தத்தை விளக்கும் உரிமையுடையதாகவும், அவற்றுக்குப் பாதுகாவலளிப்பதாகவும் இருக்கின்றது. ஹொப்சிற்குச் சட்டமே தார்மீகப் பண்பாக இருந்தது என்று சொல்வது, அளவை மீறிச் சென்றுவிடுவதாக இருக்கும். நிறைவேற்றப்பட முடியாது போனுல், எந்தத் தார்மீக விதியும் தெய்வீகக் கட்டளையும் எத்தகைய விளைவையும் ஏற்படுத்தா என்பதையே அவர் கூறுகின்றுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கைச் சட்டங்கள் என அவர் தவறுக அழைப்பவைகளை ஆராய்ந்த போது இந்தக் கருத்தைத்தான் அவர் மனத்திற் கொண்டிருந்தார். அரசியல் நடவடிக்கைகளை மதிப்பிட உதவும் தார்மீக அளவு கோல்களல்ல இவை. அனுப வத்திலிருந்து பகுத்தறிவின் வாயிலாகக் கண்டுபிடிக்கப்பட்ட நடத்தை பற் றிய பொது விதிகளே இவை. சமூக ஏற்பாட்டைப் போன்று, இவை குடியியல் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டு அமுலாக்கப்பட்டால் மட்டுமே இவற்றில் நம்பிக்கை வைக்கலாம். சமயத்திற்கேற்ற இவ்விதிகளுக்கு உதாரணமாக, 'தங்களின் ஏற்பாட்டில் இருப்பதையே மனிதர் செய்தல் வேண்டும்' என்ற விதியைக் காட்டலாம். வலுக்கட்டாயமின்றி மனிதர் தங்களின் ஏற்பாட் டின்படி நடக்கமாட்டார்கள் என ஹொப்ஸ் கருதினர். இதே கட்டளையை லொக்கினுடைய கூற்றுடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம்; 'உண்மையையும் விசுவா சத்தையும் கைக்கொண்டு நடக்கும் கடமை மக்களுக்கு மக்கள் என்ற முறை யிலேயே ஏற்படுகின்றதேயல்லாமல், சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற முறை யில் ஏற்படுவதில்லை'[1] என்பது லொக்கின் கூற்று.

மிகு மகிழ்ச்சி என்ற பொருளிலே பிற்காலத்தில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங் களை ஆராயமுற்படுமுன் இரண்டு அம்சங்களைக் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளு தல் வேண்டும். மாருத தன்மையையுடைய மனித இயல்பைப் பகுத்தாராயும் போது எக்காலத்திற்கும் பொருத்தமான அரசியல் தொடர்பின் மாதிரி உரு வத்தைப் பார்க்கும் ஹொப்சின் முறையானது சரித்திர வளர்ச்சிக்கோ அல் லது அபிவிருத்திக்கோ அல்லது தொடர்ச்சி, மரபு ஆகியவைகள் ஏற்படுத்தும் விளைவுகளுக்கோ எந்தவிதமான இடத்தையும் அளிக்கவில்லை. ஹொப்சின் அடிச்சுவட்டைப் பின்பற்றி வந்த பயனீட்டுக் கொள்கைச் சிந்தனையாளர் களின் சில கருத்துக்களையும் இந்தச் சரித்திர முறையைப் பின்பற்ருத போக் குத் தழுவிக்கொண்டது. மையத்திலிருந்து பிரிந்து செல்லமுயலும் குடிமக்க ளின் போக்கிற்கும் மையத்தை நோக்கிச் செல்லும் அரசியல் அதிகாரத்தின் போக்கிற்குமிடையே ஒழுங்காக அமைக்கப்பட்ட சமூகம் எப்பொழுதும் நெருக்கடி நிலையிலேயே இருந்து கொண்டிருக்கும் என்ற கருத்து, சரித்திர முக்கியத்துவம் பெற்ற ஒரு சமூகம் தொடர்ந்திருக்கச் செய்வதற்கு மத்திய அரசாங்கத்திற்கு இருக்கவேண்டிய பலம், அதிகாரம் ஆகியவைகளின் அளவை மிகவும் அதிகமாகக் கணக்கிட்டுவிடுகிறது. குறிப்பாக, பழக்கம், வழக்கம், அர சாங்கம் தவிர்ந்த சமூக நிறுவனங்களின் தொடர்பான வாழ்க்கையும் செல் வாக்கும் ஆகியவை வகிக்கும் பங்கை இக்கருத்து கவனத்திற்கு எடுத்துக் கொள்ளவில்லை. ஹொப்சின் கொள்கையிற் காணப்படும் இந்தக் குறைபாட்டை அடுத்த நூற்றுண்டில் ஹியூமும் பேக்கும் அகற்றினர். பணத்தை வைத்தி ருப்பதால் அதைச் செலவழிக்கவேண்டும் என்ற நியதி இல்லாமல் இருப்ப தைப் போலவே, அரசியல் அதிகாரத்தைக் கொண்டிருப்பது அதைப் பிரயோ கிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தவில்லை என்பதை ஹொப்ஸ்தாமே

[1] *Second Treatise*, **II, 14**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்திருந்தார். அவ்வாறு செய்பவர்கள், தம் நோக்கங்களை அடைவதற்குத் தம்மிடம் இருப்பதிலும் பார்க்கக் குறைவான அதிகாரம் வைத்திருப்பது போதுமானதாக இருந்திருக்கலாம் என்ற முடிவிற்கு அவர் வரவில்லை.

இரண்டாவதாக, லொக்கின் பாடபேதத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இயற்கையில் மக்களிடையே பொது நலவுரிமைகள் இருப்பதில்லை என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காகவே ஏற்பாடு அல்லது ஒப்பந்தம் என்ற உருவகங்களை ஹொப்ஸ் பயன்படுத்துகின்றார். ஆனால், குடியியற் சமூகத்தைப் பேணிப் பாது காப்பது என்ற மிக முக்கியமான பொது அக்கறையை அவர்கள் கொண்டிருக் கின்றனர் என்ற முடிவை அவருடைய வாதம் வலியுறுத்துகின்றது. இந்த நோக் கத்தை அடைவதற்கு மக்கள் யாவரும் பகுத்தறிவு முறையில் இணைந்து செயற் பட முடியுமானால் மற்றநோக்கங்களை அடைவதற்காகவும் அவர்கள் தமக்குள் ஒன்றுபடுவார்கள் எனக் கொள்வதிலே தவறென்ன இருக்க முடியும்? தனிமனி தனே சமூகக் கட்டமைப்பின் சிற்பியாக இருக்கின்றான் என்பதை ஏற்றுக் கொண்டே பிற்காலச் சிந்தனையாளர்கள் இதே முடிவிற்கு வந்தனர். மற்ற மனி தர்களுடன் சேர்ந்துகொண்டு தனது இலட்சியமான மிகுமகிழ்ச்சியை அடைவ தற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வது சம்பந்தமாகத் தனிமனிதனின் இயற்கை யான உளவியலை வெவ்வேறு வகைகளிற் பகுத்தாராயும்போது வெவ்வேறு விடை கள் கிடைக்கப் பெறும் என்பது வெளிப்படை.

அரசியற் சிந்தனையின் மாற்றமடையும் சரித்திர வடிவமைப்பிற்கு எதிரா கப் புதிய கருத்தொன்றை ஹொப்ஸ் தெரிவிக்கின்றார். அறியாமை, பாவம் ஆகியவைகளுடன் மனிதனின் இயல்பிற் காணப்படும் முரண்பாட்டுத் தன்மை யையும் அதனால் ஏற்படும் சமூக விளைவுகளையும் அவர் சுட்டிக்காட்டுகின்றார். இந்த முரண்பாட்டுத் தன்மைக்காக எவரையும் குறைகூறமுடியாது; அதைத் திருத்துவதற்கு யாவரும் ஒன்றுபட்டு உழைத்தல் வேண்டும். 'மீட்பை அடை வதற்குத் தேவையான யாவும் இரு நன்னெறிகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன. யேசு நாதரில் விசுவாசம் வைத்தலும், சட்டங்களுக்குக் கீழ்ப்படிதலுமே அந்த இரு நன்னெறிகளுமாகும். இவைகளில் இரண்டாவதைச் சிறந்த முறை யிற் கடைப்பிடித்தல் எங்களுக்குப் போதுமானது'.[1]

குடியியல் மதம், என்பனபற்றிய தகராறுகளாற் சூழ்ந்திருந்த பதினேழாம் நூற்றாண்டுக்கால இங்கிலாந்து, சமூக நோக்கங்கள், சமூக சக்திகள் ஆகிய வைகளைப் பகுத்தறிவுக்கேற்ற முறையிற் பகுத்தாராயும் ஹொப்சின் முயற்சிக்கு ஏற்ற சூழ்நிலையை அமைத்துக் கொடுக்கவில்லை. பிற்காலத்தில் ஏற்படவிருந்த வளர்ச்சிகளை அவர் எதிர்பார்த்தார் என்று கூறுவது எளிது. ஒரு நூற்றாண்டுக் காலத்திற்குள் பெரிதளவில் அர்த்தமற்றவையாக மாறிவிட்டிருந்த போராட் டங்களில் அவருடைய காலத்தில் வசித்த மக்கள் ஈடுபட்டிருந்தனர். இதைப் போலவே, குறிப்பாக இங்கிலாந்தில், அரசியலை இயற்கையோடு ஒட்டியும் உண்மைநிலையின் அடிப்படையிலும் அணுகும் போக்கிற்கு அதிக ஆதரவும்

[1] ***Leviathan***. பக். 385

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுதாபமும் கிடைக்கவாரம்பித்தது. லொக்கினதும் இயற்கைச் சட்டக் கோட்பாட்டாளரினதும் செல்வாக்கு அதிகமாகவிருந்த காலத்திலேயே இந்தப் போக்கிற்கு அதிக ஆதரவு கிட்டியமை குறிப்பிடவேண்டிய அம்சமாகும். ஹொப்சின் கருத்திற்குப் பல சிந்தனையாளர் புதிய உருவத்தைக் கொடுத்திருக்கின்றனர். அவைகளில் மிகவும் பயன்கொடுப்பதாக, ஸ்கொத்லாந்து தேசத்தின் சிந்தனையாளரான டேவிட் ஹியூம் வெளியிட்ட 'மனித இயல்பு பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரை' (Treatise of Human Nature) அமைகின்றது. 1739-40 ஆம் ஆண்டில் வெளிவந்த இந்தப் புத்தகம் செல்வாக்குப் பெற்றிருந்ததாகக் கூறமுடியாது. தமது ஆராய்ச்சிக் கட்டுரைக்குப் பொது மக்களின் நல்லாதரவு கிடைக்காததையிட்டு ஹியூம் பெரும் ஏமாற்றத்தை அடைந்தார். ஆனல் முற்காலச் சந்ததியினர் கொடுக்கமறுத்த ஆதரவையும் மரியாதையையும் இப்பொழுது அவர் பெற்றுள்ளார். இறுதி இரு நூற்றுண்டுக் காலத்திலும் பிரித்தானிய அரசியற் சிந்தனை, நடைமுறை ஆகியவைகளின் போக்கை நன்ருகப் புரிந்துகொண்ட விடயத்தில் ஹியூம், லொக்கிலும் பார்க்க எள்ளளவும் குறைந்தவரல்லர் என்பதை எம்மால் இப்பொழுது உணர்ந்து கொள்ளமுடிகின்றது.

ஹொப்சினுடைய வாதங்களின் வடிவமைப்பையே ஹியூமும் விரித்துரைக்கின்றார். ஆனல் ஹொப்ஸ் கொடுத்த முக்கியத்துவத்தை வேறு அம்சங்களுக்கு மாற்றுகின்றார். முடிவுகளைப் பாரதூரமான வகையில் மாற்றியமைக்காமல், ஹொப்சின் கட்டுக்கதைகளையும், கணிதவியற் கற்பிதங்களையும் தள்ளிக் கழிக்கின்றார். இவைகளைச் செய்துவிட்டு, அரசியல் ஆட்சியின் பிரதிபிம்பமாக மட்டுமே அமையாத தார்மீக இயல்புகளைக்கொண்ட மனித இயல்பை எமக்கு விவரித்துக் காட்டுவதோடு, அரசியல் தொடர்புகளையும் சரித்திர வளர்ச்சியின் அடிப்படையிற் படம்பிடித்துக் காட்டுகின்றார். இத்தகைய வேறுபாடுகளைச் செய்த பின்பு கிடைக்கப்பெறும் கொள்கை ஹொப்சின் மரபைப் பின்பற்றியதாக இருக்கமுடியுமா என்ற சந்தேகம் எழுவது இயல்பே. மனித உளவியலை—அவர் காண்பதைப்போன்று, மனித வாழ்க்கையின் இயற்கையானதும் அத்தியாவசியமானதுமான கோலத்தை—பகுத்தாராய்வதிலே ஹியூம் தம்முடைய அரசியற் சிந்தனை முழுவதையும் கட்டி எழுப்புகின்றார். திருப்தியைப் பெறமுயலும் மனவெழுச்சிகளால் உந்தப்படுவதும் அதே மனவெழுச்சிகளைத் திருப்திசெய்ய முடியாமையால் விரக்தி மனப்பான்மையைப் பெறுவதுமான பிராணியாக மனிதனை அவர் காண்கின்றார். மனிதனின் இயல்பை மாற்றுந் திறன் எதற்கும் கிடையாது என்ற நம்பிக்கையில் வாழ்க்கை நடாத்த வேண்டிய சூழ்நிலைகளைப் பகுத்தறிவைக்கொண்டு திருத்தியமைக்க முடியுமென்றும், வேண்டுமென்றே செய்யப்படும் இந்தத் திருத்தங்கள் செயற்கையானவையாகவும், வழக்காற்றின்பாற்பட்டவையாகவும், அரசியல் முறையானவையாகவும் இருக்குமென்றும் அவர் கருதினர். பதினெட்டாம் நூற்ருண்டைச் சேர்ந்த ஐயவுளங் கொண்டவருடைய சொற்களில் இக்கருத்து கூறப்பட்டிருக்கின்ற போதிலும், அதனுடைய குரல் நிச்சயமாக ஹொப்சினுடையதுதான் என்பதை நிரூபித்துக் காட்டலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கை நிலை என்ற கருதுகோளிற்கு இன்று நாம் அதிக கவனஞ் செலுத்தாமல் இருப்பதற்குப் பின்வரும் ஹியூமின் கருத்தும் ஓரளவு காரணமாக விருக்கலாம். அவர் கூறினர்: "உண்மை நிலையை என்றுமே கொண்டிராததும், கொண்டிருக்க முடியாததுமான மெய்யியற் கட்டுக்கதையாக வைத்துக் கொள்வது என்பதை ஏற்றுக்கொண்டுவிட்டால், இயற்கை நிலை என்று சொல்லப்படுமொன்றிற்கு மெய்யியலறிவாளர் தங்களின் வாதத்தை, தாம் விரும்பினல், விரிவுபடுத்திக் கொள்ளலாம்."[1] சமூக ஒழுங்கின்மை என்ற வெளிப்படையாக வில்லாத பயமுறுத்தலுக்குச் சில வசனங்களில் ஹியூம் முடிவு காண்கின்றார். பலாத்காரத்திற்கும், வரம்பு மீறி நடக்கும் இயல்பிற்கும் இடமளிக்கும் ஒரேயொரு சூழ்நிலையைப் பற்றிமட்டுமே அவர் குறிப்பிடுகின்றார். கட்டுப்பாடெதுவுமின்றித் தன்னைத்தானே நேசிக்கும் தன்மையே பலாத்காரத்திற்கும் அநீதிக்கும் இடமளிக்கின்றது என்று அவர் கருதுகின்றார். தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான வழிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற விருப்பம்—பொருள்களையும் சொத்துக்களையும் அடைய வேண்டும் என்ற பேரவா—"மனநிறைவைக் கொடுக்காது, என்றும் இருப்பது, எங்கும் காணப்படுவது; சமூகத்தை நேரடியாக அழிப்பது"[2] என்று அவர் வர்ணிக்கின்றார். நிகழ்காலத் தேவைகளை உடனடியாகப் பூர்த்தி செய்யும் இயல்பை மனிதன் கொண்டிருக்கின்றான். தனது தேவைகளைப் பற்றி புத்திசாதுர்யமாக நீண்டகால மதிப்பீட்டைச் செய்யும் வழக்கத்தை அவன் கொண்டிருப்பதில்லை. மனிதனின் இயல்பிலுள்ள இந்தக் குறைபாட்டைத் திடீரென அகற்றிவிடமுடியாது. முற்றாக அகற்ற முடியாதவைகளைக் கட்டுப்படுத்த மனிதன் பழகிக் கொள்ளுதல் வேண்டும். ஹொப்ஸ் தாமே சுட்டிக்காட்டியதைப்போன்று, அனுபவத்தாற் பயிற்றப்பட்ட பகுத்தறிவினல் சமூகத்திற்கு விரோதமான மனவெழுச்சிகளைத் திசை திருப்புதலே இந்த இக்கட்டிலிருந்து வெளியேறுவதற்குப் பொருத்தமான தெளிந்த அறிவுநிலையின்பாற்பட்ட ஒரேயொரு வழியாகும்: "அன்பின் விளைவாக ஒழுங்கற்றனவும் தொந்தரவானவையுமானவைகளைச் சரிசெய்யும் மருந்தாக, சரியாக விளங்கிக்கொள்ளுந் திறனையும் சரியான முடிவுக்கு வருந் திறனையும் இயற்கை அளித்துள்ளது."[3]

அரசியல் முறையில் நிர்வகிக்கப்பட்ட பலத்தின் சட்டவனுமதிகள் மட்டுமே சமூகத்தின் தார்மீகப் பிணைப்புக்களைப் பேணிப் பாதுகாக்கும் என்றும், நல்ல நடத்தையை உட்கொண்டிருக்கும் சட்டத்தைக் கொண்டுள்ளதும் திறமையாக ஆட்சி புரியப்படுவதுமான சமுதாயத்தில் மட்டுமே தார்மீகக் கடமைகள் தோன்றுகின்றன என்றும் ஹொப்ஸ் தெரிவித்த கருத்துக்களுடன் ஹியூம் இணங்கவில்லை. தார்மீக உணர்வு என்பது மனிதனின் இயற்கையான குணாதிசயங்களில் ஒன்ருகும். தன்னுடைய நடத்தைகள் பற்றியும் மற்றவர்களின் நடத்தைகள் பற்றியும் ஒப்புதலைத் தெரிவிக்கவும் மாறுபாடான கருத்தைத் தெரிவிக்கவும் இந்தத் தார்மீக உணர்வுதான் ஒரு மனிதனுக்கு உதவுகின்றது.

[1] *A Treatise of Hum n N ture,* dited L. A. Selby-Bigge (Oxford, 1896), பக். 493

[2] *Treatise,* பக். 492 [3] *Treatise,* பக். 489

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லொக் செய்ததைப்போன்று தார்மீக முறையிலே பகுத்தறிவையுடைய தனி மனிதரின் நுண் புலத்தைச் சமூகக் கடமைகளும் சட்டத்தின் உள்ளடக்கமும் பிரதிபலிக்கின்றன என்று வாதாட ஹியூம் முயலவில்லை. இயற்கையிலேயே தன்னலத்தைக் கொண்டுள்ள மக்கள் தங்களுடைய சிறப்பான நீண்டகால நலவுரிமைகளை அடைய உதவும் செயற்கையான ஒழுங்கமைப்புக்களாகவே சமூக, அரசியல் நிறுவனங்கள் இருக்கின்றன என்ற கருத்திற்கும் ஹொப்ஸ் கொடுத்த முக்கியத்துவத்தையே ஹியூம் கொடுக்கின்றார். இந்த அர்த்தத்தில் ஹொப்சின் கணிதவியல் மாதிரியைத் தாண்டி சரித்திரப் பின்னணிக்குச் செல்லும் போதும், மரபு ஏற்படுத்தும் விளைவுகளுக்கு இடமளிக்கும் போதும் ஹொப்சின் கொள்கையிற் செய்யப்படவேண்டிய திருத்தத்தை ஹியூம் செய்கின்றார். ஒரு குறிப்பிட்ட சந்ததியினர் தமக்கு அடுத்த சந்ததியினரில் ஏற்படுத்தும் சமூக அழுத்தம், நிலைநிறுத்தப்பட்டதும் தொடர்ந்து இயங்குவதுமான சமூகக் கோலத்திலே காணப்படும் வழக்காறுகள், பழக்க வழக்கங்கள் என்பவைகளின் இயக்கவிசை, ஆகியவற்றிற்கு இடமளிக்கும் வகையிலே ஹியூம் தமது திருத்தங்களைச் செய்தார்.

மனித இனத்தைச் சேர்ந்த தனி மனிதர்களின் உளவியல் ஏற்படுத்தும் சமூக விளைவுகள் பற்றி, ஹொப்சின் உண்மை விளக்கத்திற்குத் தார்மீகக் கொள்கையொன்றை இணைப்பதன்மூலம் சமூகத்தின் இத்தகைய சரித்திர அம்சங்களை ஹியூம் வற்புறுத்திக் காட்டுகின்றார். தாம் அனுபவத்திற் கண்டவைகளைப் பின்பற்றுவதாக ஹியூம் நம்பினார். எல்லா மக்களும் தார்மீக முடிவுகளைச் செய்வதை எம்மால் அவதானிக்க முடிகின்றதென்றும் நீண்ட காலப் பரப்பில் அவைகளைப் பார்க்கும்போது அம்முடிவுகளுக்கிடையே ஒற்றுமை காணப்படுகின்றதென்றும் ஹியூம் வாதிட்டார். என்றுமுள்ள நியமங்கள்பற்றிய உள் அறிவின் விளைவாகவோ வெளிப்படுத்தலின் விளைவாகவோ இந்த ஒற்றுமை ஏற்பட்டிருப்பதாக அவர் கருதவில்லை. இதற்குமாறாக, எமது சொந்த நடத்தைகள் அல்லது மற்றவர்களின் நடத்தைகள் ஏற்படுத்தும் மறு தாக்கங்களும் உணர்வுகளுமே இத்தகைய ஒற்றுமைக்கு அடிப்படையாக அமைகின்றன என அவர் கருதினார். ஒப்புதலுக்கு மகிழ்ச்சி காரணமாக இருக்கும் என்பதும், ஒப்புதலின்மைக்கு மகிழ்ச்சியின்மை காரணமாக அமையும் என்பதும் இயற்கையே. ஆனால் ஹியூம் வெறும் இன்பக்கோட்பாட்டாளராக மட்டும் இருக்கவில்லை. அக்காரணத்தினாலே எமக்கு மகிழ்ச்சியளிப்பவை யாவற்றையும் நாம் கட்டாயமாக அங்கீகரிக்க வேண்டும் என அவர் கூறவில்லை. 'எனவே, தார்மீகம் என்பது உணரப்படும் ஒன்றேயல்லாமல், கணிக்கப்படும் ஒன்றன்று'.[1] மற்றவைகளைப்போன்று தார்மீக இலட்சியங்களை அடையும் முயற்சியிலும், உணர்ச்சிகளே எம்மை வழி நடத்துகின்றன; எது மிகவும் சிறந்த வழி என்பதைப்பற்றி மட்டுமே பகுத்தறிவு எமக்குக் கூறுகின்றது. நீண்ட காலப் பரப்பிற் பார்க்கும்போது நியமமான விளைவுகளை இந்த தார்மீக உணர்ச்சிகள் ஏற்படுத்துகின்றன. மற்றவர்

[1] *Treatise*, பக். 470

களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து தம்மைத் திருத்திக் கொள்ளும் நடைமுறை தொழிற்படுவதனுலும், கருத்துக்கள் ஒன்ருகச் சேரும் முறை தொழிற்படுவதனுலும், நாம் இன்று வழங்குவதைப்போல், ஒருவகை மாருத சமூக அமுக்கம் எப்பொழுதும் தொழிற்பட்டு சமூகத்திற்கு மிகவும் பயன்படக்கூடிய பழக்கவழக்கங்களையும் நடத்தையையும் உருவாக்கிக் கொண்டிருக்கும். இந்தப் போக்கை அதனுடைய பிரதிபிம்பமாகவும் ஆதாரப் பொருளாகவும் ஒரே சமயத்தில் இருக்கும் அரசியல் நிறுவனங்கள் ஆதரிப்பதோடு ஊக்குவிக்கவும் செய்கின்றன. ஆனுல் ஹொப்ஸ் கூறுவதைப்போன்று, இந்தப்போக்கு தன்னைப் பேணிப் பாதுகாத்துக் கொள்வதற்குச் சட்டத்தில் மட்டுமே முழுதாகத் தங்கியிருப்பதில்லை. ஹியூம் கூறுவதைப்போல், கடமையும் கடப்பாடுகளும், ஆய்வினுள்ள நடத்தைகளைப்பற்றிப் பொது மக்கள் அறிந்திருப்பதிலே தங்கியிருப்பதில்லை.

ஹொப்சுடன் ஒப்பிடும்போது, ஒருவர் மீது மற்றவர் கொண்டுள்ள பயத்திலும் பார்க்க உறுதிமிக்க நலவுரிமைகளாலும், அமைதியாக வாழவேண்டும் என்ற தவிர்க்கமுடியாத அவசியத்திலும் பார்க்க மிகத் திட்டமான நலவுரிமைகளாலும் மக்கள் ஒன்றுபடுத்தப்பட்டுள்ளனர் என்று ஹியூம் கருதினுர். 'பொது அக்கறைகளிலே பொதுவான உணர்வை' அவர்கள் அனுபவிக்கின்றனர். படகைச் செலுத்தும் இருவருக்கிடையே தோன்றும் ஒத்துழைப்பு உணர்ச்சிக்கு இது ஒப்பிடப்படுகின்றது. ஒன்ருக உழைக்கும் இந்தப் பண்பு எந்தவிதமான ஒப்பந்தமாகவோ அல்லது வாக்குறுதியாகவோ இருக்க முடியாது என்றும், தேவையாலும் அக்கறையாலுமே அது நிர்ணயிக்கப்படுகின்றது என்றும் ஹியூம் வற்புறுத்துகின்ருர். சமூக விதிகளைத் தவிர்ந்த வாக்குறுதிகள் எவையும் இயற்கையான தார்மீகத் தோற்றப்பாடுகளாக அமைய முடியா என்று அவர் கருதுகின்ருர். அரசியற் சமூகத்தின் ஆரம்பம் பற்றிய பிரயோசனமற்ற விவாதத்திற்கு இந்த வகையில் முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, அது அவரின் காலத்தில் எவ்வாறு அமைக்கப்பட்டிருந்தது என்பதைப் பகுத்தாராய்வதில் ஹியூம் தம்முடைய கவனம் முழுவதையும் செலவிடுகின்ருர். ஆனுல் வழக்காறுகளிலிருந்து சமூக, அரசியல் நிறுவனங்களைப் பெறும்போது, ஹொப்ஸ் செய்ததைப் போன்று, மனிதனுடைய மனவெழுச்சிகளின் மீது செயற்கையான கட்டுப்பாடுகளை அந்த நிறுவனங்கள் விதிப்பதாகச் செய்துவிடுகின்ருர். மனிதனின் மனவெழுச்சிகள் கட்டுப்படுத்தப் படாவிட்டால் சமூகமே அழிக்கப்பட்டுவிடும் என்று அவர் கருதுகின்ருர். எனினும், மனவெழுச்சிகளின் குழந்தைகளான இந்த நிறுவனங்கள் மனவெழுச்சிகளைக் கட்டுப்படுத்தவே செய்கின்றன.

ஹொப்ஸ் பயன்படுத்திய அதே அர்த்தத்திற்ருன் 'இயற்கைச் சட்டங்கள்' என்ற சொற்ருெடரைக் ஹியூமும் பிரயோகித்தார். தங்களின் சொந்தக் குணவியல்புகளுடைய கோளாறுகளின் விளைவாக இன்னல்களை அனுபவிக்காமல் இருப்பதற்கு எத்தகைய சமூக சூழ்வினைத் திறமுடைய விதிகளைப் பின்பற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டியது அவசியம் என்று மக்கள் கருதினர்களோ அந்த விதிகளையே 'இயற்கையின் சட்டம்' என்று இருவரும் குறிப்பிட்டனர். அவைகளுள் மூன்று விதிகள் மிகவும் முக்கியமானவையாகும். அவைகளாவன: பொருள் களையும் சொத்துக்களையும் வைத்திருக்கக்கூடிய உறுதியான நிலை; அத்தகைய சொத்துக்களை இணக்கத்துடன் வேறொருவருக்கு அமைதியாகக் கையளிக்கக் கூடிய சூழ்நிலை; வாக்குறுதிகளும் ஒப்பந்தங்களும் நிறைவேற்றப்படும் என்ற உத்தரவாதம். இந்த விதிகள் செயற்படுவதினுற் கிடைக்கும் நீண்ட அனுபவ மும், நன்மையான விளைவுகளும் அவைகளைப் பேணிப்பாதுகாக்க வேண்டும் என்ற தார்மீக விருப்பத்தை இயற்கையாகவே உருவாக்குவதுடன், அவைகளை அவமதிப்பதைக் கண்டிக்கும் மனப்பான்மையையும் ஏற்படுத்தும். எனவே, சட்டமும் கல்வியும் சமூக ஒத்துழைப்பானது இந்த வழியில் உருவாக்கப்படுவ தைத் தொடர்பாக ஆதரிக்கும்போது, அதைப் பேணிப்பாதுகாப்பதிற் சமூகத் தின் உறுப்பினர்கள் யாவரும் உற்சாகத்துடன் தங்களின் ஒத்துழைப்பை நல்குவார்கள்; சட்டத்தின் தண்டனைகளுக்குப் பயந்தோ தங்களின் சொந்த விருப்பங்களுக்கு மாறுபட்டோ நடந்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்த நிலைக்கு அவர்கள் ஆளாகமாட்டார்கள்.

அரசாங்கங்கள் இறுதியிற் பலாத்காரத்தையே நம்பியிருக்கின்றன என்ற ஹொப்சின் கருத்தைத் திருத்துவதற்கு இந்த வாதம் ஹியூமிற்கு உதவியாக விருந்தது. ஆட்சி செய்யப்படுபவர்களின் கைகளிலேயே பலம் இருந்தது; பொதுசன அபிப்பிராயத்தின் ஆதரவையே ஆட்சிபுரிபவர்கள் நம்பியிருத்தல் வேண்டும். எனவே, சமூக உறுதிநிலை என்பது பழக்கத்தின்பாற்பட்டதாக மாறிவிட்டது. காலப்போக்கில் அரசியல் அதிகாரத்தை மக்கள் சர்வ சாதாரண மானது என ஏற்றுக்கொள்ள ஆரம்பித்துவிட்டனர். அரசியல் அதிகாரத்திற்குக் கீழ்ப்படிந்து நடப்பது யாவருக்கும் பரிச்சயமாகிவிட்டமையால், வழக்கத் தில் எவரும் அதைப்பற்றிச் சிந்திக்காமல் விட்டுவிட்டனர் என்று ஹியூம் வற் புறுத்தினர். அரசியல் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் நிலைநிறுத்தப் பட்ட ஒழுங்குகள் புரட்சி மூலம் புதிதாக அமைக்கப் பெற்றவைகளிலும் பார்க்க விரும்பப்பட்டன. அரசியல் தொடர்புகள், சொத்துத் தொடர்புகள் ஆகியவைகளின் தெய்வீகத் தன்மை, அத்தொடர்புகள் ஆரம்பமாவதற்குக் காரணமாகவிருந்த சமூக வழக்காறுகளிலும் அவை சீரழியாமற் பேணிப்பாது காத்துவந்த தார்மீக அங்கீகாரத்திலும் தங்கியிருக்கின்றன. தமது குண வியல்புகளை மாற்றியமைக்க முடியாத மக்களுக்கு, அக்குணவியல்புகளுக்குச் சமூகரீதியாகத் தம்மைச் சரிப்படுத்தக்கொள்ள உதவும் தலைசிறந்த சட்டவாக் கப்படைப்பாக அரசாங்கம் விளங்குகின்றது என்ற விடயத்தில், மொன்டஸ்கியூ வின் கருத்தை ஹியூம் ஏற்றுக்கொண்டார் என்பதையும் இங்கே குறிப்பிடுதல் வேண்டும். 'வருங்காலத்திலும் பார்க்க நிகழ்காலத்தையே அதிகம் விரும்பும் இயல்பிற்குக் காரணமாகவிருக்கும் குறுகிய மனப்பான்மையைத் தம்மிடத்தும் மற்றவர்களிடத்தும் பெரிதளவில் மாற்றமுடியாத நிலையில் மாந்தர்கள் இருக்கின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றனர். தங்களின் இயல்புகளை அவர்களால் மாற்றமுடியாது. தங்கள் சூழ்நிலைகளை மாற்றியமைப்பதையும், நீதியைப் பின்பற்றுவதைச் சில குறிப்பிட்ட மக்களின் உடனடியான அக்கறையாகவும், நீதியை மீறுவதை மிகத் தொலைவிலுள்ள தொன்றாகவும் ஆக்குவதையுமே அவர்களாற் செய்யமுடியும்.'[1]

முக்கியமான நிறுவனங்கள் பற்றிய அகுஸ்தீனுரின் கொள்கையினது மதச் சார்பற்ற எதிரொலியை இங்கே எம்மாற் காணமுடிகின்றது. சுய நலத்திற்காகச் சமூகத்தை அழிக்கக்கூடிய ஆபத்தை ஏற்படுத்திய அதே மனவெழுச்சிகள், தம்முடைய சமூக விரோதப் போக்குகளுக்கான மாற்றுமருந்தை ஒழுங்கான முறையிற் கொடுத்துதவின. இயற்கை வளங்களின் அருமையைப் பிரித்து விடுமொன்றாகவும் தனியாரின் தன்னலத்தைக் குறிக்குமொன்றாகவும் சொத்துரிமையை-குறிப்பாக அதனுடைய உறுதிநிலையையும் அமைதியான கைமாற்றத்தையும்—ஹியூம் கருதினுர். இதைப் போலவே, எல்லாரும் ஏற்றுக்கொண்டதும், ஆனுல் அதை மேம்படச் செய்வது தமது சொந்தக் கடமை என எவருமே கருதாததுமான பொது நலவுரிமையைப் பிரதிநிதித்துவம் செய்வதற்காகச் செய்யப்பட்ட ஒருவகை ஏற்பாடே அரசாங்கமாகும். ஆனுல் இந்த நிறுவனங்களைக் குடியியல் ஆட்சியாளருட் பலம் வாய்ந்தவனே பேணிப் பாதுகாத்ததாகக் கூறமுடியாது. சந்ததி சந்ததியாகக் குடிமக்களானேர் தொடர்பாகவும் திரும்பத்திரும்பவும் அளித்து வந்த தார்மீக அங்கீகாரம் குடியியல் அதிகாரத்தை வலுப்படுத்தியதோடு, அதற்கு இருப்பதாகக் ஹொப்ஸ் கருதிய விடாப்பிடியான தன்மையையும், அகுஸ்தீன் கருதிய கொடிய இயல்பையும் பெரிதளவிற் குறைக்கவும் செய்தது. அத்துடன், இந்தச் சமூகத் தோற்றப்பாடு தனக்கான பலத்தையும், தான் தொடர்ந்து நிலைத்திருக்கும் இயல்பையும் பெற்றுக்கொள்ள உதவிய மனவெழுச்சிகள் இயற்கையானவையாக இருக்கின்ற காரணத்தினுற்றுன் இயற்கையானதாகவே அமைந்துளது. வேருேர் அர்த்தத்திலும் அரசியல் தொடர்புகள் பகுத்தறிவின் பாற்பட்டன என்று கூறலாம். பொது நலவுரிமையை ஆதரிக்க வேண்டும் என்ற உணர்வால் பேணிப் பாதுகாக்கப்பட்டதும், விரும்பப்பட்ட இந்த இலட்சியத்தை அடைதற்கு உதவிய வழிகளை—பயன்பாடு என்ற பதத்தால் ஹியூம் அதைக் குறிப்பிட்டார்—அங்கீகரிக்கச் செய்ததுமான உறுதியான சமூகத்தின் அமைப்பை உருவாக்க, காலப்போக்கின் அனுபவத்திலிருந்து கற்றுக்கொண்ட பகுத்தறிவு உதவியது.

எத்தகைய எடுகோள்களின் அடிப்படையில் அரசியற் சமூகம் ஆரம்பத்தில் அமைக்கப்பட்டது என்பதை ஆராய்வதிலும் பார்க்க அரசியல் அதிகாரம் தனது வல்லமையை எங்கிருந்து தொடர்பாகப் பெற்றுக்கொள்கிறது என்பதைப் பகுத்தாராயவே ஹியூம் விரும்பினுர். அரசியற் சமூகம் அமைக்கப்படுவதற்கு அடிப்படையாக அமைந்த எடுகோளை அரசியல் தத்துவம் என்று கருதாது, சரித்திரம் சம்பந்தப்பட்ட பிரச்சினையாகவும் சரித்திரத்திலே தற்செயலாக இடம்பெற்ற சம்பவமாகவும் கருதி ஆராய்ந்த ஹியூம், அரசியல் அதிகாரம்

[1] *Treatise*, பக். 537

தனது அதிகாரத்தை எங்கிருந்து தொடர்பாகப் பெறுகின்றது என்ற கேள்விக்குச் சரித்திர அடிப்படையைப் பகுத்தாராய்ந்து விடை காண முனைந்தார். 'எல்லா வகை அரசாங்கங்களுக்கும் எல்லா அரச குடும்பத்தினரின் சந்ததியினருக்கும் காலமும் மரபுமே அதிகாரத்தைக் கொடுக்கின்றன ; ஆரம்பத்தில் அநீதியிலும் பலாத்காரத்திலும் கட்டி எழுப்பப்பட்ட அந்த வலுவானது காலஞ் செல்லச் செல்ல சட்டரீதியானதாகவும் கட்டாயமானதாகவும் மாறிவிடுகின்றது.'[1]

ஹொப்சின் ஆராய்ச்சிக் கட்டுரையிற் காணப்பட்ட இந்த முக்கியமான வளர்ச்சி, நிர்வாக வலுவின் சந்தேகத்திற்கிடமற்ற இறைமையுடன் சச்சரவிடாமல், ஹொப்ஸ் தேவை என்று கருதியதிலும் பார்க்க மிகக் குறைந்த அளவான கட்டற்ற வலுவையே அதற்குக் கொடுக்கின்றது. இந்தப் புதிய வளர்ச்சியை எட்மன்ட் பேக் தமது சிறந்த வாதத்திறைமையால் ஆதரிக்கின்றார். பிற்கால தோரிக் கட்சியினரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட விக் கட்சியைச் சேர்ந்தவரும், ஆங்கில நாட்டிலுள்ள அபிமானிகளாலே தங்களுள் ஒருவராகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட ஐரிஷ்காரருமான பேக் ஒரு சிறந்த அரசியல் வாதியாவார். ஒருதலைப்பட்சமான கருத்துக்களைக் கொண்டிருந்தமை, உணர்ச்சிவசப்படும் இயல்பைக் கொண்டிருந்தமை, கற்பனை செறிந்தவகையில் எழுதியமை என்பன காரணமாக, தலை சிறந்த சமூகச் சிந்தனையாளர்களின் கூட்டத்தில் அவரைச் சேர்த்துக் கொள்வதற்கும் தடை இருக்கவில்லை. நிம்மதியை ஏற்படுத்துவதும் மகிழ்ச்சிக்கான சூழ்நிலையை உருவாக்கிக் கொடுப்பதும் அரசாங்கத்தின் நோக்கங்களாக இருத்தல் வேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருந்த பேக், ஒவ்வோர் அம்சத்திலும் ஹொப்ஸ், ஹியூம் ஆகியோரிடமிருந்து எவ்வளவு தூரம் வேறுபடமுடியுமோ அவ்வளவு தூரம் வேறுபட்டுக் காணப்பட்டார். அவர் தாமே அடிக்கடி கூறுவதைப்போன்று, கொள்கைகளிற் கவனம் செலுத்தாது, தத்துவங்களிலேயே அக்கறை காட்டினர். 'மனித இனத்தின் மகிழ்ச்சிக்காக உருவாக்கப்பட்ட நடைமுறை அமைப்பாக அரசாங்கம் இருக்கின்றதேயல்லாமல், ஒரேசீரான தன்மையை ஏற்படுத்துவதற்கோ அல்லது கனவு காணும் அரசியல் வாதிகளின் திட்டங்களைத் திருப்திப்படுத்துவதற்கோ ஏற்படுத்தப்பட்டதொன்றன்று'[2] என்ற கருத்தை ஏற்றுக்கொள்ளுமாறு பேக் உந்தப்பட்டார். சிறிதுகாலத்திற்குப் பின்பு தாம் எழுதிய வேறொரு கட்டுரையிலே அரசாங்கம் 'மனித தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவுமுகமாக மனித அறிவு ஏற்படுத்திய ஓர் ஏற்பாடாகும்'[3] என்று அவர் கூறுகின்றார். அதாவது, பொது வாழ்விற்குரிய நோக்கத்திற்காக ஏதாவதொரு நிறுவன ஒழுங்கமைப்பின்மூலம் அரசியல் அதிகாரம் இயங்குதல் வேண்டும் என்ற கருத்தைப் பொறுத்தவரையில், ஹியூமுடனும் ஹொப்டசுனும் பேக் கருத்து ஒற்றுமை கொண்டவரா

[1] *Tre tise*. பக். 566

[2] *The Works of the Right Honourable Edmund Burke* (London 1826), vol. iii, p. 182. Letter to the Sheriffs of Bristol

[3] *Works*, vol. v, p. 122. *Reflections on the Revolution in France*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கக் காணப்படுகின்றார். இதைப்போலவே, அத்தகைய அதிகாரம் இருப்பது நியாயமானதா என்பதை அனுபவரீதியாகப் பரீட்சிப்பதற்கும் இது வழிவகுக்கின்றது. 'கீழ்ப்படிவுதான் அரசாங்கத்தை ஆக்குகின்றதேயன்றி, அதை அழைக்கப் பயன்படுத்தப்படும் பெயர்களால் அது ஆவதன்று.'[1] எந்தக் குறிப்பிட்ட அரசாங்க அதிகாரத்தையும் சட்டப்படி அமையக்கூடியதாய் ஆக்குவதற்கு மரபும் நிலைநாட்டப்பட்ட நடைமுறையும் முக்கியமானவையாக இருக்கின்றன என்றும், கீழ்ப்படிவாக நடந்துகொள்ளும் பழக்கமும் பொதுசன அபிப்பிராயத்தின் ஆதரவும் உறுதுணையாக இருக்கின்றன என்றும் பேக் தெரிவித்த கருத்துக்களை அவரின் சொற்பொழிவுகளிலும் கட்டுரைகளிலும் ஆங்காங்கே காணமுடிகின்றது. இந்தக் கருத்துக்கள் பேக்கின் அரசியற் சிந்தனையின் வெவ்வேறு அம்சங்களாக இருப்பதாகக் கொள்ளலாம்.

குழப்பங்களைத் தவிர்ப்பதும் பிணக்குக்களும் பலாத்காரமும் தலைதூக்காமற் செய்வதுமான அரசாங்கத்தின் பணியால் ஏற்படும் சமூக ஒழுங்குபற்றிய கொள்கைகள் உறுதியான அரசியல் அதிகாரத்திற்கு உத்தரவாதமளிப்பதுடன் புரட்சி செய்யும் போக்கை எதிர்ப்பவையாகவும் இருக்கின்றன. பழமையைப் பேணும் இந்தப் போக்கு நிலைநாட்டப்பட்ட அரசியல் அதிகாரத்தை—அதனுடைய தார்மீகத் தராதரம், சமூகநீதியின் தேவைகள் ஆகியவைகளைக் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளாமல்—ஆதரிக்கும் ஆபத்தை உள்ளடக்கியுள்ளது. ஒழுங்கையும் உறுதிநிலையையும் பெறுவதற்கு எத்தகைய விலையைக் கொடுப்பது பெறுமதியானது என்ற பிரச்சினை, என்றுமுள்ள அரசியற் புதிராக இருக்கின்றது. இந்தச் சரித்திரப் பிரச்சினைக்கு விடையளிக்க ஹொப்ஸ் முயலவில்லை. மரபுவழிவந்த, காலத்தால் போற்றப்பட்ட மதிப்புக்களையுடைய ஒழுங்கமைந்த சமுதாயத்தின் நல்ல முடிவிலேயே ஹியூம் நம்பிக்கை வைத்தார். பொதுவாக இந்தக் கருத்தையே பேக்கும் ஏற்றுக்கொண்டார். நிகழ்கால நடைமுறைகளிலுள்ள அநீதிகளையும், சீர்திருத்தம், மாற்றம் ஆகியவற்றுக்கான தேவையையும் பேக் அறியாமல் இல்லை. பிரெஞ்சுப் புரட்சிக்காரர் மீது அவர்தொடுத்த கண்டனக் கணைகள், அமெரிக்கக் குடியேற்றவாதிகளின் பிரச்சினையை அவர் இரக்க மனப்பான்மையுடன் புரிந்துகொண்டார் என்பதையும், வாரன் ஹேஸ்டிங்கை மிகவும் கடுமையாகக் கண்டித்தார் என்பதையும் அவரின் ஆதரவாளர்களுங் கூட சிலவேளைகளில் மறந்துவிடுமாறு செய்கின்றன. பிரெஞ்சுப் புரட்சியை ஒரு பெரிய அழிவாக அவர் கருதினார் என்பது உண்மையே. ஆனல் அமெரிக்கப் புரட்சி நடந்திருக்கவே தேவையில்லை என்று அவர் கருதினார். சூழ்நிலைகளுக்கு ஏற்பச் சீர்திருத்தங்களும், அரசியலமைப்புச் சட்டத்தில் மாற்றங்களுங்கூட, சரித்திரத் தொடர்பையும் உறுதியான அரசாங்கத்தையும் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகளுட் சிலவாகும். "மனிதன் காட்டும் நியாயங்களுக்கு ஏற்றமுறையிலல்லாமல், மனிதனின் இயல்பிற்கு" ஏற்றமுறையில் அரசியலைச் சரிசெய்து

[1] *Works*, vol. iii, p. 60. Speech on Conciliation with the American Colonies

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளுதல் வேண்டும். "மனித இயல்பின் ஒரு பகுதியாக மட்டும்—அதுவும் மிக முக்கிய பகுதியாகவல்ல—மனிதனின் நியாயங்கள் இருப்பதே அதற்குக் காரணம்".[1] மனித இயல்பு எவ்வாறிருக்கும் என்பது பற்றிய தமது கருத்தைப் பேக் எந்தக் கட்டுரையிலும் வெளிப்படையாகத் தொகுத்துக் கொடுக்க வில்லை என்பது உண்மையே. ஆனால், மனிதன் பூரணமாக நல்லவனாக இருக்கின்றான் என்றோ முற்றும் கெட்டவனாகிவிட்டான் என்றோ அவர் கருதவில்லை. ஆட்சிபுரிபவர்களினதும் ஆளப்படுபவர்களினதும் கொள்கையும் நடத்தையும் சூழ்நிலைக்கேற்றபடி புத்திசாலித்தனமாகப் பதப்படுத்தப்படுதல் வேண்டும் என்று அவர் திரும்பத் திரும்ப வற்புறுத்துகின்றார். அரசியல் முடிவுகளுக்கும் மாற்றம் பெறுகின்ற சூழ்நிலைகளுக்குமிடையே இருக்கவேண்டிய தொடர்பைப் பற்றி மொன்டஸ்கியூ கொண்டிருந்த அறிவைப் பேக்கும் கொண்டிருந்தார். ஆனால் அரசியல் முடிவுகளைச் சூழ்நிலைக்கேற்ப மாற்றும் விடயத்தில் மெதுவாக அவசரப்படாமல், கவனமாக ஆராய்ந்து நடந்துகொள்ள வேண்டுமென்று பேக் கருதினார்.

பிரான்சு நாட்டுப் புரட்சிக்காரர்களின் வாதங்களை இக்காரணங்களுக்காகவே பேக் நிராகரித்தார். "நாம் அடைய விரும்பும் எல்லா நன்மைகளையும் பெற்றுக்கொடுப்பதற்கு மனங்களிடையே ஒற்றுமையை உருவாக்குதல் வேண்டும். எமது பலம் பெற்றுக்கொடுப்பதிலும் அதிகமானவற்றை எமது பொறுமை பெற்றிருக்கும்'[2] என்று 'நினைவுகள்' (Reflections) என்ற கட்டுரையிற் பேக் எழுதியுள்ளார். எனவே 'முதிய, தளம்பாத, பொதுச் சட்டத்தை' அவர் ஆதரிக்கையில் 'அவசரத் சீர்த்திருத்தங்களை' வன்மையாக எதிர்த்தார். பிரான்சின் புராதன ஆட்சிமுறையில் அரசியலமைப்புச் சட்டச் சீர்திருத்தம் செய்ய வேண்டிய பிரச்சினைபற்றி நாம் எந்தக் கருத்தைக் கொண்டிருந்தபோதிலும், பேக்கின் இந்த மனப்போக்கைக் கட்டுப்பாட்டிற்கும் சுதந்திரத்திற்குமிடையே ஒருவிதமாகப் பொருந்தச் செய்யவேண்டிய தேவையை—அரசியலிற் காணப்படும் மிகவும் முக்கியமான முரண்பாடு என இதைக் குறிப்பிடலாம்—அவர் உணரத்தவறிவிட்டதாக அர்த்தம் செய்துகொள்ளலாகாது. சட்டத்திற்கும் விடுதலைக்குமிடையேயுள்ள தொடர்பை, 'சட்டங்கள் யாவை; அவைகளை ஆக்கியோர் யார் என்பதை' ஆராயாமல் வெறும் கருத்தியலான பிரச்சினையாக ஆராய்வது பிரயோசனமற்றது என்று பேக் வாதாடுகின்றார்.[3] பிரெஞ்சுப் புரட்சிவாத அரசியலை அவர் வன்மையாகக் கண்டித்தமைக்கு, தேவையான சமநிலையை ஏற்படுத்தும் திறனைப் பிரெஞ்சு தேசிய சபையின் தலைவர்கள் பெற்றிருக்கவில்லை என்று அவர் உறுதியாக நம்பியது காரணமாக அமைந்தது. 'ஓர் அரசாங்கத்தை உருவாக்குவதற்குப் பெரிதளவு முன்மதி தேவைப்படுவதில்லை. வலுவின் ஆசனம் எது என்பதைத் தீர்மானித்தபின், கீழ்ப்படிவாக இருக்கும் இயல்பைப் போதித்துவிட்டால், வேலை முடிந்துவிடும். விடுதலை

[1] *Works*, vol. ii, p. 170. *Observations on the Present State of the Nation*

[2] *Wor s*, vol. v, p. 305

[3] *Works*, vol. iii, p. 84. Letter to the Sheriffs of Bristol

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்குவது இதிலும் பார்க்க இலகுவானது. அதனை வழிநடத்த, கடிவாளத்தைத் தளர்த்தி விட்டால் போதுமானது. ஆனால், சுதந்திர அரசாங்கத்தை உருவாக்குவதற்கு, அதாவது, முரணான தன்மையையுடைய சுதந்திரத்தையும் கட்டுப்பாட்டையும் ஒரே அமைப்பின்கீழ் பக்குவப்படுத்துவதற்கு, ஆழ்ந்த சிந்தனையும் அறிவு நுட்பமுடைய, பலம் வாய்ந்த, ஒன்றிணைக்கும் மனமும் தேவைப்படுகின்றன."[1]

சுதந்திர சமூகம் என்ற சொற்றொடரை—தமது காலத்திலிருந்த இங்கிலாந்தின் சமூகத்தைப் பெரிதளவில் ஒத்த சமூகமொன்றையே அவர் தம்முடைய கருத்திற் கொண்டிருந்தார்—உறுதியான அரசாங்கம், நிலைநாட்டப்பட்டதும் அங்கீகரிக்கப்பட்டதுமான சட்டத் தொகுதி ஆகியவைகளை மட்டும் கொண்டிருந்த நிலைமைகளை விவரிப்பதற்கன்றி, இவைகளிலும் பார்க்கச் சற்று அதிகமான அம்சங்களைக் கொண்டிருந்த நிலைமைகளை விவரிப்பதற்காகவே பயன்படுத்தினர். வழமை, மொழி, அரசியலமைப்பு, சமூகப் பழக்கவழக்கங்கள் ஆகியவைகட்கிடையேயுள்ள தொடர்புகளும், வர்க்கக் கட்டமைப்பு, நிறுவப்பட்ட திருச்சபை போன்ற சமுதாயப் பொது இலட்சியங்களைக் குறிப்பிடும் மற்றச் சமூக நிறுவனங்களும் சேர்ந்து, மறை மெய்மை சார்ந்த ஒற்றுமையைக் கொண்டிருப்பதாக பேக் கருதினர். ஒரு சந்ததியிலிருந்து மறு சந்ததிக்குத் தொடர்ந்து செல்வதும், மெதுவாக மாறிக்கொண்டு செல்லும் சூழ்நிலைக்கேற்ப மெதுவாகவும் படிமானமாகவும் தன்னைச் சரிசெய்துகொள்ளும் உறுதி நிலையில் உள்ளதுமான சமூக ஒழுங்கையே பேக் விரும்பினர். நாடு—அரசு என்ற இந்தத் தெய்வ உருவகமும், இது நிரந்தரமாக ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய அரசியல் உருவகமாகும் என்ற எளிமையான எடுகோளும் முந்திய இரண்டு நூற்றாண்டுக் காலமாக ஐரோப்பாவில் ஏற்பட்ட அனுபவத்தின் அடிப்படையிற் கட்டி எழுப்பப்பட்டவையேயாகும். அக்காலத்தைத் தொடர்ந்து வந்த நூற்றைம்பது ஆண்டுக் காலத்தில் இவை அரசியலிலே படிப்படியாகச் செல்வாக்குப் பெற ஆரம்பித்தன. 'மரபுரிமையாகப் பெறுதல் என்ற கருத்து பாதுகாத்துப் பேணல் பற்றியும் ஊடு கடத்தல் பற்றியும், அபிவிருத்தி என்ற தத்துவத்தை அகற்றிவிடாமல், நல்ல ஒரு தத்துவத்தைக் கொடுத்துதவுகின்றது ............... ......................... இந்தக் குறிக்கோள்களைப் பின்பற்றும் அரசிற்குக் கிடைக்கும் நன்மைகள் யாவும் குடும்ப ஒப்பந்தங்களிற் செய்யப்படுவதைப் போல் மிகவிரைவாகத் தாழிடப்பட்டுவிடுகின்றன; கோயிலக மானியத்தில் நடைபெறுவதைப்போல் என்றுமே பற்றிக்கொள்ளப்படுகின்றன."[2]

'நினைவுகள்' என்ற கட்டுரையிலிருந்து அதிகமாக மேற்கோள் காட்டப்படும் பந்தியையும் இதே மனநிலையிற்றான் பேக் எழுதியிருக்கின்றார் என்பது திண்ணம். 'மிளகு, கோப்பி, புடைவை, அல்லது புகையிலை அல்லது அதைப்போன்ற மிகக் குறைந்த கவனத்தை ஈர்க்கின்ற பொருள்' சம்பந்தமான வர்த்தக

[1] *Works*, vol. v, p. 434. *Reflections on the Revolution in France*

[2] *Works*, vol. v, p. 78. *Reflections on the Revolution in France*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பந்தத்திலும் பார்க்க அரசு—இச்சொல்லே சமுதாயத்தைக் குறிப்பிடவே அவர் வழக்கமாகப் பயன்படுத்தினரேயன்றி அரசாங்கத்தைக் குறிக்கவன்று—எந்தவகையிலும் சிறந்ததல்ல என்ற கருத்தை அந்தப் பந்தியிற்றான் அவர் மறுத்துரைத்தார். அதற்குமாறாக 'எல்லா விஞ்ஞானத் துறைகளிலும் பங்காளிகளாக இருக்கச் செய்வது அது; எல்லாக் கலைத் துறைகளிலும் பங்காளிகளாக்குவது அது; நன்னெறிகள் யாவற்றிலும் நிறைவுகள் எல்லாவற்றிலும் பங்காளிகளாக்குவது அது. இந்தப் பங்காளித்தனத்தின் இலட்சியங்களைப் பல சந்ததிகளிற் பெறமுடியாது என்பதால், அப்பங்குரிமையானது வாழ்ந்து கொண்டிருப்போருக்கிடையில் மட்டுமன்றி, வாழ்ந்து கொண்டிருப்பவர், இறந்துபோனவர், பிறக்கப் போகின்றவர் ஆகியோருக்கிடையிலும் உள்ளதொன்றாக அமைகின்றது.'[1]

சமுதாய ஐக்கியம், தொடர்ச்சி ஆகியவைகளை உள்ளடக்கிய இந்தப் பொருளைப் பயன்பாட்டுக் கொள்கையைப் பின்பற்றிய ஆங்கிலேயச் சிந்தனையாளர்களிலும் பார்க்க—பேக்கும் இதே கொள்கையைத்தான் பின்பற்றினர்—ஐரோப்பாவைச் சேர்ந்த சிந்தனையாளர்களே மிகவும் விரிவாக அபிவிருத்தி செய்தனர். பேக்கின் கண்டனங்களுக்கு இலக்காகிய ரூசோ, தற்கால நாடு—அரசிற்கான அரசியற் கொள்கையை உருவாக்கிக் கொடுத்தார் என்று சொல்லலாம். அந்நியரின் பிதற்றல்களைப் பேக் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளவேயில்லை. அவருடைய தேசிய உணர்ச்சி பிற்காலத்தில் ஏற்படவிருந்த தேசிய உணர்ச்சியை எதிர்பார்த்து அமைந்ததாகவும் கொள்ளமுடியும். பிரெஞ்சுப் புரட்சியையடுத்த அரை நூற்றாண்டுக்காலத்திற்குப் பிரித்தானிய சமூகச் சிந்தனையானது தனியாண்மை வாதமாகவே இருந்தது. அது, அரசியல் அதிகாரத்தின் கட்டமைப்பைச் செயற்கையான அடிப்படையில் அணுகியதோடு அதைச் செயற்கையான முறையிலேயே பிரயோகிக்கவும் செய்தது. ஆனல், பேக் எண்ணிக்கொண்டதைப்போல், தனியாண்மை மரபு ஐரோப்பிய செல்வாக்கிற்கு உள்ளாகாமல் இருந்திலது. 'ரூசோவாற் கொள்கை மாற்றம் செய்யப்பட்டவர்களல்ல நாங்கள்' என்று அறிவித்த பேக், 'வோல்டயரின் சீடர்களுமல்ல நாம்; ஹெல்வெற்றியசின் கொள்கை எம்மிடையே செல்வாக்குப்பெறவில்லை. மதநம்பிக்கையற்றவர்கள் எம்முடைய போதகர்களாகமாட்டார்கள்; பித்தர்கள் எமக்குச் சட்டத்தை ஆக்கிக்கொடுப்பவர்களாகமாட்டார்கள்'[2] என்றும் கூறினர். ஆனல் இந்தக் கூற்றுக்கள்யாவும் உண்மையாக மாட்டா. ஹெல்வெற்றியசின் கொள்கைகள் பிரித்தானியாவிலே குறிப்பிட்ட அளவு செல்வாக்குப் பெற்றிருந்தன என்பதே உண்மையாகும். அடுத்துவந்த நூற்றாண்டிலிருந்த அவரின் சீடரான பெந்தம், பேக்கிலும் பார்க்கக் கொள்கைமுறையிலும் நடைமுறையிலும் கூடிய செல்வாக்குப் பெற்றிருந்தார்.

* * * *

[1] *Works*, vol. v, p. 184

[2] *Works*, vol. v, p. 166. *Reflections*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹொப்சின் கொள்கையிற் காணப்படும் தீவிர தனியாண்மைவாதம், மத்திய அரசிடம் பெரிதளவு வலுவைக் குவிப்பதனுற் சமன் செய்யப்படுகின்றது. ஒரு சமூகத்தின் ஒன்றுபட்டிருக்கும் இயல்பிற்கு, அதன் தொடர்ச்சி, மரபுவழிவந்த நிறுவனங்கள் ஆகியவை இருப்பதோ, அல்லது குடிமக்களிடையே தன்னலம் இருப்பதாகக் கருதப்பட்டபோதிலும், அவர்களின் நலவுரிமைகள் தார்மீக சுற்றுச்சார்பை உடையனவாக இருப்பதோ ஓரளவு காரணமாக இருக்கின்றது என்பதைப் பதினெட்டாம் நூற்ருண்டில் இக்கொள்கைக்குச் செய்யப்பட்ட திருத்தங்கள் சுட்டிக்காட்டுகின்றன. நிலைநாட்டப்பட்ட அரசியலமைப்பை வெளிப்படையாக எதிர்க்காதபோதிலும் மறைவாகக் கண்டிக்கும் மனப்பான்மையைப் பெற்றிருந்த சீர்திருத்தவாதிகள் இந்தப் பிரச்சினையைத் திரும்பத் திரும்ப விவாதித்த பிரெஞ்சு நாட்டிலே, பிற்காலச் சந்ததியினரின் கொள்கையையும் நடைமுறையையும் பாதித்த இரண்டு மிகவும் முக்கியமான கோட்பாட்டாராய்ச்சிகளுக்கான சான்றுகளை நாம் காண்கிறோம். இவைகளுள் முதலாவதாகவுள்ள கோட்பாடு, சமுதாய உறுப்பினர்களிடையே நலவுரிமை, நோக்கங்கள் ஆகியவைகளிற் காணப்படும் இயற்கையான கருத்தொற்றுமையை வற்புறுத்திக்கூறியதோடு, தங்களின் குடிமக்களினுடைய விருப்பங்கள் அல்லது சமூக உணர்ச்சிகள் கட்டுப்பாடெதுவுமின்றித் தங்களை ஒழுங்காக்கிக் கொள்வதைச் சரித்திரப் பெருமைபெற்ற அரசாங்கங்கள் யாவும் தடைசெய்தன என்று கூறவும் முயன்றது. இந்தக் கருத்தை ரூசோ தமது கட்டுரைகளிலும் புத்தகங்களிலும் மிகச் சிறந்த முறையில் விளக்கியுள்ளார். பிரெஞ்சுப் புரட்சிக்கு அடிகோலிய கருத்துக்களில் இதுவும் ஒன்ருகும். இக்கருத்தை இப்புத்தகத்தின் இறுதி அத்தியாயத்தில் ஆராய்வோம். ஆங்கிலேய சிந்தனையோட்டத்தில் நாம் அவதானித்த போக்கை ஒட்டியதாக இரண்டாவது கொள்கை இருக்கின்றது. இக்கொள்கை மற்றவர்களின் செலவிலே தம்முடைய சொந்தத் தூண்டுகைகளைத் திருப்திப்படுத்துவதற்காக முரண்பட்ட தேவைகளைக் கோரிநிற்கும் குடிமக்களிடையே இணக்கமான ஒத்துழைப்பை உருவாக்குமுகமாகச் சட்டங்கள் ஆற்றும் பங்கிற்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்ததோடு குடிமக்கள் தங்களின் சொந்த மகிழ்ச்சியைத் திருப்திகரமாகப் பெறுவதற்குச் சமுதாயத்தின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெறவேண்டும் என்றும் கூறியது.

இந்த இரு கருத்துக்களிலும் சமூகச் சுற்றுச் சார்புபற்றிக் கூறப்படுகின்றது. ஆனல் இரண்டிலும் சமூகச் சுற்றுச் சார்பு என்ற சொற்றொடருக்கு வெவ்வேறு வரைவிலக்கணங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. தான் ஒரு பகுதியாகவுள்ள முழுமையிலே தனிமனிதன் தங்கியிருக்கின்ருன் என்று பிரெஞ்சு சமூகச் சிந்தனையாளர்களுட் பலர் கருதினர். அந்தக் காலத்திற்குரிய பாங்காகக் கருதப்பட்ட பொறியியல் அடிப்படையிலேயே அவனின் பங்காளித்தனமும் நோக்கப்பட்டது. ஹெல்வெற்றியசைப் பொறுத்தவரையில், குடிமக்களின் வாழ்க்கையை உருவாக்கிய வெளிக்காரணங்களுட் சட்டம் மட்டுமே மிகவும் முக்கியமானது. ஹொல்பாக் போன்றவர்கள் கொண்டிருந்த நம்பிக்கைக்கு இந்தக் கருத்து முரணுனதல்ல. இருவயினுெத்த தேவைகளையுடைய தனிமனிதரின் கூட்டமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாயமாகும் என்று ஹொல்பாக் கருதினர். சமுதாயம் என்ற கருதுகோள், பிரெஞ்சு சீர்திருத்தவாதிகளிடையே நிலவிய இந்த இரு கருத்துக்களையும் உள்ளடக்கியதாகவிருந்தது. இது முழுமையானது; ஆனால் அதிகமாக இயற்கை யான ஐக்கியத்தைப் போன்று செயற்கையானது. நீண்ட காலம் பிரான்சில் வசித்து வந்த ஜெர்மானியரான ஹொல்பாக், பிரெஞ்சு ஆட்சியைக் கண்டித்த வர்களிடையே மத நம்பிக்கை அற்றவர்களின் பிரிவைச் சேர்ந்தவர். அவரின் புத் தகமான 'Systeme de la Nature' (இயற்கை அமைப்புக்கள்) 1770 ஆம் ஆண் டில் வெளிவந்தது. அதிற் காணப்படும் சமூக சிந்தனை ஹொப்சின் கருத்துக் களின் எதிரொலியாகப் பலவகையில் இருக்கின்றது. தனித்திருக்கும்போது மனிதன் பலன் குன்றியவன்; ஆனல், பரிமாற்றமான ஆதரவு கிடைக்கப் பெறு வதனல், சமூகத்தில் இருக்கும்போது பலம் வாய்ந்தவனுகக் காணப்படுகின்றான். எனவே, காரணங்களும் விளைவுகளும் என்ற தேவையான முறைமையின் ஒரு பகுதியாக ஒழுங்கமைப்பையுடைய சமுதாயம் கருதப்படுகின்றது. தனது 'மிகு மகிழ்ச்சிக்குத் தேவையான யாவற்றையும் மனிதன் தானகவே தனித்து நின்று பெறமுடியாமல் இருப்பதே' அதற்குக் காரணம். மனிதன் 'உண்மையான மகிழ்ச்சியைப் பெறுவதற்கு' அவனிடமுள்ள பலவீனம் ஒரு சமூகச் சூழ் நிலையைக் கோருகின்றது என்ற இந்த வாதம், புகழ்மிக்க பிரெஞ்சுக் 'கலைக் களஞ்சியத்தில்' டிடரோ எழுதிய 'சமூகம்' என்ற கட்டுரையில் ஏற்கெனவே இடம் பெற்றிருந்தது. மகிழ்ச்சியடைதல் மனிதனின் உரிமையாகும் என்று சீர் திருத்தவாதிகள் அனைவரும் கருதிப் போந்தனர். தனிமனிதனின் கோரிக்கைக் கும் சமூகத்தின் கோரிக்கைக்குமிடையே தென்படும் முரண்பாட்டை, 'மனித னின் நல்வாழ்விற்கு மிகவும் தேவைப்படுபவன் மனிதனே' என்று மிகவும் சுருக்கமாகவும் செறிவாகவும் கூறுவதன்மூலம் தீர்த்து வைத்திருக்கின்றார் ஹொல்பாக்.

இந்தக் கருத்து ஹொப்சின் கொள்கையைத் தெளிவாக்குவதாக இருக்கின் றது. கட்டுப்படுத்தப்பட்ட அர்த்தத்தில், ஹொப்சினுடைய கொள்கையின் ஒழுக்கமுறைப்படுதல் எனவும் அதை அழைக்கலாம். என்றும் அழியாதிருக்கும் தார்மீகப் பெறுமதிகளின் களஞ்சியமாகச் சமூகம் ஆகிவிட்டது. இவைகளைத் தனிமனிதர் தங்கள் வாழ்விற் பிரதிபலிக்கின்றனர். 'தனிமனிதர் இறந்து விடுவர், ஆனல் மனித இனம் இறப்பதில்லை' என்ற டிடரோவின் கூற்று, பிரதி நிதித்துவ முறை பற்றிய சீர்திருத்தம் சம்பந்தமாகப் பேக் நிகழ்த்திய உரை யிலே குறிப்பிட்ட புகழ்பெற்ற ஒரு கூற்றை ஒத்திருக்கின்றது. 'மனித இனம் அறிவு படைத்தது. போதிய அளவு அவகாசத்தைக் கொடுத்தால், மனித இனம் என்ற முறையில், அது எப்பொழுதும் சரியாகவே நடந்துகொள்ளும்'[1] என்பதே அந்தப் புகழ்மிக்க கூற்றாகும். 'சமூகம்' பற்றி டிடரோ எழுதிய கட்டுரை 'ஒழுக்கமுறை' என்ற பொதுத் தலைப்பின்கீழ்ப் பிரசுரிக்கப்பட்டிருந்தது. ஒழுக்க முறைக்கும் சமூகக் கொள்கைக்குமிடையே நெருங்கிய தொடர்பை ஏற் படுத்தியமை பிரெஞ்சுச் சீர்திருத்தவாதிகளின் சிறப்பியல்பாக இருக்கின்றது.

[1] *Works*, (1826), தொகுதி x, பக். 97

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கலைக்களஞ்சியத்தை' டிடரோவுடன் கூட்டுச் சேர்ந்து எழுதிய கணிதவிய லாளரான தி அலம்பெட் என்பவர், ஒழுக்க முறையென்பது எதிர்த்தோ மறுத்தோ கூறமுடியாத தனித்ததோர் உண்மையிலும், மனிதர் ஒருவருக்கொரு வர் கொண்டுள்ள இருவயினொத்த தேவையிலும், இத்தகைய தேவை அவர்கட்கு ஏற்படுத்தும் பரிமாற்றமான கடமைகளிலும் கட்டியெழுப்பப்பட்டது என்று பொதுவாக நிலவிய கருத்தையே குறிப்பிட்டார். லொக்கின் கருத்துப்படியன்றி ஹொப்சின் கருத்துப்படி இது இயற்கைச் சட்டத்தைப் புரிந்துகொள்வதாக இருந்தது; உள்ளுணர்வுமூலம் இது உணரப்படவில்லை; அனுபவமுறை மூலமே நோக்கப்பட்டது.

மக்கள் எப்பொழுதும் தமது சொந்த மகிழ்ச்சியையே அடைய முயல்வர். தனியாரின் அக்கறையைப் பொது நன்மையுடன் தொடர்புபடுத்துவதன்மூலம் இப்போக்கைச் சமூகத்திற்கு நன்மைபயக்கக்கூடிய வழிகளில் ஆற்றுப்படுத்து வதே இங்குள்ள பிரச்சினையாகும். எனவே, அரசியலோடும் சட்டவாக்கத்தோ டும் ஒழுக்க நெறிப் பெறுமதி இணைந்து செல்லவேண்டியது அத்தியாவசிய மாகும். இந்த வகையில் நடக்காவிட்டால் நன்னெறி ஒருவகை 'வீணான அறி வுத் துறையாகவே' இருக்குமென்று ஹெல்வெற்றியஸ் கூறினர். பொதுப் பயன் பாடு என அவர் அழைத்த தனியான, எளிய தத்துவத்தின்படியே எல்லாச் சட்டங்களும் தயாரிக்கப்படவேண்டும் என்று அவர் சிபாரிசு செய்தார். 'ஒரே வகை அரசாங்கத்தின் கீழுள்ள பெருந் தொகை மக்களின் பயன்பாட்டையே பொதுப் பயன்பாடு என அவர் வரையறைசெய்தார்.'[1] சட்டத்திபடி தண் டனை அளிப்பது, ஈடுசெய்வது போன்ற ஒழுங்குகள் தனிமனிதரைச் சமூக நன்னெறி முறையில் நடக்கும்படி தூண்டினலல்லாது, பொது நலத்துக்குப் பதிலாகத் தன்னலத்தையே அவர்கள் எப்பொழுதும் விரும்புவார்கள் என்பதே அவருடைய வாதமாக இருந்தது. தம் சொந்த மகிழ்ச்சியைப் பொது நலத் திற்காகத் தியாகம் செய்பவரல்லர் நன்னெறியுடைய மனிதர் என்கிறர் ஹெல் வெற்றியஸ். அதற்குமாருக, பொதுநலத்தை மிக நெருக்கமாக ஒத்திருக்கும் மனவெழுச்சியைக் கொண்டிருப்பவரே நன்னெறியை உடையவராவர். அத் தகையவர் தேவை காரணமாக நன்னெறியாளராவர் எனக் கூறலாம்.

நோவையும் மகிழ்ச்சியையும் முறையே பயத்துடனும் ஆவலுடனும் அணுகு கின்ற காரணத்தினுல், தனிமனிதர் இந்தவகையான சமூகச் செல்வாக்கிற் குப் பணிந்து நடக்கின்றனர். மனிதனிடம் இயல்பாக அமைந்துள்ள தார்மீக மனநிலை எதுவும் கிடையாது; அவனைத் தூண்டும் மனவெழுச்சிகள் ஏற்படுத் தும் சமூக விளைவுகளையும் அவைகளின் தன்மையையும் கொண்டே அவனின் நடத்தைகள் நல்லவையா கெட்டவையா என்று தீர்ப்பளிக்கப்படுகின்றது. இக்கருத்து ஹியூமினுடைய கருத்திலும் பார்க்க ஹொப்சின் கருத்தையே

[1] *De L'Esprit* (பரிஸ் 1758) பக. 175. அரசாங்க அனுமதியுடன் இந்தப் புத்தகம் ஆசிரியரின் பெயரெதுவுமின்றி வெளியிடப்பட்டது. அதன் ஆசிரியர் பணம் படைத்த, வரியற விடும் அதிகாரியாக இருந்தமையே அதற்குக் காரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிதும் ஒத்திருக்கின்றது. தெரிந்தெடுக்கும் வலுவிலும் பார்க்க மறுதலிக்கும் வலுவே மனிதனுக்கு அதிகமுண்டு. மிகுமகிழ்ச்சியை அல்லது மகிழ்ச்சியை அவன் அடைவது அவனுடைய இச்சையை வெளிக் காரணங்கள் பாதிப்பதிலேயே தங்கியிருக்கின்றது. சமூக இணக்கத்தை ஏற்படுத்து முகமாக தெய்வத் தன்மையால் அல்லது இயற்கையால் ஒழுங்குசெய்யப்படாத தன்னல முறைமையானது பொதுநன்னெறியையும் மகிழ்ச்சியையும் ஊக்குவிப்பதாக நம்பப்படும் சமூகம், அரசாங்கம் ஆகிய அமைப்புக்களை, எப்படி ஆதரிப்பதாகக் கொள்ளமுடியும் என்பதை ஹெல்வெற்றியஸ் எடுத்துக் காட்டுகின்றார்.

சட்டங்களைத் தயாரிப்பதற்காகத் தனி நடுநிலையான தத்துவத்தைப் பிரயோகிப்பதற்கு 1760 ஐ அடுத்த ஆண்டுகளில் வசித்த இத்தாலிய சமூகச் சிந்தனையாளரான பெக்காரியா மேலும் ஆதரவை நல்கினார். அவர் சுருக்கமாக எழுதிய, ஆயின் பரந்த செல்வாக்குப் பெற்றிருந்த கட்டுரையான 'குற்றங்களும் தண்டனைகளும் (Crimes and Punishments) ஹெல்வெற்றியசிடமிருந்து பல கருத்துக்களைப் பெற்றிருந்தது. அத்துடன், இங்கிலாந்தில் வசித்த பிரீஸ்ட்லி வழியாக, வாலிபராயிருந்த பெந்தமினின் கருத்துக்களை உருவாக்கவும் உதவியது. இந்தக் கட்டுரையின் ஆரம்பத்திற்முன் பொதுப்பயன்பாடு என்பதற்கு, அவர் உச்சமான தொகை மக்களுக்கு ஏற்படும் அதிகப்படியான மகிழ்ச்சி என்ற புகழ் பெற்ற வரைவிலக்கணத்தைக் கொடுத்தார். சட்டத்தைச் சீர்திருத்துவதில் அக்கறை கொண்டிருந்தவரான பெக்காரியா—சில காலத்திற்குப் பின்பு பெந்தமும் இவ்வாறே அக்கறை கொண்டிருந்தார்—ஒரு சமூகத்திலே குற்றங்களுக்கும் தண்டனைகளுக்குமிடையே ஏற்படுத்தப்படவிருக்கும் விகிதசமம் 'கேத்திரகணிதத் திட்டமாக' நிர்ணயிக்கப்படல்வேண்டும் என்று கூறினார். மிகக் குறைந்த அளவான கொடிய விளைவையும் துன்புறுத்தும் விளைவையும் ஏற்படுத்துவதன்மூலம் மிகவும் சிறந்த பயனிறைவுடையதும் நீடித்திருப்பதுமான விளைவைப் பெறுவதே அவரின் நோக்கமாக இருந்தது. குற்றம் செய்தவுடனே தண்டனை கொடுக்கப்படவேண்டியது அவசியமாகும் என்று அவர் வாதாடினார். அப்பொழுதுதான் குற்றம் செய்ததற்குத் தண்டனை அவசியமென்று அது தோற்றமளிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சமூகத்திற்கு நன்மை பயக்கக்கூடிய நடத்தையை ஊக்குவிப்பதுவும் சமூக விரோத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதுமான நேரடியான நோக்கத்தைக் கொண்டவைகளாகச் சட்டங்கள் இருத்தல் வேண்டும் என்பதை வற்புறுத்திக் கூறுவதிலே பெக்காரியா ஹெல்வெற்றியசைப் பின்பற்றினார். சட்டங்கள் பகுத்தறிவின்பாற்பட்டவையாக இருப்பதோடு அவ்வாறு இருப்பதாகத் தோன்றவும் வேண்டும். தன்னிச்சையான கட்டுப்பாட்டிலிருந்து பெறப்படும் இந்த விடுதலையானது பொதுப் பயன்பாட்டு வழியில் ஆற்றுப் படுத்துவதாகவிருக்கும்.

ஹெல்வெற்றியசும் பெக்காரியாவுமாகச் சேர்ந்து, தன்னலத்தன்மையையுடையதும் நடுநிலையானதும் தார்மீகப் பற்றற்றதுமாகவிருந்த பயன்பாட்டுத் தத்துவத்தை, சமூகச் சீர்திருத்தவாதிகள், எதிர்கால மகிழ்ச்சியையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்னெறியையும் கட்டியெழுப்ப உதவும் என்று நம்பிக்கை வைக்கத் தக்க அரசியலுக்கும், சட்டத்துக்குமான அளவுகோல் என்ற மதிப்புநிலைக்கு உயர்த்தினர். இவர்களின் கொள்கையைப் பின்பற்றிய ஆங்கிலேயர்களில் ஜெரேமி பெந்தம் தலைசிறந்தவராகத் திகழ்கின்றார். பதினெட்டாம் நூற்றாண்டின் சிந்தனையாளர் கோரிய சீர்திருத்தங்களிலே இந்த நம்பிக்கைகளையும் சேர்த்துக்கொள்ள அவர் உதவினர்.

1768 ஆம் ஆண்டில் வெளிவந்த ஜோசப் பிரீஸ்ட்லியின் பிரசுரமான 'அரசாங்கத்தின் முதல் தத்துவங்கள் பற்றிய கட்டுரையை' (An Essay on the First Principles of Government) வாசித்ததன் மூலமே உச்சத் தொகையான மக்களுக்கு அதிக பட்சமான மகிழ்ச்சி என்ற தத்துவத்தைத் தாம் அறிந்து கொண்டதாக பெந்தம் எமக்கு அறிவிக்கின்றார். இயற்கை விஞ்ஞானியாகவும் கிறித்துவ ஒருமைக்கோட்பாட்டினராகவும் புகழைத் தேடிக் கொண்ட பிரீஸ்ட்லி, முன்பே நிர்ணயிக்கப்பட்ட பாதைமூலம் மக்களை நடாத்திச் செல்வதற்குக் கடவுளின் கைகளிலுள்ள கருவிகளாகவே சமூகத்தையும் அரசாங்கத்தையும் கொண்டார். தன் 'உறுப்பினர்களின் நன்மையையும் மகிழ்ச்சியையும், அதாவது எந்த அரசினதும் உறுப்பினர்களுட் பெரும்பான்மையோரின் நன்மையையும் மகிழ்ச்சியையும், எந்த அளவிற்கு ஊக்குவிக்கின்றது என்பதே நல்ல அரசாங்கத்தைத் தெரிந்துகொள்வதற்குச் செய்யவேண்டிய பரிசோதனையாகும்.'[1] பிரீஸ்ட்லியின் கருத்துப்படி, நீதவான்களின் அதிகாரம் பொது நன்மைக்கு அவர்கள் எந்த அளவிற்கு ஆக்கமளிக்கின்றனர் என்பதால் நேரடியாகக் கட்டுப்படுத்தப்படுகின்றது.

மகிழ்ச்சி என்ற அடிப்படையிற் கிடைக்கப் பெறும் விளைவுகளைக் கொண்டு, குடிமக்களின் வாழ்க்கையிலே தலையிடுவது என்ற சிக்கலான பிரச்சினையைத் தீர்த்துவைக்கப் பிரீஸ்ட்லி முயன்றார். அரசியல் அதிகாரிகள் சமூகத்தின் வேலைகளைத் தனியாட்களிலும் பார்க்கச் சிறப்பாகச் செய்யமாட்டார்கள் என்ற நிலை ஏற்படும்போதே தனியாட்கள் தங்கள் விடுதலையை விடாமல் வைத்துக் கொள்வார்கள். அவ்வாறு வைத்திருப்பது சமூகம் முழுவதற்கும் கூடிய நன்மையைப் பயப்பதாயிருக்கும். 'ஒவ்வொரு மனிதனதும் தன்னிச்சையான விருப்பத்திற்கு விட்டுவிடாமல் சட்டங்களால் மனிதரைக் கட்டுப்படுத்துவதனால், அதிக வசதியீனங்களை ஏற்படுத்தும் இயல்புள்ளனவாக மனித நடத்தைகளிற் பெரும்பகுதி அமைந்திருக்கின்றது'[2] என்பதிலே பிரீஸ்ட்லி கொண்டுள்ள நம்பிக்கையினால் ஆரம்ப நிலையிலுள்ள இந்தக் கொடுங்கோலாட்சி, ஹொப்சின் நூல்களில் உள்ளதுபோன்று கட்டுப்படுத்தப்படுகின்றது.

தனிமனிதரின் வேறுபாடுள்ள மறுதலிப்புகளுக்கு இவ்வளவு இடம் கொடுக்கப்பட்டுள்ளபோதிலும், மனித உளவியல் பற்றி ஹொப்ஸ் விவரித்ததைப் போல், ஒருவர் அனுபவிக்கும் துன்பம், மகிழ்ச்சி ஆகியவைகளின் முழுவ

[1] *Essay*, பக். 17 [2] *Essay*, பக். 54

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைப்புமே காரணங்களும் விளைவுகளும் என்ற தேவையான ஒழுங்கிற்குள் நிர்ணயிக்கப்படுகின்றது. பிரீஸ்ட்லியின் கருத்துப்படி இந்த அமைப்பிற்குக் கடவுளே பொறுப்பாளியாவர். அவர் வேண்டுமென்ற இதை இந்த வகையில் உருவாக்கினுர். நம்பிக்கை, பயம் என்பவைகளால், பொறியியல் முறையினுள்ளதுபோல், மக்கள் பாதிக்கப்பட்டாற்ருன் குணவியல்புகளினதும் நடவடிக்கைகளினதும் பண்புக்கேற்ப வெகுமதிகளும் தண்டனைகளும் வழங்கப்படும் தார்மீக ஒழுங்கு நிலையை அவர்கள் அடைய முடியும். அப்பொழுதுதான் கடவுள் தம்முடைய பெரும் இலட்சியத்தை அடையமுடியும். தாம் படைத்தவற்றுள் தலை சிறந்ததான மனித இனத்தின் மகிழ்ச்சியே அந்த இலட்சியமாகும்.

தெய்வத் தன்மைவாய்ந்த பயன்பாட்டுக்கொள்கை என்று பிற்காலத்தில் அழைக்கப்பட்ட இந்தக் கொள்கைக்கும் மதச்சார்பற்ற அதையொத்த கொள்கைக்குமிடையே தெளிவான வேறுபாடு எதுவும் கிடையாது. அந்த ஒழுங்கமைப்பு எந்தவகையான ஆரம்பத்தைக் கொண்டிருந்தது என்பது அதன் அரசியல் விளைவுகளை ஆராய்வதற்குத் தேவையற்றதாகும்.

தன்னுடைய சொந்த அக்கறைகளைக் கவனிப்பதிலேயே அதிக கவனத்தைச் செலுத்தும் சுயநலப் பிராணியாக மனிதன் இருக்கின்ருன் என்ற கருத்தும், இத்தகைய தனிமனிதரின் அக்கறைகள் தங்களுக்கிடையே மோதிக்கொள்வதைத் தவிர்க்கக்கூடிய போதிய பலத்தையுடைய அரசரின் வலுவால், அல்லது தனிமனிதரின் அக்கறைகளுக்கிடையே இணக்கம் ஏற்படுத்துவதற்குப் போதிய அளவு கூர்மதியுடைய மன்னரின் வலுவாலே தனியொருவனின் பொது நடத்தையை ஒழுங்குபடுத்தமுடியும் என்ற கருத்தும் இந்தக் கோட்பாட்டுப் பிரிவைச் சேர்ந்தவர்களின் சிந்தனையிலே திரும்பத்திரும்ப இடம் பெறும் விடயமாகவிருக்கின்றது. உறுதித் தன்மையற்ற நிலையைத் தன்னகத்கே கொண்டிருந்த சூழ்நிலையை மேலும் சீரழிந்துவிடாமல் தடுப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும் என்று கருதுகின்ருர் ஹொப்ஸ். எந்தக் குறிப்பிட்ட சூழ்நிலையிலும் தங்களுக்கு நன்மைபயக்கும் வழி எது என்பதை வெற்றிகாமாகக் கணித்துத் தெரிந்துகொள்ளக்கூடியவகையில் நிதானமாகச் சிந்திக்கக்கூடியவராய் மக்கள் இருக்கின்றனர் என்றும் இந்த நன்மைகளை நன்னெறியையுடையனவும் ஒத்துழைப்பைக் காட்டுவனவும் சமூகத்திற்கு நன்மை பயப்பனவுமான நடத்தைகளால் வெளிக்காட்டத்தக்க வகையிலே சூழ்நிலைகளை ஒழுங்குபடுத்துவதற்கு ஆட்சியாளர் தகுதிபெற்றிருத்தல்—அவ்வாறு செய்தல் அவர்களின் கடமையும் கூட—முறையானது என்றும் கூற முற்பட்டால், பயன்பாட்டுக் கருதுகோள் தன்னுடைய நடுநிலைமைத் தன்மையை இழந்து விடும். பெக்காரியா கோரிய கேத்திர கணிதத் திட்டத்தைப் பின்தொடர்ந்து அத்தகைய கணிப்புக்களை மக்களாற் செய்யமுடியுமென்று நம்பியதோடு, அவர்கள் அவ்வாறே செய்கின்றனர் என்பதையும் காட்டியிருப்பது, ஜெரேமி பெந்தம் சமூகச் சிந்தனைத் துறைக்கு ஆற்றிய சிறப்புப் பணியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெக்காரியாவைப் போன்று சட்டச் சீர்திருத்தத்திலேயே தமது முக்கிய கவனத்தையும் செலுத்தினுர் பெந்தம். பயன்பாட்டுக் கொள்கையும், உச்சத் தொகையான மக்களுக்கு அதிக பட்சமான மகிழ்ச்சி என்ற தத்துவமும் தம்மு டைய சமூகச் சிந்தனையின் அம்சங்களாக மாறியதன் பின்பு, தாம் ஆரம்பிக்க விரும்பிய சீர்திருத்தங்களுக்காகப் போராடும் கருவிகளாக அவைகளைப் பயன் படுத்தினுர். இவ்வாறு செய்ததன் விளைவாக, தார்மீக தத்துவங்களாகத் திகழ்வதற்குரிய தகைமையை அவை ஓரளவு இழந்தன. பத்தொன்பதாம் நூற் ருண்டில் மிகவும் செல்வாக்குப் பெற்றிருந்த ஒரு சமூகக் கோட்பாடாக விளங் கியதோடு தற்கால சமூகசேவை அரசிலே முக்கிய பங்கையும் வகிக்கும் பயன் பாட்டுக் கொள்கை, அதன் முக்கிய கருத்துக்களிலே பெந்தம் ஏற்படுத்திய குழப்பத்தின் விளைவாக, தார்மீக மெய்யிலாக உயிர்தப்பி வாழமுடியவில்லை. அரசியற் கொள்கையினர் என்ற முறையில், பெந்தம் ஹொப்சிலும் பார்க்கத் தரம் குறைந்தவரே, ஒழுக்க நெறியாளர் என்ற முறையில், ஹியூமைப் போன்ற திற மையுடன் பயன்பாட்டுக் கொள்கையை அவராற் கையாள முடியவில்லை. தலை சிறந்தன என்று வர்ணிக்க முடியாதவையும் புதியன என்று கொள்ளமுடியாத வையுமான கருத்துக்களைத் தெரிவித்துள்ள போதிலும், பேக் வெறுத்தொதுக் கிய பிரெஞ்சுச் சிந்தனையாளர்களின் இன்பக் கோட்பாட்டுக் கருத்துக்களை ஒழுங்குபடுத்திக் கொடுத்த பெருமை அவரையே சாரும். அடுத்த நூற்ருண்டில் அவருடைய கருத்துக்கள் மிகவும் செல்வாக்குப் பெற்றிருந்தன.

'மிகவும் சுறுசுறுப்பான காலகட்டத்தில் நாம் வாழ்கின்ருேம்; இதில் நிறைவை நோக்கி அறிவு மிக வேகமாக விரிவடைந்துகொண்டு செல்கின்றது.'[1] பிளாக்ஸ்டோனின் 'இங்கிலாந்துச் சட்டங்களின் விளக்கவுரைகள்' (Commentaries on the Laws of England) என்ற புத்தகத்தின் முன்னுரை யில் விளக்கப்பட்டுள்ள மரபு வழிவந்த இயற்கைச் சட்டக் கொள்கையைக் கண்டிக்குமுகமாக, தமது கட்டுரையின் முகவுரையை இவ்வாறு பெந்தம் ஆரம்பித்தார். பகுத்தறிவின்பாற்பட்ட அறிவொளி பரவுவதையும் சீர்திருத்தம் ஏற்படுவதற்கான சூழ்நிலை உருவாகிவருவதையும் நன்ருக உணர்ந்தமையால் ஏற்பட்ட தன்னம்பிக்கையை இந்த வாக்கியம் தெளிவாகக் காட்டுகின்றது. தெளிவற்ற முறையில் பிளாக்ஸ்டோன் ஆராய்ந்துள்ள இயற்கைச் சட்டம் பற் றிய கொள்கையைக் கண்டிப்பது கடினமானதல்ல. அக்கொள்கையைப் பெந்தம் கண்டிப்பதற்கான காரணங்களே முக்கியமானவை. சூழ்வினைத் திறன் சம்பந்த மான விதிகளை மூடி மறைக்கும் போர்வையாக மட்டுமே இயற்கைச் சட்டம் இருக்கிறது; அது வெறும் சொற்ருெடரே தவிர வேறில்லை' என்று அவர் வாதிட்டார். சூழ்வினைத் திறன் விதிகளின்படியே மக்கள் தங்களின் வாழ்க்கை னர் என்பதையும் காட்டியிருப்பது. ஜெரேமி பெந்தம் சமூகச் சிந்தனைத் வைத்தே சட்டங்களைப் பற்றிய தீர்ப்புக்கள் அளிக்கப்படுதல் வேண்டும்.

[1] பெந்தம் : *A Fragment on Government*, எப். சி. மொண்டேகு பதிப்பித்தது (ஒக்ஸ்போட், 1891) பக். 93. 1776 இல் முதலாவது பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறோர் அர்த்தத்தில், ஹொப்ஸ் செய்ததைப்போன்று, பெந்தமும் இயற்கைச் சட்டத்தை ஏற்றுக்கொள்கின்றார். எல்லா இடங்களிலும் மனித இயல்பு ஒரே விதமான உளவியலமைப்பினுல் வெளிப்படுத்தப்படுகின்றது என்றும், எனவே வெவ்வேறு நாடுகளுடைய சட்டங்களுக்கும் இடம், காலம் என்பவற்றுக்குக் கட்டுப்படாத அளவுகோல் ஒன்றைப் பிரயோகிக்கலாம் என்றும் அவர் நம்பியமையே அதற்குக் காரணம். எல்லா நாடுகளிலும் சட்டங்கள் பெரிதளவு ஒரே மாதிரியானவையாக அமைந்திருத்தல் வேண்டும். அவை ஏற்படுத்தும் மகிழ்ச்சி விளைவுகளின் அடிப்படையில் எளிமையாகவும் தெளிவாகவும் இருக்குமாறு, இயற்கையான முறையிற் சட்டவியல் விதிகள் யாவற்றையும் கோவைப்படுத்தக் கூடியனவாகவிருப்பதே அதற்குக் காரணம். இவ்விதம் கோவைப்படுத்தப்பட்டால் மக்கள் யாவரும் அவைகளை இலகுவில் விளங்கிக் கொள்ளக் கூடிய நிலையில் இருப்பர்.

பெந்தம் நம்பியதுபோன்று பதிலாளின் மகிழ்ச்சிதான் எல்லா நடவடிக்கைகளினதும் இலட்சியமாகவிருந்தால், நடவடிக்கைகளின் போக்குக்கள் இந்த இலட்சியத்தை அடைய உதவுமா அல்லது அதனைக் கெடுத்துவிடுமா என்பதைப் பகுத்தறிவால் மதிப்பிட்டு, எல்லா மக்களுக்கும் சமமாகத் தெளிவுபடுத்த முடியும். ஒரு செயலின் மிகுமகிழ்ச்சிப் பண்பையும் அச்செயல் விளைவிக்கும் தீங்கையும் சேர்த்து வர்ணிப்பதற்காகப் பயன்பாடு என்ற பதத்தைப் பெந்தம் பயன்படுத்துகின்றார். மகிழ்ச்சியைக் கொடுக்க சில செயல்கள் தவறிவிடுவதைக் குறிப்பிடுவதற்காகவே பின்னைய கருத்தையும் அவர் கூறுகின்றார். ஆனல் இந்தக் கருத்து அதிகம் செல்வாக்கைப் பெறவில்லை. ‘ சட்டங்களின் நோக்கங்களுட் காணப்படும் குறிப்பிட்ட செயல்வகைகளைப் பொறுத்தவரையில், அவைகளின் பயன்பாட்டை அல்லது தீங்கை ஒரு மனிதனுக்குச் சுட்டிக் காட்டுவதுதான் அவன் தேடி அலையும் இயல்புகளை அவன் தெளிவாக் காணச் செய்வதற்கான ஒரேயொரு வழியாகும்; சுருங்கக் கூறின், அதுவே அவனுக்குத் திருப்தியைக் கொடுப்பதற்கான ஒரேயொரு வழியாகும் ’[1].

மகிழ்ச்சியை அடைய முயல்வதே மனிதனின் இலட்சியம் எனவும் மக்களின் மகிழ்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பதே அரசாங்கத்தின் இலட்சியம் எனவும் கூறும் கருத்துக்கள், பதினெட்டாம் நூற்றாண்டின் சமூகச் சிந்தனையாளர்களிடம் சாதாரணமாகக் காணப்பட்டன என்று கூறுவது உண்மை நிலையை எடுத்துரைப்பதாகவிருக்கும். மகிழ்ச்சிக்குரிய வழிகளை—செயல்களின் மிகுமகிழ்ச்சிப் பண்பை—அளவிடமுடியும், கணிக்கமுடியும், ஒப்பிடமுடியும், இலகுவில் விளக்கிக் காட்டமுடியும் என்ற கருத்தை ஏற்றதோடு, அதைப் பரப்புவதற்கு நடவடிக்கை எடுத்ததுமே இன்பவிருப்புக் கோட்பாட்டிற்குப் பெந்தம் ஆற்றிய முக்கியமான சேவையாகும். சட்டவியல் துறையிற் காணப்படும் விவாதத்திற்குரிய எல்லாப் பிரச்சினைகளையும் உண்மை நிலையின் அடிப்படையில் தீர்த்துவைப்பதற்குப் பயன்பாட்டுத் தத்துவம் உதவியது. ‘ வருங்கால உண்மை

[1] *Fragment on Government*, பக். 118–19.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவது எதிர்காலத்துத் தற்செயல் நிகழ்ச்சிகள் சிலவற்றின் நிகழ்தகவு '[1] என்று இதைப் புதுமையான வகையில் அவர் குறிப்பிடுகின்றார். எதிர்பார்க்கக்கூடிய மகிழ்ச்சி, துன்பம் ஆகியவைகளின் அடிப்படையில் எல்லாச் சட்டங்களின் விளைவுகளையும் கணித்துக்கொள்ளமுடியுமானால், அவ்வடிப்படைகளைப் பற்றித் தெரிந்து கொள்ள வழக்கறிஞர்களைக் கலந்தாலோசிக்கும் தேவை எவருக்கும் ஏற்படாது.

எல்லாச் செயல்களுக்கும் காரணம் காட்டப்படல் வேண்டுமென்று பெந்தம் கருதினர். அவரின் ஒழுக்கவியற் கொள்கை எவ்வளவுதான் குழப்பம் மிக்கதாக விருந்தாலும் எப்பொழுதும் மத அடிப்படையைக் கொண்டதாகவே இருந்தது. திருப்திப் படுத்தப்படவேண்டிய அவாக்களினுலேயே மனிதன் உந்தப்படுகின்றான் என்று ஹொப்சைப் போன்றே இவரும் கருதுகின்றார். உள்ளுணர்வால் தோன்றும் தார்மீக உணர்வு பற்றிய கொள்கை அல்லது உள்ளுணர்வால் தோன்றும் நியாய உணர்வு பற்றிய கொள்கை என்பதையும் மகிழ்ச்சியின் மதிப்பை மறுத்துரைக்கும் இலட்சிய முறைமையையும் (உதாரணம்—துறவு) நிராகரித்து விடும் தன்மையை இக்கருத்துக் கொண்டிருக்கின்றது. வாழ்க்கையின் வழிகாட்டியாக வெளிப்பாட்டைக் கொள்ள முடியாதென நிராகரித்து விட்டமை பெந்தமின் சிறப்பியல்பாகும். வெளிப்படுத்தப்பட்ட தார்மீகத் தத்துவங்கள் நடைமுறையிற் செயற்படுத்துவதற்கு மிகவும் சிக்கல் வாய்ந்தவையாக இருக்கின்றன என்று இதற்குக் காரணங் காட்டினர். எனினும், மக்கள் தாங்கள் அடையவிரும்பும் மகிழ்ச்சியை, சமூக வழிகாட்டலுக்குக் கீழ்ப்படியும் தமது தகுதி மூலம் பெற்றுக் கொள்ளமுடியும். சமூக வழிகாட்டலின் கீழ் கூர்மதிபடைத்த ஆட்சியாளர் சட்டத்தை நிர்வகிப்பதனால், மக்கள் தாமாக அடையமுடியாதவைகளை அவர்களுக்கு ஆட்சியாளர் பெற்றுக் கொடுக்கின்றனர்.

வரையறைசெய்யப்பட்ட முறைப்படி நடந்து கொள்ளவும் பொறுத்துக் கொள்ளவும் மக்கள் அவசியமான வகையிலே தூண்டப்படுவார்களானல், பயன்பாட்டுத் தத்துவத்தில் அடங்கியுள்ள இலகுவான கணிப்பு விதிகளுக்கு ஏற்ப, அரசாங்கத்தின் அரசியல் நடைமுறை இருக்கின்றதா இல்லையா என்பதைப் பொறுத்து சட்டத்தின்மூலம் தனியாரின் நோக்கங்களுக்கு உதவுவதையோ, அல்லது தனியாரின் நோக்கங்களைக் கெடுப்பதையோ அரசாங்கம் செய்யும். வெகுமதிகளையும் தண்டனைகளையும்—தண்டனைகளே முக்கியமானவை—கொடுக்கும் முறையொன்றை இயங்கச் செய்வதன்மூலம், மகிழ்ச்சியை அடைவதற்காக ஒவ்வொருவரும் முயற்சிகளை மேற்கொள்ளும்போது அயலவர்களின் மகிழ்ச்சியில் அனுவசியமாகத் தலையிடுவதைச் சட்டம் தடுப்பது மட்டுமல்லாமல்,—அரசனின்வனு இத்தகைய பணியையே செய்தல் வேண்டுமென்று ஹொப்ஸ் கருதினர்—அத்தகைய இறைவனு இல்லாத சந்தர்ப்பத்தில் மக்கள் அடைய முயலுவதிலும் பார்க்கக் கூடுதலான பொதுமகிழ்ச்சியை அடையுமாறு அது அவர்களைத் தூண்டவுஞ்செய்கிறது.

[1] *Fragment on Government*, பக். 226

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டம் பற்றிய பெந்தமின் கொள்கைக்குத் தன்முனைப்பாக அர்த்தம் கூறலாகாது. ஹொப்சின் அரசில் உள்ளதைப்போன்று சட்டம் மௌனமாக இருக்கும் விடயங்களிலே சொந்த விருப்பப்படி நடக்கும் உரிமையை மக்கள் பெற்றிருப்பதுடன், 'ஒரு பிரசைமீது பிரயோகிக்கப்படும் அரசியல் வலுவின் ஒவ்வொரு செயலுக்கும் பகிரங்கமாகக் காரணம் காட்டவும் அதற்கு ஆதரவு தேடவும் வேண்டிய உரிமையை அவன் கொண்டிருக்கின்றான்'[1] என்ற அர்த்தத்தில், பகுத்தறிவுச் சுதந்திரத்தையும் பெற்றிருக்கின்றனர். இந்தக் காரணங்களைக் காட்டி அவைபற்றி நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கத்திற்கு இருப்பதாகக் கூறப்படும் திறன், இக் காரணங்களைப் புரிந்துகொண்டு இவைகளின் செல்வாக்கிற்கு இணங்குதற்குப் பிரசை கொண்டுள்ள தகுதி ஆகியனபற்றி விளக்குவதே பயன்பாட்டு அரசியலுக்குப் பெந்தம் ஆற்றிய விசேட தொண்டாகும்.

இன்பங்களும் துன்பங்களும் எல்லா நடவடிக்கைகளினதும் இறுதிக் காரணங்களாக மட்டும் அமையாது, அரசாங்கத்தின் சாதனங்கள் என்ற வகையிலே செயல்திறன் மிக்க காரணங்களாகவும் அமைகின்றன. விரும்பத்தக்க வழியில் நடக்கும்படி குடிமக்களைத் தூண்டுவதற்கு உதவுவனவாகவும் அவை இருக்கின்றன. அவற்றுக்கிடையே இணக்கத்தை ஏற்படுத்த இயற்கை தவறிவிட்டது என்றும், எனவே அத்தகைய இணக்கத்தைச் செயற்கை முறையில் உருவாக்குவது ஆட்சியாளரின் பணியாகும் என்றும் ஹெல்வெற்றியஸ் தெரிவித்த வாதத்தையே பெந்தமும் பின்பற்றினர். 'மகிழ்ச்சியையும் துன்பந் தவிர்த்தலையும் சட்டமியற்றுநர் தமது இலட்சியமாகக் கொண்டிருப்பர்' என்றும் 'அவைதாம் அவர் உபயோகிக்க வேண்டிய சாதனங்கள்' என்றும் தமது 'ஒழுக்க நெறி, சட்டவாக்கம் ஆகியவற்றின் தத்துவங்கள்'[2] என்ற புத்தகத்தில் பெந்தம் விவரித்துள்ளார். மகிழ்ச்சியாயிருத்தல், துன்பத்தைத் தவிர்த்தல் ஆகியவை, இந்த இரண்டு அர்த்தங்களிலும் பெறுமதியையுடையவை என்பதைச் சட்டமியற்றுநர் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

இன்பம், துன்பம் ஆகியவைகட்கிடையேயுள்ள சார்புப் பெறுமதியை அல்லது அளவுகளை நிர்ணயிப்பவை எனத் தாம் கருதிய காரணங்களைப் பெந்தம் பட்டியலாகத் தயாரித்துக் கொடுத்தார். ஒவ்வோர் அலகும் 'தொகுதி' என அழைக்கப்பட்டது. எந்தச் செயலினதும் பின்விளைவுகளை ஊகிக்க மட்டுமே முடியுமாதலால் இக்கருதுகோள் தெளிவற்றதாக இருக்கின்றது. செறிவு, நிகழ்ச்சிக்காலம், கட்டாயத்தன்மை அல்லது கட்டாயமின்மை, அண்மை அல்லது தூரம், அரசிலிருந்து வேறுபட்ட செயல்களைப் பொறுத்தவரையில், ஒத்த உணர்வுகள் தொடர்ந்துசெல்லும் நேர்தகவு ஆகியவைகளையே பரிசோதனைகளாகப் பயன்படுத்துதல் வேண்டும். தார்மீக முடிவு செய்யப்படுவதற்கு முன்பு

[1] *Fragment on Government*, பக். 217

[2] *An Introduction to the Principles of Morals and Legislation*, பதிப்பித்தவர் W. Harrison (ஒக்ஸ்போட், 1948), பக். 151. 1780 இல் முதலாவது பிரசுரிக்கப்பட்டது ; 1789 வரையும் அது மீண்டும் பிரசுரிக்கப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கமாக—எப்பொழுதும் கட்டாயமாக இருக்கவேண்டுமென்பதல்ல—இடம் பெறும் மதிப்பீட்டு முறையாக இது இருக்கின்றது. அத்துடன், பாதிக்கப் படக்கூடியவர்களின் தொகையையும் அரசாங்கம் கவனத்திற்கெடுத்துக்கொள்ளு தல் வேண்டும். தமது சொந்த வாழ்க்கையில் பெந்தம் அத்தகைய கணிப்புக் களைச் செய்து பார்த்தார் என்றோ, மற்றவர்களிலும் பார்க்க அவர் அத்தகைய கணிப்பை மிகவும் நெருக்கமாகப் பின்பற்றி நடந்துகொண்டார் என்றோ கொள்வது உண்மையின்பாற்பட்டதாக அமையாது. எனினும், மக்கள் தமது மகிழ்ச்சியை அடைய முயல்வது மட்டுமல்லாமல், ஓரளவு கணிதவியல் முறை யிலே தாம் அனுபவிக்கும் இன்பதுன்பங்களை, அனுபவித்திருக்கக்கூடிய இன்ப துன்பங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்துக்கொண்டனர் என்பதே அவரின் வாத மாக இருந்தது. மகிழ்ச்சியை அடையும் முயற்சியிலே, சட்டங்களை அரசாங் கம் திறப்பட வகிப்பது அத்தியாவசியமானதும் முக்கியமானதுமான காரணி யாக அமைகிறது என்ற நம்பிக்கையை ஆதரிப்பதாக இந்த வாதம் அமைந் திருந்தது.

'தண்டனை கொடுப்பதன்மூலமும் வெகுமதி அளிப்பதன் மூலமும் சமூகத் தின் மகிழ்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பதே அரசாங்கத்தின் வேலை யாகும்.'[1] ஓர் அரசியல் நடவடிக்கையின் சமூக விளைவை அதனுடைய நல்ல விளைவுகளினதும் தீயவிளைவுகளினதும் கூட்டுத் தொகைகளை ஒப்பிட்டுப் பார்ப் பதாற் கணித்துக்கொள்ளுதல் வேண்டும். இத்தகைய விளைவுகள் முடிவற்றன வாக அமைதல்கூடும். எனவே, அந்த அரசியல் நடவடிக்கையால் ஏற்படும் இன்பதுன்பங்களைமட்டுமே—பொருளாதார விளைவுகளை மட்டுமே—சட்டத்தை ஆக்குபவர்கள் தங்களின் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளுதல் வேண்டும். குடி மக்களும் இத்தகைய மதிப்பீடுகளைச் செய்து கொள்ளக் கூடியவர்களாக இருப் பர் எனக் கொள்ளப்படுகின்றது. குற்றத்தின் விகிதாசாரப்படி அக்குற்றத்திற் குக் கொடுக்கப்படும் தண்டனை அமையப்பெறுதல் வேண்டும் என்ற கருத்தைப் பெக்காரியாவிலும் பார்க்க விரிவாக, ஆனல் தெளிவுக்குறைவாக, பெந்தம் ஆராய்ந்துள்ளபோதிலும், ஒரேமுடிவிற்குத்தான் வருகின்ருர். செய்ய உத்தே சிக்கப்பட்ட குற்றத்திலிருந்து கிடைக்கும் மகிழ்ச்சியிலும் பார்க்க அக்குற்றத் திற்காகக் கொடுக்கப்படும் தண்டனையிலிருந்து கிடைக்கக்கூடிய துன்பம் அதிக மாக இருப்பதுடன், அவற்றிற்கிடையிலிருக்கும் விகிதசமங்கள் குற்றத்தைச் செய்யக்கூடியவர்கட்குத் தெளிவாக அறிவுறுத்தப்படுதலும் வேண்டும். அத்து டன், தண்டனைகள் துன்பத்தைக் கொடுப்பவையாக இருக்கின்றமையினல், பொது மகிழ்ச்சியை அதிகரிக்கும் நோக்கத்திற்கேற்ப அவை மிகவும் குறைந் தவையாக இருத்தல் வேண்டும். சமூகத்தில் நன்னெறி வாழ்க்கை நடத்துபவர் கட்கு, வெகுமதியளிக்கும் விடயம் சட்டத்தின் புதிய கிளையாக வளர்ச்சியடை யும் என்று பெந்தம் எதிர்பார்த்தார். அக்கிளையை ஊதியந்தருதல் என்ற பெய ரால் வழங்கினர். இந்தக் கிளை பேணி வளர்க்கப்படவில்லை என்று அவர் குறிப் பிட்டார். ஆனல் அந்த நிலையை மாற்றுவதற்கு அவருமே எதையும் செய்ய வில்லை.

[1] *Principles*, பக். 189

ஹொப்சின் அரசருடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, பெந்தமின் சட்டமியற்றுநர் தமது கணிப்புக்களைச் செய்வதற்கு சமூகத்தின் ஓரளவு நன்மை பயக்கும் நடத்தையைத் தமக்கு ஆதரவாகக் கொள்ளக் கூடிய நிலையிலிருந்தார். பெரிதளவில் தன்னலத்தையே கருதுபவர்களாக விருக்கும் மக்கள் சிலவேளைகளில் அறம் செய்யும் ஆர்வத்தையுடையவர்களாகவும் இருக்கின்றனர். ஆசிரியரைப் போன்று இருந்து கொண்டு சட்டத்தை ஆக்குபவர்களும் தம் குடிமக்களின் நம்பிக்கைகளையும் அச்சங்களையும் வழிப்படுத்தல் வேண்டும். விரும்பத்தக்க ஒழுக்க நெறியில் அவர்களின் செயல்களை ஆற்றுப்படுத்தல் வேண்டும். தமது பிரெஞ்சு முன்னோடிகள் விரும்பியதும் ஹியூம் ஆதரித்ததுமான ஒழுக்க நெறிக்கும் அரசியலுக்குமிடையே ஐக்கியத்தை ஏற்படுத்தல் வேண்டும் என்ற கருத்தை பெந்தமும் வற்புறுத்தினர். பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சமூக இலட்சியங்களை அடைவதற்கு அரசியல் அரசாங்கம் விரும்பத்தக்க வழியாக இருக்கின்றது என்பதைக் கால இடச்சூழலின் அடிப்படையில் மட்டும் மறுத்துரைப்பது மிகவும் கடினமானதாகும். இந்தக் கருத்தொற்றுமை ஒழுக்க நெறியின் தரத்திற்கு உயர்த்தப்பட்டு, மகிழ்ச்சியை அடையும் முயற்சியானது அரசியற் கடமையாக—அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் மட்டுமே—மாற்றம்பெறுமானல், உண்மைகள் முன்பு போலவே இருக்கும்; ஆனல் அவற்றுக்குக் கொடுக்கப்படும் விளக்கம சிக்கல் மிகுந்ததாகக் காணப்படும்.

'எவருடைய அக்கறைகள் கருத்திற்கொள்ளப்படுகின்றனவோ அவர்களுக்கு அதிகபட்ச அளவு மகிழ்ச்சியை உண்டுபண்ணுவதற்காக மக்களின செயல்களை நெறிப்படுத்தும் கலை'[1] என்ற வரைவிலக்கணத்தை ஒழுக்கவியலுக்குக் கொடுப்பதற்குப் பெந்தம் தயங்கவில்லை. தனியாரைப் பொறுத்தவரையில் ஒழுக்கவியல் என்பது தன்னுட்சியை நடாத்தும் கலையாகும். ஏனை மக்களின் மகிழ்ச்சிக்காக இந்தக் கலை பிரயோகிக்கப்படுவதே அரசியல் அரசாங்கமும் நிர்வாகமும் ஆகும். கால இடச்சூழலின் பாற்பட்டதாகவோ அல்லது தார்மீகப் பெறுமதியையுடையதாகவோ கடப்பாடு இருந்தபோதிலும், அத்தகைய செயலை ஏற்று நடத்துதல் வேண்டும் என்று நாம் கொள்வது வாதத்திற்கு இடமளிப்பதாக இருக்கின்றது. தங்கள் குடிமக்களுடைய மகிழ்ச்சியை அரசாங்கங்கள் மேம்படச் செய்தல் வேண்டும் என்றும், அவ்வாறு அவைகளாற் செய்யமுடியும் என்றும் கொள்ளும் நம்பிக்கையை வெளியிட்டமையே பயன்பாட்டு அரசியலுக்குப் பெந்தம் செய்த விசேட பணியாகும். பெந்தமின் பலவகைப்பட்ட சிறப்பியல்புகளையுடைய இன்பக் கொள்கையின் அடிப்படையில் இந்த மகிழ்ச்சிக்குச் சிறப்பான முறையில் வரைவிலக்கணம் கொடுக்கப்பட்டது. தற்செயலான முறைமைகள் பற்றிய தனது அறிவிலிருந்து பயனடைந்து, இம்மையினது மிகுமகிழ்ச்சியின் அடிப்படையிலே தன்னுடைய விடுதலையை நாடும் மனிதனின் பகுத்தறிவுத் திறனில், ஹொப்சைப் போன்றே பெந்தமும் நம்பிக்கை வைத்தார். பெந்தமின் கருத்துக்களின் அடித்தளமாக இந்த நம்பிக்கை இயங்குகின்றது.

[1] *Principles*, பக். 411

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெந்தமின் அரசியல் தத்துவங்களிற் காணப்படும் குறைபாடு தார்மீகத் துறையைச் சேர்ந்ததாகவே இருக்கின்றது. 'மிகு மகிழ்ச்சி என்ற கட்டடத்தை நியாயம், சட்டம் என்ற கைகளைக்கொண்டு' அரசாங்கங்கள் கட்டுகின்றன என்ற கருத்தை வற்புறுத்துகின்றபோதும், வேறு எந்தவிதமாகவும் அத்தகைய கட்டடத்தைக் கட்டி எழுப்ப முடியாது என உறுதியாகச் சொல்கின்றபோதும் அவருடைய வாதம் ஹொப்சினுடைய வாதத்திலிருந்து சிறிதும் வேறுபடவில்லை. அந்தப் பணியைச் செய்வதற்குரிய இலகுவான, வசதியான தத்துவத்தைக் கூறியதன் மூலம் சம்பந்தப்பட்ட அரசியல் தத்துவத்தை அவர் பட்டைதீட்டி ஒளிரச் செய்துவிட்டார். இத்தகைய அறிவுடைய வகையில் ஆட்சியை நடத்தவேண்டுமென்ற தார்மீகக் கடமை ஆட்சியாளருக்கு இருப்பதாகக் கூறியதன் மூலம் ஹொப்சினுடைய முடிவை நிராகரித்துவிட்டு, அவர்கள் அறநெறிப்படி ஒழுகுவதாகக் கருதிக்கொண்டார். அவ்வாறு அவர் கருதியது அனுவசியமானது. ஒழுங்கான அரசாங்கத்தைப் பெறுவதற்கு மரணத்தைத் தவிர்ந்த மற்ற எந்த விலையையும் கொடுக்கலாம் என்ற முடிவிற்கு ஹொப்ஸ் வந்திருந்தார்.

பிரதிநிதித்துவ அரசாங்கத்தைச் சிபார்சு செய்தல் என்று பொருள்படும் ஆங்கிலேயருக்குரிய தனிப்பட்ட கருத்தின்படி, பயன்பாட்டுச் சிந்தனையோட்டத்தின் இறுதிக் கட்டம் சனநாயகப் பண்பைக் கொண்டிருப்பது தற்செயலாக ஏற்பட்ட நிகழ்ச்சியன்று. பெந்தமுடைய அறிவூட்டும் வல்லாட்சியை, அவருடைய கூட்டாளியான ஜேம்ஸ் மில், அதனுடைய சரித்திரத்திற்கு ஒவ்வாததும் நிறுவன அமைப்பைக் கொண்டிராததுமான பின்னணியிலிருந்து பிரித்தெடுத்து, ஆளப்படுபவர்களுக்குத் தங்களை ஆள்பவர்களைக் கட்டுப்படுத்தும் உரிமை இருக்காது போனாலும் ஆட்சிபுரிபவர்களைத் தெரிந்தெடுக்கும் உரிமையாவது கொடுக்கப்படவேண்டும் என்ற கருத்தாக மாற்றியமைத்தார். ஜேம்ஸ் மில்லின் மகனை ஜோன் ஸ்டுவேட் மில்லின் கருத்தின்படி, அரசியல் அமைப்பின் இலட்சியங்களும் அதை ஒழுங்குபடுத்தும் வழிவகைகளும் பெயாளவிலே பயன்பாட்டுத் தன்மையைப் பெற்றிருந்தன[1]. ஜோன் மில்லின் கருத்துக்களைப் பயன்பாடு என்ற தனித்த, இலகுவான தலைப்பின்கீழ் விவரிக்கவோ அல்லது வளர்ச்சி பெறும் சமூகத்தின் தேவைகளைக் கவனத்திற்கெடுக்காமல் தனித்தனிக் குடிமக்களின் திருப்திகளில் மட்டுமே அக்கறைகொண்டுள்ள வேற்றுமைப் படுத்தப் படாத மகிழ்ச்சிக் கட்டங்கள் என்று விவரிக்கவோ முடியாது.

பிரெஞ்சுப் புரட்சி ஏற்படுத்திய நடுக்கம், நீண்டகால யுத்தங்களின்போது ஏற்பட்ட சமூக மாற்றங்கள், வாட்டலூ வெற்றிக்குப் பின்பு பிரித்தானிய அரசாங்கங்கள் கையாண்ட அடக்குமுறை நடவடிக்கைகள் ஆகியவை யாவும் அன்றைய முக்கிய அரசியற் பிரச்சினையின் மீது பெந்தம், ஜேம்ஸ் மில்போன்ற சமூகச் சீர்திருத்தவாதிகளின் கவனத்தைத் திருப்பின. பெந்தமின் ஒழுக்கவியற் கருத்திற்

[1] பெந்தம் என்பாரின் கருத்துக்களை ஆதரித்து ஜே. எஸ். மில் 'பயன்பாட்டுக் கொள்கை (1861)' என்ற ஒரு கட்டுரை எழுதினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குள் புதையுண்டிருந்த அந்தப் பிரச்சினை, அரசியல் வலுவானது வல்லாட்சி முறையிற் பிரயோகிக்கப்படுவதை எவ்வாறு தடைசெய்வது என்பதேயாகும். இந்தப் பிரச்சினையை ஆராய்ந்த ஜேம்ஸ் மில்லின் 'அரசாங்கம் பற்றிய கட்டுரை' (Essay on Government) என்பது 'பிரித்தானிய கலைக்களஞ்சியத்திற்காக' 1820 ஆம் ஆண்டில் எழுதப்பட்டது. ஆட்சியாளர் வர்க்கம் தனது கடமைகளை மறந்து தனது சொந்த நலனுக்காக ஆட்சிபுரியும் ஆபத்தைத் தடுப்பதற்கு, பிரசைகளுக்கு வாக்குரிமை கொடுப்பதும், கல்வி மூலம் அரசியல் உணர்வைப் பரப்புவதுமே சிறந்த வழிகளாகவிருக்கும் என அவர் கருதினர்.

அரசாங்கம் தன் குடிமக்கள் ஒவ்வொருவரையும் மற்றவர்களின் மிகுமகிழ்ச்சியையும் முயற்சியிலே தலையிடாமற் செய்தல் என்ற ஹொப்சின் பணியையே அது இன்னும் மேற்கொண்டிருந்தது. ஆனல் இறுதி நடவடிக்கையாக அரசாங்கத்தின் மீது தார்மீகக் கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கும் உரிமையைப் பிரசைகள் கொண்டிருந்தனர். அதிகப்படியான மகிழ்ச்சியை எந்த வகையான நடவடிக்கைகளாற் பெறமுடியும் என்பதை உச்சத் தொகையான மக்கள் மட்டுமே அறிந்திருந்தனர்.

இந்தக் கோட்பாட்டை ஜோன் மில் மேலும் கண்டித்தார். வல்லாட்சி என்ற ஆபத்திற்குள் விழாமல் இருக்கும் திறன் பெரும்பான்மையினருக்கு இருப்பதாகக் கூறப்பட்டதையும் அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. தனி மனிதனின் மகிழ்ச்சியை இலகுவிற் கணிக்கமுடியாதெனவும், ஒருவர் பெறும் மகிழ்ச்சி வேருெருவர் பெறும் மகிழ்ச்சிக்குச் சமமாக இருக்கமாட்டாதெனவும், பொது நன்மை கிடைக்கப்பெற்ருல் மகிழ்ச்சி கிடைத்துவிடும் என்ற உத்தரவாதம் எதுவுமே கிடையாதெனவும் தம்முடைய "சுய சரிதத்தில்" (Autobiography) ஜோன் ஸ்டுவேட் மில் கூறுகின்ருர். சொந்த மகிழ்ச்சியை அடைய முயல்வதனுல் மட்டும் அதை அடைந்துவிட முடியாதென்றும், மக்களின் சொந்த நலனையிட்டு வேண்டுகோள் விடுவதனுல் மட்டும் அவர்களை அரசாங்க சேவையிற் சேர்த்துவிட முடியாதென்றும் கொள்ளும் இரட்டை நம்பிக்கைகள் ஹொப்சின் தனியாண்மையைச் சிக்கல்மிகுந்த, நுட்பமான அரசியற் கோட்பாடாக மாற்றியமைத்துவிட்டன. அத்துடன், விக்டோரியா மகாராணியாரின் ஆட்சிக் காலத்தின் நடுப் பகுதியில் இங்கிலாந்தில் வாழ்ந்தவரான மில், புதிய கைத்தொழிற் சகாப்தத்திற்குரிய விசேட பிரச்சினைகளையும் அறிவு வளர்ச்சி, வலுவின் ஆக்கம் ஆகியவைகளின் விளைவாக ஏற்பட்ட மிகப்பெரிய சமூக மாற்றங்களையும் நன்ருக அறிந்திருந்தார்.

அடுத்த அத்தியாயத்தில் ஆராயப்படவிருக்கும் முன்னேற்றம் என்ற தலைப் பின்கீழ் ஜே. எஸ். மில்லின் கருத்துக்களை ஆராய்வதே சாலச்சிறந்தது. இந்த வகைச் சிந்தனையோட்டத்தின் பிரதிநிதியாக அவர் காணப்படுகின்ருர். ஆனல், இந்த வகைச் சிந்தனையோட்டத்தின் ஆரம்பத்தை மில் வாழ்ந்த காலத்திற்கும் ஒரு நூற்ருண்டிற்கு முன்பே காணமுடிகின்றது. அதனுடைய செல்வாக்கை மில்லின் காலத்திற்குப் பின்பும் காணமுடிகின்றது. பழங்காலத்தின் சிந்தனைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்கிலிருந்து தாம் விலகிச் செல்வதை மில் உணர்ந்தார். எனவேதான் 'சுயசரிதத்தில்' ஒளிவு மறைவின்றி இவ்வாறு கூறுகின்றார் அவர்: 'நான் கைவிட்ட அரசியல் தத்துவத்திற்குப் பதிலாக எந்த அரசியல் தத்துவ அமைப்பைப் பிரதியீடு செய்திருக்கின்றீர் என்று என்னைக் கேட்டால் இந்த விடையைத்தான் நான் கொடுப்பேன்; அதாவது, எந்த அமைப்பையும் நான் பிரதியீடாகக் கொடுக்கவில்லை. நான் முந்தி அறிந்திருந்த யாவற்றிலும் பார்க்க மிகவும் சிக்கல் வாய்ந்ததாகவும் பல கிளைகளைக் கொண்டதாகவும் இருப்பதொன்றே உண்மையான அமைப்பாகும் என்ற நம்பிக்கையையும், சில மாதிரி நிறுவனங்களைக் கொடுப்பதாக இராமல், எந்தக் கொடுக்கப்பட்ட சூழ்நிலைக்கும் ஏற்ற நிறுவனங்களை உய்த்தறிந்து கொள்ளக் கூடிய தத்துவங்களைக் கொடுப்பதே அந்த அமைப்பின் பணியாகும் என்ற கருத்தையுமே நான் பிரதியீடாகக் கொடுத்துள்ளேன்'[1].

[1] 5 ஆம் பதிப்பு (இலண்டன் 1875), பக். 161

# ஐந்தாம் அத்தியாயம்

## முன்னேற்றம்

முன்னேற்றக் கோட்பாட்டை "மேற்குலக நாகரிகத்தை உயிர்ப்பிப்பதும், கட்டுப்படுத்துவதுமான கருத்து" என்றும், மனித இனத்தின் உலகியல் முன்னேற்றத்தை "சமூக நோக்கங்கள், கொள்கைகள் ஆகியவைகளை வழக்கமாக உட்படுத்துதற்குப் பயன்படுத்தப்படும் பொதுப் பரிசோதனை' என்றும் ஒரு சந்ததியினரின் காலத்திற்கு முன்பே ஜே. பி. பியூரி வர்ணித்தார். 'கட்டுப்படுத்தும் இந்தக் கருத்துடன் இணங்கத்தவறும் சமூக அல்லது பொருளாதாரக் கொள்கை அல்லது வேலைத்திட்டம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்க முடியாது என்ற உணர்வு பரவியிருக்கின்றது"[1] என்று 1920 ஆம் ஆண்டிலேயே அவர் வற்புறுத்திக் கூறினர். நிகழ் காலத்தில் இடம் பெற்ற பெருங்கேடு காரணமாகவும், ஆபத்துக்கள் சூழ்ந்த வருங்காலநிலை காரணமாகவும் இருபதாம் நூற்றுண்டின் மத்தியபகுதியில் இந்தச் சிந்தனையோட்டம் தனது மதிப்பைப் பெரிதளவில் இழந்துவிட்டது என்பதை நாம் அறிவோம். பெரிதளவு செல்வாக்குப் பெற்றிருந்த இந்தக் கோட்பாடு இரு நூற்றுண்டுகட்கு முன்பு முக்கியமாகப் பிரெஞ்சுச் சிந்தனையாளர்களால் ஆதரிக்கப்பட்ட அவாவாகவே—சிறுபான்மையோரின் சீர்திருத்தக் கோட்பாடாகவே—இருந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும். முன்னேற்றச் சிந்தனையாளர்களின் கருத்தோட்டத்தை, 1764 ஆம் ஆண்டிலே தாம் எழுதிய ஒரு வசனத்தால் வோல்டயர் சுட்டிக் காட்டினர். 'என்றே ஒரு நாள் மெய்யியலறிஞர்கள் முதலாவது இடத்தைப் பிடித்துக் கொள்ளத்தான் போகிருர்கள்; நியாயத்தின் ஆட்சிக்கு ஆயத்தம் செய்யப்படுகின்றது'[2] என்பதுவே அவ்வாசகமாகும்.

இதற்கு முந்திய இரண்டு அத்தியாயங்களிலும் விவரிக்கப்பட்டுள்ள பகுத்தறிவுடைய சமூக வகைகளை நியாயத்தின் ஆட்சி எவ்வாறு நிறைவுபெறச் செய்கின்றது என்பதை வெவ்வேறு அர்த்தங்களில் விளங்கிக்கொள்ளலாம். வல்லாட்சி அரசாங்கங்கட்கு எதிராக மனிதனின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு முக்கியத்துவமளிக்கப்படுகின்றதா அல்லது பகுத்தறிவுக்கேற்ற முறையிலே சட்ட அமைப்பு முறையைச் சீர்திருத்தி அதிக தொகை மக்களின் உச்ச மகிழ்ச்சியைப் பெறுவதற்கு முக்கியத்துவமளிக்கப்படுகின்றதா என்பனவே அந்த அர்த்தங்களாகும். முன்னேற்றக் கோட்பாட்டை ஆதரிப்பவர்களும் இத்தகைய நோக்கங்களை வெவ்வேறு காலங்களிலே தம்முடைய நோக்கங்களுட் சேர்த்துக்கொண்டனர். ஆனல் மகிழ்ச்சியே சமூகத்தின் இலட்சிய முடிவாக இருக்க வேண்டும் என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்கின்ற போதிலும், தொகுதிகள், இனம் ஆகியவற்றின் ஊழிற்குத் தனிமனிதரின் ஊழிலும் பார்க்க அதிக முக்கியத்துவத்

[1] J. B. Bury : *The Idea of Progress* (London 1920), Preface, pp. vii–viii

[2] தி. அலம்பேட் என்பவருக்கு எழுதிய கடிதத்திலிருந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைக் கொடுத்தமை, தார்மீக நோக்கங்களில் அக்கறை கொண்டிருந்த அதே நேரத்தில் அவை உள்ளுணர்வு மூலமோ வெளிப்பாட்டாலோ ஒரேயடியாக வெளிப்பட்டுவிடுகின்றன என்று கொள்வதற்குப் பதிலாகப் படிப்படியாக, ஆனல் முன்னேற்றமான முறையிலே சமூகப் பெறுமதிகள் பற்றிய அறிவு உருவாகுகின்றது என்று கொண்டமை ஆகியவையே, முன்னேற்றச் சமூகச் சிந்தனையை மற்றவைகளிலிருந்து வேறுபடுத்தி ஆராயவேண்டும் என்பதற்குக் காரணமாக அமைந்தன.

சமூகச் சட்டங்கள் என்று குறிப்பிடப்படுவன சரித்திர வளர்ச்சியுடன் சேர்ந்து வளர்ந்து வருவனவும், ஓர் ஒழுங்கான முறையிற் கண்டுபிடிக்கப்படுவனவுமாகும் என்று வற்புறுத்திக் கூறப்பட்டிருக்கின்றமையினுல், சமூகச் சிந்தனையின் இந்தக் கோலத்தை மற்றவைகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்காக முன்னேற்றம் என்ற பதத்தைப் பயன்படுத்துவது நியாயமானதே. மற்ற அம்சங்களில் இக்கொள்கையானது ஹொப்சைப் போன்று மிகுமகிழ்ச்சியில் அக்கறை காட்டுவதாகவும், லொக்கைப்போன்று ஒழுக்க நெறிகளுக்கு அரசாங்கங்கள் மதிப்பளிக்க வேண்டும் என்று கூறுவதாகவும் அமைந்தது. ஆனல் என்றும் தொடர்ந்திருக்கக்கூடிய அரசியல் தொடர்பின் கட்டமைப்பைப் பகுத்தாராய்ந்து விளக்கம் கூறும் முறையை இந்தக் கொள்கை பின்பற்றவில்லை. எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய மாற்றங்களை, அம்மாற்றங்கள் மனிதனுக்கு அல்லது மனித இனத்திற்கு முன்பிலும்பார்க்க அதிக நன்மைகளை நல்கச் செய்வதற்காக, கிட்டத்தட்டச் சரிநுட்பமாகக் கணித்துக் கொள்வதற்கு வசதியளிக்கும் சரித்திரச் சம்பவங்களின் கோலங்களைக் கண்டுபிடித்து அவைகட்கு அர்த்தம் கண்டு கொள்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட முயற்சி அல்லது முயற்சிகளின் தொடர் என்ற கருதுகோள்களினடியாகக் குறிப்பிடலாம். இந்த முயற்சிகள் சில எடுகோள்களை அடிப்படையாக வைத்தே மேற்கொள்ளப்பட்டன. அதிகமாக இந்த எடுகோள்கள் 'சிந்தனையாளரின் நம்பிக்கைகளிலிருந்து பிரித்து உணர முடியாதவையாகவே இருக்கின்றன. மத்திய காலத்தை அடுத்து வந்து காலத்திலே கிறித்துவ சமூகக் கொள்கைக்கு மாருக மதச் சார்பற்ற விளக்கத்தை அளிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட மற்ருெரு முயற்சி இதுவாகும் என்பதை இவற்றிலிருந்து கண்டுகொள்ள முடிகின்றது.

பழக்க வழக்கங்கள், தாபித்த நிறுவனங்கள் ஆகியவற்றிற்குப் பேக் அளித்த ஆதரவுடன் ஒப்பிட்டுப்பார்க்கும்போது, முன்னேரின் பலத்திலே தங்கியிருக்கும் தலைமுறைகள் ஒவ்வொன்றும் ஒன்றையொன்று திரளாகப் பின்பற்றுகின்றனவேயல்லாமல் திரும்பத்திரும்பப் பின்பற்றுவது கிடையாது என்று முன்னேற்றக் கொள்கையாளர் வற்புறுத்தினர். இந்த நம்பிக்கையைப் பதினெட்டாம் நூற்றுண்டின் மத்திய பகுதியில் வாழ்ந்த பிரெஞ்சுச் சீர்திருத்த வாதியும் இராசதந்திரியுமான டர்கோட் ஏற்கனவே எடுத்துரைத்திருந்தார். மனிதனுடைய வளர்ச்சியின் வெவ்வேறு கட்டங்களையும் மத சம்பந்தமானது, மறை பொருளாராய்ச்சி சம்பந்தமானது, விஞ்ஞானம் சம்பந்தமானது என்று அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுருக்கிக் கூறினர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிற் கொம்ரேயும் இதே கருத்தை வற்புறுத்தினர். அறிவுத் துறையில் மனிதன் அடைந்து வரும் அபரிமிதமான வளர்ச்சியின் அடிப்படையிலே இந்த வேறுபாடுகள் கற்பிக்கப் பட்டன.

சமூக மாற்றம் பற்றிய இந்தக் கொள்கையைப் பரிணமவளர்ச்சிக் கொள்கை என இந்தக் கட்டத்தில் அழைப்பது சற்று அவசரப்பட்டுவிடுவதாக இருக்கும். ஆனல் சரித்திரத்தின் அடுத்தடுத்த கட்டங்களினூடாக மனித சமூகம் எந்த வகையில் வளர்ச்சிபெற்றுவந்தது என்பதை அறிவியலுக்கேற்ற முறையில் விவரிப்பதையே இந்தக் கொள்கையாளர் தமது பணியாகக் கொண்டனர். தெய்வத்தாலான சரித்திரம் பற்றிய கிறித்துவக் கருத்தினல், முன்னேற்றம் பற்றிய கோட்பாடு ஓரளவு ஊக்குவிக்கப் பெற்றது; சமகாலச் சரித்திரத்தின் நடைமுறைகளையும் அரசியலமைப்புக்களையும் திருத்தவேண்டும் அல்லது மாற்றியமைக்கவேண்டும் என்ற தார்மீக ஆர்வத்தை, புரட்சிகரமான சீர்திருத்தவாதிகளான ரூசோ, மாக்ஸ் போன்றவர்களுடன் அக்கோட்பாடு பகிர்ந்துகொள்கின்றது. பின்மரபின் இயல்பு என்ற முறையிற்றான் அது நிறைவைப் பெறவிரும்புகின்றது. அத்துடன், ஏற்படவிருக்கும் சமூகப் புரட்சி பகுத்தறிவின்பாற்பட்ட விருப்பத்தினல் உருவாக்கப்பட்டதாக இருக்காது; அதற்குப் பதிலாக அறிவொளியைப் பெற்ற நுண்புலத்தின் துணைவிளைவாக இருக்கும்.

அடுத்தடுத்து இடம்பெறும் வெறும் சம்பவங்கள் என்று கொள்வதற்குப் பதிலாகச் சரித்திர சம்பவங்களில் ஒரு கோலத்தையும் அர்த்தத்தையும் நோக்கத்தையும் காண முடியும் என்ற கருத்து கிறித்துவச் சிந்தனையோட்டத்திற் காணப்படுகின்றமையினல், ஐரோப்பியர்கட்கு மிகவும் பரிச்சயமானதாகவிருக்கின்றது. சரித்திரத்தின் தத்துவம் என வோல்டயர் அழைத்ததை அகுஸ்தீன் ஏற்கனவே எமக்குக் கொடுத்துவிட்டார். ஆனல் நடைமுறையில் நிறுவப்பட்ட ஒழுங்கானது தெய்வத்தால் ஆணையிடப்பட்டதென்றும் கண்டனத்திற்கு அப்பாற்பட்டதென்றும், எனவே அதனைக் கீழ்ப்படிவாக ஏற்றுக்கொள்வதற்கோ, அல்லது மறுதலைக்கிறித்துவ வட்டாரங்களிலே வீடுபேற்றைப் பெறுவதற்கான அளவுகருவிகளுள் உலக வாழ்விற் பெறும் வெற்றியும் ஒன்ருக இருப்பதாக நம்புவதற்கோ இத்தத்துவம் இடமளித்தது. சமூகத் தொகுதிகளுட் சில, மனச்சாட்சியைப் பற்றிக் கவலைப்படாமல் மற்றத் தொகுதிகளின் சூழ்நிலைகளையும் கடினங்களையும்பற்றிச் சிந்திக்காது இருப்பதற்கோ தன்னலத்துடன் நடப்பதற்கோ இந்த இருபோக்குக்களும் இடமளித்தன. எனினும், பதினெட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த சரித்திராசிரியர்கள்—அவர்களுட் பெரும்பாலோர் உரோமாபுரிப் பேரரசிற்கு ஏற்பட்ட துக்ககரமான முடிவைப் பற்றிச் சிந்தித்தார்கள்—வருங்காலச் சந்ததியாரின் வாழ்க்கையை ஈடேற்ற உதவும் தார்மீகப் படிப்பினைகளைப் பெறுவதற்குத் தங்களின் சரித்திர ஆராய்ச்சிகளைப் பயன்படுத்தினர். நாம் முன்பு படித்ததைப்போன்று, சூழ்நிலைக்கேற்பச் சமூகம் தன்னை நல்லமுறையிற் சரிப்படுத்திக்கொள்வது பற்றிய நிரந்தரமான சிறப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பியல்புகளை மொன்டஸ்கியூ விரித்துரைத்தார். மனிதனின் தோல்வியையும் கடுந்துயரையும் காட்டுமுகமாகப் பகுத்தறிவின்பாற்பட்ட சமூகத்தை உருவாக்கவேண்டிய அவசியத்தை வற்புறுத்துவதற்கு மாருகச் சம்பவங்களின் கோவையை வோல்டயர் எடுத்துக்காட்டினுர். ஆனல் எமக்குத் தெரியவந்துள்ள முன்னேற்றச் சரித்திர அளவாய்வை, இருபத்தைந்து வயது வாலிபராக இருந்தபோதே பிரெஞ்சுச் சீர்திருத்தவாதியான டர்கோட் 1750 ஆம் ஆண்டில் எமக்குக் கொடுத்துதவினுர்.

கடந்த காலத்திற் பல தவறுகள் இழைக்கப்பட்டுவிட்டன என்ற வோல்டயரின் கருத்தை டர்கோட் ஏற்றுக்கொண்டார். ஆனல் முன்னேற்றப்பாதையிற் செல்லும்போது அத்தகைய தவறுகள் நேரிடவே செய்யும் என அவர் வற்புறுத்தினுர். தார்மீக முன்னேற்றம் என்ற தாளம் போடப்படும் போது அடிக்கடி அத்தாளம் தவறவே செய்யும். இந்த முன்னேற்றம் ஏற்படுவதற்கு உதவும் தற்காலிக அமைப்பின் பொதுவிதிகளைக் கண்டுபிடிப்பதே சரித்திரத்தை ஆராய்ந்து படிப்பதன் நோக்கமாகும். பொதுவிதிகள் எவையேனும் இருந்தால், பொதுவாக அவைகளை ஆரம்பத்திலேயே பிரயோகிக்க முடியும். மனித இனத்தின் வருங்காலத்தைப் பற்றி எதிர்வு கூறும் போக்கையும் சரித்திரத்தின் மரபுமுறையை ஆராயும் போக்கையும் டர்கோட்டும் மற்றும் பல எழுத்தாளர்களும் கொண்டிருந்தனர். சரித்திர சம்பந்தமற்ற எழுத்தாளர்களிடம் காணமுடிகின்ற மனிதன், மனித இயல்பு பற்றிய கருத்துக்களைப் போன்ற கருத்துக்களையே இந்தக் கருதுகோளும் உள்ளடக்கியிருக்கின்றது. ஆனல், மனித இனத்தின் நற்பேறுகள் மாற்றமடைவதுடன் அபிவிருத்தியடைந்து கொண்டும் செல்கின்றன என்று முன்னேற்றம் பற்றிய கருத்துக் கூறுகின்றது. மனித இனத்தின் நற்பேற்றில் தனிமனிதர் தங்கியிருக்கின்றனர்—தனிமனிதர் முக்கியத்துவமற்றவர்கள் என்றும் சில சமயங்களிற் கருதப்பட்டது—என்ற கருத்தும் இக்கருதுகோளுடன் சம்பந்தப்பட்டது. இந்த உலகில் மனித இனத்திற்கு ஏற்படும் கதியைப் பற்றியே முன்னேற்றச் சிந்தனையாளர்கள் அக்கறை காட்டினர். இந்த உலகிலே பிற்சந்ததியார் அடையும் சாதனைகளுக்கு மாபுவழி அக்கறைதான் காரணம் என்றும், திருச்சபையின் வெற்றி மறு உலகைச் சார்ந்ததே என்றும் வற்புறுத்தினர். 'கலைக் களஞ்சியத்தைப்' பிற் சந்ததியினருக்குச் சமர்ப்பணம் செய்தார் டிடரோ. 'என்றுமே இறவாத மனித இனம்' என்று அதில் அவர்களை அவர் விவரித்துள்ளார்.

மனித சமூகத்தின் அபிவிருத்திக் கோலத்தை விளங்கிக் கொள்ளும் சந்தர்ப்பங்கள் பற்றிய இந்தப் புதிய நம்பிக்கைக்கு, இயற்கை விஞ்ஞானங்களின் அதிகரித்துவரும் செல்வாக்கும், பதினெட்டாம் நூற்றுண்டின் மத்திய பகுதியிலே தமது பெறுமதியை நிரூபித்துக் காட்டிவிட்ட அனுபவ நோக்கல் முறைகளைச் சமூகத்திற்குப் பிரயோகித்தால் அவை நம்பிக்கை வைக்கத் தகுந்த உண்மைகளை வெளிக்காட்டும் என்ற திடநம்பிக்கையும் ஆதாரவாக அமைந்தன. முன்னேற்றத்தில் நம்பிக்கைவைத்த பிரெஞ்சுச் சிந்தனையாளர்களில் அதிகம் புகழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றவரான கொண்டோசெ என்பார், 'மனிதன் தன்னைத்தானே நோக்குவதி லிருந்து ஒழுக்க நெறியையும் அகப்பொருளையும், அதனுடன் சமூகத்தை நோக் குவதிலிருந்து அரசாங்கங்கள், சட்டங்கள் என்பன பற்றிய சாத்திரங்களையும்'[1] தெளிவாகக் காண ஆரம்பிப்பான் என்பதை தி. அலம்பேட் எவ்வாறு நம் பினுர் எனக் கூறுகின்ருர். இந்த உண்மைகள் இயற்கையாகவே தெரியவருமே யல்லாது தெய்வத்தால் வெளிப்படுத்தப்படமாட்டா. இவ்வாறு சேகரிக்கப்படும் தகவல்கள் படிப்படியாக நன்மை பயப்பனவாக இருக்கும். சீர்திருத்தங்கள் செய்யப்படுவது அறிவொளி பரவுவதிலே தங்கியிருக்க, அதே நேரத்தில் நிகழ் கால அரசியற்றுறையிலே காணப்படும் குறைபாடுகளும் தவறுகளும் அறியா மையின் விளைவுகளாக இருக்கின்றன எனக் கொள்ளுதல் வேண்டும்.

சமூகம் இயற்கையானது என்ற கிரேக்க கொள்கைக்கும் சரித்திரம் திடீர் நிகழ்ச்சிகளாலானது என்ற கிறித்துவ நம்பிக்கைக்குமிடையே ஏற்பட்ட இணக்கம் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததும் சிந்தையைக் கவருவதுமான விடயமாகும். இந்த இணக்கம் பாரதூரமான இரண்டு சிக்கல்களுக்கு உடனடி யாக இடமளித்தது. அந்த இரு சிக்கல்களும், இயற்கையானது என்ற பதப் பிர யோகத்துடன் மிக நெருக்கமாகத் தொடர்புடையனவாகும். அச்சொல் அகிலத் துக்குமான நியமங்களுடன் அல்லது கருத்தியலான தத்துவங்களுடன் அல் லது கற்பனையில் எழுந்த அரசியற் சார்பற்ற சமூக அரசுகளுடன் ஒத்திருக் கின்றதா இல்லையா என்பதைக் கவனத்திற்கெடுக்காமல், நடந்த சம்பவங்களை அல்லது நடைபெற்றதாகக் கருதப்பட்ட சம்பவங்களை வர்ணிப்பதற்குப் பிர யோகிக்கப்பட்டதென்பது அந்தச் சிக்கல்களில் முதலாவதாகும். இந்த அர்த் தத்தில், உண்மையில் நடைபெற்ற சம்பவங்கள் யாவும்—வழக்கமாக அவை நல்லவை என்றோ தீயவை என்றோ கருதப்பட்டாலும்—இயற்கையானவை எனக் கொள்ளப்பட்டது என்று கூறிய அறிவுள்ள அவதானிகள் சிலர் குறிப் பிட்டனர். இரண்டாவதாக, பௌதிக விஞ்ஞானங்கள் பின்பற்றிய முறைகளைக் கைக்கொண்டு சமூக நிகழ்ச்சிகளை நோக்கும் போக்கு, சமூக நடத்தைகளில் ஒழுங்கின்மை இருப்பதையும் சமூக நிகழ்ச்சிகள் திரும்பத்திரும்ப நடைபெறு வதையும் கண்டுபிடிப்பதற்குச் சரித்திராசிரியர்களுக்கு ஊக்கமளித்தது. ஆனல் அவர்கள் கண்டுபிடிக்கும் விதிகள், அவை விதிகளாகவிருந்தால், மனிதனுக்கு நன்மைபயப்பனவாக இருக்குமென்றோ அல்லது தார்மீக முறையில் ஏற்றுக் கொள்ளக்கூடியனவாக இருக்குமென்றோ எந்தவிதமான உத்தரவாதமும் அளிக் கப்படவில்லை. இயற்கை எனுஞ் சொல் கடவுள் என்ற அர்த்தத்தைக் கொடுக் கும் சொல்லாகவும், அதனுடைய சட்டங்கள் நல்லவையாக இருக்கும் என்ற அடிப்படைக் கருத்துடைய சொல்லாகவும் பயன்படுத்தப்பட்டவரையும், அதா வது பதினெட்டாம் நூற்றுண்டு முழுவதும், இந்த முரண்பாடுகள் ஓரளவிற்கு மறைக்கப்பட்டிருந்தன. ஆனல், பத்தொன்பதாம் நூற்றுண்டில் உயிரியல், உள வியல் விஞ்ஞானங்கள் பெருவளர்ச்சி அடைந்ததன் விளைவாக இந்த எடுகோள் கள் சந்தேகத்திற்குரியவையாயின.

[1] தி. அலம்பேட்டின் மறைவு குறித்து, கொண்டோசெ கூறிய புகழுரையிலிருந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக மாற்றத்தின் இயற்கைக் காரணங்கள் ஆராயப்படக்கூடும் என்பதை பதினைரும் நூற்றுண்டிலேயே போடின் அவதானித்தார். மாற்றத்திற்குக் கொடுக்கக்கூடிய மூன்று விளக்கங்களிலே தெய்வத்தின் நல்லாற்றலினது அறியமுடியாத் தன்மைபற்றிய விளக்கத்தையும் மனித முடிவுகளின் நிச்சயமற்ற தன்மை பற்றிய விளக்கத்தையும் இயற்கை பற்றிய விளக்கம் கொண்டிருக்கவில்லை என்பதை அவர் சுட்டிக் காட்டினர். இரு நூற்றுண்டுகளுக்குப் பின்னர் இவ்வாறே மொன்டஸ்கியூவும் நிகழ்ச்சிகளின் வளர்ச்சிக் கோலத்திற்குத் தற்செயல் நிகழ்ச்சி என்றோ நற்காலம் என்றோ விளக்கம் கொடுப்பதை நிராகரித்துவிட்டார். ஆனல், பதினெட்டாம் நூற்றுண்டிலிருந்த அவதானிகளைப் போன்று, தார்மீக ஒழுங்குகளையும் பௌதிகவியல் ஒழுங்குகளையும் இணைப்பதற்கு அவர் பெருமுயற்சி எடுத்துக்கொண்டார். அச்சமயத்தில் இதுவே பிரச்சினையின் புரியாத பகுதியாக விருந்தது. தங்கள் காலத்தில் நிலவிய சமூகக் குறைபாடுகளைச் சீர்திருத்தவாதிகள்—குறிப்பாகப் பிரான்சைச் சேர்ந்த சீர்திருத்தவாதிகள்—நன்முக உணர்ந்திருந்தனர். அந்த நூற்றுண்டின் முதல் ஐம்பது ஆண்டுகளிற் செல்வாக்குப் பெற்றிருந்த லெய்பினிசியரின் நன்னம்பிக்கைக் கோட்பாட்டை மீறி அவர்கள் வளர்ச்சிபெற்று விட்டதோடு, வருங்காலத்தில் சீர்திருத்தமுடியும் என்ற நம்பிக்கையினுல் அதற்கு மாற்றீடும் செய்தனர். இயற்கை ஒழுங்கு சீரான தன்மையை உடையது என்றும், சமூகம் அந்த ஒழுங்கின் ஓர் அங்கமாகவே இருக்கின்றது என்றும் கூறும் அவர்களின் நம்பிக்கையே இவ்வாறு மாற்றீடு செய்வதற்குக் காலாக அமைந்தது. அறிவு வளரவளர இயற்கை ஒழுங்கிற்கும் அதன் அங்கமான சமூகத்திற்குமிடையே அதிக இணக்கம் ஏற்படும் எனவும் அவர்கள் நம்பினர். நோக்கப்பட்ட ஒழுங்கும் நல்லதாகவே இருக்கின்றது என்ற எண்ணத்திலேயே இந்த நம்பிக்கை தங்கியிருக்கின்றது. வலிந்து பெற்ற இந்த இணக்கம் என்றுமே இறுக்கமானதாக இருந்திலது. பிற்சந்ததியினர் அனுபவிக்கவிருந்த நற்காலம் பற்றித் திடநம்பிக்கை வைத்திருந்த டிடரோ போன்றோரும் அறிவானது இத்தகைய இணக்கத்தை ஏற்படுத்துமா என்பதைச் சந்தேகித்த வண்ணமிருந்தனர். ஹொல்பாக்கைப்போன்று பிடிவாதமான நாத்திகர்களாக இருந்தவர்களுமே காரணங்கள், வினைவுகள் ஆகியவைகளின் அமைப்பாக இயற்கை இருந்தால், அறிவு வளர்ச்சியானது நடைமுறையிலே தேவைகளுக்கு ஏற்ற முறையிலே தன்னைச் சரிப்படுத்திக்கொள்ளும் வழக்கத்தை ஏற்படுத்தும் என்று வாதித்தனர். சூழ்நிலைகளுக்கு ஏற்ற முறையிற் சிறப்பாகச் சரிப்படுத்திக்கொள்வதே முன்னேற்றத்தின் அர்த்தமாகும் என்ற கருத்து, அந்தக் காலத்திற் செல்வாக்குப் பெறவில்லை. கடினமான முறையிற் சிந்திப்பவர்கள் என்றுமே அதிகச் செல்வாக்குப் பெறமாட்டார். உண்மையில் நடப்பதற்கும் தார்மீக அர்த்தத்தில் நடந்திருக்க வேண்டியதற்குமிடையேயுள்ள இணக்கமின்மை, சமூக மாற்றத்தின் விஞ்ஞானரீதியான நோக்கலின் பின்தொடர்பாக இருக்கின்றது என்பது அடுத்த நூற்றுண்டிற்றுன் வெளிப்படையாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த முடிவு செய்யப்படும்போது இலட்சியத்திற்கும் நடைமுறைக்குமிடையே யுள்ள இடைவெளிபற்றிய பாரம்பரிய விளக்கங்கள் யாவும் கவனத்திற்கெடுத்துக் கொள்ளப்படவில்லை. பகுத்தறிவின்பாற்பட்ட உள்நோக்கைக் கொண்டிராத மக்களுக்காக உறுதியான அரசியல் கட்டமைப்பை உருவாக்கிக் கொடுப்பதற்கு போதிய அளவான உள்நோக்கைச் சிறுபாலான அல்லது பெரும்பாலான மக்கள் கொண்டிருக்கின்றனர் என்று கிரேக்கர்களும் தற்கால இயற்கைச் சட்டவறிஞர்களும் கருதினர். கிறித்துவர்கள், பாபத்தின் பெருகுந்தன்மை என்ற கருதுகோளைப் பயன்படுத்தி, தாங்கள் என்ன செய்யவேண்டும் என்பதை அறிந்திருந்தும் அவ்வாறு செய்யத் தவறும் மக்கள் எவ்வாறு சரியான முறையிலே தண்டிக்கப்படுவர் என்பதை விளக்குவர். மனிதனும் நல்லதல்லாத சூழ்நிலையும் தற்செயலாக நேருக்குநேர் எதிர்த்து நிற்கும்போது, இடர்ப்பாடும் இணக்கமின்மையும் ஏற்படுமென ஹொப்சும் அவருக்குப் பின்னர் வாழ்ந்த பயன்பாட்டுச் சிந்தனையாளர்களும் எதிர்பார்த்தனர். இது காரணமாக, இன்னல்களைக் குறைந்தபட்சமாக்குவதற்குத் திட்டமிட்டு ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும் என அவர்கள் வாதாடினர். சமூக மாற்றத்திற்குக் கொடுக்கக்கூடிய இந்த விளக்கங்களை நிராகரித்த பின்பு, முன்னேற்றச் சிந்தனையாளர்கள் ஒன்றில் சமூக இலட்சியங்கள்பற்றிய மரபுவழிவந்த முறையியல் கொள்கைக்குப் பதிலாக மாறும் சூழ்நிலைக்கு ஏற்பச் சரிப்படுத்திக் கொள்ளல் என்ற கொள்கையை ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும், அல்லது மனிதர் ஒருவரையொருவர் புரிந்துகொள்வதிலுள்ள தார்மீக முன்னேற்றத்தைச் சரித்திரம் வெளிக்காட்டுகின்றது என்பதையும் நிறைவை எய்துவதே சமூக மாற்றத்தின் இலட்சியமாக இருக்கின்றது என்பதையும் ஒரு நம்பிக்கைச் செயலாக ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். இந்த நிறைவானது சிலசமயங்களிலே கடவுளாலும் சில சமயங்களிலே இயற்கையாலும் கொடுக்கப்படுகின்றது. இந்த நிறைவு எதிர்காலத்தில் ஏற்பட வேண்டியதாகும். எனவே, நிகழ்காலத்திற் செய்யப்படும் முயற்சிகள் எதிர்காலத்தில் கிடைக்கப் பெறவிருப்பதற்குக் காரணமாக இருக்கின்றன. எதிர்காலத்திலே கிட்டவிருக்கும் நன்மைக்காகவே நிகழ்காலத்தில் எல்லாத் துன்பங்களையும் அனுபவிக்க வேண்டியிருக்கின்றது.

சூழ்நிலைக்கேற்பச் சரிப்படுத்திக்கொள்ள வேண்டிய தேவைக்கு இரண்டு விதமான விளக்கங்கொடுக்கலாம். தனிமனிதர்கள் கீழ்ப்படிவானவர்கள் என்று கொண்டு அறிவொளி மிக்க அரசாங்கத்தை அவர்கட்குக் கொடுத்தால், நீதி, சமத்துவம், நேர்மையான நடத்தை ஆகியவைகள் செழித்தோங்கக் கூடிய வகையில் இணக்கமுள்ள சமூகத்தை உருவாக்க இடமளிக்கும் சமூக நிலைமைகளை ஏற்படுத்தலாம். ஆரம்பப் பயன்பாட்டுச் சிந்தனையாளர்களது அறிவொளியின் பாற்பட்ட வல்லாண்மை என்ற கருத்தை இந்த வாதம் பெரிதளவில் ஒத்திருக்கின்றது. ஆனல், அச்சிந்தனையாளர்கள் குறிப்பிட்ட தனிமனிதனின் தன்னலம் பற்றிய விடயம் இந்த வாதத்தில் அதிகம் காணப்படவில்லை. பழகுந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மை என்று பிரெஞ்சுச் சிந்தனையாளர்கள் வழங்கும் சிறப்பியல்பிற்கு முக்கியத்துவமளித்து, சமூக நலன் வளர்க்குமாறு குடிமக்களுக்குப் பயிற்சி அளிக்கப்படல்வேண்டும் என்பது வற்புறுத்தப்பட்டது. அனுபவத்திலிருந்து அறிந்துகொள்ளும் விடுதலையே சமூக விடுதலைகளுள் முக்கியமானதாகும் என்றும், அனுபவத்திலிருந்து பயனடைவதற்குக் குடிமக்களுட் பெரும்பாலோர் பயிற்றப்படுதல் வேண்டும் என்றும் வாதிடுதல் இரண்டாவது விடையாக அமைகின்றது. இந்த இரண்டு கருத்துக்களும் ஒன்றிற்கொன்று மாறுபட்டவையல்ல. இவ்விரு கருத்துக்களினதும் வலிந்துபெற்ற இணக்கத்திற்கு மிகச் சிறந்த உதாரணமாக, 19 ஆம் நூற்றுண்டில் இங்கிலாந்தில் வசித்தவரான ஸ்டுவட் மில் திகழ்கின்றார்.

முன்னேற்றம் என்ற கருத்தில் நம்பிக்கை வைத்த யாவரும் கல்வியின் முக்கியத்துவத்தை வற்புறுத்தி வந்திருக்கின்றனர். குறிப்பிட்ட சமூகப் பணிகளை அபிவிருத்தி செய்தற்கான குறித்த நோக்கத்தை மட்டுமேயுடைய பிளேட்டோ குறிப்பிட்ட கல்வியை அவர்கள் கருத்திற் கொள்ளவில்லை. அதற்கு மாருக, அறியாமையின் எல்லா மூலங்களும், அதன்வழி சமூக இணக்கமின்மையின் எல்லா மூலங்களும் படிப்படியாக அருகிக் கொண்டுபோய் முற்ருக மறைவதற்கு வழிவகுக்கக் கூடியவகையிலே குடிமக்களின் மனங்களிலே பொதுவாக அறிவொளியை ஊட்டும் கல்வியையே அவர்கள் கருத்திற் கொண்டிருந்தனர். தண்டிப்பதிலும் பார்க்க நல்லவை எவை என்பதை அறியத்தக்க வகையிற் குடிமக்களுக்குக் கல்வியறிவைப் புகட்டுவதே சாலச் சிறந்தது என்று ஹொல்பாக் வாதித்தார். ஆயின், கட்டுப்படுத்தும் நடைமுறையாகக் கல்வியைக் கருதிய அவர், அதனை 'மக்கள் தாம் வாழவிருக்கும் சமூகத்திற் பின்பற்றப்படுகின்ற வாழ்க்கை முறைகளையும் கருத்துக்களையும் நடைமுறைகளையும்.................. ஆரம்பத்திலேயே அறிந்துகொள்வதற்கு உதவும் கலை'[1] என்று எண்ணினுர்.

எதிர்காலத்திற் கல்விகற்கும் குடிமக்கள் சிறந்த சமூகங்களை உருவாக்குவதற்கு மறுபடியும் உதவுவார்களாகையினுல், மகிழ்ச்சியாக இருப்பதற்கு இருக்க வேண்டிய விடுதலையிலும் பார்க்க அனுபவத்திலிருந்து அறிந்துகொள்ளும் விடுதலை முதலாவது இடத்தை வகிக்க வேண்டியது முறையானதே. மகிழ்ச்சி என்ற இலட்சியம் முற்ருக நிராகரிக்கப்படவில்லை. ஆனுல் அனுபவத்திலிருந்து கற்றுக்கொள்ளும் விடயத்தில் வெற்றி கிட்டினுல், மகிழ்ச்சியும் அதற்கு உட்பட்டதாகிவிடும் என்று கருதப்பட்டது.

'ஆட்சி முறை பற்றிய விஞ்ஞானம்' சமூகம் முழுவதையும் நிலைநாட்டுவதற்குப் பிரயோகிக்கப்படும் கல்விபற்றிய விஞ்ஞானமாக மட்டுமே இருக்தற் கூடும்.'[2] பௌதிக அமைப்பைப் போன்று தார்மீக அமைப்பும் ஒருவிதமான தற்செயல் நிகழ்ச்சி என்றும், முழுமையானது என்றும், தார்மீக நன்னெறியை மனத்திற் பதிய வைப்பதற்கு அரசியல் வழிகளைப் பயன்படுத்துவதில் முன்

[1] *Systéme de la Nature* (London 1770), vol. i, p. 140

[2] *Correspondence inédite de Grimm et de Diderot* (Paris 1829), p. 394

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னேற்றங் காண்பதற்கான சந்தர்ப்பம் இருக்கின்றது என்றும் கூறும் நம்பிக்கையே இக்கருத்துரைக்கும் இதனைப்போன்ற கருத்துரைகட்கும் அடிப்படையாக அமைந்தது. பௌதிகவியல் அர்த்தத்திலே, இயற்கைச் சட்டங்களை முன்மாதிரியாகவைத்து சமூகச் சட்டங்களை உருவாக்குவதன்மூலம் மனிதனின் இழி செயல், கடுந்துயர் என்பவைகளைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முடியும். எல்லாருக்கும் பொதுவானதும் என்றும் நிலைத்து நிற்கக் கூடியதுமான மகிழ்ச்சியை உருவாக்குவதற்கு இந்த ஒரேயொரு வழிதான் உண்டு. இதைச் செய்வதற்கு, இந்த உலகத்தினதும் வேறு உலகத்தினதும் எந்தவகையான பற்றுறுதிகளாலும் கவரப்படாமல், குடியியற் சமூகத்திற்கே தம்முடைய பூரண விசுவாசத்தையும் நல்குவதற்கு மக்கள் கற்றுக் கொள்ளுதல் வேண்டும். இதைத் தெய்வத் தன்மை வாய்ந்தது என்று டிடரோ அழைக்கின்றார். உலகியல் மீட்பை அடைவதற்குப் போதிய அவகாசம் தேவைப்பட்டது. அறியாமை அரண்செய்யப்பட்டநிலையில் இருந்தது. ஆனால் அறிவு மிகவும் மெதுவாகவே வளர்ச்சிபெற்றது. நோக்கல் மூலமும், பல சந்ததிகளைச் சேர்ந்த அவதானிகள் அந்த நோக்கல்களைத் தமக்குட் பகிர்ந்து கொள்வதன்மூலமுமே இயற்கை உண்மைகளை அறிந்துகொள்ளமுடியும். தன்னைச் சூழ்ந்துள்ள தடைகளிலிருந்து தனி மனிதன் தனது சொந்த முயற்சியினாலே தன்னை விடுவித்துக்கொள்ள முடியாது என்ற நம்பிக்கை இதனுடைய உடன்விளைவாகவே இருக்கின்றது. மத அறிஞர்கள் கூறியதைப்போன்று, திருச்சபையினாலோ அல்லது தனது சரியான பகுத்தறிவினாலோ கிடைக்கப்பெற்ற கடவுளின் கருணையில் அவன் தங்கியிருக்க வேண்டியதில்லை. அதற்குமாறாக, குடியியற் சமூகத்தின் நிறுவனங்களின்மூலம் குறிக்கப்பெற்ற இயற்கையின் சட்டங்களை மேலும் மேலும் அறிந்து கொள்வதிலேயே அவன் தங்கியிருத்தல் வேண்டும்.

இந்தக் கருத்தை ஆதரித்த பிரெஞ்சுச் சிந்தனையாளர்களுட் பெரும்பாலோர் புகழ்மிக்க புரட்சி ஆரம்பிப்பதற்கு முன்பே இவ்வுலக வாழ்க்கையை நீத்துவிட்டனர். எனினும், அவர்களின் கருத்தை, தலைசிறந்த சிந்தனையாளரும், யாவரும் ஒப்புக்கொள்கின்றபடி மிகச் சிறந்த முறையில் நன்னெறி வாழ்க்கையை நடத்தியவருமான கொண்டோசெ பிரதிபலித்தார். இவர் புரட்சி உணர்ச்சிக்கு ஆதரவளித்தவரும் அதேவேளையில் அந்த உணர்ச்சிக்குப் பலியானவருமாவர். மனிதனின் நிறைவுடைமையை, 'இயற்கையின் பொதுச் சட்டம்' எனக் கொண்டோசெ கருதினர்.

* * * *

வோல்டயர், டர்கோட் ஆகியோரின் வாழ்க்கைச் சரிதத்தை எழுதியவரும் நண்பருமான கொண்டோசெ மற்ற எந்தச் சமூகச் சிந்தனையாளரிலும் பார்க்கச் சிறப்பான முறையிலே பதினெட்டாம் நூற்றாண்டின் அறிவொளி மிக்க சிந்தனையின்பாற்பட்ட பொது அக்கறைகளை எமக்குச் சுட்டிக் காட்டுகின்றார். மாறுமலுள்ள இயற்கைச் சட்டங்கள்பற்றிய அறிவு அதிகரிக்க அதிகரிக்க, முன்னேற்றத்திற்கும் நன்னெறிக்குமிடையே அதிக ஒற்றுமை ஏற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படும் என்ற நம்பிக்கை அந்த நூற்றாண்டில் மிகவும் செல்வாக்குப் பெற்றிருந்தது. இந்த இயல்பையுடைய சமூக உண்மைகளுக்கான சான்றுகளைச் சரித்திரத்திற் காணமுடியும் என்ற ஓரளவு அனுபவரீதியான கூற்று இந்த ஆரம்ப நம்பிக்கைக்குத் துணையாயிற்று. இறுதியாக, அத்தகைய உண்மைகள் கணிதவியல் அல்லது பௌதிகவியல் உண்மைகளிலிருந்து பிரித்துணர முடியாதவை என்றோ, அல்லது அவ்வுண்மைகளை அடிப்படையாகக் கொண்டவை என்றோ, அல்லது அவ்வுண்மைகளை ஒத்தவை என்றோ கருதப்பட்டன.

கண்டுகொள்ளக் கூடிய சமூக மூதறிவு இருக்கின்றது என்ற நம்பிக்கையும் சமூக இணக்கமின்மைக்கு அல்லது குறைபாட்டிற்கு அறியாமையே காரணமாக இருக்கின்றது என்ற அதன் தொடர்புடைய கருத்தும், முதற்பார்வைக்கு, நகரரசைப் பற்றிய பிளேட்டோவின் பகுப்பாராய்வைப் பெரிதளவில் ஒத்திருப்பதைப்போலக் காட்சியளிக்கின்றது. அறியாமையிற் கிடந்து உழல்பவர்களை ஈடேற்றும் கடமை அறிவொளி படைத்தவர்களைச் சார்ந்தது என்ற கருத்து பிளேட்டோவினது கொள்கைக்காவலர்களின் தார்மீக நிலையை ஒத்திருக்கின்றபோதிலும், இரு கொள்கைகட்கிடையேயும் மிகவும் முக்கியமான வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஆட்சிபுரிந்து வழிநடத்திச் செல்வதற்குப் பதிலாக, அறிவுபெற்றிராத வகுப்பினருக்கு நல்ல வழிகளைச் சொல்லிக் கொடுத்துச் சீர்திருத்தம் செய்வதே புதிய பணியாக இருந்தது. காலக் கிரமத்தில் எல்லா மக்களும் புரிந்துகொள்ளக்கூடியவகையில், எளிமையானவையாகவும் தெளிவானவையாகவும் சமூகத்தின் அனுபவரீதியான உண்மைகள் அமைந்துவிடுகின்றன. அப்பொழுது முன்னேற்றமான சமூகத்தை உருவாக்குவதிலும் எப்பொழுதும் மாற்றமடைகின்ற புதிய சமூக நிலைமைகளுடன் இணங்காமல் இருக்கும் தாபித்த நிறுவனங்களை மாற்றியமைப்பதிலும் அல்லது திருத்தியமைப்பதிலும் குடிமக்கள் கூடிய பங்கை வகிக்கமுடியும். இந்தச் சிந்தனைப் போக்கில் அரசியலுக்கும் ஒழுக்க நெறிக்குமிடையே மறுபடியும் நெருக்கமான உறவு ஏற்பட்டிருப்பதைக் காணமுடிகின்றது. இயற்கை விஞ்ஞானத்தின் வெற்றியும் ஒன்றுபடுத்தும் முறையும் இத்தகைய உறவை உறுதிப்படுத்துவதுடன் வலிமை மிக்கதாகவும் செய்கின்றன.

1793-94 ஆம் ஆண்டுக் குளிர் காலத்தில் தலைமறைவாயிருந்த கொண்டோசெ, முன்னேற்றத்தின் சரித்திரத்தைப் பற்றிய குறிப்புக்களை எழுதினார். ஆனால் அச்சரித்திரத்தை எழுதிமுடிக்கும்வரையும் அவர் உயிர்வாழ்ந்திருக்கவில்லை. அவர் தம்முடைய குறிப்புக்களில், 'எமது நம்பிக்கைகளுக்கு இயற்கை எந்த விதமான எல்லைகளையும் விதிக்கவில்லை என்று நம்புவதற்கு மிக உறுதியான நோக்கங்களைச்'[1] சரித்திரவாராய்ச்சி கொடுத்துதவுவதாகக் குறிப்பிட்டுள்ளார். வரவிருக்கும் உலகில் நம்பிக்கைவைப்பதன்றி, இந்த உலகில் உள்ள நிலைமைகளை நெடுகிலும் சீர்திருத்துவதே முன்னேற்றச் சிந்தனையின் தனிக்

[1] *Esquisse d'un tableau historique des progrés de l'esprit humain*, edited O. H. Prior (Paris 1933), p. 217

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறியீடாக இருந்தது. இஃது ஒரு பயனற்ற நம்பிக்கையல்ல. அதனுடைய அடிப்படையையும் இயற்கையே அமைத்துக்கொடுத்திருக்கின்றது. நன்னெறி, நீதி, அற ஆர்வம் ஆகியவைபற்றிய ஒரேபாடங்களை இயற்கை திரும்பத் திரும்பப் போதிப்பதனுல், எப்பொழுதும் அதிகரித்துக்கொண்டு செல்லும் சமூக இணக்கத்திற்கு இடமளிக்கின்ற தார்மீக அமைப்புபற்றிய ஆழ்ந்த அறிவை எல்லா மக்களிடையேயும் தூண்டுவதற்கு இயற்கையைத் தாராளமாகவும் முன்பிலும் பார்க்கக் கூடுதலாகவும் கலந்தாலோசிக்கவேண்டும். தார்மீக, அரசியல் விஞ்ஞானங்களைப் போதிப்பதன் விளைவாக ஏற்படும் நல்வாழ்க்கை சம்பந்தமான நடைமுறை, வழக்கமான நன்னெறி என்பவற்றின் அடிப்படையில் மனிதனின் உணர்ச்சிகள், நடத்தை ஆகியவற்றை ஒப்பிட்டுப் பார்ப்பதன் மூலம் அவ்விஞ்ஞானங்களின் முன்னேற்றத்தை மதிப்பிடுதல் வேண்டும். இந்த விருப்பங்கள் சம்பந்தமாய், ஈட்டப்பெற்ற சிறப்பியல்புகள்—அவை கல்வியால் பெறப்பட்டவையாக இருந்தாலும்—மாபுரிமையாகப் பெறக்கூடியவை என்ற நம்பிக்கை கொண்டோசெவுக்கு ஆதரவாக அமைந்தது. இசைவற்ற சமுதாய, அரசியல் சூழ்நிலை பற்றிய என்றுமுள்ள சமூகப் பிரச்சினையை இந்தக் கருத்து தவருன முறையில் மிகவும் எளிதாக்கிவிட்டது.

அறிவும், அறிவை இலகுவில் ஈட்டவும், ஈட்டிய அறிவை மற்றவர்கட்குக் கொடுக்கவும் உதவும் சூழ்நிலையும் முன்னேற்றமடையும் சமூகத்தின் முக்கிய காரணிகளாகும். சமூகத்தை உற்றுநோக்கி, அந்த நோக்கல்களைப் பற்றிச் சிந்தித்து, அவற்றிலிருந்து படிப்பினைகளை அறிந்து கொள்வதற்கான சுதந்திரம், சமூகம் முன்னேறுகின்றதா என்பதைத் தெரிந்துகொள்ள உதவும் மிகச் சிறந்த பரிசோதனையாகும். இந்தப் பரிசோதனையைக் கொண்டோசெ சென்ற காலச் சரித்திரத்திற்குப் பிரயோகித்துப் பார்த்தபோது அறிவு வளர்ச்சியின் இந்த முன்னேற்ற விதிக்குரிய சான்றுகளைக் கண்ணுற்ருர். எனவே, அனுபவ விஞ்ஞானங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்துக்கொள்வதன் மூலம், இந்தச் சரித்திரக் கோலத்துடன் இணைந்திருக்கக்கூடிய வகையில் வருங்காலத்தில் நடைபெறும் பல சமூக நிகழ்ச்சிகளைப் பகுத்தறிவிற்கேற்ற முறையில் முன்னறிந்து கூறத் தம்மால் முடியுமென்று அவர் நம்பினுர். 'அண்டத்தின் தோற்றப்பாட்டை ஒழுங்குபடுத்துமுகமாக தெரிந்தோ தெரியாமலோ, பொதுச் சட்டங்கள் தேவையாகவும் நிலையாகவும் உள்ளன என்ற இந்தக் கருத்தே இயற்கை விஞ்ஞானங்களில் நம்பிக்கை வைப்பதற்கு ஒரே அடிப்படையாக அமைகின்றது; மனிதனின் அறிவியல், தார்மீக மனத்திறனை வளர்ப்பதற்கு, இயற்கையின் மற்றத் தொழிற்பாடுகளிற்போலன்றி குறைந்த அளவில் இந்தத் தத்துவம் காரணமாக இருக்கும் என்று கொள்வதற்கு நியாயம் ஏதுமுண்டா?'[1] மேடைப் பேச்சு முறையில் அமைந்துள்ள இந்தக் கேள்விக்கு விடையிறுக்க வேண்டுமென்று கொண்டோசெ கருதவில்லை. எனினும், சமூகக் கொள்கையில் அனைவாதும் சிந்தனைக்கு அறைகூவும் கேள்வியாக இஃது இருந்து வந்திருக்கின்றது.

[1] *Esquisse*, p. 203

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு புதிய ஊழியும் சூழ்நிலைக்குத் தன்னைச் சரிசெய்துகொள்வதிலும் சூழ்நிலையைக் கட்டுப்படுத்துவதிலும் முன்பிலும் பார்க்க வெற்றியடைவதுடன், தார்மீக முறையிலும் மேன்மை பெற்று விளங்குகின்றது என்ற கருத்தை முன்னேற்றம் என்ற கருதுகோள், தார்மீக, அரசியல் அர்த்தங்களிலே, தன்னுள்ளடக்கியிருக்கின்றது. கடந்தகாலத்தில் விஞ்ஞான அறிவு வளர்ச்சி ஏற்படாமலும் அவ்வறிவின் உண்மைகளைப் பரப்புவதற்கேற்ற வழிவகைகள் காணப்படாமலும் இருந்தன என்பதை ஏற்றுக்கொண்ட கொண்டோசெ, தன்னிச்சையான அதிகாரத்திற்குப் படிப்படியாக மேலுரிமையை ஒப்படைத்தல், பதினெட்டாம் நூற்றாண்டில் நடைமுறையிலிருந்த பதப் பிரயோகத்தின்படி, முன்னேற்றத்தின் அடுத்த கட்டமாக அமையுமெனக் கருதினர். அரசியல் அடிப்படையில், தன்னிச்சையான ஆட்சியென்பது மக்களால் நடத்தப்படும் ஆட்சியைக் கருதியதேயல்லாமல், பகுத்தறிவுத் தத்துவங்களின்படி நடத்தப்படும் ஆட்சியைக் கருதவில்லை. கண்டுபிடிக்கப்படக்கூடிய சமூகவிதிகளைப் பொதுமக்கள் அங்கீகரித்தல் என்ற அர்த்தத்தைக் கொண்டிருக்கும் பகுத்தறிவுத் தத்துவங்களை ஆட்சிப் பொறுப்பிலுள்ளவர்கள் எப்பொழுதும் எதிர்த்தே வந்திருக்கின்றனர் என்று அவர் கருதினர். இயற்கைத் துறையிலே காணப்படும் தற்செயல் நிகழ்ச்சியை அரசியல் துறையிலுள்ள தன்னிச்சையான அரசாங்கத்தின் நிலை ஒத்திருக்கின்றது. தற்செயல் நிகழ்ச்சிகள், கொண்டோசெ கூறியதைப் போன்று, எமக்குத் தெரியாத காரணங்களின் விளைவாக ஏற்படுகின்றமையால், எதிர்காலத்தில் அவைகட்குப் பகுத்தறிவின்பாற்பட்ட விளக்கத்தைக் கொடுக்கக் கூடியதாக இருப்பதைப் போலவே, பொறுப்பற்ற அல்லது சுயநலம் பற்றிச் சிந்திக்கின்ற ஆட்சிக் குழுக்களையும் அறிவுக்குத் தெளிவாகக்கூடிய சட்டத்தின் வரம்பிற்குள் கொண்டுவந்துவிடமுடியும்.

இது நடைபெறுவதற்கு நீண்ட காலம் செல்வதைத் தவிர்க்கமுடியாது. பழைய காலத்தில் நிலவிய அறியாமையும் மூட நம்பிக்கையும் தீயவிளைவுகளை உண்டு பண்ணின. விசேட அறிவைப் பெற்றிருந்தவர்களையும் சொல்லப்பட்டவைகளை நம்புகின்ற நிலையிலுள்ள கல்வியறிவு பெருதவர்களையும் சமூகத்திற் பிரித்து வைத்தமை இத்தகைய தீயவிளைவுகளுட் குறிப்பிடத்தக்கது. உயர் வகுப்பினர், குறிப்பாக மதகுருமார்கள், தங்களுக்குக் கிடைக்கப்பெற்ற நன்மைகளைப் பயன்படுத்தித் தங்கள் ஆதிக்கம் நிலைத்திருக்கச் செய்வதற்காக மக்களை ஏமாற்றினர் என்ற கருத்தைக் கொண்டோசெ ஆதரிக்கின்ருர். இந்தக் கருத்தைப் பதினெட்டாம் நூற்ருண்டின் முற்பகுதியில் நிலவிய பொதுவுடைமைக் கொள்கையிற் காண்கின்ருேம். இக்கருத்து இன்றும் செல்வாக்குப் பெற்றிருக்கின்றது. அடுத்த அத்தியாயத்தில் இக் கருத்து விரிவாக ஆராயப்படும்.

குடிமக்களைச் சுரண்டுவதற்குச் சட்டங்கள் பயன்படுத்தப்படாத போதிலும், தங்களின் முக்கிய நோக்கத்தை அடைய அவை தவறிவிட்டன என்பதாகக் கொண்டோசெ கருதுகின்ருர். தீமைக்கான காரணத்தை அகற்றுவதிலும் பார்க்க தீய விளைவுகளைக் கட்டுப்படுத்துவதிற் கவனம் செலுத்துவதன் மூலம் தீமையை விலக்குவதே சட்டங்களின் நோக்கமாக இருத்தல் வேண்டும் என்று அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுகின்ருர். இது சரித்திரத்திற் காணப்படும் பொதுவான போக்காக இருக்கின்றதென்றும் கிரேக்கர்களிடம் இதற்கான சான்றுகளைக் காணமுடிகிறதென்றும் அவர் குறிப்பிட்டார். இந்தக் கண்டனம் கிறித்துவக் கொள்கைக்கும் பயன்பாட்டுக் கொள்கைக்கும் செல்லுபடியாகக் கூடியதாக இருக்கின்றது. மனிதனின் பழியார்ந்த குணம், அறியாமை அல்லது சுயநலம் ஆகியவைகளைப் பூரணமாக நீக்க முடியாதெனவும் அவற்றைக் குறைப்பதற்காக மட்டுமே நடவடிக்கை எடுக்க முடியுமெனவும் கருதுபவர்களின் முடிவிற்குக் கொண்டோசெவின் முடிவு முரணுக இருப்பதே அதற்குக் காரணமாகும். இந்த வற்புறுத்துதலிற் காணப்படும் வேறுபாடு, தற்கால உலகின் சமூகக் கொள்கையிலுள்ள மிகவும் பிரதான பிரிவு ஒன்றுக்குக் காரணமாகவிருக்கின்றது.

மனிதனின் சூழ்நிலைகளைச் சீர்திருத்துவதில் நம்பிக்கை வைத்தவர்களுட் கொண்டோசெவும் ஒருவராகத் திகழ்ந்தார். கால வெள்ளத்தின் ஓட்டத்தின் போது, தன்னுடைய மரபு வழிவந்த நிறுவனங்களின் சமூக, அரசியற் குறைபாடுகளிலிருந்து தன்னைத் தானே விடுவித்துக்கொள்ள மனிதன் வழிவகுத்துக் கொள்வான் என்று நம்பியவர்களில் அவர் தலைசிறந்தவராகக் காணப்படுகின்ருர்.

அவரின் இலட்சிய சமூகத்திற்குச் சிகரம் வைப்பதுபோல சமத்துவம் என்ற கருதுகோள் அமைந்திருக்கின்றது. ரூசோ பயன்படுத்திய விடுதலை என்ற பதத்தைப் போன்றே இந்தச் சொல்லும் மற்றவர்களிலே தங்கியிருக்காத ஒரு சூழ்நிலையைக் குறிக்கின்றது. மக்கள் ஒருவரில் மற்றவர் தங்கியிருக்காத காரணத்தினுல், தமக்குள் ஒத்துழைக்கக்கூடிய நிலையில் இருக்கின்றனர். பெரும்பாலான மக்கள் இன்னும் சமூகத்திலேயே தங்கியிருக்கின்றனர். அவர்கள் அவ்வாறு தங்கியிருப்பதற்கு அறியாமையே தலையாய காரணமாக இருக்கின்றது. மூதறிவையுடையவர்களின் குழுக்கள் யாவற்றையும் கொண்டோசெ சந்தேகக் கண்ணுடனே நோக்குகின்ருர். பல்கலைக்கழகங்களிலும் வழக்கறிஞர்களிலும் அவர் சந்தேகங் கொண்டிருந்தார். 'தார்மீக மனத்திறனிற் காணப்படும் சமத்துவமின்மை, பெரும்பாலான மக்கள் நீதியையும் உரிமைகளையும் பூரணமாக அனுபவிப்பதற்குத் தடையாக' இருக்கும் வரையும், இவை வெறும் இலட்சியங்களாகவே இருக்கும். மக்கள் ஒவ்வொருவரும் மற்றவர் மீதோ அல்லது மேலாளர் மீதோ தங்கியிருப்பதை விடுத்து, அறிவு மூலம் யாவரும் விடுதலையடையக்கூடிய வகையில் அனைவரும் ஏற்றுக்கொண்ட புறநிலைமெய்ம்மை சார்ந்த உண்மைகளை எல்லா மக்களுக்கும் (பெண்கள் உட்பட என வற்புறுத்தினுர் அவர்) கொடுத்துதவுவதே தகுந்த பரிகாரமாகும்.

சமூகத் தோற்றப்பாட்டை அளப்பதற்கும் அதுபற்றி எதிர்வு கூறுவதற்கும் கணிதவியல் முறைகளைப் பின்பற்றமுடியுமென்ற கருத்து கொண்டோசெவின் நம்பிக்கைகளுக்கு ஆதாரமாகத் திகழ்ந்தது. இந்த முறையைச் 'சமூகக் கணிதவியல்' என அழைத்தார் அவர். எனவே, சட்டங்கள் உண்மையான கூற்றுக்களிலிருந்து பெறப்படும் சரியான முடிவுடன் இணங்கியிருப்பதன் விளைவாக அவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியாயத்துடன் இணங்கியிருக்கக்கூடும். இந்த நடைமுறை தார்மீக முறையி லும் சிறந்ததாகவிருக்கும் என்று கொண்டோசெ கருதினர். நடத்தைபற்றிய தீர்ப்புக்கள் யாவும் நிகழ்ச்சித் தகவு பற்றிய மதிப்பீடுகளின் அடிப்படையிற் செய்யப்படுகின்றன என அவர் நம்பியமையே அதற்குக் காரணம். நிகழ்ச்சித் தகவுகளைப் புள்ளிவிவரக் கணக்கியலினடிப்படையிற் கணித்துக் கொள்ளலாம். அவர் எழுதிய கணிதவியல் ஆராய்ச்சிக் கட்டுரையொன்றிலே சட்டமன்றத்தின் அல்லது அதையொத்த நிறுவனத்தின் முடிவு எந்த அளவிற்கு நீதியானது என்பதை மதிப்பிடுவதற்கும் இந்த முறையைப் பிரயோகிக்க முடியும் என்று அவர் வாதாடினர். சட்டமன்றத்தின் முடிவை எவ்வளவு அதிகமானேர் ஆத ரிப்பாரோ அந்த அளவிற்கு அது தார்மீக உண்மைக்கு நெருங்கியதாக இருக் கும் என்று அவர் கருதினர். ஆனல் அறிவொளியையுடைய மக்களின் மத்தி யிலேயே இவ்வாறு நடைபெறும்; அறிவுக்கூர்மை குறைவாக இருக்கும் பட் சத்தில், பெரும்பான்மை அதிகரிப்பதற்கொப்ப தவறு ஏற்படும் நிகழ்தகவும் அதிகரித்துக்கொண்டு செல்லும்.

எனவே, முன்னேற்றத்திற்குக் கல்வியறிவு அத்தியாவசியமானது. ஆனல் உண்மையுடன் நெருங்கிய உறவையுடையனவெனத் தெரியவந்துள்ள தகவல் களின் அடிப்படையிலும் புள்ளிவிவரத் தரவுகளின் அடிப்படையிலுமே கல்வி யறிவு பரப்பப்படுதல் வேண்டும். தார்மீகக் கருத்துக்களோ அரசியற் கருத்துக் களோ மக்கள்மீது எந்த விதத்திலும் திணிக்கப்படக்கூடாது. புறநிலை மெய்ம்மை சார்ந்த உண்மைகள் எல்லோருக்கும் கிடைப்பதற்கான வழிவகைகள் செய்யப்படுதல் வேண்டும். அந்த வழி மூலமே சமத்துவமின்மை நீக்கப்பட்டு சுதந்திரம் நிலைநாட்டப்படலாம். அரசியல் மேலாளர்கள், சமய குருக்கள் ஆகி யோரின் அடிமைகளாக இருக்கும் நிலைமாறி, பகுத்தறிவுடைய மக்கள் ஒவ் வொருவரும் தாமே தமக்கு எசமானராகி விடுவர். எல்லா மக்களுமே நோக்கப் பட்ட இயற்கைச் சட்டங்களுக்கிணங்கத் தங்களின் வாழ்க்கையை நடத்துவார் களாகையினல், முன்பு என்றுமே இருந்திருக்காத வகையிற் சமூக இணக்கம் ஏற்படும்.

இதற்கிடையில், கொண்டோசெவின் பகுப்பாராய்வு பல முக்கியமான அரசியல் முடிவுகளுக்கு இடமளித்தது. அறிவொளி பெறுதவர்களாலே சனநாயக அரசியலமைப்பைச் செயற்படுத்த முடியாது. இரண்டாவதாக, சட்டசபை அங்கத்தவர்களின் அறிவுக்கூர்மை முக்கியமானதேயல்லாமல் அதனுடைய உருவமோ நடைமுறையோ முக்கியமானதன்று. இறுதியாக, உறுப்பினர்கள் எவ்வளவிற்கு அறிவொளி பெற்றவர்களாக இருக்கின்றனரோ அந்த அளவிற்கு அவர்களின் முடிவு சரியானதாக இருக்கும் நிகழ்தகவு அதிகரிக்கும். அறி வொளி அடையாதவர்கள் அறிவொளி அடைந்தோருக்குக் கீழ்ப்படிந்து செல் வது யாவருக்கும் நன்மை பயப்பதாகவிருக்கும்.

முற்போக்குக் கொள்கை பற்றிக் கொண்டோசெவிலும் பார்க்க அதிக ஆர்வம் காட்டிய அவருடைய பின்மரபினர், சமத்துவம் என்ற இலட்சியத்திற்கு அதிக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரவை அளிக்கவில்லை. வேறொரு பிரெஞ்சு அறிஞரும் பிரபுமான சென்ற் சைமன், தமது முறையாக அமையாத எழுத்துக்களிலே அறிவொளிமிக்க தலைவர்களின் கடமைகளுக்கு அதிக முக்கியத்துவம் அளித்திருப்பதை நாம் அவதானிக்கின்றோம். 'பொதுவான நலனையிட்டுச் செலுத்தும் ஆதிக்கமும் அறிவொளியும் விகிதாசாரத்தில் இருத்தல் வேண்டும் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்'[1] என்று அவர் 1803 ஆம் ஆண்டில் எழுதினார். அறிவொளியுடைய முற்போக்குக் கொள்கையின் முக்கிய வற்புறுத்தல்களைப் பொறுத்த வரையில், பதினெட்டாம் நூற்றாண்டின் முடிவில் அவை விளக்கப்பட்டிருந்தபடி, அவரின் காலத்தில் வசித்தவரான மாக்சிற்கும் அவருக்குமிடையிலே பொதுவாகக் கருத்தொற்றுமை காணப்படுகின்றது. ஆயின், அவர் இந்தத் தரவுகளின் அடிப்படையிலேயே சமூகம் பற்றிய கொள்கையை உருவாக்கியதோடு, அதிலுள்ள முறைகளையும் நிரவல் செய்தார். அத்துடன், சென்ற் சைமனின் ஆராய்ச்சியானது மாக்சின் ஓரளவு வேறுபட்ட, ஆனால் பெரும் செல்வாக்கையுடைய கோட்பாட்டோடு ஒரு முக்கியமான பிணைப்பையும் ஏற்படுத்திக் கொடுத்தது.

முன்னேற்றத்திற்காக உழைப்பவர்களுள் இயல்நூலறிஞர்கள் முக்கியமானவர் என்று சென்ற் சைமன் கருதினார். தங்கள் மனத்தைக் கொண்டு உழைப்பவர்கள் யாவரையும், குறிப்பாக விஞ்ஞானிகளை, இயல்நூலறிஞர்களாகக் கொண்டார் அவர். சொத்துடையவர்கள் உறுதிநிலையைப் பிரதிநிதித்துவம் செய்தனர். தொழிற்பாட்டு முறையில் இந்தக் குழுவினர் ஒருவருக்கொருவர் சார்புடையவராக இருத்தல் வேண்டும். அவர்களின் பொதுநலம் விஞ்ஞானத்தின் வளர்ச்சியிலே தங்கியிருந்தமையினால், யாவருடைய கவனத்தையும் ஈர்க்கும் பொது அம்சமாக அது திகழ்ந்தது. தாம் வாழ்ந்த காலத்திற்கு முந்திய ஒன்றரை நூற்றுண்டுக் காலத்தில் விஞ்ஞானக் கொள்கைப் பிரயோகத்தின் விளைவாகத் தோன்றிய புதிய கைத்தொழில்கள் ஏற்படுத்தக்கூடிய வாழ்க்கை வசதிகள், சென்ற் சைமனின் மனத்தைக் கவர்ந்தன. செல்வத்தையும் பொருள் வளத்தையும் அதிகரிக்கக் கூடிய இந்தப் புதிய அபிவிருத்தி, தொழிலாளரின் ஒத்துழைப்புடன் புதிய கைத்தொழில் வங்கியாளர்களும் வர்த்தகர்களும் எந்த விதமான பொருளாதார, சமூக அமைப்பு முறையைப் பின்பற்றுகின்றனர் என்பதிலே தங்கியிருந்தது. ஓவியர்கள், விஞ்ஞானிகள், கைத்தொழிலதிபர்கள் ஆகியோர் பெருந்தொகையான பொது மக்களுக்குள்ள பொது அக்கறைகளையே கொண்டிருந்தனர். ஆனால், திறமையும் அறிவும் கொண்டிருந்த புதிய உயர் குடிகள் என்பது காரணமாக, பொதுமக்களை வழிநடத்தி, அமைப்பு முறைகட்குட்படுத்தும் பணி அவர்கட்கு அளிக்கப்பட்டது.

சேதனவுறுப்புக் கொள்கை என்ற எளிமையாக்கப்பட்ட பெயரை இக்கொள்கைக்குச் சூட்டுவது உண்மை நிலையைப் பிரதிபலிப்பதாகவிராது. ஆனால், சிறப்புத் தகுதிகளைப் பெற்ற குழுவினர் ஒருவருக்கொருவர் சார்புடையவராக இருத்

[1] *Henri Comte de Saint-Simon* (*1760–1825*) : *Selected Writings*, edited F. M. H. Markham (Oxford, Basil Blackwell, 1952), p. 9. *Lettres d'un habitant de Geneve*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தல் போன்ற அம்சங்களில், இஃது அரசியல் பற்றிய கிரேக்க கருத்துக்களை ஒத்ததாக இருக்கின்றது. எனினும், அவ்விரு கருத்தோட்டங்களிடையே தென்படும் வேறுபாடுகள்தாம் மிகவும் குறிப்பிடத்தக்கவையாக இருக்கின்றன. தனிப்பட்ட வகுப்பினரின் குறிப்பிட்ட அக்கறைகளிலும் பார்க்கக் குடிமக்களின் பொது அக்கறைகளும் பகிர்ந்தனுபவிக்கக்கூடிய பெறுமானங்களும் முக்கியத்துவம் பெற்றிருந்ததும், "எந்த விதமான அரசியல் தொடர்பிலுமுள்ள அத்தியாவசியமான இணைப்புக்கள்" என்று சென்ற் சைமன் அழைத்ததொன்றை ஏற்படுத்துவதற்காகப் பொதுவான கல்வி மூலமும் ஒழுக்க நெறிகள் மூலமும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருந்ததும் அதற்குக் காரணங்களாகும். அத்துடன், பொருளாதார வசதிகளைச் செய்து கொடுப்பதன் மூலம் வறிய வகுப்புக்களின் தரத்தை உயர்த்தி, நிலைமையை மாற்றியமைப்பதே சமூகத்தின் தலையாய நோக்கமாக இருந்ததேயல்லாமல், அந்த அமைப்பை அப்படியே பேணிக் காப்பது அதன் நிலையாய நோக்கமாக இருந்திலது.

முன்னேற்றத்தின் பரிசோதனையாகப் பொதுநலத்தையே கொள்ளுதல் வேண்டும் என்ற சென்ற் சைமனின் வற்புறுத்தலும், பொதுநலத்தை ஏற்படுத்துவதையே குடிமக்கள் தமது முதலாவது கடமையாகக் கருதி உழைத்தல் வேண்டும் என்ற அவரின் கருத்தும் நவீனகாலச் சிந்தனையைப் பெரிதளவில் ஒத்திருக்கின்றன. சமூக நிறுவனங்கட்கும் எந்த இலட்சியங்களை அடைவதற்காக அவை உருவாக்கப்பட்டன, அவைகளிலே பதவிவகிப்பவர்கள் யார் என்ற பிரச்சினைகட்குமிடையேயுள்ள தொடர்பைப்பற்றி சென்ற் சைமன் தெரிவித்திருந்த கருத்துக்கள், சரித்திர வளர்ச்சியை அவர் எவ்வளவு நுண்ணறிவுடன் தெரிந்து வைத்திருந்தார் என்பதைக் காட்டுகின்றன. அவரின் இந்தக் கருத்துக்கள் மாக்சின் கருத்துக்களுக்கு முன்னோடியாகவும் திகழ்கின்றன. இந்தத் தொடர்புகள் என்றுமே இணக்கத்தையும் சமநிலையையும் உடையவையாக இருந்தில. அத்துடன், மக்களிடையே முன்பு பரவியிருந்து பின்பு கைவிடப்பட்டுப்போன கொள்கைகளையும் நம்பிக்கைகளையும் பிரதிபலிப்பதற்காக உருவாக்கப்பட்ட நிறுவனங்கள் முன்னேற்றத்திற்குப் பெருந் தடைகளாகவிருக்கும் என்று அவர் கருதினார். 'ஒரு குறிப்பிட்ட நம்பிக்கையைப் பிரதிபலிப்பதற்காக உருவாக்கப்பட்ட நிறுவனங்கள் அந்த நம்பிக்கை அழிந்தொழிந்த பின்பும் தொடர்ந்து வாழ்தலாகாது.'[1] புரட்சி நடைபெற்ற காலத்தில் நிலவிய அரசியற் சூழ்நிலையை, தன்னிச்சையான அரசாங்கத்தை நேரடியாகவே நிராகரித்துவிட்ட ஆரம்பகாலச் சீர்திருத்தவாதிகள் பகுத்தாராய்ந்ததிலும் பார்க்க இந்தக் கருத்து நுட்பமாகவும் உண்மையாகவும் பகுத்தாராய்கின்றது.

புதிய சகாப்தத்தின் மாறிச்செல்லும் பொருளாதார, விஞ்ஞானத் தேவைகட்கு ஏற்ற நிறுவனங்கள் அமைக்கப்படுதல் வேண்டுமென்றும், அவைகளை இயக்குவதற்குப் புதிய மக்கள் அனுமதிக்கப்படுதல் வேண்டுமென்றும் பத்தொன்பதாம் நூற்றுண்டின் ஆரம்பகாலத்தைச் சேர்ந்த சிந்தனையாளர்கள்

[1] *Selected Writings*, p. 30. *De la reorganization de la societe exropeenne*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதினர். இராணுவத்தையும், நிலப் பிரபுத்துவ அமைப்பையும் சேர்ந்தவர்களும் பரம்பரை பரம்பரையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்துபவர்களுமான பிரபுக்கள் 'பழைய ஆட்சியில்' நம்பிக்கை வைத்திருப்பதுடன் அதனுடைய கொள்கை, குறிவழக்கு, மொழி ஆகியவற்றிலும் ஊற்யிருக்கின்றனர் என்று சென்ற் சைமன் குறிப்பிட்டார். அவர்கள் பெற்றிருந்த சமூகவியல், அரசியல் அறிவுகள் ஊகத்தின்பாற்பட்டவை எனக் கருதினர் அவர். இதற்கு மாருக, தெளிவான அறிவைப் பெற்றுள்ள சகாப்தம் ஒன்று இப்பொழுது உருவாகிக்கொண்டுவருகின்றது. பிரயோக விஞ்ஞான அறிவையும் கைத்தொழில் நுட்ப அறிவையும் பெற்றிருக்கும் உலகம் இது. இத்தகைய புதிய உலகிலே தமக்குள் என்றுமே பொருதுகொண்டிருக்கும் நாடு-அரசுகளுக்குப் புத்துயிர் அளிப்பது காலத்திற்கு ஒவ்வாத செயலாக இருக்குமென்று அவர் நம்பினர். விஞ்ஞான முறையைப் பிரயோகிப்பதன் மூலம் வெறும் ஊகமாக இருந்த அறிவு தெளிவான திடமான அறிவாக மாற்றப்பட்டது. எனவே, இதைச் செய்யும் தகைமையைப் பெற்றிருப்போர் ஆட்சிப் பொறுப்பைப் பெற்றிருந்த முந்திய குழுக்கள் அனுபவித்த வலுவையும் அதிகாரத்தையும் அடைதல் வேண்டும். விஞ்ஞான முறையைப் பிரயோகிப்பது சம்பந்தப்பட்ட மட்டில் முன்பு ஆட்சியை நடாத்திய குழுக்கள், மிகக் குறைந்த அனுபவ அறிவுடையவர்களைக் கொண்ட கூட்டமாகவே இருந்தன.

அனுபவத்தை அடிப்படையாகக் கொண்ட பகுத்தறிவின் மூலமே தேவைப்படும் அரசியலமைப்பைக் கண்டுபிடித்தல் வேண்டும். இந்த முறையை ஏற்றுக் கொள்பவரிடையே அதனுடைய உருவம் பற்றி எந்தவிதமான வாக்குவாதமும் ஏற்படத் தேவையில்லை. சரியான பகுத்தறிவாராய்ச்சிக்கு ஓர் உருவம் மட்டுமே இருக்குமாகையால் ஒரேயொரு வகை நல்ல அரசாங்கமே இருக்க முடியும். வெவ்வேறு மக்களின் தேவைகட்கேற்ற முறையில் அவ்வரசாங்கத்தில் அந்தந்த இடத்துக்கேற்ற வேறுபாடுகள் இருக்கலாம். ஆனல் அதனுடைய தத்துவம் சமூகச்சூழ்நிலைகளுக்கு ஏற்ப வேறுபடவேண்டும் என்ற மொன்டஸ்கியூ கருத்தை சென்ற் சைமன் ஏற்க மறுக்கின்ருர். பழையகாலத்தில் நிலவிய அரசாங்கம் பற்றிய தத்துவம் இப்பொழுது மாற்றியமைக்கப்படவேண்டியது உண்மையே; முற்ருகப் புதிய சூழ்நிலை உருவாகியிருப்பதனல், தீவிரமான சீர்ப்படுத்தல்கள் தேவைப்படுகின்றன என்று முன்னேற்றம் கோருவதே அதற்குக் காரணமாகும். ஆட்சி என்பதுபற்றிய பழைய கருதுகோளை மீறுவதாகப் புதிய தத்துவம் அமைந்திருக்கிறதென சென்ற் சைமன் கருதுகின்ருர். புதிய தத்துவம், அதனுடைய கண்டிப்பான கருத்தில், சமூகவமைப்பை நெருக்கமாக ஒத்ததாகவிருக்கின்றது. அத்துடன், பொருள்களின் நிர்வாகம் என்ற எங்கிள்சின் பிற்காலச் சொற்ருெடரை ஞாபகப்படுத்துவதாகவும் அது இருக்கின்றது. வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக உற்பத்தியை அதிகரிக்கும் பணியிலேயே சமூகம் அதிக கவனத்தைச் செலுத்தும். இந்தப் பணிக்குரிய வசதிகளைச் செய்து கொடுப்பதே அரசாங்கத்தின் தலையாய கடமையாகும். 'மக்கள் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டுமென்று உத்தரவிடுவது அரசாங்கத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தின் கருமமாகத் தொடர்ந்திருக்கமாட்டாது; பயனுள்ள வேலைகள் தடைப் படாவண்ணம் பார்த்துக்கொள்வது மட்டுமே அரசாங்கத்தின் கருமமாகவிருக் கும்.'[1]

ஓர் அர்த்தத்தில், சமுதாயத்தை வழிநடத்தும் அதிகாரம் இயல்நூலறிஞர் கள் என்ற புதிய சிறப்பையுடையோரிடம் இருத்தல் வேண்டும். 'தார்மீக வலு விஞ்ஞானிகளின் கைகளில் இருத்தல் வேண்டும்'. மத்திய காலத்திற்குரிய மதச் சார்பாட்சியிடம் உரிமை கொண்டாடுதலுக்குத் திரும்பிச் செல்வதாக இந் தக் கருத்து அமைந்திருந்தது. மத்திய காலச் சமூகவியலுக்கும் தார்மீகவிய லுக்குமிடையே இருந்ததாகக் கொள்ளப்பட்ட ஒற்றுமையை சென்ற் சைமன் மெச்சினர். ஆனால், பிற்காலத்தில் வாழ்ந்த மதகுருமார்கள் பின்பற்றிய இலட் சியங்கள் இந்த உலகையே தமது உறுதியான அடிப்படையாகக் கொண்டிருந் தன. அத்துடன் வறுமையை அகற்றுவதையும், பொருத்தமான முறையில் நலன்புரி அரசு என்று அழைக்கக்கூடிய ஒன்றிலே கீழ்ப்பட்ட வகுப்புக்களை இணைப்பதையும் அவர்கள் தங்களின் அடிப்படை நோக்கமாகக் கொண்டிருந்த னர். பாவங்களின் விளைவுகளைக் கட்டுப்படுத்துவது என்ற பாரம்பரிய கிறித்து வக் கொள்கையின் எதிர்த்தன்மைக்கு மாறாக இம்மைக்குரிய நிறுவனங்கள் நேர்த்தன்மையைப் பெறவாரம்பித்தன. எனவே, திருச்சபையினதும் அரசின தும் அரைகுறையான, பூரணத்துவத்தைப் பெறாத முந்திய அமைப்புமுறை கள் இந்த உலகில் ஒரு பொது நோக்கத்திற்காக ஐக்கியப்படுத்தப்பட்டன. மக்கள் யாவரையும் சகோதரர்களாக நடத்தல் வேண்டும் என்ற தத்துவத் தைப் பொறுத்தவரையில், திருச்சபையும் அரசும் ஒன்றாக இணைந்து இருந்த தோடு, 'வறுமை மிக்க வகுப்பினரின் வாழ்க்கைத் தரத்தை விருத்தி செய்வ தற்காக எல்லாவிதமான நிறுவனங்களையும்'[2] வழிநடத்துவதிலும அவை ஒன்றிற்கொன்று ஒத்தாசை புரிந்தன.

பிரெஞ்சுப் புரட்சியின்போது கிளப்பப்பட்ட மூன்று கோஷங்களில், சகோ தரத்துவத்தின் பிரதிநிதியாகவே சென்ற் சைமன் திகழ்கின்றார் என்பது வெளிப்படை. பிற்காலச் சமூகவுடைமைக் கோட்பாட்டினதும் பொதுநலப் பொருளாதார ஒழுங்கமைப்பினதும் போக்கையும் ஆர்வத்தையும் அவர் முன் னறிகுறியாகக் காட்டுகின்றார். புதிய உலகம் ஒன்று உதயமாகிறது என்பதை சென்ற் சைமன் தெளிவாகத் தெரிந்திருந்தார். ஆனால், அந்த உலகத்திற்கு "இழுத்துச் செல்ல நாம் எம்மை அனுமதிப்பதிலும் பார்க்க" அந்த உலகை எதிர்கொண்டழைத்து அதற்கு எம்மைச் சரிசெய்து கொள்ளுமுகமாக எம்மை நாம் தயார் செய்து கொள்வதே சிறந்தது என அவர் நம்பினர். 'மனித இனத் தின் பொற்காலம் எமக்குப் பின்னாற் சென்றுவிடவில்லை; முன்னாலேயே இருக்கின்றது; சமூக ஒழுங்கை நிறைவாக்குவதிலேயே அது தங்கியிருக்கின்

[1] *Selected Writings*, p. 71

[2] *Selected Writings*, p. 85. *Nouveau Christianisme*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றது. எமது மூதாதையர் அதைக் காணவில்லை; எமது சந்ததியினர் என்றே ஒருநாள் அங்கே செல்லத்தான் போகிறார்கள்; அவர்கட்காக வழியைச் செம்மைப்படுத்துவது எமது கடனாகும்.'[1]

புதிய சமூக ஒழுங்கு உதயமாவதற்கான வழியைச் செம்மைப்படுத்துவதற்குத் தமது வாழ்க்கையை அர்ப்பணித்தவர்களில் சென்ற் சைமனின் செயலாளராகச் சிலகாலம் பணியாற்றிய அகஸ்தே கொம்ரே தலைசிறந்தவர். அந்த நோக்கத்திற்காக அவர் நிறையத் தொண்டாற்றினர். ஜே. எஸ். மில் கூறியதைப் போன்று " தார்மீக வெறிபிடித்த இந்த மனிதர் ", 1750 ஆம் ஆண்டுகளில் டர்கோட் எழுதிய விமர்சனக் கட்டுரைகளுக்குப் பின்பு உறுதியாக வளர்ந்த பிரெஞ்சு முற்போக்குச் சிந்தனையின் சிகரத்தைக் குறிப்பவராக விளங்கினர். சென்ற் சைமனின் கருத்துக்களை நன்கறிந்த அடிப்படையிலே தம்முடைய கருதுகோளைக் கட்டி எழுப்பினர் கொம்ரே. அவர்கள் இருவரும் தமக்குட் பகிர்ந்து கொண்ட பல கருத்துக்களை தம்முடையவையெனவும் அவர் உரிமை பாராட்டினர். விஞ்ஞானிகளையும் கைத்தொழிலதிபர்களையும் கொண்ட புதிய உயர்குடி மக்களிடம் அரசியல் அதிகாரம் ஒப்படைக்கப்படல் வேண்டும் என்ற கருத்தை அவர் மீண்டும் விரித்துரைத்தார். புதிய சமூக ஒழுங்கு சீரானதாகவும் ஒழுங்கமைப்பையுடையதாகவும் உலோகாயத வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதாகவும் அமைதல் வேண்டும் என்ற நம்பிக்கை மீண்டும் வலியுறுத்தப்பட்டது. இந்த நிலையிலிருந்து சிறிது தூரம் கொம்ரே முன்னேறிச் சென்ருர். சமூக வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும் எதார்த்தவாதச் சிந்தனையின் கண்காணிப்பிற் கொண்டுவர விரும்பியதோடு, அதனுடைய தத்துவங்களுக்கியைய காலத்திற்கொவ்வா நிறுவனங்கள் யாவற்றையும் திருத்தியமைக்கவும் அவர் விரும்பினர்.

பல பக்கங்களைக்கொண்டு ஆறு பாகங்களிலமைந்த 'எதார்த்தவாத மெய்யியலின் வழி' (Cours de philosophie positive) என்ற புத்தகத்தை 1830-42 ஆம் ஆண்டுக் காலத்தில் கொம்ரே வெளியிட்டார். 'எதார்த்தவாத மெய்யியலின் அமைப்பு' (Systeme de politique positive) என்ற புத்தகத்தை அவர் நான்கு பாகங்களாகப் பத்தாண்டுகட்குப் பின்பு வெளியிட்டார். ஆனல் அரசியல் தத்துவங்களையும் நடைமுறைகளையும் பொறுத்தவரையில் எதார்த்தவாதச் சிந்தனையின் முக்கியத்துவத்தை மதிப்பிடுவது இலகுவான செயலன்று. 'அவை எவற்றைக் குறிக்கின்றன என்பது தெளிவாகத் தெரியாது; ஆனல் அவை எதையோ குறிக்கின்றன என்பது மட்டும் தெரியும்'[2] என்று கூறிக்கொண்டு, எதார்த்தவாத மெய்யியலின் கோட்பாடுகள்பற்றிய கொம்ரேயின் கருத்துக்களை ஜே. எஸ். மில் ஆராயத் தொடங்கினர். ஒரு நூற்றுண்டுக்காலத்தில் ஏற்பட்ட அபிவிருத்தி, இக்கூற்றுச் சரியானது என்பதையே உறுதிப்படுத்தியுள்ளது. ஊகங்கள் என்று சென்ற் சைமன் அழைத்தவைகளை அக்கோட்பாடுகள் நிராகரித்

[1] *Selected Writings*, p. 68. *De la réorganization de la sociéte exropénne*

[2] J. S. Mill : *Auguste Comte and Positivism* (London 1865), p. 1.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன. அந்த ஊகங்களுக்குப் பதிலாக எல்லாச் சமூகத் தோற்றப்பாடுகளையும் விஞ்ஞான முறைப்படி ஆராய்வதை அவை ஊக்குவித்தன. நூறு ஆண்டுகட்கு முன்பு டர்கோட் கூறியதைப்போன்று, மாற்றமடையாத இயற்கைச் சட்டங்களின் அடிப்படையில் அத்தகைய நிகழ்ச்சிகளையும் தோற்றப்பாட்டையும் விவரிக்க இயலுமாய் இருந்தமையினுலே அவைகளை விஞ்ஞானமுறைப்படி ஆராயக்கூடியதாகவிருக்கின்றது என்பதையும் கொம்ரே ஏற்றுக்கொண்டார்.

முன்னேற்றமடையும் மனித அறிவை மூன்று பிரிவுகளாக டர்கோட் பகுத்திருந்தார். இந்தப் பகுப்புமுறையைக் கொம்ரே தம்முடைய ஆராய்ச்சியின் ஆரம்பப் புள்ளியாக எடுத்துக்கொண்டார். அத்துடன் அவர் நின்றுவிடவில்லை. மதவியல், மறைபொருள், விஞ்ஞானம் என்ற மூன்று பிரிவுகளும், அறிவின் மாற்றமடையும் முறைகளைக் காட்டுவனவாகவோ அல்லது உண்மையை அணுகும் வெவ்வேறு முறைகளாக இருப்பனவாகவோ டர்கோட் கருதினுர். ஆனுல், கொம்ரே இந்தப் பகுப்புக்களைக் கிட்டத்தட்ட உருவகங்களாகப் பயன்படுத்துகின்றுர். சமூகத் தொடர்புகள், வர்க்க அமைப்பு, பொது அலுவல்களை நடத்த உதவும் நிறுவனங்கள், பொருளாதார ஒழுங்கமைப்பு, அரசியல் தத்துவங்கள் ஆகியவற்றையும் மதநம்பிக்கையையுங்கூட, அந்தப் பாகுபாடு விவரித்ததாக அவர் கொண்டார். இந்தப் பாகுபாடு சமூகவியல்முறையின்படி (சமூகவியல் என்ற சொல்லை ஆக்கித் தந்தவர் கொம்ரேதான்) பிரயோகிக்கப்பட்டிருப்பதாக அவர் கருதினுர். எனவே, ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் கொள்கைமுறையான எடுகோள்கள், அதனுடைய முழுமையான சமூக, அரசியல் ஒழுங்கமைப்புடனும் வாழ்க்கை முறையுடனும் இரண்டறக் கலந்திருப்பதாகக் கொம்ரே கண்டார். மாற்றத்தின் கோலம் முன்னேற்றத் தன்மையைப் பெற்றிருக்கும் என்பதை அவர் வற்புறுத்தினுர். எதார்த்தவாத சகாப்தத்திற்கு எதார்த்தவாத மதம் ஒன்று தேவைப்படுமாயின், இத்தகைய எதார்த்தவாத நம்பிக்கைமுறையானது மதசித்தாந்தம் என நாம் அழைக்கும் முன்னைய மத வெளிப்பாடுகளிலும் பார்க்க மேம்பட்டதாகவிருக்கும். சில மத நடவடிக்கைகள் பழமையானவையாகவும் நிராகரிக்கப்பட வேண்டியவையாகவும் மாறியமைக்கு மதவியற் கோட்பாட்டாராய்ச்சிகளே காரணமாகும். விஞ்ஞான சகாப்தம் அதற்கு ஏற்றதாய விஞ்ஞானத்தன்மையுடைய மதத்தையும் அத்தகைய மதத்தை வெளிக்காட்டக்கூடிய சமூக நிறுவனங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

எதார்த்தவாத அறிவைக் கொண்டுள்ள காலத்திற்கு ஏற்றதாக இருக்கக்கூடிய சமூக, பொருளாதார ஒழுங்கமைப்பானது கைத்தொழிற் பண்பைக் கொண்டிருத்தல் வேண்டும். அதிக முன்னேற்றமடைந்திராத பழைய காலச் சமுதாயங்களின் இராணுவ ஒழுங்கமைப்புடன் கொம்ரே இதை ஒப்பிட்டுப் பார்த்தார். இந்தத் தீர்ப்பு சரித்திரத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. இதிலே இராணுவ மயமான சமூக ஒழுங்கானது, விவசாயப் பொருளாதாரத்தோடு தொடர்பு படுத்தப்பட்டிருந்ததால், தீர்ப்புத் தவறுனதாக அமைந்திருந்ததில் வியப்பில்லை. அரசியலற்ற நிலை என அவர் சில சமயங்களில் விவரித்த பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத் தொடர்புகளின் அமைப்பைக் குறிப்பிடுவதற்கு, ஒழுங்கு என்ற பதத்தை அவர் பயன்படுத்தியிருக்க முடியாது. நாடு—அரசுகளுக்குரிய சகாப்தமான முந்திய நான்கு நூற்றுண்டுகளிலும் அதிகார நிச்சயமின்மை, உறுதியின்மை, போட்டியான கருத்துக்களால் ஏற்பட்ட குழப்பநிலை ஆகியவைகளே காணப்பட்டன என்று கொம்ரே கருதினுர். இந்தக் காலகட்டம் நிலைபெயர்வுக் காலமாகும். சரித்திரத்தின் சில காலப்பகுதிகளிலே மாறுதல் தொடர்பு வீதத்தில் ஏற்படுகின்றது என்பதை உணர்ந்த சரித்திராசிரியர்கள், 'நிலைபெயர்வுக் காலம்' என்ற சொற்றெடரைத் தாராளமாகப் பயன்படுத்துகின்றனர்.

சரித்திர காலப்பகுதிகள் உயிர்ப்பொருளுக்குரிய தன்மையைக் கொண்டவை, அதாவது செறிவானவை, உறுதியானவை, வைதீகமானவை, ஒருசீரானவை என்ற ஒழுங்கிலும், மறுபக்கலிலே கண்டனந் தெரிவிப்பவை, அதாவது ஐதானவை, முரண்பாடானவை, முரணுன மதக் கருத்துக்களைக் கொண்டவை, பல்லினமானவை என்ற ஒழுங்கிலும் மாறி மாறி வரும் என்ற கருத்தை சென்ற் சைமன் தெரிவித்தார். பண்டைய கிழக்கு ஜெர்மானிய இனத்தாரின் புதுமை உணர்வை சென்ற் சைமனும் கொம்ரேயும் பகிர்ந்து கொண்டனர். மத்தியகாலச் சரித்திரத்தைப்பற்றி இன்று எமக்குத் தெரிந்திருப்பவைகளை அறிந்திராதவர்களான அவ்விருவரும் தமக்கு முந்திய காலப்பகுதியுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதன் மூலம் மத்தியகாலத் திருச்சபைக்கும் சாம்ராச்சியத்திற்கும் இலட்சிய உருவம் கொடுத்தனர். ஆக்க பூர்வமான, ஒருமைத்தன்மைவாய்ந்த, அமைப்புமுறையைக் கொண்டுள்ள புதிய ஒரு சமூக ஒழுங்கு உதிக்கும் தறுவாயில் இருக்கின்றது என்பதை இருவரும் ஏற்றுக்கொண்டனர். இந்தப் புதிய சமூக ஒழுங்கு தோன்றுவதற்குக் காரணமான சமூகவியலானது, மனிதத் தொடர்புகள் பற்றியும் உயர்ந்த நிலையிலே தன்னுள் இணைந்த முன்னேற்றச் சமூகத்தை மீண்டும் ஏற்படுத்த உதவும் நிறுவனங்கள் தொழிற்படும் முறைபற்றியும் பெறப்பட்ட விஞ்ஞானரீதியான சமூக அறிவுக்குவியலைக் குறிக்கின்றது.

இத்தகைய புதிய சமூகத்தை உருவாக்கி ஆதரிப்பவர்களுக்கு, முற்றுகப் புறநிலைமெய்மை சார்ந்து இருப்பதனுல் சற்றும் அசைக்கமுடியாதிருக்கும் சமூக உண்மைகளை அடிப்படையாகக் கொண்டுள்ள ஆன்மீக, உலோகாயத அதிகாரங்களின் இணைக்கப்பட்ட வலுவானது உரிமையாகக் கொடுக்கப்படும். இத்தகைய அதிகாரவாண்மையையுடைய அரசாங்கம், விஞ்ஞான அறிவின் வளர்ச்சியோடு—இறுதியில் அதன் அதிகாரம் இதிற்றுன் தங்கியிருக்கும்—ஒத்துப்போகும் என்று கூறியதற்காக விமர்சகர்கள் கொம்ரேயை வன்மையாகக் கண்டிக்கத் தவறவில்லை. ஆனுல், கொம்ரேயின் வாதம் புதுமையானதல்ல. பிரெஞ்சுச் சமூகச் சீர்திருத்தவாதிகளாய் அவருக்கு முன்னிருந்தவர்களுட் பலர் ஒரு நூற்றுண்டுக் காலமாகக் கூறிவந்தவைகள் இக்கருத்தை உள்ளடக்கியிருக்கின்றன. அறிவொளியையுடையவர்களின் வல்லாட்சி கொடுங்கோலாட்சியாகக் கொள்ளப்படவில்லை. ஆட்சியை நடத்துபவர்கள் அறநோக்கை உடையவர்களாகவும், சூழ்நிலையின் தேவைகட்கேற்ப நடந்துகொள்பவர்களாகவும், உண்மைக்குக் கீழ்ப்படிபவர்களாகவும் இருந்தால், அவர்களின் அதிகாரம், எந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத் தவருன வழியிற் பெறப்பட்டபோதிலும், சுதந்திரமாகச் செய்யப்படும் தன்னிச்சையான முடிவுகளிலும் பார்க்க விரும்பத்தக்கதாகும். உறுதியான சமூகத்தைக் கட்டி எழுப்புவதற்குச் சிந்தனைச் சுதந்திரம், நம்பிக்கைச் சுதந்திரம், ஆன்மீக சுதந்திரம் ஆகியவைகளை மட்டும் நம்பியிருக்க முடியாது. பகுவெட் கூறுவதைப்போல், கொம்ரேயைப் பொறுத்தவரையும், "நாம் வாழ வேண்டிய நிர்ப்பந்தத்திலுள்ள தார்மீக, சமூக நிலைமைகளை ஏற்றுக்கொள்ள மறுக்க உதவும் உரிமைதான் விடுதலையாகும்; ஆனல் அது எந்தவிதமான தார்மீக அல்லது சமூக நிலைமையையும் உருவாக்கவல்ல சக்தியன்று."[1] அரசியல் முடிவின் ஆரம்பம் பற்றியோ உருவம் பற்றியோ கொம்ரே அக்கறை கொள்ளவில்லை. அம்முடிவு உள்ளடக்கியுள்ள சமூக உண்மைபற்றியே அவர் தம் கவனத்தைச் செலுத்தினர். அத்தகைய முடிவுகளின் தூய்மையை அல்லது புறநிலை சார்ந்த மெய்ம்மை நிலையைப் புறக்கணிக்கின்ற மக்களுக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ அம் முடிவுகளைச் செய்யும் அதிகாரம் கிடையாது. இந்தக் காரணத்திற்காகத்தான் சில சீர்திருத்தச் சிந்தனையாளர்களின் தனியாண்மைவாதங்களைக் கொம்ரே நிராகரித்தார். சமத்துவத்திற்காகச் கொண்டோசெ வாதாடியதையும் அவர் அங்கீகரிக்கவில்லை. தெய்வவழி உரிமை என்ற கொள்கையானது தவருன முறையில் அரசரிடமிருந்து மக்களுக்கு மாற்றப்பட்டதனல் உண்டான விளைவைப்போலவே, சனநாயகப் பொதுசன இறைமை என்ற கொள்கையின் விளைவும் இருக்கின்றது. சரித்திர அடிப்படையிற் பார்க்கும்போது இந்த வாதத்திற் சிறிதளவு உண்மை இருக்கத்தான் செய்கின்றது.

கொம்ரேயைப் பொறுத்தவரையில், தனிமனிதனன்றி மக்கட் கூட்டமே முக்கியத்துவம் வாய்ந்த சமூக அலகாகத் திகழ்கின்றது. சமூக வாழ்க்கையின் எல்லா அம்சங்களும் சுற்றுச் சார்புடையன என்பது விஞ்ஞானரீதியான சமூகவியலின் அடிப்படைக் கருத்தாக விருப்பதே அதற்குக் காரணம். தற்செயலாகச் சுற்றுச் சார்பையுடைய இந்தச் சிக்கலான தொடர்பை, எந்த ஒரு குறிப்பிட்ட சமூகச் சக்திகளின் சேர்க்கைக்கும் முக்கியத்துவம் அளிக்கும் நோக்கத்துடன் அவர் அணுகவில்லை. மிகவும் முக்கியமான பொருளாதாரக் காரணங்கட்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என அவர் கூறவில்லை என்பதை இதற்கு உதாரணமாகக் காட்டலாம். வளரும் அறிவின் மாறுதலடையும் முறைகளிலே முன்னேற்றம் முதலாவதாகத் தங்கியிருக்கின்றது என்று கூறியதில், கொம்ரே பதினெட்டாம் நூற்றுண்டுக்குரிய பாரம்பரியத்தைப் பின்பற்றினர். ஆயின், இம்மாற்றங்கள் சரித்திரத்தின் முன்னேற்றக் கோலத்தோடு தொடர்புபடுத்தப்பட்டுள்ளன. அறிவு முன்னேற்றமும் பொருளாதார முன்னேற்றமும் ஒன்றையொன்று மேம்படுத்தும் என்ற ஓர் உறுதியானது இந்த முன்னேற்ற இயக்கத்திற் காணப்படுகின்றது என்று கொம்ரே கருதினர். அவையிரண்டும் ஒரே வீதத்தில் வளர்ச்சியடையும் என்று கூறமுடியாது. ஆனல் ஒவ்வொன்றும் மாற்றத்தின் ஒழுங்கான முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும்.

[1] E. Faguet : *Politiques et moralistes du dix-neuvième siècle*, deuxieme seria (Paris 1898), p. 296

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தார்மீக, அரசியல் உடன்பாட்டுத் துறைகளிலேயே கொம்ரேயின் புதுத் திட்டம் அதிகாரவாண்மைத் தன்மையை அதிகம் கொண்டிருக்கின்றது. சமூகத்தைப்பற்றிய தமது விசேட அறிவிலிருந்து தம்முடைய அதிகாரத்தைப் பெற்றுக்கொண்ட எதார்த்தவாத ஆளும் வகுப்பினர், எல்லாக் குடிமக்கள்மீதும் ஒரே மாதிரியான ஒழுக்க நெறியைத் திணிக்கும் அதிகாரத்தைக் கொண்டிருக்கின்றனர். விஞ்ஞானரீதியாக நிரூபித்துக் காட்டக்கூடிய உண்மையான கருத்துரைகளை ஆராய்வதும் விவாதிப்பதும் காலத்தை வீணுக்குவதாகும். ஒருசீரான ஒழுக்கநெறியிலிருந்து தனிநபரின் தீர்ப்பு வேறுபடுவதால், ஆட்சியற்ற நிலே உருவாக வழியேற்படும் என்று கொம்ரே தொடர்ச்சியாகக் கண்டிக்கின்ருர். மத்திய காலக் கிறித்துவ உலகிலே கத்தோலிக்க மதக் கோட்பாட்டில் ஏற்படுத்தப்பட்ட ஒருமையை இந்தக் கட்டாய வைதீகத்திற்கு மாதிரியாக அவர் கொண்டார். கத்தோலிக்கக் கோட்பாட்டிஉள்ள ஒருமையின் உருவத்தை அவர் ஆர்வத்துடன் வரவேற்ருரேயல்லாமல், அதனுடைய உள்ளடக்கத்தை வரவேற்கவில்லே. இதற்கு மாருக, பல உட்பிரிவுகளின் வேறுபாடுகட்கு இடமளித்த மதமறுமலர்ச்சி இயக்கம், தன்மைமாறு நிலேயையும் உறுதியின்மையையும் கொண்ட காலகட்டத்தின் ஆரம்பத்திற்கு வழிவகுத்ததாக அவர் கருதினர். அந்த நிலேயற்ற காலகட்டம் தமது வாழ்நாளில் முடிவிற்கு வந்ததையிட்டு அவர் மகிழ்ச்சியடைந்தார். கோட்பாட்டு ஒற்றுமைக்கு உதாரணமாகத் திகழும் கடைசிச் சகாப்தத்தின் மதவியல் உள்ளடக்கத்தை—மதவியல் கருத்துக்களே—கொம்ரே தமது வாதத்திற்குப் பயன்படுத்த முடியாமைக்கு இந்த அறிவு வளர்ச்சியே தடையாக இருந்தது. புதிய சகாப்தத்திற்கு ஏற்ற எதார்த்தவாதத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பதாகச் சொல்லப்பட்டதும், விஞ்ஞானரீதியாக ஒழுங்கு செய்யப்பட்ட சமூகத்தின் ஆன்மீகத் தேவைகட்கு ஏற்றதாக இருப்பதுமான புதிய மதமொன்றை இயல்புக்கு மாருக அமைக்கும் முயற்சியை கொம்ரே தமது பிற்கால எழுத்துக்களில் மேற்கொள்வதற்கு, இத் தடைகளே காரணமாக அமைந்தன.

மில் குறிப்பிட்டதைப்போன்று, இந்தச் சிந்தனே வளர்ச்சியின்போது முன்னேற்றத்தின் மூன்று கட்டங்களேயும், தார்மீகப் பெறுமதிகளே மதிப்பிடுவதற்கு நோக்கப்பட்ட காரணகாரியத் தொடர்பான அறிவின் முறைகளாக—அவைகளின் ஆரம்பத்தையோ நோக்கத்தையோ கணக்கிலெடுக்காமல்—கொம்ரே பிரயோகிக்கவில்லே. முன்னேற்ற விதி சரியானது என்பதை நிரூபிக்க அதேவிதி பயன்படுத்தப்படுவதை இது ஒத்திருந்தது. சமூக ஒத்துழைப்பு, நிறுவன அமைப்பின்கீழ் ஒழுங்கான வாழ்க்கை, அதிகரித்துச்செல் பொதுநலம், அரசியல் உறுதிநிலே ஆகிய இலட்சியங்களே அடைவதற்கு முயற்சிகளே மேற்கொள்வது பயனுடையதே என்பதைச் சுட்டிக்காட்டுவதற்குப் பல காரணங்கள் முன்வைக்கப்பட்டன. ஆனல் அரசியலில் மாற்றமுடியாத உண்மையான நோக்கமாக இந்த இலட்சியங்கள் இருக்கின்றன என்பதை முன்னேறும் சமூக நடைமுறைகளேப் பற்றிய விஞ்ஞானரீதியான, எதார்த்தமான, புறநிலே மெய்ம்மை சார்ந்த அறிவு வெளிக்காட்டுகின்றது என்பதற்கு கொம்ரேயின் சொந்த விருப்பு வெறுப்புக்களேத் தவிர வேறெந்தக் காரணமும் கிடையாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொம்ரேயின் மெய்யியலினது மையத்திற் காணப்படும் முரண்பாடானது, அரசியற் சிந்தனையின் எல்லையைக் குடியியல் அதிகாரம் சம்பந்தமான பிரச்சினைகள் பற்றிய பாரம்பரிய அக்கறையிலிருந்து சமூகத்தோற்றப்பாடுபற்றிய முழுத் துறையையும் உள்ளடக்கும் வகையில் விரிவுபடுத்தியமையால், எளிதாக்கப்பட்டுவிடவில்லை. விடயத்தின் நோக்கைப் பொறுத்தவரையில், நகராசு சம்பந்தமான எல்லா அலுவல்களும் மெய்யியலறிஞனின் கவனத்தைக் கவருதல் வேண்டும் என்ற கிரேக்க கருத்தை மீண்டும் ஏற்பதாக இது அமைகின்றது. ஆனால், கிரேக்க அரசியற் சிந்தனையாளர்களின் தார்மீக எடுகோள்கள், சில அம்சங்களிலே கொம்ரேயின் கருத்துக்களை ஒத்திருக்கவில்லை. அடுத்தடுத்து நடைபெறும் சம்பவங்களை நோக்குவதன் மூலம் எது நடைபெற வேண்டும் என்பதைக் கண்டுபிடிக்க முடியும் என்ற கருத்தையே அவர் தொடர்பாக வற்புறுத்தி வந்திருக்கின்றார். அவர் இவ்வாறு வாதாடுவதற்கு, இயற்கை ஒழுங்குடன் ஒப்பிடக்கூடிய அரசியல், சமூக உண்மைநிலை ஒன்று இருப்பதாக அவர் கருதியது போலத் தோன்றுகின்றது. இந்த உண்மை நிலையைக் கண்காணிக்க முடியுமென்றும், மதிப்பீடு செய்ய முடியுமென்றும், இறுதியாக ஒன்றையொன்று தாக்கும் சட்டங்களின் ஒழுங்கமைக்கப்பட்ட தொடரின் அடிப்படையில் அதை விரித்துரைக்க முடியுமென்றும் அவர் கருதினார். ஒன்றையொன்று தாக்கும் சட்டங்களின் ஒழுங்கமைக்கப்பட்ட தொடர்பற்றிய பூரணமான விளக்கமாக சமூக உண்மை அமையும் என்பது அவரது கருத்தாகும்.

அடுத்த அத்தியாயத்தில் வேறோர் உருவில் நாம் ஆராயவிருக்கும் இந்தக் கருத்து, நாம் வாழும் இந்த நூற்றாண்டிற்கு மிகவும் பாரதூரமான அரசியல் அறைகூவலை விடுத்துள்ளது. 'தவறிழையாமை என்று ஒன்று இருக்கக்கூடுமானால் அது துன்புறுத்தலை நடத்துவிப்பதற்குச் சிறந்த, அசைக்கமுடியாத, ஒரு காரணத்தைக் கொடுத்துதவும்' என்று சர். ஜேம்ஸ் ஸ்டீபென் எழுதியுள்ளார். ஆனால், மனிதாபிமானம் என்ற மதத்தை எதார்த்தவாதத் தத்துவங்களின் அடிப்படையிற் கட்டி எழுப்புவதற்குக் கொம்ரே எடுத்த முயற்சிகள், அவர் மாற்றீடு செய்யவிரும்பிய மதத்திற்கு ஆதாரமாக இருந்த மறுக்கமுடியாத உண்மைகளிலும் பார்க்கக் குறைந்த அளவு உண்மைகளையே ஆதாரமாகக் கொண்டிருந்தன. அத்துடன், அதற்காக அவர் செய்த பிரசாரம் மதப் பிரசாரம் செய்பவருக்கிருக்கும் ஆர்வத்தைக் கொண்டிருந்ததேயல்லாமல், இயற்கை விஞ்ஞானத்துடன் தொடர்புள்ள நிரூபிக்கப்படக்கூடிய உண்மையை நன்கு எடுத்துரைத்ததாகத் தென்படவில்லை.

இந்தத் தார்மீக அர்த்தத்தில், முன்னேற்றம் என்பது தொடர்ச்சியானதும் எல்லையற்றதுமான மாற்றம் என்பதை மட்டும் குறிக்கவில்லை. என்றோ ஒரு நாள் சமூகம் நிறைவான சமநிலையை எய்தும் என்ற நம்பிக்கையை அந்தக் கருத்து உருவாக்குகின்றது. இந்த அர்த்தத்தில், மூடிய நிலையிலிருக்கும் சமுதாயமொன்றைக் கிறித்துவ சிந்தனையோ, அல்லது பயன்பாட்டுச் சிந்தனையோ எதிர்பார்க்கவில்லை. கொம்ரேயின் புத்தகங்களை வாசித்து அவரின் செல்வாக்காற் பாதிக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டவரான மில், "முடிவுகட்டாத பிரச்சினைகளை அனுமதிக்க மறுப்பது திரு. கொம்ரேயின் தவறுகளில் ஒன்றாகும்"[1] என்று மென்மையாகக் குறிப்பிடுகின்றார்.

அகில உலகுக்கும் பொருத்தமானதும் தேவையானதுமான முன்னேற்ற விதிக்கமைய, மனித சமூகம் சரித்திர முறையாக முன்னேறிவந்தது என்பதற்கு ஏதாவது சான்று உண்டா என்ற பிரச்சினையை முற்போக்குச் சிந்தனையாளர்களின் தீர்ப்பிற்கு அவர் விட்டிருத்தல் வேண்டும். சட்டம் என்று குறிப்பிடப்பட்ட இவ்விதியானது நோக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட சம்பவத் தொடர்பற்றி உண்மையாக இருக்கக்கூடும் என்றும், அவ்வாறிருந்தால் அதை அனுபவரீதியான சட்டம் என்றே அழைக்கவேண்டும் என்றும் மில் சுட்டிக் காட்டியுள்ளார். இந்தச் சூழ்நிலையிற்றான் இயற்கை விஞ்ஞானச் சட்டம் என்ற உயர்ந்த பீடத்திலிருந்த பரிணும வளர்ச்சிபற்றிய கருதுகோள், முன்னேற்றத்தை ஆதரிப்பவர்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக மாறியது. எனினும், பரிணும வளர்ச்சியை மட்டும் முன்னேற்றமான சமூகக் கொள்கையின் திருப்திகரமான அடிப்படையாகக் கொள்ள முடியாது. பரிணும வளர்ச்சிக் கொள்கையை விரித்துரைத்தவர்களுள் தலைசிறந்தவரான டார்வினுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ள இந்தக் கொள்கை, ஒரே நேரத்தில் நடக்கும் சம்பவத்துக்கு ஒன்றிற்கு மேற்பட்ட விளக்கங்களைக் கொடுப்பதாகும். அத்துடன், சமூகச் சிந்தனை மீது அது பெற்றிருந்த பிரதான செல்வாக்கு, டார்வினுடைய எடுகோள்களின் விளைவாக ஏற்பட்டதாகவும் இருந்திலது.

மனிதனுக்கும் இயற்கைக்குமிடையே இருப்பதாகக் கூறப்படும் பாரம்பரிய வேறுபாடுகள் உண்மையானவையல்ல என்றும், மனிதன் ஒரு விசேட படைப்பாயிராமல் மற்ற உயிரியல் தோற்றப்பாடுகளினது தொடர்பான வளர்ச்சியின் விளைவாகவே இருக்கின்றான் என்றும், மாற்றமும் வளர்ச்சியும் சம்பந்தப்பட்ட முந்திய சகாப்தங்கள் தொடர்ந்து நீண்டுகொண்டு செல்கின்றன என்றும், அவை எதிர்காலத்திலும் அவ்வாறே நீண்டுகொண்டு செல்லக்கூடும் என்றும் கூறும் பரிணுமவளர்ச்சிக் கொள்கையின் அம்சங்கள், விக்டோரிய சகாப்தத்தின் மத்திய பகுதியில் மிகவும் புரட்சிகரமானவையாகத் தோற்றமளித்தன. நிலை நாட்டப்பட்ட சிந்தனை முடிவுகளுக்கு ஏற்பட்ட இந்த அதிர்ச்சிகள் பலத்த எதிர்ப்பை ஏற்படுத்தின. அத்துடன், அக்காலம் பொதுவாக நிலவிய விழிப்புணர்ச்சியுடன் அவை கலப்பதற்கும் நெடுங்காலம் பிடித்தது.

இயற்கைத்தெரிவுபற்றிய இந்தக் கொள்கைமூலம் வளர்ச்சி நடைபெறுவதன் அடிப்படையான தத்துவத்தை, விளங்கக் கூடிய முறையிலும் இரத்தினச் சுருக்கமாகவும் டார்வின் விவரித்தார். இது ஒழுக்க நெறியின் அடிப்படையில் உருவாக்கப்படாத நடுநிலைத் தத்துவமாகும். இனவகைகட்கும் அவற்றின் சூழ்நிலைக்குமிடையேயுள்ள தொடர்பின் இயல்பை மட்டுமே இந்தத் தத்துவம் நிலைநாட்டி

[1] *Auguste Comte and Positivism*, pp. 15–16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யது. 'வருங்கால நல்லூழியை எதிர்பார்ப்பதை பரிணாமவளர்ச்சிக் கொள்கை ஊக்குவிக்கவில்லை' என்று ரி. எச். ஹக்ஸ்லி பிற்காலத்தில் இதுபற்றிக் குறிப்பிட்டுள்ளார். டார்வினைப் பொறுத்தவரையில், தொடர்ந்து வாழ்வதற்காகத் தெரிவு செய்யப்பட்ட இனவகைகள், தற்செயலாகத் தெரிவுசெய்யப்பட்டவையேயல்லாமல், தன்னுணர்வுடனே செய்யப்பட்ட மாற்றத்தின் விளைவானவையல்ல. உயிரியல் அகிலம்பற்றிய இந்தப் புதிய கருத்தால் இந்தவகையிற் கருத்துச் சூழ்நிலை மாற்றியமைக்கப்பட்டமையினல், சூழ்நிலையின் முக்கியத்துவம், நிலைமைகளை வேண்டுமென்றே மாற்றியமைக்கக்கூடிய சந்தர்ப்பம், மனிதனுக்கும் அகிலத்திற்குமிடையே என்றுமே மாறிக்கொண்டும் முன்னேறிக்கொண்டுமிருக்கும் தொடர்புகள் ஆகியவை பற்றிய கருத்துக்கள் முன்பு முற்றுகப் புறக்கணிக்கப்பட்டிராத போதிலும், சமூகப் பிரச்சினைகள், அரசியல் வளர்ச்சியின் தன்மை ஆகியவை ஆராயப்பட்டபோது முக்கியமான காரணிகளாகக் கருதப்படலாயின.

ஹெபேட் ஸ்பென்சர் தொடர்ந்து அபரிமிதமாக எழுதி வெளியிட்ட நூல்கள் ஆயிரத்து எண்ணூற்று ஐம்பதாம் ஆண்டுகளுக்கும் ஆயிரத்து எண்ணூற்று எண்பதாம் ஆண்டுகளுக்குமிடையிலே இங்கிலாந்தில் இந்தப் புதிய மனப்போக்கை ஊக்குவிப்பதற்கு உதவின. ஸ்பென்சரை இன்று ஒருவரும் வாசிக்காமல் இருப்பதற்கான காரணத்தை இலகுவில் விளங்கிக்கொள்ளமுடியும். அவரின் சமூகச் சிந்தனை அடிக்கடி முரண்பாடானதாகவும் தீர்மானமற்றதாகவும் இருந்தது உண்மையே. எனினும், ஓரளவு முக்கியத்துவம் வாய்ந்தவராய், பத்தொன்பதாம் நூற்றுண்டின் தோற்றப்பாடாக அவர் விளங்குகின்ருர். விக்டோரியா மகாராணியாரின் காலத்தில் முன்னேற்றச் சிந்தனைக்கு விளக்கம் கொடுத்த ஆங்கிலேயர்களுள் தலைசிறந்தவராக அவர் திகழ்கின்ருர். ஆனல், அவரின் எடுகோள்களும் முடிவுகளும் கொம்ரேயின் எடுகோள்களிலிருந்தும் முடிவுகளிலிருந்தும் குறிப்பிடத்தக்க வகையில் வேறுபடுகின்றன. இதற்குப் பரிணும வளர்ச்சி பற்றிய வாதங்களை அவர் பயன்படுத்தியமையே ஓரளவிற்குக் காரணமாகும் என்பதைக் குறிப்பிடுதல் வேண்டும்.

டார்வினின் கருத்துக்களை அடிப்படையாக வைத்து அவர் தம்முடைய முடிவுகளைச் செய்யவில்லை. ஸ்பென்சரின் 'சமூக நிலையியல்' (Social Statics) என்ற புத்தகம் 1851 ஆம் ஆண்டிலேயே வெளிவந்துவிட்டது. ஆனல் டார்வினின் 'இனவகைகளின் மூலம்' (Origin of Species) என்ற புத்தகம் 1859 ஆம் ஆண்டிற்ருன் வெளிவந்தது. ஸ்பென்சரைப் பொறுத்தவரையில், பரிணும வளர்ச்சி பிரபஞ்சத்திலுள்ள ஒழுங்கின் வளர்ச்சியையும் பிரபஞ்சத்திலுள்ள யாவற்றையுமே குறிக்கின்றது. தெய்வத்தினுடைய ஆணையின் விளைவான ஒரு தேவையை ஒரு பரிணும வளர்ச்சி கொண்டிருக்கின்றது என அவர் கருதினர். இதனல் நிலைமைகளுக்கு ஏற்பச் சரிசெய்துகொள்வது தொடர்ந்து வாழ்வதை உறுதிசெய்து கொள்வதோடு மட்டுமல்லாமல், புலனுணர்ச்சியுடையவற்றுக்கு திருப்தி நிலையையும் கொடுக்கின்றது. இந்தத் திருப்தி நிலையை மகிழ்ச்சி என்று அவர் அழைத்தார். நிலைமைகளுக்கு ஏற்பச் சரிசெய்து கொள்ளத் தவறுபவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் தம்மைத்தாமே அழித்துகொள்ளும் ஆபத்திற்குள்ளாவதனுல், தீமை எப்பொழுதும் குறைந்துகொண்டே செல்லும். எனினும், நிறைவுள்ள சமநிலையை நோக்கி முன்னேறுவதைத் தடுக்கவோ தவிர்க்கவோ முடியாது என்று கருதிய முந்திய பிரெஞ்சுச் சிந்தனையாளர்களைப்போல் சமூகத் தொகுதிகளின் அடிப்படையில் ஸ்பென்சர் தம்முடைய பகுப்பாய்வை நடத்தவில்லை. அதற்கு மாருக, ஹொப்சைப் போன்று, தனித்தனி அலகுகளின் திரளாகவே சமூகம் இருப்பதாக அவர் கொண்டார். சுதந்திரமாக வாழ்ந்தால் மட்டுமே இந்தத் தனி மனிதர்கள் தமது நிலைமைகளைச் சிறந்தமுறையிற் பயன்படுத்தி, திருப்திகரமான வகையிலே தம்மைச் சரிசெய்து கொள்வார்கள். தூரதிட்டமாக, அவர்களைப்போன்ற மற்றவர்களும் இதே நிலைமைகளிலேயே உள்ளனர். இதனுல் ஒரு மனிதனின் சுதந்திரம் மற்ற மனிதனின் சுதந்திரத்தைப் பறிக்க அனுமதிக்கப் படலாகாது என்பது வெளிப்படை. எனவே, "தவிர்க்கமுடியாத கட்டுப்பாட்டைச் சமமாக நாம் பகிர்ந்தளித்தல் வேண்டும்". சமமான சுதந்திரம் என்ற தமது விதியை ஸ்பென்சர் இந்த வகையிற் பெறுகின்ருர்: "தனது திறன்களைப் பிரயோகிப்பதற்கான பூரண சுதந்திரம் இருத்தல் வேண்டுமென்று ஒவ்வொரு மனிதனும் கோருகின்றபோது, அந்தச் சுதந்திரம் தனக்கிருப்பதைப் போன்று மற்ற ஒவ்வொருவருக்கும் இருக்கும் சுதந்திரத்தோடு ஒத்துப்போவதாக இருத்தல் வேண்டும்"[1]. மற்ற அம்சங்களில் ஒத்திருக்கும் இந்தக் கருத்தை, மாற்றத்தின் இயல்தகவு ஓரளவு திருத்தியமைக்கின்றது. "சமூக நிலை என்பது தேவையான ஒரு நிலையாகும். அத்தகைய நிலையின்கீழ் ஏற்படக்கூடிய அதிகப்படியான மகிழ்ச்சிக்குரிய நிலைமைகள் உறுதியானவை, எமது குணவியல்புகள் மட்டுமே உறுதியற்ற விடயங்களாகவுள்ளன. எனவே, நிலைமைகட்கேற்றவகையிலே திறம்பட அவை திருத்தப்படுதல்வேண்டும். தார்மீகப் போதனைகளும் ஒழுக்கமும் இந்த நடைமுறையைத் துரிதப்படுத்துவதையே தமது நோக்கமாகக் கொண்டிருத்தல் வேண்டும்."[2]

மனிதனின் குணதிசயங்களை வளரச் செய்வதற்கு இந்த ஒழுங்கை அல்லது கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கும் முறையிற்ருன் முன்னேற்றத்தின் முந்திய ஆதாவாளர்களிலிருந்து ஸ்பென்சர் குறிப்பிடத்தக்கவகையில் வேறுபடுகின்ருர். ஒத்துழைப்பாகக் கூடி வாழ்தலை ஒழுங்கு செய்யும் திறமையையும், அதைப் பேணிப் பாதுகாக்கும் திறமையையும் வாழ்க்கைப்போட்டியில் வெற்றிபெற்றுத் தொடர்ந்து வாழும் தகைமையைப் பெறும் இனவகைகள் கொண்டிருத்தல் வேண்டும் என்ற டார்வினின் கருதுகோளை அடிப்படையிலே நாமும் கொள்ளுதல் வேண்டும். எனவே, ஒரு குறிப்பிட்ட பிரிவினுள்ள அறியாமையையுடைய உறுப்பினர்களது சீர்ப்படுத்திக் கொள்ளுந் திறனுனது, தாம் வாழும் சூழ்நிலைகளை நன்ருக அறிந்துகொண்டு அவற்றைக் கட்டுப்படுத்தும் வல்லமையும் அறிவும் படைத்தவர்களின் முன்னறிவிலே தங்கியிருக்கும். அத்தகைய வாதம் முன்

[1] Social Statics (London 1851) p. 78.

[2] Social Statics, p. 70.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னேற்ற வளர்ச்சி பற்றிய கொம்ரேயின் கருத்துடன் இணங்கக்கூடியதாகும். இந்தக் கட்டத்திலே முரண்பட்ட கருத்தொன்றை ஸ்பென்சர் அறிமுகம் செய்து வைக்கின்ருர். இந்த முரண்பட்ட கருத்திற்கு உயிரியல் சான்று எதுவும் கிடைக்கவில்லை. அத்துடன், மத்திய அமைப்பு முறையில் மரபு வழியாக ஏற்பட்டிருந்த அவநம்பிக்கையின் ஓர் அங்கமாக அது ஆரம்பிக்கப்பட்டிருப்பதோடு, அரசிற்கெதிராகத் தனியாரின் உரிமைகட்கு முக்கியத்துவம் அளிக்கப்படல் வேண்டும் என்று அது வற்புறுத்தவும் செய்கின்றது. சூழ்நிலைக்கேற்ப வெற்றிகரமான முறையிலே தங்களைச் சீர்ப்படுத்திக் கொள்பவர்கள் எப்பொழுதும் தனி மனிதர்களாகவேயிருப்பார்கள். கூட்டத்தாருடைய நிறுவனங்களின் அரசியல் தொழிற்பாடுகள், மேலும் மேலும் கெடுதலைச் செய்வனவாகவிருக்கும் என்று ஸ்பென்சர் கருதுகின்ருர். சீர்ப்படுத்திக் கொள்ளுங்கள் அல்லது அழிந்துவிடுங்கள் என்று தனி மனிதர்களைக் கட்டாயப்படுத்தும் இயற்கையின் பரிணும வளர்ச்சி விதிக்கு அவர்கள் கீழ்ப்படிந்து நடந்துகொள்வதற்குத் தேவையான சுதந்திரத்தை, அத்தொழிற்பாடுகள் கட்டுப்படுத்தும் போக்குடையனவாக இருக்கின்றன.

அரசிற்கெதிராகத் தனிமனிதர் உரிமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் என்ற வாதம், சரித்திர முறையான ஆரம்பத்தைக் கொண்டிருப்பதோடு, பல தார்மீக வாதங்களையும் தனக்குச் சார்பாக வைத்திருக்கின்றது. இணங்காத மறுதலைக் கிறித்துவ வட்டாரங்களிடையே இந்த வாதம் குறிப்பிடத்தக்க வகையிற் செல்வாக்குப் பெற்றிருந்தது. ஹூக்கரின் அரசு-திருச்சபைக்கு விசுவாசமாக இருக்க வேண்டும் என்ற கருத்தின் முக்கியத்துவத்தைக் குறைப்பதற்கு அவ்வாதம் பயன்படுத்தப்பட்டமையே அதற்குக் காரணமாகும். ஏற்புடைச் சமயத்திலிருந்து பிணக்குமுடையவர் என்ற மரபின் பின்னணியிலே ஸ்பென்சர் இக்கருத்துக்களை அப்படியே ஏற்றுக் கொண்டார். வாழ்க்கை, சுதந்திரம், சொத்துரிமை, பரிவர்த்தனை, பேச்சுச் சுதந்திம், அவர் கூறுமாப்போல அரசைக் கவனிக்காமல் விடும் உரிமை, அரசிலிருந்து பிரிந்து செல்லும் உரிமை போன்ற பாரம்பரிய உரிமைகள் இயற்கைத் தேவைகள் என்ற அடிப்படையில் இப்பொழுது ஆதரிக்கப்படுகின்றன. சூழ்நிலைக்கேற்பச் சீர்ப்படுத்திக் கொள்வது பற்றிய பிரபஞ்ச விதி வாழ்க்கையின் முதலாவது விதியாகக் கொள்ளப்படுகின்றது. இது லொக்கின் தார்மீக விதியே தவிர வேறன்று. பரிணும வளர்ச்சியினது நடைமுறையின் அடிப்படையில் ஹொப்சின் வாதங்கள் இதற்கு ஆதரவளிக்கின்றன. இதனுடைய இயல்பிற்கும் இது செல்லுபடியாகுந் தன்மைக்கும் ஸ்பென்சரின் வார்த்தைகளையே நாம் நம்பியிருக்க வேண்டியவராவோம். மக்கள் மனத்திற் பதிந்திருந்ததும் செல்வாக்கைப் பெற்றிருந்ததுமான அந்தக் கொள்கை, விஞ்ஞான அறிவை ஆதாரவாகக் கொண்டிருந்தமையே ஸ்பென்சரின் கருத்துக்கள் மிகவும் செல்வாக்குப் பெற்றிருந்தமைக்குக் காரணமாகும். அவரின் மரணத்திற்குப் பின்பு அவரின் கொள்கையின் எடுகோள்களை ஒன்ருகப் பிணைத்து வைக்க முடியாமற் போய்விட்டதில் வியப்பில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தியானது ஆரம்ப நிலையில் இருந்த முற்காலத்தில், அரசு—இப்பதத்தை அரசாங்கம் என்ற அர்த்தத்திலேயே அவர் பயன்படுத்துகின்றார்—சமூகத்திற்குப் பயன் நல்கி வந்தது என்பதை ஸ்பென்சர் மறுக்கவில்லை. சமூகத்தின் உறுப்பினர்களை அதிகம் கவனத்திற் கெடுக்காமற் சமூகத்தைப் பற்றியே சிந்திக்கும்போது, சேதனவுறுப்பு பற்றிய உருவகமொழியை ஸ்பென்சர் பயன்படுத்துகின்றார். சமூகத்தின் அமைப்புமுறை படிப்படியாக முன்னேறும்போது, முந்திய ஒரு கட்டத்திலே உயிர் வாழ்வதற்கு மிகச்சிறந்த தொடர்புகளாக இருந்தவை—கொம்ரேயைப் போன்று ஸ்பென்சரும் இராணுவ அமைப்பு முறையை உதாரணமாகக் காட்டுகின்றார்—தம்மினும் பார்க்கச் சிறப்பான சமூகக் கட்டமைப்பிற்கு, உதாரணமாகக் கைத்தொழில் சார்ந்த அமைப்பு முறைக்கு, இடமளிக்கவேண்டும். இந்த முன்னேற்றம், அதிகரித்துச்செல் தனியாரின் பங்கு என்ற தத்துவத்தின்படி அமைதல் வேண்டும். அடக்குமுறையை நடாத்தும் முகவர்தாபனம் என்று ஸ்பென்சராற் கருதப்பட்ட அரசாங்கம் அன்றுள்ள சமூகச் சூழ்நிலைக்கு எவ்வளவுதான் தேவையானதாக இருந்த போதிலும், தனிமனிதர் தங்களின் சூழ்நிலைகட்கேற்பத் தங்களை நிறைவான முறையிற் படிப்படியாகச் சீராக்கிக் கொள்ளும்போது அவ்வரசாங்கத்தின் நிறைவிலாத்தன்மை உறுதியாகக் குறைக்கப்பட்டுப்போகும். அரசு படிப்படியாக அழிந்துவிடும் என்றும், வரையறைக்குட்பட்ட சரித்திர முக்கியத்துவத்தையே அது கொண்டிருக்கின்றது என்றும் கூறும் மாக்சியவாதிகளின்—எங்கிள்ஸ் இக்கருத்தை வெளியிட்டார்—நம்பிக்கைக்கும், ஒவ்வொரு மனிதனதும் விடுதலை வேட்கையோடு கூடிய தார்மீக உணர்வானது பெரும்பான்மையோரிடமிருந்துவரும் பலாத்காரத்தையுமே இறுதியிலே தடைசெய்யும் என்றும், அம்முறைமூலம் அரசாங்கம் இருக்கமுடியாதவாறு செய்துவிடும் என்றும் கூறும் ஸ்பென்சரின் நம்பிக்கைக்குமிடையே ஆச்சரியத்தைக் கொடுக்கக்கூடிய ஒற்றுமையொன்று காணப்படுகின்றது. 'சமூக நலத்திற்கான நிலைமையை—சட்டத்தின் மூலம் திருத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய தேவை எதுவுமற்ற நிலைமையை—நோக்கி ஏற்படும் முன்னேற்றமானது, இத்தகைய திருத்த நடவடிக்கைகளைத் தூரத் தூக்கி எறிந்துவிடக்கூடியதும் திருத்தச் சட்டங்களைக் கொடுக்கும் அதிகாரத்தைக் கவனத்திற்கு எடுக்காமல் விடக்கூடியதுமான நிலைமையை நோக்கி ஏற்படும் முன்னேற்றமாகும்.'[1]

சமூகவியல் பற்றிய பிந்திய கட்டுரைகளிலே சமூக உறுப்புக்களுக்கும் தனி மனிதனுக்குமிடையேயுள்ள ஒற்றுமைகளை ஸ்பென்சர் விரிவாகத் தயாரித்தளித்தார். ஆனால் அவருடைய சமூக உறுப்புக்கள் என்றுமே பூரணத்துவம் பெற்றனவாக இருக்கவில்லை. அவற்றின் உறுப்பினர்களுடைய அக்கறைகளின் அடிப்படையில் அவ்வுறுப்புக்களை மறுபெயர்வு செய்யவேண்டிய தேவை ஏற்பட்டது. மனிதனின் சமூக அலகு உயிர்ப்பொருளாக இருக்கும் வரையும் அது தனித்தன்மை வாய்ந்ததாகும்: 'தனி அலகுகளின் நன்மையைக் கருத்திற்

[1] Social Statics, p. 215.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளாமல் மொத்தத் தொகையின் பொதுநலத்தை அடைவதை நாம் எமது இலட்சியமாகக் கொள்ளலாகாது. உறுப்பினர்களின் நன்மைக்குச் சமூகம் இருக்கின்றதேயல்லாமல் சமூகத்தின் நன்மைக்காக உறுப்பினர்கள் இருப்ப தில்லை............... அரசின் உரிமைகளைத் தனியாக எடுத்துக் கொண்டால் அவை எந்த முக்கியத்துவத்தையும் உடையவையல்ல; சமூகத்தின் உறுப்பினர் களான தனிமனிதரின் உரிமைகளை உள்ளடக்கியிருக்கும்போதே அவ்வுரிமை கள் கொஞ்சமாவது முக்கியத்துவத்தைப் பெறுகின்றன'[1].

அரசியலின் மையப் பிரச்சினையைக் குறிப்பிடுவதில் ஸ்பென்சர் ஒன்றிற்கு மேற்பட்ட தடவைகள் வெற்றிபெற்றார். அப்பிரச்சினைகள் இயற்கையாகவும் காலப்போக்கிலும் தமது முக்கியத்துவத்தை இழந்துவிடும் என்ற நன்னம்பிக் கையை வெளியிடுவதில் அவர் வெற்றிபெற்றாரேயல்லாமல், தங்களைப் பற்றிய உணர்வையே அதிகம் கொண்டுள்ளவர்களும் சிலவேளைகளில் தங்கள் நலனையே எப்பொழுதும் கருத்திற் கொண்டுள்ளவர்களுமான தனிமனிதர் ஒன்று கூடி வாழ்வதனால் தோன்றும் முரண்பாட்டைப் புரிந்துகொண்டதாகத் தெரிய வில்லை. தனிமனித உரிமைகள் பற்றிய கொள்கைக்கு—அவை தார்மீக முறை யானவையாயினும், அல்லது இயற்கையானவையாயினும்—ஆதரவாகப் பரிணும வளர்ச்சி பற்றிய வாதங்களைப் பயன்படுத்தலாம் என்பதை அனைவரும் ஏற் றுக் கொள்ளக்கூடிய வகையில் அவர் உரைக்கவில்லை.

சிந்தனைக் குழப்பம் ஓரளவு குறைவாக இருக்கத்தக்க வகையிலும், ஆனல் ஸ்பென்சர் போன்றோர் பின்பற்றிய முறையை ஒத்த வகையிலும், சமூப் பிரச் சினைகளுக்குப் பரிணும வளர்ச்சிக் கொள்கையைப் பிரயோகித்த முன்னேற்ற மான சிந்தனையாளர்களுள் ஒருவராக ரி. எச். ஹக்ஸ்லியைக் குறிப்பிடலாம். இயற்கைச் சூழ்நிலைகள் தொடர்பாகத் தகுதி பெற்றவரே பிழைத்திருக்க முடி யும் என்ற டார்வினின் தத்துவத்தைப் பொதுவாக அவர் ஏற்றுக்கொண்ட போதிலும், ஸ்பென்சரும் கொண்டோசெவும் செய்ததைப் போன்று, ஈட்டப் பெற்ற சிறப்பியல்புகள் மரபுரிமையாகக் கிடைக்கின்றன என்ற நிராகரிக்கப் பட்டு விட்ட கொள்கையில் ஹக்ஸ்லியும் அளவிற்கு அதிகமான நம்பிக்கை வைக்கவில்லை. எனவே, இயற்கை நடைமுறைகள்பற்றிய டார்வினின் வர் ணனை, "எமது காலத்திற்குரிய தீவிர தனியாண்மைவாதம்" என அவர் வழங்கிய முறையை அவர் ஆதரிக்கும்படியோ, அல்லது பிரபஞ்சத்தின் இயல்பு என்ற உவமையைச் சமூகத்திற்குப் பிரயோகிப்பதற்காக மேற்கொள் ளப்பட்ட முயற்சியை அங்கீகரிக்கும்படியோ அவரைத் தூண்டவில்லை. இதற்குமாறாக, தனி மனிதர் தமது விருப்பங்களை மற்றவர்கள் மீது திணிப்ப தைக் குறிக்கின்ற நடத்தைகளை, கூட்டத்தினரின் நன்மைக்காகக் கட்டுப் படுத்துதல் வேண்டும். "அரசிற்குத் தனியொருவன் செய்யவேண்டிய கடமை கள் மறக்கப்பட்டுவிட்டன; தனது உரிமையை வற்புறுத்தும் அவனுடைய

[1] *The Principles of Sociology* (3rd edition, London 1893), vol. 1, pp. 449–50

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்குக்களுக்கு உரிமைகளின் பெயரில் மதிப்பளிக்கப்பட்டிருக்கின்றது"[1] என்று கூறியதன் மூலம், ஸ்பென்சரின் பரிணும வளர்ச்சிக் கொள்கையை—ஸ்பென்சரின் கொள்கையைப் பெயர் சொல்லிக் குறிப்பிடவில்லை—சரியான முறையில் ஹக்ஸ்லி மதிப்பிடுகின்ருர்.

தனி மனிதரின் சிதைந்துவிடும் தன்மையையுடைய, ஆனல் இயற்கையிலமைந்த தன்னலத்தை ஏற்றுக்கொள்ளும் விடயத்தில், ஹக்ஸ்லி ஹொப்சின் வழியைப் பெரிதும் பின்பற்றுகின்ருர். அத்துடன், ஸ்பென்சர் செய்ததைப் போன்று இந்தச் சூழ்நிலையிலிருந்து ஒழுக்கநெறி விதிகளை உருவாக்க அவர் முயலவில்லை. மக்கள் கூட்டத்தின் அக்கறையிலிருந்தே ஒரு சமூகச் செய்கை நிகழக்கூடிய சந்தர்ப்பம் உருவாகின்றது. இந்தச் சமூகச் செய்கை இயற்கையான ஆரம்பத்தைக் கொண்டிருந்தபோதிலும், நடைமுறையில் இயற்கைத் தெரிவின் சிறப்பியல்புகட்கு முரண்பாடாகவிருக்கின்றது. கொடுக்கப்பட்ட ஒரு சூழ்நிலைக்கேற்பத் தம்மைச் சீர்ப்படுத்திக்கொள்பவரையே இயற்கை சிறந்த முறையில் ஆதரிக்கின்றது. எனவே, ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் வசிப்பவர்கள் அச்சூழ்நிலைக்கேற்பத் தங்களைச் சரிசெய்து கொள்வதைப்போலவே, வசிப்பவர்கட்கு ஏற்றமுறையில் சூழ்நிலையைச் சரிசெய்து கொள்வதும் முக்கியம்வாய்ந்ததாகும். இதைச் செய்வதற்குத் தேவையான வலுவை அமைப்பு முறைமையையுடைய கூட்டத்தார் கொண்டிருப்பதனுலேயே, வெளித்தூண்டுதல்களின் மாற்றங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் முனைப்பற்ற மறுதலிப்பைச் செய்து கொண்டிருக்காமல், தார்மீக இலட்சியத்தை-சிறந்தவர் தொடர்ந்து வாழ்தல் என்ற கொள்கையை—பின்பற்றும் இயல்பையுடையவராக அவர்கள் விளங்குகின்றனர். இயற்கையின் குருட்டுத்தனமான ஆக்கிரமிப்பிற்குப் பதிலாக உள்ளுணர்வுள்ள ஒழுக்கநெறியையுடைய மனம் தன்னையொத்த மனங்களுடன் கூட்டாகச் சேர்ந்து தன்னைக் கட்டுப்படுத்தும் இலட்சியத்தைப் பின்பற்றுவது, பிரபஞ்சத்தில் ஒருபுதிய சக்தி தோன்றுவதைக் குறிக்கும். ஆனல் இந்தச் சக்தி தானுகவே மலர்ந்ததொன்று. மனிதனுக்கும் மற்ற உயிர் வகைகளுக்குமிடையேயுள்ள நெருக்கமான தொடர்புகளை விரித்துரைத்து விளங்க வைப்பதில் தளராத ஆர்வம் காட்டுபவர் ஹக்ஸ்லி. "உருவம் அற்றதிலிருந்து உருவம் உள்ளது வரையும், அசேதனவுறுப்புக்களிலிருந்து சேதனவுறுப்புக்கள் வரையும், குருட்டு வலிமையிலிருந்து உள்ளுணர்வுள்ள அறிவு, விருப்பாற்றல் ஆகியவை வரையுமுள்ள அனைத்துமே இயற்கையின் மிகப்பெரிய முன்னேற்றத்தின் அடிப்படையில் இணைக்கப்பட்டிருக்கின்றன என்பதைச் சந்தேகிப்பதற்கு எந்தவிதமான காரணமும் கிடையாது"[2] என்பதை அவர் உணர்ந்தார்.

தம்மை எதிர்நோக்கிய பிரச்சினையைத் தினுசாக முறைப்படுத்திக்கூறும் ஒழுங்கை ஹக்ஸ்லி தாமே தலைகீழாக மாற்றுகின்ருர். பரிணும வளர்ச்சி பற்றிய ஒழுக்க நெறியில் அவர் அக்கறையோ ஆர்வமோ காட்டவில்லை. அதற்குமாருக ஒழுக்கநெறியின் பரிணுமவளர்ச்சியிலே அவர் அக்கறை காட்டுகின்ருர். "நல்ல

[1] *Evolution and Ethics* (London 1893), p. 34.

[2] *Man's Place in Nature and other Anthropological Essays* (London 1895), p. 151

ஆராய்ச்சித் தத்துவங்களால் வழிநடத்தப்படுபவையும் பொது எத்தனத்தால் ஒழுங்கமைக்கப்படுபவையுமான அறிவு, விருப்பாற்றல் ஆகியவை, இப்பொழுது சரித்திரகாலம் என்று நாம் குறிப்பிடுவதிலும் பார்க்க நீண்ட காலத்திற்கு வாழ்க்கை நிலைமைகளைப் பெரிதளவிலே திருத்தியமைக்கும்" என்று அவர் கருதுகின்றார். உற்சாகமூட்டும் இந்தப் போக்கிற்கு எதிரான போக்கு ஒன்றை யும் காணமுடிகின்றது. "உலகம் உள்ளளவும் இந்த ஒழுக்க நெறியானது விடாப்பிடியானதும் பலம்வாய்ந்ததுமான எதிரியொன்றைச் சமாளிக்கவேண்டி யிருக்கும்."[1] பாவமான அல்லது இயற்கையான தன்னலம் என்ற இக்கருத்து அகுஸ்தீன், ஹொப்ஸ், ஹக்ஸ்லி ஆகியோரின் சிந்தனைகளது அடிப்படையில் ஒரேமாதிரியாகவே அமைந்திருக்கின்றது. இந்தத் தன்னலத்தைக் கட்டுப் படுத்துதல், நல்வழிப்படுத்துதல், பொது அக்கறை சம்பந்தப்பட்ட மட்டில் பொது நலத்தைப் பேணுவதற்கான தேவை காரணமாகக் கண்டித்தல் ஆகியவை அரசியல் வலுவின் கடமைகளாகும். எளிய உருவிற் பார்ப்பதாயின், ஹக்ஸ்லியைப் பொறுத்தவரையில், இந்த ஒப்பந்தம் முழுக் கூட்டத்தினருக்கும் உரிய ஒப்பந்தமாகும்; அதாவது கூட்டத்தின் உறுப்பினர்கள் ஒருவரையொரு வர் தாக்குவதைத் தவிர்ப்பதற்கான ஒப்பந்தமாகும். இந்த ஒப்பந்தத்தை— இது வெளிப்படையாகக் கூறப்படாததாக இருக்கக்கூடும்—மதித்து நடப் பவர்களின் சார்பிலே அதைமீறும் நபர்களுக்கு எதிராக, முழுக் கூட்டத்தினரு டைய பலாத்காரத்தையும் பிரயோகிப்பதற்கு மனித சமூகம் இணங்கியிருப் பது அதற்குக் கிட்டியுள்ள முன்னேற்றமாகும்.

வெளிப்படையாகக் கூறுவதானால், மரபு வழிவந்த கொள்கையைத் திரும்ப வும் கூறுவதாக இந்தக் கருத்துக்கள் இருக்கின்றன. அத்துடன், பரிணாமவளர்ச் சிக் கோட்பாட்டில் ஏற்படும் முன்னேற்றம் ஒருவருக்கொருவர் உதவும் எமது பெரும் பணியில் எமக்கு உதவக்கூடிய தகுதியைப் பெற்றிருக்கின்றது என்று ஹக்ஸ்லி கருதினார். இவ்வாறு செய்யக்கூடியதாகவிருப்பது, இந்தச் சமுதாய இலட்சியத்தை அடைவதற்கு முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்ற கடமையுடன் சம்பந்தப்பட்டிருக்கின்றது என்பது வெளிப்படை. "இறுதியாக, எனது அறிவிற்கெட்டியபடி, முன்னேற்றப்பாதையிற் செல்ல உதவும் சக்தியை நாம் கொண்டிருக்குமளவும், அச்சக்தியைப் பயன்படுத்தி எமது அறிவையும் சக்தியையும் எமது இனத்திற்கு ஈடேற்றமளிக்கும் இந்தப் பிரதான சேவை யைச் செய்வதிற் செலவிடுவது எமது தலையாய கடமை என்பதை எவராவது சந்தேகிப்பதாகத் தெரியவில்லை"[2].

நிலைமைகளையும் தனிமனிதர்களையும் மாற்றுவதும் திரும்பச் சரிசெய்வதும் இயலுமாகலாம் என்பதுபற்றியும், அவ்வாறு செய்வதனால் அவைகட்கிடையே யுள்ள தொடர்புகள், அவற்றின் விளைவுகள் ஆகியவற்றில் உண்டாகும் மாற்றம் பற்றியும் மீண்டும் புதிதாக வற்புறுத்தப்பட்டிருப்பது அரசியல், சமூகப் பிரச்

[1] *Evolution and Ethics*, p. 36.

[2] *Evolution and Ethics*. p. 31

9—CP 2592 (1/68)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினைகளை ஆராய்வதிலே பரிணும வளர்ச்சிக் கொள்கை செய்த முக்கிய தொண்டாகும். இருபதாம் நூற்ருண்டின் சமூகச் சிந்தனைக்கும் அரசியல் நடைமுறைக்கும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படும் கட்டுரைத் தொகுதியொன்றிலே சிட்னிவெப் இவ்வாறு எழுதியிருக்கிருர். "கொம்ரே, டார்வின், ஹெபேட் ஸ்பென்சர் ஆகியோர் எடுத்த முயற்சிகளின் விளைவாக, இலட்சிய சமூகம் மாற்றப்பட முடியாத அரசாகவிருக்கும் என்று நாம் கருதமுடியாது. சமூக இலட்சிய அமைப்பு அசையாமல் நிலைத்து நிற்கும் இயல்பிலிருந்து மாறி இயங்கும் தன்மையைப் பெற்றுவிட்டது. சமூக அமைப்பு எப்பொழுதும் தொடர்பாக வளர்ச்சி பெற்றுக்கொண்டும் அபிவிருத்தியடைந்துகொண்டும் இருக்கவேண்டும் என்பது ஒரு விதியாகவே மாறிவிட்டது. பழைய ஒழுங்கிலிருந்து புதிய ஒழுங்கு படிப்படியாக வளர்ந்து வருவதையே மெய்யியலறிஞர்கள் இப்பொழுது காண்கின்ருர்கள். அவ்வளர்ச்சியின்போது, பூரண சமூக அமைப்பிலே எந்தப் புள்ளியிலேனும் சடுதியான மாற்றம் ஏற்படுவதோ, அல்லது தொடர்ச்சி அறுத்துவிடுவதோ கிடையாது."[1]

சமூக வளர்ச்சிக்காய பலாத்காரமான புரட்சித் திட்டங்களைப் பரிணும வளர்ச்சியுடைய சமூகச் சிந்தனை ஒதுக்கித் தள்ளிவிட்டதாகக் கூறுவது முற்ருக உண்மையாகாது. புரட்சிகரமான திட்டங்கள் பற்றிய பாரம்பரியம் தனிப்பட்ட சிந்தனைக் கோலத்திலிருந்து பெறப்பட்டமையினுல், அதை எமது இறுதி அத்தியாயத்தில் ஆராய்வோம். அதற்கிடையில், மேற்கு உலகிலுள்ள சனநாயக நாடு—அரசுகளிலே—அவை தம்மை இவ்வாறுதான் அமைத்துக் கொள்கின்றன—அரசியற் சிந்தனையானது தற்காலப் போக்குப்பற்றி வெப் செய்த மதிப்பீட்டை அண்மித்துக் கொண்டு வருகின்றது; ஆனுல், அது வேறுபட்ட வற்புறுத்தல்களுடன் இப்படி அமைந்துள்ளது என்பதைக் குறிப்பிடுதல் வேண்டும்.

பழைய மெய்யியலுக்குப் பதிலாக இயக்க இலட்சியம் என்று வெப் அழைத்ததைப் பொதுவாகப் பிரதியீடு செய்வதற்கு, கொள்கைநிலையில் உண்டான அபிவிருத்தியைப் போன்றே நடைமுறையில் ஏற்பட்ட மாறுதல்களும் உதவின. சிந்திக்கும் முறைகளிலே முன்பு ஏற்பட்ட வளர்ச்சியின் விளைவாகவே இந்த நடைமுறை மாற்றங்கள் அமைந்திருந்தன. சென்ற நூற்ருண்டிலும் நாம் வாழும் இந்த நூற்ருண்டிலும் நடைபெற்ற பொருளாதாரப் புரட்சிகளின் ஆரம்பத்தை விஞ்ஞானச் சிந்தனையின் பிரயோகத்திலும் விளைவுகளிலும் காண முடிவதைப் போன்றே, இந்தத் தோற்றப்பாட்டையும் நவீன சகாப்தத்தின் ஆரம்ப காலத்திலிருந்தே காண முடிகின்றது. பொருளாதார உற்பத்தி உயர்ந்தமை, சனத்தொகை விரைவாகப் பெருகியமை, எல்லாக் குடிமக்களுக்கும் கல்வி வசதிகள் விரிவாக்கப்பட்டமை, போக்குவரத்து முறையிலும் மற்றத் தொடர்புச் சாதனங்களிலும் தீவிரமாற்றம் ஏற்பட்டமை ஆகிய புதிய அபிவிருத்திகளால் உருவாக்கப்பெற்ற நிலைமையைச் சமாளிக்கக்கூடிய வகையில் மரபு வழிவந்த சமூக, பொருளாதாரக் கோலத்தைத் திருத்தியமைக்க வேண்டி நேரிட்டது. சமூகக்

[1] *Fabian Essays in Socialism*, edited G. Bernard Shaw (London 1889), p. 31.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டங்கள் தமக்குள்ளே கொண்டிருந்த தொடர்புகளை மாற்றியமைப்பதற் கான சந்தர்ப்பங்களும், நிலையாக இருக்கும் தன்மையை யிழந்துவிட்ட செல் வத்தைத் திரும்பவும் பகிர்ந்தளிப்பதற்கான சந்தர்ப்பங்களும், சென்ற காலத் தில் வெறும் கனுக்களாகவிருந்த சிலவற்றையேனும் எதிர்காலத்தில் நனவாக மாற்றக்கூடிய கட்டத்தை அடைந்தன.

நெகிழ்ச்சித் தன்மையைக் கொண்டதும் வளர்ந்து கொண்டு செல்வதுமான சமூகக் கட்டமைப்புப் பற்றிய தற்காலக் கற்பனையுடன், சமூகம்பற்றிய முற் போக்குக் கோட்பாட்டிலிருந்து பிரித்தறிய முடியாத கொள்கை முரண்பாட்டை யும் பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து நாம் மரபுரிமையாகப் பெற்றிருக்கின் றோம். தனி மனிதரின் வாழ்க்கையில் மட்டுமே முற்போக்குப் பெறுமதிகள் இறு தியாகக் காணப்படுகின்றன என்றும், அதே நேரத்தில் ஒழுங்கமைப்பையுடைய சமூகமாகத் தனிமனிதர் யாவரும் ஒன்றாக இணைந்து செயற்படுவதன் மூலமே அவற்றை உருவாக்க முடியும் என்றும் கூறுவதிலேயே அந்த முரண்பாடுகள் தென்படுகின்றன என்று சுருக்கமாகக் கூறலாம். பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த பிரித்தானியச் சிந்தனையாளர் இருவர் குறிப்பாக இந்தப் பிரச்சினை யைப் பற்றி ஆராய்ந்தார்கள். நாம் முன்பு குறிப்பிட்ட ஜோன் ஸ்டுவட் மில்லும் ஒக்ஸ்போட் மெய்யியலறிஞரான ரி. எச். கிரீனுமே அவ்விருவருமாவர். தனிமனி தரின் தார்மீக வளர்ச்சி சமுதாயத்திற்கு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்ற பிரச்சினையே மில்லின் மனத்தை அதிகம் கவர்ந்தது. அரசின் உறுப்பினர் கள் யாவருக்கும் குடியுரிமை சார்ந்த உரிமைகளும் கடமைகளும் இருக்கவேண் டியது எவ்வளவு முக்கியம் என்பதற்கும், அவற்றைப் பிரயோகிக்கும் உரிமை அவர்கட்கு இருக்கவேண்டியது எவ்வளவு முக்கியம் என்பதற்கும் கிரீன் முக்கி யத்துவமளித்தார்.

சரித்திரப் போக்கை ஒட்டியே மில் சிந்தனை செய்தார். பிரெஞ்சுச் சிந்தனை யாளர்களுள் சென்ற் சைமனின் கோட்பாட்டுப் பிரிவோடு நல்ல பழக்கமுடைய வராய் இருந்ததினாலேயே—அதை அவரே ஒப்புக்கொண்டார்—மில் இந்த வகை யிற் சிந்தனை செய்தார். இந்த உண்மை ஒன்றே பழைய பயன்பாட்டுக் கொள்கையின் கருத்தியல்பான வாதத்திலிருந்து அவரைப் பிரித்துக்காட்டி யது. நிலைதிரிபு நடைபெறும் காலகட்டத்திலே தாம் வாழ்வதை அவரே உணர்ந்தார். அவர் குறிப்பிடுவதைப்போல் உண்மையில் அது "பலமான தக ராறுகளை, ஆயின் பலமற்ற நம்பிக்கைகளை உடைய காலமாகும்." இந்தச் சகாப் தத்திலிருந்து சென்ற் சைமனின் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கண்டனக் காலம், சேதனத்தன்மைக் காலம் ஆகிய இருவகைக் காலங்களிலுமுள்ள சிறந்த வைகளை ஒன்றாக இணைக்கக்கூடிய ஒரு சகாப்தத்தை அவர் எதிர்நோக்கினார். முன்னைச் சகாப்தத்திலே, "கட்டுப்படுத்தப்படாத சிந்தனைச் சுதந்திரம், மற்ற வர்களுக்கு இன்னல் விளைவிக்காமல் எல்லாத் துறைகளிலும் தனிமனிதர் தமது விருப்பத்திற்கியைய நடப்பதற்கான எல்லையற்ற விடுதலை" ஆகியவைகளை மில் எதிர்பார்த்தார். பின்னைச் சகாப்தத்திலோ, நியாயத்தையும் ஒருமித்த உணர்ச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சியையும் அடிப்படையாகக் கொண்ட உறுதியான தார்மீக நம்பிக்கைகள் உருவாக வேண்டும் என்று எதிர்பார்த்தார்[1]. அவர் அளவிற்கு மிஞ்சியே எதிர்பார்த்துவிட்டார்.

"தமது சொந்த மகிழ்ச்சியைத் தவிர்ந்த வேறு ஏதாவது பொருளிலோ, மற்றவர்களின் மகிழ்ச்சியிலோ, மனித இனத்தை அபிவிருத்தி செய்கின்ற பெரு நோக்கிலோ, பிழைப்புக்கான வகைதுறையாகவன்றி, இலட்சிய நோக்கமாகப் பின்பற்றப்படும் கலையிலோ அல்லது முயற்சியிலோ தமது மனத்தைப் பதியவைப்பவர்களே மகிழ்ச்சியை அடைகின்றார்கள்" என்பதை ஆரம்பத்திற் கண்டுகொண்டதன் விளைவாகவே,[2] மில் பயன்பாட்டுக் கோட்பாட்டிற் பயிற்சி பெற்றிருந்தபோதிலும் அக்கோட்பாட்டிலிருந்து வேறுபட்டார். இந்த இரண்டாவது வேறுபாடு முதலாவது வேறுபாட்டைப் போன்றே முக்கியத்துவம் வாய்ந்ததாகும். தன்னைப்பற்றிய அக்கறை என்பது தன்னலமாக மட்டும் இருக்கத் தேவையில்லை; ஆனால் மற்றவர்களை முன்னேற்றுவிப்பதற்குத் தேவையான முதலாவது படியாகவும் இருக்கின்றது. தனியாண்மைத் தன்மையை விருத்தி செய்வது நல்லது என்ற காரணத்திற்காகவும் அது ஏற்படுத்தும் சமூக விளைவுகளுக்காகவும் அதை விருத்தி செய்தல் வேண்டும் என்று மில் கொண்ட கருத்து பெந்தமின் மிகுமகிழ்ச்சி என்பதன் கருத்தை ஒத்திருந்தது. இது தனி மனிதனதும் சமூகத்தினதும் முன்னேற்றத்திற்கான பிரதான அம்சம் என்றும், மகிழ்ச்சிக்கான முக்கியமான அம்சம் என்றும் அவர் கூறுகின்றார். 1859 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட 'சுதந்திரத்தைப்பற்றி' (On Liberty) என்ற மில்லின் புகழ்பெற்ற கட்டுரையிலே கருப்பொருளாக இந்தத் தனியாண்மை வழிபாட்டு மரபு விளங்குகின்றது. இந்தத் தனியாண்மை வழிபாட்டு மரபைப் பற்றி 'முரண்பாடற்றதாயும் பூரணத்துவமுடையதாயும் இருக்கக்கூடிய வகையில், தனிமனிதனின் சக்திகளை ஆகக் கூடிய அளவிலும் இசைவிணக்கத்தோடும் இருக்கக்கூடியவாறு அபிவிருத்தி செய்தல்' என்று வில்ஹெம் வொன் ஹியூம்போல்ற் கூறியுள்ளதை மில் தம்முடைய கட்டுரையில் மேற்கோளாகக் காட்டுகின்றார்.[3] அத்துடன், தம்முடைய கட்டுரையிலே முகவுரையாக, "செழிப்பான பல வகைகளில் மனிதன் அபிவிருத்தியடைய வேண்டியது மிகவும் முக்கியமானதும் இன்றியமையாததுமாகும்" என்று கூறும் ஹியூம்போல்ற்றின் கருத்தை மில் எடுத்தாண்டுள்ளார்.

மனிதாபிமானக் கோட்பாட்டில் நம்பிக்கை வைத்து அதை வற்புறுத்துவனவாக மில்லின் இந்தக் கருத்துக்கள் ஓரளவு அமைந்துள்ளன. அவை கட்டாயமாக உண்மையானவையாக இருக்கவேண்டும் என்பதைக் காட்டக்கூடிய காரணம் எதுவுமேயில்லை. ஆயின், பல தடைகளும் இடையூறுகளும் இருக்கின்றன என்பதை மில் நன்றாக உணர்ந்திருந்தார். மனித வாழ்க்கையிற் காணப்படும் தீமைகள் என்று மரபு முறைப்படி ஏற்றுக்கொள்ளப்பட்டவைகளுட் பலவற்றைத் தவிர்க்க முடியுமென்றும் எதிர்காலம் நம்பிக்கை தருவதாய்

[1] *Autobiography* (5th edition, London 1875), p. 166.

[2] *Autobiography*, p. 142.

[3] *On Liberty*, edited J. W. Gough (Oxford, Basil Blackwell, 1946) p. 50.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதாகவும் மில் கருதினர். வறுமை, நோய், அறியாமை ஆகியவைகளை வென்றுவிட முடியும். 'உலகிலே காணப்படும் பெருந் தீமைகளுட் பலவற்றை அகற்றமுடியும்' என்பதையும், கவனம், முயற்சி ஆகியவைகளின் மூலமே, மனிதனைப் பீடிக்கும் துன்பங்களுக்கான முக்கிய காரணங்களைப் பெரிதளவிலும், அக்காரணங்களுட் பெரும்பாலானவற்றை முற்றுகவும் நீக்கிவிட முடியும்'[1] என்பதையும் எவருமே சந்தேகிக்க முடியாது என்று மில் தமது கட்டுரையான "பயன்பாட்டுத் தத்துவத்தில்" (Utilitarianism) குறிப்பிட்டுள்ளார்.

பிரயோக விஞ்ஞான அறிவு வளர்ச்சியின் விளைவாக மனிதனின் சூழ்நிலையைப் பெரிதளவில் மாற்றியமைக்கக்கூடிய மிகப் பெரிய சந்தர்ப்பம் ஒன்று தோன்றியது. அது, பத்தொன்பதாம் நூற்றுண்டின் சூழ்நிலையிலே தனிமனிதனுக்கும் அரசுக்குமிடையேயுள்ள வேறுபாட்டோடு தொடர்பு கொண்டிருந்தது. அரசியல் அதிகாரத்திற்கும் தொடக்கி வைக்கும் ஆர்வத்தையுடைய மற்ற நிலையங்களுக்குமிடையே கடமைகள் பிரிக்கப்பட்டிருப்பது சம்பந்தமாகவுள்ள நீண்டகால அரசியற் பிரச்சினையை அது மீண்டும் முன்னுக்குக் கொண்டு வந்தது. இயற்கையாக நடந்துகொள்ளும் இயல்பைத் தனிமனிதர் கொண்டிருப்பதற்கும் தமது முடிவிற்குச் சுதந்திரமாக வருவதற்குத் தனிமனிதருக்குப் பெருஞ் சந்தர்ப்பம் அளிப்பதற்கும் மில் அதிக முக்கியத்துவங் கொடுத்தார். மத்திய அதிகாரம் ஒன்று எல்லா முடிவுகளையும் செய்வதனுல், "குரங்கு மாதிரி ஒருவர் செய்ததையே பின்பற்றும்" இயல்பைத் தவிர்ந்த மற்றைய மனத்திறன்கள் பாதிக்கப்பட்டுவிடக்கூடும் என்றும் அவர் பயந்தார். மில்லின் பகுப்பாராய்வு ஒரு முக்கிய முரண்பாட்டை வெளிக் கொண்டு வருகின்றது. "அபிவிருத்திக்கான ஆர்வம் என்பது எப்பொழுதும் சுதந்திரத்திற்கான ஆர்வமாக இருக்க இருக்கமுடியாது" என்ற மில்லின் வார்த்தைகள் அந்த முரண்பாட்டை எடுத்துக்காட்டுகின்றன. வழக்கத்தையும் மரபுவழியான நடத்தையையும் எதிர்க்கும் விடயத்தில் இந்த மனப்போக்குக்கள் ஒரே நோக்கத்தைக் கொண்டவையாகக் காணப்படுகின்றன. அபிவிருத்தியை ஏற்க மனமில்லாத மக்கள் மீது அது திணிக்கப்படுவதை மில் ஆதரிக்கவில்லை. வழக்கத்தின்பாற்பட்ட வல்லாட்சி தொல்லைகளைக் கொடுப்பதாக இருக்கும் என அவர் நம்புகின்றபோதிலும், தவருன நேரத்தில், தவருன வழியிலே தலையிடும் மத்திய அதிகாரத்தின் வல்லாட்சி அதனிலும் பார்க்க மோசமானதாக இருக்கும் என அவர் கருதுகின்ருர்.

மனிதனின் குணதிசயம் பலவகைப்பட்டதாக அமைதல் வேண்டும் என்ற அவரின் ஆழ்ந்த நம்பிக்கையினதும், "கணக்கற்ற ஆனல் ஒன்றேடொன்று முரண்பட்ட திசைகளில் மனித இயல்பு விரிவடைவதற்குப் பூரண சுதந்திரம் அளிக்கப்பட வேண்டியது"[2] மிகவும் முக்கியமாகும் என்ற அவரின் கருத்தினதும் மறு

[1] John Plamenatz : *The English Utilitarians* (Oxford, Basil Blackwell, 1949), p. 177. இக்கட்டுரை J. S. Mill's *Utilitarianism* என்ற நூலின் மறுபதிப்பிற்கு முகவுரையாக இருக்கின்றது.

[2] *Autobiography*, p. 253

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலை விளைவாகவே, அரசியற் கட்டுப்பாட்டை வெறுக்கும் அவருடைய கருத்து இருக்கின்றது. குறிப்பாக, மூன்று துறைகளிலே சுதந்திரமாகத் தெரிவு செய்யும் உரிமைகள் தொகுக்கப்படல் வேண்டுமென அவர் கருதுகின்ருர். மனச்சாட்சி, சிந்தனை, உணர்ச்சி ஆகியவைகளின் சுதந்திரம், எமது குணதிசயங்களுக்கு ஏற்றவகையில் எமது வாழ்க்கையை அமைத்துக் கொள்ளத் திட்டமிடும் சுதந்திரம், மற்றவர்கட்குத் தீங்கு விளைக்காத நோக்கங்களுக்காக ஒன்று சேரும் சுதந்திரம் ஆகிய மூன்றுமே அந்தத் துறைகளாகும். இம்மூன்று துறைகளையும் தெய்வத் தன்மை வாய்ந்தவையாக அவர் கருதுகின்ருர். "மற்றவர்களுக்கு நன்மை பயக்கக்கூடியவை என்று கருதப்படுபவைகளுக்காக வாழ வேண்டும் என்று நிர்ப்பந்திக்கப்படுவதற்குப் பதிலாக ஒவ்வொருவரும் தமக்கு நன்மை பயக்கக்கூடியவை என்று கருதுபவைகளுக்காக வாழ்வதனுல் மனித இனம் அதிக நன்மையை அடையும்"[1]. மனித இயல்பு என்பது ஓர் இயந்திரத்தைப் போன்றதன்று. அதற்கு மாருக, வளர்ந்து தனது கிளைகளை நாலாபுறமும் பரப்பும் மரத்தைப் போன்றது அது. ஆனுல், மில் தம்முடைய எதார்த்தக் கோட்பாட்டை பகுத்தறிவின்பாற்பட்ட மெய்யியல் ஐயப்பாட்டுடன் வற்புறுத்துகின்ருர். ஒவ்வொரு தனிமனிதரும் தமது சொந்தப் பொறுப்பிலேயே தமது கருத்துக்களைப் பிரயோகித்தல் வேண்டும். ஒவ்வொருவரும் தமது கருத்துக்களை மற்றவர்களிலும் பார்க்கத் திறமாகத் தெரிந்து வைத்திருப்பார்கள் என்பதே அதற்குக் காரணம். ஒவ்வோர் உண்மையும் நிறைவுபெருத வற்புறுத்தலாகவே இருக்கமுடியும். அரசியல் உலகில் எதிர்க்கட்சிகள் இருப்பதைப் போன்று தீர்ப்புக்களிலும் வேறுபாடுகள் இருத்தல் வேண்டும். அறிவு வளர்ச்சி பெறுவதற்கும் நடத்தையின் தரங்கள் அபிவிருத்தியடைவதற்கும் தீர்ப்புக்களில் வேறுபாடு இருப்பது இன்றியமையாதது.

வேறுபாடுகளும் வாதங்களும் பொது இணக்கத்திற்கும் சமூக ஒற்றுமை உணர்ச்சிக்கும் இடமளிக்கும் என்று மில் நம்பினுர். மனித இனத்திற்குச் சேவை செய்யும் உன்னத உணர்ச்சியானது பயனளிக்கும் சமய சார்பற்ற ஒரு மதமாக ஏற்றம் பெற்றுவிடும் என்ற கொம்ரேயின் கருத்தை மில் அங்கீகரித்தார். சமூக உறுப்புக்கள் மூலம் தனிமனிதரைக் கடுமையாகக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற கொம்ரேயின் கருத்தை அதே சமயத்தில் வன்மையாகக் கண்டித்தார். 'மக்கள் தமது கோட்பாட்டாராய்வுகளின்போது சுதந்திரத்தினதும் தனியாண்மையினதும் முக்கியத்துவத்தைக் கவனிக்கத் தவறிவிட்டால் என்ன நடக்கும் என்பது சமூகவியல், அரசியல் துறைகளிலுள்ள சிந்தனையாளர்கட்கு விடுக்கப்பட்ட மறக்கமுடியாத எச்சரிக்கையாகும்'[2].

இறுதியில் ஏற்படவிருந்த இந்த இணக்கம் நாம் அடையவிரும்பும் ஓர் இலட்சியமாகவேயிருக்கும். ஆனுல், சில கடமைகள் மத்திய அதிகாரத்தைச் சார்ந்தனவாகவிருக்கும் என்பதை மில் அங்கீகரித்தார். அவ்வதிகாரத்திற்கு இருக்க

[1] *On Liberty*, p. 11.

[2] *Autobiography*, p. 213 ஐயும், *On Liberty*, p. 12 ஐயும் பார்க்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்று மில் குறிப்பிட்ட கடமைகள், ஸ்பென்சர் ஏற்றுக் கொள்ளத் தயாராகவிருக்கும் கடமைகளிலும் பார்க்க அதிகமாக இருக்கின்றன. சுய விருத்தி என்ற மிக அழகான தார்மீக மலரை வாட்டமுறச் செய்யாமல் இருக்கக்கூடியவகையில் எந்த அளவு அரசியற் கட்டுப்பாட்டை அனுமதிக்கமுடியும் என்பதை முடிவு செய்வதே மில்லே எதிர் நோக்கிய பிரச்சினையாகும். இதைப் போலவே தனிமனிதரின் சுயவிருத்தியிற் கூட்டுப் பொதுக் கருத்தை எவ்வளவு தூரம் தலையிட அமனுதிக்க முடியும் என்பதையும் நிர்ணயிக்க வேண்டும். பொதுக் கருத்துக்களுக்கு எல்லை விதிக்கப்படுவதைப்போன்று கண்டிப்புடன் பொதுநடவடிக்கைகளுக்கு எல்லை விதிக்கத் தேவையில்லை. எல்லாவற்றிற்கும் மேலாகச் சிந்தனைச் சுதந்திரத்திற்குத்தான் அதிக முக்கியத்துவம் கொடுக்கப் படல் வேண்டும்.

மிகவும் கடினமான இந்தப் பிரச்சினையைத் திருப்திகரமான முறையில் மில் ஆராய்ந்திருப்பதாகக் கூறமுடியாது. தனிமனிதர் கவனத்தை முக்கியமாகக் கவரும் விடயங்களுக்கும் சமூகத்தின் கவனத்தை முக்கியமாகக் கவரும் விடயங்களுக்குமிடையே வேறுபாடுகளை விளங்கிக் கொள்ளக் கூடியனவாய், அவை தெளிவாகவோ விளக்கமாகவோ இருப்பதாகத் தென்படவில்லை. தனிமனிதர்களின் நடத்தைகளைப் பாரபட்சமான முறையிலே பாதிக்கின்ற ஆளெல்லையைச் சமூகம் கொண்டிருக்கும் என்று அவர் கூறுகின்றார். அது அவ்வாறிருந்தால், நேரடியாகவோ மறைமுகமாகவோ தனிமனிதர் பாதிக்கப்படாமல் இருக்கும் சந்தர்ப்பங்களைக் காண்பதரிது. மது அருந்தியமைக்காக எவரையும் கண்டிக்கலாகாது என்றும், ஆயின், கடமையைச் செய்யும்போது ஒரு நகரகாவலன் மதுவருந்தியிருந்தால் அவனைச் சட்டத்தின் கரங்களுட் சிக்கவைக்க வேண்டும் என்றும் கூறும் லொக்கின் உதாரணத்தை மில் பயன்படுத்துகின்றார். உத்தியோகபூர்வமான நிகழ்ச்சிகளை உத்தியோகபூர்வமில்லாத நிகழ்ச்சிகளிலிருந்து பிரித்துணர்வதன் மூலம், குடிமக்கள் ஒவ்வொருவரும் தமது அயலவர்களுக்கு எந்தவிதமான கடமைகளைச் செய்தல் வேண்டும் என்பதற்கான எல்லைகளைத் தீர்மானிக்கமுடியாது. மனச்சாட்சிக்குச் சுதந்திரம் அளிக்கவேண்டும் என வற்புறுத்துவதைத் தவிர, எந்த மரபுரிமையுமான தார்மீக வழியிலாவது அல்லது மதவழியிலாவது தனிமனிதரின் வாழ்க்கையில் அரசு தலையிடுவதை மில் கட்டுப்படுத்தவில்லை. நேர்முறையிலே சுதந்திரமான முடிவைச் செய்வதற்கு பெரிதளவு சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டுமென்று மில் வற்புறுத்துகின்றார். எதிர்முறையில், எல்லாமுடிவுகளும் விவாதத்திற்கு இடமளிப்பனவாகும் என்றும் குறிப்பிடுகின்றார்.

'காலக் கிரமத்தில், அரசின் மதிப்பு அதன் உறுப்பினர்களான தனிமனிதரின் பெறுமதிகளிலே தங்கியிருக்கும்'[1] என்று, மில் தமது 'சுதந்திரத்தைப்பற்றி' என்ற கட்டுரையின் இறுதிப் பகுதியிற் குறிப்பிடுகின்றார். இந்தக் கூற்றுக்கள் உறுதியானவையாகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகவும் இருக்கின்றபோதி

[1] *On Liberty*, p. 104.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லும், அரசியல் அமைப்பு எந்த வகையினதாக இருத்தல் வேண்டும் என்ற கடின மான பிரச்சினைக்கு எந்தவிதமான தீர்ப்பையும் கூருது விட்டுவிடுகின்றன. அரசி னுடைய அமைப்பின் இயல்பில் அரசுக்குரிய உறுப்பினர்களின் பண்பு தங்கி யிருக்கக்கூடும் என்பதே அதற்குக் காரணமாகும்.

அரசியல் தொடர்புகள் ஓரளவிற்குத் தற்செயலான நிகழ்ச்சியாக இருக்கின் றனவா அல்லது மக்களுடைய தார்மீக வாழ்க்கையின் மையமாக இருக்கின் றனவா என்ற இந்தப் பிரச்சினை, ரி. எச். கிரீனின் சிந்தனையின் முன் நிற் கின்றது. அரசியற் கோட்பாட்டாராய்வு ஆரம்பித்த காலத்திருந்தே இந்தப் பிரச்சினையும் இருந்து வருகின்றது. ஆனல் மதநம்பிக்கை, நிர்வாக வசதி, பொரு ளாதாரத் தேவை, அல்லது சுயநலத்தின்பாற்பட்ட கோரிக்கைகள் திரும்பத் திரும்ப இந்தப் பிரச்சினையைப் பின்னுக்குத் தள்ளின என்பதை நாம் பார்த்துள் ளோம். அரசின் கீழ் அரசியல் வாழ்க்கை நடத்துவதன் மூலமே தார்மீக நிறை வைப் பெறமுடியும் என்ற ஜெர்மானிய மெய்யியலறிஞர்களின் கருத்தைக் கிரீன் பூரணமாக ஏற்றுக்கொண்டார் என்று சொல்லமுடியாது. அவரின் பதப்பிர யோகம் மில்லின் பதப்பிரயோகத்தைப் பெரிதளவில் ஒத்திருக்கின்றது. 'நாட் டின் உறுப்பினர்களான தனிமனிதரின் வாழ்க்கையிலே நாட்டின் வாழ்க்கை தங்கியிருக்கின்றது.' மக்களின் பெறுமதியுடன் தொடர்பு படுத்திப் பார்க்கும் போதே அபிவிருத்தி, வளர்ச்சி, முன்னேற்றம் ஆகிவைகட்கு அர்த்தமுண்டு. ஆனல் இச்சொற்றொடர்களை உபயோகித்தபோது கிரீனுக்கு இருந்த மனநிலை மில்லின் மனநிலையிலிருந்து வேறுபட்டிருந்தது. சமுதாயத்தின் குடியியல் வாழ்க்கை, அதாவது பொது நோக்கங்களைக் குடிமக்கள் எந்த அளவிற்குப் பின் பற்றுவர் என்பது அவர்களது தார்மீக ஒழுங்கின் பிரதான அங்கமாக இருப்ப தாக—தார்மீக நேர்மைக்கும் சுதந்திரத்திற்கும் ஆபத்தை ஏற்படுத்துவதினும் அவற்றுக்கு உதவுதாக—அவர் கருதினர்.

1860-1880 இற்கு இடைப்பட்ட ஆண்டுகளில் ஒக்ஸ்போட் பல்கலைக் கழகத்தின் ஒழுக்க மெய்யியற் பேராசிரியராகக் கிரீன் பணிபுரிந்தார். இளவயதிற் கால மானபோதும், அவருடைய மனம், வேறு பல சிந்தனையாளர்களின் மனங்களைப் போன்று, வெவ்வேறு பாரம்பரியங்கள் சந்திக்கும் இடமாகத் திகழ்ந்தது. குடி வாழ்க்கை வாழ்வதே நன்னெறி வாழ்க்கையை வாழ்வதற்கான வழியாகும் என்ற அவரின் நம்பிக்கை, கிரேக்கரின் நம்பிக்கையைத் தழுவியதாகும். ஆனல், அவர் தம் கருத்தை சனநாயக முறையிற் கூறினர். அவரின் நம்பிக்கையை, மத் திய காலச் சிந்தனையில் ஊறியிருந்த இங்கிலாந்திலுள்ள கிறித்துவமதமும், உல கியல் அதிகாரம் தெய்வீக வாழ்க்கை வாழ்வதற்கான சூழ்நிலையை அமைத்துக கொடுப்பதால் அதனை ஆதரிக்க வேண்டுமென்று கூறும் பரிசுத்த தோமசின் கருத்துக்களும் பாதித்தன. சட்டவுரிமைகள், கடமைகள் என்ற அரசியலமைப் பைச் சூழ்ந்தனவாயும் அதிலும் பார்க்கப் பெரிய அளவிலுள்ளனவாயும் தார்மீகப் பெறுமதிகள் இருக்கின்றன. பூரண உருவத்தை அத்தார்மீகப் பெறுமதித்துறை பெற்றிருக்காத போதிலும், மத்திய கால இயற்கைச் சட்டத்தைப் போன்று, அது தெய்வத்தின் விருப்பத்தை மனிதனின் சூழ்நிலைகளுக்கு ஏற்ப வழங்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயத்தில் இணக்கஞ் செய்து வைக்கின்றது. பொதுத் தொடர்புகள் என்ற வெளியுலகம் கிரீனுக்கு அறிமுகமில்லாததன்று. அந்த உலகைக் கடவுளின் விருப்பம் நிறைவேற்றப்படுவதற்கான ஒரு வழியாகவே அவர் கருதுகின்றார். அந்த உலகிலே கடவுள் எவருமறியாத வகையில் உண்மை, அன்பு ஆகியவைகளினூடாக மனிதனின் திறமைகளை இயற் பொருள்களாக மாற்றுகின்றார் என்று கருதினார் அவர். அத்துடன், "தெய்விகக் கருத்தைப் படிப்படியாகப் புரிந்து கொள்ளுதல், தெய்வத்தன்மை வெளிப்படையாகக் காட்டப்படல் வேண்டும் என்ற நம்பிக்கையோடு என்றுமே இறுக்கமாக இணைக்கப்படுதல் வேண்டும். தம்முடன் வாழும் மக்கள் மீது அனுதாபம் கொண்டுள்ளவர்கள், தெய்வத் தன்மையானது மனித இனத்தின் அரசியல் வாழ்க்கையில் வெளிப்படுத்தப்படுவதையே பெரிதும் விரும்புவார்கள்."[1]

நன்னெறி வாழ்க்கையை நடத்தும் குடிமக்கள் பற்றிய அரிஸ்தோத்திலின் வர்ணனையை முற்போக்கானது என்றோ, சனநாயகத் தன்மை வாய்ந்தது என்றோ கூறமுடியாது. மீட்பை அடைவதுபற்றிய கிறித்துமதக் கருத்து முற்போக்கானதாகவும் சமத்துவம் வாய்ந்ததாகவும் இருக்கின்றபோதிலும், உலகிற்குள்ளேயுள்ள குடியுரிமையில் மரபுவழக்கான செறிவு பெற்றிருக்கின்றதேயல்லாமல், உலகின் குடியுரிமையிற் செறிவு பெற்றிருக்கவில்லை. இந்த இரு மரபு முறைகளும் ஒன்றாகச் சேர்ந்திருப்பதனாலேயே கிரீனின் சிந்தனைகள், ஐரோப்பிய சரித்திரத்திற் பெரிதும் நிலைத்திருக்கும் அரசியற் கருத்தைப் பிரதிபலிப்பனவாக இருப்பதோடு, விசேட கவனத்தை ஈர்ப்பனவாகவும் இருக்கின்றன. கிரீனைப் பொறுத்த வரையில், மனிதனின் விருப்பாற்றல் நியாயத்தின் வழியிற் சென்று, நிறைவான நோக்கத்திலே தனது அதிகபட்ச திருப்தியை அடையத் தவறுவதாலே நிறைவின்மை நிலவமுடியும். அடையக்கூடியதற்கும் அடையப் பெறுவதற்குமிடையே ஒற்றுமையின்மை நிலவுகின்றது. இந்த ஒற்றுமையின்மையைத் தெய்விக வாழ்க்கையிற் காணமுடியாது. 'நியாயமானது என்று தான் கருதும் ஒழுங்குடன் தன்னைத்தானே சரிசெய்து கொள்ளும் போக்கையுடைய விருப்பாற்றலைக்'[2] கொண்ட மனிதனிடமே இந்த ஒற்றுமையின்மையைக் காண முடியும். விருப்பாற்றலை நிறைவுபெறச் செய்யும் நடைமுறையாக மனித வாழ்க்கைக்கு விளக்கம் கொடுக்கும் இந்தப் போக்கு அகுஸ்தீனின் கருத்தைப் பிரதிபலிப்பதாக இருக்கின்றது. ஆனால் இந்த உலகின் அரசியல் வாழ்க்கையை, குறைபாடுகளை நீக்குவதற்கான மருந்து என்று கூறும் கிறித்துவ மரபுமுறை மூலமும், தார்மீக ஒழுங்கு முறையைக் கற்பிக்கும் கல்லூரி என்று கூறும் புராதன மரபுமுறை மூலமும் கிரீன் காண்கின்றார். குடியியல் வாழ்க்கையோடு தொடர்புடைய நிறுவனங்கள் மாத்திரமே விருப்பாற்றலினதும் பகுத்தறிவினதும் திறன்களை 'உண்மையிற் செயற்படுத்துதற்கு' வழிவகுக்கின்றன. அதே நேரத்தில், கடந்தகால அறியாமையினதும் பாவத்தினதும் விளை

[1] *Works of Thomas Hill Green*, edited R. L. Nettleship (London 1888), Vol. iii, p. 17. *The Influence of Civilisation on Genius.*

[2] *Lectures on the Principles of Political Obligation* (London 1931) p. 21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக உருவாகிய தார்மீக வாழ்க்கைப் பாதையிலேயுள்ள தடைகளைப் படிப் படியாக அகற்றும் வகையிலே சமூகத்தை ஒழுங்கமைப்பதை அந்நிறுவனங் கள் முக்கிய அப்பியாசமாகக் கொண்டிருந்தன.

தனி மனிதரின் முடிவுகளைத் திருத்துவதில் அல்லது கட்டுப்படுத்துவதில் அரசியலதிகாரம் எவ்வளவு தூரம் தலையிடல் வேண்டும் என்ற காலப் பிரச் சினையை இச்சந்தர்ப்பத்திலே கிரீன் எதிர்நோக்கினுர். ஆயின், மில் அதனை எதிர்நோக்க வேண்டியிருந்ததுபோல் கிரீன் அதனை எதிர்நோக்கவில்லை. எல்லா நடவடிக்கைகளுமே அவ்விருவரும் வாழ்ந்த சமூகத்திற்கும் சம்பந்தப் பட்ட முகவர்களுக்கும் தார்மீகப் பொருத்தமுடையனவாக இருந்தன என் பதே அதற்குக் காரணம். 'எல்லா நன்னெறிகளும் உண்மையிலே சமூகத் தன்மை வாய்ந்தவை; அல்லது மேலும் பொருத்தமாகச் சொல்வதாஞல், சமூக நன்னெறிகளுக்கும் தனி மனிதர்கட்கு முக்கியத்துவம் அளிப்பனவாகச் சொல் லப்படும் நன்நெறிகளுக்குமிடையேயுள்ள வேறுபாடு பொய்யானவை'[1] என்று கிரீன் கூறுகின்ருர். மில்லின் பாகுபாட்டிலும் பார்க்க கிரீனின் பாகு பாடு விளங்கத்தக்கதாகவும் திருப்திகரமாகவும் உள்ளது. பயன்படு முறை யிலே செயற்படக்கூடிய பகுதிகளுடனேயே அரசியல் அதிகாரம் கட்டுப்படுத் தப்படல் வேண்டும். வெளிநடத்தைகளை வழிநடத்தும் பொறுப்பை மட்டுமே அரசியலிடம் ஒப்படைத்தல் வேண்டும். நோக்கங்களுக்கு மாருக, நடத்தை களுடனேயே அரசியற் கட்டுப்பாடு இருத்தல் வேண்டும். தார்மீக முடிவு களைச் செய்யும் வேலை அரசைச் சார்ந்ததன்று; அது தனிமனிதரின் வேலை யாகவே இருத்தல் வேண்டும். அயலவர்களின் தார்மீக வளர்ச்சிக்குத் தேவை யான சூழ்நிலையைப் பேணிப் பாதுகாக்கத் தனிமனிதர் தவறினுல். பொது நன் மையைக் கருத்திற் கொண்டு, உயிர்களைப் பாதுகாத்து, எல்லாக் குடிமக்களி னதும் நன்னெறி சார்ந்த சக்திகளை வெளிக்கொணர்வதற்கு உதவக்கூடிய எல் லாச் சட்டமுறையான உரிமைகளையும் சட்டத்தின் மூலம் பாதுகாப்பதற்கு அரசி யல் அதிகாரம் நடவடிக்கை எடுக்கலாம். இந்தச் சட்ட உரிமைகளுக்கப் பாலே தார்மீக உரிமைகள் இருக்கின்றன. இவை தங்களின் உருவைப் பெறு வதற்குத் தனிமனிதருடைய விருப்பாற்றலின் நிறைவாக்கப்பட்ட நோக்கங்க ளிலே தங்கியிருக்கின்றன. இந்தத் தார்மீக உரிமைகளை ஊக்குவிப்பதற்கான சூழ்நிலைகளை உருவாக்குவதும், அவைகளைப் பூரணமாக அடையவிடாது தடுக் கும் முட்டுக் கட்டைகளை நீக்குவதுமே அரசின் அக்கறையாகும்.

முன்னேற்றம் என்பதைத் தார்மீக முன்னேற்றமாகவே கிரீன் கண்டார். முன்னேற்றம் ஏற்படும்போது இப்பொழுது சட்டத்தின் மூலம் அமுல் செய்யப் படுபவை, படிப்படியாகச் சொந்த விருப்பத்தின்பேரிற் செய்யப்படுபவையாக மாறும் என்று அவர் கருதினுர். அப்பொழுது கட்டாயமாக மேற்கொள்ளப்படும் தீர்ப்புக்கள் தனிமனிதரின் சொந்த முடிவுகளாக மாற்றமடைவதனுல், தார்மீகத் துறையினுலே சட்டத்தின் செல்வாக்கு படிப்படியாகக் குறைக்கப்

[1] *Political Obligation*, p. 244.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுவிடும். முன்னேற்றம் ஒழுக்கநெறிக்கு ஏற்றமுறையில் இருக்க வேண்டும் என்பதற்கே இப்பொழுது சட்டம் உத்தரவாதமளிக்கின்றது. பாவத்தின்பாற் பட்ட அல்லது பகுத்தறிவின்பாற்படாத வாழ்க்கை உண்மையிலிருந்து ஓரளவு குறைவானதாகக் கிரீனிற்குத் தென்பட்டது. நிறைவேற்றப்படும் இலட்சியமே ஒவ்வொரு நடவடிக்கையினதும் முக்கிய நோக்கமாக இருக்கவேண்டும் என்று கருதும் கிரேக்கரின் உணர்வைக் கிரீன் கொண்டிருந்தார். நிகழ்காலமே உண்மையானது என்றும் எதிர்காலம் புனைவான சாத்தியக் கூறுகளையுடையது என்றும் சொல்வது சரியல்ல. எதிர்காலந்தான் உண்மையானது. "முன்னேற்ற நடைமுறையை விளங்கிக் கொள்ளும் சக்தியைக் கொண்ட எவருக்கும் முன்னேற்றத்தின் விளைவே உண்மையானதாகவிருக்கும்; இப்படி விரைவாக வளரக்கூடிய திறனிலேயே, வளர்ச்சியடையும் பொருள் தன்னுடைய உண்மை யான இயல்பைக் கொண்டிருக்கின்றது"[1].

எனினும், அரசு மட்டுமே அபிவிருத்தி செய்யப்பட்டதாகக் கொள்ளலாகாது. அரசியல் நிறுவனங்களுக்குள்ளிருந்தும் அரசியல் நிறுவனங்களுக்கூடாகவும் பொது இலட்சியங்களை அடைய முயற்சி செய்யும் உறுப்பினர்களின் தார்மீக வாழ்க்கையோடு மெய்ம்மைநிலை தொடர்புடையதாகவிருந்தது. குடிமக்களின் வாழ்க்கைக்கும், நல்ல வாழ்க்கைக்கும் அரசியற் சாதனம் தேவையான முன் நிபந்தனையாக இருப்பதாக அரிஸ்தோத்தில் கருதினர். பொதுவாழ்க்கையை ஒழுங்குபடுத்துவதற்குத் தேவையான நிறுவனங்கள் அபிவிருத்தி செய்யப் பட்டதன் விளைவாகவே அரசியல் அதிகாரம் பெறப்பட்டது என்று கிரீன் கருதுகின்றார். அத்தகைய அரசியல் நிறுவனங்கள் அபிவிருத்தி செய்யப்படா திருந்தால் மக்கள் எந்தவிதமான உரிமைகளையும் அனுபவித்திருக்கமாட்டார்கள். இந்தக் கோட்பாட்டைச் சனநாயக அடிப்படையில் விளக்குவதற்கு கிரீன் மேலும் முயற்சிகளை மேற்கொண்டார். தமது தார்மீக வளர்ச்சியை ஊக்குவிக் கும் அதே நேரத்தில், தமது அயலவர் யாவரும் இத்தகைய வளர்ச்சியில் ஈடுபட அனுமதிப்பதற்கான உகந்த சூழ்நிலையை உருவாக்கும் பணியையும் குடிமக்கள் செய்கின்றனர். போடினின் அரசியலிலோ அல்லது லொக்கின் அரசியலிலுமோ குறிப்பிடப்படுவோருக்கும், கிரீனல் கீழ்ப்படிவான விசுவாசமுள்ள குடிமக்கள் என அழைக்கப்படுவோருக்கும், மறுபுறம் அரச சேவையில் அதிக கவனம் செலுத்தத் தயாராகவிருக்கும் புத்திசாதுரியமுள்ள நாட்டுப்பற்றுடையோருக்கு மிடையே மிகவும் முக்கியமான வேறுபாடொன்றுள்ளது. ஆனல், இத்தகைய அர சிற்கு ஹெகல் கோட்பாட்டின் பூரணத்துவத்தைக் கொடுக்கக் கிரீன் தயாராக வில்லை. ஒரு குடும்பத் தலைவன் தனது குடும்பத்திலிருந்து எவ்வாறு விசுவாசத் தையும் கீழ்ப்படிவையும் பெற்றுக்கொள்கின்ருனே, அரசும் அவ்வாறே குடிமக்க ளிடமிருந்து விசுவாசத்தையும் கீழ்ப்படிவையும் பெற்றுக்கொள்ளுதல் வேண் டும். அரசியற் கடமையுணர்ச்சியைப் பெரிதுங்கொண்டுள்ள ஒருவன் அரசியற் பணிகளிற் பங்கு கொள்ளுதல் வேண்டும். 'தானுக ஓர் உறுப்பினனுக நடந்து

[1] *Works*, Vol. iii, pp. 224-25. ஒரு சொற்பொழிவின் பகுதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வதன் மூலமோ, அல்லது மேற்சபையின் அல்லது பிரதேச சபையின் உறுப்பினர்களுக்கு வாக்களிப்பதன் மூலமோ ஒவ்வொருவனும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தான் கீழ்ப்படிய வேண்டிய சட்டத்தை உருவாக்குவதிலும் அமுல் செய்வதிலும் பங்குகொள்ளுதல் வேண்டும்.'[1]

தனிமனிதரின் கூட்டமாகவோ அரசாங்க முறைமையாகவோ கிரீன் அரசை நோக்கவில்லை. அதற்குமாறாக, தமது விசேட தொடர்புகளையும் குறிப்பான உரிமைகளையுமுடையவரான குறைந்த நிலைமையிலுள்ள சிறு சமுதாயப் பிரிவினர்களை உள்ளடக்கிய, ஓர் ஒழுங்கமைந்த சமுதாயமாகவே அரசு இருப்பதாக அவர் கருதினார். தனிமனிதர் பலவகைப்பட்ட கருத்துக்களைக் கொண்டிருத்தல் வேண்டும் என்ற கருத்திற்கு மில் கொடுத்த அளவு முக்கியத்துவத்தைக் கிரீன் கொடுக்கவில்லை. சுதந்திரமான தார்மீக முடிவுகள் செய்யப்படுவதற்குக் கிரீன் கொடுத்த முக்கியத்துவம், அம்முடிவுகள்யாவும் பொது நன்மையையே கருத்திற் கொண்டிருக்கும் என்ற அடிப்படையைக் கொண்டிருந்தது. இந்தப் பொது நன்மை, அது அடையப் பெற்றதைப் பொறுத்தவரையும், நிலைநாட்டப் பெற்ற ஒழுங்கில் அடங்கியிருக்கும். பேர்க் கருதியதைப்போலவே கிரீனும், சட்டமானது தெய்வ நோக்கத்தின் அண்ணளவான வெளிப்பாடாக இருக்கின்ற காரணத்தினுல், அதற்கு மதிப்பளிப்பதோடு அதற்குக் கீழ்ப்படிந்தும் நடத்தல் வேண்டும் என்று கருதினார். மக்கள் அல்லது கூட்டங்கள் தமது சமூகக் கடமைகளைச் செய்வதற்குப் பிரதியுபகாரமாக, சட்டத்திற் பொறிக்கப்பட்டுள்ள அவர்களின் உரிமைகள் யாவற்றிற்கும் அரசு அளிக்கும் உத்தரவாதத்தின் அடிப்படையில், இந்தத் தார்மீகத் தொடர்புகள் அரசியல் நீட்டம் பெறுகின்றன. உரிமைகளைப் பேணிப் பாதுகாப்பது சம்பந்தமானவற்றை மட்டுமே தண்டனைகள் தமது நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை. தனி மனிதரின் பொது நல்வாழ்வை யிட்டு உரிமைகள் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமாகும். தனி மனிதரின் அத்தகைய நல்வாழ்வானது அடிப்படையிலே தார்மீக இயல்பையுடையது என்று கிரீன் கருதுகின்றார்.

தார்மீக நல்வாழ்க்கையை விடுதலை என்ற தனிச் சொல்லாலே கிரீன் சுருக்கித் தருகின்றார். கட்டுப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்பட்டிருப்பதாகவோ ஒவ்வொருவரும் தாங்கள் விரும்பியபடி நடந்துகொள்ள அனுமதிக்கப்பட்டிருப்பதாகவோ அவர் கருதவில்லை. அதற்கு மாறாக, ஆன்மா தன்னுடைய இயல்பிற்கேற்ற முறையில் வற்புறுத்தும் என்றும், தானகவே ஏற்படுத்திக்கொண்ட கடமைகளில் ஈடுபாடாக இருப்பதன்மூலம் பாவத்திலிருந்து விடுதலைபெறும் என்றும் அந்தப் பதத்திற்குக் கிரீன் விளக்கம் கொடுத்தார். "நாகரிகமடைந்த அரசின்கீழ் குடிமகனுக்கு இருக்கும் நிபந்தனைகளைக் குறிப்பிடும் 'விடுதலைக்கும்' தனக்குள்ளே 'தன்னுடைய எசமானக' இருக்கும் மனிதனின் நிபந்தனைகளைக் குறிப்பிடும் 'விடுதலைக்குமிடையே' பெரிய அளவிற் கருத்தொற்றுமை இருப்பதாகத் தோன்றும்".[2] எனவே, விடுதலை என்பது சமூகக் கருதுகோளாகவும்

[1] *Political Obligation*, p. 130

[2] *Political Obligation*, p. 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதார்த்தமான கருதுகோளாகவும் இருக்கின்றது. எல்லா மக்களினதும் நல் வாழ்விற்கான முன் நிபந்தனைகளை உருவாக்குவதோடும் அதைச் செய்யும்போது அவர்கள் விரும்பும் நன்னெறிகளைப் பிரயோகிப்பதோடும் அரசியல் வாழ்க்கை தொடர்புடையதாகவிருக்கின்றது. 'விடுதலை என்பது போற்றிப் பேணப் பட வேண்டிய ஒன்றாகும் என்று நாம் கூறும்போது, செய்யத்தக்கதை அல்லது அனுபவிக்கத் தக்கதைச் செய்வதற்கோ அனுபவிப்பதற்கோ இருக்கும் உறுதி யானவலு அல்லது திறன் என்பதையே கருத்திற் கொள்கின்றோம். அதுவும் மற் றவர்களுடன் சேர்ந்து பொதுவாகச் செய்வதையோ அல்லது அனுபவிப்ப தையோ கருதுகின்றோம். விடுதலையில் ஏற்பட்ட வளர்ச்சியின் அடிப்படையிலே சமூகத்தின் முன்னேற்றத்தை நாம் அளவிடும்போது, சமூகத்தின் உறுப்பினர் கட்கு அளிக்கப்பட்டிருப்பதாக நாம் கருதுவனவும் சமூக நன்மைக்கு உதவு வனவுமாய சக்திகளைப் பிரயோகிப்பதையும் அப்பிரயோகத்தினால் ஏற்படும் வளர்ச்சியையுமே கணக்கிலெடுத்துக் கொள்கின்றோம். சுருக்கமாகக் கூறுவதா னால், ஒன்றாகச் சேர்ந்து அதிகமானவற்றையும் சிறப்பானவற்றையும் தமக்குப் பெற்றுக்கொள்ளும் குடிமக்களின் மிகுதியான வலுவைக்கொண்டே சமூகத்தின் முன்னேற்றத்தை அளக்கின்றோம்'[1].

[1] *Works*, vol. iii p. 371. Lecture on 'Liberal Legislation and Freedom or Contract'.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறும் அத்தியாயம்

## விடுதலை

"வர்க்கங்களையும் வர்க்கப் பகைமைகளையும் கொண்டுள்ள பழைய இடைநிலைச் சமூகத்திற்குப் பதிலாக, ஒவ்வொருவரினதும் சுதந்திரமான வளர்ச்சி மூலம் எல்லாருடையவும் சுதந்திர வளர்ச்சிக்கான சூழ்நிலையை அமைத்துக் கொடுக்கும் சங்கம் அல்லது அமைப்பு ஒன்றை நாம் ஏற்படுத்துவோம்". விடுதலையை அடிப்படையாகக் கொண்ட முன்னேற்றம் என்ற கருத்து, பரிணாம வளர்ச்சிக்குப் பதிலாகப் புரட்சியிலேயே சமூக வளர்ச்சி தங்கியிருக்கின்றது என்று நம்பும் சிந்தனை மரபைச் சார்ந்தாகும் என்பதைப் "பொதுவுடைமைக் கட்சியின் பனுவலிலே" (Manifesto of the Communist Party) காணப்படும் இவ்வார்த்தைகள் ஞாபகப்படுத்துகின்றன. இந்தச் சூழ்நிலையில், விடுதலை என்பது ஒரு நிபந்தனையாகக் கொள்ளப்படுகின்றது. நடைமுறையிலுள்ள சமூக நிறுவனங்கள் இந்த நிபந்தனைக்கு உத்தரவாதமளிப்பதற்குப் பதிலாகத் தடைகளாகவே இருக்கின்றன என்று கருதப்படுகின்றது.

முந்திய காலத்து அரசியற் சாதனைகளிலும் பார்க்க அதிக நீதியானதும் குறைந்த அளவிற் சமத்துவமின்மையைக் கொண்டிருப்பதும், அதிக அளவிற் பகுத்தறிவின்பாற்பட்டதாகவும் அறிவொளியின்பாற்பட்டதாகவும் இருப்பதுமான செழிப்பான தார்மீக வாழ்க்கையை அனுபவிப்பதற்குத் தடையாக இருப்பவைகளிலிருந்தும், வாழ்க்கை அனுபவத்தின்போது குறைபாடுகள் எனக் காணப்பட்டவைகளிலிருந்தும் விடுதலையளிப்பது என்ற அர்த்தத்தைக் கொண்ட விடுதலைபற்றிய கருதுகோள், பிளேட்டோவைப் போன்று பழைமையுடைய இலட்சியக் கனவொன்றின் ஓர் அம்சமாக இருக்கின்றது. அரசியல் வாய்ப்பாராய்வுகள் யாவும் சமூக நிலைமைகளைப் பருப்பொருள் முறையிலும் தார்மீக முறையிலும் அபிவிருத்தி செய்வதோடு தொடர்புடையன என ஓர் அர்த்தத்திலே கூறலாம். சமூக நிலைமைகளை மாற்றுவதற்குப் பெரிய அளவில் நடவடிக்கையை எடுக்க வேண்டுமா அல்லது சிறிய அளவில் நடவடிக்கையை எடுக்க வேண்டுமா, இன்றேல் எந்தவிதமான நடவடிக்கையையும் எடுக்காமல் விட்டுவிடுவதே சிறந்ததா என்பதற்கான ஆலோசனையைக் கொடுப்பதன்மூலம் அரசியல் வாய்ப்பாராய்வு இதனை மேற்கொள்ளலாம்; அல்லது சட்டத்திற்கு மேலும் கீழ்ப்படிவாக நடந்துகொள்ளும் மக்கள் வாழ்கின்ற நகரில் எவ்வாறு வாழ்வது என்பதைப் பற்றிக் கற்பதிலே கவனம் முழுவதையும் செலுத்தச் செய்வதன்மூலமும் இதனைச் செய்யலாம். இந்தக் கனா உருப் பெறாமல் இருக்கையில், அனுபவமானது சரித்திரக் கண்ணோட்டத்திற் பார்க்கிறபோது, அறியாமைக்கான அபராதங்களையோ அல்லது பாவத்திற்கான பரிகாரப் பணத்தையோ—சிரத்தையற்ற பிரபஞ்சத்தின் சட்டங்களையோ அல்லது வளர்ச்சியினது நடைமுறையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கட்டத்தையோ—குறிக்கின்றதா என்ற கேள்வி விடையிறுக்கப்படாத கேள்வியாகவே இருக்கின்றது. மனித சமூகங்களிற் பல மிகவும் மெதுவாகவே மாற்றமடைவதனுல் அசையாதனவும். அசைக்கமுடியாதனவுமான பனிப்படலங் களைப் போன்று இவை தோற்றமளிக்கின்றன. இயற்கை ஒழுங்குபற்றிய அறிவு வளர்ச்சி, செல்வப் பெருக்கம், சுகாதார முன்னேற்றம், கல்வி விருத்தி—இது தான் அனைத்துக்கும் மேலாய் மிகப்பெரிய புரட்சியைத் தோற்றுவித்தது—ஆகியவை மிக அண்மைக் காலத்திலேயே சீர்திருத்தத்திற்கான சாத்தியக் கூறுகளைப் பெரிதளவில் உருவாக்கின. அச்சாத்தியக் கூறுகள் பேரளவினையுடை யவையாகவும் மிகவும் முக்கியமானவையாகவும் இருந்தமையினுல்—மாக்சின் வார்த்தைகளைப் பயன்படுத்துவதாயின்—உலகை மாற்றியமைப்பதில் அதிக கவனத்தைச் செலுத்தும் நோக்கத்துடன் அதற்கு விளக்கம் கொடுக்க முன்வந்த சமூகச் சிந்தனையாளர் தம் முயற்சியைக் கைவிட வேண்டிய நிலைமையை அடை தனர்.

வற்புறுத்தலில் ஏற்படுத்தப்பட்ட இந்த மாற்றம், அதற்குப் புரட்சித் தூண்டு தலை மாக்ஸ் கொடுப்பதற்கு மிகு காலத்திற்கு முன்பும், சனநாயகக் குடியுரி மையை விரிவாக்குவதை ஆதரிக்கும் தமது வாதங்களுடன் இதனுடைய பண் பமைதியையுடைய விளைவுகள் சிலவற்றை ரி. எச். கிரீன் சேர்த்துக் கொள் வதற்கு முன்பும் காணப்பட்டது. இயற்கையான அறிவில் ஏற்படும் அபிவிருத் தியை அறியாமைக்கு அடிமையாக இருப்பதிலிருந்து பெறப்படும் விடுதலையாக வும், ஒழுக்கநெறிபற்றிய அறிவில் ஏற்படும் விருத்தியை ஆசை, அவா ஆகிய வற்றிலிருந்து கிடைக்கப் பெறும் விடுதலையாகவும்—இந்த விடுதலை நன்னெறி வாழ்க்கையை இலகுவானதாகவும் இயற்கையானதாகவும் ஆக்கும்—முற்காலத் தில் வாழ்ந்த முற்போக்குச் சிந்தனையாளர்கள், குறிப்பாக கொண்டோசெ போன்ருேர் கண்ணுற்றனர். முந்திய சகாப்தங்களிலே காணப்பட்ட அறியாமை, நிறுவன அமைப்புக்களை எவ்வாறு இறுக்கமாகியது என்பதைக் கொண்டோசெ வும் சென்ற் சைமனும் அவதானித்தனர். இந்த நிறுவன அமைப்புக்கள் தங்க ளின் நடைமுறைகளிலும் தங்களை இயக்கிய அதிகாரிகளிலும் பழைமையைப் பாதுகாப்பதிலே அக்கறைகாட்டவும், புதிய, சிறந்த, வாழ்க்கைக் கோலங்களை எதிர்ப்பதிற் சிரத்தை காட்டவும் ஆரம்பித்தன. பழைய காலத்திலிருந்து பெறப் பட்ட சமய, சட்ட, அரசியல் அமைப்புக்கள், பழக்கங் காரணமாகவோ, அல் லது சிலர் கருதியதைப்போல், வேண்டுமென்றே செய்யப்பட்ட சதித் திட்டங் காரணமாகவோ முன்பிருந்த குறைபாடுகளைப் பேணிப்பாதுகாத்தன.

இப்பொழுதிருப்பதைப்போலவே முன்பும் ஐரோப்பாக் கண்டத்தைச் சேர்ந் தோரின் சிந்தனை இங்கிலாந்தைச் சேர்ந்தோரின் சிந்தனையிலும் பார்க்கப் புரட்சிகரமானதாகவிருந்தது. நிலைநாட்டப்பெற்ற ஒழுங்கமைப்பானது பழைய காலத்தின் நுண்மதி, நடைமுறை அனுபவம் ஆகியவைகளின் வைப்பு நிதிய மாக இருக்கின்றது என்று கருதுவோருக்கும், அவ்வொழுங்கமைப்பு அறியா மையினுற் பீடிக்கப்பட்டதும் தவருனவழியிற் சென்றதுமான முந்திய சந்ததி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யின் தவறுகளையும் பழியார்ந்த செயல்களையும் உள்ளடக்கியிருக்கின்றது என்றும், எனவே அதைத் தொடர்ந்திருக்க அனுமதிக்கக்கூடாது என்றும் கருதுவோருக்குமிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடு இருக்கின்றது.

இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்ட கருத்தையுடைய பிரிவினருக்குச் சமூக நிறுவனங்களையும் அரசியல் நிறுவனங்களையும் அபிவிருத்தி செய்வதற்குச் சிறப்பான வழி எது என்பதும், புதிய சூழ்நிலைகளில் அவற்றை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதும் முக்கியமான பிரச்சினையல்ல. அதற்குமாறாக, எந்தச் சக்திகளால் அவைகளைக் கவிழ்த்து, உருமாற்றம் பெற்ற சமூக ஒழுங்கமைப்பில் உண்டாகும் விரைவான மாற்றங்களுக்கேற்ப அவைகளை எவ்வாறு திருத்தியமைக்கலாம் என்ற பிரச்சினையே முக்கியமாகவிருக்கின்றது. இயற்கை ஒழுங்கு பற்றியும் அவ்வொழுங்கின் ஒரு கூறாகவிருக்கும் மனிதன் பற்றியும் பெறப்படும் அறிவின் வளர்ச்சி, சரித்திரப் பரிணும வளர்ச்சியின்போது, பழைய காலத்திற்கே உரித்தான சமூக ஒழுங்கிலும் அரசியல் நிறுவனங்களிலும் உருமாற்றத்தை ஏற்படுத்தும் என்ற கருத்து மிகக் குறைந்த அளவிலேயே புரட்சிகரமானதாக இருக்கின்றது. நல்ல வாழ்க்கையை ஆபத்தான முறையிலே திரிபுபடுத்தும் நிலைமைகளின் விளைவாகச் சமூகக் கேடுகள் இருக்குமானுல்—இந்த நிலைமைகளுட் சில பழைய காலத்திற்குரிய அறியாமை, பாவங்கள் ஆகியவற்றின் உணர்ச்சியற்ற விளைவுகளாகவே இருக்கும்—விருப்பாற்றலின் அறிவூட்டும் செயலின்மூலம் இந்த ஆட்சியைக் கவிழ்த்து, அதன்கீழ் சிறைவைக்கப்பட்டவர்களுக்கு விடுதலையளிக்க முடியும்.

இந்த அர்த்தத்தில் விடுதலை என்பது சமூக, அரசியல் புரட்சியின் தார்மீகப் பயனுகவிருக்கும். இதன்விளைவாக, தவிர்க்கமுடியாத காரணத்திஞல் அல்லது இதுபற்றிச் சிந்தித்துப் பார்ப்பதனுல், சரித்திரரீதியாகவுள்ள சமூகங்களின் உறுப்பினர்கள் தமது சமூகங்களிற் காணப்படும் குறைபாடுகளின் சுவடுகள் யாவும் மறையக்கூடிய வகையிலே, தங்களுடைய நிறுவனங்களை மாற்றியமைப்பார்கள். இந்த நம்பிக்கைகளை உள்ளடக்கியுள்ள கூற்றுக்கள் போர்க் குரல்களாகவோ அல்லது நம்பிக்கையின் மனவெழுச்சி மிகுந்த வற்புறுத்துதல்களாகவோ அடிக்கடி வெளியிடப்பட்டிருப்பது ஆச்சரியத்தைக் கொடுக்கவில்லை. " L'homme est ne libre, et partout il est dans les fers " என்பது ரூசோவின் புகழ்பெற்ற கூற்று. பிரெஞ்சு மொழியிலுள்ள இந்தக் கூற்றிலே, விடுதலையைப் பெறுவதற்காக மனிதன் பிறந்துள்ளபோதிலும் நடைமுறையில் அவன் எப்பொழுதும் சங்கிலியாற் பிணிக்கப்பட்டிருக்கின்ருன் என்பதாக அவர் கருதினுர். இது எவ்வாறு நடந்தது என்பதை விளக்குவதற்கு வெற்றியளிக்கத் தவறிய ஒரு முயற்சியை அவர் மேற்கொண்டுள்ளபோதிலும், அக்காரணங்களைத் தாம் விளக்கிவிட்டதாகப் பாசாங்கு செய்யவில்லை. சங்கிலிகள் இருக்க வேண்டுமானுல் அவை முறையானவையாக—அதாவது, சுதந்திர வாழ்க்கையை அவை ஆதரிக்க வேண்டுமேயல்லாது அதனைத் தடைசெய்வதை அனுமதிக்கலாகாது—இருக்க வேண்டும் என்பதில் அவர் அதிக கவனம் செலுத்தினுர். இதைப்போன்ற புகழ்பெற்ற அறிவித்தலொன்றில் மாக்சும் எங்கெல்சும் இவ்வாறு கூறுகின்றனர் :

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சமதர்மப் புரட்சியைக் கண்டு ஆளும் வர்க்கத்தினர் பதறட்டும். தங்களைப் பிணிக்கும் சங்கிலிகளைத் தவிர்ந்த வேறெதையும் பட்டாளி மக்கள் இழந்துவிட மாட்டார்கள். அவர்கள் வெற்றி பெறுவதற்கு உலகமொன்றுண்டு. எல்லா நாடுகளையும் சேர்ந்த தொழிலாளரே ஒன்றுபடுங்கள்!" ஒரு நூற்றுண்டுக் காலத்திற்குப் பின்பு ரூசோவின் சொற்களைப் பிரதிபலித்த இந்தக் கூற்று இந்தக் கொள்கையின் வளர்ச்சியையே காட்டுகின்றது. சுதந்திர வாழ்க்கைக்குப் பெரிய தடையாக இருப்பதனுலேயே சங்கிலிகளை அகற்றவேண்டுமென்று மாக்ஸ் கருதுகின்றுர். பொதுவுடைமைவாதிகளின் பனுவலிலுள்ள இறுதி வார்த்தைகள் ஒரு நூற்றுண்டுக் காலத்திற்கு முன்பு வாழ்ந்த ரூசோவின் கருத்தைக் குறிப்பதைப் போலவே, அதனிற் காணப்படும் ஆரம்ப வார்த்தைகள் ஒரு நூற்றுண்டுக் காலத்திற்குப் பின்பு வாழ்கின்ற எமது காலத்தைக் குறிக்கின்றது. 'ஐரோப்பாவைச் சுற்றிப் பேய் உரு ஒன்று நடமாடுகின்றது—பொதுவுடைமை என்ற பேய் உருவே அது; அறியாமை, வறுமை, அடக்குமுறை, அநீதி, மனிதனுடைய சொந்தத் தீய விருப்பாற்றல் ஆகிய சங்கிலிகளிலிருந்து விடுவிக்கப்படுதல் என்ற விசேட அர்த்தத்தையுடைய சமூக, அரசியல் விடுதலை என்ற கோட்பாடு, இன்று எமது கவனத்தைக் கவர்ந்துள்ள பிரச்சினைகளோடு நெருக்கமாகப் பிணைந்திருப்பதனுல், அதனுடைய விளைவுகளைச் சிறப்பாக ஆராய்வது எமது கடமையாகும்.

இந்த மரபுமுறை மிகவும் பழமையானது. தமக்குத் தேவையான சட்டங்களைத் தாமே தயாரிக்க வல்லவர்கள் என்ற அர்த்தத்தில் மிகச் சொற்பமானுேரே—உதாரணமாக மெய்யியலறிவாளர்—விடுதலையை அடைய முடியும் என்பதைப் பிளேட்டோ ஏற்கனவே சுட்டிக்காட்டியிருந்தார். ஆனுல் இந்தக் கொள்கை மற்றப் பிரசைகளைப் பொறுத்தவரையில் விரிவான விளைவுகளைக் கொண்டிருக்கவில்லை. கிறித்துவ சமூகச் சிந்தனையின்படி, அரசியல் நிறுவனங்கள் யாவும் மனிதனுடைய பாவமான போக்கின் விளைவுகளே என்பது, குறிப்பாகச் சொத்துடைமை, அரசாங்கம் ஆகியவைகளைப் பொறுத்தவரையில், திரும்பத் திரும்பக் கூறப்படுகின்றது. அடுத்த உலகில் இறுதி மீட்சியைப் பெற முடியும் என்ற நம்பிக்கையிலே இந்த உலகிற் பாவத்தின் அடிமைத் தனத்திற்கு அடிபணிவதே கடவுளின் சேவையிற் காணப்படும் நிறைவான விடுதலை பற்றிய புதிய வாழ்க்கைக்குரிய நிபந்தனையாகும். இந்தக் கருத்துக்களைப் புரட்சிகரமான விளைவுகளைக் கொடுக்கும் வினையியலான அரசியற் கொள்கையாக மாற்றுவதற்கு, மோட்ச உலகத்திலோ அல்லது இவ்வுலகில் திருச்சபையிடமிருந்தோ எல்லா மக்களும் தங்கள் விடுதலையைப் பெற்றுர்கள் என்பதோடு, தமது சாதாரணமான அரசியல் தொடர்புகள் என்ற கட்டமைப்பிற்குள்ளேயே அவர்கள் தமது விடுதலையைப் பெற்றனர் என்றும் கூறும் கருத்தில் நம்பிக்கை வைக்க வேண்டியது அத்தியாவசியமாகும். வழக்கமாகவுள்ள கட்டமைப்பைக்கூட மாற்றியமைக்க முடியும் என்ற முறையில் இந்த நம்பிக்கை உருப்பெற்றது. இதை மெய்யியலறிஞர்களின் செல்வாக்கைப் பயன்படுத்தி மறைமுகமான முறையிற் செய்ய முடியாது. முழு மக்களினதும் சுய மீட்சிக்காய புரட்சிகரமான நடவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிக்கைமூலமோ அல்லது நடைமுறையிலிருப்பதும் ஆனல் அழிந்துவிடப்போவதுமான அரசியல் ஆட்சியைப் பேணிப் பாதுகாக்கும் வேலையில் ஆபத்தான முறையில் ஈடுபட்டிருக்காத பகுதியினரின் சுயமீட்சிக்காய புரட்சிகரமான நடவடிக்கை மூலமோதான் இதைச் செய்ய முடியும். ஓர் அர்த்தத்தில், ஆன்மீக வலுவிற்கும் உலகியல் வலுவிற்குமிடையே மத்திய காலத்தில் நிலவிய நெருக்கடியை வேருெரு முறையிலே தீர்ப்பதாக இந்த யோசனை இருக்கிறதெனக் கொள்ளலாம். கொள்கையளவில் அரசையும் திருச்சபையையும் கல்வின் ஒன்ருக இணைத்ததைப்போலவே, இந்தக் கொள்கையின் மதச் சார்பற்ற சரிநேர் பகுதியானது ஆன்மீக வலுவை உண்மையில் மதச் சார்பற்ற அதிகாரத்திற்குக் கொடுத்தது. அத்துடன், மனித அரசாங்கத்தின் இரண்டு ஆட்சிப்பகுதிகளுக்குமிடையே, அவை எந்த உருவத்தைக் கொண்டிருந்தாலும், நேர்மையான சமநிலையை வைத்திருக்கத் தவறுவதன் விளைவாக ஏற்படும் வல்லாட்சி முறையானதும் கட்டுப்பாடில்லாததுமான இறைமைச் செறிவையும் அது மதச் சார்பற்ற அதிகாரத்திற்கு வழங்கியது.

போப்பாண்டவர், பேரரசர் ஆகிய இருவருக்குமிடையே நிலவிய அமைதியற்ற இரட்டையாட்சிக்குச் செயல்முறைக்குகந்த மாற்றுத்திட்டத்தை ஏற்படுத்துவதற்கு மத்திய காலத்திற்குப் பின்பு எடுக்கப்பட்ட முயற்சிகளில் மதச் சார்பற்ற விடுதலை என்ற கொள்கையை ஆதரித்தவர்கள், சென்மப் பாவம் என்பது பற்றிய மிகவும் முக்கியமான கோட்பாட்டை மறுதலிக்கும்போது கிறித்தவ நம்பிக்கையின் முரண்கோட்பாட்டைக் ஏற்றுக்கொள்ளுமளவிற்குச் சென்றனர். பிற்கால மாக்சியக் கோட்பாட்டினதும் சமதர்மக் கோட்பாட்டினதும் மிகத் தெளிவான மூலமாக, பதினெட்டாம் நூற்றுண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவரும் மதக் கோட்பாடுகளிலிருந்து பிறழ்ந்தவருமான கத்தோலிக்க மதகுரு ஒருவரின் திருத்தமற்ற எழுத்துக்களே அமைந்திருந்தன என்பது மிகவும் முக்கியமானதாகும். அவரின் எழுத்துக்கள் அதிகம் பிரபல்யமடையவில்லை. அவரின் புத்தகத்தைப் பற்றிய தகவல் 1775 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அட்டவணையில் மட்டுமே காணக்கிடக்கின்றது. தம்முடைய வாழ்நாளின்போது தமது கொள்கை துறத்தலை உண்மையென ஒப்புக்கொள்ளும் துணிவைக் கொண்டிராத ஜீன் மெஸ்லியர், தம்முடைய மதப்பணி முழுவதும் விழலுக்கிறைத்த நீராகவேயிருக்கும் என்ற முடிவிற்கு வந்தார். தம்முடைய கோவிற்பற்றைச் சேர்ந்த வறிய விவசாயிகட்கு—பிரான்சிய நாட்டுப்புற மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் இவர்கள்—உண்ணும் உணவே அதிகம் தேவைப்பட்டது என்று கருதினுர் அவர். கடவுளின் கடாட்சத்தை மட்டும் பெற்று அவர்களால் உயிர்வாழ முடியாது. திருவழிபாட்டில் நடைபெறும் பொருள் மாற்றம் பற்றிய புதிரைத் தலைகீழாக்கல் என்ற இந்த அடிப்படையின் மீது உலகிலே ஒரு புதிய மோட்சம் என்ற கட்டடத்தைக் கட்டி எழுப்ப மெஸ்லியர் முற்பட்டார். அந்தக் கட்டடம் எழுப்பப்படும்போது திருச்சபையும் அரசும் பின்னுக்குத் தள்ளப்படுவதுடன் அவைகளை நிர்வகிக்கும் நிருவாகிகளுமே 'சிறையிலே தள்ளப்படுவார்கள் எனவும் அவர் கருதினுர். மெஸ்லியரின் 'ஏற்பாடு' (Testament), வரம்பு மீறிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக்களை உடையதொன்று. வோல்டயர், ஹொல்பாக் ஆகியோரின் பதிப்புக்களின் மூலம் மிகவும் சிதைந்த உருவத்திலேயே இந்தப் புத்தகம் பதினெட்டாம் நூற்றாண்டின் சிந்தனையாளர்களுக்குத் தெரியவந்துள்ளது. 'சிங்காரத்தோப்பு' என்ற கதைக்கு அவர் கொடுத்த விளக்கம் மிகவும் முக்கியமானது. இந்த வாழ்க்கையிற் காணப்படும் தீமைகள், துன்பங்கள், நோய்கள் ஆகிய பழிதீர்த்தல்களுடன் கடவுள் திருப்திப்படமாட்டாரா என்று மெஸ்லியர் கேட்கின்றார்.[1]

விவிலிய நூலிலே படைப்பின் தொடக்கம் என்ற பகுதியிற் காணப்படும் பழங் கதையின் எளிமையாக்கப்பட்டதும், செப்பமற்றதும் ஆனால் கேட்போர் மனத்தைத் தன்வசப்படுத்துகின்றதுமான இம்மறுபதிப்பை ரூசோ தம்முடைய மிகச்சிறந்த கட்டுரையான 'சமத்துவமின்மையின் ஆரம்பம்பற்றிய ஆராய்ச்சியில் (Discourse on the Origin of Inequality) விரித்துக் கூறியுள்ளார். தற்கால அரசியற் சிந்தனையைப் பொறுத்தவரையில் இக்கட்டுரை பொதுவுடைமைப் பனுவலிலும் (Communist Manifesto) பார்க்க எந்த வகையிலும் முக்கியத்துவத்திற் குறைந்ததன்று. மட்டுக்கு மிஞ்சிய தமது கண்டனங்களின் போது, சமத்துவமின்மையை மட்டுமல்லாது, தனியார் சொத்துரிமை, கொடுங் கோலாட்சியை நடத்தும் அரசாங்கம், பயனற்றவர்களும் சோம்பேறிகளுமான மக்கட் கூட்டம் ஆகியவைகளையும் பேணிப் பாதுகாப்பதற்கு கிறித்துவ சமூகம் அங்கீகாரம் வழங்கியது என்று மெஸ்லியர் குற்றம் சாட்டினார். இந்தக் குறைபாடுகள் சம்பந்தமாக திருச்சபை கொண்டுள்ள பாரம்பரிய மனப்போக்கை அவர் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளவில்லை. மனித இயல்பிற் காணப்படும் அகற்ற முடியாத குறைபாடுகளின் விளைவாக அவை தோன்றவில்லை என்பதை அவர் திடமாக நம்பினார். அதேவேளையில் சமூகச் சூழ்நிலைகளைச் சிலர் சூழ்ச்சித் திறத்துடன் கையாள்வதன் விளைவாகவே அவை தோன்றியிருப்பதாகக் கருதினார். நல்ல சந்தர்ப்பங்களைப் பெற்ற புத்திக் கூர்மையுடைய சிலர், அல்லது நல்ல சந்தர்ப்பங்களைப் பெற்ற தீவினையஞ்சாத சிலர், குறிப்பாகப் பொருளாதாரச் சூழ்நிலைகளைப் பெரும்பாலான மக்களுக்குக் கேடுவிளைக்கக் கூடிய வகையிற் பயன்படுத்திக்கொள்வதன் விளைவாகவே சமூகக் குறைபாடுகள் தோன்றின என அவர் நம்பினார். இந்தத் தன்னயப்படுத்தலின் விளைவாகச் சந்தர்ப்பங்களைப்பெறும் சிறுபான்மையோருக்குப் பெரும்பான்மையான மக்கள் அடிமைகளாகிவிடுகின்றனர். பணம்படைத்தவர்கள், வறியவர்கள் என்று இயற்கைக்கு முரண்பட்ட வகையிலே சமூகத்தைப் பாகுபாடு செய்வதுதான் தார்மீகத் தீமைகளை உண்டுபண்ணுகின்றது. ஒரு பகுதியினரிடம் தற்பெருமை, பேராசை, இடாம்பீக வாழ்க்கை ஆகியவைகள் தோன்றுகின்றன. வெறுப்புணர்ச்சி, பொறாமை, மற்றவர்மீது வஞ்சம் தீர்த்துக் கொள்ளும் உணர்ச்சி

[1] *Le Testament de Jean Meslier*, edited Rudolph Charles (Amsterdam 1864), vol. ii, p. 142. மெஸ்லியர் 1729 ஆம் ஆண்டிலே, 1733 ஆம் ஆண்டிலோ இறந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது. '*Testament*' என்றநூல் 1720 ஐ அடுத்த ஆண்டுகளிலே எழுதப்பட்டிருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவை மற்றப் பகுதியினரை அடிமைப்படுத்துகின்றன. இந்தச் சூழ்நிலை இயற்கைக்கு மாறானது. கடவுளும் இயற்கையும் சமூகம் எவ்வாறு இருத்தல் வேண்டும் என்று விரும்பினரோ அதே சமூகத்தைத்தான் தம்முடைய இலட்சிய சமூகமாக—அச் சமூகத்தை விவரிக்க அவர் பயன்படுத்திய மொழி கிறித்துவ மொழிப் பிரயோகத்தைப் பின்பற்றியிருந்தபோதிலும், அவர் வாழ்ந்த காலத்து வழக்குமுறைக்கேற்பத் திருத்தியமைக்கப்பட்டதாகும்—மெஸ்லியர் கண்டார். கடவுளும் இயற்கையும் தமது விருப்பத்தின்படி சமூகத்தை அமைக்க முடியாதவாறு தடுக்கப் பட்டுவிட்டனர். அந்த இலட்சிய சமூகத்தைப் பெறமுடியாமல் இருந்தமைக்கு எல்லா மக்களினதும் தீய சிந்தைகள் காரணமாக இருக்கவில்லை. அதற்கு மாறாக, ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தினர் வேண்டுமென்று செய்த பழியார்ந்த செயல்களின் திரிபையேற்படுத்தும் விளைவுகளே இதற்குக் காரணமாயின.

இந்த வர்க்கமும், அதன் கூட்டுத் தலைமையைத் தொடர்ந்து பேணிப் பாதுகாப்பதற்காக அந்த வர்க்கத்தினர் உருவாக்கிய திருச்சபை, அரசு ஆகிய நிறுவனங்களும் முற்றாகத் தகர்த்தெறியப்பட்டால், வறுமை, அடக்குமுறை, சமத்துவமின்மை ஆகியவைகளின் அடிப்படைக் காரணங்கள் பூரணமாக அகற்றப்பட்டுவிடுமென்பது இயல்பே. இந்த நிகழ்ச்சிக்குப் பின்பு தொடர்ந்து வாழ்பவர்கள் தங்களை முன்பு அடிமைப்படுத்திய சமூக நிறுவனங்களும் அமைப்புக்களும் மறுபடியும் உயிர்பெற்றுவிடாமல் பார்த்துக்கொள்வதையே தங்களின் முக்கிய பணியாகக் கருதுவார்கள். இயற்கை அளித்த திரவியங்களைச் சமுதாயத்திலுள்ள யாவரும் தங்களுக்குட் பகிர்ந்துகொள்ளும் உண்மையான முறைக்குப் பதிலாக ஆன்மீகப் பொருள்களைப் பகிர்ந்துகொள்ளுதல் என்ற உண்மையல்லாத முறையொன்றைக் கிறித்துவர்கள் ஏற்றுக்கொண்டனர் என்று மெஸ்லியர் கூறுகின்றார். மக்கள் தங்களின் தேவைகட்குப் போதுமானவைகளைப் பெற்றுக்கொண்டால் சமூகத்தீமைகளைச் செய்வதற்கான மனப்போக்கை அவர்கள் இழந்துவிடுவர்; அதன் விளைவாகச் சமூகத் தீமைகள் அருகி மறைந்துவிடும்.

புரட்சிக்குத் தூபமிடும் வகையிலேயே இந்தக் கருத்துக்கள் கோவைப் படுத்தப்பட்டிருந்தன. இக்கருத்துக்கள் வெளியிடப்பட்டால் ஆட்சியாளர்கள் எந்தவிதமான பதில் நடவடிக்கையை எடுப்பார்கள் என்பதை மெஸ்லியர் சரியாக மதிப்பிட்டிருந்தமையினாற்றான் தமது மரணம் வரையும் அவர் இவைகளை மறைத்து வைத்திருந்தார். அரசியல் தொடர்புகளின் தன்மையை அவர் அறிந்துகொண்ட விதம் மிகவும் எளிதானது. அகுஸ்தீன் குறிப்பிட்டதைப் போன்று, பொது நிறுவனங்கள் யாவும் கொள்ளைக்கூட்டத்தினரின் கைகளிலேயே தங்கியிருக்கின்றன. திருச்சபையிலும் அரசிலும் நீதியாக நடந்துகொள்வதாகக் கூட அவர்கள் காட்டிக்கொள்வது கிடையாது. மெஸ்லியரைப் பொறுத்தவரையிலும், மோட்சவுலகம் என்னும் பூந்தோட்டத்தில் இருக்க வேண்டிய இயற்கையான அமைதியையும் மாசற்ற தன்மையையும் பிசாசுதான் அழித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனுல், அவர் தாம் வாழ்ந்த காலத்திலிருந்த உலகத்தையே பூங்கா எனவும், பிற் காலப் பொதுவுடைமைக் கொள்கைப்படி ஆளும் வர்க்கத்தினர் என அழைக்கப் பட்டோரை பிசாசுகள் எனவும் கொண்டார்.

அரசியல் தொடர்புகளிலும் நிறுவனங்களிலும் பாரதூரமான புரட்சி நடை பெற்றதைத் தொடர்ந்து சமூக இணக்கமும் குற்றமில்லாத்தன்மையும் நிலவும் சமூக அமைப்பிற்கு மீள்வதை—சில சிந்தனையாளர் இதை முன்னேற்றம் என அழைக்கின்றனர்—தார்மீக விடுதலையாகக் கருதும் நம்பிக்கையில் இரண்டு வேறுபட்ட போக்குக்களை எம்மால் அவதானிக்க முடிகின்றது. முதலாவதாக, இணக்கமின்மைக்கும் அடிமைத்தனத்திற்குமான காரணங்களை இனங்கண்டு பிடித்து, அவைகளை அகற்றுவதற்கான அல்லது மாற்றுவதற்கான ஆலோசனை களைத் தெரிவிப்பது. இரண்டாவதாக, பழைய நிலைமை திரும்பவும் ஏற்படாத வாறு, புதிதாகப் பெற்ற விடுதலை என்றும் நிலைத்திருக்குமாறு ஒழுங்குகளைச் செய்வது. இந்த இரண்டாவது அம்சம் அடிக்கடி விரித்துரைக்கப்படுகிற மிகவும் முக்கியமான கருத்தாகும். நிலைநிறுத்தப்பட்ட சமூகத்திலுள்ள குறைபாடுகள் தவறுகளின் விளைவாகவே தோன்றுகின்றன என்றும், வேருன சூழ்நிலைகளில் அவைகளை அகற்றிவிடலாம் என்றும் கூறும் நம்பிக்கைதான், புதிய உலகை உரு வாக்கு முன்பு நிலைநாட்டப்பட்ட ஒழுங்கமைப்பைக் கவிழ்ப்பதற்குத் தேவை யான ஊக்கத்தைக் கொடுக்கின்றது. மெஸ்லியரிலும் பார்க்கக் குறைந்த அளவிற் புரட்சிகரமாகச் சிந்தித்த பதினெட்டாம் நூற்றுண்டைச் சேர்ந்த சிந்தனை யாளர், தற்போதுள்ள ஒழுங்கமைப்பின்கீழ் இடையூறுகளை அனுபவிப்போர் அடக்கமுடியாத ஆசையினுலே தூண்டப்படக்கூடிய சூழ்நிலைகளுக்கு உட்படா மல் இருக்கவேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தினர். தொற்று நோய் ஏற் படக்கூடிய இடத்திற்குச் செல்லாதே என்று ஒருவனை எச்சரிக்கை செய்வதை அது ஒத்திருந்தது.

வேருெரு பிரெஞ்சுச் சீர்திருத்தவாதியான அபே டி மப்லே புராதனக் கதை யொன்றை மேற்கோள் காட்டியதோடு, அதிற் பொதிந்துள்ள கருத்திற்கும் தமது ஆதரவை நல்கினர். அக்கதையில் வரும் நடிகரான அகேசிலாஸ் இவ்வாறு கூறுகின்ருர்: 'எவ்வித முயற்சியுமில்லாமல் நல்ல மனிதனுக இருப்ப தற்காக..............ஆசையாலே தூண்டப்படுவதற்கு நான் என்னை அனுமதிப்ப தில்லை'.[1] மக்களிடம் காணப்படும் இயற்கையான நல்ல குணத்தை, குழப்பத்தை ஏற்படுத்தும் வேறு சோதனைகளுக்கு உட்படுத்தக்கூடாது என்ற இந்த நிபந் தனைதான் புரட்சிக்கு அப்பாற் காணப்படுகின்றது. சொத்துரிமை முறைக்கு முற்றுப்புள்ளி வைத்தல் வேண்டும் எனவும், அரசாங்கத்தைப் பூரணமாக சன நாயக அடிப்படைக்கு மாற்றுதல் வேண்டும் அல்லது அதை முற்றுகவே அழித்துவிடுதல் வேண்டும் எனவும் இந்த நிபந்தனையே வற்புறுத்துகின்றது. மப்லேயின் சமகாலத்தவரான மோரலி, 1755 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட தமது 'இயற்கை விதிகள்' (Code de la nature) என்ற புத்தகத்திலே,

[1] *Œuvres* (Paris 1794–5), vol. ix, p. 35. *De la legistation*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சொத்துக்கள் இல்லாவிட்டால் அதன் மிகு கேடு விளைக்கின்ற விளைவுகள் எவையுமே ஏற்படா'[1] என்று எழுதினர். வருங்கால நிலையை எதிர்வு கூறும் வகையில் எழுதப்பட்டுள்ள கட்டுரைகள் பல, கருத்தியல் கற்பனைகளாகவே இருக்கின்றன. அரசாங்கத்தின் கட்டுப்பாடு எதுவுமற்ற இலட்சிய சமூகத்தைப் பற்றி அவை கனாக் காண்கின்றன. ஆனால் மற்றவர்களைப் பொறுத்தவரையில்—இங்கே மப்லேயை உதாரணமாகக் காட்டலாம்—தீமையிலிருந்தும் தீமைக்குத் தூண்டுதலளிக்கும் சூழ்நிலையிலிருந்தும் விடுவிக்கப்பட்ட சமூக வாழ்க்கையைப் பேணிப் பாதுகாப்பதற்குரிய முக்கியமான சாதனமாக அரசியலதிகாரம் அமையும். மதச் சார்பற்ற மீட்சி என்ற கருத்தை விரித்துரைத்த புகழ்மிக்க சிந்தனையாளர்களிடம் இவ்விருவிதமான கருத்துக்களையும் காணமுடிகின்றது. அரசாங்கத்தை அரசியல் தன்மையற்ற ஓர் அமைப்பாக மாற்றியமைப்பது பற்றிய கருத்தை மாக்சிய வாதிகளின் எழுத்துக்களிலே காணமுடியும். அரசியல் அதிகாரத்தைப் புரட்சிகரமான முறையிலே திருத்தியமைப்பதன் மூலம் மனித சமூகத்திற் காணப்படும் இணக்கமின்மையைத் தீர்க்க முடியும் என்ற கருத்தைக் கொடுத்துதவியமை, அரசியல் வாய்ப்பாராய்விற்கு ரூசோ செலுத்திய பங்காகும். எல்லா மக்களும் ஒரே நேரத்தில் இறைமையைக் கொண்டவர்களாகவும் அந்த இறைமைக்குக் கீழ்ப்படிபவர்களாகவும் இருக்கக்கூடிய வகையில் அரசியலதிகாரம் திருத்தியமைக்கப்படல் வேண்டுமென்று ரூசோ கருதினர். இந்த அத்தியாயத்தில் நாம் ஆராயும் போக்குக்களினதும் கோட்பாடுகளினதும் பிரதான அரசியல் தீர்க்கதரிசியாக ரூசோ விளங்கினாராகுல், அவைகளின் பொருளாதார விளக்கவுரைகாரர்களாக மாக்சும் எங்கிள்சும் திகழ்ந்தனர் என்று கூறலாம். சமூக ஒழுங்கின்மை மறுபடியும் ஏற்படாமல் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளுக்கும் அச்சமூக ஒழுங்கின்மைக்கான அடிப்படைக் காரணங்களுக்குமிடையே கொடுக்கப்பட்ட வற்புறுத்தல்களிலுள்ள வேறுபாட்டைத்தான் இப்பாகுபாடு மறுபடியும் குறிக்கின்றது. போலந்து, கோசிக்கா ஆகிய இரு நாடுகளுக்குமென ரூசோ எழுதிய அரசியலமைப்புச் சட்டம் பற்றிய கருத்துரைகளைத் தவிர, புதிய ஒழுங்கை அமைக்கும் முறை பற்றியும் நிர்வகிக்கும் முறை பற்றியும் அவர் எதையுமே தெரிவிக்கவில்லை. அரசியலமைப்புச் சட்டங்கள் பற்றிய அவரின் கருத்துரைகள்கூட குறிப்பிட்ட இரு சூழ்நிலைகட்கெனத் தயாரிக்கப்பட்டவையேயல்லாது, எல்லாச் சூழ்நிலைக்கும் பொருந்தக்கூடிய பொதுக் கருத்துக்களல்ல. எனினும், நாம் வாழும் இந்த நூற்றுண்டைச் சேர்ந்தவரும் மிகப் பெரிய சமூகப் புரட்சியொன்றின் பிரதான சிற்பியுமான லெனின், விடுதலையை அடையும் வழிபற்றியும் அதைப் பாதுகாப்பதற்கான வழி பற்றியும் தம்முடைய கருத்துக்களை எமக்கு விட்டுச் சென்றுள்ளார். அவரின் கருத்துக்கள் இந்தச் சிந்தனை மரபுவழியையே முன்மாதிரியாகக் கொண்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. அடக்குமுறை செலுத்தும் ஆசையையும் சுரண்டும் சந்தர்ப்பத்தையும் கொண்டிராத புதிய ஆளும் வர்க்கத்தின் பணிபற்றி லெனினிடமிருந்து நாம் ஓரளவு கற்றுக்கொள்ள முடியும்.

[1] முற்கூறிய நூல், பக். 30.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பாத அல்லது விரும்பி அனுபவிக்காத சிலர்மீது இந்த நிபந்தனையைத் திணித்தல் வேண்டும் என்ற அர்த்தத்தில் விடுதலை என்ற பதத்தைப் பயன் படுத்தல் முரண்பட்ட கருத்தை உள்ளடக்கியிருப்பதோடு, குழப்பம் தருவ தாகவும் ஆபத்தானதாகவும் இருக்கின்றதென்று அண்மையில் வெளியிட்ட கட்டுரையொன்றில் திரு. வெல்டன் சுட்டிக் காட்டுகின்றார்.[1] அவரின் இந்த மதிப்பீடு சரியானதாகவிருக்கலாம். ஆனால், இந்த அர்த்தத்திற் பயன்படுத்தும் போதுதான் அப்பதம் தூண்டல் செய்வதாகவும், செல்வாக்குடையதாகவும், புரட்சிகரமானதாகவும், விளங்கிக்கொள்ளக்கூடியதாகவும் இருக்கின்றது என் பதைச் சுட்டிக் காட்டத்தான் வேண்டும். முரண்கோட்பாடு என அதை அழைப்பது—அவ்வாறு அழைக்கத் தகுதிவாய்ந்தது அது—சமூகம், அரசியல் ஆகியவைகளை இவ்வாறு சிந்திக்கும் முறைக்கும் அம்முறை வற்புறுத்தப்படு தற்கு அடிப்படையாகவுள்ள அகுஸ்தீனின் மூலக் கருத்திற்குமிடையேயுள்ள மிகவும் முக்கியமான வேறுபாட்டை எடுத்துக்காட்டுவதாகும்.

* * * *

புதிய திருச்சபை—அரசிற்கான திட்டத்தைத் தயாரித்தளித்த பெருமை, கல்வினின் ஜெனிவாவில் வாழ்ந்த குடிமக்களுள் ஒருவனைச் சார்ந்தது குறிப் பிடத்தக்க விடயமாகும். புதிய திருச்சபை—அரசிலே அரசியல் அதிகாரமும் ஆன்மீக அதிகாரமும் இறைமை என்ற தனி அமைப்பில் ஒன்றாக இணைந்திருந் தன. அந்த இறைமையில் ஒவ்வோர் உறுப்பினரும் பங்குகொண்டிருந்ததோடு, அதற்கு மிகக் கீழ்ப்படிவாகவும் நடந்து கொண்டனர். நடைமுறையிற் காணப் பட்ட சமூகத்தின் வர்ணனையாக அமையாத இக்கருத்தியல் கற்பனை, ஐரோப் பிய மொழிகளில் வெளிவந்த எல்லா அரசியற் கட்டுரைகளிலும் பார்க்க அதிக மாக விவாதிக்கப்பட்டதோடு மிகவும் பாரதூரமான விளைவுகளையும் ஏற்படுத் தியது. ரூசோவின் 'சமுதாய ஒப்பந்தம்' (Social Contract) வெளியாகி இரண்டு நூற்றாண்டுக் காலம் முடிவடைந்ததன் பின்பும் ரூசோ பயன்படுத்திய பதங்களின் அர்த்தங்களைப் பற்றியும் அவரின் ஆலோசனைகளை எவ்வாறு விளங் கிக் கொள்ளுதல் வேண்டும் என்பதைப் பற்றியும் கருத்தொற்றுமை ஏற்பட்டு விடவில்லை. அவரின் சிந்தனையைச் சுருக்கிக்கூறுவது ஒருதலைப்பட்சமானதாக வும் குறைபாடுடையதாகவும் இருப்பதோடு, அவர் கிளப்பி விடையிறுக்க முயன்ற பிரச்சினைகள் எவ்வளவு சிக்கலானவையும், நுட்பமானவையும், ஆழ மானவையுமாகும் என்பதைச் சுட்டிக் காட்டுவதாகவும் அமையும்.

ரூசோவின் குணவியல்பு ஏற்படுத்தும் கவர்ச்சி—கலங்கலான மனவியல்பு என்று சிலர் கூறுகின்றனர்—அவர் சொல்ல முயலும் கருத்துக்களிலிருந்து—மக் களின் கவனத்தை அதிகமாகத் திருப்பிவிடுகின்றது. மற்றச் சிந்தனையாளர்களி லும் பார்க்க ரூசோவின் வாழ்க்கை அவரின் சிந்தனையுடன் இறுக்கமாகப் பிணைந் திருந்தது. தம்முடைய சொந்த ஆளுமையை எதிர்நோக்கிய தார்மீகப் புதிரை

[1] T. D. Weldon : *The Vocabulary of Politics* (Penguin 1953), p. 74

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவிழ்க்க முயலும்போது அரசியல்பற்றித் தற்செயலாகவே அவர் சிந்திக்கத் தொடங்கினர். இதன் விளைவாக, சமூகத்தைப் பற்றி ஆராய்கிறபோது தமது சொந்த வாழ்க்கையிலிருந்தே அவர் அடிக்கடி உதாரணங்களைக் கொடுக்கின்றார். நல்ல வாழ்க்கைக்கு உத்தரவாதமளிக்கக் கூடியவகையில் நகரைப் புதிதாக உருவாக்குவதற்கான தமது சிபாரிசுகளை, சமநிலையையுடையவனும் தார்மீக முறையில் இணக்கத்தையுடையவனுமான ஒரு மனிதன் தனது நல்வாழ்வைத் திரும்பப் பெறுவதற்குக் கடைப்பிடிக்க வேண்டிய தத்துவங்களின் அடிப்படையிலே செய்துள்ளார். ஆனால் அதற்கான ஒரு காப்பு வாசகத்தைக் குறிப்பிடவும் அவர் தயங்கவில்லை. தனிமனிதர் தங்களின் நல்வாழ்வை அடைவது சமூகத்தில் அங்கம் வகிப்பதிலேயே தங்கியிருக்கின்றது என்பதே அதுவாகும்.

ஓர் அரசியற் கூட்டம் பொது விருப்பாற்றலைக் கொண்டிருக்கும் என்றும் இந்த விருப்பாற்றல் இறைமை அதிகாரத்தைப் பிரயோகிப்பது இணக்கமான சமூகத்தை உருவாக்குவதற்கான முன்நிபந்தனையாகவிருக்கும் என்றும் ரூசோ கூறுகின்றார். இவ்வாறு கூறும்போது எந்த அர்த்தத்தை அவர் மனத்திற் கொண்டிருந்தார் என்பதை விளங்கிக்கொள்வது ரூசோவின் சிந்தனையை ஆராய்பவர்களை எதிர்நோக்கும் இரண்டாவது பிரச்சினையாக இருக்கின்றது. அத்தகைய விருப்பாற்றல் என்ற ஒன்று இருக்கின்றதா? அவ்வாறு இருக்குமானால் அதை அறிந்துகொள்வது எவ்விதம்? அந்த விருப்பாற்றலின் நோக்கம் என்ன? வெவ்வேறு கருத்துக்களைக் கொண்டிருக்கும் சிறுபான்மையோருடன் இந்தப் பொது விருப்பாற்றலை ஒத்துப்போகச் செய்வது எங்ஙனம்? இப்பொது விருப்பாற்றல் எப்பொழுதும் பெரும்பான்மையோரின் விருப்பமாகத்தான் இருத்தல் வேண்டும் என்று கூறமுடியுமா? இந்தக்கேள்விகள் முக்கியமானவையாகவும் கவனத்தை ஈர்ப்பனவாகவும் இருப்பதனால் ஆராயப்பட வேண்டிய தரத்தினையுடையவை. இத்தகைய பிரச்சினைகளை ஆராய்வதும் ரூசோவின் முக்கிய நோக்கத்திலிருந்து எமது கவனத்தைத் திசை திருப்புவதாகவிருக்கும். விடுதலை என அவர் அழைக்கும் தார்மீக நிலைமையின் சிறப்பியல்புகளை எடுத்துரைப்பதும், அதை இழந்ததற்கான காரணங்களைப் பகுத்தாராய்ந்து அதை எத்தகைய நிலைமைகளிலே திரும்பிப் பெறமுடியும் என்பதை விவரிப்பதுமே ரூசோவின் பிரதான நோக்கமாகவிருந்தது. கட்டுப்பாடற்ற சமூகத்தை உருவாக்குவதற்குத் தேவையானவை எனக் கூறப்பட்ட நடவடிக்கைகளுக்குள் பொது விருப்பாற்றல் முக்கியமான பங்கை வகிக்கின்றது. ஆனால் அதை மட்டும் தனிப்பட்ட காரணமாகக் கொள்ளமுடியாது. அத்துடன், ரூசோவின் விடுதலை வேட்கை என்ற விரிவான சூழ்நிலையைக் கணக்கிலெடுக்காதுவிட்டால் பொதுவிருப்பாற்றல் என்ற கருத்தை விளங்கிக் கொள்வது மிகவும் கடினமாகிவிடும்.

பதினெட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த பிரெஞ்சு மொழி பேசிய மற்றச் சமூகச் சீர்திருத்தவாதிகளும் விடுதலையையே நாடினர். தன்னிச்சையான அரசாங்கத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பதையும், அதற்குப் பதிலாக அனுபவமுறையில் அனுமானிக்கப் பெற்ற சமூகப் போக்குக்களுக்கேற்ப அமைந்த சட்டங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுடையதும், பகுத்தறிவின்பாற்பட்டதுமான ஆட்சிமுறையை ஏற்படுத்து வதையுமே விடுதலை என அவர்கள் கருதினர்கள். அனுபவ முறையில் அனுமானிக்கப்பெற்ற சமூகப் போக்குக்கள், அரசியல் தலையீடு கட்டுப்படுத்தப் பட்டவுடன் இயற்கையாகவே இணக்கத்தை நோக்கிச் செல்லும் என்பது அவர்களின் கருத்தாகும் அத்தகைய சமூகத்தின் உறுப்பினர்களான பகுத்தறிவையுடைய தனிமனிதர்கள், டிடரோவின் கருத்தின்படி, தங்களிடம் காணப்படும் அற ஆர்வத்தையுடைய சமூகப் பண்பாட்டின் காரணத்தினுல், இதைப்போல இயற்கையாகவே இணக்கமுள்ளவர்களாகவும் ஒத்துழைப்பில் நம்பிக்கையுடையவர்களாகவும் இருப்பார்கள் எனவும், தனி மனிதர்களிடம் காணப்படும் அற ஆர்வத்தையுடைய சமூகப் பண்பாடு, தனது அறிவொளியையுடைய செல்வாக்கைப் பிரயோகிப்பதற்குச் சந்தர்ப்பத்தை எதிர் நோக்கியிருக்கும் எனவும் டிடரோ கருதினர். ஆயிரத்து எழுநூற்று நாற்பதாம் ஆண்டுகளில் ரூசோ முதன்முறையாகப் பாரிஸ் நகருக்குச் சென்றபோது டிடரோவாலும் அவரின் இந்தக் கருத்தாலும் கவரப்பட்டார். ஆனுல், டிடரோவையும் அவரின் கருத்தையும் தமது பிற்காலத்தில் ரூசோ நிராகரித்தார். அறிவொளி பற்றிய தத்துவங்களை நிராகரித்தது காரணமாக, பதினெட்டாம் நூற்றுண்டுச் சிந்தனையாளர்களிடையே ரூசோ தனியிடத்தை வகிக்கின்றுர். தமது செல்வாக்கை இழந்துவிடாமலிருந்த பிரெஞ்சுத் தனியாண்மைப் பகுத்தறிவாதத்திற்கு எதிரான ஓர் இயக்கத்தை ரூசோ ஆரம்பித்தார்.

இணக்கத்தையுடைய பகுத்தறிவின்பாற்பட்ட ஒத்துழைப்பில் நம்பிக்கை வைத்து அரசாங்கத்தின் கோலத்தை மட்டும் மாற்றியமைப்பதினுல், தாம் வாழ்ந்து வரும் சமூகத்தை அபிவிருத்தி செய்யவோ நிறைவானதாக்கவோ முடியாது என்று ரூசோ கருதினர். அதற்கு மாறுகச் சமூகத்தைப் பாரதூரமான முறையில் மாற்றியமைத்தல் வேண்டும். இதைச் செய்வதற்கு அதிக சந்தர்ப்பம் கிடைக்காதாகையால், மிகவும் குறைந்த சமூகத் தொடர்புகளையுடைய ஆதிகால வாழ்க்கை முறைக்குத் திருப்பிச் செல்லுதல் வேண்டும் என்ற ஆலோசனையைக் கூறுவதே ரூசோவின் முதல் நடவடிக்கையாகவிருந்தது. சம காலத்துக் கொள்கைகளை ரூசோ நிராகரித்தமைக்கு, தீவிரமான உணர்ச்சிகளையுடைய அவர் கலைக்களஞ்சியத்தை எழுதியவர்களின் வறண்ட, பகுத்தறிவின் பாற்பட்ட சுயவிருப்புக் கொள்கைமீது கொண்டிருந்த வெறுப்பும், நாட்டுப் புறத்தைச் சேர்ந்த அவர் பாரிஸ் நகர வாழ்க்கைமீது கொண்டிருந்த வெறுப்பும் ஓரளவு காரணமாகவிருந்ததாகக் கொள்ளலாம். ஆனுல் எல்லாவற்றிற்கும் மேலாகத் தமது சொந்தச் சூழ்நிலையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட மிகு உணர்ச்சியையுடைய அவர், இவ்வுலகிற் கிடைக்க முடியாத நிறைவான அமைதியைப் பெறவிரும்பியமையே இதற்கு முக்கிய காரணமாகும். எது எவ்வாறிருந்தபோதிலும், புதிய சமூகக் கொள்கை ஒன்றை உருவாக்கும் பணியை ரூசோ தனியாகவே மேற்கொண்டார். அத்தகைய சமூகக் கொள்கையில் விடுதலை என்பது, விருப்பாற்றல், பகுத்தறிவு, உணர்ச்சிகள் ஆகிய யாவும் சமநிலையுடைய நிறைவில் ஒன்றுடொன்று ஒத்துழைக்கும் ஆன்மாவிற் காணப்படும் இணக்கத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும், அத்தகைய ஆன்மா மற்றவர்களுடன் மகிழ்ச்சியாக நடத்தும் வாழ்க்கையை யும்—இசைவிணக்கமுடைய ஒரே சுய கட்டுப்பாட்டை அவர்கள் ஒருமித்துத் தங்களுடைய பொது அக்கறைகளிலே வெளிப்படுத்துவர் என்பதே அதற்குக் காரணம்—குறிக்கும்.

1751 ஆம் ஆண்டில் வெளிவந்த பிரபலமான புத்தகமாகிய, 'கலை, விஞ்ஞா னம் ஆகியவைகளின் தார்மீக விளைவுகள் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரையில்' (Discourse on the Moral Effects of the Arts and Sciences) அக்காலத்தில் நிலவிய கருத்துக்களுக்கு மாறான கருத்தைத் தாம் தெரிவிப்பதற்காக எவரும் தம்மை மன்னிக்க மாட்டார்கள் என்பதை ரூசோ அறிந்திருந்தார். 'இன்று யாவராலும் அதிகம் மெச்சப்படுவனவற்றுக்கு எதிராகத் தமது கருத்துக்கள் இருப்பதாக' அவர் அறிவித்தார். சமகாலச் சிந்தனையாளர்களால் மிகவும் பகட் டாகப் பேசப்பட்ட நாகரிகத்தில் ஏற்பட்ட பெரிய வளர்ச்சியைத் தோல்வி எனக் கொள்வதன் மூலமே அதனைச் சிறந்த முறையில் விளங்கிக் கொள்ள முடியும் என்பதை, அறிவியல் முன்னேற்றத்திற்கு இருப்பதாகக் கூறப்படும் தன்மைகளுக்குத் தெரிவிக்கப்பட்ட சொற்றிறம் வாய்ந்த இந்தக் கண்டனம் எமக்கு அறிவுறுத்துகின்றது. ரூசோவின் கருத்துப்படி, மனிதனிடத்து இயற் கையாக ஆரம்பத்தில் இருந்த நல்ல குணம், இந்த நடைமுறையின்போது பலி யிடப்பட்டுவிட்டது. மனிதன் அனுபவித்திருக்க வேண்டும் என அவர் வாதிட்ட கவலையற்ற, மகிழ்ச்சியான, கெடுதலில்லாத வாழ்க்கைக்கு (வாழ்க்கை என்பது அவ்வாறுதான் இருக்க வேண்டுமென்று ரூசோ கருதிக் கண்டார்) அன்றிருந்த நிலைமையில் இடம் கிடையாது என்று ரூசோ கருதினர். கட்டுப்பாடற்ற இயற் கையான வாழ்க்கை என்பது மற்றவர்களின் முடிவுகளில் நேரடியாகவோ மறைமுகமாகவோ தங்கியிராமல், சொந்தமான முடிவுகளைச் செய்யக்கூடிய சமூ கச் சுதந்திரத்தைக் கொண்டதாக இருத்தல் வேண்டும் என்ற கருத்திற்கு விசேட அழுத்தம் கொடுக்கப்படுவதை நாம் ஏற்கவே காணக்கூடியவரா யிருக்கிறோம்.

நாகரிகமடைந்த சமூகத்தின் அடிமை வாழ்க்கைக்கும் இயற்கையிற் காணப் படும் சுதந்திரமான வாழ்க்கைக்குமிடையேயுள்ள முரண்பாடுகளை வற்புறுத்திக் கூறியதன்பின், சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சமூகங்களில் வாழ்ந்த மக் களுட் பெரும்பாலோருடைய வாழ்க்கையைத் திரிபுபடுத்தியனவும் ஏமாற்றத் திற்காளாக்கியனவுமான நிலைமைகளாகிய அடிமைப்படுத்தல், மற்றவர் களிலே தங்கியிருத்தல் ஆகியவை சமத்துவமின்மைக்கு எவ்வாறு இடமளித் தன என்பதை விரித்துரைப்பதற்கு ரூசோ தம்முடைய இரண்டாவது ஆராய்ச்சிக் கட்டுரையிலே கவனம் செலுத்தினர். ஹொப்ஸ், லொக் ஆகியவர் களைப் போன்றே இயற்கையின் நிலை என்ற உருவகத்தைப் பயன்படுத்துவதன் மூலம் ரூசோ இந்த ஆராய்ச்சியைத் தொடர்ந்து செய்கின்றார். ஹொப்சின் இயற்கை நிலையைப் போன்றே இந்த நிலைமை பொதுவான அரசியற் பின்ன ணிக்குக் கருத்துருவம் கொடுப்பதாகவுள்ளது. ஆனல், லொக்கினது இயற்கை நிலையைப் போன்று மனித இயல்பின் உறுதியான தார்மீகக் குணுதிசயங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கிக் கூறுவதற்கெனத் தயாரிக்கப்பட்டதாக இது அமைந்துள்ளது. ஆனால் ஹொப்சைப் போலன்றி, தாம் விவரிக்கும் நிலைமைகள் நடைமுறையில் இருக்க முடியாதவை என்று ரூசோ கூறவில்லை. லொக்கைப் போலன்றி, அரசியல் தொடர்புகள் ஏற்படுவதற்கு முன்பே இருக்க வேண்டிய தனியார் உரிமைகள்பற்றிய ஒரு முறைமையை ஆதரிப்பதற்கு ஒப்பந்தம் என்ற பதத்தை ரூசோ பயன்படுத்தவில்லை. ரூசோவைப் பொறுத்தவரையில், ஹொப்சின் இயற்கை மனிதன் ஆட்சியறவு நிலையிலிருந்து இறைமையையுடைய அரசாங்கத்தாற் காப்பாற்றப்பட்டான்; இயற்கை மனிதனின் இந்த ஆட்சியறவு நிலை, அவன் வாழ்ந்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சமூகங்களுக்கு இசைவாயிருந்தது. அந்த ஆட்சியறவு நிலையிலிருந்து சமூகங்கள் தப்பித்துக் கொண்ட முறையிலே ரூசோவின் கருத்துக்களுக்கும் மற்றவர்களின் கருத்துக்களுக்கும் முக்கிய வேறுபாடு உண்டு. நிர்வாக அதிகாரத்திடம் இறைமையை ஒப்படைக்க வேண்டும் என்று அவர் சிபாரிசு செய்தது கிடையாது. அதற்கு மாறாக இறைமையானது மக்கள் முழுப்பேரிடமும் இருக்க வேண்டும் என்று அவர் வற்புறுத்தினர்.

புத்தகத்தின் ஆரம்பப் பகுதியிலே தமது கேள்விக்கு அரசியல் விடையொன்றைக் கொடுக்க ரூசோ முயலவில்லை. அதற்கு மாறாகக் கட்டில்லா மனிதனின் குணதிசயங்களையும் அவனின் இயற்கைச் சுதந்திரத்தைப் பறித்த காரணிகளையும் (இது பற்றிய விளக்கம் அதிகம் திருப்திகரமானதாகத் தோன்றவில்லை) விவரிக்க அவர் முயன்றிருக்கிறார். உளவியலடிப்படையிற் பார்க்கும்போது, விடுதலைபற்றி ரூசோ கண்ட கனவிற்கும் மிகு மகிழ்ச்சிபற்றி ஹொப்ஸ் விவரித்துள்ளமைக்குமிடையே மிகவும் நெருங்கிய ஒற்றுமை இருப்பதை இங்கே மறுபடியும் காணலாம். இருவரையும் பொறுத்தவரையில், தமது விருப்பங்களைத் திருப்தி செய்வதற்கான முயற்சியின்போது தங்களின் நோக்கங்களை அடைய முயலுவதே மனித இனத்தைச் சேர்ந்தோரின் குறிப்பிடத்தக்க சிறப்பியல்பாக இருக்கின்றது. இதை வெற்றிகரமாகவும் தொடர்பாகவும் செய்யக்கூடிய நிலையில் இருப்பதே மிகு மகிழ்ச்சியை அடைவதற்குரிய நிபந்தனையாகும் என்று ஹொப்ஸ் கருதுகின்றார். சட்டத்தின்படி அரசியலதிகாரத்திற்குக் கீழ்ப்படிந்து நடப்பதைத் தவிர, தாம் அடையமுயலும் நோக்கம் நன்னெறியின் பாற்பட்டதா என்ற பிரச்சினையைப் பற்றித் தனிமனிதர் கவலைப்படத் தேவையில்லை. ஆனல் ரூசோவைப் பொறுத்தவரையில், நோக்கம் நன்னெறியின்பாற்பட்டதா என்பது மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. தான் அடைய விரும்பும் நோக்கத்தைச் சிறந்த முறையிலே தெரிந்தெடுத்து, அதைத் தனதாக்கிக் கொண்டு, அதை நிறைவேற்றும் வழிகளைத் தன்னுடைய கட்டுப் பாட்டிற்குள் கொண்டுவரக்கூடிய நிலையில் இருக்கும்போதே மனிதன் உண்மையிற் சுதந்திரமுடையவனுகின்றான். இரண்டு பேரையும் பொறுத்த வரையில், வலு (அதாவது சூழ்நிலைகளைக் கட்டுப்படுத்துதல்) மிகவும் முக்கியமானது. ஆனல், ஹொப்ஸ் வலுவை உண்மை நிலையின் அடிப்படையிற் பகுத்து ஆராய்கின்றார். ரூசோவிற்கு அது உண்மை நிலையையும் நன்னெறியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் பிரதிபலிப்பதாகவிருக்கின்றது. நல்ல நோக்கங்களைக் கொண்டிருந்தும் அவற்றை அடைவதற்கான வழிகளைப் பெருமையினால், அவைகளை அடைய முடியாதிருப்பவர்களைப்போலவே தீய மார்க்கத்தைத் தேர்ந்தெடுப்பவர்களும் அடிமைப் படுத்தப்படுவர் என்று அவர் கருதுகின்றார். 'தீமைகள் யாவும் பல மின்மையிலிருந்தே பிறக்கின்றன.'

இயற்கை வாழ்க்கைக்குத் திரும்ப வேண்டும் என்ற ரூசோவின் வேண்டு கோளை வோல்டயர் முதன்முதலிற் கண்டித்தார். அன்று தொடக்கம் இன்று வரை பல விமரிசகர்கள் ரூசோவின் கருத்திற்குத் தவறான விளக்கம் கொடுத்து வந்திருக்கின்றனர். தனி மனிதரின் ஆன்மாக்களிலும் சமுதாயத்திலும் தார் மீகக் கட்டுப்பாட்டை மறுபடியும் உருவாக்க வேண்டும் என்ற தத்துவவியல் ரீதியான வேண்டுகோளாக அதைக் கொள்ளவேண்டுமேயல்லாமல், இயற்கை யிற் காணப்பட்ட சரித்திர ரீதியான நிலைமைகளுக்குத் திரும்பவேண்டுமென அவர் கோரியதாகக் கொள்ளலாகாது. இயற்கையின்பாற்பட்ட வாழ்க்கை என் பது என்றுமே இருந்திருக்கமுடியாது என்று ரூசோவே கூறியுள்ளார். ரூசோ தமது வாழ்க்கையை நடத்த வேண்டுமென நிர்ப்பந்திக்கப்பட்ட சீர் திருத்தமடையாத சமுதாயத்திலே, கிராமப்புற எளிய வாழ்க்கையை நடாத்தப் பழகிக்கொள்ளுதல், நகர வாழ்க்கையின் தவறான, காம இச்சைகளைத் தூண்டு கின்ற, செயற்கையான பழக்கவழக்கங்களைத் தவிர்த்தல் ஆகியவை விவேக மும் அறிவுமுள்ளவர்கள் பின்பற்றக்கூடிய சிறந்த வழியாகும் என்பதிற் சந் தேகமில்லை. தம்மைச் சூழ்ந்துள்ள பிரச்சினைகளிலிருந்து தப்பிச் செல்ல வேண்டும் என்பது ரூசோவின் இறுதிச் செய்தியாக இருக்கவில்லை. சீர்திருத்து வதற்கான சந்தர்ப்பம் எதுவுமில்லாவிட்டாலே சூழ்நிலையிலிருந்து தப்பிச் சென்று, கிராம வாழ்க்கைக்குத் திரும்புதல் வேண்டும். விருப்பத்திற்கும் விரும்பியதை அடைவதற்குமிடையே முறையான சமநிலையை ஏற்படுத்தக் கூடிய நிலைமைகளிலே இயற்கையாகவோ அல்லது இலட்சிய ரீதியாகவோ ஒவ்வொருவரும் சுதந்திரமாக இருப்பதற்கு யாவருமாகச் சேர்ந்து சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும் என்று ரூசோ கருதினார்.

இதில் ரூசோவிற்கும் அரிஸ்தோத்திலுக்குமிடையே கருத்தொற்றுமை காணப்படுகின்றது. சமநிலையின்மையை இரண்டு வழிகளிற் சரிசெய்யலாம். திருப்தியைப் பெறுவதற்கான வழிகளை அதிகரித்தல், விருப்பங்களின் விறு விறுப்பைக் குறைத்தல் அல்லது விருப்பங்களின் தன்மைகளை மாற்றுதல் ஆகியவைகளே அவைகளாகும். ஹொப்சைப் பொறுத்தவரையில் இந்த இரு வழிகளுக்கும் இடமேயில்லை. எல்லா விருப்பங்களும் ஓரேயளவு முக்கியத்து வத்தைப் பெற்றிருந்தனவென்றும், எனவே வெளியேயுள்ள வலுவால் மட்டுமே அவற்றைக் குறைக்கவோ கட்டுப்படுத்தவோ முடியுமென்றும் அவர் கருதினார். இந்த வெளி வலுதான் தார்மீக வேறுபாடுகளுக்கும் விதிகளுக்கும் பிறப்பிட மாக இருக்கின்றது என்றும் அவர் கருதினார். ரூசோவைப் பொறுத்தவரை யில் இந்தத் தார்மீக வேறுபாட்டைச் செய்ய முடியும். கொள்கையளவில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழ்நிலைகளாலே தடைசெய்யப்படாதவிடத்து, மனச் சாட்சி, நியாயம், நல்லெண்ணம் ஆகியவைகளைக் கொண்டுள்ள தனியாட்கள் எப்பொழுதும் சரியான முடிவுகளையே செய்வதனுல், இந்த வேறுபாடுகள் எப்பொழுதும் செய்யப்பட்டு வருகின்றன. இந்த நல்லெண்ணம் எப்பொழுதுமே நிரந்தரமாகத் திரிக்கப்பட்டதோ அல்லது செயற்படாமல் செய்யப்பட்டதோ கிடையாது என்று ரூசோ கருதுகின்ருர். நிலைமைகளால் நல்லெண்ணத்தைத் தற்காலிகமாக மறைக்கவோ, முறியடிக்கவோ, தடைசெய்யவோதான் முடியும். தேவைகளைப் பூர்த்தி செய்யும் வலிமையிலும் பார்க்கத் தேவைகள் அதிகமாகவிருக்கும் பாதகமான சூழ்நிலைகளின் விளைவாகவே, தவருனவற்றைத் தெரிவு செய்தலும் உடனிகழ்கின்றது. இத்தெரிவுகள், தாம் தவருன இடங்களில் வைக்கப்பட்டிருப்பதை உணர்ந்துள்ள இயற்கையிலேயே நல்லவர்களான தனிமனிதரின் அமைப்பில் ஏற்பட்ட குறைகளல்ல. ஒருவிதமான வீழ்ச்சி ஏற்பட்டிருக்கின்றது என்பது உண்மையே. ஆனுல், அவ்வீழ்ச்சி ரூசோவின் சிங்காரத் தோப்பில் வைதீகக் கோட்பாட்டின்படி ஏற்பட்டதன்று. தொடக்கத்திலிருந்த களங்கமற்ற குணத்திலிருந்து மனிதன் தவருன வழியில் அமைத்துச் செல்லப்பட்டுவிட்டான். ஆனுல், விவிலிய நூலின் முதல் அத்தியாயமான படைப்பின் கதையில் வரும் கடவுளைப் போலன்றி, ஆதாமும் ஏவாளும் கூறிய குற்றச் சாட்டுக்களை ஏற்க ரூசோ தயாராகவிருக்கிருர். தோட்டத்தில் வசிக்கும் பெண்களுடனும் பாம்புகளுடனும் நல்வாழ்க்கையை நடத்துவதென்பது இயலாத காரியம். தம்மைப்பற்றி இந்தச் சாட்டைக் கூறும்போது, மற்ற எல்லா ஆண்களுக்குமாக ரூசோ அதை ஏற்றுக் கொள்ளுகின்ருர்.

மனிதனின் இயல்பை உளவியற் கண்கொண்டு ரூசோ பார்ப்பதற்கும், ஹொப்ஸ் பார்ப்பதற்கும் இரண்டு முக்கிய அம்சங்களில் வேறுபாடுகள் காணப்படுகின்றன என்று நாம் கூறலாம். மனிதனின் விருப்பாற்றல் கட்டுப்பாடற்றதாகவும் நல்லதாகவும் இருக்கின்றது. தார்மீக முறையிலே திருப்திகரமான வாழ்க்கை வாழ்வதற்கான சூழ்நிலையை உருவாக்க முயலுமாறு இந்த விருப்பாற்றல் அவனைத் தூண்டுகின்றது. இரண்டாவதாக, தன் அயலவர்மீது மனிதனுக்கு ஒருவிதத் தோழமை உணர்ச்சி இருக்கின்றது. ரூசோவின் கருத்துப்படி, சூழ்நிலைகள் அனுமதிக்கும் பட்சத்தில் மற்றவர்களுடன் சேர்ந்து பொதுவான நோக்கங்களை அடைய உதவுவது இந்த உணர்ச்சியே. சரித்திர முறையான சமுதாயங்களில் இந்தத் திறன்கள் மறைக்கப்பட்டும் திரிக்கப்பட்டும் விடுகின்றன. எனவே, இயற்கையின்பாற்பட்ட வாழ்க்கை பற்றிய தமது சித்திரத்திலே அரசியற் பின்னணியிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட கருத்தியலான தனிமனிதனை ரூசோ தீட்டவில்லை. அதற்குமாருக, பாவம் எதுவுமற்ற, தனது சொந்த இயல்பில் இணக்கமின்மை, பிளவுகள் ஆகியவைகளைக் கொண்டிராத, சமத்துவமற்றிருத்தல், சமூகத்திலே தங்கியிருத்தல் ஆகியவைகளிலிருந்து விடுதலைபெற்ற, வீழ்ச்சியுற்ற உலகிலிருந்து கற்பனையிற் காப்பாற்றப்பட்ட ஒருவனுக அவர் மனிதனைக் காட்டுகின்ருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் கள்ளம் கபடமற்றவனுகப் பிறக்கின்ருன்; ஆனுல் நிறைவுபெற்றவனுகப் பிறக்கவில்லை. சுயமுன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கான மனிதனின் திறமையிலேயே மனித இனத்தின் எல்லாவிதமான துன்பங்களுக்கும் காரணத்தை ரூசோ கண்டுகொள்கின்ருர். இருக்கும் ஒழுங்கை மாற்ற முயல்வது சீர்கேடு ஏற்படுவதற்கான ஆபத்திற்கு இடமளிக்கும். மாற்றம் என்பது இயற்கையால் உடனடியாகத் திருப்தி செய்யப்படும் தேவைகட்கும் கூடுதலான தேவைகளுடன் சம்பந்தப்பட்டதாகவிருக்கும். அன்றியும், முன்னேற்றம் என்பது நிச்சயமற்ற எதிர்காலத் திருப்திகளுக்காக நிகழ்காலத்தை அடகு வைப்பதாகவிருக்கும். தீய செயல்களைப்பற்றி அறியாமல் இருத்தல், தீவிர உணர்ச்சியைக் கட்டுப்படுத்தல், ஆசையைத் தூண்டாமலிருத்தல் ஆகியவைகளின் மூலமே மனிதன் கட்டுப்பாடற்றவனுகவும் நல்லவனுகவும் இருக்கின்ருன். இயற்கையின் பாற்பட்ட மனிதன் எவற்றுக்கும் உரிமையாளனுக இருக்கவுமில்லை; எவருக்கும் கடமைப்பட்டவனுக இருக்கவுமில்லை.

யாரோ ஒருவர் 'நிலத்துண்டு ஒன்றைச் சுற்றி வேலியை அடைத்துவிட்டு "இது என்னுடையது" என்று சொன்னபோது அதை நம்பக்கூடிய அளவிற்குக் கபடில்லாதவர்களாக மக்கள் இருந்ததைக் கண்ட'[1] அந்தக் கட்டத்திலே, இந்தச் சுதந்திர இயல்பையுடைய மனிதன், திரித்துக் காட்டும் சமூகத் தொடர்புகளிலே ஆபத்தானவகையில் தன்னைச் சம்பந்தப்படுத்திக்கொண்டான். சொத்து என்னும் கருத்து முதலிற் புகுந்ததே குடியியற் சமூகத்தின் ஆரம்பமாகும் என்று ரூசோ கருதுகின்ருர். கட்டுப்பாடற்ற சொத்துரிமை முறைமை சமத்துவமின்மைக்கும் அடிமைத்தனத்திற்கும் காரணமாக அமைந்தது என்ற கருத்தைப் பொறுத்தவரையும் ஆரம்பகாலப் பொதுவுடைமைவாதிகளின் கருத்தை ஏற்றுக்கொள்ளும் ரூசோ, சமூக ஒப்பந்தப்படி மக்கள் வாழ்க்கை நடாத்தும் இடங்களிலே சொத்துரிமையை அழித்துவிடுவதனுல் தீமையின் மூலகாரணத்தை அகற்றிவிடலாம் என்று அவர்கள் கொண்டிருந்த கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. சொத்துரிமையை அடிப்படையாகக்கொண்ட தொடர்புகள் பாந்த அளவிலான இணக்கமின்மையைப் பிரதிநிதித்துவம் செய்கின்றன. மற்றவர்களின் நலத்தில் அக்கறை கொள்ளாமற் குறுகிய சுயநலத்தின் சார்பாகச் சொந்த விருப்பு வெறுப்புக்களுக்கு வலிமை கொடுப்பதும், கிரீன் கூறுகின்றவாறு, மற்றவர்களுக்குச் சேவை செய்வதன்மூலம் தன்னைச் சிறந்தவனுக்கிக்கொள்ளும் விருப்பத்தைக் குறைப்பதுமே இதற்குக் காரணமாகும். வேறுபாடு மிகவும் முக்கியமானது. சமூகத்தின் கெட்ட தூண்டுதல்களுக்கு ரூசோ சாதாரணமாகச் சூழ்நிலைகளைக் குற்றஞ் சாட்டுவது கிடையாது. சட்டத்தின் கீழ் சொத்துரிமை முறைமை இருக்கலாம் என்ற கருத்தை ரூசோ தமது பிற்காலத்தில் ஏற்றுக்கொண்டதில் எந்தவிதமான முரண்பாடும் கிடையாது. சொத்துரிமையானது சட்டத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்ட பின்பு

[1] *The Social Contract and Discourses*, edited G. D. H. Cole (Everyman), p. 192· *Discourse on Inequality*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்மூலம் கிடைக்கப்பெறும் சிறப்புரிமைகளைத் தனிமனிதர் தவருகப் பிர யோகம் செய்வதை அரசியல் அதிகாரத்தின்மூலம் (அதாவது பொதுவிருப் பாற்றல்மூலம்) கட்டுப்பாடு செய்ய முடியும் என்று அவர் கருதினுர். அங்கீகரிக் கப்பட்ட சமூக ஒழுங்கின் பிரகாரம் மட்டுமே எவரும் எதையும் சொந்தமாக வைத்துக்கொள்ளலாம்.

இயற்கையாக மனிதன் நல்லவனுக இருக்கலாம். ஆனுல், தவருன நெறியில் அவன் திருப்பிவிடப்படக்கூடும். மிகவும் விரிவான வரைவிலக்கணத்தின்படி, தன்வசமுள்ள சாதனங்கள், நிறைவேற்றப்படவேண்டிய நோக்கங்களை நிச் சயம் பின்பற்றுமாறு அனுமதிக்கும் போக்கிற்குச் சரணடையும்போது, நல்விருப்பாற்றல் தவருன வழியில் திருப்பிவிடப்படுகின்றது. ஆனுல், குறிப் பாக, புராதனக் கால உளவியல் நூல்களிற் கூறப்பட்டுள்ள உயர்குணம், இழி குணம் ஆகியவைகளையொத்து அமைந்த அக்கறைகளிலுள்ள பாகுபாடு, ஆன் மாவிலே தென்படுவதை ரூசோ கண்டுகொண்டார். தனிமனிதனிடமுள்ள நல் விருப்பாற்றலானது இயல்பிலும் நோக்கங்களிலும் பொதுவிருப்பாற்றலுக்குச் சர்வசமனுகும் என்பதை முதலில் ஏற்றுக்கொண்டால் மட்டுமே பொதுவிருப் பாற்றல் என்ற கருதுகோளை அதனுடைய அரசியற் பின்னணியில் எம்மாற் புரிந்துகொள்ள முடியும். அத்துடன், தனிமனிதனிடம் காணப்படும் இந்த நல்விருப்பாற்றல், குறுகிய சுயநலத்தால் உந்தப்படும் குறிப்பிட்ட சுயவிருப் பாற்றலுக்காகச் சில சமயங்களில் அலட்சியம் செய்யப்படுகின்றபோதிலும், விடுதலை, களங்கமின்மை ஆகியவைகளைக்கொண்ட இயற்கைநிலையின் சிறப் பியல்பாக இருப்பதோடு, எல்லாக் காலத்திலும் மனிதரிற் காணப்படும் நிரந் தரமான, அடிப்படையான மனநாட்டமாகவும் இருக்கின்றது. அந்த விருப்பாற் றல் முதலாவது தனிமனிதனிற் பொதுமைப்பாட்டைக் கொண்டதாக இருந் தாற்ருன் அரசியலமைப்பிலும் பொதுமைத் தன்மையைக் கொண்டிருக்கும். இதனுல், தமது சொந்த அக்கறைகளிலிருந்து வேறுபட்ட பொதுவான தார்மீக அக்கறையை எல்லாமக்களும் கொண்டிருப்பதாகக் கொள்ளப்படவேண்டும் என்று ரூசோ எண்ணினுர். சூழ்நிலைமைகளிலே தங்கியிருக்கும் நிலையிலிருந்து மாந்தர் காப்பாற்றப்பட்டால் மட்டுமே அத்தகைய பொதுவான தார்மீக அக் கறையைச் சுதந்திரமாக அவர்கள் பின்பற்றமுடியும் என்றும் அவர் கருதினுர். தனியாகப் பிரித்துவைக்கப்பட்டவர்களும், மிகவும் திடசிந்தையுடையவர்களும் தவிர்ந்த ஏனையோர் சம்பந்தமாய், ஆரம்பகாலத்திலிருந்த நிலைமைகளைத் திரும்பவும் ஏற்படுத்துவது நடைமுறைக்கொத்தது என்று ரூசோ கருதவில்லை. இயற்கைக்குத் திரும்புவது என்று அவர் வருணித்தது உண்மையில் ஒரு முன் னேற்றத்தையே. கூட்டு நடவடிக்கைமூலம் சீரழிந்த உலகத்திற்கு மீட்பளிக்கும் மாற்றம் ஏற்படுத்துவதையே ரூசோ அவ்வாறு குறித்தார். சிறிது மறைக்கப் பட்டு, ஆனுல் முற்றும் சீரழிந்துவிடாது நல்விருப்பாற்றல் ஒவ்வொருவரிட மும் இருந்ததினுலேயே மீட்பளிக்கும் மாற்றத்திற்கான முயற்சியை மேற்கொள் ளக்கூடியதாகவிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் தனது களங்கமின்மையை இழந்துவிட்டான். ஆனால், சுதந்திர வாழ்க்கைக்கு நிச்சயம் எழுச்சியூட்டுவதான நன்னெறியை அடைதல் என்ற இலட்சியம், வேறோர் உலகத்திலல்லாமல் இந்த உலகத்திலேயே, வேறோர் ஆன்மீக சமூகத்திலல்லாமல் மக்கள் யாவரையும் கொண்ட வேறுபாடுகளற்ற தனிச் சமுதாயத்திலேயே, அவனது சொந்த சுதந்திரமான நல்விருப்பாற்றலைத் தவிர்ந்த வேறெந்த அதிகாரத்திற்கும் அடிபணியாமலேயே, சாத்தியமாகும். திருச்சபைக்கு அரசிற்குமிடையேயுள்ள வேறுபாட்டை ரூசோ அதிக முக்கியமானதாகக் கருதாததைப் போலவே, அல்லது அவரின் காலத்தைச் சேர்ந்தவர்கள் மிகவும் முக்கியமானதெனக் கருதிய தனிமனிதனுக்கும் சமூகத்திற்குமிடையேயுள்ள வேறுபாட்டை அவர் அங்கீகரிக்காததைப் போலவே, நன்னெறியும் அரசியலும் வெவ்வேறான விடயங்களாகும் என்று ரூசோ கருதவில்லை. ரூசோவின் சீர்திருத்தப்பட்ட அரசின் கொள்கைக்கும் அமைப்பிற்குமிடையேயுள்ள ஒற்றுமை, சம்பிரதாயப்படி, ஹொப்சினுடைய அரசைப் பெரிதளவில் ஒத்திருந்தது. ஆனால் இறையதிகாரம், உள்ளுக்குள்ளேயிருந்து வருகின்றதேயல்லாமல் வெளியேயிருந்து வருவதில்லை; அது தார்மீக அடிப்படையைக் கொண்டிருக்கின்றதேயல்லாமல் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பதன்று; சமுதாயம் வாழ்வதற்கு அது உதவுகின்றது. வெறுமனே இயங்குவதற்கன்று; 'சமூகத்தை மனிதர்களிலும் மனிதர்களைச் சமூகத்திலும் படித்தல் வேண்டும்; அரசியலையும் ஒழுக்கநெறியையும் தனித்தனியாக ஆராய விரும்புபவர்கள் அவ்விரண்டைப் பற்றியும் எதையுமே புரிந்துகொள்ள மாட்டார்கள்' என்று 'எமில்' என்ற புத்தகத்தில் ரூசோ எழுதியுள்ளார்.

தளைகளை ரூசோ இனம் கண்டுகொண்டார்; 'சமுதாய ஒப்பந்தம்' (Social Contract) என்ற புத்தகத்தில் (அப்புத்தகத்தை அதன் உப-தலைப்பான 'அரசியல் உரிமைகளின் தத்துவங்கள்' (Principles of Political Rights) என்னும் பெயரினால் அழைப்பதே சிறந்தது) அவற்றின் நிலைமையையும் அவற்றைக் கட்டுப்படுத்தலையும் மாற்றி ஒழுங்கு செய்வதில் ஈடுபட்டார். அவ்வாறு திருத்தியமைப்பதன் மூலம் எல்லா உறுப்பினரும் சுதந்திரமான நன்னெறி வாழ்க்கையை நடாத்த வழிசெய்து கொடுக்கும் கருவியாக அரசியற் சமூகம் அமைந்துவிடுமென்றும், அவ்வாறு மாற்றியமைக்காவிட்டால் பொதுமக்களின் விருப்பங்களை முறியடிக்கும் அமைப்பாகவே அரசியற் சமூகம் காணப்படுமென்றும் ரூசோ கருதினார். பிளவுபட்ட சமூகத்தின் அந்நிய கொடுங்கோலாட்சியாளர் சுமத்தும் தளைகள் கட்டாயமாக அடிமைப்படுத்தும்; ஆனால், பொது முடிவின்படி மக்கள் தாமாகவே ஏற்றுக்கொள்ளும் தளைகள், மலையேறும் குழுவினருக்கு ஒருகயிற்றைப் பகிர்ந்துகொள்வதனால் கிடைக்கும் நன்மையைப் போன்று, நன்மைகள் பலவற்றையும் கொடுக்கும். எந்த நியதிகளின் கீழ் சட்டங்கட்குக் கீழ்ப்படிந்து நடக்க மக்கள் இணங்குதல் வேண்டும் என்ற கேள்வியை ரூசோ கிளப்பினார். மற்றவர்கள் சொன்னதைப் போன்றே அவரும் சட்டங்களை யார் இயற்றினார்கள் என்பதிலே அது தங்கியிருக்கின்றது என்று பதிலிறுக்கின்றார். தமது கருத்தின்படி, சட்டங்கள் எவ்வாறு இயற்றப்படல் வேண்டும் என்று விவரிப்பதற்கு அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்கொண்ட முயற்சியின் போது, புரட்சிகரமான சனநாயகக் கோட்பாடு ஒன்றை ரூசோ உருவாக்கினர். இந்தக் கோட்பாடு தற்கால உலகிலுள்ள எல்லா அரசுகளையும் பாதித்ததுடன் பல அரசுகளின் கட்டமைப்பையுமே பாரதூரமாக மாற்றியமைத்துவிட்டது. சட்டங்கள் நீதியானவையாகத் தென்பட்டால், அல்லது தெய்வத்தால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரமுடையதாகச் சட்டத்தைப் பிறப்பித்த வலு கணிக்கப்பட்டால், அல்லது மதத்தின் அல்லது தனிமனிதனின் அக்கறைகள் சம்பந்தமாய் வரையறை செய்யப்பட்ட எல்லைகள் (உரிமைகளின் ஆட்சிப்பகுதி) மீறப்படாதிருந்தால், சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என்று இதுவரை வாதிடப்பட்டு வந்தது. சட்டத்தை இயற்றும் அதிகாரி பலாத்காரத்தின்மூலம் தனது பதவியை வகித்தாலும், ஓர் அர்த்தத்திலே குடிமக்கள் யாவரும் இத்தகைய ஆட்சிக்கு அதிகாரம் வழங்குகின்றனர்கள் என்ற கருத்தை ஹொப்ஸ் தெரிவித்தது உண்மையே. ஆனல், இது ஓர் எதிர்க் கருதுகோளாகும். ஹொப்ஸ் கூறும் மன்னன் குழப்ப நிலையிலிருந்து மக்களைக் காப்பாற்றுகின்ற போதிலும், விடுதலைப் பாதையில் அவர்களை அழைத்துச்செல்ல அவன் எத்தகைய நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாமையே அதற்குக் காரணமாகும். மிகு மகிழ்ச்சியை நோக்கிச் செல்லும் பொறுப்பு தனிமனிதரின் தோள் மீதே விழுந்தது.

இதற்கு மாருக, அரசியலமைப்பில் உறுப்பினராகவிருக்கும் எல்லோரும் சட்டத்தை இயற்றும் பொதுப் பொறுப்பைச் சமமாகப் பகிர்ந்துகொள்ளுதல் வேண்டும் என்று ரூசோ வாதாடினர். ஒன்ருகச் சேர்ந்து வாழ்வதில் எல்லோரும் பொதுவான அக்கறை கொண்டிருந்தனர் என்பதையும், சரித்திர ரீதியான நிலைமைகளின் அடிமைத் தனத்திலிருந்து தப்பவேண்டும் என்பதோடு, எதிர்காலத்தில் நல்வாழ்க்கை நடத்தும் சந்தர்ப்பத்தை உறுதிப்படுத்துவதிலும் யாவரும் பொதுவாகத் திடமான ஆர்வத்தைக் கொண்டிருந்தனர் என்பதையும் ரூசோ தமது வாதத்திற்கு ஆதாரமாகக் காட்டினர். விடுதலையைப் பெறுவதிலேயே அவர்கட்கு முக்கிய ஆர்வம் இருந்தது. மக்கள் எவ்வாறிருக்கின்றனர் என்பதையும் சட்டங்கள் எவ்வாறு இருக்கக்கூடும் என்பதையும் தாம் தமது விசாரணையின்போது ஆராயப் போவதாக ரூசோ தமது 'சமுதாய ஒப்பந்தம்' என்ற புத்தகத்தின் ஆரம்பத்திற் கூறுகின்ருர். மக்கள் இப்போதுள்ள நிலையிலிருந்து இருக்கவேண்டிய நிலைக்கு அவர்களை மாற்றியமைப்பதற்குத் தார்மீக வாழ்க்கை முறைக்கேற்ற சட்டங்கள் முக்கிய கருவிகளாகும் என்ற முடிவிற்கு அவர் வந்திருக்கிருர்.

சமூகத்தின் ஒவ்வோர் உறுப்பினரும் அவரின் அயலாரின் முயற்சிகளின் விளைவாக வளம்பெறக் கூடியதான தொழிற் பங்கீட்டு அமைப்பொன்றை மனித சமூகம் பிரதிபலிக்கின்றது என்பது ஒரு பொது உண்மையாகும். எல்லாருடைய ஒத்துழைப்பினலும் உற்பத்தி செய்யப்பட்ட மேலதிகச் செல்வம், ஒவ்வொருவரும் தனித்தனியே முயலுவதன்மூலம் உற்பத்தி செய்யக்கூடிய செல்வத்திலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்க அதிகமானதாக இருக்கின்றமையினால், யாவரும் சிறப்பாக வாழ்கின்றனர் என்பதும் உண்மையே. இதைப்போலவே, கெடுதலானவையும் ஆபத்தானவையுமான நிலைமைகளால் அமிழ்த்தப்பட்டுவிடும் தனிமனிதனின் நல்விருப்பாற்றலை அதன் குழம்பிய நிலையிலிருந்து மறுபடியும் நல்ல நிலைக்குக் கொண்டு வருவதற்கு, அரசின் தார்மீக ஒத்துழைப்பே சிறந்தவழியாகும் என்று ரூசோ கருதினார். எனவே, சீர்திருத்தப்பட்ட அரசிலே (ரூசோ கனவுகண்ட புதிய பூரண சனநாயக நகர்) மீட்சியை ஏற்படுத்தும் வகையிற் சட்டங்கள் தொழிற்படும்; சமூகத்திற்கு இணக்கமான நோக்கங்களால் எல்லாக் குடிமக்களும் உந்தப்படும் வகையில் அவர்களுக்கு வழிகாட்டி, பாதுகாப்பை அளிப்பனவாக அச்சட்டங்கள் திகழும்.

விரும்பத்தக்க இந்த விளைவை ஒரேயொரு வழியால் மட்டுமே அடையமுடியும் என்பதை ரூசோ சந்தேகத்திற்கு இடமேதுவுமின்றித் தெளிவாகத் தெரிந்து கொண்டார். அரசிலுள்ள இறையதிகாரத்தைப் பொதுவிருப்பாற்றலிடம் ஒப்படைப்பதே அந்த வழியாகும் என்பதை அவர் உணர்ந்தார். சமூகத்தில் எல்லா உறுப்பினர்கட்கும் பொதுவான நல்விருப்பாற்றல், நோக்கங்கள் ஆகியவைகளைச் சட்டங்கள் பிரதிபலித்தால் மட்டுமே, அவைகட்குக் கீழ்ப்படிந்து நடப்பவர்கள் தங்களின் சுதந்திரத்தை அனுபவிப்பதோடு, தங்களின் சொந்தத் தீர்மானங்களினால் மாத்திரமே கட்டுப்படுத்தப்படுபவர்களாகவும் இருப்பர். இயற்கையாகக் கிடைக்கப்பெறும் நற்குணத்தை மக்கள் இழந்துவிடவில்லை; ஆனால் தற்காலிகமாக மறந்துவிட்டனர் என்று கொள்கையடிப்படையில் அவர் நம்பியமையினாலேயே இந்தவகையில் அவரால் வாதிடமுடிந்தது. குடிமக்களின் பொதுவிருப்பாற்றலுக்கும் தனிப்பட்ட விருப்பாற்றலுக்குமிடையே மோதல்கள் ஏற்படக்கூடும் என்பதை ரூசோ ஏற்றுக்கொள்கின்றார். ஆனால், பொதுவிருப்பாற்றலானது சட்டத்திற் பொறிக்கப்பட்டுவிடுகின்றமையினால் இறுதி முடிவு அதனுடையதாகவே இருக்கும் என அவர் நம்புகின்றார். தவறிழைக்கும் குடிமகன், 'சுதந்திரமாக இருக்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்டவன்,' பெரிதாக்கப்பட்ட தன்னுடைய சொந்த நல்விருப்பாற்றலால் மட்டுமே கட்டுப்படுத்தப்படுகின்றான். நன்னெறிப்படி அவன் செய்ய வேண்டியவைகளையே செய்யுமாறு அவன் தூண்டப்படுகின்றான். ஆனால் அவற்றைச் செய்வதற்குத் தேவையான உடல்வலுவும் தார்மீக வலுவும் முற்றான அறிவும் அவனிடம் கிடையா. இங்கே அரசுக்கும் தனிமனிதனுக்குமிடையே எந்தவிதமான முரண்பாடோ அல்லது மோதல்களோ இல்லை. எல்லா மக்களும் பங்கு கொள்ளும் சமுதாய நோக்கங்களுக்கும் சுயநலமுடைய தனி மனிதர்களின் (சமூக எதிரிகள் வகையைச் சேர்ந்தோர்) நோக்கங்களுக்குமிடையே முரண்பாடுகளும் மோதல்களும் ஏற்படுகின்றன. இத்தகைய மோதல்கள் தவிர்க்கப்படுவதே சிறந்தது.

சீர்திருத்தப்பட்ட சமூகத்தின் இலட்சிய மாதிரியாக இருப்பதன் விளைவாகவும், அதன் எல்லா அம்சங்களையும் பரிசோதனை முறையிலே திரும்பவும் செய்ய முடியாதிருப்பதனாலும் இக் கருத்தானது பல சிக்கல்களைக் கொண்டதாக இருக்கின்றது. எல்லா மக்களினதும் பொது மனச்சான்று, அதாவது எல்லோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருடையவும் பொது விருப்பாற்றல் மட்டுமே, இறுதி அதிகாரமாக இருத்தல் வேண்டும் என்று தாம் கருதவில்லை என்பதை ரூசோ விளக்கியுள்ளார். மக்களின் பொது மனச்சான்று தவறானதாகவோ தீமை விளைவிப்பதாகவோ இருக்கவும் கூடும் என்று அவர் கருதியமையே அதற்குக் காரணம். அதைப்போலவே பெரும்பான்மையோர் செய்வதும் எப்பொழுதும் சரியாகவே இருக்கும் எனவும் கொள்ளமுடியாது. எனவே, ரூசோவைப் பொறுத்தமட்டில், நல்ல பொது முடிவிற்கு நெறிப்படுத்தப்படும்போது விருப்பாற்றல் பகுத்தறிவின் பாற்பட்ட விருப்பாற்றலாகிவிடும். ஆனால், நடைமுறையிலே அறியாமை அல்லது பாவம் காரணமாக இந்த விருப்பாற்றல் பகுத்தறிவிலும் பார்க்கக் குறைவானதாக இருத்தற் கூடும். குடியியற் சமூகத்தில், பாவிகள் தவறான பாதைகளிற் செல்வதைச் சட்டம் கட்டுப்படுத்தும். ஆனால் அறிவிலிகளைத் திருத்தும் பணி முக்கியமாகக் கல்வியின்பாற்பட்டதே. ரூசோவின் கருத்துப்படி, மீட்சியை அடைவதற்கான மறைவழியாகவே கல்வி இருக்கின்றது. தவறானவற்றைத் தெரிந்தெடுப்பதையும், சுயநலப் பாதையைத் தேர்ந்தெடுப்பதையும் தவிர்ப்பதற்குத் தேவையான பயிற்சியையே கல்வி அளிக்கின்றது. கல்வியை இந்தக் கண்கொண்டே மப்லியும் நோக்கினர். கல்வியை இவ்வாறு நோக்குவதற்கு ரூசோவும் மப்லியும் பிளேட்டோவிடமிருந்தே கற்றுக்கொண்டனர். ஆரம்பத்தில் விருப்பாற்றலுக்கும் பகுத்தறிவிற்குமிடையே இணக்கமின்மை ஏற்படக்கூடும் என்பதையிட்டு ரூசோ பெரும் கவலைகொண்டார். எனவே, சீர்திருத்தச் சமூகத்தின் ஆரம்பகாலத்திற் செல்லவேண்டிய திசையிலே புதிய நகரை வழிநடத்திச் செல்வதற்கு, பிளேட்டோவின் தத்துவஞானி—அரசனைப்போன்ற (சட்டமியற்றுநர் என்று அவரை அழைக்கின்றார்) ஒருவரின் சேவை தேவைப்படக்கூடும் என்ற கருத்தையும் அவர் தெரிவிக்கின்றார். சொற்ப காலத்திற்கு இந்தத் தலைவர் பொதுவிருப்பாற்றலைப் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடும். சட்டமியற்றுநர் என்ற பதத்தால் ரூசோ வேறு எதைக் கருதியிருந்தாலும், சரியான விடை ஒருவருக்கு மட்டுமே தெரிந்திருப்பதால் அவ்விடை எங்கோ ஓரிடத்தில் இருக்கின்றது என்று ரூசோ எப்பொழுதும் கருதினர். ஒரு விருந்தின்போது அளவிற்கு மிஞ்சி மதுவருந்திவிட்டவர்கள் தங்களின் உண்மையான அக்கறைகளை மறந்து அறியாமையின் விளைவாகத் தங்களை எரித்துவிட முயலும்போது அதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பது மதுவருந்தா நண்பரின் கடமையாக இருப்பதைப் போன்று, பொது நலத்தைக் கொண்டுள்ள தமது முடிபுகளை மற்றவர்கள்மீது திணிக்கும் கடமை சட்டமியற்றுநருக்கு உண்டு.

பொது விருப்பாற்றலை எங்கே நிச்சயமாகக் காணமுடியும் என்ற வினவிற்குத் திருப்திகரமான பதிலை ரூசோ என்றுமே அளிக்கவில்லை. ஆனால், ஓர் அரசியற் குழுவில் ஒரு பொது அக்கறை இருத்தல் வேண்டும் என்று அவர் வாதிடுவது புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கின்றது. தங்கள் சுதந்திரத்தைப் பிரகடனம் செய்து அதைப் பேணிப் பாதுகாப்பதே எல்லா மக்களினதும் பொது விருப்பாற்றலின் பொது நோக்கமாக இருந்தபோதிலும், மனிதனின் நல் விருப்பாற்றல் என்றுமே அழிந்துவிடுவதில்லை என்ற ரூசோவின் கருத்துச் சரியான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாகவிருந்தால் பொது விருப்பாற்றலை அடையக்கூடியதாகவிருக்கலம்ாம். எங் கெங்கே பொதுவிருப்பாற்றலைக் காணமுடியாது என்பதை அவர் மிகவும் தெளி வாக விளக்குகின்றார். ஆனால், அப்பகுதிகளில் அது அடிக்கடி ஒழுங்கற்ற முறை யில் வேற்றுருவில் காணப்படுதல் இயல்பு என்றும் அவர் குறிப்பிடுகின்றார். நிர்வாக அரசாங்கத்தில் அதை என்றுமே காணமுடியாது.

நிர்வாக அரசாங்கத்திற்குத் தாழ்ந்த இடமளிக்கப்படல் வேண்டும் என்ற கருத்து, அரசு பற்றிய அவரது கொள்கையின் எஞ்சிய பகுதிகளிலிருந்து பிரித் தெடுக்கக்கூடியதாய் இருக்கின்ற காரணத்தினால், ரூசோவின் காலந் தொடக் கம் இன்றுவரையும் தனிப்பட்ட செல்வாக்குப் பெற்று வந்திருக்கின்றது. எந் தத் தற்கால அரசாங்கமும், நடைமுறையில் எவ்வளவுதான் அதிகாரவாண் மையைக் கொண்டிருந்தாலும் தனக்குச் சாதகமாக முன்பே ஒழுங்குசெய்த படி பெறப்பட்ட தொன்னூற்றொன்பது சதவீத வாக்குக்களின் பிரகாரம், அதி காரம் தன்னிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது என்று பாசாங்காகுதல் செய் யாமலிருக்க முடியாது. ஆனால் உண்மையில் ரூசோவின் வாதம் அவருடைய பொதுக் கொள்கையைப் பூரணமாக்குவதற்கு முக்கியமான அம்சமாகவிருக் கின்றது. பொதுவிருப்பாற்றலில் தங்கியிருக்கின்ற இறையுரிமையானது சட்ட மன்றில் உருப்பெற்றிருக்கின்றது. இத்தகைய சட்டமன்றம் சிறப்புடையதாக விருப்பதற்கு எல்லா மக்களினதும் நேர்முக சனநாயகமாக அது இருத்தல் வேண்டும். வரைவிலக்கணத்தின்படி சட்டங்கள் எல்லாக் குடிமக்களுக்கும் சமமாகப் பிரயோகிக்கப்படுதல் வேண்டும். அப்பொழுது குறிப்பான நிர்வாகம் முழுவதும் நிர்வாக அதிகாரிகளடங்கிய சிறிய குழுவிடம் ஒப்படைக்கப்படும். இந்த அதிகாரிகளிடம் அதிகாரம் ஒப்படைக்கப்படுகிறதேயல்லாமல் மாற்றப் படுவதில்லை. இந்த நிர்வாகக் கருத்திலே, இறைமையையுடைய மக்கள் தங் களின் பொது முடிபுகளைக் குடிமக்கள் என்ற முறையிலே தங்களுக்கே பிரயோ கித்துக் கொள்ள உதவும் முக்கியமான கருவியாக அரசாங்கம் இருக்கின்றது. விடுதலை பற்றிய ரூசோவின் கருத்துப்படி, அரசாங்கம் எப்பொழுதும் கீழ்ப் பட்ட ஒரு கருவியாகவே இருத்தல் வேண்டும். எந்தப் பொது விருப்பாற்ற லிடமிருந்து தனது அதிகாரத்தைப் பெறுகின்றதோ அந்தப் பொது விருப்பாற் றலைத் திரிபுபடுத்தித் தனது சொந்த விருப்பாற்றலை மக்கள்மீது திணிக்கும் அதிகாரபீடமாக அரசாங்கம் என்றும் மாறலாகாது.

நடைமுறையில், இறையுரிமையைக் கொண்ட அதிகாரத்தை அரசாங்கங்கள் உரிமையின்றிக் கைப்பற்ற விரும்பக்கூடும் என்பதை ரூசோ அறிந்திருந்தார். தங்களுக்குச் சொந்தமான பொதுவிருப்பாற்றலை வளர்க்க அவை முயலுகின் றன என்று அவர் குறிப்பிட்டார். ஆனால் அரசைப் பொறுத்த வரையில், இது ஒரு குறிப்பிட்ட விருப்பாற்றலாகவே இருக்கும். எனவே, இறைமையை யுடைய மக்களிடம் மாத்திரமே பிரிக்க முடியாதவகையிலே தொடர்புற்றிருக் கும் விடுதலையை அரசுக்குக் கொடுத்தலாகாது. அரசாங்கங்களின் கொடுங் கோன்மைதான், ரூசோவினுடைய தார்மீகச் சிந்தனைகளின் அரசியல் மையமாக இருக்கின்றது. குடியுரிமை பற்றிய கருதுகோளிற்குப் புதிய வரைவிலக்கணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றை—அவ்வரைவிலக்கணத்தை என்றுமே மறக்கமுடியாது—கொடுப்பதே அவரின் விடையாகவிருந்தது. குடிமகன் என்பவன், சரியான முறைப்படி பார்த்தால், ஆள்பவனுகவோ ஆளப்படுபவனுகவோ, சட்டத்திற்கு மேற்பட்டவனுகவோ வெறுமனே சட்டத்திற்குக் கீழ்ப்படிபவனுகவோ, இருக்கமாட்டான். ஆனல் அவன் ஒரே நேரத்தில் இரண்டுமாகவிருப்பான். குறிப்பிட்ட விடயங்களில் அரசாங்கத்திற்குக் கீழ்ப்படிந்து நடக்கும் அதேவமயத்தில், பொது விருப்பாற்றலில் பங்கு கொள்வதனுல் அரசாங்கத்தின் இறைமையுடைய மேலாளாகவும் அவன் இருப்பான். சட்டதிற்குக் கீழ்ப்படிகின்ற அதேவமயத்தில், சட்டத்தை ஆக்குபவனும் அவனே. ஒருவனுடைய சொந்த விடயங்களில் நடைபெறுவதைப் போன்றே சமூகத்திலும், கீழ்ப்படிவும் விடுதலேயும் பொருந்துமாறு செய்யப்படுகின்றன; ஒரே நேரத்தில் சமூகத்தின் முன்னிபந்தனேயும் வெளிப்பாடுமாகக் கீழ்ப்படிவு இருக்கின்றது.

'எமது நன்மையையே நாம் எப்பொழுதும் விரும்புவோம், ஆனல் எமக்கு நன்மைபயப்பது எது என்பதை நாம் எப்பொழுதும் தெரிந்து கொள்வதில்லே. மக்கள் என்றுமே கெட்டுப் போய்விடுவதில்லே, ஆனல் அதிகமாக ஏமாற்றப்பட்டுவிடுகின்றனர்.'[1] தவருன வழியிற் செலுத்தப்படுவதனுல், அல்லது சிறுவர்களாக இருப்பதனுல், அல்லது கெட்டுப்போன சமூகத்தில் வாழ்வதனுல், தமது ஆன்மீக அல்லது உடல்சார்ந்த நலனே அவர்கள் அடையத் தவறலாம். ஆனல், தம் அயலவருடன் சேர்ந்து பொதுவான சுய மீட்சிக்காகப் பாடுபடுவதனுல், விடுதலேயாக இருப்பதற்கான பலத்தையும் சூழ்நிலேகளேயும் மறுபடியும் அவர்கள் பெற்றுவிடலாம். மனிதனுடைய விருப்பாற்றலின் சுதந்திரத்தில் நம்பிக்கை வைத்தமையால் மட்டுமன்றி, தவருன தெரிவுகளாலே கறைப்படுத்தப்பட்டும் சமூகத்தாலே கெடுக்கப்பட்டும், பலமின்மையால் உணர்ச்சிகெடச் செய்யப்பட்டும், அறியாமையினுல் ஒடுக்கப்பட்டும் எவ்வளவுதான் பழிசுமத்தப்பட்டிருந்தபோதிலும், மனிதனிடமுள்ள இயற்கையான அழிக்கமுடியாத, தூய, மாற்றத்துக்குட்படாத நல்ல இயல்பிலே நம்பிக்கை வைத்தமையினுலுமே நடக்கக்கூடியதொன்ருக இது ரூசோவிற்குத் தென்பட்டது. மனிதன் தன் தோழர்களோடு சேர்ந்து அவர்களின் சம்மதம்பெற்று, குறுகிய சுயஅக்கறையின் தூண்டுதலுக்கெதிராகச் சமுதாய அடிப்படையில் உத்தரவாதமளிக்கக்கூடிய அரசியல் ஒழுங்கமைப்பை மரபு முறையில் அமைப்பதற்குத் துணிவுடன் முன்வருவானுகில், அவனே இக்குறைகள் யாவற்றையும் நிவர்த்தி செய்துவிடுவான்.

ரூசோவின் காலத்திலிருந்து இன்றுவரையும் ஒவ்வொரு சந்ததியினரும் தங்களின் முயற்சிகளிற் சேர்த்துக்கொள்ள விரும்பியதும், ஆனல் என்றுமே நடைபெருததுமான இந்த மீட்சிக்குரிய உருவமற்றம் கீழ்க்காணும் வார்த்தைகளிலே 'சமுதாய ஒப்பந்தம்' என்ற புத்தகத்தில் விவரிக்கப்பட்டுள்ளது :—" இயற்கை நிலேயிலிருந்து குடியியல் நிலேக்கு மாறும்போது மனிதனிலே மிகவும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படுகின்றன. அந்நிலேமாற்றத்தின்போது மனிதனின்

[1] Social Contract, II, iii



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்தையில் இயல்புணர்ச்சிக்குப் பதிலாக நீதி இடம் பெறுகின்றது; அத்துடன், அவனுடைய நடத்தைகள் முன்பிருந்தமைபோலல்லாமல் நெறிமுறையைப் பெற்றுவிடுகின்றன. உடற்றெழில் உணர்ச்சிகளின் இடத்தைக் கடமையின் குரலும், பசியுணர்ச்சியின் இடத்தை உரிமையுணர்ச்சியும் பிடித்துக் கொண்டபின்புதான், அதுவரையும் தன்னைப்பற்றியே சிந்தித்துக்கொண்டிருந்த மனிதன் தான் வேறு தத்துவங்களின் அடிப்படையில் நடக்குமாறு நிர்ப்பந்திக்கப்பட்டுவிட்டதைத் தெரிந்துகொண்டதோடு, தனது விருப்பு வெறுப்புக்களைக் கவனத்திற்கெடுக்குமுன் நியாயத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டும் என்பதையும் உணர்ந்தான்."[1]

குடிமகனொருவன் தான் விரும்புகின்றவைகளைச் செய்வது என்ற அர்த்தத்திலல்லாமல், மற்ற எல்லாக் குடிமக்களுடனும் பொதுவாகக் கொண்டிருக்கும் சிறந்த தார்மீக இலட்சியங்களை விரும்புதல் அல்லது விரும்பப் பழகுதல் என்ற அர்த்தத்திலே, தமது சட்டங்களை இயற்றுவதற்குக் குடிமக்களுக்குப் பூரண வசதிகளைச் செய்து கொடுக்கக்கூடியவகையில், சமூகத்தைத் திருத்தி அமைக்க வேண்டும் என்ற கருத்திற்கு ஆதரவாக ரூசோ காட்டியுள்ள வாதங்கள், பிரெஞ்சுப் புரட்சியாற் பாதிக்கப்பட்ட தற்கால அரசுகள் யாவற்றிலும் செல்வாக்குப் பெற்றுள்ளன. ஆனால் அந்தப் புகழ்பெற்ற புரட்சிதானும் ரூசோ விவரித்துள்ள புதிய சமூகத்தை உருவாக்கவில்லை. அத்துடன், சிறிய நகர அரசிற்குட்பட்ட பிரதேசத்தில் மட்டுமே புதிய சமூகத்தை உருவாக்க இயலும் என்ற ரூசோவின் நம்பிக்கையையும் சுட்டிக் காட்டத்தான் வேண்டும். அதோடு, பொது விருப்பாற்றலை வேறு எந்த வழியில் வெளிப்படுத்தினாலும் பிரதிநிதித்துவ முறையில் வெளிப்படுத்த அது தன்னை அனுமதியாது என்று ரூசோ திடமாக நம்பினார். எனினும், குறிப்பாக மேற்குலக அரசுகளில் சனநாயகக் குடியுரிமையை ஊக்குவிப்பதற்கான தலையாய வழிகளிலொன்றாக வாக்குரிமையைப் பரந்த அடிப்படையில் வழங்கும் முறை பின்பற்றப்பட்டது. ஆனால், விடுதலை இலட்சியத்திலும் அதை அடைவதிலும் கொள்கை முறையில் ரூசோ கொண்டிருந்த ஆர்வத்தையும் அக்கறையையும் ஜெர்மானிய சிந்தனையாளர்கள் அவரிலும் பார்க்க அதிக தீவிரமாகப் பின்பற்றினர். ரூசோவின் செல்வாக்கிற்கு, ஒருவருக்குப்பின் ஒருவராக கான்ற், ஹெகல் என்ற இரு ஜெர்மானியப் பேராசிரியர்கள் சான்று பகருகின்றனர். ஆனால், ரூசோவின் விடுதலை பற்றிய கோட்பாட்டைப் பற்றுக்குறையானதொன்று என்ற காரணத்திற்காக ஹெகல் கண்டித்தார். ஆனால் அக் கண்டனம் நியாயமானதன்று; கிட்டத்தட்ட அதே காரணங்களுக்காக கான்றின் அரசியற் கொள்கைகளையும் ஹெகல் கண்டித்தார்.

பதினெட்டாம் நூற்றாண்டிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் ஜெர்மனியில் இருந்த முற்றாக வேறுபட்ட அரசியற் பின்னணியிலே ரூசோவின் கருத்துக்கள் பரவியிருந்தமை, ஜெர்மன் சிந்தனையாளர்களின் எழுத்துக்களில் அவரின் கருத்துக்களுக்கு வேறுவிதமான அழுத்தம் கொடுக்கப்பட்ட

[1] **Social Contract I, viii.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையை ஓரளவிற்கு விளக்குகின்றது. கள்ளங்கபடமற்ற, நாகரிகமடையாத இயல்பைத் தார்மீக முன்மாதிரி என்ற பீடத்திற்கு ரூசோ உயர்த்துவதை கான்ற்றும் ஹெகலும் நிராகரிக்கின்றனர். எளிமையான இயல்பிற்குள் ஆன் மீகத்தன்மை அழிந்துவிடும் என்று ஹெகல் எண்ணினூர். இந்த நிலையிலிருந்து தட்டி எழுப்பப்படாவிட்டால் மனிதனின் உயர்வான திறமைகள் யாவும் நிரந் தரமாகத் தூங்கிவிடும் என்று கான்ற் கருதினுர். இதற்குப் பதிலாகப் பகுத்தறி வின் பாற்பட்ட நிறுவனங்கள் நிறைவுபெறுவதை, தார்மீக சமூகத்திற் காணப் படும் விடுதலையை, அவ்விருவரும் எதிர்நோக்கினுர்கள். கான்றின் கருத்துப்படி, இந்தத் தார்மீக சமூகமானது பழக்கவழக்கம், நாகரிகம் ஆகியவைகளிலே தற் சமயத்திற் பெற்றுள்ள முன்னேற்றத்திலும் பார்க்கச் சிறந்த முன்னேற்றத்தை அடைதல் வேண்டும். வலுவான, தீர்க்கமான ஆட்சிக்குரிய தேவை பற்றிய பாரம்பரிய அக்கறையை அவ்விருவரிடம் அதிகமாகக் காணமுடிகின்றது. மனி தனில் முரண்பாடுகள் காணப்படுகின்றன என்பதையும் அவனுக்கு ஓர் எசமா னன் தேவைப்படுகிறுன் என்பதையும் ரூசோவிலும் பார்க்க கான்ற் வற்புறுத் திக் கூறுகின்றுர். "மனிதனின் சுய விருப்பாற்றலைத் தகர்ப்பதற்கும், யாவருக் கும் எங்கணுமே செல்லுபடியாவதும், அதன் சார்பாக யாவரும் விடுதலையடைய வாய்ப்புத் தருவதுமான விருப்பாற்றலுக்குக் கீழ்ப்படியும்படி அவனைக் கட்டா யப்படுத்துவதற்கும்"[1] எசமானன் ஒருவன் தேவை என்று கான்ற் கூறுகின் றுர்.

சமகால அரசியல் நிறுவனங்கள் பற்றி ரூசோ தெரிவித்த கண்டனங்களா னவை, பிரான்சைப் போன்று சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்டதும் அபிவிருத்தி செய்யப்பட்டதும், நாட்டுப்பற்று என்று அவர் அழைத்ததொன்றைக் கொண் டிராததும், எல்லாவற்றிற்கும் மேலாக, பலம் வாய்ந்த மத்திய அரசாங்கத்தைச் சிறப்பியல்பாகக் கொண்டிருந்ததுமான நாடு—அரசைப் பற்றியனவாகவே பெரும்பாலும் இருந்தன. ஆனுல், அக்கால ஜெர்மனியில் இதற்கு முற்றும் எதி ரான நிலைமை இருந்தது. அதனுடைய அரசியலமைப்புச் சட்டம் பெரும் பாலும் மத்தியகாலக் கட்டடத்தைச் சேர்ந்ததாகவும் நிலப்பிரபுத்துவ அமைப் பைக் கொண்டதாகவும் இருந்தது. ஆங்கே போதிய அளவு மத்திய அதிகாரம் நிலவாத போதிலும், கலாசார ஒருமைப்பாடு பற்றிய உணர்வு நிறையக் காணப் பட்டது. ஜெர்மானியச் சிந்தனையாளர்கள் ரூசோவின் எழுத்துக்களை வாசித்த போது, முற்றும் வேறுன பிரச்சினையை, பதினுறும் நூற்றுண்டில் மேற்கு ஐரோப்பாவை எதிர்நோக்கியனவும் போடினைப் போன்ருேரால் ஆராயப்பட் டனவுமாய அரசியற் பிரச்சினைகளைப் போன்ற பிரச்சினையை, தீர்த்து வைப் பதற்கு அவருடைய கருத்துக்களைப் பிரயோகித்தார்கள்.

ரூசோவின் சமகாலத்தவரான கான்ற் தமது தார்மீகத் தத்துவஞானம் பற் றிய கொள்கைகளை உருவாக்குவதிலே ரூசோவிற்குத் தாம் பெரிதும் கடமைப் பட்டிருப்பதை ஏற்றுக்கொள்ளும் அதே சமயத்தில், கொள்கையளவில் அரசின்

[1] Kant's Principles of Politics, edited and translated by W. Hastie (Edinburgh, 1891), p. 14. The Natural Principle of Political Order.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறவனங்களினுடைய அடிப்படை நிலைமைகளைத் தெரிவிக்கும்போது, ரூசோவின் கருத்துக்களையொத்த கருத்துக்களையே அவரும் தெரிவித்தார். பகுத்தறிவிற்கொத்த மூன்று தத்துவங்களின் அடிப்படையில் ஓர் அரசு உருவாக்கப்படல் வேண்டுமென்று அவர் கூறினார். மனிதன் என்ற முறையில், சமூகத்தில் அங்கம் வகிக்கும் ஒவ்வொருவரும் சுதந்திரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்; குடிமகன் என்ற முறையில், ஒவ்வோர் உறுப்பினரும் சமத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்; பிரசை என்ற முறையில், ஒவ்வோர் உறுப்பினரும் தமது சுயபலத்திலே தங்கியிருத்தல்வேண்டும் என்பனவே அந்த மூன்று தத்துவங்களுமாகும்.[1] இவைகள் அரசால் இயற்றப்பட வேண்டிய சட்டங்களல்ல; ஆனால் அரசை நெறிப்படுத்தும் தத்துவங்களாகவிருக்கும். ஒவ்வொரு மனிதனின் ஆளுமையும் மதிக்கப்படல்வேண்டும் என்றும், ஒவ்வொரு மனிதனும் அந்தமாகக் கருதப்படவேண்டுமேயல்லாமல் கருவியாகப் பயன்படுத்தப்படலாகாது என்றும், எல்லா மனிதருக்கும் சமமாகப் பிரயோகிக்கக்கூடியதாகவும் எல்லாருக்கும் பொருந்தும் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டதாகவும் விருப்பாற்றல் தனது முடிவுகளைச் செய்தல் வேண்டும் என்றும், இந்த வகையிலே பெறப்படும் எல்லாருக்கும் பொதுவான நீதிமொழிகளே பொதுச் சட்டத்தொகுதியாக இடம் பெறல்வேண்டும் என்றும் கூறும் கான்றின் தார்மீக நீதிமொழிகளின் அரசியல் வெளிப்பாடாகவே அவை இருத்தல் வேண்டும். எனவே, சுதந்திரமான விருப்பாற்றல், தன்னாண்மையையும் பொதுநன்மைத் தன்மையையும் சிறப்பியல்புகளாகக் கொண்டிருந்தது. குடிமக்கள் என்ற முறையில் எல்லோரும் சட்டத்தின்கீழ்ச் சமமானவர்களாக இருத்தல் வேண்டும். ஆனால், சட்டங்களை இயற்றுவதில் எல்லோரும் பங்குகொள்ளாதபோதிலும், பொது விருப்பத்தின்படியே சட்டங்கள் இயற்றப்படுதல் வேண்டும். பொது விருப்பம் மட்டுமே எவருக்கும் அநீதியை இழைக்கமாட்டாது என்று கான்ற் கூறுகின்றார். நடைமுறையில் நேர்முக சனநாயகம் என்ற கோரிக்கைக்கு வழி காட்டாதபோதிலும், இது ரூசோவின் தத்துவத்தைப் போன்றே இருக்கின்றது. மக்கள் அனைவரதும் விருப்பாற்றலைப் பிரதிபலிக்கக்கூடிய வகையிலேயே சட்டமியற்றுநர் சட்டங்களை இயற்றுதல் வேண்டும் என்று கான்ற் கூறுகின்றார். அதேநேரத்தில், குடிமக்கள் தங்களின் சொந்த விருப்பத்தின்பேரிலேயே தமது அனுமதியைச் சட்டங்கள் பெற்றிருப்பதாகக் கருதுதல் வேண்டும்.

எனவே, அரசின் அத்திவாரமும் இலட்சியமும் பொது நன்மையாகவே இருத்தல் வேண்டும் என்ற கருத்தைக் கான்ற் வெளியிடுகின்றார். அதே நேரத்தில், ஒருவரின் மகிழ்ச்சி அரசின் நோக்கமாக இருத்தலாகாது என்பதையும் சுட்டிக் காட்டுகின்றார். மகிழ்ச்சி என்பது தனிமனிதரின் சொந்த அக்கறையாகும். தமக்குச் சிறந்த வழி எனக் கருதும் வழிகளில் மக்கள் அதை அடைய முயலுதல் வேண்டும். ஆனால், அவ்வாறு முயலும்போது யாவருக்கும் பொதுவாகப் பிரயோகிக்கப்படும் சட்டங்களால் ஒவ்வொருவரது சுதந்திரத்

[1] Principles of Politics, P. 35. Principles of Political Right

திற்கும் உத்தரவாதமளிக்கும் சட்டவமைப்பிற்குக் கீழ்ப்படிந்தே அவர்கள் நடந்துகொள்ளுதல் வேண்டும். இப்படியான அரசியலமைப்பைப் பேணுவதே அரசின் தலையாய கடமையாகும். அரசியலமைப்பைப் பேணுவது பிரசைகளின் பொது நோக்கமாகவும் இருக்கும். பகுத்தறிவின் பாற்பட்ட இத்தகைய இலட்சியத்தினுல் மட்டுமே தனிமனிதர்கட்கிடையே தோன்றக் கூடிய எல்லாத் தகராறுகளையும் தவிர்க்கமுடியும். தார்மீக இயல்பையுடைய மனிதன் என அரசைக் கான்ற் அழைக்கும்போது, அவ்விடயமாய் ரூசோ எக்கருத்தைக் கொண்டாரோ அதே கருத்தைத்தான் இவரும் கொள்கின்ருர்.

ரூசோவும் கான்றும் சேர்ந்து உருவாக்கிய இந்தக் கோட்பாட்டை அபி விருத்தி செய்வது ஹெகல் மேற்கொண்ட சிறந்த பணிகளில் ஒன்ருகும். தனி மனிதனின் சலனபுத்தியுள்ள விருப்பத்தையே அக்கோட்பாடு தனது அடிப் படையாகக் கொண்டிருக்கிறதேயல்லாமல், உண்மையான ஆன்மாவுடன் இணங் கக் கூடிய தனி விருப்பாற்றலை அல்லது பகுத்தறிவின்பாற்பட்ட விருப்பாற்றலை அது அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லையென்று அவர் வாதிட்டார். எனவே, கான்ற்றின் உரிமைக்கொள்கை மற்றவர்களின் சுதந்திரத்துடன் இணங்கி எல்லோருக்கும் பொதுவான சட்டமாகப் பரிணமிக்கத்தக்கவகையில் ஒவ்வொருவரினதும் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் செயலை மட்டுமே செய் தது. இது பகுத்தறிவுத்தன்மை பற்றிய எதிர்க் கருத்தேயன்றி வேறென்று மில்லை. மேலும், இது பகுத்தறிவுத் தன்மைக்கு வெளிப்புறமானதும் சம்பிரதா யப்படி அமைந்ததுமேயல்லாமல், இயற்கையாய் அமைந்ததன்று. சுருக்கமாகச் சொல்வதானுல், இது தத்துவவியல் முறையிற் போதுமானதொன்ருய் இருப்ப தாக ஹெகல் கருதவில்லை. ஆனுல், ரூசோவின் வாதங்களின் முக்கியத்துவத்தை அவர் பூரணமாகத் தெரிந்துகொண்டாரா என்பது சந்தேகத்திற்கு இடமளிப்ப தாக இருக்கின்றது. எனினும், ஒழுங்கமைப்பையுடைய சமூகத்தில் நிலவும் சூழ் நிலைகளில் மனிதன் எந்தவகையிற் சுதந்திரமாக இருக்கலாம் என்ற கேள்வி யைத் திரும்பவும் கேட்பதன் மூலம் அவர் தமது விசாரணையை ஆரம்பிக்கின் ருர். ஆன்மீகத் தன்மை வாய்ந்தவனுக மனிதனைப் பிரித்துக் கட்டும் அம்சங் களுள் மிகவும் முக்கியமானதாக அகவயத்தன்மையுள்ள சுதந்திரத்தைக் கொண்டிருப்பதற்கான திறமையினது புறவயத்தன்மையுள்ள வெளிப்பாட்டிற் குப் பகுத்தறிவுக்கேற்ற முறையில் அரசு எவ்வாறு உத்தரவாதமளிக்கும்?

விளங்கிக் கொள்வதற்கும் அர்த்தம் கூறுவதற்கும் ஹெகல் அவ்வளவு கடுமை யான சிந்தனையாளரல்லர் என்று பாசாங்கு செய்வது வீண் வேலையாகும். 'ஹெகலின் எழுத்துக்களைப் படிக்கிறபோது, அறிவாற்றல் எவ்வளவு சீர்கெட் டுப் போகிறது என்பதைத் தமது உண்மையான அனுபவத்தின் மூலம் தெரிந்து கொண்டதாக'[1] ஜே. எஸ். மில் எமக்குக் கூறுகின்ருர். திட்டப்படி குழப்பியடித் ததாகவும், அவிழ்க்கமுடியாத சிக்கல்களை ஏற்படுத்தியதாகவும், 'புரியாத

[1] **The Letters of John Stuart Mill, edited H. S. R. Elliot (London, 1910), Vol. ii. p. 93. Letters to Alexander Bain of 4th November, 1867.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயம் என்ற எண்ணத்தை ஏற்படுத்தக்கூடிய சிக்கல் மிகுந்த, பெரிதாகத் தோற்றமளிக்கின்ற பதங்களைப்'[1] பயன்படுத்தியதாகவும் எமது காலத்திலே திரு. வெல்டன் என்பவர் ஹெகல்மீது குற்றம் சாட்டினார். ஹெகல்மீது விரோத மனப்பான்மையைக் கொண்டிருப்பது மிகவும் இலகுவானது ; ஆனால் அவரை அலட்சியம் செய்வது மிகவும் கடினமாகும். இவரிடமிருந்து மேற்கோள் காட்டு வதைப் போன்று வேறு எந்த முக்கியமான மெய்யியலாளரிடமிருந்தும் இலகு வாக மேற்கோள்களைக் காட்டமுடியாது. இவருடைய சிறந்த புத்தகமான 'Philosophie des Rechts' (உரிமைகள் பற்றிய தத்துவம்) ஐப் போன்று சுருக்க மான விளக்கவுரைக்கு உட்படாத சிறந்த வேறு எந்த அரசியற் புத்தகமும் எழு தப்படவில்லை. எனவே, ஹெகலின் இரண்டொரு வாதங்களை, குறிப்பாகச் சுதந் திர வாழ்க்கை வாழ்வதற்கு அரசு இன்றியமையாதது என்பதைக் காட்ட அவர் மேற்கொண்ட முயற்சியை ஆராய்வதுடன் நாம் இங்கே நிறுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

பிளேட்டோ, பரிசுத்த அகுஸ்தீன், பரிசுத்த தோமஸ் ஆகியவர்கட்கு இருந்த தைப் போன்று ஹெகலுக்கும், அகிலத்திற்கும் பொதுவான ஒழுங்கைப் பற்றிய மறைபொருள் விளக்கத்தை அல்லது மத விளக்கத்தைக் கொடுக்கும் ஆர்வத் திற்குக் கீழ்ப்பட்டதொன்றாகவே அரசியற் பிரச்சினைகளைப் பற்றி ஆராயும் விருப்பம் உருவாகியது. தெய்வத்தின் நோக்கம் பற்றிய வெளிப்பாடும், சரித் திரத்தில் அந்நோக்கத்தைச் செயற்படுத்துவதன் சரிநுட்பமான இயல்பும் பெரிதளவில் அவருக்கு மட்டுமே தெரிய வந்திருப்பதனால், முற்கூறியவர்களிட மிருந்து ஹெகல் வேறுபடுகின்றார். ஆனால் முந்திய கிரேக்க மெய்யியற் சிந்தனை யாளர்களின் கருத்துக்களுடன்—குறிப்பாக லெப்னிசின் சிந்தனையுடன்—ஹெக லின் கருத்துக்கள் இணங்கிக் காணப்படுகின்றன என்பதையும் குறிப்பிடுதல் வேண்டும். கிரேக்க அர்த்தத்திலே கருத்து அல்லது உருவம் என்பதைப் போன்று, உலக—ஆர்வம் அல்லது முழுமை என்று ஹெகல் அழைத்ததொன்றின் அத்தியாவசியமான இயல்பாக நியாயம் இருந்தது. நியாயத்தினது அகிலத்திற் கும் பொதுவான இயல்பை அதனுடைய பொருளாதார வெளிப்பாடுகளால் அடையாளம் கண்டுகொள்ளலாம். தன்னுணர்வையுடையோர் இந்தத் தெய்வீ கச் செயன்முறையில் (இதன் உண்மை நிலையையும் போக்கையும் அவர்கள் அறிந்துகொள்ளும்போது) கட்டுப்பாடின்றி ஒத்துழைத்தல், தன்முனைப்பா யிருத்தல் ஆகியவைகளின் அடிப்படையிலே, காலத்தின் போக்கில், இந்தப் பகுத்தறிவு ஆர்வம் நிறைவு பெற்றுக்கொண்டுவருவதை அவர் கண்டார். எனவே, காலஅளவில் சம்பவங்கள் பற்றிய ஒழுங்கற்ற, சிதறிக்கிடந்த, அனுபவ ரீதியான அறிவைத் தெரிந்து கொள்வதற்கெதிராக, இந்தத் தெய்வீக, ஆன் மீக, பகுத்தறிவின்பாற்பட்ட வளர்ச்சி பற்றிய அறிவை ஹெகல் முன்வைத்தார். இத்தகைய தெய்வீக, ஆன்மீக, பகுத்தறிவின்பாற்பட்ட வளர்ச்சியே உண்மை

[1] The Vocabulary of Politics, p. 107.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானது எனவும் அவர் கொண்டார். எனவே, ஹெகலின் வரைவிலக்கணத்தின் படி ஒன்றன்பின் ஒன்றாகவருவதும், தற்செயலாக நிகழ்வதும், சொந்த விருப்பு வெறுப்புக்களை அடிப்படையாகக் கொண்டதுமான அனுபவ ரீதியான வாழ்க்கை உண்மையற்றதாக விருக்கின்றது ; ஆனால் ஹெகல் இத்துடன் நின்று விடவில்லை. இத்தகைய வாழ்க்கை முக்கியமற்றது என்றும் அவர் வாதாடுகின்றார். பகுத்தறிவின்பாற்பட்டது மட்டுமே உண்மையானது ; இதைப்பற்றி அறிந்து கொள்ள ஆரம்பித்தது தனிமனிதர் இந்த உண்மை நிலையிலே தாமும் பங்குகொண்டதோடு, தெய்வீக நோக்கத்திலே விழிப்புணர்ச்சியுடனே கலந்தும் கொண்டனர்.

தனி மனிதன் தானாக விரும்பி ஏற்றுக்கொண்டாலும், அல்லது பங்குபற்றுதவின் தேவையைத் தெளிவாகத் தெரிந்துகொண்டவர்கள் அதை அவன்மீது திணித்தாலும், இந்தப் பங்குபற்றுதல் விடுதலையின்பாற்பட்டதாகவே இருக்கும். இந்த விடுதலை, முழுமையினுடைய பகுத்தறிவின்பாற்பட்ட தலையாய நோக்கங்களிலொன்றாகும் என்று ஹெகல் எமக்கு உறுதிமொழியளிக்கின்றார். பிசாசைப் பற்றிச் சொல்லப்பட்டுள்ளதுபோன்று, தற்காலிகமான உணர்ச்சிப் போக்குக்களால் உருவாக்கப்பட்டவர்களாகவும், ஒழுங்கின்மைபற்றி முக்கிய அறிக்கையிடுபவர்களாகவும் நாம் இருப்பதனால், குழந்தைகளை ஒத்திருக்கின்றோம். கடவுளர்களின் முதிர்ந்த உலகிற்குரிய நடத்தைகளை நெறிப்படுத்தும் தத்துவங்களையும் நோக்கங்களையும் நாம் சரியாகப் புரிந்துகொள்ளாமல் இருப்பதே அதற்குக் காரணமாகும். மனிதனின் குறைபாடுகளைக் கண்டு ஹெகல் கிலியடையவில்லை. அதற்கு இரண்டு காரணங்களை முக்கியமாகக் காட்டலாம். முதலாவதாக, முரணறுதருக்கம் என அவரால் அழைக்கப்பட்ட இந்த அபிவிருத்தியின் தத்துவத்தை அவர் தெய்வீகமாகக் கண்டுகொண்டார். முரணறுதருக்கம் என்பதனால், தார்மீக அபிவிருத்திக்கு முன்பு எதிர்ப்பும் ஒற்றுமைக்கேடும் இருக்க வேண்டும் என அவர் கருதியதாகத் தெரிகின்றது. உண்மையை அறிந்துகொள்வதற்கு வாதமும் எதிர்வாதமும் இருப்பதன் நன்மைகள் பற்றிய சந்தேகத்திற்குரிய உவமையின் அடிப்படையிலேயே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார். இரண்டாவதாக, சரித்திரத்தின் எந்தக் கட்டத்திலும் அடையப் பெற்ற சூழ்நிலையே அடையக் கூடியவைகளிற் சிறந்ததாகும் என்று கூறுகின்றார். அடையப்பெற்றவை சரியானவையாக இருத்தல்வேண்டும் என்ற அர்த்தத்தில் அவர் அவ்வாறு கூறவில்லை. வளர்ந்தவை வேறு விதமான வகையில் வளர்ச்சியடைந்திருக்க முடியாது என்ற அர்த்தத்திலேயே அவர் அவ்வாறு கூறுகின்றார். உண்மையான உலகம் அது இருக்கவேண்டிய வகையிலே அமைந்திருக்கும் என்பதைத் தெரிந்துகொள்ள மெய்யியல் நுண்ணறிவு எமக்கு உதவுகின்றது என்று ஹெகல் கூறுகின்றார். காலத்தின் போக்கிலே எல்லாவற்றிற்கும் பொதுவான தெய்வீக நியாயம் தன்னை அறிந்துகொள்ளக்கூடியதாக இருப்பதனால், தெய்வீகத் திட்டத்தின்படி நடப்பதே சரித்திரத்தின் கோலம் என்று சொல்லலாம். இந்த வாதத்தில், சம்பவங்களை விளங்கிக்கொள்வதிலோ அல்லது சம்பவங்களுக்குப் பகுத்தறிவிற்கு ஒத்த விளக்கத்தைக் கொடுப்பதிலோ ஹெகல் உண்மையைக் கண்டுகொள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை. அதற்குப் பதிலாக, சம்பவங்களிலேயே உண்மை நிலையைக் காணவேண் டும் என்று அவர் கூறுகின்றார். இதில் அவர் குழப்பமடைகின்றார். இந்தக் குழப் பம் அவருடைய வாதம் முழுவதையும் திரிபடையச் செய்கின்றது.

இந்த மறைபொருளாராய்ச்சிப் பின்னணியிற்றான் அரசியல் தொடர்புகளின் தன்மைகளை ஹெகல் ஆராய்கின்றார். ஆனால், சரித்திர அடிப்படையிற் பார்க் கும்போது, பெரிதளவில் மத்தியகால அமைப்பைக்கொண்டிருந்ததும் பிரெஞ்சுப் படைபலமும் கருத்துக்களும் பெற்ற செல்வாக்கிற்குப் பலமான எதிர்ப்புணர்ச்சி காணப்பட்டதுமான ஜெர்மனியிலே, ஹெகல் தமது வாழ்க்கையை நடத்தினார். இறுதியாக, ரூசோவிலும் பார்க்க அதிகமாகப் பிளேட்டோவினாலே கவரப்பட்ட ஹெகல், தமது சிந்தனையை இந்தத் தொடர்புகளை ஆராய்வதிற் பயன்படுத்தி னார். இதன் விளைவாக, தம் ஆசிரியரான ரூசோவைப் பலமாகக் கண்டிக்கும் போது பிளேட்டோவின் மரபு வழிவந்த இலட்சிய வாதத்திற்கும் தொழிற் பாட்டு வாதத்திற்கும் அவர் கட்டுப்பட்டவராகின்றார்.

ஹெகலைப் பொறுத்தவரையில், விடுதலையை அடையும் முறையின் எடுத்துக் காட்டாகவே சமூகம் விளங்குகின்றது. இந்த முறை அடுத்தடுத்து வரும் பல பகுதிகளாலானது. பிந்திய பகுதிகளை அடையும்போது மாற்றமடைந்துவிடும் ஆரம்பகால அபிவிருத்திகளும் இவைகளுள் அடங்கும். சிறிய ஆலம் விதையி லிருந்து பெரிய ஆலமரம் வருவதைப்போல், சிறிய புழுக்கள் பெரிய வண்டு களாக வளருவதைப்போல், இது வெறும் உயிரியல் வளர்ச்சியல்ல. ஆனால், உள்நோக்கிப் பார்ப்பதன் மூலமும் மெய்யியல் முறையிற் பார்ப்பதன் மூலமுமே இதனுடைய முக்கியத்துவத்தை விளங்கிக் கொள்ளமுடியும் என்ற அர்த்தத்தில் இஃது ஒரு பகுத்தறிவின்பாற்பட்ட வளர்ச்சியாகும். பின்னருள்ள பகுதி களில்லாவிட்டால், முன்னருள்ள பகுதிகள் போதாதவையாகவும் பூரணத்துவ மடையாதவையாகவும் இருக்கும். லெப்னிசைப் பொறுத்த வரையில், நிகழ் காலம் எதிர்காலத்தைத் தன்னகத்தே கொண்டுள்ளதாகவே இருக்கின்றது. ஹெகலைப் பொறுத்த வரையில், இறந்தகாலத்தைத் தன்னுட் கொண்டதாக நிகழ்காலம் இருக்கின்றது.

தமது முரணறுவாதத்தின் கோலத்துடன் பொருத்தப் பெற்றுள்ள மும்மை களில் ஹெகல் சிந்தித்தார். குடும்பம், குடியியற் சமூகம் என அவர் அழைக்கும் அமிசம், அரசு ஆகிய மூன்று நிலைகள் சமூகத்திற் காணப்படுவதாக அவர் வேறு பாடு செய்கின்றார். எனவே, ஆரம்பத்திலே சமுதாயத்தின் முழுமையாக அவர் அரசைக் காணவில்லை. அதற்குமாறாக, அரசியல் அல்லாதனவும் அரசியலி லும் குறைந்த பகுதிக்குரியனவுமான மற்ற நடவடிக்கைகளுக்கு அறிவுறுத்தும் ஒழுங்கமைப்பின் அல்லது கட்டுப்பாட்டின் ஒரு விசேட தத்துவமாகவே அவர் அரசைக் காண்கின்றார். சமூகத் தொடர்புகளின் இந்த மூன்று வகைகளும் தனி மனிதனின் விடுதலைக்குப் போதிய வசதியும் சந்தர்ப்பமும் அளிக்கின்றன. குடும் பத்தில் அவன் தன்னுடைய இயற்கையான உணர்ச்சிகளைத் திருப்திப்படுத்திக் கொள்ளலாம். வெளியேயுள்ள பொருளாதார உலகிலே தனிப்பட்ட விருப்பாற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றல் என ரூசோ அழைத்ததையும், உணர்ச்சிப்போக்கு என ஹெகல் அழைப்பதையும் வெளிப்படுத்த அவனுக்குப் போதிய சந்தர்ப்பமுண்டு. ஆனால் அரசில் மட்டுந்தான் எல்லாவற்றுக்கும் பொதுவான விருப்பாற்றல் உண்டு; அது மனித ஆன்மாவின் விடுதலையை உண்மையானதாக்குவதற்கும், புலன்களால் அறிந்து கொள்வதற்கும், பூரணமாக வெளிக்காட்டுவதற்கும் சந்தர்ப்பம் அளிக்கின்றது.

பொருளாதாரத் துறையிலே தொழிற்படும் தனிமனிதர்களுடைய சுயநலனை நாடும் விருப்பாற்றல்களின் அடிப்படையிலே தங்களின் சமுதாயம் முழுவதையும் உருவாக்க முயன்றனர் என்ற காரணத்திற்காகத்தான் ரூசோவையும் கான்ற்றையும் ஹெகல் கண்டிக்கின்றார். இந்த விருப்பாற்றல்கள் அகிலத்திற்கும் பொருந்துகின்ற சட்டத்திற்கு அமைந்தனவாக இருத்தற் கூடும்; ஆனால், பொதுவான சட்டத்தைப்பற்றி அவர்கள் தெரிந்துகொண்டு தங்களின் முடிவுகளைச் செய்வதனாலன்றி, தற்செயலாகவே அஃது அவ்வாறு அமைந்துவிடுகின்றது. பொது விருப்பாற்றல் என்ற சொற்றொடரை ரூசோ பயன்படுத்தவில்லை. ஆனால், 'சமத்துவமின்மை பற்றிய ஆய்வு' (Discourse on Inequality) என்ற புத்தகத்திற் காணப்பட்டுள்ள வாதங்களை ஏற்றுக்கொள்ள ஹெகல் மறுத்தமையினால் 'சமுதாய ஒப்பந்தம்' (The Social Contract) என்ற புத்தகத்தில் ரூசோ வெளியிட்ட வாதங்களை விளங்கிக் கொள்ளமுடியாத நிலையும் அவருக்கேற்பட்டது. தனிமனித சொத்துரிமை, ஒப்பந்தச் சுதந்திரம், ஒவ்வொருவரும் தமக்கு விரும்பியவைகளைத் தெரிந்தெடுப்பதற்கான உரிமை ஆகியவை சார்பான பொருளாதாரத் துறைகட்கு, ஹெகல் விசேட சமூக அரங்கம் ஒன்றை அனுமதித்தார். அரசின் அகிலத்திற்குமான பொது விருப்பாற்றலுக்கிணங்க, சுயநலத்தையே கருத்திற் கொண்ட தனிப்பட்ட விருப்பாற்றல் தொழிற்படும் துறையாக இது இருந்தது. ஆனால் அது வெளிப்பார்வையிலும், விவரங்களிலும் அரசின் கட்டளைக்கு உட்பட்டிருந்திலது. எனினும், பொதுவிருப்பாற்றலின் பரந்து விரிந்த சட்டக் கட்டுப்பாட்டின்கீழ்ச் சுதந்திரமாகத் தனிப்பட்ட முடிவுகளைச் செய்வதற்கு அனுமதி நல்கிய ரூசோவின் அரசில் நிலவும் சூழ்நிலையிலிருந்து இது சிறிதளவு வேறுபட்டதாகவே இருக்கின்றது. ஹெகலின் வார்த்தைகளில், "உண்மையிலே தனிப்பட்ட அக்கறை நீக்கப்படவோ அமுக்கப்படவோ மாட்டாது; ஆனால், அகிலப் பொதுவான அக்கறையுடன் பகிரங்கமாகவே இணங்கக்கூடியவகையில் அது வைக்கப்படும். இந்த இணக்கத்திலே தனிப்பட்ட அக்கறையும் அகிலப் பொதுவான அக்கறையும் ஒன்றாகச் சேர்ந்திருக்கும்."[1]

முந்திய சரித்திரப் பிரச்சினைகளிலே ஹெகல் தமது கவனத்தை எவ்வளவிற்குச் செலுத்தினார் என்பதை நாம் காண்பதற்கு இதைப்போன்ற வற்புறுத்தல்கள் உதாரணமாகத் திகழ்கின்றன. மூலதனம், முயற்சி ஆகியவற்றுக்கான கட்டில்லாச் சந்தையைப் பேணுதல் என்ற இறந்தகாலச் சரித்திரப் பிரச்சினையில் அவரின் கவனம் சென்றிருக்கின்றது. அந்தக் கட்டில்லாச் சந்தையிலே ஊழியர் சேவையையும் பண்டப் பரிமாற்றலையும் பணக்கொடுப்பனவு பிரதியீடு

[1] Philosophy of Right, translated S. W. Dyde (London 1896), 261, note.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ததாலும், பொருளாதார நடவடிக்கையை நிருணயிக்கும் காரணியாக விருந்த படித்தரத்தை ஒப்பந்தம் பிரதியீடு செய்ததாலும் ஏற்பட்ட புதிய சூழ்நிலை, அவரின் சிந்தையைக் கவர்ந்தது. முக்கியமாகத் தனியாரின் தெரிவு களுக்கு இடமளிக்கும் இந்த உலகில் மத்தியகால உலகத்தைச் சேர்ந்த சங்கங் கள், தொழிற் குழுமங்கள், கூட்டுத் தாபனங்கள் ஆகியவைகள் குழுக்களாகத் தமது அலுவல்களைச் செய்வதற்கு இடமிருந்தது. இந்த நடவடிக்கைகள் யாவும் தேவைகளைத் திருப்தி செய்தல் என்ற பொதுவான சமூக இலட்சியத்திற்காக உதவும் அதே வேளையில், தனி மனித ஆவலின் உணர்ச்சிப் போக்கைத் திருப்தி செய்யும் சுதந்திரம் என்ற இரண்டாவது வகைச் சுதந்திரத்திற்கும் இடமளித் தன.

இந்தத் துறையைப் பொருளாதார நடவடிக்கைக்குள் அல்லது சம்பிரதாய மாக, விருப்பங்களின் தனிப்பட்ட முரண்பாட்டுக்குள் அமையும்படி கட்டுப் படுத்தியிருந்தால், அது லொக் அல்லது ஹொப்ஸ் எதிர்நோக்கிய இயற்கை நிலையை ஒத்ததாக இருந்திருக்கும். ஆனால் இந்தக் கட்டத்திலே பாரதூரமான கருத்துக் குழப்பமொன்றை அவர் ஏற்படுத்துகின்றார். சமூக வாழ்க்கையின் இந்தக் கூறை விவரிப்பதற்குக் குடியியல் என்ற பதத்தை அவர் பயன்படுத்து வது இந்தக் கருத்துக் குழப்பத்தை ஓரளவு தெளிவாகக் காட்டுகின்றது. இன் னும் அக்கூறு அரசாகிவிடவில்லை. ஆனால், குடியியல் ஒழுங்கிற்கு கீழ்ப்பட்ட சமூகமாக அது இருக்கின்றது. இந்த ஒழுங்கு தனிமனிதனின் சுதந்திரத் தைக் கட்டுப்படுத்தவில்லை; ஆனால், பொது நன்மையைக் கண்காணித்து வரு கின்றது. வேறு அடிப்படையில் இதைத்தான் லொக்கின் அரசாங்கமும் செய் தது. இதையே ஹொப்சின் இறையும் செய்யவேண்டிய நிலையிருந்தது. தேவை களைத் திருப்தி செய்வதற்குத் தேவையான பொதுச் சுதந்திரம் தொழிற்படச் செய்வதற்கு, ஒழுங்கின்படி நீதியை நிர்வகிப்பதன்மூலம், தனியார் சொத்திற் குப் பாதுகாப்பளிக்கப்படல் வேண்டும் என்று ஹெகல் கூறுகின்றார். குடியியற் சமூகம் பொது அரசாங்க நிர்வாகத் துறையையும் கொண்டிருத்தல் வேண் டும். இதைக் குறிப்பிடுவதற்குப் "பொலிஸ்" என்ற பதினெட்டாம் நூற்றாண் டுக்குரிய ஒரு பதத்தை ஹெகல் பயன்படுத்துகின்றார். ஆனால், இன்று நாம் பொதுநல சேவைகள் என்று அழைப்பவைகளுட் பல இதில் அடங்கும். எனவே, அவருடைய மும்மைத் தொகுப்பைத் திருப்தி செய்வதைத் தவிர, அவர் கருதியிருந்த அமைப்பைப் பூர்த்தி செய்வதற்கு ஹெகலுக்கு அரசு ஏன் தேவைப்பட்டது என்ற கேள்வி இப்பொழுது எழுகின்றது.

விடுதலையின் வளர்ச்சியடையும் வெளிப்பாட்டிலே, குறைந்த உருவமைப்பை உடனடியாக மறுத்துரைத்து அதைப்பூரணமாக வெளிப்படுத்தக்கூடிய உயர்ந்த உருவமைப்பொன்றை ஹெகல் அமைத்தார். இந்தத் தனிப்பட்ட விருப்பாற்றல், அதாவது, ஆசைகளைப் பூர்த்தி செய்வதற்கான சுதந்திரம், மேம்படுத்தப்படுவ துடன், வெளிப்படும் தெய்வீகத் தத்துவம்பற்றிய பகுத்தறிவின்பாற்பட்ட அறிவிற்கொப்ப, விரும்பும் சுதந்திரமாகப் பரிணமிக்கச் செய்யப்படவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். எனவே, எல்லாருக்கும் பொதுவான சட்டத்தால் அவர்களின் நடத்தைகள் வரையறை செய்யப்பட்டிருப்பதனுல், குடியியற் சமூகத்தைச் சேர்ந்த பொருளாதார வாழ்க்கையை நடத்தும் தனியாட்கள் ஏற்கனவே ஒரு நகரின் உறுப்பினர்களாகி விட்டனர் என் அர்த்தம் கொள்ளலாம். அவர்கள் இந்தச் சட்டத்தை இயற்றுவதில்லை. ஆனுல் இந்தச் சட்டத்தைப் பகுத்தறிவு முறையில் இனம் கண்டுகொள்ளும் ஆற்றலை அவர்கள் கொண்டிருக்கின்றனர். இவ்வாறு இனம் கண்டு கொள்வதில் அவர்கள் சுதந்திரமாக இருக்கின்றனர். தமது கருத்தியல்வாதத்தின் மொழியியல் தேவைகட்குப் பணிந்த ஹெகல் 'இருக்கிறது' என்ற தெரிநிலைவினையை இடைவிடாது உபயோகிக்கின்றுர். ஆனுல் மற்றக் கொள்கையாளரோ 'இருத்தல் வேண்டும்' என்ற சொற்றெடரையே பயன்படுத்தியிருப்பார்கள். எல்லாவற்றிற்கும் பொதுவான சட்டம் என்பது குடிமக்கள் தமது இலட்சியமாகக் கொள்ளவேண்டிய தார்மீக முறையில் விரும்பத்தக்க ஒன்றன்று. பிரசைகளின் உண்மையான வெற்றி தோல்விகளை மதிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்படும் நியமங்களாகவும் அந்தச் சட்டத்தைக் கருத முடியாது. ஆனுல் ஏதோ ஓர் அர்த்தத்தில், எல்லாவற்றிற்கும் பொதுவான சட்டம் ஏற்கனவே அமுலில் இருக்கின்றது. அதைத் தெரிந்துகொள்ள முடியும். அவ்வாறு தெரிந்து கொள்வதன்மூலம் அதற்குக் கீழ்ப்படியவும் முடியும். இந்தச் சூழ்நிலையிலே விருப்பம் என்பதை ஹெகல் பயன்படுத்தும் முறையானது தார்மீக அதிகாரம் என்பதிலும் பார்க்க நியாயத்துடன் இணங்குவதாக அமைந்திருப்பதே இதற்குக் காரணமாகும்.

குடியியற் சமூகத்தில் அனுபவிக்கக்கூடிய இந்த இருவகையான சுதந்திரங்களையும் அகவயமானவை என்று ஹெகல் அழைக்கின்றுர். ஆனுல் அவை வெவ்வேறு வழிகளில் அகவயமானவையாக இருக்கின்றன. எனவே, அரசு வேறெரு முரணறுவாதக் கட்டமாகவிருக்கும் என்றும், அந்தக் கட்டத்திலே சுதந்திரம் இறுதியில் புறவயமானதாகிவிடும் என்றும் அவர் கருதுகின்றுர். குடியியற் சமூகத்தில் நீதி நிர்வகிக்கப்படுவதோடு ஒழுங்கும் பேணப்படுகின்றது. (இந்த இரண்டும் அரசியல் நடவடிக்கைகளாகவே வழக்கமாகக் கருதப்படுகின்றன.) ஆனுல், சட்டமோ அல்லது இறுதியான இறைமை அதிகாரமோ அத்தகைய குடியியற் சமூகத்திலே காணப்படுவதில்லை. இத்தகைய நடவடிக்கைகள்தாம், குறிப்பாகக் கடைசியாகக் குறிக்கப்பட்ட நடவடிக்கையும் உட்பட, சமூக அமைப்புச் சிறப்பாக அபிவிருத்தியடைவதற்குக் காரணமாக இருக்கின்றன. எனவே, அரசு மேம்பட்டதாகவும் பிரசைகள் பெரும்பாலோரின் கட்டுப்பாட்டிற்கும் கண்டனத்திற்கும் அப்பாற்பட்டதாகவும் இருப்பதோடு, அவர்களின்

[1] அரசிலே புறவயமான விடுதலைபற்றி ஹெகல் விளக்குவதற்கு முயன்றபோது, அவரது பகுத்தறிவுவாதம் காரணமாக அவரடைந்த இடர்ப்பாடுகள் கணக்கிலடங்காதவை ; சிக்கலானவையுங்கூட. அவற்றை விரித்துரைக்க முடியாது. இக் குழப்பத்தைச் சிக்கறுப்பதற்குப் பின்னுள்ள நூலைக் காண்க :

**The Political Philosophy of Plato and Hegel (Oxford, Clarendon Press, 1935), by M. P. Foster, particularly Chapters IV and V.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்த, குடும்ப நடவடிக்கைகளுடைய பகுத்தறிவுசார்ந்த முன்னெண்ணுத லாக அவர்களின் வாழ்க்கை முழுவதும் ஊடுருவிச் செல்வதாகவும் இருக்கின்றது. உலக ஆர்வத்திலிருந்து வெளிப்படுவதாகிய அரசு இந்த அர்த்தத்தில் அவ்வார்வத்தை ஒத்திருக்கின்றது. முழுமையானது பகுதிகளிலும் பார்க்கப் பெரியது. எனவே, ரூசோ கூறியிருக்கக்கூடியதைப்போன்று, பகுதிகள் இறைமையில் உறுப்பினர்களாக இருக்கமுடியா; ஆனால் கீழ்ப்பட்ட அமைப்புக்களின் அல்லது வகுப்புக்களின் உறுப்பினர்களாக மட்டுமே இருக்கமுடியும். 'பருப்பொருளான அரசு முழுமையானது. குறிப்பிட்ட வட்டங்களாக அஃது இணைக்கப்பட்டிருக்கின்றது. அரசின் உறுப்பினர் ஒரு வட்டத்தின் அல்லது வகுப்பின் உறுப்பினராக இருப்பார். அவரின் புறவயமான இயல்பைமட்டுமே அரசில் அடையாளம் கண்டு கொள்ள முடியும்.'[1]

யாவருக்கும் பொதுவான வகுப்பு ஒன்றை ஹெகல் ஏற்கனவே தமது குடியியற் சமூகத்திலே சேர்த்துக் கொண்டுவிட்டார். இந்த வகுப்பினரின் வேலை, பொருளாதார நடவடிக்கைகளுடன் தொடர்பு கொண்ட ஒன்றன்று. ஒழுங்கை நிலைநாட்டுவதன் மூலமோ அல்லது நீதி நிர்வாகத்திற்குப் பொறுப்பாக இருப்பதன் மூலமோ அரசின் சட்ட அக்கறைகளைப் பிரதி நிதித்துவப்படுத்துவதே இந்த வகுப்பினரின் வேலையாகும். இதற்கொப்ப, சட்டமன்றிலுள்ள அரசின் சொந்த அரங்கில் இந்தச் சமூகத்தின் குழுக்களுக்கே—தனிமனிதர்களுக்கல்ல—பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டது. குடித் திணைகளின் மத்தியகாலப் பாராளுமன்றத்தின் ஒழுங்கமைப்புக்களையொட்டி இந்தக் கருத்தும் உருவாக்கப்பட்டது. அந்தப் பாராளுமன்றத்தில் அக்கறைகளுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டதேயல்லாமல் தனி மனிதர்களுக்கல்ல. ரூசோவின் சட்டமன்றம் அனுபவித்த இறையுரிமையை இந்தச் சபை அனுபவிக்கவில்லை. அரசியலமைப்புச் சட்டத்திற்குட்பட்ட அரசரைத் தலைவராகக் கொண்டதும், அவரை அடையாள முறைமையாக உடையதுமான நிர்வாக அரசாங்கத்திற்குமட்டுமே இறையுரிமையை ஹெகல் கொடுத்தார். பெந்தம் கோரியதிலிருந்து அதிகம் வேறுபடாதவகையில், கொள்கைகள்பற்றிச் செய்யப்படும் முடிவுகளுக்கான விளக்கத்தைப் பெறும் சுதந்திரத்தைத்தான் இச்சபையினர் அனுபவித்தனர். பகுத்தறிவின் அடிப்படையில் ஹெகலிடமிருந்து நாம் எதிர்பார்க்கக் கூடியதைப் போன்றில்லாமல், நடைபெறும் சம்பவங்களின் சரித்திரச் சூழ்நிலைகளுடன் சார்புடையதாகவே அது இருந்தது. இந்த அரசியல் அமைப்பின் மையமாகவுள்ள நிர்வாக அரசாங்கமும் (ரூசோவின் கருத்துப்படி சமுதாயத்திலே பூரண சுதந்திரத்தை அனுபவிக்கும் ஒரேயொரு குழு இதுதான்) பொதுசன அபிப்பிராயத்தின் மூலம் பிரசைகளுடன் தொடர்பு கொண்டிருக்கிறது. ஆனால், பொதுசன அபிப்பிராயம் அவர்களின் முடிவுகளை எந்தவிதத்திலும் பாதிக்கலாகாது என்று ஹெகல் கூறுகின்றார். பேச்சுச் சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம் ஆகியவை, உணர்ச்சியை வெளிப்படுத்து

[1] **Philosophy of Right, 308,** குறிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதற்கான வழியாக, சொந்த உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்குரிய பாது காப்பான வாயிலாக, மக்கட் கூட்டத்தினரின் பகுத்தறிவற்ற போக்கிற்குக் கொடுக்கப்படும் அருமருந்தாகப் பயன்படுகின்றன.

ரூசோவின் பிரசாவுரிமை பற்றிய கருத்தின் கண்ணேட்டத்திற் பார்க்கும் போது ஹெகலின் அரசாங்கமும் சுதந்திரமானதன்று. கிறித்துவ அரசைப் போன்று கடவுகளுக்கெதிராகவோ அல்லது ரூசோவின் அரசைப்போன்று விருப்பத்தின் பேரில் நன்மையுடன் இணக்கமாகவோ இயங்குவதால், ஹெக லின் அரசாங்கம் சுதந்திரத்தைக் கொண்டதாக இருந்திலது. ஆனல், பகுத் தறிவின்பாற்பட்ட உலக—ஆர்வம் தெய்வத்தினுற் செயற்படுத்தப்படுவதனு லேயே அது சுதந்திரமாக இருக்கிறது. இந்தப் பகுத்தறிவின்பாற்பட்ட தத்து வத்தை வெளிப்படுத்தும் முறைகளாகவே அரசுகளைக் ஹெகல் நோக்கினுர். இந்தத் தத்துவம் வெளிப்படுதல் மனிதனின் கண்மூடித்தனமான நடத்தை யாலே சிறிது காலத்திற்குத் தாமதிக்கக்கூடும்; ஆனல் அதனை முற்றுக முறிய டிக்க முடியாது. அவர் கூறுவதைப் போன்று, பூமியின் மீது கடவுள் நடத்தும் இந்த அணிவகுப்பு அதனுடைய மர்மமான முரணறு முறையிலே தொடர்ந்து நடைபெறுகின்றது. அந்த அணிவகுப்பின் அவசியம் பற்றிப் பகுத்தறிவு முறைப்படி உணர்ந்து கொள்பவர்களுக்கு இருப்பதிலும் பார்க்க அந்த அணி வகுப்பின் உத்தரவுகட்குக் கீழ்ப்படிபவர்களுக்கு அதிக சுதந்திரம் இருக்க முடியாது.

அரசின் ஒவ்வோர் உரிமைவற்புறுத்தல் நடவடிக்கையும் இத்தகைய அத்தி யாவசிய நடவடிக்கைகளுள் சேர்க்கப்படல்வேண்டுமென்று ஹெகல் கருதி ஞர். இத்தகைய உரிமைவற்புறுத்தல் நடவடிக்கைகளின் மூலம் அரசு மேலும் மேலும் சுய உணர்வைப் பெற்றதோடு, அதனுடைய உறுப்புக்களும் ஐக்கியப் படுத்தப்பட்டன. யுத்தமே இவைகளுளெல்லாம் பெரிதும் வலுவூட்டும் நடவடிக் கையாக அமைந்திருந்தது. 'தேவையான கொந்தளிப்பு' என்று போர்களை ஹெகல் அழைக்கின்ருர். ஆனல், மனித விவகாரங்களிலே தெய்வீக அறிவாற்ற லின் இறுதி உருவமாக அரசு இருக்கின்றது என அவர் கருதியமையினுல், முரணறுவாதத்திற்குரிய சச்சரவின் இந்த வடிவமைப்பு பாந்ததும் மேம்பட் டதுமான ஒற்றுமைக்கு ஒரு முன்னேடியாக இருப்பதை அவர் காணவில்லை. முரணறுவாதமுறையின் இவ்வுபயோகம், ஹெகலின் சமதர்ம வாரிசுகளான மாக்ஸ், லெனின் ஆகியோருக்கு மாபுரிமையாகக் கொடுக்கப்பட்டது. சமூக விடுதலையை அடையும் மனிதனுடைய முயற்சியின்போது காணப்படும் எதிர்த் தோற்றமாகவே அரசை அவர்கள் கருதினுர்கள். ஹெகலைப் பொறுத்தவரையில், அரசே எல்லாவற்றிலும் பார்க்க மேம்பட்டது; அரசை மிஞ்சிவிட முடியும் என்பதை அவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

* * * *

ஹெகலின் இலட்சியவாதம் பல இடர்ப்பாடுகளைக் கொண்டிருந்ததோடு ஓப் பீட்டளவில் ஆங்கிலச் சிந்தனையை அதிகம் பாதிக்காததொன்றுகவும் இருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதிலும், ஐரோப்பாக் கண்டத்தில், குறிப்பாக ஜெர்மனியிலும் ருஷியாவி லும், மிகவும் முக்கியமான, பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தியது. பல தசாப்தங்களுக்கு தத்துவவியலுக்குரிய வைதீகத்தை அது கொடுத்துதவியது. மத்திய காலத்திலே புலமைப்பண்பு பெற்றிருந்த ஆதிக்கத்தை இது ஞாபக மூட்டுவதாகவிருக்கின்றது. ஹெகலின் பெருமையை அவரின் கருத்துக்களைப் பூரணமாக ஏற்றுக்கொண்டவர்களிடம் காணமுடிவதைப்போன்றே, அவரின் குறிப்பிட்ட வாதங்களை நிராகரித்தவர்கள் அவருக்கு எவ்வளவு தூரம் கடமைப் பட்டிருந்தனர் என்பதைக் கொண்டும் அளவிட்டு அறிந்துகொள்ளலாம். மாக்சின் கூட்டாளியான எங்கிள்ஸ், ஹெகலின் கருத்துக்களைக் கண்டித்து, ஆங்கி லேயர்களைப் போன்று, ஹெகல்மீது மரியாதைக் குறைவான அடைமொழிகளை அள்ளிச் சொரிகின்ற போதிலும், அவரின் திறமைகளைப் பாராட்டத் தயங்க வில்லை. 'ஓட்டுவேலை, செயற்கைத் தன்மை, வலிந்து பொருள் கொள்ளல் ஆகி யவை அதிகமாகக் காணப்படுகின்றன ............ ஹெகலின் அமைப்பு முறை, தன்னைப் பொறுத்த வரையும், மிகப்பெரிய குறைப் பிரசவமாகும்' என்று எங்கிள்ஸ் எழுதினார். தாம் தீர்வு காண்பதற்காகத் தெரிந்தெடுத்த பிரச்சினைக்கு ஹெகல் திருப்திகரமான விடையைக் கண்டு கொள்ளாத போதிலும் மிகவும் முக்கியமான அந்தப் பிரச்சினையை அவர் சிறந்த முறையில் விரித்துரைத்துள் ளார் என்பதை எங்கிள்ஸ் அங்கீகரிக்கின்றார். இயற்கையான, சரித்திர ரீதியான, அறிவியலான உலகங்களை இணைத்து, எல்லாவற்றிற்கும் பொதுவான மாற்றம், உருவமாற்றம் ஆகியவற்றின் போக்கை ஒழுங்கு செய்யும் உள்ளான சட்டம் யாது? மாக்சிய சிந்தனையின் மெய்ப் பொருளாராய்ச்சிக்கான அமைப்பை மட் டுமே ஹெகல் உருவாக்கிக் கொடுத்திருப்பாராகில், ஐரோப்பிய சமூகக் கொள்கை யாளர்களிற் செல்வாக்குப் பெற்றவர்களுள் ஒருவராக அவரைக் கருதுவதற்கு அஃது ஒன்றே போதுமானதாயிருக்கும்.

இதைவிட வேறுசில அடிப்படையான பிரச்சினைகளையும் மாக்ஸ் ஹெகலிட மிருந்து கற்றுக்கொண்டார். தமது சொந்தவிடையைக் கண்டு கொள்வதற்கு ஹெகலின் ஒழுங்கு முறையின் ஒரு பகுதியையும் மாக்ஸ் ஏற்றுக்கொண்டார். முதலாவதாக, சரித்திரத்திற்கு முரணறுவாத முறைப்படி அர்த்தம் கூறும் ஹெகலின் முறையை மாக்ஸ் விடாமல் வைத்துக்கொண்டார். ஒன்றோடொன்று முரண்படும் சரித்திரச் சக்திகள், புதிய சமூக உருவங்களுக்கு இடமளித்தன. இரண்டாவதாக, இந்த முறையைப் பகுத்தறிவின் உதவியுடன் விளங்கிக் கொள்ளலாம் என்ற கருத்தையும், இந்தமுறையின் தவிர்க்கமுடியாத வளர்ச் சியை எதிர்வுகூற முடியும் என்பதையும் மாக்ஸ் தொடர்ந்து கொண்டிருந் தார். இறுதியாக, ஒன்றோடொன்று தொடர்புடைய குழுக்களின் அடிப்படை யிலேயே சமூகத்தைப்பற்றி அவர் எப்பொழுதும் சிந்தித்தார். அந்தக் குழுக் களில் அங்கத்துவம் வகிப்பதற்குப் பெற்றிருக்க வேண்டிய தகுதிகளைக் கொண்டு ஒவ்வொரு குழுவிலும் யார்யார் உறுப்பினர்களாக இருந்தனர் என் பதை அறிந்து கொள்ள முடியும் என்றும் மாக்ஸ் கருதினார். சமுதாயமாகக் குடிமக்கள் சேர்ந்து உருவாக்கிய அரசியல் தொடர்புகளாக அவர் அரசைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணவில்லை. அதற்குப் பதிலாக, பொருளாதார சமூகத்துடன் தொடுக்கப்பட்ட மேலதிகமானதொன்ருகவோ, அல்லது மேற்கட்டுமானமாகவோ தான்—அவர் பயன்படுத்திய பதத்தை உபயோகிப்பதானுல்—அரசை அவர் கருதினுர். பொருளாதார சமூகத்தில் நிலவிய இணக்கமின்மைதான் அரசை உருவாக்க வேண்டிய நிலைமையைத் தோற்றுவித்தது என்பது அவர் கருத்தாகும்.

ஹெகலின் சிந்தனையிற் காணப்படும் வழக்கத்திற்கிசைந்த இந்த அம்சங்கள் அனைத்திற்கும், அவைகளின் ஜெர்மன் மூலத்திலிருந்து பெரிதளவு வேறு பட்டனவும், அவருக்குச் சற்று முன்னர் வாழ்ந்த பிரெஞ்சுச் சிந்தனையாளர்களின் சந்ததியினருடைய கருத்துக்களுடன் நெருங்கிய ஒற்றுமை கொண்டிருந்தனவுமான உள்ளுறைகளையும் விளக்கங்களையும் மாக்ஸ் கொடுத்தார். பரந்து வேறு பட்ட தோற்றுவாய்களிலிருந்து புறப்படும் கொள்கைகள் சந்திக்கும் ஓர் இடமாக மாக்ஸ் திகழ்ந்தார். மதவியலிலிருந்து மட்டும் அவர் தமது கருத்துக்களைப் பெற்றுவிடவில்லை. ஆனுல், அவரிடமிருந்த பல்வேறு தோற்றுவாய்களும் அவரின் மிகப் பெரிய கொள்கை என்னும் மண்டபத்தைக் கட்டி எழுப்புவதற்குத் தேவைப்பட்ட உறுதியான அத்திவாரத்தை அமைத்துக் கொடுத்தன. சமூகத்தின் பரிமணு வளர்ச்சியின் அடுத்த கட்டத்தை மாக்ஸ் புரட்சிகரமான ஆர்வத்துடன் எப்பொதும் எதிர்நோக்கிக்கொண்டேயிருந்தார். இதில் அவர் ஹெகலைப் போன்று இருந்தார் என்று சொல்வதிலும் பார்க்க, சென்ற் சைமனைப் போன்று இருந்தார் என்று சொல்வதே பொருத்தமானது. கைத்தொழிலுலகில் நடைபெற்ற முக்கியமான மாற்றங்கள், அவைகளையொத்த சமூக மாற்றங்கள் நடைபெறுவதற்கான சூழ்நிலைகளை—குறிப்பாக மிக வறியவர்களும் தொகையில் அதிகமானேருமான சென்ற் சைமனின் கீழுள்ள வர்க்கத்தினர் சம்பந்தமாய்—ஏற்படுத்துகின்றன. புதிய உற்பத்தி முறைகளுடனும் பரிமாற்ற முறைகளுடனும் சமூக நிறுவனங்கள் இணங்காதவைகளாகி வருகின்றன என்ற உணர்வும் மாற்றத்தை மாக்ஸ் எதிர்நோக்கியதற்குக் காரணமாக அமைந்தது. ஹெகலின் கருத்துக்களுக்கு முரணுன முடிவிற்கு வருமாறு இவைகள் மாக்சைத் தாண்டின. எங்கிள்சின் வார்த்தைகளிற் சொல்வதானுல், 'இன்று நடைமுறையில் இருக்கின்ற சமூக நிறுவனங்கள் நியாயத்திற்கு முரணுனவையாகவும் நீதிக்கு மாறுபட்டவையாகவும் இருக்கின்றன; நியாயம் அநியாயமாகிவிட்டது; சரியாகவுள்ளது தவருனதாகிவிட்டது.'

சென்ற் சைமனிலும் பார்க்க மாக்ஸ் பிரெஞ்சுச் சிந்தனையாளரிடமிருந்து அதிக ஊக்கத்தைப் பெற்ருர். காலத்துக்கொவ்வாத பொருளாதாரத்துடனும் வாழ்க்கை முறையுடனும் தாபித்த உயர்வர்க்கத்தினர் இணைக்கப்பட்டிருக்கின்றனர் என்ற கருத்தை அவர் ஏற்றுக்கொண்டதோடு, பதினெட்டாம் நூற்ருண்டின் ஆரம்ப காலத்தைச் சேர்ந்த சமதர்மவாத எழுத்தாளர்களைப் போன்று, பொருளாதார, சமூக முன்னேற்றத்திற்குத் தடையாக இருப்பதன் மூலம் அவ்வர்க்கத்தினர் தார்மீக முறையிலே தவருன வழியிற் செல்ல முயல்வதாகவும் மாக்ஸ் கருதியதை அதற்கு ஆதாரமாகக் காட்டலாம். மாக்சியத்தின் தார்மீக ஆர்வத்திற் பெரும்பகுதி, சரித்திர முறையில் எவ்வளவுதான் தவிர்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாததாகவிருந்தாலும், ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தினர் அரசியற்றுறையி லும் பொருளாதாரத் துறையிலும் ஆதிக்கம் செலுத்துவது தார்மீக முறையிலே தவறானது என்ற நம்பிக்கையுடன் தொடர்புடையதாகவிருக்கின்றது. சுரண் டல் என்ற மாக்சியப் பதம், பிறரிடமிருந்து கையாளப்பட்ட செல்வம் பற்றிய பொருளாதாரக் கொள்கை, நியாயமற்ற முறையில் அடிமைப்படுத்தல் பற்றிய ஒழுக்க நெறிக் கொள்கை ஆகிய இரண்டு கொள்கைகளேயும் ஒன்றுகச் சேர்க் கின்றது. மப்லி நம்பியதைப்போன்று சமூகத்தின் இரண்டு வர்க்கத்தினரும் தடுக்கமுடியாத ஆசைகாட்டுதலுக்கு உள்ளாகக் கூடிய வகையில், வர்க்கப் பிரிவினை என்ற தோற்றப்பாடு வாழ்க்கை நிலைமைகளைத் தொடர்ந்து திரிபுறச் செய்யமுடியாதவாறு, பொருளாதார வலு, பொருளாதார உற்பத்தி ஆகியவை களின் மூலங்கள் சமுதாயத்திற்குச் சொந்தமாக்கப்படுதல் என்பதே, வர்க்க வேறுபாடற்ற சமூகத்தின் வரைவிலக்கணமாகக் கூறப்பட்டது.

இவ்வாருக, தன்னுடைய இலட்சிய உலகிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு இட மாற்றி வைக்கப்பட்டுள்ள ஹெகலின் முரணறுவாதம், அதனுடைய மூலத்தி லிருந்து முற்றும் வேறுபட்ட உள்ளுறையைக் கொண்டிருந்த முடிவை யுடைய வாதத்திற்கு இடமளித்தது. எனினும், இந்த வாதம், மனிதன் சுதந் திரமாக வாழ்வதற்குத் தேவையான நிலைமைகளைச் சரித்திரத்திலிருந்து தெரிந்துகொள்வதையே தனது இறுதி நோக்கமாகக் கொண்டிருந்தது. தமது கொள்கையைச் சரித்திர முறையான உலோகாயதவாதம் என அழைத்ததன் மூலம் இந்த உருவமாற்றத்தை மாக்ஸ் குறிப்பிடத்தக்க ஒன்ருக்கினுர். அவர் இவ்வாறு அழைப்பதற்கு, புவர்பாக்கின் கொள்கைகளிலிருந்து அவர் பெற்ற ஊக்கமும் ஓரளவு காரணமாகவிருந்தது. இயக்கத்திலே சடப்பொருள்களைத் தவிர்ந்த வேறெவையும் மெய்யானவையல்ல என்று கூறியதும், ரொபஸ்பியாற் கண்டிக்கப்பட்டதுமான பதினெட்டாம் நூற்றுண்டுக்குரிய உயர்குடி மக்களின் உலோகாயத வாதத்திலிருந்து இது வேறுபட்டது. ஆனல், சிந்திக்கும் விலங்கு என்று வரைவிலக்கணம் கூறப்பட்ட மனிதனிடமும் அவன் பிழைத்து வாழ்வ தற்குத் தேவையான சிறந்த நிலைமைகளிடமும் ஒரு வகையான பக்தியை உரு வாக்கியதனுல், உயர்குடியினர் உலோகாயத வாதத்தைப் போலவே இது மதத் திற்கு ஒரு பிரதியீடாக அமைந்தது. முந்திய கிறித்துவர்கள் மதவியலில் நிரப்ப மறந்த இடைவெளியை முற்கால உலோகாயதவாதம் நிரப்பியதைப் போலவே, ஹெகலின் தத்துவத்தை இந்த மனிதாபிமானக் கோட்பாட்டால் மாக்ஸ் பிரதி யீடு செய்தார். மனிதன் இருக்கின்றுன் என்பதை, அதை அறிந்துகொள்வதைக் கொண்டு விளக்கத் தேவையில்லை; ஆனல் அவன் அறிந்து கொள்வதைத்தான் அவன் இருப்பதைக்கொண்டு விளக்கவேண்டியிருக்கின்றது என்று எங்கிள்ஸ் கூறினுர். உலக-ஆன்மா தனது மறைந்துள்ள பகுத்தறிவு என்ற வலுவை மக்களின் வாழ்க்கை மீது பிரயோகிக்கின்றது என்ற ஹெகலின் கருத்து இருந்த இடத்திலே, அதைப்போன்றே அறிவுக்கு எட்டாத வேருெரு வலுவை மாக்ஸ் வைத்தார். மனிதனின் தேவைகளைத் திருப்திப்படுத்தியனவும், முரணறு தருக்கவாத முறையிற் சமூக வாழ்க்கையில் வளர்ச்சியடைந்தனவும், அடித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடுத்துவந்த சரித்திரக் காலங்களிலே தன் உருவங்களையும் அமைப்பையும் மாற்றிக்கொண்டனவுமான பொருளாதார உற்பத்தி விசைகளே அந்த வலுவாகும். 1892 ஆம் ஆண்டில் ஆங்கில மொழியில் வேருக வெளியிடப்பட்டதும் 'Anti-Diihring' என அழைக்கப்படுவதுமான புத்தகத்திலுள்ள தமது மூன்று அத்தியாயங்களுக்கும் எழுதிய முன்னுரையிலே சரித்திர முறையான உலோகாயதவாதத்தின் வரைவிலக்கணத்தை எங்கெல்ஸ் கொடுக்கின்ருர். அந்த வரைவிலக்கணம் கூறுவதாவது :—'சமூகத்தின் பொருளாதார வளர்ச்சி, உற்பத்தி, பண்டமாற்று முறைகளில் ஏற்படும் மாற்றங்கள், இவற்றின் விளைவாகச் சமூகத்திற் காணப்படும் வெவ்வேறு வர்க்கப் பிரிவுகள், இந்த வர்க்கங்கள் ஒன்ருெடொன்று நடத்தும் போராட்டங்கள் ஆகிய எல்லா முக்கியமான சரித்திரச் சம்பவங்களிலும், இறுதிக் காரணத்தையும் யாவற்றையும் இயக்கும் வலுவையும் கண்டுகொள்ள முயலும் சரித்திரப் போக்குப்பற்றிய பார்வை'[1] என்பதே அஃதாகும். டார்வினின் கொள்கையானது உயிரியல் துறையில் ஏற்படுத்திய புரட்சியையொத்த ஒரு புரட்சியை சரித்திரத்துறையில் ஏற்படுத்திய 'Manifesto' (பனுவல்) எனும் நூலுக்கு 1888 ஆம் ஆண்டில் எழுதப் பெற்ற முகவுரையில், இதே கருத்தைத்தான் எங்கெல்ஸ் கூறியிருந்தார்.

மறைபொருளாராய்ச்சித் துறையிலே தெரிவிக்கப்படும் கருத்துரைபோன்ற உருவத்திற்குள் பதுக்கி வைக்கப்பட்ட மாக்சினுடைய சமூகக் கொள்கைபற்றிய இம் முக்கியமான கூற்றை, சமூகச் சட்டம் என்ற நிலையில் வைத்துத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவோ நிராகரிக்கவோ முடியாது. செயற்படக் கூடிய கருதுகோள் என்ற முறையில் (மாக்ஸ் அதற்கு மேல் எதையும் கோரவில்லை) மத்திய காலச் சமுதாயத்திலிருந்து மேற்கு ஐரோப்பா வெளிப்பட்டதன் பின்பு அந்தப் பிரதேசத்தில் ஏற்பட்ட பொருளாதார, சமுதாய மாற்றங்களில் பலவற்றை விளக்க இந்தக் கொள்கை உதவியதனுல், அது மேலும் முக்கியத்துவத்தைப் பெறுகின்றது. மறைவாகவுள்ள ஒரு செல்வாக்கு என்ற முறையிற் பார்க்கும்போது, பொருளாதார உற்பத்தியின் விசைகள் அகிலப் பொதுவான நிலையைப் பெறமுடியா· எதிர்வுகூறலின் அடிப்படை என்ற முறையிற் பார்க்கும்போது, நிகழ்கால அனுபவரீதியான சான்றின் ஆதாரவைப் பெருதவரையில் அவ்விசைகளின் பெறுமதி சந்தேகத்திற்கிடமானதாகவேயிருக்கும். ஆனுல், சரித்திரத்திற்கு விளக்கம்கூறும் அடிப்படைக் காரணிகளாக மாக்ஸ் இந்த எடுகோள்களைப் பெரிதளவு நுண்ணறிடவுனும் பயன்தரு வகையிலும் உபயோகித்தார்.

ஆக்கமுள்ள பொருளாதார விசைகளின் சமூகக் கருவியாக வர்க்கம் தொழிற்பட்டது. சமூகத் தொடர்புகட்கு வரைவிலக்கணம் கூறுவதற்கு வெவ்வேறு கொள்கைகளை உருவாக்கியவர்கள் உபயோகிக்கும் கூட்டப்பதங்கள் எப்பொழு

[1]. Socialism, Utopian and Scientific, edited E. Aveling (London, 1892), p. XIX, இச் சிறு புத்தகம் இத்தலைப்பில், பிரெஞ்சு மொழியிலே 1880 ஆம் ஆண்டில் முதன்முதல் பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகவே இருக்கின்றன. பொருளாதார வர்க்கம் என்ற கருதுகோளை மாக்ஸ் பயன்படுத்துவதை விளங்கிக் கொள்ளுதல், அவரின் கொள்கையைப் புரிந்துகொள்வதற்கு மிகவும் முக்கியமானதாகும். சொத்துடையவர்களாகவோ, அல்லது அடிமைப் படுத்தப்பட்டவர்களாகவோ இருந்தாலும், பொருளாதார வர்க்கம் ஒன்றில் உறுப்பினர்களாக இருப்பதன் மூலமே தனிமனிதர் தாம் விரும்பும் சுதந்திரத்தை அடையவோ இழந்து விடவோ முடியும். தனிமனிதராக இருக்கும்வரையும் குறிப்பிடத்தக்க எதையும் அவர்களாற் செய்துவிட முடியாது. ஹெகலின் கருத்துப்படி, அவர்கள் உண்மையல்லாதவர்கள். ஆனால் ஒழுங்கமைக்கப்பட்ட கூட்டங்களாகவுள்ள பொருளாதார வகுப்பினர், மோதல்கள் மூலமும் முரணறு தர்க்கவாதங்கள் மூலமும் இறுதியில் தமக்கிடையேயிருக்கும் இணக்கமின்மையை வென்று, பிளவுக்கு இனிமேல் இடங்கொடாத சமூகத்திலே, மறைந்திருக்கும் சக்திகள் பகுத்தறிவு முறையிற் கட்டுப்படுத்தப்பட்டுள்ள ஓருலகிற்குள் வருவார்கள். பிரசைகளுக்கிடையே ஏற்படக்கூடிய இந்த ஒற்றுமை, புரட்சிக்கு அப்பாற் காணப்படுவதாகும். ரூசோவின் இலட்சிய நகரை அங்குரார்ப்பணம்செய்து வைக்கும் நடவடிக்கையைப் போன்று சமூகச் சுயமீட்சிக்குப் பின்பு வரும் நடவடிக்கையாகவே இது இருக்கின்றது. இடைப்பட்ட சரித்திர காலத்தில், அடிப்படை உற்பத்திச் சாதனங்களைச் சொந்தமாக்கி அவைகளைத் தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பவர்களுக்கும் அவைகளைச் சொந்தமாக்கிக் கொள்ளாதவர்கட்குமிடையே சமூகம் பிரிக்கப்பட்டிருக்கும். உற்பத்திச் சாதனங்களைச் சொந்தமாக்கிக் கொள்ளாதவர்கள், அக்காரணத்திற்காகவே சொந்தமாக்கிக்கொண்ட வர்க்கத்தினருக்கு அடிமைப்பட்டுத் தங்களின் வயிற்றிற்குத் தேவையான அன்றாட உணவைப் பெறவேண்டிய நிலையிலுள்ளனர். இந்தச் சமூகப் பிரிவினை (இதற்குப் பதினெட்டாம் நூற்றாண்டின் மத்திய பகுதிக் காலத்திலிருந்து ஓரளவு அனுபவரீதியான சான்றை அவர் பெற்றார்) மேலும் மேலும் தீவிரமாகிக் கொண்டுவருவதாக மாக்ஸ் கருதினார். இந்த வரைவிலக்கணத்திற்கு உட்படாத சிறிய கூட்டத்தினர் யாவரும்—சுரண்டும் சிலருக்கும் பாட்டாளி மக்களுக்கும் இடைப்பட்டவர்கள் யாவரும்—ஒன்றில் ஆளும் வர்க்கத்தினருக்கு விசுவாசமாக இருக்கும்படி நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள், அல்லது பொருளாதார விசைகளின் வற்புறுத்துதல் காரணமாகப் பாட்டாளி மக்களுடன் சேரவேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாகின்றார்கள் என்று மாக்ஸ் கருதினார். இந்த முன்னறிவித்தலானது கைத்தொழிற் சமூகத்தின் பிற்கால வளர்ச்சிக்கு ஏற்றதாக இருந்ததிலும் பார்க்க, முரணறுதருக்கவாதக் கொள்கையின் தேவைக்கு ஏற்றதாக இருந்தது.

இணக்கமற்ற இந்தச் சமூகம் ஒருவகை அரசியற் கட்டுப்பாட்டைக் கொண்டிருந்தது என்று ஹெகலைப் போன்றே மாக்சும் கருதுகின்றார். இந்தக் கட்டுப்பாட்டை அரசு என்ற சொல்லாலே அவரும் அழைக்கின்றார். ஒழுங்கு, நீதி என்ற அடிப்படையில் இந்தக் கட்டுப்பாட்டைப் பொருளாதார ரீதியில் உற்பத்தியெதையும் செய்யாத வகுப்பினர் பிரயோகிக்கின்றனர். அத்துடன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்சிகளுக்கிடைப்பட்ட காலத்திலே, சமூகத்திற் புரையோடியிருக்கும் முரண்பாடுகள் பலாத்காரமுறையில் வெளிப்படாதவாறு அவற்றை வெற்றிகரமாக அவர்கள் தடுத்தும் விடுகின்றனர். அரசானது பகுத்தறிவின் பாற்பட்ட கருத்தின் பணியாளாக இருக்கவேண்டிய நிலைமாறி, நடைமுறையிலுள்ள தமது சொந்தத் தொடர்புகளைத் தெய்வத் தன்மைவாய்ந்தனவாகப் பேணிப் பாதுகாப்பதன்மூலம் தமது உயர்நிலையின் விளைவாகக் கிடைக்கப் பெறும் ஊதியங்களைத் தொடர்ந்து பெற உதவும் ஆளும் வகுப்பினரது விருப்பத்தின் வெளிப்பாடாக அமைகின்றது. வர்க்க அக்கறைகளின் மோதலின் விளைவாகவே அரசு உருவாகின்றது; பொருளாதாரச் சமத்துவமின்மை ஏற்படுத்தக்கூடிய பலாத்கார நிலைமையை அடக்குவதற்கு அரசு தேவைப்படுவதே அதற்குக் காரணமாகும். வலிமை மூலமே ஒழுங்கும் கட்டுப்பாடும் நிலைநாட்டப்படுகின்றன. பெரும்பாலோருக்குத் தீங்குவிளையும் வகையிற் சிலரின் சிறப்புரிமைகளைப் பாதுகாக்கும் நேரடியான நோக்கத்துடன் நிலையான இராணுவத்தை வைத்திருத்தல் என்ற கருத்திலே ஐரோப்பியச் சிந்தனையாளர் வலிமையைப்பற்றி எண்ணினார்கள். எல்லாச் சமுதாயங்களிலும் பிரயோகிக்கப்படும் சட்டமும் நீதியும், தெய்விக முலாம் பூசப்பட்ட ஆளும் குழுவினரின் சுயநலமேயல்லாமல் வேறொன்றுமல்ல. மதமும் இந்த வெளிவேட அமைப்பின் ஒரு பகுதியே. முனைப்பற்ற முறையிற் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும் என்ற மனப்பான்மையை மக்களிடம் ஏற்படுத்துவதே அதனுடைய கடமையாகும். முதலாளித்துவ சமூகத்தின் உத்தியோக பூர்வமான பிரதிநிதி என்று எங்கெல்ஸ் அரசைப்பற்றிக் குறிப்பிடுகின்றார். "Manifesto" என்ற புத்தகத்தில் நிர்வாக அரசாங்கத்தை 'முழு நடுத்தரவகுப்பினரதும் பொதுவான விவகாரங்களை முகாமை செய்யும் செயற்குழு' என்று அவர் வர்ணிக்கின்றார்.

ஒரே நேரத்திலே பொருளாதார முறைகளுடன் தொடர்பற்றதாகவும் ஆனால் சுரண்டல் நடைபெறும் குறிப்பிட்ட காலப் பகுதியிலே சுரண்டலுக்கு இடமளிப்பதாகவும் இருக்கும் விசேட சிறப்பியல்பை அரசு பற்றிய கருதுகோள் கொண்டிருப்பதனால், பொதுவுடைமை அரசியற் சிந்தனைக்கு விளக்கம் கூற முயலும் போது, ஓரளவு கருத்துக் குழப்பம் ஏற்படுகின்றது. இந்த அர்த்தத்தில் அஃது ஓர் இடைக்கால அரசியற் கொள்கையாகவே இருக்கின்றது. அரசு, சமூகம் முழுவதையும் தன்னுடைய கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டுவருகின்ற போதிலும் எல்லா உறுப்பினர்களினதும் பொது அக்கறைக்கு அது பிரதிநிதித்துவம் வகிப்பதில்லை. எனவே, அது ஒதுக்கித்தள்ளப்படவேண்டியதாகவே இருக்கின்றது. புரட்சியின் பின் தோன்றும் சமூகத்திலே எந்தவிதமான அரசியல் தொடர்பும் அனுமதிக்கப்படுவதில்லை என்று பொதுவுடைமைக் கொள்கை கூறுவதாக இதைக் கொண்டு சொல்லிவிடலாகாது. உயர் வகுப்பினரின் நன்மைகட்கு மாத்திரமே பயன்படுத்தப்படுவதாகச் சொல்லப்படும் அடக்குமுறைப்பலமாக அது இருக்கமாட்டாது. முதலாளித்துவ சமூகங்களில் உருவாகிவரும் நெருக்கடி நிலைகள், புரட்சி நடைபெறுவதற்கான உச்ச வேகத்தைப் பெற்று, பாட்டாளி மக்களின் சமுதாயம் தோன்றுவதற்கு வழிகோலும் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவரீதியாக மாக்ஸ் நம்பினர். காரணனுமான முறையாக, இதுதான் எப்பொழுதும் நடைபெறுகின்றதென்றும், இதுதான் எப்பொழுதும் நடைபெற வேண்டுமென்றும் அவர் நம்பினர். மையமான இடத்திலே சமூகக் கட்டுப்பாடிருப்பதை அவர் எதிர்க்கவில்லை. ஆனல் அக்கட்டுப்பாடு பலாத்காரமான முறையிலும், பிரசைகள் பெரும்பாலோரின் மகிமைகட்கு முரணுகவும் பிரயோகிக்கப்படலாகாது என்பதில் அவர் திடமான கருத்துக் கொண்டிருந்தார். எனவே புரட்சி நடந்தேயாகவேண்டும். ஆனல், புரட்சி நடைபெறுவதற்கான சிறந்த சூழ்நிலை ருஷியாவைப்போன்ற அதிகம் வளர்ச்சி பெருத நாட்டிலும் காணப்படக்கூடும் என்பதை மாக்ஸ் மிகவும் தாமதமாகவே உணர்ந்து கொண்டார். வர்க்க முரண்பாடுகளின் இறுதித் தீர்வு புதிய சமூகத்.தொகுப்பின் மூலமே நடைபெறுதல் வேண்டும் என்ற முடிவு, சம்பவங்களின் கோலங்களை நன்ருகப் புரிந்துகொண்டவர்கள் நல்ல காரியத்திற்கு உதவுவதை எந்தவிதத்திலும் தடைசெய்யவில்லை. புரட்சி வழியைப் பின்பற்றும் கட்சியினர் என்ற முறையிலே பொதுவுடைமைவாதிகட்குப் 'பாட்டாளி இயக்கத்தினுடைய போக்கின் தன்மையையும், சூழ்நிலைகளையும், இறுதியாகக் கிடைக்கப்பெறும் பொதுப் பெறுபேறுகளையும் தெளிவாக விளங்கிக் கொள்ளமுடியும்.'[1] இதிலே பாட்டாளி மக்களுட் பெரும்பான்மையோரிலும் பார்க்க அனுகூலமான நிலையிற் பொதுவுடைமையாளர் இருக்கின்றனர். பொதுவுடைமைக் கட்சியின் இந்த விசேட நிலைமைபற்றிப் பிற்காலத்தில் லெனினும் வற்புறுத்திக் கூறியுள்ளார்.

நடுத்தர வகுப்பினருக்குச் சாதகமாக இருப்பவர்கள் அகற்றப்பட்ட பின்பு, மத்திய கட்டுப்பாட்டை அனுமதிப்பது நன்மைபயப்பதாக இருக்குமா என்ற விடயத்திலே, தொழிலாளர் வர்க்கத்தின் விடுதலைக்காக உழைத்த மற்றவர்கள் மாக்சை வன்மையாக எதிர்த்தார்கள் என்பதை நினைவிலிருத்திக் கொள்வது பயன்தருவதாகவிருக்கும். உதாரணமாக, ஆயிரத்தெண்ணூற்று நாற்பதாம் ஆண்டுகளில் இப்பிரச்சினைபற்றிப் பிரவுத்தனுக்கும் மாக்சிற்குமிடையே நேரடியாகக் காரசாரமான வாக்குவாதமொன்று நடைபெற்றது. சமூகத் தொடர்புகளை அரசாங்கங்கள் திரிவு பெறச் செய்கின்றன என்பதையும், வெவ்வேறு தொகுதிகளின் பொருளாதார நடவடிக்கைகள் ஓரளவு பிணக்கையும் எதிர்ப்பையும் உருவாக்கக் கூடும் என்பதையும், தொழிலாளர் வர்க்கத்தினர் கட்டுப்பாட்டிற்குட்படுத்தப்பட வேண்டிய தேவையில்லை என்பதையும் பிரவுத்தன் ஏற்றுக்கொண்டார். ஆனல் ஹெகலைப் போன்று ஒரு தொகுப்புக்கோளை அடைவதுபற்றி அவர் அக்கறை காட்டவில்லை. முழுப் பொருளாதார வகுப்பிலும் பார்க்கக் குடும்பமே முக்கியமான கூருக இருப்பதாக நம்பிய பிரவுத்தன், சமூகத்தின் அக்கறைகளிலும் நடவடிக்கைகளிலும் காணப்படும் வேறுபாடுகளை வரவேற்ருர். எனினும், புகழ்பெற்ற புரட்சியின் பகுத்தறிவின்பாற் பட்ட விடுதலை என்ற கருத்து பிரவுத்தனின் மனத்தைப் பெரிதும் ஈர்த்தது. அத்துடன், சுதந்திரமானது ஒழுங்கின் குழந்தை எனக் கொள்வது தவறு என்றும், அது ஒழுங்கின் தாயாகவே கொள்

[1] **Communist Manifesto, II**

ளப்படல் வேண்டும் என்றும் பிரவுத்தன் கருதினர். அவரின் ஆதரவாளர்கள் ஆட்சியறவுக் கொள்கையை நோக்கிச் செல்லவாரம்பித்தனர். அத்துடன், பிற்கால மாக்சியக் கொள்கைக்குரிய ஒரே அமைப்பையுடைய சமுதாயத்தையும் நிராகரித்தனர். நடுத்தரக் கீழ் வகுப்பைச் சேர்ந்தவர் என்று மாக்ஸ் பிரவுத்தனைக் கண்டித்தார். ஆனால் மாக்சின் சொந்தக் கொள்கையின்படி பார்த்தால், பிரவுத்தன் நடுத்தரக் கீழ் வகுப்பைச் சேர்ந்தவராக இருந்தார் என்பதிற் சந்தேகமெதுவும் கிடையாது. எனினும், இறுதியில் ஆளும் வர்க்கத்தினுலோ அல்லது பாட்டாளி வர்க்கத்தினுலோ உறிஞ்சப்பட்டு விடும் என்று மாக்ஸ் கூறிய இந்த வகுப்பினரே மேற்கு ஐரோப்பிய அரசியலில் மேலும் மேலும் முக்கியமான பங்கை வகித்து வரலாயினர்.

இதற்கு மாருக, படைபலத்தைத் தன்னுடைய உதவிக்கு அழைக்கக் கூடிய ஓர் ஒழுங்கமைப்பு முறைமை என்று வரையறுக்கப்பட்ட அரசானது, புரட்சிகரமான செய்முறையில் முக்கிய பங்கை வகிக்கவேண்டியிருந்தது என்று மாக்சும் அவர்தம் சீடர்களும் நம்பினர். அடக்குமுறைச் சத்தியைப் பிரயோகிக்கும் பொருளாதார அதிகாரமாக அரசியல் அதிகாரத்தை அவர் எண்ணியதனுல், 'நடுத்தர வர்க்கத்தினரிடமிருந்து படிப்படியாக மூலதனம் முழுவதையும் பறித்து எடுத்துக்கொள்வதற்கும், உற்பத்திச் சாதனங்கள் யாவற்றையும் அரசின் கையில், அதாவது ஆளும் வர்க்கமாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ள பாட்டாளிகளின் கையில் ஒருமுகப்படுத்துவதற்கும்'[1] அரசியல் ஆதிக்கம் என மாக்ஸ் அழைத்த ஆதிக்கத்தைப் பயன்படுத்துவதே, வெற்றி பெற்ற பாட்டாளி வர்க்கத்தின் முதலாவது நடவடிக்கையாகவிருக்கும். புரட்சிகரமான செய்முறை முற்றுப்பெறும் வரையில் (அதாவது, வர்க்க வேறுபாடுகள் யாவும் மறைந்தொழிந்து, சமுதாயம் முழுவதும் உற்பத்திச் சத்தியைத் தன்னுடைய கட்டுப்பாட்டிற் கொண்டு வரும் வரையில்), 'அரசாங்க அதிகாரம்............தன்னுடைய அரசியல் இயல்பை இழந்துவிடாது'. இதை வேறு வார்த்தைகளிற் கூறுவதானுல், தகராறுகளை அடக்கியொடுக்குவதற்குப் பலத்தைப் பயன்படுத்தும் அவசியம் அற்றுப்போகும் வரையில் அரசாங்க அதிகாரம் இருந்தே தீரும். ஆக்கச் சாதனங்களைச் சமூகம் பொறுப்பேற்றுக்கொள்ளும்போது செய்முறையின் சமூக இயல்பைப்பற்றி உற்பத்தியாளர்கள் குறைவற்ற முறையிலே தெரிந்து கொள்ளுகின்றமையினுல், குழப்பத்திற்குக் காரணமாக முன்பு இருந்தவை உற்பத்திக்கு ஊக்கமளிப்பவையாக மாறிவிடும் என்று எங்கிள்ஸ் கூறுகின்றார்.

இந்த இடைப்பட்ட காலம், பாட்டாளியின் சர்வாதிகார காலம் என அழைக்கப்படுகின்றது. இது புரட்சியின் இறுதி நிறைவேற்றத்திற்கு முன்னோடியாக இருப்பதாகக் கருதப்பட்டது. இந்த இறுதி நிறைவேற்ற நிலை அடையப்பெற்றதும், அடக்குமுறை நடவடிக்கைகள் யாவும் நின்றுவிடுவதோடு யாவரும் பூரண விடுதலையையும் அனுபவிப்பர். இந்த இடைக்காலம் எந்த அளவிற்கு

[1] **Communist Manifesto, II**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்டதாகவிருக்கும் என்பது பற்றி மாக்ஸ் திர்க்கதரிசனம் கூறமுயலவில்லை. ஆனால், 1917 ஆம் ஆண்டில் நடந்த ரூஷியப் புரட்சிக்குமுன் எழுதப்பட்ட பிரசுரமொன்றில், 'முதலாளித்துவத்திற்கும் 'வகுப்பற்ற சமூகத்திற்கும்' இடைப்பட்ட சாத்திர காலம் முழுவதையும் பொதுவுடைமைக்காலம்'[1] என்று லெனின் குறிப்பிடுகின்றார். 'இந்த மாறுநிலைக்காலம் மிகவும் நீண்டதாக விருக்கும் என்பது வெளிப்படை'[2] என்று அவர் கூறுகின்றார். அரசு உலர்ந்து விடுவதைத் தவிர்க்க முடியாது என்பது பற்றிப் பேசுவது சரியானதாக இருக்கின்றபோதிலும், அரசு உலர்ந்து வீழ்ந்துபடுவதற்கு எவ்வளவு காலம் பிடிக்கும் என்பதற்கு எந்தவிதமான சான்றும் கிடையாது. லெனின் தம்மைப் பொறுத்த வரையில்' 'எவ்வளவு காலஞ் செல்லும் என்ற பிரச்சினையை அல்லது என்ன முறையில் உலர்ந்துபோகும் என்ற பிரச்சினையை முடிவு செய்யாமல் விடுவதே சிறந்தது'[3] என்று கருதுகின்றார்.

அரசைப் பற்றி எழுதும்போது இயந்திரம் என்ற பதத்தை லெனின் அடிக்கடி பயன்படுத்துகின்றார். அடக்குமுறைச் செயலையே தனது சிறப்பியல்பாகக் கொண்டதாகவும், விடுதலையின் எந்த நிலைமையோடும் ஒத்துப் போகாததாகவும் இருக்கின்ற அரசைப் பற்றிச் சிந்தித்த லெனின், சில வேலைகளைச் செய்விப்பதற்குப் பயன்படுத்தப்படும் ஒருவகைக் கருவியாகவே அதை எண்ணினார். சுதந்திர அரசு அல்லது மக்களின் அரசு என்று அரசைப்பற்றிப் பேசுவதே ஒழுங்கற்றது என்று அவர் கருதினார். எங்கிள்ஸ் கூறியதைப் போன்று, விடுதலை என்ற பதத்தை அரசு என்ற பதத்துடன் சேர்த்துப் பிரயோகிக்க முடியாது. 'விடுதலை இல்லாதபோது அரசு இருக்கிறது; விடுதலை இருக்கிறபோது அரசு இருக்கமுடியாது.'[4] ஆனால் இந்த நிராகரிப்பு ஓரளவு மொழியியல் சம்பந்தப்பட்டதாகவே இருக்கின்றது. நடுத்தர வர்க்கத்தினரின் சனநாயகம் பாட்டாளி மக்களின் சனநாயகமாக மாறும்போது அரசு 'மேலும் உண்மையில் அரசாக வில்லாத வேறொன்றாக' உருமாற்றமடைந்துவிடும் என்று அவர் வாதிப்பதே அதற்குக் காரணமாகும். தாம் உருவாக்க உதவிய புதிய அரசியல் தோற்றத்தை விவரிப்பதற்கு லெனினிடம் போதிய வார்த்தைகள் இருந்தில. பாட்டாளிகளின் சர்வாதிகாரம் நடைபெறும் காலத்திலும் புதிய ஒழுங்கை அடைந்ததன் பின்பும் ஏதாவதோர் அரசியல் தொடர்பு இருக்கவேண்டும் என எதிர்பார்க்கப்பட்டதில் எமக்கு எந்தவிதமான சந்தேகமும் இருக்கமுடியாது. சர்வாதிகாரம் என்பதைத் தலைமை தாங்குதல் என்று அழைப்பதே சிறந்ததாகவிருக்கும். சமூகவுடைமைப் பொருளாதாரத்தை ஒழுங்கு செய்யும் பணியிலே, பொது மக்களுட் பெரும்பகுதியினருக்குக் கட்சி தலைமை தாங்கக்கூடிய வகையில் மத்திய நிறுவனம் அமைக்

[1] State and Revolution (Little Lenin Library, London, 1933). லெனின் இதனை 1917 ஒகத்து–செத்தெம்பர் மாதங்களில் எழுதினார். இது 1918 இல் சிறு நூலாக முதன்முறை பிரசுரிக்கப்பட்டது.

[2] State and Revolution, p. 64.

[3] State and Revolution, p. 73

[4] State and Revolution. p. 73

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்படல் வேண்டும் என்று ரூசோ வற்புறுத்தியுள்ளமையே அதற்குக் காரண மாகும். புரட்சிக்குப் பின்பு இந்தப் பணியைத்தான் ரூஷிய அரசியலிற் கட்சி செய்து வருகின்றது.

சுதந்திரமான, வகுப்பற்ற சமூகத்திற்குரிய இறுதியான நிலைமை பற்றி ஆழ மாகக் கூறப்படவில்லை. கருத்தியற் கற்பனைக் கொள்கைகளை நிராகரிக்கும் போக்கை மாக்சிய வாதிகள் கொண்டிருக்கின்றபோதிலும், வர்க்கமற்ற சமூகம் பற்றி அவர்கள் தீட்டியிருக்கும் சித்திரம், பதினெட்டாம் நூற்றுண்டிலிருந்த பொதுவுடைமைக் கனவுருக்காண்பவர்களின் கற்பனைப்பண்பை ஓரளவு கொண் டிருக்கின்றது. சமூகத் தொடர்புகளிலே அரசு தலையிடுவது முற்றுக அற்றுப் போகும் வரையும் அல்லது உலரும் வரையும் அரசு தலையிடுவதற்கான அவசியம் படிப்படியாகக் குறைந்துகொண்டு போகும் என்று எங்கிள்ஸ் எதிர்பார்த்தார். வழக்கமாக மேற்கோள் காட்டப்படும் வசனமாகிய 'விடயங்களை நிர்வகிப்பதனு லும் உற்பத்தி முறைகளை நடத்துவதினுலும் ஆட்களின் அரசாங்கம் பிரதியீடு செய்யப்படும்'[1] என்பதன் மூலம் எங்கிள்ஸ் இந்தக் கருத்தைத் தெரிவித் தார். விஞ்ஞானிகளாலும் பொருளியல் வல்லுனர்களாலும் நடத்தப்படும் நிர் வாகம் ஓரளவு அரசியல் தன்மையற்றதாக இருக்கும் என்ற அர்த்தத்தில், சென்ற் சைமனும் இதைப்போன்ற கருத்தைக் கொண்டிருந்ததாக எங்கிள்ஸ் கூறுகின்ருர். ஆனுல். விஞ்ஞானிகளும் பொருளியல் வல்லுனர்களும் நடத்தும் ஆட்சி அடக்குமுறை நடவடிக்கைகளை மேற்கொள்ளமாட்டாது என்று கொள் ளப்படுவதினுல், மிகவும் குறுகிய அர்த்தத்தில் மட்டுமே அவ்வாட்சி அரசியல் தன்மையற்றதாகவிருக்கும். நிர்வாக முறை முழுவதையும் மிகவும் எளிதாக்கும் போக்கை லெனின் கொண்டிருந்தார். நிர்வாகத்தைப் 'பதிவு செய்தல், கோவை செய்தல், சரிபார்த்தல்' ஆகியவற்றுக்குட் கொள்ள முடியும் என்றும். 'எழுத்து வாசனையுள்ள ஒவ்வொருவராலும் அதை இலகுவாகச் செய்யமுடியும்' என்றும் அவர் சொன்ஞர். எனவே, இந்த வேலைக்குச் சாதாரண தொழிலாளிக்குக் கொடுக்கப்படும் சம்பளம் மட்டுமே கொடுக்கப்படவேண்டும் எனவும் அவர் வற்புறுத்தினுர். 'பலத்தை உபயோகிக்காமலும், கீழ்ப்பட்டிருக்காமலும் சமூக வாழ்க்கையின் அடிப்படை நிலைமைகளைப் பின்பற்றி ஒழுக மக்கள் பழகிவிடு வார்களாகையினுல், ஒரு மனிதன் மற்றவனுக்கு அடிமைப்பட்டிருப்பதும், மக்கள் கூட்டத்தின் ஒரு பகுதியினர் மற்றப் பகுதியினருக்கு அடங்கி நடப் பதும் மறைந்துபோய்,'[2] அரசாங்கத் துறை சுருங்கிக்கொண்டேபோகும் என்பது லெனின் கருத்துக்களில் மிகவும் முக்கியமானதொன்ருகும். அங்கு மிங்குமாகச் சில தனிமனிதர் சமூகத்திற்குத் தீங்கு விளைவிக்கக் கூடியவகையில் நடந்துகொள்ளக்கூடும் என்பதை அவர் எதிர்பார்த்தார். ஆனுல், இந்தத் தவ ருன நடத்தைகளுக்குக் காரணமாகவிருக்கும் சமூகக் குறைபாடுகள்—மக்கள் கூட்டத்தினரிடையே நிலவும் வறுமை, தேவை, சுரண்டல் ஆகியவை—நீக்கப் படும்போது, இந்த அளவு சமூக இணக்கமின்மைதானும் நீங்கிவிடும்.

[1] Socialism, Utopian and Scientific, pp. 76–77

[2] State and Revolution, p. 63.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களுக்கிடையே நிலவும் தொடர்புகள் சம்பந்தப்பட்ட இலகுவான அடிப் படை விதிகளைப் பின்பற்றி ஒழுகும் தேவை ஒரு பழக்கமாக மாறிய பின்னரே, பொதுவுடைமைச் சமூகத்தின் மிகவுயர்ந்த கட்டம் தோன்றும் என்று லெனின் கருதுகின்றார். ரூசோவின் வார்த்தைகளிற் கூறுவதானால், இந்த நேரத்திற்றான் சுதந்திரமாக இருக்குமாறு எவரையும் நிர்ப்பந்திக்கத் தேவையில்லை. இறுதி யாக ஏற்படும் பொதுவுடைமைக் கனவுலகிலே சமூக, பொருளாதார சக்திகளைப் பகுத்தறிவு முறையிற் புரிந்துகொள்ளல் ஒரு முக்கியமான காரணக்கூறாகும். தொழிற்படும் சமூகச் சக்திகளை நாம் நன்றாகப் புரிந்து கொண்டு அவைகளை எமது விருப்பத்திற்குக் கீழ்ப்படியச் செய்யும்வரையும், இயற்கைச் சக்திகளைப் போன்று அவையும் அழிவையே தருவனவாகவிருக்கும் என்று எங்கிள்ஸ் கூறு கிறார். அப்பொழுதுதான் தனித்து வாழ்வதற்காக ஒவ்வொருவரும் நடத்தும் போராட்டம் மறையும்; வெறும் மிருகத் தன்மையிலிருந்து உண்மையான மனித நிலைமைக்கு அல்லது சூழ்நிலைக்கு மனிதன் உயர்த்தப்படுவான். 'இதுவரையும் இயற்கை, சரித்திரம் ஆகியவைகளால் மிகவும் தேவையானவை எனத் திணிக்கப் பட்டிருந்த மனிதனின் சொந்த சமூக ஒழுங்கமைப்புக்கள், இப்பொழுது அவ னின் சொந்த சுதந்திரமான நடவடிக்கைகளின் விளைவாக ஏற்பட்டவையாக மாற்றமடைகின்றன. இதுவரை சரித்திரத்தை ஆட்சிபுரிந்த வெளியுலகைச் சார்ந்த புறவியலான சக்திகள் இப்பொழுதுதான் மனிதனின் கட்டுப்பாட்டிற் குள் வருகின்றன. அந்த நேரத்திலிருந்துதான் மேலும் மேலும் உள்ளுணர்வுடன் மனிதன் தானாகவே தன்னுடைய சரித்திரத்தை உருவாக்குவான். அந்த நேரத் திலிருந்துதான் அவன் இயக்குவித்த சமூகக் காரணங்கள் முக்கியமாகவும் முன் னரிலும் பார்க்க அதிக அளவிலும் அவன் விரும்பிய விளைவுகளை ஏற்படுத்தும். தேவை எனும் இராச்சியத்திலிருந்து விடுதலை என்னும் இராச்சியத்திற்கு மனி தன் உயருவதே இஃதாகும்.'[1]

பாட்டாளி மக்களின் சனநாயக ஆட்சிக் காலத்திலும், இறுதியில் விடுதலை பெற்ற சமுதாயத்திலும் நிலவிய சமூக அமைப்பைப்பற்றித் திடமற்ற வார்த்தை களில் எங்கிள்சும் லெனினும் விவரித்துள்ளமை, சரித்திரத்தின் ஒரு கால கட் டத்திற்கு (அஃது ஒரு முடிவிற்கு வருவதை நாம் இப்பொழுது பார்க்கின்றோம்) பொருத்தமான அரசியற் சிந்தனை வகைகளிலிருந்து தப்புவதற்கு மேற்கொள் ளப்பட்ட முயற்சியாகும் என்பதை முக்கியமாகக் காட்டுகின்றது. 1914 ஆம் ஆண்டில் அக்கட்டத்தின் முடிவுகாலத்தை லெனின் கண்டார். அவரின் அந்தக் கருத்து சரியானது என நிரூபிக்கப்படக்கூடும். நாம் இந்தப் புத்தகத்திற் கூறிய மற்ற இலட்சியங்களைப் போன்று பொதுவுடைமை இலட்சியமும் கனவுலக இலட் சியமாக இருக்கக்கூடுமென்பதனாலும், நவீனகாலக் கைத்தொழிற் சகாப்தத் திற்கு உகந்த அரசியல் அமைப்புக்கள் உருவாக்கப்படுவதை நிருவகிக்கும் சமூக, பொருளாதார நிலைமைகள் மாக்ஸ் கூறியவைகளிலிருந்து உண்மையிலேயே வேறுபட்டனவாக இருக்கக்கூடுமென்பதனாலும் இதன் முக்கியத்துவம் சிறிதும்

[1] Socialism, Utopian and Scientific, p. 82.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைந்துவிடவில்லை. தற்கால ரூஷியாவை நாம் எந்தப் பெயரால் அழைத் தாலும் போடின் காலத்திலிருந்து நிலவிவரும் மரபுவழிவந்த அர்த்தத்தின்படி, அதை நாடு—அரசு என அழைக்க முடியாது என்பது உண்மையானதாகவே இருக்கின்றது. நாம் நேர்மையானவர்களாக இருந்தால், ஐக்கிய அமெரிக்க இராச்சியங்களும் நாடு—அரசு அல்ல என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண் டும். இருபதாம் நூற்ருண்டின் நடுப்பகுதியில் அரசியன்முறையிலே பிரித்தானிய பொதுநலவாயம் எவ்வாறிருந்தது என்பதை விவரிக்கவோ வரையறுக்கவோ முடியாது. இயக்க ஆற்றலையுடைய, மாறிவரும் உலகிலே சம்பந்தப்பட்ட சமூக, பொருளாதாரக் காரணிகள் யாவும் ஒன்றையொன்று தாக்குகின்றன என் பதையும் ஒன்றிலொன்று தங்கியிருக்கின்றன என்பதையும் மாக்சிடமிருந்து நாம் கற்றுக்கொள்கின்ருேம். இந்தத் தாக்கங்களிலிருந்து அரசியலுருவங்கள் விதிவிலக்குப் பெற்றவையல்ல.

தொடர்ந்து நடைபெறும் விஞ்ஞான கைத்தொழிற் புரட்சிகளின் தாக்குதல் கள் (கைத்தொழில் நிலையங்களில் மட்டுமல்லாமல் உலகம் முழுவதுமே விஞ் ஞான, கைத்தொழிற் புரட்சிகள் மிகவும் விரைவாக இன்னும் நடைபெறுவ தோடு சிக்கல் மிகுந்தவையாகவும் மாறிவிட்டன) சமூக மாற்றங்கட்கு இலகு வான முறையிற் கொடுக்கப்படும் விளக்கங்களைக் காலத்திற்கொவ்வாதவை யாக்கி விடுகின்றன. தற்கால அரசியல் ஆராய்ச்சிகளில் அரிஸ்தோத்திலின் நோக்கு என்று அழைக்கக்கூடிய நோக்கிற்குத் திரும்பிச் செல்லும் முயற்சியை எம்மால் அடையாளம் கண்டுகொள்ளமுடிகின்றது ; அதாவது, இலட்சிய நோக் கங்களிலிருந்து கவனம் திருப்பப்பட்டு, அல்லது இலட்சியங்களை அப்படியே ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கு மாற்றப்பட்டு, அதற்குப் பதிலாகக் கொடுக்கப் பட்ட நிலைமைகளின் கீழ் எதை அடையமுடியும் என்று ஆராய்ந்து பார்ப்ப தில் அதிக கவனம் செலுத்தப்படுகின்றது. சமூகவியல், உளவியல், பொருளியல் ஆகியவைகளின் அண்மைக்காலப் புதிய ஒழுங்குவிதிகள், அவற்றிற்கு முன்பு அரசியற் பொருளாதாரம் என்ற பெயர் சூட்டப்படுவதற்குக் காரணமாக விருந்த அரசியற் சட்டப்படலிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு, உண்மையான தரவுகளைச் சேகரிப்பதிலும்,மனித நடத்தைகள், எதிர்த்தாக்கங்கள் ஆகியவை களின் போக்குக்களை மதிப்பிடுவதிலும் தங்கள் கவனத்தைச் செலுத்துகின் றன. எனவே, சமூக நிறுவனங்களுக்கும் அவை தொழிற்படுவதற்குத் தேவை யான நிலைமைகளுக்குமிடையேயுள்ள தொடர்புகள்பற்றிய கோலங்கள் தெளி வாக்கப்படுகின்றன. முடியுமாளுல், அவற்றை விளங்கிக்கொள்ளவுஞ் செய்யலாம்.

இருபதாம் நூற்ருண்டுச் சமூகத்திற்குரிய அக்கறைகளிலே தேவைப்படும் சீர்ப் படுத்தல்களைச் செய்யவேண்டியிருப்பதனுல், மனிதனின் நோக்கங்கள், இலட்சி யங்கள் ஆகியவைபற்றி முற்காலத்திலிருந்துவந்த அக்கறைகளைக் கவனத்தி லெடுக்காமல் விடமுடியாது. நாம் ஆராய்ந்து பார்த்த அரசியற் சிந்தனைகளுள் எந்த ஒன்ருவது இறந்துபட்டுத் தன்னுடைய செல்வாக்கை இழந்துவிட்டது என்று சொல்லமுடியுமா என்பது சந்தேகமே. சிக்கல் மிகுந்த இன்றைய நிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைகள் அரசியற் சிந்தனை என்னும் துறையில் மூன்று வெவ்வேறான பணிகளை அங்கீகரிக்கும்படி எம்மை நிர்ப்பந்திக்கின்றன. முதலாவதாக, பெறுமதிகளின தும் நோக்கங்களினதும் முறைமைகளைப் பற்றி நாம் பெற்றுள்ள உணர்வை யும் அறிவையும் தெளிவாக்குதல் வேண்டும். பெறுமதிகளினதும் நோக்கங்களி னதும் இந்த முறைமைகள்தாம்—அவைகள் உண்மையானவைகளா அல்லது அவைகளை நிச்சயமாகத் தெரிந்துகொள்ளமுடியுமா என்பது கவனத்திற்கு எடுக்கப்படுவதில்லை—பொது நடவடிக்கைகளில் ஈடுபட மனிதனுக்கு அதிகார மளிப்பதோடு, சமூகத்திற்கு விசுவாசமாக இருக்கவும் சேவை செய்யவும் தூண்டுதலளிக்கின்றன. இரண்டாவதாக, உண்மைகள் பற்றிய எமது அறிவை நாம் அதிகரிக்கச் செய்யவேண்டும். இறுதியாக, ஹியூமிடமிருந்து நாம் கற்ற பாடத்தை மனத்திலிருத்திக்கொண்டு, தெரிநிலை விடயங்களையும் ஏவல்பற்றிய விடயங்களையும் ஒன்றாக நினைத்து ஒருபோதுமே குழப்பமடையலாகாது. சமூக வியல்பற்றிய எமது ஆய்வின்போது இந்த இரு குறிக்கோள்களுக்குமிடையே சமநிலையை நிலைநாட்டுதல் வேண்டும். அவைகட்கிடையேயுள்ள பாகுபாட்டை மிகையாக வற்புறுத்தவோ, அவைகட்கிடையேயுள்ள தாக்கத்தைக் குறைத்துக் காட்டவோ கூடாது. ஒவ்வொரு குறிக்கோளும் வெறும் கனவாகப் போய் விடாதபடி அதற்குரிய நிபந்தனைகளுடன் தொடர்பு படுத்தப்படுதல் வேண்டும். அக் குறிக்கோள்களுக்கு ஒளியூட்டும் மனித இலட்சியங்களைக் கொடுக்காமல் நிபந்தனைகளை மட்டும் கொடுத்தால், ஊக்குவிக்கப்பெறாத வெறும் பட்டிய லாகவே அவை அமையும்.

'கற்பனைச் சக்தியை வளர்ப்பதிலேயே அரசியற் சிந்தனையின் உண்மையான வளர்ச்சி தங்கியிருக்கின்றது' என்று முதலாவது உலகப் பெரும்போரின் முடி வின்போது எல். ரி. ஹொப்கவுஸ் எழுதினார். எல்லாவற்றிற்கும் மேலாக, நாம் இக்கட்டுரையிலே சுருக்கமாக ஆராய்ந்த புத்தகங்களை எழுதிய சிறந்த சிந் தனையாளர்களிடம் இந்தப் பண்பைச் சிறப்பாகக் காணமுடிகின்றது. முந்திய காலத்தைப் போலவே இன்றும் அந்தப் பண்பு மிகவும் தேவைப்படுகின்றது. எமது அரசியல் நிறுவனங்களை எமது தார்மீக, பொருளாதார நோக்கங்களு டன் இணங்கச் செய்வதில் முன்பு எப்பொழுதுமே ஏற்படாத பெரும் பிரச் சினையை நாம் எதிர்நோக்கியுள்ளோம். இதைப் போன்ற முந்திய உதாரணங் களைக் காட்டிலும் இது மிகவும் பரந்த நோக்குடையதாக இருக்கின்ற போதி லும், தத்துவமுறைப்படி பார்க்கும்போது இது முற்றும் புதிய பிரச்சினையாக இருப்பதாகக் கூறமுடியாது. முறைப்படி பார்க்கும்போது, நாடு—அரசினது காலக்கட்டத்தின் முடிவுப்பகுதி அதன் ஆரம்பப் பகுதியிலுள்ள பல பொது அம் சங்களைக் கொண்டதாகவிருக்கின்றது. மத்தியகாலத்தின் இறுதிக் கட்டத்திலே முதிராநிலையில் இருந்த நாடு—அரசுகள் என்ற அரசியல் உலகை, அகிலத்துக் கும் பொதுவான திருச்சபையுடன் தனது அதிகாரத்தைப் பகிர்ந்து கொள் ளும் சாம்ராச்சியம் என்ற கருத்தியல் அமைப்பிற்குள் வைத்து விளங்கிக் கொள்ளவேண்டிய இடர்ப்பாடு அரசியற் கொள்கைத்துறையிற் காணப்பட் டது. தேசிய இறைமையின் தேவைகட்கு மட்டுமென வரையறுக்கப்பட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுள்ள அரசியற் கருதுகோள்களின் உதவியுடன், ஆரம்பநிலையிலுள்ள சர்வதேச சமூகத்தைப் புரிந்து கொள்ளவேண்டிய கடினமான கடமை இன்று எம்மை எதிர்நோக்கியுள்ளது.

காலத்திற்கேற்றதாக இல்லாவிட்டாலும், இக்காலக் கொள்கைப் பிரச்சினைகட்கு மிகவும் பொருத்தமானதாகக் காணப்படும் பதினெட்டாம் நூற்றுண்டைச் சேர்ந்த தத்துவஞானி ஒருவரின் கருத்துரையை மேற்கோள் காட்டி இக்கட்டுரையை முடிப்பது மிகப் பொருத்தமானதாகத் தோன்றுகின்றது. கான்றின் 'முன்னேற்றத்தின் தத்துவம்' (Principle of Progress) என்ற புத்தகத்திலிருந்து இவ்வார்த்தைகள் எடுக்கப்பட்டுள்ளன: "நாடுகள் அனைத்தும் தங்களுக்குட் கொண்டுள்ள தொடர்புகளிற் காணப்படுவதைப் போல் வேறு எங்கும் மிகவும் குறைந்த அளவு நட்புறவை மனித இயல்பு கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. சுதந்திரத்தையும் சொத்துடைமைகளையும் பொறுத்தவரையில், ஒவ்வொரு விநாடியும் ஒவ்வொரு நாடும் மற்ற நாடுகளிடமிருந்து ஆபத்தை எதிர்பார்த்துக் கொண்டே இருக்கின்றது. ஒன்றையொன்று அடக்கிவிடும் விருப்பமும், ஒன்றினுடைய வலுவை மற்றது குறைத்துவிட மேற்கொள்ளும் முயற்சியும் எப்பொழுதும் தடையெதுவுமின்றிக் காணப்படுகின்றன. பாதுகாப்பு நடவடிக்கைகள் என்றுமே தளர்த்தப்பட முடியாத நிலையில் இருக்கின்றன. இதனால், யுத்தத்தால் ஏற்படும் அழிவைக் காட்டிலும் சமாதானத்தை நிலைநாட்டுவதற்காக எடுக்கப்படும் பாதுகாப்பு நடவடிக்கைகளால் உண்டாகும் செல்வ வளத்திற்கு ஏற்படும் அழிவு அதிகமானதாகவிருக்கின்றது. இத்தகைய தீமைகட்கு ஒரேயொரு பரிகாரம் மட்டுமுண்டு. ஓர் அரசிற்குள் வாழும் தனிமனிதருக்கு குடியியல் அல்லது அரசியல் உரிமை இருப்பதைப்போன்றே அதிகாரத்தில் உறுதிப்படுத்தப்பட்ட பொதுச் சட்டங்களின் அடிப்படையிலே சர்வதேச உரிமை முறைமை ஒன்று உருவாக்கப்பட்டு, எல்லா அரசுகளும் அதற்குக் கீழ்ப்படிந்து நடக்க இணங்குமாறு செய்தல் வேண்டும். ஐரோப்பாவின் அரசுவலுச் சமநிலை என்று அழைக்கப்படுமொன்றின் அடிப்படையில் நிரந்தர உலக சமாதானத்தை நிலைநாட்ட முடியும் என்று நம்பிக்கை வைப்பது கற்பனைப் பூதத்தை நம்பியிருப்பதற்கு ஒப்பாகும். இது சுவிப்ற் விவரித்த வீட்டைப் போன்றது. சமநிலைபற்றிய எல்லா விதிகளுக்கும் அமைய கட்டடக்கலைஞனொருவன் ஒரு வீட்டைக் கட்டினன். ஆனல் அதன்மீது ஒரு சிட்டுக்குருவி அமர்ந்ததும் முழுவீடுமே தரைமட்டமாகி விட்டது."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org